வெளியீடு—13—2—1970
Issued—13—2—1970

1024
APR 1970

# தமிழ் நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

புதன்கிழமை, *1969* மார்ச் *12*

**Wednesday, 12th March 1969**

தொகுதி XVIII—எண் 3

**Volume XVIII—No. 3**

©
GOVERNMENT OF TAMIL NADU
1970
தமிழ் நாடு அரசு
1970

*சட்டப் பேரவைத் துறை*
*சென்னை-9*
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50 காசுகள்]
**Price, 50 Paise]**

1024

T. N. L. A. Debates.

Official

Vol. XVIII No. 3-5

1969.

211, 31'N69

169.18.3-5

23209

# தமிழ்நாடு சட்டப் பேரவை

## புதன்கிழமை, 1969 மார்ச் 12

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்விகள் 283 முதல் 289 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### *Purchase Committee in Animal Husbandry Department*

*290 *Q.*—THIRU A. M. RAJA: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether there is any proposal to appoint a Purchase Committee for the purchase of cattle, cattle feed, etc. in the Animal Husbandry Department?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கால்நடை வளர்ப்புத் துறையில் உள்ள எல்லா நிறுவனங்களுக்கும் கால்நடைத் தீவனத்தையும் கோழி இனத் தீனியையும் வாங்கும்பொருட்டு ஒப்பந்தப்புள்ளிகளை வரவழைத்து அவற்றிற்கு ஏற்பு அளிப்பதற்கென, கீழ்க்கண்ட உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை அரசாங்கம் நியமித்துள்ளது:—

(1) கால்நடை வளர்ப்புத் துறை இயக்குநர்.

(2) சென்னை கால்நடைக் கல்லூரியின் முதல்வர்.

(3) துணை இயக்குநர் (கால்நடைகள்).

(4) சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர் (அதன் ஒப்பந்தப்புள்ளிகள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது).

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, இந்தக் குழுவில் நாண்-அபிஷியல்ஸ் யாராவது இடம் பெற்றிருக்கிறாரா? ஆமெனில், அவர் யார் என்பதை அறிவிக்கலாமா ? நாண்-அபிஷியல்ஸ் நியமிக்கப்படவில்லையென்றால், அப்படிப்பட்டவர்களைப் போட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தற்சமயம் உத்தியோகப்பற்றற்ற நபர் எவரும் அக்குழுவில் இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுகின்ற யோசனையைப் பரிசீலிக்கலாம்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, கால்நடை வளர்ச்சித் துறையில் கால்நடைகளுக்குத் தீவனம் தனி நபர்களிடமிருந்து வாங்கியதன் காரணமாக முன்னாள் அரசு காலத்தில் தவறு ஏற்பட்டதா ? டெண்டர் போடுகின்ற கண்டிராக்டரிடமிருந்து வாங்கும் தீவனத்தின் மாதிரியை ஆராய்ச்சி நிலையங்களுக்கு அனுப்பிப் பரிசோதனை செய்யும் முறை முன்பிருந்த அரசுக் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டதா? தரக்குறைவான தீவனம் பெறப்பட்ட நிலையைத் தவிர்க்க நமது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கால்நடைகளுக்கு வாங்கப்படுகிற தீவனங்களைப் பொறுத்த வரையில், அதனுடைய " சாம்பிளை " எடுத்து பாட்டிலில் வைத்து, அந்த பாட்டிலின்மேல் கண்டிராக்டருடைய ஸீலும், பண்ணை சூப்பரின்டெண்டெண்ட் ஸீலும் வைக்கப்பட்டு, அது பத்திரமாக வைக்கப்படும் முறை இருந்தது. ஆனால், டெண்டர் ஒத்துக்கொள்ளப்

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) ஆம்.

(இ) நெல் விளைச்சலில் பின்வருபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன :—

| | | ரூ. |
|---|---|---|
| 1. | திரு. என். கோபாலஸ்ரீநிவாஸ ஐயங்கார், மீனாநத்தம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம். | 2,000 |
| 2. | திரு. K. M. கருப்பையா நாடார், கொட்டாரக்குறிச்சி, ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி மாவட்டம். | 1,000 |
| 3. | திரு. V. C. ரங்கசாமி, வெத்தலைகாளிபாளையம், கோயம்புத்தூர் மாவட்டம். | 500 |

போட்டியிடுபவர்கள் போதிய எண்ணிக்கையில் முன்வராததால், சோளம், கேழ்வரகு, கம்பு குறித்து பரிசுகள் வழங்கப்படவில்லை.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** தலைவரவர்களே, பயிர் விளைச்சலுக்காக பரிசு கொடுக்கும்பொழுது சிறிய பரப்பில், அதாவது ¼ எக்கர், ½ எக்கர் அளவுகளில் பயிரிட்டு, அதில் அதிக விளைச்சல் செய்பவர்களுக்கு பரிசு வழங்கப்படுகிறது. அதேபோல் அதிகப்பரப்பில் சாகுபடி செய்பவர்களில் அதிகமாகப் பயிர் செய்பவர்களுக்கும் இம்மாதிரிப் பரிசுகளை வழங்கும் உத்தேசம் உண்டா ? அப்படிச்செய்தால் கரம்பாகப் போடக்கூடிய நிலையை மாற்றி அதிக விளைச்சல் ஏற்படுவதற்கு வழிவகுக்குமோ, அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஒரு எக்கர் அளவுக்கு வைத்துக் கொண்டு அதிலே அதிகப்படியாகச் சாகுபடி செய்பவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. நிறைய நிலம் வைத்துக்கொண்டு சாகுபடி செய்பவர்களுக்குக் கொடுப்பது என்றால் நிறைய நிலம் வைத்திருப்பவர்கள் அதிலே யார் யார் இருக்கிறார்களோ அவர்கள் மட்டுமே பரிசு பெறுகின்ற நிலைமை ஏற்பட்டுவிடும். ஒரு எக்கரில் அதிகமாக விளைச்சல் செய்பவர்களுக்கு என்று வைத்திருப்பதன் மூலமாக, குறைந்த நிலம் உள்ளவர்கள் கூட புதிய ரக விளைச்சலைச் சாகுபடி செய்வதன் மூலமாக, அதிகமான அளவுக்குக் கணிசமான உற்பத்தியைச் செய்வதற்கு வாய்ப்பளிக்கும். பரிசு பெற வேண்டுமென்பதற்காக, விவசாயிகள் அக்கறை காட்ட வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆகவே, அந்த நிலை கையாளப்படுகிறது.

**திரு. சா. மெய்யப்பன் :** சார், பயிர் விளைச்சலில் பரிசு பெறுபவர்களுக்கு ரூபாயாக வழங்கப்படுகிறது. அதை மாற்றி அசைன்மெண்ட் செய்யப்பட்ட நிலங்களாகப் பரிசு வழங்க யோசனை உண்டா ?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** நிலங்கள் வழங்குவது அல்ல, விவசாயக் கருவிகளாக வழங்குவது பற்றி யோசிக்கலாம்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, இப்போது வழங்கப்படும் பரிசுகளானது பாசன வசதிகள் உள்ள நிலங்களுக்கு மட்டும் வழங்கப்படுகின்றன. மானம் பார்த்த பூமிகளிலும் அதிகப்படியான விளைச்சல் செய்பவர்களுக்குப் பரிசு வழங்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** மானம் பார்த்த பூமியிலும் கம்பு விளைகிறது. அந்தக் கம்புக்கும் பரிசுத் திட்டம் வைத்திருக்கிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவரவர்களே, நல்ல காய்கறிகளை நிறைய விளைவிப்பவர்களை ஊக்குவிப்பதற்காக காய்கறிகளை உற்பத்தி செய்பவர்களுக்கும் பரிசு வழங்க உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அந்தத் திட்டமும் அமலில் உள்ளது.



**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவரவர்களே, ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கின்ற விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையில் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்துப் பகுதிகளிலும் போட்டி வைத்துப் பரிசுகள் வழங்க அரசு முன் வருமா ? அவ்வாறு செய்ய பஞ்சாயத்து நிதியில் ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** பஞ்சாயத்து யூனியனில் அம்மாதிரி ஒரு தீர்மானம் போட்டு ஒவ்வொரு பஞ்சாயத்திலும் நடத்தலாம் என்று தெரிவித்தால், பஞ்சாயத்து நிதிநிலையைப் பொறுத்துச் செய்யலாம். அதேமாதிரிச் செய்து போட்டி மனப்பான்மையை உண்டு பண்ணினால் உற்பத்தியைப் பெருக்கும் திட்டத்திற்கு அது நல்ல யோசனை தான். பஞ்சாயத்து யூனியன்கள் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்.

**திரு. கே, என். குமாரசாமி :** தலைவரவர்களே, போட்டியிடுபவர்களில் விவசாய அபிவிருத்தியை அதிகமாகச் செய்பவர்களுக்குப் பரிசு அளிக்கும் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. இதனால் தமிழ்நாட்டிலே அதிகப்படியான விவசாயிகள் போட்டியிட்டு அதிக உற்பத்தியை எடுத்திருக்கிறார்களா ? இல்லையென்றால், பரிசு வாங்கும் அளவுக்கு மாத்திரம் அந்த ஒரு ஏக்கரிலே மட்டும் அதிகப்படுத்திக் காட்டிவிட்டு, பாக்கி பூமிகளிலே விளைச்சலை அதிகப்படுத்துவதற்கு வேண்டிய மற்ற உரம் போன்றவைகள் கிடைக்காத காரணத்தினால் அதிக விளைச்சல் ஆகாமல் இருந்தால் இந்தப் பரிசுத் திட்டத்தினால் என்ன நன்மை ஏற்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பரிசுக்காக மட்டும்தான் என்று அந்தத் தருணத்திலே விவசாயிகள் பயிரிடுகிறார்கள் என்பது தவறான செய்தியாகும். உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதில் அக்கறையுள்ளவர்கள் ஈடுபட்டு முன்வருகிறார்கள். உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு விவசாயிகள் ஈடுபட வேண்டுமென்ற எண்ணத்தோடு அரசாங்கம் இந்தத் திட்டத்தை வைத்திருக்கிறது.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவரவர்களே, காவேரிப் பாசனத்திலே நெல் விளைவிப்பவர்களும், ஏரிப் பாசனத்திலே விளைவிப்பவர்களும், பம்பு செட் வைத்து நெல் பயிர் செய்பவர்களுக்கும் கொடுக்கப்படுவதைப் போல, 100 அடி, 150 அடி ஆழத்திலேயிருந்து தண்ணீரை எடுத்து நெல் உற்பத்தி விளைவிப்பவர்களுக்கும் தனித்தனியாகப் பரிசு வழங்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சில பரிசுகள்-கோவை மாவட்டத்தில் ஆழமாகக் கிணறு எடுத்து விவசாயம் செய்தவர்கள் முதல் பரிசு பெற்றிருக்கும் தன்மையை அறியலாம். ஆகவே, காவேரித் தண்ணீர் பாய்வதால் அதிகச் சாகுபடி ஆகிறது, கிணற்றுப் பாசனத்திலே ஈடுபடும் விவசாயிகள் குறைந்த கண்டுமுதல் காண்கிறார்கள் என்பது சரியாகாது. அவரவர்களுடைய அக்கறையைப் பொறுத்திருக்கிறது.

## *Export of Plantains*

*292 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) the names of the countries to which plantains were exported during 1965–66, 1966–67 and 1967-68 from Tamil Nadu and the quantum so exported ; and

(*b*) the total value of the same year-wise ?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :**

(அ) 1965–66, 1966–67, 1967–68 ஆண்டுகளில் தமிழ்நாட்டிலிருந்து வாழைப்பழம் ஏற்றுமதி செய்யப்படவில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே வாழைப்பழங்களை நமது நாட்டிலே அதிக அளவுக்கு உற்பத்தி செய் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் அதனால் நிறைய ஃபாரி எக்சேஞ்ச் கிடைக்குமே. அதில் அரசாங்கம் கவனம் செலுத்த முன்வரு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஏற்றுமதி செய்யக்கூட அளவுக்கு வாழைப்பழம் இன்னும் உற்பத்தியாகவில்லை. அம்மா உற்பத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் அரசாங்கம் ஒரு திட் வைத்திருக்கிறது. ஆனால், இதுவரையிலும் ஏற்றுமதி செய்யக்கூ அளவுக்குக் கணிசமான உற்பத்தி பெருகவில்லை என்பதை இந்த நேரத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். ஜப்பானிலிருந்து வாழைப்பழம் கேட்கி கள். ஒரு வருடத்துக்குத் தேவையான அளவு 1,500 டன். அந்த அளவு இன்னும் பெருகவில்லை.

**திரு. எம். பூபதி :** தலைவரவர்களே, வாழைப்பழத்தைப் பெற் கொண்ட நாடுகள் பொருளாகவா, நாணயமாகவா, எந்தெந்த முறை திருப்பிக் கொடுத்தார்கள் என்பதையும், புதிய யோசனைகளையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அனுப்பவே இல்லை என்று சொ கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** வாழைப்பழம் ந மாநிலத்திலிருந்து ஏற்றுமதியாகவில்லை. இந்தியாவிலே குஜராத் மாநில திலிருந்துமட்டும்தான் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக ஏற்றுமதியாகிறத நம் நாட்டிலிருந்து ஏற்றுமதியாக வேண்டிய சூழ்நிலையைப் பற்றி ஆலே சித்து வருகிறோம். 60 லட்சம் ரூபாய் செலவாகும். ஒரு ஏக்கருக்கு 1,50 ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கலாம் என்று அந்த முறையில் 4,00 ஏக்கர்களில் வாழைப்பழம் உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு வழங்கலா என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்து, வேண்டிய நடைமுறைகளை மே கொள்வதற்காக ஆரம்பச் செலவு ஒரு லட்சம் ஆகும் என்று தீர்மானிக்க பட்டிருக்கிறது.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** மதிப்பிற்குரிய தலைவரவர்களே வாழைச் சாகுபடியை அதிகப்படுத்த சர்க்காரிடம் திட்டமுள்ளதா? அத மூலம் வாழைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு என்னென்ன சலுகை கள் அளிக்கப்படுமென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நான் இப்பொழுது திரு. பூப அவர்களுடைய கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது ஒரு ஏக்கருக் 1,500 ரூபாய் வாழைப்பழம் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக் வழங்கலாம் என்ற முறையைப் பற்றிய விவரத்தைச் சொன்னேன். திரு சகாதேவக் கண்டர் அவர்கள் கேட்பது வாழைக்காயைப்பற்றி இங்கேயிருக்கின்ற பிரச்சினை வாழைப் பழத்தைப்பற்றி, வாழைக்காயை பற்றி அல்ல. ஒரு ஏக்கருக்கு 1,500 ரூபாய் வீதம் 4,00 ஏக்கர்களில் வாழைப்பழம் பயிரிடுவதற்குக் கொண்டு வரலாம் என் அரசாங்கம் ஒரு திட்டம் வைத்திருக்கிறது, அதற்குக் கடன் வசதி செய் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா முன் வர இருக்கிறது.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவரவர்களே, வாழைப்பழ ஏற்றுமதியி நல்ல இலாபம் கிடைக்கும் என்று தெரிய வருகிறது. எனவே, வாழை பழத்தை அதிகப்படியாக உற்பத்தி செய்ய தூத்துக்குடி பகுதியில் தீவிர திட்டத்தைச் செயல்படுத்துவதுபற்றி ஏதாவது செயற்குறிப்பு அரசாங்க திடம் உண்டா? அதற்காகச் செலவிடப்பட உத்தேசித்திருக்கும் தொ எவ்வளவு?



**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தூத்துக்குடி பகுதியில் இந்தத் திட்டத்திற்காக புரோக்ராம் கொண்டு வர அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலேதான், 4,000 ஏக்கர்கள் என்று சொல்வதிலே அதிகமாக இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் தேனி பகுதி, வடார்க்காடு மாவட்டம், திருச்சி மாவட்டம், தஞ்சை மாவட்டம் இவற்றில் ஒருசில பகுதிகளும் இதில் இருக்கிறது.

## அரிசன, பின்தங்கிய வகுப்பினருக்கு பொது குடியேற்றம்.

*293 **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் அரிஜன மக்கள், பின்தங்கிய வகுப்பினர் ஆகிய இரு பகுதியினரையும் ஒரே இடத்தில் காலனி கட்டி குடியேற்றும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதனை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்படுவதன் காரணம் யாது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) இது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பி. எஸ். மணியன் :** தலைவரவர்களே, ஜாதி எண்ணங்களை மாற்ற இது ஒரு நல்ல அம்சம் ஆகையால் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து பரிட்சார்த்தமாக அங்கே காலனி கட்டுவது குறித்து அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இப்பொழுது அந்த எண்ணத்தின் அடிப்படையில் கட்டப்படுகின்ற வீடுகளில் 10 சதவிகிதம் மற்ற இதர, ஹரிஜனங்கள் அல்லாதவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. ஆனால், அந்த இடத்திலே ஹரிஜனங்கள் அல்லாத மக்கள் குடியிருக்க முன் வரவில்லை. மேலும் ஊக்குவிக்க இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அரசாங்கம் எடுத்துப் பரிசீலனை செய்து கொண்டு வருகிறது.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவரவர்களே, ஏற்கெனவே இருந்த திட்டத்திலேகூட அருந்ததியர்களும், ஹரிஜனங்களும் ஒரே இடத்தில் இருக்க வீடு கட்டும் திட்டம் இருந்தது. ஆனால் அவர்கள் தங்களுடைய வீடுகளை மாற்றி மாற்றி, ஆதாரமில்லாமல் தங்களுக்குள்ள வீடுகளை மாற்றி, அருந்ததியர்கள் வேறுவேறு இடங்களில் வாழ்க்கை நடத்தி வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படிச் செய்திருந்தால் அவர்கள் ஒரேயிடத்தில் வசிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அப்படிப்பட்ட எண்ணத்திலேதான் நான் ஆரம்பத்திலே பதில் சொன்னேன். கனம் உறுப்பினரைப் போன்ற பலரும் இப்படிப்பட்ட இடங்களுக்குச் சென்று மன வேற்றுமையில்லாது அனைவரும் ஒற்றுமையாக வாழக் கூடிய நிலைமையை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கினால்தான் இப்படிப் பட்ட மாச்சரியங்கள் ஏற்படாமல் இருக்கும்.

**திரு. ஏ. முனியாண்டி :** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி யூனியனிலிருந்து அரிஜனங்களும் மற்றவர்களும் குடியிருப் பதற்கு வீடுகட்டும் திட்டம் கொண்ட மனு அனுப்பப்பட்டுள்ளதா? அனுப்பப்பட்டிருந்தால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தனிக் கேள்வி போடவும்.

படுவதற்கு முன் அதை வேளாண்மைக் கல்லூரிக்கோ அல்லது கால்நடைக் கல்லூரிக்கோ அனுப்பி ஏற்கனவே இருந்த அரசு பரிசீலிக்கவில்லை. அதனால் சில தகராறுகளும், தரக் குறைவான தீவனங்கள் வாங்கப் படக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டன. அப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்க்கும் பொருட்டு, மத்தியக் குழுவொன்றை நியமித்து, குறைந்த டெண்டர் போடுகின்றவர் கொடுக்கும் தீவனங்களை அங்கீகரிப்பதற்கு முன்னால், சென்னை கால்நடைக் கல்லூரிக்கும், கோவை வேளாண்மைக் கல்லூரிக்கும் அனுப்பிப் பரிசோதனை செய்து பார்த்து, சரியான தீவனம்தான் என்பதை ஒத்துக்கொண்ட பிறகுதான் அந்த டெண்டர் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**திரு. கே. விநாயகம் :** கால்நடை வாங்குவதற்கும், அதற்கு வேண்டிய தீவனங்கள் வாங்குவதற்கும் ஒரு குழு போட்டிருக்கிறார்களே, அதன் காரணமாக மாறுதல் ஏற்பட்டுள்ளதா ? அவர்கள் அப்படிக்குழுவை போட்ட பிறகு, இப்பொழுது வாங்குகிற கால்நடையிலும் அதற்குவேண்டிய தீவனங்களிலும் எந்தவிதமான குறைபாடும் இப்பொழுது ஏற்படவில்லையா ? முன்புதான் ஏற்பட்டதா ? அப்படி ஏற்பட்டிருந்தால் அதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஏற்கனவே ஒவ்வொரு பண்ணையிலும் அந்த அதிகாரியே அவற்றை வாங்குவதற்குள்ள அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதிலே சில தகராறு வந்தது. அவர்கள் வாங்கி வைத்த தீவனத்திலே சில குறைபாடுகள் இருந்தன. குறிப்பாக ஒரு பண்ணையில் மாட்டுக்கு வைக்கோல் வாங்கிய வகையில், வண்டியில் உள்ள வைக்கோலை மட்டும் எடை போடுவதற்குப் பதிலாக, வண்டியையும் சேர்த்து எடை போடும் நிலை இருந்தது. வண்டியையும் எடை போடும் நிலைமை மட்டுமல்ல ; அந்த வண்டியில் பெரும் பெரும் பாறாங்கல்லை வைத்து எடை போடும் நிலைமையும் இருந்தது. அதுபற்றித் தகவல் வந்த நேரத்தில் வைக்கோலைக் கீழே இறக்கித்தான் எடை போட வேண்டும், வண்டியைச் சேர்த்து எடை போடக்கூடாது என்று சொன்னோம். அந்த வண்டியிலிருந்து கல் விழுந்து கால் முறிந்த ஊழியர்களும் இருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. பிண்ணாக்கு வாங்கும்போது கல்லும் மண்ணுமாகச் சேர்த்து வாங்கி விடுகிறார்கள். அம்மாதிரியான நிலையைத் தவிர்க்கும்பொருட்டுதான் அதைச் சென்னையில் உள்ள கால்நடைக் கல்லூரிக்கும், கோவையில் உள்ள வேளாண்மைக் கல்லூரிக்கும் அனுப்பிப் பரிசோதனை செய்கிறோம். இப்பொழுது அதிகாரிகளைக் கொண்ட ஒரு சென்ட்ரல் கமிட்டியாகப் போட்டதில், சென்ற ஆண்டு மட்டும் தீவனம் வாங்கிய வகையில் பத்து லட்ச ரூபாய் அரசாங்கத்திற்கு ஆதாயம் கிடைத்திருக்கிறது.

**திரு. ஜெ. பெள்ளி கௌடர்:** இப்பொழுது வழங்கும் மாட்டுத் தீவனத்தில் போதிய அளவு உணவுச் சத்து இல்லை என்று கூறப்படுகிறது. அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அது சம்பந்தமாக விஞ்ஞான ஆராய்ச்சியில் பயிற்சி பெற்றவர்கள்—கோவையில் உள்ள விவசாயக்கல்லூரியில் உள்ளவர்களும், சென்னையில் உள்ள கால்நடைக் கல்லூரியில் உள்ளவர்களும்—பரீட்சை செய்த பிறகுதான், சத்துள்ள உணவாக இருக்கிறதா என்பதைப் பரீட்சை செய்த பிறகுதான் அது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அதிகாரிகள், சத்துள்ள உணவுதான் வழங்கப்படு கிறது என்று தகவல் கொடுக்கிறார்கள். அதற்குப்பின் இது ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know whether the irregularities found in the Purchase Committee of the Hosur Cattle Farm have been rectified and if so, may I know the details ?



**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஹோசூரில் நடந்திருக்கும் அக்கிரமமான செயல் கனம் அங்கத்தினருக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அவர்களே எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். அதில் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் மீதெல்லாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அது இன்னும் பூர்த்தி ஆகவில்லை. அது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** ஹோசூரில் வாங்கப்பட்ட தீவனத்தில் குறை பாடு இருப்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ளும்போது, இந்தக் கமிட்டியில் வெறும் நம்முடைய அதிகாரிகளை மாத்திரம் வைத்திருப்ப தனால்தான் எல்லோரும் சேர்ந்துகொண்டு—கண்டிராக்டரோடும் சேர்ந்து கொண்டு—இத்தகைய " இர்ரெகுலாரிடி " வருகிறது. அதைத் தவிர்ப்ப தற்காக அந்தந்தப் பிரதேசத்தில் உள்ள எம். எல். ஏ. ஐயும் குழுவில் உறுப்பினராக நியமிப்பதில் என்ன கஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று அரசாங்கம் கருதுகிறது ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதிகாரிகள் மட்டும் இருப்பதால் தவறு நிகழ்கிறது என்று குற்றம் சாட்டக் கூடாது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் உறுப்பினர் திரு. விநாய கம் ஒரு வழக்கறிஞர். அதனால் எப்படி வேண்டுமானாலும் வாதம் செய்யத் திறமை படைத்தவர். நான் சொன்னதை அவர்கள் சரியாகப் புரிந்து கொண்டிருப்பாரானால், இக்கேள்விக்கு இடமே இருந்திருக்காது. ஹோசூரில் தீவனமே வாங்காமல் தீவனம் வாங்கியதாகக் கணக்கு எழுதி விட்டார்கள். ஒரு குறிப்பிட்ட அதிகாரி அந்த ஒரு குறிப்பிட்ட பண்ணையில் வாங்கக்கூடிய சூழ்நிலை வரும்போது இந்த நிலைமை ஏற்படுகிறது. இனி யார் எந்தப் பண்ணைக்கு வாங்குகிறார்கள் என்று தெரியாத நிலைமை யில் ஒரு மத்தியக் குழு போடும்போது, உயர்தர அதிகாரிகள் மூவரும் ஒவ்வொரு பண்ணையைச் சேர்ந்த அதிகாரியும் வருகிறார்கள். டெண்டரைப் பரிசீலிக்கும்போது மட்டும் யார் யார் டெண்டரை அங்கீகாரம் பண்ணுவது என்பதிலே இவர்கள் மட்டும் முடிவு செய்வதில்லை. இவர்கள் சாம்பிள் எடுத்து, அந்த சாம்பிளை கால்நடைக் கல்லூரிக்கும், வேளாண்மைக் கல்லூரிக்கும் அனுப்பி; அங்கே பரீட்சை செய்து பார்த்து, அது சரிதான் என்று அவர்கள் சொன்ன பிறகே அதை அங்கீகரிக்கும் நிலைமை இப் பொழுது இருக்கிறது. ஏற்கனவே அந்த நிலைமை கிடையாது. ஹோசூ ரில் நடந்த விஷயம் பற்றித் தீவிரமாகப் பரிசீலனை செய்ய உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. யும், அந்தப் பகுதி மக்களும் எனக்குத் தகவல் அனுப்பியதன் பேரில் ஒரு குழு போட்டிருக்கிறோம். அந்தக் குழுவில் ஒரு எம்.பி.யும் இருக்கிறார். ஏற்கனவே இதிலே இருந்து பணியாற்றி ஓய்வு எடுத்துக்கொண்ட அதிகாரி ஒருவர் இருக்கிறார். அவர்களெல்லாம் நேரடியாகப் போய்ப்பார்த்து, அந்தத் தகவலைக் கொடுத்ததன் பேரில் தீவிர பரிசீலனையில் இருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. மற்றத் தகவல்களை அதிகமாகச் சொல் வதற்கில்லை.

### பயிர் விளைச்சலுக்குப் பரிசுகள்

***291 வின.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1965-66-ம் ஆண்டில் பயிர் விளைச்சலுக்காக பரிசுகள் வழங் கப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், யார் யாருக்கு, எவ்வளவு ?

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** தலைவர் அவர்களே, அமைதியாக இருக்கிற தமிழக மக்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டி விடுகின்ற முறையில் ஏற்படுத்தப்படுகின்ற இந்தத் திட்டத்தை கைவிடுமாறு மத்திய அரசை நமது அரசு கோருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மத்திய அரசுக்கு அப்படிப்பட்ட நல்ல எண்ணம் வரும் என்று எனக்கு நம்பிக்கையில்லை. ஒரு மொழியைப் பார்ப்பது வேறு, ஒரு மொழியை ஒரு நாட்டிலே திணிப்பது வேறு. ஒரு மொழியை ஆட்சி மொழியாக, இந்திய தேசிய மொழியாக ஏற்றுக் கொள்வது காலப்போக்கில், மக்களுடைய மனமாரத் தொடர்பால் ஏற்பட வேண்டும். ஆனால், மத்திய ஆட்சி அதை உணர்ந்ததாக தெரியவில்லை. எப்படியாவது இந்தியை ஆட்சிமொழியாக இந்த நாட்டிலே வைத்துவிடலாம், அதற்கு எந்த முறையையாவது பின்பற்றலாம் என்று எண்ணுவதுபோல்தான் எனக்குத் தோன்றுகிறது.

### பள்ளிகளில் வேலை நேரம்

***296 வினா.—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளி வேலை நேரத்தை வரும் கல்வியாண்டிலிருந்து அதிகப்படுத்த உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

### கிண்டியில் பிளாஸ்டிக் பயிற்சி நிலையம்

***297 வினா.—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டியில் மத்திய அரசு பிளாஸ்டிக் தொழிற்துறைய பயிற்சி நிலையம் ஒன்று அமைக்க ஏற்பாடு செய்துள்ளதா ?

(இ) ஆம், எனில் எத்தகைய பயிற்சிகள் இருக்கும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) மத்திய அரசு ப்ளாஸ்டிக் பயிற்சி நிலையம், ப்ளாஸ்டிக் பதனப் படுத்தல், தொழிற்சாலையில் வார்ப்படம், அச்சுகள் மற்ற கருவிகள் இவற்றின் அமைப்பு முறையைப்பற்றியும், உற்பத்தி செய்நிலைப்பற்றியும் ஆலோசனையும், பயிற்சியும் அளிக்கும். இந்த நிலையம் ப்ளாஸ்டிக் பொருள்களை உற்பத்தி செய்வதில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன் படுத்துவதற்கு வணிக நிறுவனங்களுக்கு உதவி செய்யும்.

### 2 நடைமுறைக் கேள்விகள்.

**(அ) ஒரு வினாவிற்கு விடையளித்த பின்னர் துணை வினாவே அனு மதிக்கப்படாத முந்தைய வினாவிற்குத் துணை வினாக் கேட்க அனுமதி.**

THIRU T. MARTIN : With your permission, Sir, I will put supplementary to the earlier question.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது முடியாது, அந்தக் கேள்வியைத் தாண்டிவிட்ட பிறகு கேட்க முடியாது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பாயின்ட் ஆப் ஆர்டர். கேள்வி 296-க்கு சப்ளிமெண்டரிகூட போடவில்லை. விதிகளிலே என்ன சொல்கிறது என்றால், அதாவது ரூல் 38 (2)-ல்





The Speaker may disallow any supplementary question if in his opinion, it infringes the rules regarding questions or if a sufficient or reasonable number of supplementary questions has already been put in respect of the same question.

My point is, discretion is given to the Hon. Speaker only under Rule 38(1). Under Rule 38 (2), there is no discretion given for the Hon. Speaker. If sufficient or reasonable number of questions have been already put in respect of the same question. the Hon. Speaker may disallow any supplementary question, But here, for this particular question, no supplementary question has been permitted to be put. So I request the Hon. Speaker to allow Members to put supplementary questions for that question.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** துணைக் கேள்வி கேட்கும் நேரத்திலே உறுப்பினர்கள் பேரவைத் தலைவருடைய கவனத்தை ஈர்க்க வேண்டும். நான் எல்லோரையும் பார்த்தேன். யாரும் என்னுடைய கண்களிலே படவில்லை. என்னுடைய கண்களிலே பட்டிருந்தால் நிச்சயமாக வாய்ப்பு கொடுத்திருப்பேன். ஆகவே, இந்த விஷயத்தில் எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை. (குறுக்கீடு) நான் பார்த்தேன். உங்களுக்குப் பின்னாலே அவர் இருக்கிறார். அங்கு அவர் கை தூக்கினாரா, இல்லையா என்று, உங்களுக்குத் தெரிந்ததை . . . .

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. The Speaker is very clear in his remarks that one should be in a position to attract or catch the eye of the Speaker. But your eye is such an elusive one that it is not so easy to catch it. Will you permit us to catch your ear ? 9-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் சட்டமன்றத்தில் பல ஆண்டுகளாக இருந்தவர். அவர்கள் கேட்கின்ற உரிமை நியாயம்தானா ? எல்லோரும் " ஸ்பீக்கர் " " ஸ்பீக்கர் " என்று சொல்லிக் கொண்டிருந்தால், இந்தச் சபை எப்படி நடைபெறும் ? அது நல்ல மரபுதானா ? ஒரு மரபை உருவாக்க வேண்டுமென்றால், அது நல்ல மரபுதானா என்பதை நினைத்துப் பார்த்துக் கேட்க வேண்டும். என்னுடைய கண் அப்படி ஒன்றும் குருடான கண் அல்ல.

THIRU K. VINAYAKAM : I only said that your eye is elusive.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னுடைய கண் நல்ல பார்வையோடுதான் இருந்துகொண்டிருக்கிறது. நான் சுற்றிச் சுற்றித்தான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். நான் அப்படிப் பார்க்கவில்லை என்ற குற்றச்சாட்டு சரியல்ல. அப்படியிருந்தால் என்னுடைய பார்வைக்கு இந்தக் கோடியிலிருக்கும் திரு. மார்ட்டின் அவர்களும் அந்தக் கோடியிலிருக்கும் திரு. ஆறுமுகம் அவர்களும் புலப்படமாட்டார்கள். நான் சுற்றிச் சுற்றித் தான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

### 1. வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி எண் 297.

(துணைக் கேள்வி இல்லை.)

### கிளிஞ்சல் எடுக்கும் குத்தகை

***298 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டம், மரக்காணம், கந்தாடு ஆகிய ஊர்களில் கிளிஞ்சல் எடுக்கும் குத்தகையை இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை என்

திருப்பதை வேதவனைப் பெருக்க ஐமன்றிருந்து ஒரு முறை என்று மாற்றும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை, ஐயா.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** வெற்றிப் குத்தகையைக் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக விடுவதற்கு சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது போன்ற குத்தகை விடுவது பற்றி, யாருக்கு எப்படி விடுவது என்றெல்லாம் விதிமுறைகள் இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சில சலுகைகளெல்லாம் அந்த விதிமுறைகளில் அளிக்கப்பட்டிருக்கின்றன. அதை அவர்கள் கலெக்டர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், கலெக்டர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

## *Parambikulam-Aliyar Project*

*299 *Q.*—Thiru K. VINAYAKAM:
Thiru K. R. NALLASIVAM:
Thiru S. SIVASUBRAMANIAN: } Will the Hon. the Minister for Public Works be pleased to state:—

(*a*) whether the Government have negotiated with the Kerala Government regarding the sharing of water from the Parambikulam-Aliyar Project; and

(*b*) if so, the results thereof ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) : ஆழியாறு நீரை உபயோகித்தல் பற்றியும் சாலக்குடி பகுதிக்குப் பெருமளவுதி நீரையும் சோலை யாற்றின் நீரையும் பகிர்ந்து கொள்ளுதல் பற்றியும் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. நீராறு, தேக்கடி, ஆனைமலையாறு ஆகியவற்றின் நீரைப் பயன்படுத்தல் குறித்து இன்னும் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

Thiru K. VINAYAKAM: This is a very delicate problem affecting two States and I will not embarrass the Government. What steps have been taken and what tangible results have been achieved ? Talks are being initiated. But is there any indication that we will get a due share of the water with the consent of the Kerala Government ?

The Hon. Thiru S. J. SADIQ PASHA: I am not in a position to disclose at present.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, உடன்பாடு ஏற்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள். கேரள அரசாங்கத்திற்கு, அந்த நீராறு தேக்கத்திலிருந்து கேரள மாநிலத்திலுள்ள நிலத்திற்கு நீர் பாய்ச்சுகின்ற உரிமை இருக்கிறதா அல்லது அதிலிருந்து மீன் பிடிக்கும் உரிமைகளெல்லாம் அவர்களுக்கு இருக்கிறதா என்பதை விளக்கிச் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதைப்பற்றி எல்லாம் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கின்றன. தற்சமயம் அதுபற்றி நான் சொல்வதற்கு இயலாத நிலைமையில் இருப்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களைப்பற்றி ஏற்கனவே இருந்த மந்திரிசபை என்ன நடவடிக்கை எடுத்தது? இப்பொழுது புதிய மந்திரி சபை இந்த விஷயமாக என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஏற்கனவே இருந்த மந்திரி சபையும் சரி, இப்பொழுது இருக்கிற மந்திரி சபையும் சரி—இதைப் பற்றி பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. முடிவு ஏற்பட்ட பிறகு அதுபற்றிய விவரங்கள் தெரிவிக்கப்படும்.

**திரு. க. ர. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆழியார் பகுதியில் ஒரு வருடம் விட்டு ஒரு வருடம் தான் தண்ணீர் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. இந்த ஒப்பந்தம் எவ்வளவு சீக்கிரம் ஏற்பட முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஏற்பட்டால் தண்ணீர் தொடர்ச்சியாகக் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, இந்த வருஷம் இந்தப் பேச்சுவார்த்தைகள் முடியுமா ? இந்த வருஷம் இந்த ஒப்பந்தம் முடிவு பெறுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேச்சுவார்த்தைகள் அப்படி முடிவடையும் என்று நம்பிக்கொண்டிருக்கிறோம்.

**திரு. சா. மெய்யப்பன் :** அமைச்சர் அவர்கள் இப்பொழுது விவரம் சொல்வதற்கில்லை என்று சொன்னார்கள். அது "கான்பிடென்ஷியல் நேச்சர்" என்று இருக்கிறதா அல்லது பொது ஜன அமைதிக்கு ஏதாவது பங்கம் விளைவிக்கும் என்ற முறையில் தான் இப்பொழுது விவரம் சொல்ல முடியவில்லை என்ற நிலை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிற காரணத்தினால், மேற்கொண்டு பேச்சு வார்த்தைக்கு எந்த விதமான பங்கமும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகத் தான், விவரம் சொல்ல இயலவில்லை என்று சொன்னேனே தவிர, வேறு ஒன்றுமில்லை.

**திரு. பி. துரைராஜ் :** கேரள அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று ஒப்பந்தம் ஏற்பட வேண்டிய வேறு பல திட்டங்களும் இந்த அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறதா ? அப்படியிருந்தால், அவைகளைப் பற்றியும் விரைவில் பேசி ஒரு நல்ல முடிவுக்கு வர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கேரள மாநிலத்தோடு நடத்தும் பேச்சு வார்த்தைகளில் இதுபற்றியெல்லாம் பேசப்படும்.

**திரு. பி. வேலுசாமி :** ஸார், இந்தப் பிரச்னையில் முந்தைய சர்க்காரும் இப்பொழுது இருக்கிற சர்க்காரும் நடத்திய பேச்சு வார்த்தைகளில் ஏதாவது வளர்ந்திருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேச்சுவார்த்தை வளர்ந்துகொண்டே இருக்கிறது. (சிரிப்பு.)

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் ஸ்பீக்கர், ஸார், இந்தப் பேச்சு வார்த்தைகளில் தமிழக அரசின் சார்பாகக் கலந்துகொண்டவர்கள் யார்? கேரள அரசாங்கத்தின் சார்பாகக் கலந்துகொண்டவர்கள் யார் ? எத்தனை முறை கலந்து பேசியிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** எத்தனை முறை என்கின்ற விவரம் இல்லாவிட்டாலும், தமிழ்நாடு அரசாங்க அதிகாரிகளும், கேரள அரசாங்க அதிகாரிகளும், நமது முதல் அமைச்சர் அவர்களும், அமைச்சர்களும், கேரள மாநில முதலமைச்சர், அமைச்சர்களும், மத்திய அரசு அமைச்சரும் கலந்துகொண்டு பேசியிருக்கிறார்கள்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது மத்திய அரசு அமைச்சர்களும் கலந்துகொண்டதாகக் கூறினார். ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் வலியுறுத்துகின்ற இந்தியப் பேரரசு வீணாகப் பேசுகின்ற நிலைத் தமிழகத்திற்கு வஞ்சனை கொடுக்க கேரள அரசாங்கத்திற்குச் சாதகமாக உதவுவதை நிறுத்துமா என்று தமிழக அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேச்சுவார்த்தைகள் மூலமாக சுமுகமாகத் தீர்த்துக்கொள்வது சிறந்தது என்று நாங்கள் கருதுகிறோம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இந்தியப் பேரரசு இது சம்பந்தமாக உதாசீனம் செய்கிறது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தியப் பேரரசை எதிர்த்துப் போராடுவதாகச் சொல்லிக்கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட் அங்கம் வகிக்கும் கேரள சர்க்கார் இந்தியப் பேரரசை அவமானப்படுத்தும் முறையில் தமிழ் மாநிலத்திற்கு தண்ணீர் கொடுப்போம் என்று நாடகமாக முன்வருவதற்கு இந்தச் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி அவமானப் படுத்தும் நோக்கம் கிடையாது. இரண்டு அரசும் பேச்சுவார்த்தைகள் நடத்தி சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் நோக்கம்.

THIRU K. VINAYAKAM: Whereas negotiations are being carried on between the two Governments on this delicate issue and whereas a lot of anxiety has been expressed and found to exist in the minds of the people at large in Tamil Nadu, will the Government at least assure this House in clear and categorical terms that the rights of this State shall be maintained at any cost with the assistance of the Central Ministers if necessary.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எந்தவிதமான அச்ச உணர்வும் தேவையில்லை. கேரள அரசினர் இந்தப் பிரச்னையை நல்ல பரிவுணர்ச்சியோடு கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் மறைவதற்கு முன்னால் செய்த சில முக்கியமான காரியங்களில் இதுவும் ஒன்று. அவர்கள் கேரள முதலமைச்சர் திரு. நம்பூதிரிபாட், அவர்களுடனும், மற்ற அமைச்சர்களுடனும் கடைசியாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள். இந்தப் பேச்சு வார்த்தைகள் இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதிலே அரசாங்கத்தினால் தாமதம் ஏற்பட்டது என்று சொல்வதற்கு நியாயம் எதுவுமில்லை. அதேமாதிரியாக கேரள அரசாங்கமும் இதிலே மிகுந்த பரிவுணர்ச்சியோடு நடந்துகொள்கிறது. எல்லோருடைய நன்மையையும் உத்தேசித்து இணக்கமான ஒரு முடிவுக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இரண்டு கூட்டங்கள் நடைபெற்றன. முதலில் கடந்த ஆண்டில் சென்னையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. பிறகு கொச்சியில் ஒரு கூட்டம் நடைபெறுவதாக இருந்தது. நமது முன்னாள் முதலமைச்சர் அவர்களின் உடல்நிலை காரணமாக அது தள்ளிவைக்கப்பட்டது. சென்னையில் கடந்த ஆண்டில் டிசம்பர் திங்களில் கூட்டம் நடைபெற்றது. இப்பொழுது அதற்கான நல்ல சூழ்நிலை உருவாகி, தண்ணீரை எப்படிப் பகிர்ந்துகொள்வது என்பதற்கான சில விவரங்களை, நம்முடைய அதிகாரிகள் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து, எந்த அளவிலே நாம் உடன்பாடு காணலாம் என்பதற்கான பூர்வாங்கமான அம்சங்கள் பற்றி ஆராய்ச்சி செய்து, சொல்லியிருக்கிறார்கள். அவைகளுடைய விளைவு என்ன என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இதனைத் தொடர்ந்து நம்முடைய முதலமைச்சர், கேரள முதலமைச்சர், மற்றும் அமைச்சர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவை ரொம்ப வேகமாக நடந்துகொண்டிருக்



கின்றன. அதனால் ஏற்படக்கூடிய சில சங்கடங்களைப்பற்றி விவாதிக்க வேண்டியிருப்பதால், சற்று காலதாமதம் ஆனதே தவிர, வேறு ஒன்றுமில்லை. இரண்டு அரசுகளும் நல்ல பரிவுணர்ச்சியோடு இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக கேரள முதலமைச்சர் திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட் அவர்கள் இதில் ரொம்ப அக்கறை கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், பேச்சுவார்த்தைகள் நல்ல சுமுகமான முறையில் நடந்துகொண்டிருக்கின்றன. இது நல்ல வகையில் நடைபெற முடியும் என்ற நம்பிக்கை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

* 300 வி.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பரம்பிக்குளம் திட்டத்தை (பல்லடம் வட்டம்) மங்கலம் கிராம பகுதி வரை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை அலுவல் சம்பந்தமாக அமைச்சருக்கு வேறு காரியம் இருப்பதால், 301, 302 என்னுள்ள கேள்விகள் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

*Standing passengers in mofussil buses*

*303 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal to allow standing passengers in mofussil buses in our State ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வெளியூர் பேருந்துகளில் பயணிகள் நின்று கொண்டு போவதை அனுமதிப்பதற்கில்லை.

THIRU K. VINAYAKAM: Sir, whereas in the mofussil buses travelling by standing is hazardous to the safety of the passengers–evidently that is the stand taken by this Government–will this Government discourage this kind of travelling by standing in the City buses also because it involves a lot of accidents especially to old women or women or a large number of children who are prepared to travel by standing in the buses for want of seats ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : நகரத்தில் ஓடும் பேருந்துகளுக்கும் வெளியூர்களில் ஓடும் பேருந்துக்களுக்கும் பெருத்த வேற்றுமைகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, வெளியூர் பேருந்துகள் நீண்ட தூரம் போகின்றன; வேகமாகவும் போகின்றன ; வெளியூர் போகும் பேருந்துகளில் வெற்று இடம் (ஸ்டாண்டிங் ஸ்பேஸ்) குறைவு ; கூரையும் தாழ்வாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலவரங்கள் நகர பேருந்துகளில் இல்லை. ஆதலால், பயணிகளின் வசதியை முன்னிட்டு, நகர பேருந்துக்களில் அவர்கள் நின்று போக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

THIRU B. VENKATASWAMY: Sir, in the Mysore State they have provided for standing tickets in the mofussil buses also. In our State also there is a great demand for standing tickets in the mofussil buses. Will this Government come forward to allow the issue of at least 10 standing tickets in the mofussil buses also ?

**திரு. நா. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவரவர்களே, பிற்ப வகுப்பினரும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் சேர்ந்து குடியிருப்பதற்கா காலனி கட்டும் திட்டம் மட்டும்தான் இப்பொழுது அரசாங்கத்தின் சிலனையில் உள்ளதா ? தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் குடியிரு கட்டித் தருகின்ற திட்டம் கைவிடப்பட்டதா என்பதை அறிய விரு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஏற்கென இருந்த திட்டமே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் என்று அல் அதிலே 90 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்கள், 10 சதவிகிதம் தாழ்த் பட்ட மக்கள் அல்லாதோர் என்ற திட்டம்தான் எப்பொழு இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கும் அந்தத் திட் இருக்கிறது, ஆனால் 10 சதவிகிதத்தினர் கூட தாழ்த்தப்பட்ட மக் அல்லாதோர் தாழ்த்தப்பட்ட மக்களோடு வாழ முன்வருவதில் என்றுதான் நான் ஏற்கெனவே தெரிவித்தேன். எல்லா மக்கு ஒன்றாக வாழ வேண்டுமென்ற எண்ணத்திலேதான் இந்தக் குறிப்பி இடத்திலேகூட இப்படிப்பட்ட திட்டத்தை நிறைவேற்றலாமா என்ப அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

## மாயூரம் அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்தல்

***294 வினு.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுச் சுகாதா அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) மாயூரத்திலுள்ள அரசினர் மருத்துவ மனையை விரிவுபடுத்து திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆமெனில் அதன் விபரமென்ன

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :**

(அ) , (ஆ) : புதிதாக வார்டு ஒன்று கட்டும் திட்டம் பரிசீலனைக்கா 1970-71 நிதியாண்டுக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, மாயூரம் நகரத்தினுடை ஜனத்தொகை 20,0000 ஆக இருந்தபோது ஏற்படுத்தப்பட்ட அரசாங் ஆஸ்பத்திரியில் அப்பொழுது நோயாளிகளுக்கு ஒதுக்கப்பட்டிருந் படுக்கைகள் எவ்வளவோ அதே அளவு படுக்கைகள்தான் இப்பொழு இந்த நகரத்தினுடைய ஜனத்தொகை 50,000-க்கு மேற்பட்ட நிலை லிருந்தும் இருக்கின்றன. அதை மாற்ற உடனடி நடவடிக்கை எடுக் அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நான் என்னுடை பதிலில் போதிய அளவு கட்டுவதற்கு 1970-71-ல் நிதி ஒதுக்கப்பட்டிரு கிறது என்று சொன்னேனே தவிர, கட்டுவதற்குரிய திட்டம் பரிசீலனையி இல்லையென்று சொல்லவில்லை. மேலும், 38 படுக்கைகள் கொண்ட வார் ஒன்று ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் கட்ட வேண் மென்றுதான் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் நி நிலையை முன்னிட்டுத்தான் ஒத்திப்போடப்படுகிறது. எனவே, 1970-71- நிச்சயமாக எடுத்துக் கொள்ளப்படும்.

## இந்திப் பிரச்சார சபை

***295 வினு.—திரு. பெ. மலேச்சாமி :** மாண்புமிகு கல்வி தொழி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா :

தமிழ் நாட்டில் இந்திப் பிரச்சார சபை இலவசமாக இந்தி கற்று கொடுக்கும் திட்டம் பற்றி அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா?

**மாண்புமிகு திரு செ. மாதவன்:** இல்லை.





**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தட்சிண பாரத் ஹிந்திப் பிரசார சபைக்கு இந்திய அரசு ஏதேனும் நிதி உதவி அளிப்ப தாகத் தெரிவித்து இருக்கிறதா ? தமிழ் நாட்டில் மறுபடியும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு இது வித்திடுவதாகாதா ? தமிழ் நாட்டிலே உள்ள சட்டம், அமைதியைக் குலைக்க இந்திய அரசு திட்டமிட்டு செய்கின்ற காரியமாக ஆகாதா ? இத்தகைய உதவி அளிக்கும்போது தமிழக அரசைக் கலந்து ஆலோசிக்கவேண்டுமென்று நமது அரசு இந்திய அரசை வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ் நாட்டிலே உள்ள ஹிந்தி பிரசார சபைக்கு மட்டுமல்ல, நாடு முழுவதும் ஹிந்தி மொழியைப் பரப்பு வதற்கு ஏராளமான நிதியை மிகத் தாராளமாகத் தருவதாக நிதி அமைச்சரவர்கள் அடிக்கடி அங்கே மத்தியிலே சொல்லி வருகின்றார்கள். அந்த முறையிலே ஹிந்தி பிரசார சபைக்கு அவர்கள் பணம் கொடுக்கி றார்கள்.

**திரு. கே. விநயகம்:** சார், நமது நாட்டிலே தனிப்பட்ட ஸ்தாபனங்கள் இந்த ஹிந்தியைப் பரப்புவதற்கு முயற்சி எடுத்தால், அதை விரும்பிப் படிக்கிற மக்களும் இந்த நாட்டிலே இருந்தால், அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா ?அல்லது தனிப்பட்டவர்கள் நடத்துவது சரி என்று வெறுமனே பார்த்துவிட்டு விடுவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு அங்கத்தினரவர்கள் ஹிந்தி பிரச்சாரத்திலே எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என் பதை தமிழ் நாடு மக்களுக்குத் தெரிவிக்கின்றார்கள். அதிலே இந்த அரசைப் பொறுத்தவரை, ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற கட்சியோ அல்லது இந்த அரசோ எந்தக் காலத்திலும் எந்த மொழியையும் படிக்கக்கூடாது என்று சொன்னதும் கிடையாது, சொல்லப்போவதும் கிடையாது. ஆனால் மொழியைப் படிக்கின்றோம், பிரசாரம் செய் கின்றோம் என்ற முறையிலே ஒரு மொழி ஆதிக்கத்தை இந்த நாட்டில் கொண்டு வந்தால், அது ஆட்சி மொழி, அரசு மொழி, ஆகவே அதை ஏற்றுக்கொள்ள வேண்டும், அதை ஏற்றுக்கொள்பவர்களுக்குத்தான் இந்த நாட்டிலே உரிமை என்று கூறுவார்களானால், அதற்கு வித்திடுவார் களானால் இந்த அரசு அதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. இந்த ஹிந்தி பிரசார சபையைப் பொறுத்த அளவுக்கு மத்தியிலே உள்ள அமைச்சரவர்கள், காலஞ்சென்ற முதலமைச்சர் அண்ணா அவர்களிடம் பேசினார்கள். அப்பொழுது நானும் இருந்தேன். அவர், ஹிந்தி படிப்பவர்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும், ஹிந்தி பிரசார சபை கற்றுக் கொடுக்க விரும்புகிறது ; அதற்கான பண உதவியைச் செய்யப் போகின்றோம் என்றுதான் சொன்னார். அதை எப்படிச் செய்யப்போகிறார்கள், தமிழ்நாடு மக்களுடைய உள்ளத்தைப் புண்படுத்தும் வகையிலே செய்யப் போகிறார்களா ? ஹிந்தி ஆதிக்கத்தை இந்த அரசு மறுத்ததின் காரணமாக, மேலும் ஹிந்திப் பிரசாரத்தை இந்த சபையின் மூலமாகச் செய்வார்களா ? என்பதெல்லாம் அவர்களுடைய நடவடிக்கையைப் பொறுத்திருக்கிறது. அவர்கள் எப்படி நடத்தப் போகிறார் களோ, அதைக் கண்காணித்து, அதற்கேற்றபடி இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி :** இந்தப் பிரசாரத்திற்கு மத்திய சர்க்கார் கொடுக்கின்ற நிதியை மாநில சர்க்காரைக் கலந்துதான் கொடுக்கவேண்டு மென்று இந்த மாநில சர்க்கார் ஏதாவது வலியுறுத்தி மத்திய சர்க் காரைக் கேட்டிருக்கிறதா ? இல்லையென்றால் அப்படிக் கேட்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஹிந்தி மொழிக்கு மட்டுமல்ல, கல்வித் துறையிலே எந்தப் பிரிவுக்கும் மத்திய சர்க்கார் தனக்கென்று ஒரு நிதியை வைத்துக்கொண்டு அந்த நிதியின் மூலமாக தங்களுடைய கொள்கைகளை மற்ற மாநிலங்களிலே புகுத்தலாம் என்று நினைப்பது, செயல்படுவது தவறாகும்.

[illegible]த்தில் 755 ஏக்கரும், [illegible]ரில் 322 ஏக்கரும், கூடலூரில் [illegible]
ஏக்கரும் [illegible] ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள். " என்கரோ[illegible]
[illegible] பயிர் செய்திருக்கிறார்கள். [illegible] தண்டனையாக கொடுக்கப்[illegible]
கிறது. [illegible] ஏராளம[illegible]
[illegible] வருகிறது. [illegible] படுக[illegible]
ஆக்கிரமிப்புகளை நீக்கி, [illegible] மாற்றி, பக்க[illegible]
[illegible] நில[illegible]
மாவட்ட [illegible] திரு. ரா[illegible]
[illegible] அடிப்ப[illegible]
[illegible] அவர்க[illegible]
[illegible] இ[illegible]
[illegible] போ[illegible]
[illegible] சர்வம[illegible]
[illegible].

*288 [illegible] : திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு [illegible]
அமைச்சர் [illegible] கேள்விகளுக்கு விடையளிப்பார[illegible]

(அ) திருச்சிராப்பள்ளி தாலுக்காவில் நிலமற்ற விவசாயிகளு[illegible]
நிலம் அடமானம் செய்வது சம்பந்தமாக திரு நா. ரங்கரத்தினம் அ[illegible]
களின் பெயரால் வெளியிடப்பட்ட நோட்டீஸ் ஒன்று மாண்புமிகு [illegible]
அமைச்சர் அவர்களுக்குச் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. வி. [illegible]
கோதண்டராமன் அவர்களால் 1—4—1968 அன்று அனுப்பப்பட்டதா[illegible]

(ஆ) ஆம், எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது[illegible]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) இல்லை. ஆனால் அச்சு[illegible]
குறிப்பு ஒன்றுடன் கூடிய முறையீடு ஒன்று, திருச்சிராப்பள்ளி [illegible]
மற்றோர் சங்கத் தலைவரான திரு நா. ரங்கரத்தினத்திடமிருந்[illegible]
நேரடியாகக் கிடைத்துள்ளது.

(இ) நிலங்களை ஒப்படை செய்வதில் தாமதம் குறித்து முறையீட்[illegible]
லும் குறிப்பிலும் தெரிவிக்கப்பட்டிருந்த புகார்களும், வருவாய்த்து[illegible]
அதிகாரிகளுக்கு எதிராக அவற்றில் கூறப்பட்டிருந்த குற்றச் சாட்டுகளு[illegible]
திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அதிகாரியுடனும் வருவாய்த்து[illegible]
வாரியத்துடனும் கலந்து ஆலோசிக்கப்பட்டன. திருச்சி வட்டத்தில் நில[illegible]
கள் ஒப்படை செய்வதற்கான மனுக்கள் குறித்து, நிலங்கள் கிடைக்கு[illegible]
போது தக்க வகையில் நடவடிக்கை எடுக்கப்படுவதாலும், புகார் கொடுத்[illegible]
திரு நா. ரங்கரத்தினமே, தன்னுடைய அச்சுக்குறிப்பு குறித்து நடவடிக்[illegible]
எதுவும் எடுக்கவேண்டிய அவசியமில்லை என்று அறிக்கை விடுத்துள்[illegible]
தாலும் இது குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டியதில்[illegible]
என்று கருதப்பட்டது.

**திரு. கே. விநாயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புகா[illegible]
அடங்கிய ஒரு ஹேண்ட் பில் விளம்பரம் செய்தபிறகு இந்தக் குறைபாடுக[illegible]
எல்லாம் அதிகாரிகளால் தீர்க்கப்பட்டதா ? அல்லது அதற்கு முன்[illegible]
இந்த ஹேண்ட் பில்லை அவர் விளம்பரம் செய்தார[illegible]
After publishing the hand-bill, how many cases have been r[illegible]
dressed speedily by the Collector as well as District Revenue Offic[illegible]
in assigning the land ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே[illegible]
சாதாரண கேள்வியிலேயே உறுப்பினர் அவர்கள் அகப்பட்டுக்கொண்[illegible]
ருக்கிறார்கள். திரு. ரங்கரத்தினம் என்பவர் டிஸ்மிஸ் செய்யப்பட்[illegible]
வில்லேஜ் கர்ணம் ஆதாரமில்லாத பெட்டிஷன் எழுதுவது அவருடை[illegible]
வாடிக்கையாக இருந்து வந்திருக்கிறது. " நான் எழுதியது தப்பு, நா[illegible]
எழுதியதில் நியாயம் இல்லை " என்று அவரே சொல்லியிருக்கிற[illegible]
திரு. ரங்கரத்தினம் அந்த நோட்டீஸை அவரே திரும்பப் பெற்[illegible]
கொண்டார்.



## *Gujarati Language*

*289 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether any incentive scheme to learn Gujarati language has been introudced in the Commercial Taxes Department ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி யானல் அந்த விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, குஜராத்திகள் வியாபாரம் செய்யும்போது, தங்களுடைய மொழியான குஜராத்தி மொழியிலேயே தங்களுடைய வியாபாரக் கணக்கை எழுதி வருகிறார்கள். நம்முடைய விற்பனை வரி இலாகாவிலே வரிகளை வசூல் செய்யவும், வரி ஏய்ப்புகளைத் தடுக்கவும் விற்பனை வரி இலாகாவிலுள்ள அதிகாரிகள் குஜராத்தி மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும், அப்படிக் கற்றுக் கொள்கிற அதிகாரிகளுககு ஊக்கம் அளிக்கும் வகையில் 200 ரூபாய் அளிக்கப்படும் என்றும் முன்னுள் அரசாங்கத்தில் குறிப்பு இருந்து வந்தது. ஆனல் இந்த முறை சரியாகச் செயல்படவில்லை. அதிகாரிகள் குஜராத்தி மொழியைக் கற்றுக் கொள்வதில் உற்சாகம் காட்டவில்லை. புதிய அரசு பொறுப்புக்கு வந்த பிறகு, விற்பனை வரி இலாகாவில் வரி ஏய்ப்புகள் ஏற்படக்கூடாது என்பதற்காக, அரசாங்கத்தின் விதிமுறைகளை மாற்றி, குஜராத்தி மொழி கற்றுக்கொள்ளும் அதிகாரிகளுக்கு 500 ரூபாய் ரொக்கமாக—கேஷ் கிராண்ட்—கொடுப்பது என்றும், அப்படி ரொக்கத் தொகை வேண்டாம் என்று கூறுகிறவர்களுக்கு இரண்டு அட்வான்ஸ் இங்க்ரிமெண்ட் கொடுப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது. இந்த இரண்டு வழிகளில் அதிகாரிகள் தங்களுக்குத் தேவையான முறையை தங்கள் இஷ்டம் போல் பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த விதி முறை 1968-க்கு முன்னல் குஜராத்தி மொழி கற்று பாஸ் செய்தவர்களுக்கும் பொருந்தும் என்னும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த நடை முறைதான் இப்போது அமலில் இருந்து வருகிறது.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, குஜராத்தி மொழியில் கணக்கு வைத்துக் கொள்ள அரசியல் சட்டம் இடம் தருகிறது. குஜராத்திகள் அதிகமாக உள்ள பகுதிகளிலுள்ள அதிகாரிகள் குஜராத்தி மொழியைப் பயில ஊக்கமளிக்கும் வகையில் சென்ற பட்ஜெட் தொடரில் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இதன் மூலம் பலன் அடைந்த அதிகாரிகள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, புதிய அரசு வந்ததற்குப் பிறகுதான் இந்த விதிமுறைகள் கொண்டுவரப்பட்டன. எத்தனை அதிகாரிகள் பலன் அடைந்தனர் என்பதற்குத் தனிக்கேள்வி கேட்கவும். இரண்டு நோக்கங்களுக்காக இது கொண்டு வரப்பட்டது. குஜராத்தி மொழியினர் வளமான வியாபாரத்தை செய்கின்றனர். விற்பனை வரியில் ஏமாற்றுதல்கள் இருக்கின்றன என்ற சந்தேகம் இருந்து வருகிறது. ஆகவே, விற்பனை வரியை அதிகப்படுத்தவும், வரி ஏய்ப்புகளைத் தடுக்கவும் குஜராத்தி மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற விதிமுறைகள் செய்யப்பட்டன.

**திரு. ஆலடி அருணா :** பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளை குஜராத்தி மொழியைப் படிக்க வேண்டும் என்று கேட்பதை விட சம்பந்தப்பட்ட வியாபாரிகளை தமிழ் அல்லது ஆங்கில மொழியில் கணக்குகளை வைத்துக்கொள்ள வேண்டுமென்று கட்டளையிடப்படுமா ?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, கட்டளையிடலாம். ஆனல் உறுப்பினர் சொன்னது போல், குஜராத்தி மொழியிலும் வியாபாரிகள் கணக்கு வைத்துக் கொள்ள அரசியல் சட்டம் இடம் கொடுக்கிறது. அவர்களுக்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** மைசூரிலே ஓடுகின்ற பெருந்துகளுக்கும், நாமது தமிழ்நாட்டிலே ஓடும் பெருந்துகளுக்கும் கட்டமான அமைப்பில் வேற்றுமைகள் பல உள்ளன. பயணிகள் வசதிக்காகவே தமிழ்நாட்டில் இந்தக் கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, டவுண் பஸ்களிலே பஸ்களில், 10 சதவிகிதம் நின்றுகொண்டு பயணம் அனுமதிக்கலாம் என்பதை அரசாங்கம் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** நகரங்களில் என்பது நல்லது. வெளியூர் செல்கின்ற பெருந்துகள் அல்ல. நகர எல்லைக்குள் ஓடுகின்றதும் பத்து பயணிகள் நின்று போக அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மாணவர்களுக்கும், வேறு யார் சென்றாலும், பொதுவான கட்டுப்பாடு ஆகும்.

**திருமதி சு. குப்பம்மாள் :** தலைவர் அவர்களே, வெளியூருக்குப் போகும்போது நின்றுகொண்டு போவதற்கு தொல்லையாக இருக்கிறது. ஆகவே, நின்றுகொண்டு போக முடியாமல்தான் இருக்கும். ஆகவே, அதிக ஜனநெருக்கத்தை ஒட்டி அதிகமாக பஸ்கள் விடப்படுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** உறுப்பினர் அவர்கள் சொன்ன மிகச் சிறந்த கருத்தை வரவேற்கிறேன். வெளியூரில் போகின்ற பேருந்துகளில், நான் முன்னால் சொன்னபடி, கூரை தாழ்வாக இருக்கிறது என்ற காரணத்தால், உட்கார்ந்து போவதுகூட வசதிக்குறைவாக இருக்கிறது என்பதால்தான் நின்று போக அனுமதி கொடுக்கப்படவில்லை.

**திரு. சி. நஞ்சன் :** தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், கூடலூர் பகுதியில், அரசாங்கப் போக்குவரத்து வண்டிகள் இருக்கின்றன. அதிலே குண்டலப்பேட்டை-எல்லமலை தடத்தில் 50, 60 பேர்கள் வரை ஓவர்லோட் ஏற்றிக்கொண்டு இருந்தார்கள். என்னவோ இப்பொழுது அந்த பஸ் ரூட்டை உடனடியாக எடுத்து விட்டார்கள். மீண்டும் அந்த ரூட்டில் பஸ் விட அரசாங்கம் உத்தேசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், அனுமதிக்கப்படுகிற பயணிகளுக்கு அதிகமான பேர்களை பேருந்து ஏற்றிச் சென்றால், அது சட்டத்திற்குப் புறம்பானது, குற்றமாகும். அது கண்டுபிடிக்கப்பட்டால், நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. வ. ஜார்ஜ் :** அவைத்தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட பஸ்கள் செல்லும் தூரத்தைப் பார்த்தால், நகர பஸ்களுடைய தூரந்தான் இருக்கும்; அதோடு உயரமும், கூட்டமும் உயரத்திற்கு அதிகமாக இருக்கிறது. ஆகவே, பீக் வேளைகளில் அதிகமான பாஸஞ்சர்களை ஏற்றிச் செல்ல அனுமதி கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** இந்தப் பிரச்னை பல முறைகள் ஆராயப்பட்டிருக்கிறது. முந்தைய அரசும் ஆராய்ந்திருக்கிறது. எனக்கு முன் இந்தத் துறைக்குப் பொறுப்பு ஏற்றிருந்த மாண்புமிகு முதல் அமைச்சரும் ஆராய்ந்து இருக்கிறார்கள். நேற்று நடைபெற்ற அதிகாரிகள் கூட்டம் ஒன்றிலும் ஆராயப்பட்டது. முடிவும் எடுக்கப்பட்டிருக்கிறது, வெளியூர் பேருந்துகளில் நின்று கொண்டு போக அனுமதி கொடுப்பதற்கில்லை என்று.

**THIRU B. VENKATASWAMY :** Sir, people are coming forward to travel by standing even in the mofussil buses also. So, in order to facilitate those standing passengers, will this Government allow those passengers who voluntarily want to travel by standing in the mofussil buses also ?



**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** இந்தக் கட்டுப்பாடு இருப்பதற்கே காரணம் பயணிகளுக்கு எவ்விதமான தொல்லைகளும் இல்லாமல் வசதியோடு பயணம் செய்வதற்குத்தான். உறுப்பினர் அவர்கள் சொல்கிறபடி, அதிக பேருந்துகள் விட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. ஆண்டுதோறும், 10 சதவிகிதம் அதிகமான ரூட்டுகளையும், பேருந்துகளையும் விட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் அதிகமான அளவில் ஆண்டுதோறும் விரிவுபடுத்த இடமிருக்கிறதா என்பது அதிகாரிகள் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதல் அமைச்சருக்கு வேறு அரசுப்பணி இருப்பதால் 283, 284, 285 286 என்னுள்ள கேள்விகள் ஒத்திவைக்கப்படுகின்றன.

*Assignment of poramboke lands.*

*287. *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Finance be pleased to state :—

(*a*) the extent of revenue porambokes in the Nilgiris district, taluk-wise ; and

(*b*) whether there is any proposal to assign or to lease these lands for agricultural purposes ?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :**

(அ) —

| | | | | எக்கர். |
|---|---|---|---|---|
| உதகமண்டலம் வட்டம் | | .. | .. | 36,899·83 |
| குன்னூர் வட்டம் | .. | .. | .. | 17,361·92 |
| கூடலூர் வட்டம் | .. | .. | .. | 15,965·35 |

(இ) நிலங்களை ஒப்படை செய்யும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, இந்தப் புறம்போக்கு நிலங்களை விவசாயத்திற்குப் பயன் படுத்துகிறார்களா ? ஆம் என்றால், அதன் மூலம் அரசுக்கு கிடைக்கும் வருமானம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்:** இந்த நிலங்கள் விவசாயத்திற்குப் பயன் படாது. பயனற்ற நிலங்கள்.

**திரு கே. போஜன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் கூறிய விவரங்கள் படி உதகை தாலூகா, குன்னூர் தாலூகா, இந்த இடங்களில் உள்ள பூமிகள், கிரேஸிங் கிரௌண்டு எவ்வளவு பரப்பளவு ? தனிப் புறம்போக்கு எவ்வளவு என்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** இவை பொதுவாக இருக்கின்றன புறம்போக்குகள் கிரேஸிங் கிரவுண்டுகள் இதிலே சேர்ந்திருக்கிறதா என்பது பற்றி விவரம் இங்கே இல்லை.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே அமைச்சர் கூறிய அளவில் உள்ள புறம்போக்கு நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு விநியோகிக்கவோ அல்லது குத்தகைக்குக் கொடுக்கவோ அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்பொழுது இருக்கிற புறம்போக்கு நிலங்கள் பற்றி அந்த அடிப்படையில் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் கேள்வி கேட்டார்கள். ஆனால் இவர் விளக்கமாகக் கேட்கவில்லை. குறிப்பிட்ட நிலங்களில் இப்பொழுது, உதக

THIRU K. VINAYAKAM: Whereas it is the fundamen
right of anybody to maintain accounts in his own mother-tong
or in any language in the country, is similar facility given to so
Officers to learn Hindi and Telugu in case some merchants ma
tain their accounts in Hindi as well as in Telugu because there
a large section of Telugu people in Madras State ?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்க
அதற்கான எந்தெந்த காரியங்கள், எந்தெந்த நேரத்தில் தேவைப்
கிறதோ, அந்தச் சந்தர்ப்பத்திலே செய்யப்படும். இந்தி மொழிக்காக இ
நடவடிக்கை, தெலுங்கு மொழிக்காக இந்த நடவடிக்கை எடுக்கவே
மென்ற கருத்திலே மாறுபாடு இல்லை. எந்த மொழியும் அவசிய
அரசாங்கத்தினுடைய விற்பனை வரி வருமானத்தை அதிகப்படு
வதும், வரி ஏய்ப்பதைத் தடுப்பதும்தான் நமது நோக்கம். இந்திக்க
களை அதிகமாகிவிட்டால் அவர்கள் மொழியிலே கணக்கு எடுப்பதுத
நியாயம்.

**திரு. க. ந. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்க
குஜராத் மாநிலத்திலே தமிழ்நாட்டு வியாபாரிகள் வியாபாரம் செ
வருகிறார்கள். அந்த மாநிலம் நம்மைப் போன்று பரந்த மனப்பான்
யில், தமிழ் மொழியை அங்குள்ள வணிகத் துறை அதிகாரிகள் கற்
கொள்ள வகை செய்து தருவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே,
அங்குள்ள வணிகத் துறை அமைச்சரைக் கேட்க வேண்டிய கே
உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்
பூபாகத்தில் காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரையிலும் எந்தத் தெ
லையும், எந்தமாதிரியான உத்தியோகத்தையும் செய்வதற்கு ஒவ்வொ
வருக்கும் உரிமை இருக்கிறது. any trad or profession or calling அ
உரிமைப்படி, குஜராத் மாநிலத்திலுள்ள தமிழ் வியாபாரிகள் தமிழ்
கணக்கு கொடுப்பதைத் தடுக்கமுடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்ற

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்
உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டு அவ்வுரை அமைந்துள்ளதைக் குறிக்கும்.]

## 2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### (ஆ) தாமதித்து வந்த உறுப்பினர்களுக்குத் துணைவினாக் கேட்க அனுமதி.

**திரு. சா. மெய்யப்பன் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார், உபகேள்விகளை
கேட்டபோது சம்பந்தப்பட்ட உறுப்பினர் வராமலிருந்து, பின்பு உறுப்பின
வந்திருந்தால் மறுபடி கேட்க அனுமதியளிக்கலாம் என்று இருக்கிறத
விதி 35(3)-ன்படி,

When all the questions for which an oral answer is desire
have been called the Speaker may, if time permits, call again any
question which has not been asked by reason of the absence o
the member in whose name it stands and may permit the member
if present, to ask the question.

என்பது இப்போது அமல்படுத்தப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக்கேள்வி கேட்ட உறுப்பின
யாராவது வராமல் இருந்து, அந்த நேரத்தில் கேள்வி கேட்ட பிற
வந்தால், அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படும். அப்படி யாராவ
இருக்கிறார்களா ?



**திரு. சா. மெய்யப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு என்று இருப்பதை உபகேள்விக்கும் அது பொருந்தும் என்று மாற்ற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதியில் தெளிவாக இருக்கிறதே.

## 3. கவன ஈர்ப்பு.

### மதுரை மாவட்டத்தில் மழையின்மையும், சில பகுதிகளைப் பஞ்சப்பகுதிகளாக அறிவித்து நிவாரண வேலைகளை மேற்கொள்ளலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை நிதி அமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவர திரு. பெ. மலைச்சாமி, மா. இராசாங்கம், திரு. கரு. சீமைச்சாமி, திரு. என்.எஸ். வி. சித்தன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். திருவாளர்கள் மலைச்சாமி, இராசாங்கம், சீமைச்சாமி ஆகியோர் இடத்தில் இல்லை. ஆதலால், இப்போது திரு. சித்தன் அவர்கள் அவருடைய அறிவிப்பை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

மு.ப. 10-00

***திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டத்தில் குறிப்பாக உசிலம்பட்டி, திருமங்கலம், நிலக்கோட்டை ஆகிய பகுதிகளிலும், மற்றும் பெரியாறு, வைகை நீர்த்தேக்கங்கள் மூலம் பாசன வசதி பெறும் பகுதிகளிலும் மழை பொய்த்தமையால் அப் பகுதிகளைப் பஞ்சப் பகுதிகளாக அறிவித்து நிலவரியைத் தள்ளுபடி செய்தல், கடன்களை ஒத்திவைத்தல் போன்ற நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டிய" அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் போதிய மழையில்லை. இதன் விளைவாக, பெரியாறு திட்டப்பகுதியில் குறிப்பிட்ட தேதிக்கு ஒரு திங்கள் முன்னதாகவே நீர் வழங்குவது நிறுத்தப்பட்டுவிட்டது. அதனால் பெரியாறு திட்டப்பகுதியின் கீழ் உள்ள இரு போகப் பயிர்ப் பகுதிகள் பாதிக்கப்பட்டன. இவ்வாறு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். பெரியாறு ஆயக்கட்டின் கீழ் எஞ்சியுள்ள பகுதியில் நிலைமை ஓரளவு சீராக உள்ளது. இங்குள்ள பயிர்கள் பெருமளவு காப்பாற்றப் பட்டுவிட்டன. நிலக்கோட்டை வட்டத்தில் நிலைமை மனநிறைவளிக்கத் தக்கதாக இருக்கிறது. ஏனெனில் இந்த வட்டத்தில் பெரும்பகுதி பெரியாறு ஆயக்கட்டில் இருந்து வருகிறது. உசிலம்பட்டி, திருமங்கலம் வட்டங்களில் உள்ள ஏரிகளுக்குப் போதிய அளவு நீர் வழங்கப்படாததால் ஆயக்கட்டில் பெரும்பகுதி தரிசாகவே விடப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் சென்று பார்வையிட்டார். வரிவசூலிப்பதைப் பொதுவாகத் தள்ளிப்போட வேண்டிய அவசியம் இல்லை என்றும், 1376-இல் இருந்து 1378-வது பசலி ஆண்டு வரை சேர வேண்டியுள்ள கடன் நிலுவைத் தொகைகளை மெதுவாக வசூலிக்கும் முறை மேற்கொள்ளப்பட்டால் அதுவே போதுமானது என்றும் அவர் கருதுகிறார். ஆயினும் விளைச்சல் மிகவும் மோசமாக உள்ள நேர்வுகளில் பருவ காலத் தள்ளுபடி வழங்கவேண்டுமென்று வருவாய் கோட்ட அதிகாரிகளுக்கு அவர் உத்திரவிட்டுள்ளார். திண்டுக்கல், பெரியகுளம், உசிலம்பட்டி, ஆகிய கோட்டங்களில் குடிநீர்ப் பற்றுக்குறை நிலவுவதால், கிணறுகளை ஆழப்படுத்தும் பணியை மேற்கொள்ளும்படி ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி வழங்கியுள்ளார். மேலும், இந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு ரூ. 3 லட்சம் செலவிட ஒப்புதல் அளிக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் விண்ணப்பம் செய்து கொண்டுள்ளார். இது குறித்து தேவையான ஆணைகள் இராம

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 மார்ச் 12

வளர்ச்சி உள்ளாட்சித் துறையில் பிறப்பிக்கப்படும். மதுரை மாவட்டத்தில் நிலைமை எவ்வாறுள்ளதென்பது பற்றி மேற்கொண்டும் ஓர் அறிக்கை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரை வட்டத்தில் மழை இல்லை, பல பகுதி தரிசாகவிடப்பட்டிருக்கிறது. என்று சொன்னார். குடிதண்ணீருக்கு கஷ்டம் இருப்பதை ஒப்புக் கொண்டார். இந்த ஆண்டு மாவட்டக் கலெக்டர் சுற்றுப் பயணம் செய்யும்போது கடன் வசூலை ஒத்திப் போடவேண்டும், நிலவரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். உடனடியாக பஞ்ச நிவாரண வேலைகளைத் துவக்க வேண்டுமென்று கோரினோம். இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதோடு கொள்முதல் என்ற பெயராலே ஒரு ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்களும், துன்பப் படுத்தப்படுகிறார்கள். அதை நிறுத்தவேண்டுமென்று கோரினோம், இவற்றை எல்லாம் நிறைவேற்றுவார்களா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உறுப்பினருடைய உணர்ச்சியைப் பாராட்டுகிறேன். அவரே மழையில்லை என்கிறார், கொள்முதல் செய்கிறார்கள் என்கிறார். இப்படி ஒன்றுக்கொன்று முரணாகச் சொல்கிறார். நான் முன்பும் சொல்லியிருக்கிறேன். ஒரு ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்களிடம் கொள்முதல் செய்யக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறோம். தவறாக நடந்துவிட்ட இடங்களில் கூட அதிகாரிகளை சமாதானம் கேட்டு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆகவே இதுபற்றி உறுப்பினருடைய உணர்ச்சியை மதித்து நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காகத்தான் விரிவான வேறு ஒரு அறிக்கை ஒன்றும் கேட்டிருக்கிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஒரு பக்கத்தில் மழையில்லை என்கிறார், இன்னொரு பக்கத்தில் கொள்முதல் செய்யப்படுவதாக முரணாகச் சொல்கிறார் என்று அமைச்சர் சொன்னார். பம்புசெட்டு வைத்து நெல் விளைவித்த இடங்களில் தான் கொள்முதல் நெருக்கடி அதிகமாக இருக்கிறது. மேலும் பஞ்ச நிவாரண வேலைக்கு 3 லட்சம் என்பது போதவே போதாது. அதை அதிகப்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா ?

## 4. 1969-70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் 13—கல்வி.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

"கோரிக்கை எண் 13-கல்வி* என்ற தலைப்பின்கீழ் ரூ. 66,04,43,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**THIRU K. VINAYAKAM:** Sir, to discuss the general policy and desirability of adopting a fixed educational policy including language problem, I move the cut motion standing in my name:

"That the allotment of Rs. 66,04,43,800 under Demand No. 13—Education—be reduced by Rs. 100."

* 90-116-ம் பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1969 மார்ச் 12]

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி :** கல்லூரிகளில் தமிழ் போதனா மொழி (medium) வகுப்புகளுக்கு மாணவர்கள் சேர விரும்பாமல் பெரும்பாலும் ஆங்கில போதனா மொழி (medium) வகுப்புகளில் சேர விழையும் தன்மைபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 13—கல்வி—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 66,04,43,800-ல், ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் :** தமிழக ஆரம்ப ஆசிரியர்களுக்கான விதிகளை (M. E. R.) சரிவர பூர்ணமாக ஆக்குவதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 13—கல்வி—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 66,04,43,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு, தேர்வுபெற்ற வரிசைப்படி வேலை கிடைக்க மாவட்ட அளவில் நடைமுறை ஏற்படுத்த வேண்டுமென்று விவாதிக்க—

"கோரிக்கை எண் 13—கல்வி—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 66,04,43,800-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** தொழிற்பயிற்சியை விரிவுபடுத்துகின்ற திட்டத்தை விஸ்தரிக்கப் பள்ளிகளில் ஒரு மணி நேரம் வகுப்புகளில் பாட முறையுண்டாக்குவதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 13—கல்வி—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 66,04,43,800-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. ரா. கனகசபை :** பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக்காக இந்த ஆண்டு ரூ. 66,04,43,800 மானியம் கோரப்பட்டிருக்கிறது. அதோடு பி. யு. ஸி. வகுப்பிலே இலவசக் கல்வி அளிப்பது என்றும் அரசாங்கம் தீர்மானித்து இருக்கிறது. இன்னும் பல புதிய கல்லூரிகளை ஆரம்பிப்பது என்றும், சில கல்லூரிகளில் எம்.ஏ., எம்.எஸ்.ஸி. போன்ற மேல்வகுப்புகளை ஆரம்பிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் வரவேற்கத்தக்கவை.

ஆனால், நாம் எவ்வளவு தொகை செலவழித்தாலும் செலவழிக்கப்படுகின்ற தொகை என்ன முறையில் பயன்பட்டு வருகிறது என்பதையும் யோசிக்க வேண்டும். இப்போது அப்படி யோசிப்பதாகத் தெரியவில்லை. அதிகமாகக் கல்லூரிகளைத் திறப்பதும், அதிகமான மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதும் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு கல்விக்காக அதிக நிதி ஒதுக்கினோம் என்பதும் இப்படியாக நம்முடைய மதிப்பு க்வாண்டிடேடிவ் ஆகத்தான் இருக்கிறதே தவிர க்வாலிடி என்ன நிலைமையில் இருக்கிறது என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்பதில்லை. பொதுவாகப் பல கல்லூரிகளை நாம் திறந்தாலும் நமது மாணவர்கள் தங்கள் இஷ்டமான பாடம் எடுத்துக் கொள்ளவும் வசதி இல்லை—ஆசிரியர்கள் இல்லை. கலைப்பிரிவு— ஆர்ட்ஸ் கல்லூரிகளிலும் இதே நிலைதான். அதேமாதிரி ஸயன்ஸ் பகுதியில் மாணவர்கள் சேர விரும்பினால் இடம் கிடைப்பதில்லை. மேற்கொண்டு திறப்பதுபற்றியே யோசித்துக் கொண்டிருக்கிறோமே தவிர திறக்கப்பட்டவைகளில் வசதிகளைப் பெருக்க நாம் யோசிக்கவில்லை.

அதோடு எல்லோருடைய கவனத்திற்கும் கொண்டுவரக்கூடிய முக்கியமான சங்கதி மாணவர்களிடையே இன்டிஸிப்ளின். எங்கு பார்த்தாலும் பரவிவருகிறது. [சமீபத்திலே ]அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே

வளர்ச்சி உள்ளாட்சித் துறையில் பிறப்பிக்கப்படும். மதுரை மாவட்ட
த்தில் நிலைமை எவ்வாறுள்ளதென்பது பற்றி மேற்கொண்டும் ஓர் அறிக்கை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்க
படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரை வட்டத்தில் மழை இல்லை, ப பகுதி தரிசாகவிடப்பட்டிருக்கிறது. என்று சொன்னார். குடிதண்ணீருக்கு கஷ்டம் இருப்பதை ஒப்புக் கொண்டார். இந்த ஆண்டு மாவட்டக் கலெக்ட சுற்றுப் பயணம் செய்யும்போது கடன் வசூலை ஒத்திப் போடவேண்டு நிலவரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டோ உடனடியாக பஞ்ச நிவாரண வேலைகளைத் துவக்க வேண்டுமென்று கோரினோம். இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதே கொள்முதல் என்ற பெயரால் ஒரு ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்களும், துன்பப் படுத்தப்படுகிறார்கள். அதை நிறுத்தவேண்டு மென்று கோரினோம், இவற்றை எல்லாம் நிறைவேற்றுவார்களா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உறுப்பினருடைய உணர்ச்சியைப் பாராட்டுகிறேன். அவரே மழையில்லை என்கிறார், கொள்முதல் செய் கிறார்கள் என்கிறார். இப்படி ஒன்றுக்கொன்று முரணாகச் சொல்கிறார். நான் முன்பும் சொல்லியிருக்கிறேன். ஒரு ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்களிடம் கொள்முதல் செய்யக்கூடாது என்று உத்தரவிட்டி ருக்கிறோம். தவறாக நடந்துவிட்ட இடங்களில் கூட அதிகாரிகளை சமா தானம் கேட்டு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆகவே இதுபற்றி உறுப்பினருடைய உணர்ச்சியை மதித்து நடவடிக்கை எடுக்கப்படும். அதற் காகத்தான் விரிவான வேறு ஒரு அறிக்கை ஒன்றும் கேட்டிருக்கிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஒரு பக்கத்தில் மழையில்லை என்கிறார், இன்னொரு பக்கத்தில் கொள்முதல் செய்யப்படுவதாக முரணாகச் சொல் கிறார் என்று அமைச்சர் சொன்னார். பம்புசெட்டு வைத்து நெல் விளைவித்த இடங்களில் தான் கொள்முதல் நெருக்கடி அதிகமாக இருக்கிறது. மேலும் பஞ்ச நிவாரண வேலைக்கு 3 லட்சம் என்பது போதவே போதாது. அதை அதிகப்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா ?

## 4. 1969-70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் 13—கல்வி.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பேரவைத் தலைவர் அவர்களே ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

"கோரிக்கை எண் 13-கல்வி* என்ற தலைப்பின்கீழ் ரூ. 66,04,43,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

THIRU K. VINAYAKAM: Sir, to discuss the general policy and desirability of adopting a fixed educational policy including langu age problem, I move the cut motion standing in my name:

"That the allotment of Rs. 66,04,43,800 under Demand No. 13—Education—be reduced by Rs. 100."

* 90-116-ம் பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி :** கல்லூரிகளில் தமிழ் போதனா மொழி (medium) வகுப்புகளுக்கு மாணவர்கள் சேர விரும்பாமல் பெரும் பாலும் ஆங்கில போதனா மொழி (medium) வகுப்புகளில் சேர விழையும் தன்மைபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகிற ரூ. 66,04,43,800-ல், ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் :** தமிழக ஆரம்ப ஆசிரியர்களுக் கான விதிகளை (M. E. R.) முழுமையாக ஆக்குவதுபற்றி விவா திக்க—

"கோரிக்கை எண் 13—கல்வி—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 66,04,43,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சே. அழகர்சாமி :** பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு, தேர்வுபெற்ற வரிசைப்படி வேலை கிடைக்க மாவட்ட அளவில் நடைமுறை ஏற்படுத்த வேண்டுமென்று விவாதிக்க—

"கோரிக்கை எண் 13—கல்வி—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 66,04,43,800-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** தொழிற்பயிற்சியை விரிவுபடுத்து கின்ற திட்டத்தை விஸ்தரிக்கப் பள்ளிகளில் ஒரு மணி நேர வகுப்புகளின் பாட முறையுண்டாக்குவதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 13—கல்வி—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகிற ரூ. 66,04,43,800-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. ரா. கனகசபை :** பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக்காக இந்த ஆண்டு ரூ. 66,04,43,800 மானியம் கோரப்பட்டிருக்கிறது. அதோடு பி. யு. ஸி. வகுப்பிலே இலவசக் கல்வி அளிப்பது என்றும் அரசாங்கம் தீர்மானித்து இருக்கிறது. இன்னும் பல புதிய கல்லூரிகளை ஆரம்பிப்பது என்றும், சில கல்லூரிகளில் எம்.ஏ., எம்.எஸ்.ஸி. போன்ற மேல்வகுப்பை ஆரம்பிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் வர வேற்கத்தக்கவை.

ஆனால், நாம் எவ்வளவு தொகை செலவழித்தாலும் செலவழிக்கப்படு கின்ற தொகை என்ன முறையில் பயன்பட்டு வருகிறது என்பதையும் யோசிக்க வேண்டும். இப்போது அப்படி யோசிப்பதாகத் தெரியவில்லை. அதிகமாகக் கல்லூரிகளைத் திறப்பதும், அதிகமான மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதும் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு கல்விக்காக அதிக நிதி ஒதுக்கினோம் என்பதும் இப்படியாக நம்முடைய மதிப்பு க்வாண்டிடேடிவ் ஆகத்தான் இருக்கிறதே தவிர க்வாலிடி என்ன நிலைமையில் இருக்கிறது என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்பதில்லை. பொதுவாகப் பல கல்லூரிகளை நாம் திறந்தாலும் நமது மாணவர்கள் தங்கள் இஷ்டமான பாடம் எடுத்துக் கொள்ளவும் வசதி இல்லை—ஆசிரியர்கள் இல்லை. கலைப்பிரிவு— ஆர்ட்ஸ் கல்லூரிகளிலும் இதே நிலைதான். அதேமாதிரி சையன்ஸ் பகுதியில் மாணவர்கள் சேர விரும்பினால் இடம் கிடைப்பதில்லை. மேற் கொண்டு திறப்பதுபற்றியே யோசித்துக் கொண்டிருக்கிறோமே தவிர திறக்கப்பட்டவைகளில் வசதிகளைப் பெருக்க நாம் யோசிக்கவில்லை.

அதோடு எல்லோருடைய கவனத்திற்கும் கொண்டுவரக்கூடிய முக்கிய மான சங்கதி மாணவர்களிடையே இன்டிஸிப்ளின். எங்கு பார்த்தாலும் பரவிவருகிறது. சமீபத்திலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே

முதல் வாரத்திலே இரண்டு மாணவர்களிலே பெ ... மூடப்ப... இரண்டு மாதங்களுக்கு அந்தப் பல்கலைக் கழகம் ... எந்... விட்டது. காரணம் மொழிப்பிரச்னை, இந்திப்பிரச்னை போன்ற ... தனிப்பட்டவர்களுடைய ... பிரச்னையும் இல்லை. ... செய்யவேண்டுமென்று எண்ணைக் கேட்ட... மூடப்பட்டது. இதற்கு என்ன செய்யவேண்டுமென்று ... ஒரு பெரிய நிபுணர்கள் கொ... அமைச்சர் அவர்கள் கல்வி சம்பந்தமாக ஒரு பெரிய ... ஆலோசனைக்காக வைத்துக் கொண்டு அவர்... குழுவை எப்பொழுதும் ஆலோசனைக்காக ... முறையில் கவனம் செலுத்த ... அடிக்கடி கலந்து இதிலே நல்ல முறையில் கவனம் செலுத்த ... வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மொழிப் பிரச்னை எப்பொழுது பார்த்தாலும் ஒரு சிக்கலான பிரச்... யாக இருந்து கொண்டிருக்கிறது. திட்டவட்டமான ஒரு கொள்கை இல்... இந்த அரசு வந்ததற்குப் பிறகு முன்பு இருந்த கல்வியமைச்சர் அவர்க... அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே பேசும்பொழுது மும்மொழி... திட்டத்தை வற்புறுத்திப் பேசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இ... மொழிக் கொள்கை என்று பேசிவருகிறார்கள். எந்தக் கொள்கையா... இருந்தாலும் அந்தக் கொள்கை அகில இந்திய ரீதியிலே நல்ல கொ... கையாகவும் மாணவர்களுடைய நலனைப் பாதுகாக்கக்கூடிய அளவிலேயு... இருக்கிறதா என்பதைத்தான் ஆலோசிக்க வேண்டுமே தவிர, அர... தனிப்பட்டவர்களுடைய விருப்பு வெறுப்புகளு... காரணங்களுக்காகவோ கொள்கையை வகுத்துக் கொண்டே போனால் பிற்காலத்திலே ... காகவோ கொள்கையை வகுத்துக் கொண்டே போனால் பிற்காலத்தி... இந்த நாட்டை ஆளக்கூடியவர்களாக இருக்கிற மாணவர்கள் பல இன்ன... களுக்கு ஆளாவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு பல லட்சக்கணக்கான ரூபாய்கள் பல்கலைக் கழகங்களுக்கு... கொடுக்கப்படுகிறது. ஆனால், அவை சரியானபடி செலவழிக்கப்படுகிற... என்ன மாதிரி உபயோகப்படுத்தி வருகிறார்கள், நாம் கொடுக்கின்ற ரூப... மாணவர்களுக்கு நல்ல முறையிலே பயன்படுகிறதா கல்வியின் தர... உயர்வதற்கு என்ன உதவி செய்யப்படுகிறது என்று எல்லாம் பார்... பதற்கு ஒன்றும் இல்லை. காரணம் யுனிவர்சிடி என்றாலே அது அடா... மஸ் பாடி என்று சொல்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கக்கூடி... பணம், மக்களிடத்தில் கசக்கிப் பிழிந்து வாங்குகிற வரிப் பணத்தை... கொடுப்பது, என்ன மாதிரியாகச் செலவு செய்யப்படுகிறது என்று பார்... பதற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லாமல் போய்விட்டால் அந்... பணம் விரயமாகத்தான் போய்விடும். அரசாங்கம் தலையிடாமல், ப... கலைக்கழகத்தில் தனிப்பட்டவர்கள் அதிகாரம் நடைபெறும்பொழுது அதை... கேட்பதற்கு அரசாங்கத்திலே ஏதாவது வழிவகை செய்ய வேண்டு... அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்திலே பத்து ஆண்டுகளுக்கு ஒ... பைனான்ஸ் கமிஷன் போட வேண்டுமென்று இருக்கிறது. முதன் முதலி... தான் போடவேண்டுமென்று இருக்கிறது. அப்படியில்லாமல் எப்பொழுது... அப்படியிருக்க வேண்டுமென்று அந்தச் சட்டத்தைத் திருத்தி வ... செலவுத் திட்டங்களைப் பார்த்து வீண் செலவுகளை எப்படித் தடுப்ப... என்றெல்லாம் ஆலோசனை செய்து என்ன என்ன வழிவகைகள் செய்... வேண்டுமோ அதை யெல்லாம் செய்யவேண்டும்.

அதோடு மட்டுமல்ல. எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் பெரிய பெரி... புத்தகசாலைகள், லைப்ரரிஸ், வைத்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் புத்... சாலைகள் எந்த அளவுக்கு உபயோகப்படுகின்றன, ஆசிரியர்களாலும் ச... மாணவர்களாலும் சரி எந்த அளவுக்கு அவை உபயோகப்படுத்தப்படு... கின்றன என்பதையெல்லாம் கண்காணிப்பதற்கு யாரும் இல்லை. பொ... வாகப் புத்தகங்கள் இவ்வளவு வால்யூம்கள் இருக்கின்றன என்... பெருமையாகச் சொல்லிக் கொள்ளப்பட்டாலும் அதை உபயோ... படுத்தக்கூடிய நல்ல வழிவகைகளைச் செய்ய வேண்டும். ஒருபடி அ... மாகச் சொல்ல வேண்டுமானால் ஆசிரியர்கள் கல்லூரிக்குச் சென்று செ... லிக் கொடுக்கின்றபொழுது நோட்ஸை படித்துவிட்டுத்தான் போய்ச் சொல்... கொடுக்கிறார்கள். அரசாங்கம் நல்ல முறையில் யோசனை செய்து நோட்... போடுவதையே தடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்...



கொள்கிறேன். மாணவர்கள் டெக்ஸ்ட் புக்கையும் படிப்பதில்லை, புத்தக சாலைகளிலும் படிப்பதில்லை, இதனால் கல்வியின் தரம் குறைந்துகொண்டே வருகிறது. ஐ.ஏ.எஸ். ரிசல்ட்டைப் பார்த்தாலே அது தெரியும். முன்பு ஒவ்வொரு வருடமும் அதிகமாக நம்முடைய மாநிலத்திலே பாஸ் பண்ணு வார்கள். இப்பொழுது குறைந்து கொண்டே வரக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. ஆகவே நாம் செலவழிக்கின்ற பணத்திற்கு நல்ல பலன் கிடைப்பதாக இருக்க வேண்டும். அந்த முறையில் பல்கலைக் கழகத்தைக் கண்காணிப்பதற்கு வழி செய்ய வேண்டும்.

சமீபத்திலே ஒரு ஆடிட் ரிப்போர்ட்டைப் பார்த்தேன். 1966–67இல் பார்த்தால் 1961–62 லிருந்து ஆடிட் அப்ஜெக்ஷன்ஸ் 1,392 இருக் கின்றன. அது 62,72,737 ரூபாய்க்கு இருக்கிறது. அதற்கு செனட்டிலே என்ன பதில் சொல்கிறார்கள் என்றால் அதிலே 228 அப்ஜக்ஷன்களுக்குப் பதில் சொல்லிவிட்டோம் என்று சொல்கிறார்கள். அதைப்பற்றி மேற்கொண்டு ஒன்றும் இல்லை. ஆடிட்டை எக்ஸாமினர் ஆப் லோக்கல் பண்ட் அக்கவுண்ட்ஸ் தான் செய்கிறார்கள். அங்கே வந்திருந்த ஒரு அஸிஸ்டெண்ட் எக்ஸாமினருடன் நான் பேசிக்கொண்டிருந்தபோது அவர் சொன்னார், நாங்கள் முனிசிபல் ஆடிட்டையும் செய்கிறோம். யூனிவர்சிடி ஆடிட்டையும் செய்கிறோம், ஆனால் யூனிவர்சிடி என்பது அட்டானமஸ் பாடி என்று சொன்னார். வேடிக்கை என்னவென்றால் தெற்கு கோபு ரத்தை விலைக்கு வாங்கலாமா என்றால் அதற்கு சிண்டிகேட் சாங்ஷன் இல்லை என்று சொல்கிறார்கள்....................

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் அந்த சிண்டிகேட்டில் இப்பொழுது இருக்கிறார்களா என்று தெரியவில்லை. ஆனால் அவரும் ஒரு அங்கத்தினராக அதில் இருந்தார்.

**திரு. ரா. கனகசபை :** இருந்து, அந்த வரவு-செலவுத் திட்டத்தைச் சீர்திருத்த வேண்டுமென்று முயற்சி செய்து எந்தவிதப் பயனும் இல்லை என்பதால் நான் அதை விட்டுவிட்டேன். ஆறு மாதங்களுக்கு முன்னேயே ராஜிநாமா பண்ணிவிட்டேன்.

அதோடு பல்கலைக் கழகங்களிலே ஆசிரியர்களுக்கு, அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு போர்த் பிளான் ஸ்கேல்ஸ் கொடுக்கப்பட வில்லை. மற்றவர்களுக்கு கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அது மட்டு மல்ல, அவர்களுக்குப் பஞ்சப்படியும் கொடுக்கப்படவில்லை. காரணம் பணம் இல்லை என்ற ஒரே காரணத்தினாலேதான். லாஸ்ட் கிரேட் செர் வண்ட்ஸ் அவர்களுக்கு இந்த சென்னை அரசாங்கத்திலே கொடுக்கப்படு வதைப்போல பஞ்சப்படி கொடுக்கப்படாமல் அவர்கள் கிளர்ச்சி செய்து அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்து 80 ஆயிரம் ரூபாய் கொடுத்து அவகளுக்கு அது கொடுக்கப்பட்டது. இதர செலவுகள் செய்யப்படும் பொழுதும் பல அனாவசியச் செலவுகள் செய்யப்படுகின்றன. மற்றப் பல் கலைக் கழகங்களைப்பற்றி எனக்குத் தெரியாததாலே தெரிந்ததைப்பற்றிச் சொல்கிறேன். அதேமாதிரியான அனாவசியமான காரியங்களை நிறுத்து வதற்கு அரசாங்கத்தின் அதிகாரம் இருக்க வேண்டும். அங்கு இருக் கின்ற ஊழியர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க என்ன என்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இருக்கிற சட்டம் 1928-ஆம் ஆண்டிலே ஆக்கப்பட்டிருக்கிற சட்டம். ஆனால், மற்ற இரண்டு பல்கலைக் கழகங்களிலும் இல்லாத சில அம்சங்கள் அந்தச் சட்டத்தில் இருக்கின்றன. அதை ஆராய்ச்சி செய்து அதைத் திருத்துவதற்குப் பற்பல கல்வி நிபுணர்களைக் கொண்ட ஒரு குழு இருந்து அதைப்பற்றிய ஒரு அறிக்கையை முன்பு இருந்த அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தது. என்ன காரணத் தாலோ அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அந்தக் குழுவின் அறிக்கையை அரசாங்கம் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்களுக்கு என்.சி.சி. பயிற்சி பற்றி ஒரு வார்த்தை. என்.சி.சி. அதிகாரி ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது, இந்த அரசின் கொள் கையால் இங்குள்ள மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பலன் கிடைக்கா

மல் போய்விடுகிறது, ஆண்டு ஒன்றுக்கு மூன்று கோடி ரூபாய் வரை அ
காக இந்த மாநிலம் பணம் பெறுவது நின்று விடுவதோடு மாண
களுக்குக் கிடைக்க வேண்டிய பயிற்சி கிடைக்காமல் போய்விடுகிறது. பெ
உத்தியோகங்கள் கிடைக்கும் வாய்ப்பை இழந்து விடுகிறார்கள். சில செ
கள்தான் இறுதியில் உள்ளன. அவற்றை மாற்ற வேண்டுமென்று செ
லும்போது அகில இந்திய ரீதியில் எல்லா இடங்களிலும் இந்தியில் இ
கும்போது இங்கே பயிற்சியை, இங்கே பயிற்சி பெற்றவர்கள் அ
செல்லும்போது கலைத் தாக்கு என்றும் கையைத் தூக்கக்கூடிய நி
ஏற்படும். ஆகவே, இதிலே இளைஞர்கள் பயன்படும்படியாக ஒரு திட்டத்
சீக்கிரம் கொண்டு வர வேண்டும். மாணவர்களுடைய காரக்டர் பில்
டுக்கு அது துணை புரிகிறது. இப்போது இருக்கிற சில புகார்கள், சிக்கல்
எல்லாம் கூடக் குறையும். ஆகவே, இதிலே எடுக்க வேண்டிய
வடிக்கையை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கே
கொள்கிறேன். கல்வி என்பது 'the ultimate aim and essence of e
cation is the training of character, என்று காலம் சென்ற முதலமை
அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பே
போது சொன்னதை ஏற்றுக் கொண்டு எஜுகேஷனல் பாலி
வகுத்தாலே போதும்; வேறு ஒன்றும் வேண்டியதில்லை. கா
மேனுக்கு என்ன பண்ணுகிறோம்? அவன் கொடுக்கிற வரிப் பண
லிருந்து உங்களை எல்லாம் படிக்க வைக்கிறோம், நீங்கள் அவனு
செய்ய வேண்டிய காரியம் என்ன என்று யோசித்துப் பார்க்க வேண்
என்று சொன்னார்கள். அதற்குத் தக்கபடி பல்கலைக் கழகங்கள் தே
கொடுக்க வேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். அதைக் கொண்டு க
திற்கேற்ப கல்வித் துறையிலே மாற்றம் செய்ய வேண்டுமோ அந்த
யிலே மாற்றி, மாணவர்கள் எந்தத் துறையிலே பயிற்சி பெற வி
கிறார்களோ அதற்கான வசதிகள் எல்லாம் செய்து கல்வி மு
வகுக்க வேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அலுவல் ஆய்வுக் குழுவில்
வொரு கட்சிக்கும் இவ்வளவு நேரம் ஒதுக்குவது என்று முடிவு செ
பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 50 நிமிடந்
வரும். கொறடா அவர்கள் 10 பெயர்களைக் கொடுத்திருக்கிறார். அ
படி ஐந்து நிமிஷத்திற்கு மேல் ஒரு உறுப்பினருக்கு வராது. ஆ
ஐந்து நிமிஷத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டுமென்று கே
கொள்கிறேன்.

***திரு. பு. செ. முத்துச்செல்வன்:** பேரவைத் தலைவர் அவர்க
இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்க
கொண்டு வரப்பட்டிருக்கின்ற கல்வி மானியக் கோரிக்கையின்மீது
னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். கல்வி மானியக் கே
கையின் மீது 66 கோடியே 4 இலட்ச ரூபாய் அளவுக்கு கோரி
கொடுக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும். சென்ற ஆட்சி கால
1966–67-ம் ஆண்டில் 40 கோடி ரூபாய் மட்டுந்தான் கல்விக்காகச்
வழிக்கப்பட்டது. ஆனால் அந்த நிலை மாற்றப்பட்டு இன்று 66
ரூபாய்க்கு மேல் செலவு செய்கிறோம் என்பது கல்வியினுடைய வ
யிலே இந்த அரசு எந்த அளவுக்குக் கவனம் கொண்டிருக்கிறது
பதற்குச் சான்றாகும்.

இந்த ஆட்சிக் காலத்திலே கல்லூரிகள் எந்த அளவுக்குத் தி
பட்டிருக்கின்றன என்று பார்த்தால் வளர்ச்சியிலே அக்கறை காட்
தெரியும். சென்ற ஆட்சிக் காலத்திலே 1966–67-லே 105 கல்லூ
இருந்தன என்றால் இந்த ஆட்சி வந்து இரண்டு ஆண்டுகளிலே
126 ஆக உயர்ந்திருக்கிறது. 21 கல்லூரிகள் அதிகமாகத் திறக்கப்ப
கின்றன. 1969–70-ல் மேலும் நான்கு புதிய கல்லூரிகளைத் திற
திட்டமிடப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல எதிர்காலத்தைக் காட்
அமைந்திருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக் கொண்டாலும்



இரண்டு ஆண்டுகளில் 134 உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டு சீரிய முறையில் நடைபெற்று வருகின்றன. 1969–70-ல் மேலும் பல உயர்நிலைப் பள்ளிகளைத் திறக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. சென்ற ஆட்சிக் காலத்திலே இல்லாத பல புதிய அம்சங்கள் கடந்த இரண்டு ஆண்டு ஆட்சியிலே ஏற்பட்டிருக்கின்றன. நல்ல தரமான கல்வியை வளர்க்க வேண்டுமென்பதற்காக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு எம்.ஏ. (ஆங்கிலம்) படிக்க உதவித் தொகை எல்லாம் வழங்க வகை செய்திருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் நிரம்ப விஞ்ஞானக் கூடங்கள் ஏற்படுத்த வகை செய்யப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்திலே பள்ளிகள் திறக்கப்பட்டன என்றும், 1,500, 2,000 என்றும் எண்ணிக்கையைக் காட்டுவார்களே தவிர, அந்த பள்ளிகளுக்கு நல்ல கட்டடங்கள் இருக்காது. மேல் கூரை இல்லாத கட்டடங்களும், வசதியற்ற கட்டடங்களுமாகத்தான் இருந்தன, பல பள்ளிகளில் விஞ்ஞானக் கூடங்களே இல்லாத நிலைமை இருந்தன, தற்போது நல்ல கட்டடங்களுக்கு வகை செய்திருப்பதோடு கூட எல்லாப் பள்ளிகளிலும் விஞ்ஞானக் கூடங்களை ஏற்படுத்தவும் வழி செய்யப்பட்டிருக்கிறது. அதே போன்று நூலகங்களும் முன்பு எல்லாப் பள்ளிகளிலும் கிடையாது. எல்லாப் பள்ளிகளிலும் நூலகங்கள் ஏற்படுத்தவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆரம்பப் பள்ளிகளில் நூலகத்திற்காக 30 ரூபாயும், நடுநிலைப் பள்ளிகளில் 60 ரூபாயும், உயர்நிலைப் பள்ளிகளில் ஐயாயிரம் ரூபாய் வரையிலும் செலவழித்து நூலகங்களை ஏற்படுத்துவதற்காகச் செலவு செய்ய வகை செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய பள்ளிகளிலே நல்ல தரமான கல்வி அளிக்கப்பட வேண்டுமென்பதற்காக பட்டப் படிப்பு பெற்ற ஆசியர்களுக்கு உதவித் தொகை அளித்து அதன் வாயிலாக எம்.இ.டி. போன்ற மேல் படிப்புக்கு அனுப்பவும் அவர்கள் மூலமாக மற்ற ஆசியர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கவும் இந்த அரசு வழி செய்திருக்கிறது. இந்த முறைகளினால் தரமான கல்வி அளிக்க இந்த அரசு எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள் பாராட்டுக்குரியதாகும். பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தைப் பொருத்தவரை கேர் நிறுவனத்தின் மூலமாக 30, 40 சென்டர்களிலே அமெரிக்க நிறுவனத்தாரின் உதவித் தொகை பெற்று செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு போன்ற மாவட்டங்களின் மூலம் மதிய உணவுத் திட்டத்திற்கு வகை செய்யப்பட்டிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். இது போன்ற பல வகைகளிலே இந்த மானியக் கோரிக்கையிலே வகை செய்யப்பட்டிருக்கிறது. இத்தகைய நல்ல காரியங்களுக்காக 66 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கியிருப்பதைப் பாராட்டி, இதிலே எதிர்க்கட்சி நண்பர்கள் எல்லாம் ஒத்துழைப்புக் கொடுத்து இந்த அரசைப் பாராட்டுவார்கள் என்ற நம்பிக்கையோடு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. சா. மெய்யப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையைப் பொறுத்தளவில் நான் என் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கல்வி மேம்பாடு அடையவேண்டுமென்று நினைப்பது பொதுப்படையான நோக்கம். அதற்கு எந்த விதமான எதிர்ப்பும் இருக்காது. ஆனால் நம் அரசின் கொள்கைப்படியும், திட்டப்படியும் கல்வி முதலியவற்றில் முன்னேற்றம் செய்வது என்று சொல்வதில், ஒரு படியிலிருந்து அடுத்த படிக்கு ஏறுவதற்குத் தகுந்த சூழ்நிலையும் சந்தர்ப்பமும் இருக்க வேண்டும் என்று இங்கு கூறப்பட்டிருக்கிறது. முதல் படியாக நாம் உயர்தர கல்வி வகுப்புகள் வரை கல்வி இலவசம் என்று வைத்தோம். இதை நான் சொல்வதால் பி.யு.சி. வகுப்பிற்கு இலவசக் கல்வி அளித்திருப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறேன் என்று எண்ண வேண்டாம். அதை நான் வரவேற்கிறேன். வரவேற்பதாக பொது விவாதத்தின்போது கூறியிருக்கிறேன். பொது விவாதத்தின்போது குறிப்பிடுகையில், அந்தப்படி ஏறும் சந்தர்ப்பம் இப்போது கிடைத்துள்ளதா அல்லது அப்படி ஏறக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்காமலேயே நாம் இப்போது ஏறிக்கொண்டே இருக்கிறோமா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டிய நிலையில் இருக்கிறோம் என்று கூறியிருக்கிறேன். எவ்வளவோ பேர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி.-யில் பாஸ் செய்து "எலிஜிபிள் ஃபார் காலேஜ் கோர்ஸ்" என்று நற்சான்று வழங்கு

மல் போய்விடுகிறது, ஆண்டு ஒன்றுக்கு மூன்று கோடி ரூபாய் வரை அ
காக இந்த மாநிலம் பணம் பெறுவது நின்று விடுவதோடு மாண
வர்களுக்குக் கிடைக்க வேண்டிய பயிற்சி கிடைக்காமல் போய்விடுகிறது. பெ
உத்தியோகங்கள் கிடைக்கும் வாய்ப்பை இழந்து விடுகிறார்கள். சில செ
கள்தான் இறுதியில் உள்ளன. அவற்றை மாற்ற வேண்டுமென்று செ
லும்போது அங்கே இந்திய ரீதியில் பல்வேறு இடங்களிலும் இந்தியில் இ
கும்போது இங்கே மாநிலத்தில், இங்கே பயிற்சி பெற்றவர்கள் அங்
செல்லும்போது கஷ்டத் தாக்கு எவரும் கையைத் தூக்ககூடிய நி
ஏற்படும். ஆகவே, இதிலே இளைஞர்கள் பயன்படும்படியாக ஒரு திட்டத்
சீக்கிரம் கொண்டு வர வேண்டும். மாணவர்களுடைய காரக்டர் பில்
டுக்கு அது துணை புரிகிறது. இப்போது இருக்கிற சில புத்தகங்கள், சிக்கல்
எல்லாம் கூடக் குறையும். ஆகவே, இதிலே எடுக்க வேண்டிய
வடிக்கையை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கே
கொள்கிறேன். கல்வி என்பது 'the ultimate aim and essence of e
cation is the training of character, என்று காலஞ்சென்ற முதலமை
அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேச
போது சொன்னதை ஏற்றுக் கொண்டு எஜுகேஷனை பாலிசி
வகுத்தாலே போதும்; வேறு ஒன்றும் வேண்டியதில்லை. கா
மேனுக்கு என்ன பண்ணுகிறோம்? அவன் கொடுக்கிற வரிப் பண
லிருந்து உங்களை எல்லாம் படிக்க வைக்கிறோம், நீங்கள் அவனு
செய்ய வேண்டிய காரியம் என்ன என்று யோசித்துப் பார்க்க வேண்
என்று சொன்னார்கள். அதற்குத் தக்கபடி பல்கலைக் கழகங்கள் தே
கொடுக்க வேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். அதைக் கொண்டு க
திற்கேற்ப கல்வித் துறையிலே மாற்றம் செய்ய வேண்டுமோ அந்த
யிலே மாற்றி, மாணவர்கள் எந்தத் துறையிலே பயிற்சி பெற வி
கிறார்களோ அதற்கான வசதிகள் எல்லாம் செய்து கல்வி முறை
வகுக்க வேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அலுவல் ஆய்வுக் குழுவில்
வொரு கட்சிக்கும் இவ்வளவு நேரம் ஒதுக்குவது என்று முடிவு செ
பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 50 நிமிடந்
வரும். கொறடா அவர்கள் 10 பெயர்களைக் கொடுத்திருக்கிறார்.
படி ஐந்து நிமிஷத்திற்கு மேல் ஒரு உறுப்பினருக்கு வராது. ஆ
ஐந்து நிமிஷத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டுமென்று கே
கொள்கிறேன்.

***திரு. பு. செ. முத்துச்செல்வன் :** பேரவைத் தலைவர் அவர்க
இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள்
கொண்டு வரப்பட்டிருக்கின்ற கல்வி மானியக் கோரிக்கையின்மீது
னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். கல்வி மானியக் கோ
கையின் மீது 66 கோடியே 4 இலட்ச ரூபாய் அளவுக்கு கோரி
கொடுக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும். சென்ற ஆட்சி காலத்
1966–67-ம் ஆண்டில் 40 கோடி ரூபாய் மட்டுந்தான் கல்விக்காகச்
வழிக்கப்பட்டது. ஆனால் அந்த நிலை மாற்றப்பட்டு இன்று 66 கோ
ரூபாய்க்கு மேல் செலவு செய்கிறோம் என்பது கல்வியினுடைய வளர்
யிலே இந்த அரசு எந்த அளவுக்குக் கவனம் கொண்டிருக்கிறது
பதற்குச் சான்றாகும்.

இந்த ஆட்சிக் காலத்திலே கல்லூரிகள் எந்த அளவுக்குத் திற
பட்டிருக்கின்றன என்று பார்த்தால் வளர்ச்சியிலே அக்கறை காட்டு
தெரியும். சென்ற ஆட்சிக் காலத்திலே 1966–67-லே 105 கல்லூரி
இருந்தன என்றால் இந்த ஆட்சி வந்து இரண்டு ஆண்டுகளிலே
126 ஆக உயர்ந்திருக்கிறது. 21 கல்லூரிகள் அதிகமாகத் திறக்கப்பட்டி
கின்றன. 1969–70-ல் மேலும் நான்கு புதிய கல்லூரிகளைத் திறக்க
திட்டமிடப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல எதிர்காலத்தைக் காட்டுவ
அமைந்திருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக் கொண்டாலும் க



இரண்டு ஆண்டுகளில் 134 உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டு சீரிய முறை
யில் நடைபெற்று வருகின்றன. 1969–70-ல் மேலும் பல உயர்நிலைப்
பள்ளிகளைத் திறக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. சென்ற ஆட்சிக் காலத்
திலே இல்லாத பல புதிய அம்சங்கள் கடந்த இரண்டு ஆண்டு ஆட்சியிலே
ஏற்பட்டிருக்கின்றன. நல்ல தரமான கல்வியை வளர்க்க வேண்டுமென்
பதற்காக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு எம்.ஏ. (ஆங்
கிலம்) படிக்க உதவித் தொகை எல்லாம் வழங்க வகை செய்திருக்கிறது.
உயர்நிலைப் பள்ளிகளில் நிரம்ப விஞ்ஞானக் கூடங்கள் ஏற்படுத்த வகை
செய்யப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்திலே பள்ளிகள் திறக்கப்
பட்டன என்றும், 1,500, 2,000 என்றும் எண்ணிக்கையைக் காட்டுவார்
களே தவிர, அந்த பள்ளிகளுக்கு நல்ல கட்டடங்கள் இருக்காது. மேல்
கூரை இல்லாத கட்டிடங்களும், வசதியற்ற கட்டடங்களும்தான் இருந்
தன, பல பள்ளிகளில் விஞ்ஞானக் கூடங்களே இல்லாத நிலைமை இருந்
தன, தற்போது நல்ல கட்டடங்களுக்கு வகை செய்திருப்பதோடு கூட
எல்லாப் பள்ளிகளிலும் விஞ்ஞானக் கூடங்களை ஏற்படுத்தவும் வழி
செய்யப்பட்டிருக்கிறது. அதே போன்று நூலகங்களும் முன்பு எல்லாப்
பள்ளிகளிலும் கிடையாது. எல்லாப் பள்ளிகளிலும் நூலகங்கள் ஏற்
படுத்தவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆரம்பப் பள்ளிகளில் நூலகத்
திற்காக 30 ரூபாயும், நடுநிலைப் பள்ளிகளில் 60 ரூபாயும், உயர்நிலைப்
பள்ளிகளில் ஐயாயிரம் ரூபாய் வரையிலும் செலவழித்து நூலகங்களை
ஏற்படுத்துவதற்காகச் செலவு செய்ய வகை செய்யப்பட்டிருக்கிறது. நம்
முடைய பள்ளிகளிலே நல்ல தரமான கல்வி அளிக்கப்பட வேண்டுமென்
பதற்காக பட்டப் படிப்பு பெற்ற ஆசிரியர்களுக்கு உதவித் தொகை அளித்து
அதன் வாயிலாக எம்.இ.டி. போன்ற மேல் படிப்புக்கு அனுப்பவும்,
அவர்கள் மூலமாக மற்ற ஆசிரியர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கவும் இந்த
அரசு வழி செய்திருக்கிறது. இந்த முறைகளினால் தரமான கல்வி
அளிக்க இந்த அரசு எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள் பாராட்டுக்குரிய
தாகும். பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தைப் பொருத்தவரை 'கேர்
நிறுவனத்தின் மூலமாக 30, 40 சென்டர்களிலே அமெரிக்க நிறுவனத்
தாரின் உதவித் தொகை பெற்று செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்
காடு போன்ற மாவட்டங்களின் மூலம் மதிய உணவுத் திட்டத்திற்கு வகை
செய்யப்பட்டிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். இது போன்ற பல வகை
களிலே இந்த மானியக் கோரிக்கையிலே வகை செய்யப்பட்டிருக்கிறது.
இத்தகைய நல்ல காரியங்களுக்காக 66 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கி
யிருப்பதைப் பாராட்டி, இதிலே எதிர்க்கட்சி நண்பர்கள் எல்லாம் ஒத்
துழைப்புக் கொடுத்து இந்த அரசைப் பாராட்டுவார்கள் என்ற நம்பிக்கை
யோடு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. சா. மெய்யப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இந்தக் கல்வி மானியக் கோரிக்கையைப் பொறுத்தளவில் நான் என்
கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கல்வி
மேம்பாடு அடையவேண்டுமென்று நினைப்பது பொதுப்படையான நோக்கம்.
அதற்கு எந்த விதமான எதிர்ப்பும் இருக்காது. ஆனால் நம் அரசின்
கொள்கைப்படியும், திட்டப்படியும் கல்வி முதலியவற்றில் முன்னேற்றம்
செய்வது என்று சொல்வதில், ஒரு படியிலிருந்து அடுத்த படிக்கு ஏறு
வதற்குத் தகுந்த சூழ்நிலையும் சந்தர்ப்பமும் இருக்க வேண்டும் என்று
இங்கு கூறப்பட்டிருக்கிறது. முதல் படியாக நாம் உயர்தர கல்வி வகுப்பு
கள் வரை கல்வி இலவசம் என்று வைத்தோம். இதை நான் சொல்வ
தால் பி.யு.சி. வகுப்பிற்கு இலவசக் கல்வி அளித்திருப்பதற்கு எதிர்ப்பு
தெரிவிக்கிறேன் என்று எண்ண வேண்டாம். அதை நான் வரவேற்
கிறேன். வரவேற்பதாக பொது விவாதத்தின்போது கூறியிருக்கிறேன்.
பொது விவாதத்தின்போது குறிப்பிடுகையில், அந்தப்படி ஏறும் சந்தர்ப்பம்
இப்போது கிடைத்துள்ளதா அல்லது அப்படி ஏறக்கூடிய சந்தர்ப்பம்
கிடைக்காமலேயே நாம் இப்போது ஏறிக்கொண்டே இருக்கிறோமா என்
பதை சிந்தித்துப் பார்க்கவேண்டிய நிலையில் இருக்கிறோம் என்று கூறி
யிருக்கிறேன். எவ்வளவோ பேர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி.-யில் பாஸ் செய்து
"எலிஜிபிள் ஃபார் காலேஜ் கோர்ஸ்" என்று நற்சான்று வழங்

[திரு. எல். கணேசன்] [1969 மார்ச் 12

தீவிரம் போதாதோ, முனைப்பு போதாதோ, வேகம் போதாதோ என்ற நிலையிருப்பதாக நான் நம்புகிறேன். அதுவும், விரும்பினால் தனியார் துறையில் இருக்கின்ற கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்றுக் கொள்ளலாம் என்ற நிலையைச் சொல்லுகிறார்கள். தமிழும் பயிற்சி மொழி, ஆங்கிலமும் பயிற்சி மொழி என்று இரண்டும் இருக்கும் ஒரே நேரத்தில் என்ற நிலை இருக்கும் வரையில் தமிழ் மொழி பயிற்சி மொழியாகக்கூட ஆகமுடியாத நிலையிருக்கிறது. நான் என்னுடைய நேரடி அனுபவத்திலிருந்து சொல்லுகின்றேன். மிகக் குறைந்த மதிப் பெண்கள் பெற்ற மாணவர்கள்கூட தமிழிலே சேர மறுக்கிறார்கள். அந்தப் புள்ளிவிவரத்தை முன்னமேயிருந்தவர்கள் காட்டி, தமிழிலே சேர மாணவர்கள் மறுக்கிறார்கள், எனவே, நாங்கள் விட்டுவிட்டுப் போகிறோம் என்று அந்த முயற்சியைக் கைவிட்டுவிடுகிறார்கள். அப்படிக் காரணம் காட்டுவதற்குத்தான் அது பயன்படுமே தவிர, உருவான பலனைத் தராது. ஒரு நிலையை எடுக்கிறோம் என்று சொன்னால் அந்த நிலையில் தமிழிலே தான் இருக்க வேண்டும்.

கலைப் பாடங்களில் தமிழைப்பாட மொழியாக்க வேண்டுமென்று சொன்னால் அது எல்லாக் கல்லூரிகளிலும் எல்லா நிலைகளிலும் உருவாக்கப்பட வேண்டும். ஆங்கிலமும் இருக்கலாம் என்ற நிலையில் இருக்கக்கூடாது. அப்படிச் செய்தால் தவிர தமிழைப் பயிற்சி மொழியாக்குவதில் நாம் வெற்றி பெற முடியும் என்று நான் கருதவில்லை. இதிலே கூட இன்னொரு சிக்கல் இருக்கிறது. மத்திய அரசோடு மோத வேண்டிய நிலை இருக்கிறது. கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் வேலை வாய்ப்பைக் கருதிப் படிக்கிறார்கள், வெறும் கல்வி அறிவுக்காகத்தான் படிக்கிறார்கள் என்று நம்பி விடக்கூடாது. தமிழிலே படித்துவிட்டால் மத்திய சர்க்காரின் பணிக் குழுவிலே நம்மாலே தேர்வு எழுத முடியாது என்ற அச்சம் இருக்கிறது. அந்த அச்சத்தைப் போக்க மாநில அரசுமட்டும் உத்தரவாதம் தருவதாகச் சொல்லிப் பயனில்லை. மத்திய சர்க்காரிடமிருந்து அந்த உத்தர வாதத்தைப் பெற்றுத் தர வேண்டும். தமிழிலேயோ அல்லது வேறு பிராந்திய மொழிகளிலேயோ படித்தவர்களுக்கு ஒத்த வாய்ப்பு மத்திய அரசு பணிக்குழு தேர்வு எழுத, யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் "எழுதத் தடை இருக்காது என்ற உத்தரவாதத்தை மத்திய சர்க்கார் கொடுக்கவில்லை. அந்த உத்தரவாதத்தைப் பெற்றுத் தர வேண்டும்.

தமிழாசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் ஒரு நிலையில் 4 ஆண்டுகள் வரையில் படிக்கிறார்கள். இதிலே கூட வேறுபாடு இருக்கிறது. பி.டி. ஸ்கேலுக்கு உரியவர்களுக்கு அந்த நிலை கொடுக்கப்படவில்லை. செகண்டரி கிரேடு படித்துவிட்டு ஹையர் கிரேடு அரிசியர்களாக வேலை செய்பவர்களுக்கு செகண்டரி கிரேடு சம்பளம் கொடுப்பதற்கு அரசு திட்டம் வைத்திருக்கிறது. அதே மாதிரி பி.டி. ஸ்கேலுக்கு உரிய தமிழாசிரியர் கள் அதற்குக் கீழேயுள்ள செகண்டரி கிரேடு சம்பளத்தில் இருக்கிறார்கள். அந்தச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியைப்பற்றி மிகச் சுருக்கமாகக் கூறி முடித்துக்கொள்ளுகிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கின்ற பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்றாலும், கட்டிடமே இல்லாத அளவுக்கு உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. குறிப் பாகத் திருமங்கலக்கோட்டை, பனையக்கோட்டை ஆகிய ஊர்களில் உயர்நிலை பள்ளிகள் இருக்கின்றன. இருந்தாலும், அவைகளுக்கென்று கட்டிடம் இல்லாமல் எலிமெண்ட்ரி ஸ்கூலில் வைத்து நடத்துகிறார்கள். ஊராட்சி ஒன்றியம் அதைக் காலி செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டி ருக்கிறது. வேறு வழியில்லை. தற்காலிகக் கொட்டகை கூட இடிந்து விழுந்திருக்கிறது. இருக்கின்ற பள்ளிக்கூடங்கள் சரியாக இருக்கின்றனவா, வேண்டிய வசதிகளைக் கொண்டிருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். அதற்காக தமிழக அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்து விடைபெறுகிறேன். வணக்கம்.



1969 மார்ச் 12]

***திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, இந்த மானியத்தைப்பற்றி, என்னுடைய கட்சியின் நிலையைத் தெரிவிக்கும் முன்பு, கல்வி மானியம் மிகவும் முக்கியமான மானியம், அதற்கு அதிகப்படியான நேரத்தை ஒதுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இன்று ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றவர்கள் எதிர்க் கட்சியில் அமர்ந்திருந்தபொழுது அவர்கள் கூறிய சில கருத்துக்களை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த மானியம் பற்றி இரண்டு நாட்கள் விவாதம் நடைபெற வேண்டுமென்று கடந்த நான்கு ஆண்டுகளாக வற்புறுத்தப்பட்டு வந்து அந்த ஆசை நிறைவேறாத ஆசையாக இருக்கிறது என்று இன்று ஆளும் பொறுப்பிலே இருப்பவர்கள் எதிர்க்கட்சியிலே இருந்தபொழுது கூறினார்கள். இனி அடுத்த நிதி ஆண்டிலிருந்தாவது இம்மாதிரி பொது விஷயங்களை விவாதிக்க அதிகப்படியான நேரத்தை ஒதுக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு விஷயத்தைப்பற்றி, அவர்கள் கட்சித் தலைவர் ஒத்துக் கொண்ட ஒரு விஷயத்தைப்பற்றி மீண்டும் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்வது சரியா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** இப்பொழுது இருக்கக்கூடிய நிலை எப்படிப் பிரித்துக்கொள்வது என்பதுதான். மார்ச் 31-ம் தேதிக்குள் பில்களை முடிக்க . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியத்தின் மீது பேசுங்கள். மற்றப் பொருள்களின் மீது பேசினால் நேரம் போய்விடும்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** கல்வி என்பது எப்படி ஒழுங்காக இருக்கிறதோ அதைப்போலத்தான் சமுதாயம் இருக்கும், அதைப்போலத் தான் எதிர்காலச் சமுதாயம் இருக்கும். எனவே, இந்த மானியத்திற்கு குறைந்த பட்சம் இரண்டு நாட்களாவது ஒதுக்க வேண்டுமென்ற யோசனையைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதை அரசு ஏற்றுக் கொண்டு, அடுத்த நிதிநிலை அறிக்கையின்போதுதாவது அப்படிக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில், மேனேஜ்மெண்டில் உள்ள நிறுவனங்களை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதை ஆழமாக வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இன்று அத்தகைய நிறுவனங்கள், கல்வியை லாப நோக்கோடுதான் நடத்துகின்றனர். அதில் ஆசிரியர்கள் கொடுமைப் படுத்தப்படுகிறார்கள். எழுத்தறிவித்தவன் இறைவன் என்று சொல்லக்கூடிய ஆசிரியர்கள் இன்று இழிவாக வாழக்கூடிய நிலையிலிருக்கிறது. தேவனும் பட்டி என்ற ஊர், திண்டுக்கல் தாலுகாவில் இருக்கிறது. 18 ஆசிரியர்கள் உள்ள ஒரு பள்ளி இருக்கிறது. அதில் 12 பேர் பெண்கள். அவர்களுக்கு 11 மாதங்களாகச் சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இப்பொழுது என்ன நிலை என்றால், இவர்களுக்கு நோட்டீஸ் பிறப்பித்து இருக்கிறார்கள், வேலையை விட்டு நீக்கி, எஜுகேஷன் அத்தாரிட்டிகளின் உத்தரவுகளை மீறி நீக்கப்படுகிறது. இராஜபாளையத்தில் சங்கரசுப்பா என்ற ஆசிரியர் சட்ட விரோதமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார். அதைப்பற்றி டிவிஷனல் இன்ஸ்பெக்டர்,

**The termination of the services of the teacher, Thiru S. Sankarasubba, has been effected through fraudulent means and in violation of the rules for recognition of elementary schools and that therefore it is unjust and irregular....'** என்று தெளிவாக, வலியுறுத்தப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் இன்னமும் அவர் பள்ளியிலே சேர்க்கப்படவில்லை. அந்த ஆசிரியர் எனக்கு எழுதியிருக்கிறார். 8 மாத காலமாக ஆணை பிறப்பித்தும், டி. இ. ஓ. சொல்லியும்கூட என்னைப் பள்ளியில் சேர்க்கவில்லை, "நான் சாப்பாட்டுக்கே லாட்டரி அடித்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லக்கூடிய அவல நிலை இருக்கிறது. மேனேஜ்மெண்ட் பள்ளி

படுகிறது. அப்படி "எலிஜிபிள் ஃபார் காலேஜ் கோர்ஸ்" என்று நற்
சான்று வழங்கப்பட்டவர்களுக்கெல்லாம் காலேஜில் இடம் கொடுத்தாக
வேண்டும். கல்லூரிகளை அதிகப்படுத்தாமல் இருப்பதால் "எலிஜிபிள்
ஃபார் காலேஜ் கோர்ஸ்" என்று நற்சான்று வழங்கியவர்களுக்கு கல்
லூரிகளில் இடம் கிடைக்காமல் இட நெருக்கடி ஏற்படுகிறது. அப்படி
இட நெருக்கடி ஏற்படுவதன் காரணத்தினால் கல்லூரிகளுக்கு கொடுக்கப்
பட்டிருக்கிற அதிகாரத்தை வைத்துக் கொண்டு, அட்டானமஸ் பாடி என்று
சொல்லிக்கொண்டு, அம்சங்கள் ரூபத்தில் இடங்கள் மறுக்கப்படுகின்றன.
ஜாதி மத அடிப்படையில் அல்லது சிபார்சுகளை மனதில் வைத்துக்கொண்டு
சேர்த்துக் கொள்கிறார்கள். ஆனால் வெளியில் சொல்வது அம்சங்களில்
அதிகமாக மார்க் வாங்கியிருப்பதால் சேர்த்துக் கொள்கிறோம் என்று
சொல்கிறார்கள். இப்படி ஒரு சில கல்லூரிகளில் சொல்லி சிலர் தட்டிக்
கழிக்கப்பட்டார்கள். பொரு அதிகமானால் அதற்கு மேல் ஸ்பெஷல்
கெமிஸ்ட்ரி, ஸ்பெஷல் மாத்மெடிக்ஸ் என்று சில துறைகளை ஏற்படுத்தி
தங்கள் விருப்பம்போல் செய்கிறார்கள். பின்னர், தட்டிக் கழிப்பதற்கு
உதவியாக தமிழ் மீடியம் ஆஃப் இன்ஸ்ட்ராக்ஷன் எடுத்துக் கொள்கிறாயா
அப்படியானால் இடம் தருகிறோம் என்று சொல்லி தட்டிக் கழிக்கிறார்கள்
அது வேண்டாம் என்று சொன்னால் எந்தப் பாடம் விருப்பப் பாடமாக
இருக்கவேண்டாம் என்று மாணவரோ அல்லது மாணவியரோ நினைக்
கிறார்களோ அந்தப் பாடத்தை விருப்பப் பாடமாக எடுத்துக்கொள்
தானால் இடம் தருகிறோம் என்று சொல்லி அப்படியும் தட்டிக் கழிக்
கிறார்கள். அப்படிக் கல்லூரிகளில் இடம் கிடைக்காததொரு நிலையிருப்பதி
னால்தான் இந்த மானியத்தின்மீது நான் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்
திருக்கிறேன்.

இட நெருக்கடி பற்றி ஆலோசிக்க என்று சொல்லி இப்போது இந்த
அறிக்கையில் நான்கு கல்லூரிகள் ஏற்படுத்தப் போவதாக குறிப்பிடப்
பட்டிருக்கிறது, அது வரவேற்கத்தக்கது. நான் சொல்வது 40 கல்லூரி
களாவது திறக்கப்பட வேண்டும். அப்படி நாற்பது கல்லூரிகள் திறக்கப்
படும்போது அவை இருக்கக்கூடிய இடம் சென்னை போன்ற முன்னேற்ற
மடைந்த பகுதிகளில் இருக்கக்கூடாது. பின்தங்கிய பகுதிகளில்தான்
அந்தக் கல்லூரிகள் ஏற்படவேண்டும். அப்படிக் கல்லூரிகள் ஏற்படும்
போது நல்ல கட்டடங்கள் இருக்க வேண்டும், ஆசிரியர்கள் இருக்க வேண்
டும், நல்ல லாபரெட்டரி இருக்க வேண்டும், நல்ல நூல் நிலையம் இருக்க
வேண்டும். இவையில்லாமல் பேச்சுக்காக கல்லூரிகளை ஏற்படுத்தி விட்
டோம் என்றால் இப்போது மருந்துகள் இல்லாத, டாக்டர்கள் இல்லாத
மருந்தகங்கள் இருப்பது போல்தான் இருக்கும். ஆகவே கல்வி விஷயத்
தில் கண்டிப்பாக விளையாட்டுக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.
ஆக, அதிகப்படியான கல்லூரிகள் ஏற்படுத்த வேண்டும், அதுவும் அவை
கள் பின்தங்கிய பகுதிகளில் ஏற்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு தாலு
காவிற்கும் ஒரு கல்லூரி ஏற்பட வேண்டும். அதில் ஜாதி மத அடிப்படை
யிலோ அல்லது உன் மனு முன்னால் வந்தது, பின்னால் வந்தது என்று
சொல்லியோ எந்த அடிப்படையிலும் இடம் நிராகரிக்கப்படக் கூடாது.
எந்தயிடத்தில் அவர்கள் கல்லூரியில் இடம் வேண்டுமென்று சொல்கிறார்
களோ அந்த இடத்தில் அவர்களுக்கு இடம் கிடைப்பதற்கான வழிவகை
செய்ய வேண்டும். அப்போதுதான் ஃப்ரீ எட்யூக்கேஷன் கொடுக்கிறோம்
என்று சொல்கிறோமே அந்தப் பிரகாசம் அப்போதுதான் மினுக்கும் என்று
சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம் பல்கலைக்கழகங்களில் நடக்கிற ஆடிட்டைப்
பொறுத்த வரையில் உள்ள சில குறைபாடுகளைப் பற்றிக் குறிப்பிட விரும்பு
கிறேன். குறிப்பாக மதுரைப் பல்கலைக் கழக ஆடிட்டில் 161 குறைபாடுகள்
ஏற்பட்டிருப்பதாக அறிகிறேன். அதன் பேரில் என்ன நடவடிக்கைகள்
எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அரசு கண்காணிக்க வேண்டும். ஆட்
டானமஸ் பாடி என்று சொல்கிறார்கள். கல்வித் துறையில் ஆட்டானமஸ்
பாடி என்றுதான் எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர அதன் நிர்வாகம்
நல்ல முறையில் நடக்கிறதா என்ற விஷயத்தில் நாம் மானியம் வழங்கும்



போது அரசின் கண்காணிப்பு தேவை. செனட் மீட்டிங் மற்றவைகள் நடக்கும்போது பல காரியங்கள் பற்றி விவாதிக்கப்படுகின்றன. காரைக்குடி கல்லூரியில் பெண்களுக்காக ஒரு சில இடங்களை ஒதுக்கிய காரணத்திற்காக மதுரை பல்கலைக் கழகத்திலிருந்து ஒரு நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது. கோட்டையூரில் ஒரு பெண்கள் கல்லூரி இருக்கிறதே, அப்படியிருக்க ஏன் இப்படிச் செய்தீர்கள், ஆகவே அஃபிலியேஷனை என் டிஸ் கண்டின்யூ செய்யக்கூடாது என்று நோட்டீஸ் பிறப்பித்திருப்பதாக அறிகிறேன். இது பற்றி செனட்டில் கேட்டபோது அந்த மாதிரியானதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று துணை வேந்தர் சொல்லியிருக்கிறார். ஆனால் நட வடிக்கை ஏட்டைப் பார்க்கும்போது நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக் கின்றன என்று இருப்பதாக அறிகிறோம். ஆகவே இதுபோன்ற காரியங் களை செனட் போன்ற மீட்டிங்கில் கொண்டுவரும் போது அதைப் பரிசீலித்து தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் குறிப்பிட்டு முடித்துக்கொள்கிறேன்.

லிங்க்விஸ்டிக் மைனாரிட்டீஸ்க்கு குறிப்பாக கீழ் வகுப்புகளில் தெலுங்கு போன்ற மொழிகளில் பாடம் போதிக்கவும் அடுத்தபடியாக கல்லூரிகளில் ஆங்கிலத்தில் பாடம் போதிக்கவும் வழிவகை செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொண்டு வணக்கம் செலுத்தி அமர்கிறேன்.

**திரு. எல். கணேசன் :** மாண்புமிகு மாமன்றத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கைமீது என்னுடைய கருத்துக்களைச் சொல் வதற்கு வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியை முதற்கண் நான் தெரி வித்துக்கொள்கிறேன். நம் அரசின் செலவில் 23 பர் செண்ட் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 66 கோடி ரூபாய்க்கு மேல் கல்விக்காக ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஏறத்தாழ கால் பங்கு கல்விக்காகச் செலவிடுகிறோம். அது கல்வியின்பால் கழக அரசுக்குள்ள முக்கிய சிறப்பைக் காட்டுவதாக யிருக்கிறது. புதிய பள்ளிகள், புதிய உயர்நிலைப் பள்ளிகள், புதிய கல்லூரிகள் என்று இப்படி திறந்துகொண்டேயிருக்கிறோம். பி.யு.ஸி. வகுப்பு வரை எல்லோருக்கும் கல்வி இலவசம் என்ற நிலையை நாம் உருவாக்கியிருக்கிறோம். ஏழை எளிய மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்குவதற்காக ஏராளமான தொகை நம் அரசு ஒதுக்கியுள்ளது. இப்படிப் பாராட்டுதற்குரிய பல அம்சங்கள் இதில் அடங்கியுள்ளன.

மொழியைப் பொறுத்த வரையில் இந்தி பாடமாக இருக்கக்கூடாது என்று வரையறை செய்துவிட்ட மகத்தான திருப்பத்தை உருவாக்கிய பெருமை கழக அரசுக்கு உண்டு. அதோடு அரசின் கடமை முடிந்து விட்டதாக நான் கருதவில்லை. அரசியல் அமைப்புச் சட்டத்தில் இந்தி மட்டுமே ஆட்சிமொழி, ஆங்கிலம் தாற்காலிகமாக துணை ஆட்சிமொழியாக இருக்கும் என்ற நிலையில் விதிகளை மத்திய அரசு செய்து வைத்துக் கொண்டு அந்த விதிகள் அப்படியே இருக்கின்ற நிலையில் இங்கு தமிழகத் தில் மட்டும் பள்ளிகளில் இந்தி கூடாது என்ற நிலையை உருவாக்கி விடு வதால் பிரச்னை முடிந்து விட்டதாகாது. அந்த விதி போக்கப்படுகிற வரையில், அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துகிற வரையில் தமிழ் நாட்டு அரசின் போராட்டம் முடிந்து விட்டதாக என்றால் கருத முடிய வில்லை. தமிழகம் மட்டும் இத்துறையில் தனித்திருந்து போராடுவதை விட அண்டை மாநிலங்களை ஒன்றாக இணைத்துக் கொண்டு அந்த முதல்வர் களை எல்லாம் நமக்குப் பக்கபலமாக வைத்துக்கொண்டு நிச்சயமாக நடு அரசோடு போராட வேண்டும். இந்தி ஆட்சிமொழி என்ற நிலை அறவே போக்கப்பட வேண்டும். அதற்குரிய வாய்ப்பிருப்பதாக நம்புகிறேன். அதைக் கேரள முதல்வர் அவர்கள் எதிர்க்கிறார்கள். வங்கத்தில் இப்போது உருவாகியிருக்கிற அமைச்சரவை அதற்கு உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறேன். எனவே இத்துறையில் வேண்டிய நடவடிக்கைகளை தமிழக அரசும், தமிழக முதல் அமைச்சர் அவர்களும் முயன்று செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிற்சி மொழிபற்றி கருதுகிற நேரத்தில் அங்கும் சிக்கல் வருகிறது. தமிழ்தான் பயிற்சிமொழியாக இருக்க வேண்டும். எல்லா மட்டங்களி லும் அது பயிற்சி மொழியாக ஆக்கப்பட வேண்டுமென்ற கொள்கையில்,

கள் இன்று லாப நோக்கத்திற்காக நடத்தப்படுகிறதே தவிர, சமுதாய முன்னேற்றத்திற்காக நடத்தப்படவில்லை. எனவே, மேனேஜ்மெண்ட் பொறுப்பிலேயுள்ள எல்லாக் கல்வி நிலையங்களையும் அரசு ஏற்றுக்கொள் ளாத வரையில் சமுதாய மேம்பாடு கிடைக்காது என்பதை வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்று, நகரத்திலேயும் சரி, வெளியிலேயும் சரி தனியார் பள்ளி களில் வேலை செய்யும் அத்தனை பேருக்கும் நகர வீட்டுவாடகை அலவன்ஸ் கொடுப்பது மிகமிக அவசியம். ஆசிரியர்கள் கல்வி சம்பந்தமாக குறிப்புகளைத் தயார் செய்வதற்கு அவர்களுக்கு அமைதியான வீடு இருக்க வேண்டும், இன்றிருக்கும் நிலையில் அவர்களுக்குச் சரியான வீடு கிடையாது. சிந்திப்பதற்கு நேரம் கிடையாது. ஆகவே, போதுமான அளவுக்குப் பாடங்களுக்கான குறிப்புகளைத் தயார் பண்ணுவதற்கு முடி யாத கஷ்டமான நிலை இருக்கிறது. எனவே, நகரத்திலும், வெளியிலும் வேலை செய்யக்கூடிய எல்லா ஆசிரியர்களுக்கும் வீட்டுவாடகைப்படி கொடு க்க வேண்டும். அதேபோல், என். ஜி. ஓக்களுக்குக் கொடுக்கப்படுவதைப் போல வைத்திய வசதிக்களுக்கான சலுகைகளையும் கொடுக்க அரசு நட வடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இதையெல்லாம் நிறைவேற்றுவதற்குப் பொருளாதாரக் கஷ்டம் குறுக் கிடும். வாஸ்தவம்தான். இப்பொழுது 66 கோடி ரூபாய் ஒதுக்குகிறோம் என்றால், இன்னும் அதிகப் பொருளாதாரம் தேவை. மறைந்த முத லமைச்சர் மாண்புமிகு அண்ணா அவர்கள் முதல் சட்டசபை துவங்கியபோது, வருமானம் உள்ளவர்களிடமிருந்து அதிகமாக வசூலிப்பதில் தவறு இல்லை என்று கூறியிருக்கிறார்கள். இந்த 66 கோடி ரூபாயை இன்னும் அதிக மாக்க வேண்டுமென்றால் எங்கே பணம்? கோவிலில், மடத்தில் இருக்கி றது. பெரிய தனக்காரர்களிடம் இருக்கிறது. அவர்களிடமிருந்து வாங்க வேண்டும். அப்படி வாங்கி சமுதாயத்திற்குப் பயன்படுத்த வேண்டும், கல்விக்குப்பயன்படுத்த வேண்டும்.

ஆசிரியர்களின் நிலையை எடுத்துக் கொண்டால், செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு 140 ரூபாய்க்கு மேல் போவது கிடையாது. ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு 90 ரூபாய்க்கு மேல் போவதில்லை. ஊதிய உயர்வு அதோடு நின்று விடுகிறது. டைரக்டர் போன்றவர்கள், செக்ரட்டரி போன்ற வர்கள் 2,000 ரூபாய் சம்பளம் வாங்கும் பொழுது சமுதாயத்தை உருவாக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு, களிமண்ணைக் கொடுத்தால் அதைக் குரங்காகவும் செய்யலாம், அல்லது பிள்ளையாராகவும் செய்யலாம், அந்த அளவுக்குத்தான் சமுதாயமும் இருக்க முடியும், அதிலே ஈடுபட்டிருக்கக் கூடிய ஆசிரியர்களுக்கு 140 ரூபாய்க்கு மேல் போவது கிடையாது செகண் டரி கிரேடு ஆசிரியர்களுக்கு, 90 ரூபாய்க்கு மேல் போவது கிடையாது ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு. அந்த நிலை நீங்க வேண்டாமா? அதை மாற்றியாக வேண்டாமா? சமுதாய உயர்வுக்காகவும், முன்னேற்றத்திற் காகவும் காரணமாக இருக்கும் ஆசிரியர்கள் பற்றி இந்த நிலைமையை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாவது குறிப்பாகக் கவனித்தாக வேண்டும். ஆசிரியர்களை எந்த அளவுக்கு சந்தோஷமாக வைத்திருக்கி றோமோ, அவர்களுக்கு எவ்வளவு சலுகைகள் கொடுக்கிறோமோ, அவர் களுக்கு எந்த அளவுக்கு வசதி செய்து தருகிறோமோ அந்த அளவுக்குத் தான் கல்வியின் தரம் உயரும். எனவே, இதில் சீரிய முறையில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண் கொள்ளுகின்றேன்.

அதேபோல் கல்லூரிகள். இந்த ஆண்டு கல்லூரிகளில் சேரும் மாண வர்கள் தொகை ஒரு லட்சத்திற்கும்மேல் போகப் போகிறார்கள். அத்தனை பேருக்கும் இடம் கொடுக்கப்படுமா? சென்ற வருஷத்தைப்போல இடம் கிடைக்காமல் இருக்காது. இந்த ஆண்டு நிச்சயமாக இடம் கிடைத்துவிடும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள், மாணவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்தச் சர்க்காரில் கல்லூரிகளில் இடம் கிடைத்துவிடும் என்று எதிர்பார்க் கிறார்கள். அத்தனைபேர்களுக்கும் இடம் கொடுக்க என்ன வழி? எல்லாக் கல்லூரிகளிலும் ஷிப்ட் சிஸ்டத்தைக் கொண்டு வர வேண்டும். ஷிப்ட்





சிஸ்டம் என்று சொன்னால் அதிகப்படியான சாதனங்களைக் கொடுக்க வேண்டும். அதற்குத் தகுந்தபடி ஆசிரியர்களை அதிகப்படுத்த வேண்டும். அதிலும், தனியார் கல்லூரிகளில், கார்காத்தார் கல்லூரி என்றால் அதில் கார்காத்தாரைச் சேர்ந்து மாணவர்கள்தான் சேர்த்துக்கொள்ளபடுகிறார் கள், முஸ்லீம் கல்லூரி என்றால் முஸ்லீம்கள்தான் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள். நாம் பணம் கொடுக்கிறோம், மான்யம் கொடுக்கிறோம். ஆயினும், நியாயம் நிலை நிறுத்தப்படவில்லை. அனைவருக்கும் வசதி செய்து தரப்படவில்லை. எங்கள் கட்சியின் கருத்து என்னவென்றால், மாநில ரீதியாக ஒரு அட்மிஷன் கமிட்டி ஏற்படுத்த வேண்டும். மாணவர்கள் அதற்கு மட்டும் மனுப்போட்டால் போதுமானது, ஒவ்வொரு கல்லூரிக் கும் மனுப்போடவேண்டியதில்லை. அந்தக் கமிட்டியில் எல்லாக் கல் லூரியின் பிரின்ஸ்பால்களையும் கூட்டி வைத்து, அந்தக் கமிட்டியில் எந்த மாணவருக்கு எந்தக் கல்லூரி என்று அலாட் செய்தால் நல்ல முறையில் இருக்கும். ஊழல் போகும், மேல் நாட்டிலே இப்படி இருக்கிறது. தேசிய ரீதியாக அட்மிஷன் இருக்கிறது. அப்படி நாமும் செய்யக்கூடாதா?

இன்றைய தினம் மக்கள் எல்லோரும் கல்வி கற்க விரும்புகிறார்கள். ஆனால் படிப்பதற்கு வாய்ப்பில்லை. இன்றைக்கு கல்லூரிகளிலே இருக்கக்கூடிய அட்மிஷன் முறை, லஞ்சத்தை அடிப்படையாகக் கொண்டது, சலுகையை அடிப்படையாகக் கொண்டது, ஜாதியை அடிப்படையாகக் கொண்டது, படிக்கக்கூடிய மாணவர்களுக்குச் சிர மத்தை ஏற்படுத்துகிறது. சோர்வை ஏற்படுத்துகிறது. நம்முடைய அரசாவது இந்த நிலைமையைப் போக்க வேண்டும். இப்போது அதற்கு என்ன உத்தரவாதம்? நம்முடைய கல்வி அமைச்சரவர்களே அதை ஏற்றுக் கொள்கிறார்கள் என்று கருதுகிறேன். இப்போதுள்ள நிலை யினால் மாணவர் சமுதாயம் அவதி அடைகின்றது. அந்த நிலையைப் போக்குவதற்கு மாநில ரீதியிலே ஒரு கமிட்டி ஏற்படுத்த வேண்டும், அதற்கான உத்தரவாதம் வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கை களை நாம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கோருகிறேன். தனியார் பள்ளிகளை நாம் எடுத்துக் கொள்ளவேண்டும், அவற்றை எடுத்துக் கொள்ள நமக்கு அதிகாரம் உண்டு. அவற்றை நாம் எடுத்துக் கொண்டால்தான் இந்த நிலைமைகளைப் போக்க முடியும். ஒரு கிருஸ்தவக் கல்லூரியிலே—சென்னையிலுள்ள கல்லூரி—ஒரு மாணவர் அட்மிஷன் விஷயமாக என்னால் பிரின்சுபாலை பார்க்க முடியவில்லை. நான் செனட் மெம்பர், அசெம்பிளி மெம்பர். என்னாலேயே பார்க்க முடியவில்லை. மாயூரத்தில் ஒரு கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதிலே சென்ற ஆண்டு நடந்த நிலை உறுப்பினர்களுக்குத் தெரியும். அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் உண்ணாவிரதம் இருந்தார்கள். எனவே கல்லூரிகளைப் பொறுத்தவரை இந்த நிலையைப் போக்க வேண்டும். இன்றைய தினம் கல்லூரிகளிலே நடக்கக்கூடிய நிலை மிக மோசமாக இருக்கிறது. திருநெல்வேலியிலுள்ள தூத்துக்குடியிலே, வ.உ.சி. கல்லூரியினர் வெளி குண்டர்களைக் கொண்டு கல்லூரி மாணவர்களைத் தாக்கினார்கள். அதே மாதிரி திருச்சியிலே இருக்கிற ஜமால் முகைதீன் கல்லூரியிலே. அந்தக் கல்லூரி நிர்வாகி, "மாணவர் களைத் தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள்," என்று போலீசுக்கு மெமோ கொடுக்கிறார். நான் ஏன் கூறுகிறேன் என்றால், (மணி அடிக்கப்பட்டது). இவை எல்லாம் கல்வித் தரத்தை குறைத்து விட முடியும். இந்த விஷயத்தை கவனிக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதே போல் இன்றையதினம் பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கக் கூடிய பள்ளிகளைப் பூரணமாக சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டும். நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள், எதிர்க்கட்சியிலிருந்த பொழுது மிக அழகாகக் கூறி இருக்கிறார்கள். "பஞ்சாயத்து யூனிய னிடத்தில் கல்வித் திட்டம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் கொள்கைக் குழப்பம் இன்றைக்கு நிலவி வருகிறது. அதைச் சரிப்படுத்த அரசாங்கம் முன் வரவில்லை. ஒரு பக்கம் கல்வி இலாகா

[திரு. கொ. இ. ஞானசம்பந்தன்] [1969 மார்ச்

ஆசிரியர்களைத் துன்புறுத்துகிறது. இன்னொரு பக்கம் பஞ்சாயத்
யூனியன் நிர்வாக அதிகாரிகள் துன்புறுத்தப்படுகிறார்கள். இ
நிலை இருக்கிறது என்றால், இது கொடுமையானது,'' என்று மாண்
மிகு கல்வி அமைச்சரவர்கள் உள்ள பூர்வமாகச் சொல்லி இருக்கிறார்க
நிச்சயமாக ஒன்றை எதிர்பார்க்கிறேன். இதற்குப் பதில் கூறும்போ
பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளை அரசு ஏற்றுக்கொள்ளுகிறது என்
கூறுவார் என்று எதிர்பார்க்கிறேன். ஆசிரியர்கள் பகடைக் காய்கள
உபயோகப்படுத்தப்படுகிறார்கள். அரசியல் செல்வாக்குதான் பய
படுகிறது. சட்ட மன்ற உறுப்பினர்களை மதிப்பதில்லை. கமிட்டி
மதிப்பதில்லை, தங்கள் இஷ்டப்படி செய்கிறார்கள். கல்வி அமைச்சரவ
கள் சொல்லியுள்ள யோசனை, நல்ல யோசனை, சிறப்பான யோச
பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோ
என்று அவர்கள் அறிவிக்கவேண்டும். அதே நேரத்தில், இன்ன
தினம் கல்வி இலாகாவிலே 'டீச்சர்ஸ் மீட்டிங்' என்று போடுகிறார்க
இதனாலே ஒரு உபயோகமும் கிடையாது. "ஆசிரியர்கள் தினம்" என்
வைத்து ஒவ்வொரு ஆசிரியரும் ரூ. 5 கொடுக்கவேண்டுமென்
டெப்புடி இன்ஸ்பெக்டர், டிக்கட் போட்டு கேட்குப்படியான நிலை இருக்கிற
அதே போல் சிறுசேமிப்பு, குடும்பக் கட்டுப்பாடு என்று எதற்கெ
தாலும் ஆசிரியர்களிடம் பணம் வாங்கும் நிலை இருக்கிறது. ஆ
வாங்கவேண்டுமென்று கூறுகிறார்கள்—ஆசிரியர்களை. ஆசிரியர்களுக்கு
பேசுவதற்கு வாய்ப்பில்லை. சாதாரணமாக ஆசிரியர்கள் கொடுமை
படுத்தப்படுகிறார்கள். நம்முடைய ஆட்சியிலாவது அந்தக் கொடு
நீக்கப்பட்டு, ஆசிரியர்கள் சமுதாயம் பாதுகாக்கப்படும் என்று நம்பிக்
எனக்கிருக்கிறது.

அதே போல், இந்த எம்.பி.பி.எஸ். அட்மிஷனுக்கு செலக்ஷ
கமிட்டி தேவையில்லை. சாதாரணமாக அதை கைவிட்டு விடுங்க
படித்த மாணவர்களுக்கு, மெரிட் அடிப்படையில், நியாயமா
அடிப்படையில், பிற்பட்ட வகுப்பினருக்கு என்று ஒதுக்க
பட்டிருக்கிற அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஒ
ளார்க் செய்கின்ற வேலைக்கு எதற்காக கமிட்டி? அந்தக் கமிட்டிக்
சிபாரிசு, அதற்காக ரூ. 15,000, ரூ. 20,000 செலவு. இதன
மாணவர் சமுதாயம் மனம் உடைந்து போகிறது.

அதே போல், மாணவர்களுக்கு ஸைன்ஸ் செக்ஷனிலே இ
கிடைக்கவில்லை. ஏன் இந்த நிலை? இந்த நிலையை மாற்றுவதற்
கல்லூரிகளை சீராக்குவதற்கு அதிகப் பணம் ஒதுக்கவேண்டுமென்
விரும்பினாலும், அத்தகைய கல்விக் கூடங்களை அரசு ஏற்றுக்கொள
வேண்டும். அப்படி செய்தால் தான் எதிர்காலத்திலே சமுதாய
வளரும், நல்ல சமுதாயம் வளரும், மாணவர் சமுதாயம் வளரு
என்று தெரிவித்துக்கொண்டு, அதற்கு வேண்டியதைச் செய்யவேண்
மென்று கேட்டுக்கொண்டு, ஆசிரியர்களுக்கு அதிகவாய்ப்பு
வேண்டுமென்று வற்புறுத்தி கூறிக்கொள்ளுகிறேன். ஆசிரியர்களுக்
வேலையில்லாவிட்டால் பெரும் அளவுக்கு சிரமம் ஏற்படுமென்று க
அமைச்சர் எதிர்க்கட்சியிலே இருந்த போது சொன்ன பல அரிய, பெ
கருத்துக்களை நிறைவேற்றுவதற்கு அவருக்கு தற்பொழுது சந்தர்ப்
இருக்கிற காரணத்தாலே அதை அமுல் படுத்த வேண்டுமென்று க
அதைப் கண்டிப்பாக அமுல் படுத்துவார்கள் என்று நம்பி, (ம
அடிக்கப்பட்டது) இன்னும் காலம் இல்லாததால் அடுத்த பட்ஜெட்டிலா
கல்விக்கு இரண்டு நாள் ஒதுக்கவேண்டுமென்று கூறி என்னுடை
பேச்சை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

*திரு. என். நாச்சிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, இந்த அ
கொண்டு வந்திருக்கிற கல்வி மானியத்தை ஆதரித்து நானும் என்
கருத்துக்களை கூறுகின்றேன். பொதுவாக கல்வி என்பது, மக்க
ளின் நிலையிலே இருந்து உயர்த்தவும், அவர்களுடைய ம
திறமையையும், அவர்களுடைய அறிவு வளரவும், அவர்களுடை
செயல்கள் சிறப்படையவும், செய்யக் கூடிய ஒரு தகுந்த சாதனமா



1969 மார்ச் 12] [திரு. என். நாச்சிமுத்து]

இத்தகைய ஒரு கல்வி இந்த நாட்டு மக்களிடத்தில் இருந்தால்தான் சோர்வுற்ற மக்களிடத்தில் ஒரு நல்ல விழிப்பை ஏற்படுத்த முடியும். நல்லமுறையிலே காரியங்களைச் செய்ய முடியும். அந்த நாட்டினுடைய வளத்தையும், அதனுடைய வலிமையும் பெருக்க முடியும். அத்தகைய ஒரு சிறந்த கொள்கையை அடிப்படையாக வைத்து, திராவிட முன்னேற்றக் கழக அரசு கல்விக்காக தன்னுடைய வருமானத்தில் $\frac{1}{4}$ பங்கு செலவழித்து இத்தகைய சிறந்த ஒரு செயலைச் செய்து வருகிறது. இந்த செயலின் அடிப்படையிலே தான் இந்த ஆண்டிலே பி.யூ.சி. வகுப்பில் கட்டணமில்லாமல் மாணவர்கள் சேர்ந்து படிக்கக்கூடிய ஒரு சிறந்த வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்திருக்கிறார்கள். அப்படி பல நல்ல சிறந்த வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தாலும் கல்வித் துறையை எடுத்துக் கொண்டால் பல சிக்கல்களும், பல பழைய கொள்கைகளும், இந்தக் காலத்திற்கு உதவாத சில நடைமுறைகளும் இருந்துகொண்டு வருகின்றன. உதாரணமாக, நம்முடைய நாட்டிலே பல வகுப்பு மக்களை பிரித்து, முன்னேறியவர்கள் என்றும், தாழ்த்தப்பட்டவர்கள் என்றும், பிற்படுத்தபட்டவர்கள் என்றும் மூன்று பிரிவாக பிரித்து வைத்திருக்கிறார்கள். கல்விச் சலுகைக்காக அரசு உதவித் தொகை கொடுக்கும்போது இப்படி முற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்டவர்கள் என்று பிரிக்காமல் இனிமேலாவது பொருளாதார அடிப்படையில் எல்லா மாணவர்களுக்கும் இந்த கல்வி உதவியை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆசிரியர் நியமனம். ஆசிரியர் நியமனங்களைப் பார்க்கும்போது, இந்த ஆண்டு முழுத் தேர்வு நடக்கப் போகிற அந்த நேரத்திலே கூட, சில பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால், ஒட்டன் சத்திரத்தில் ஓர் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்த ஒட்டன் சத்திரம் உயர்நிலைப் பள்ளியிலே இதுவரை ஒரு விஞ்ஞான ஆசிரியர் நியமிக்கப்படாமலே அந்தப் பள்ளி மாணவர்களும் படித்துக்கொண்டிருக்கிறார்கள். வரப்போகிற தேர்விலே அவர்கள் எப்படி தேர்வு எழுதப்போகிறார்கள், இந்த ஆண்டிலே அவர்கள் எப்படி பாடத்தை புரிந்துகொள்வார்கள் என்று விளங்கவில்லை. இப்படி நாம் ஒரு பகுதியிலே கல்விக்காக அதிக தொகைகளை ஒதுக்கிக்கொண்டிருக்கும் போது, நிர்வாகத்திலே உள்ள தவறுகளால் நாம் செய்யக்கூடிய செலவுகளும், நாம் எடுத்துக்கொள்ளக்கூடிய முயற்சிகளும், அதனால் பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளும் வீணாகிப் போகின்றன. இப்பொழுது, அரசியலிலும் மற்ற பல துறைகளிலும் எடுத்துக் கொண்டு பார்த்தோமானால் மிதவாதிகள் என்றும், தீவிரவாதிகள் என்றும் இருக்கிறார்கள். அதைப் போல் கல்வித் துறையிலே எடுத்துக் கொண்டாலும் அரசு ஊழியர்களிடையே மிதவாதிகள் என்றும் தீவிரவாதிகள் என்றும் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் அப்படிப்பட்ட மிதவாதிகளை, நிர்வாகத்திற்கு உதவாதவர்களைக் கண்காணித்து, இந்தக் காலத்திற்கு வேண்டிய, நடைமுறைக் கொள்கைகளை செயல்படுத்தக்கூடிய அதிகாரிகளை ஊக்குவித்து, அவர்களுக்கு நல்ல ஆதரவு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பு. செ. முத்துச் செல்வன் தலைமை.]

அடுத்தப்படியாக, தமிழிலே கல்வி கற்பிப்பதை பல கட்சித்தலைவர்களும், பல அறிஞர்களும், மற்றும் பலரும் ஆதரித்துக்கொண்டு வருகிறார்கள். இந்த நேரத்தில் நாம் ஒரு பகுதியிலே தமிழிலே கல்வி கற்பிக்கிறோம். நாங்கள் ஆங்கிலத்தில்தான் கற்றுக்கொள்வோம் என்ற ஒரு கிளர்ச்சி நடப்பதாக வெளியிலே பார்க்கிறோம். உண்மையிலே இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் இந்த கிளர்ச்சியை மாணவர்கள் தனியாகச் செய்வதாக நான் நினைக்கவில்லை. கல்வித் துறையிலே இருக்கக்கூடிய பல பிற்போக்கு வாதிகள் அவர்களுடைய சுயநலத்திற்காக தூண்டிவிடக்கூடிய ஒரு செயல் என்றே கருதுகிறேன். சென்ற வருடத்தில் கல்வித் துறை சம்பந்தப்பட்ட அதிகாரியினுடைய

அலுவலகத்திற்கு நான் சென்றிருந்தபோது அங்கு ஒருவரிடத்தில்
தமிழிலே பேசினேன். அவர், அந்த சாதாரண அலுவலர் கேட்கிறு
"உங்களுக்கு ஆங்கிலம் தெரியாதா?" என்று. இப்படி தமிழைப்பற்
ஒரு தாழ்வான, ஏழ்மையான சூழ்நிலை நம்முடைய கல்வித் துறையி
நிலவிக்கொண்டிருக்கிறது. அவர்கள் வாங்கக்கூடிய சம்பளமும் அவ
கள் (மணி அடிக்கப்பட்டது) வாழக் கூடிய வாழ்வும் சாதாரண தமி
பேசக்கூடிய மக்கள் கொடுக்கக்கூடிய வரிப் பணத்திலே இருந்தாலு
கூட, தமிழையே அவமதிக்கக்கூடிய ஒரு கூட்டம் கல்வித் துறையி
இருந்துகொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட அதிகாரிகளினால், இப்படிப்பட்ட காலத்திற்
ஒவ்வாத சில கருத்துக்களையும், சுயநலத்தையும் கொண்டிருக்கி
ஒரு சில சமுதாய விரோதிகளினால் நான் இப்படிப்பட்ட குழப்பமா
நிலைமைகள் கல்வித்துறையிலே ஏற்படுகின்றன. ஆகையினால், இப்படி
பட்ட நிலைமைகளைத் திருத்துவதற்கு இந்த அரசு ஆவன செய்
வருங்காலத்தில் தாய் மொழியில் நல்ல முறையில் கல்வியைப் பரப்
வதற்கும், மாணவர்கள் தாய் மொழியில் நல்ல தேர்ச்சி பெறுவதற்கு
வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்
ஒரு நல்ல சந்தர்ப்பத்தை கொடுத்த தலைவர் அவர்களுக்கு என
நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

***திரு. ம. பொ. சிவஞானம் :** மாண்புமிகு பேரவைத் மாற்று
தலைவர் அவர்களே, இந்த அவை முன் வைக்கப்பட்டுள்ள கல்
மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்
புதியதாக கல்வித் துறைக்குப் பொறுப்பேற்றுள்ள அமைச்சர் மாண்புமி
மாதவன் அவர்களை வரவேற்று, அவர்களுடைய காலத்தில் தமி
மொழி எல்லா வகையிலும் முன்னேற்றம் அடையும் என்று நம்
அவருக்கு வாழ்த்துக் கூறுகிறேன்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் கல்வி மானியத்தில் பல நல்
அம்சங்கள் காணப்படுவதைப் பார்க்கிறேன். அவற்றை ஒவ்வொன்றா
சொல்லி நேரமின்மையை அதிகப்படுத்திக்கொள்ளாமல், அ
அனைத்திற்கும் வரவேற்பு கூறுகிறேன். அதற்காக கல்வி அமைச்
அவர்களையும், அமைச்சர் அவையையும் நான் வாழ்த்துகிறேன். குறி
பாக, புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி புகுத்தப்படுவது சில ஆட்சேப
களுக்கு இடமளிப்பதை நான் பார்க்கிறேன். பணக்காரர்களுக்கு எ
இந்தச் சலுகை தரவேண்டும் என்ற வாதத்தில் பசை உண்டு என்ப
நான் உணராமல் இல்லை. ஆனாலும், கல்வித் துறையிலே ஜாதியை
சொல்லி சலுகை கேட்கவேண்டிய ஒரு நிலையை சீக்கிரம் ஒரு முடிவு
கொண்டுவந்து, எல்லோருக்கும் இலவசக் கல்வி கொடுப்பதற்கு இ
பயன்படும் என்ற ஒரு காரணத்திற்காக இந்த மாறுதலை நான் மனம
வரவேற்கிறேன்.

புதிய பட்ஜெட்டில்-கல்வித் துறையிலே, ஆசிரியர்களுக்கு ஒருவிதமா
சலுகையும் அறிவிக்கப்படவில்லை என்ற குறை இருக்கிறது. எனக்கு முன்
பேசிய கம்யூனிஸ்டுக் கட்சி நண்பர் திரு. ஞானசம்பந்தம் அவர்
அதைப்பற்றி மிக நன்றாகக் குறிப்பிட்டார்கள். நானும் வேண்டிக்கொ
வது என்னவென்றால், இப்பொழுது கூட கல்வி அமைச்சர் அவர்
மனதுவைத்து, ஆசிரியர்களுக்கு நல்ல சலுகைகள் வழங்க ஏற்பாடு செ
வேண்டும். அதுவும், தனியார்துறை பள்ளி ஆசிரியர்களுக்கு, அரசா
ஸ்தல ஸ்தாபன ஆசிரியர்களுக்கும் மருத்துவம் போன்ற சலுகைக
வழங்குவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்றையும் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்
வர விரும்புகிறேன். ஆசிரியர்களுக்கு சலுகைகள் வழங்குவன
பொறுத்தவரையில், என்.ஜி.ஓக்களுக்குச் சலுகைகள் வழங்கப்படும்
முதலான-அவர்களோடு சேர்த்து ஆசிரியர்களுக்கும் சலுகை வழங்கக்கூ
ஒரு முறை இருக்கிறது. இது சரியல்ல. ஆசிரியர்களுடைய குறைகளை
அவர்களுடைய தேவைகளையும் தனியாக ஆராய்ந்து ஒரு அறிக்கை



பிக்கவேண்டும். அதற்காக, தனியாக "ஆசிரியர் குறை நீக்கக் கமிஷன்" என்ற ஒரு கமிஷனை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு ஒரு காரணமும் உண்டு. ஆரம்ப ஆசிரியர்களிலே கொஞ்சம், கணிசமான அளவிலே தாழ்த்தப்பட்ட ஜாதியினர், பிற்பட்ட ஜாதியினர், மிகவும் பிற்பட்ட ஜாதியினர் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை நிலையை மாற்றுவதற்கான அளவில் இந்தப் பிரச்னையைக் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியைகளிலே ஒரு கணிசமான தொகையினர், வாழ்க்கை இழந்தவர்கள்-விதவைகளாகி வாழமுடியாத நிலையில் உள்ளவர்கள்-எதிர்காலம் இருண்டு விட்டவர்கள் இந்த அவல நிலைக்கு இலக்கானவர்கள் கணிசமான அளவில் இருப்பதால், ஆசிரியைகளின் நிலையைக் கொஞ்சம் அனுதாபத்தோடு கவனிக்கவேண்டும் என்று கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய வரவு-செலவுத் திட்டத்தைப் பார்த்தால், இப்பொழுது நமக்குத் தரப்பட்டிருக்கிற கல்வித்துறைக் குறிப்பில், நடப்பு ஆண்டில் 12 நூல்நிலையங்கள் புதியதாக தோன்றி இருக்கின்றன. இவ்வளவு பெரிய ராஜ்யத்தில் கல்வித் துறையைப் பொருத்த அளவில் மிகுதியாக முன்னேற்ற மடைந்திருக்கிற இந்த நாட்டில்-வளமான மொழி படைத்த இந்த நாட்டில்-இலக்கிய சிறப்புடைய இந்த நாட்டில் பல புகழ்பெற்ற மகா கவிகள் தோன்றிய இந்த நாட்டில் ஒரு ஆண்டுக்கு 12 நூலகங்கள்தான் ஏற்படுவது, அவ்வளவு மனநிறைவு தரக்கூடியது அல்ல என்பதை ஒப்புக்கொள்வதில் யாரும் தயக்கம் காட்டுவதற்கில்லை. இதனுடைய நிர்வாகத்தை ஏற்று நடத்தும் இயக்குனர் அவர்கள் இதை மிக சிறப்பாகவும், ஆர்வத்தோடும் நிர்வகித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டுதோறும் புதியதாக நூலகங்கள் ஏற்படுத்தப்படுவது மிகவும் வரவேற்கத்தக்கது. இருந்தாலும் நூலக இயக்குனர் என்று தனியாக ஒருவர் நியமிக்கப்பட்டால், ஆண்டுக்கு ஆண்டு இந்தத் துறையில் அதிக வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்படக்கூடும் என்பதால், இந்த ஒரு ஆலோசனையையும் நான் கல்வி அமைச்சர் அவர்களின் ஆய்வுக்கு வைக்கிறேன். நூலகங்களில் பணிபுரிபவர்களுக்கு ஓய்வுச் சம்பளம் தரக்கூடிய விஷயத்திலே, அரசாங்க சிப்பந்திகளோடு சேர்த்து அவர்கள் நடத்தப்பட்டு, அவர்களுக்கு அந்தச் சலுகைகள் அளிக்கப்படவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு முக்கியமான விஷயம் இந்தக் கல்வி பட்ஜெட்டில் நான் எடுத்துக்கொள்ளவேண்டி இருக்கிறது. கல்வி அமைச்சர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், அல்லது ஒரே கட்சியில் கல்வி அமைச்சர் மாறி வந்தாலும், என்னுடைய துரதிருஷ்ட வசமாக, அவர்களுடன் நான் அவர்களோடெல்லாம் கருத்துவேறுபாடு கொள்ளக்கூடிய நிலையில் இருக்கிறேன். தனிப்பட்டமுறையில் அவர்கள் எவ்வளவு நண்பர்களாக இருந்தாலும், பயிற்சி மொழிப் பிரச்னையில் எனக்கும், அவர்களுக்கும் கருத்து மோதல் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கக்கூடிய நிலை இருக்கிறது. புதிய கல்வி அமைச்சர் காலத்திலேனும் அந்த துரதிருஷ்டமான நிலை நீங்கிவிடும் என்று நம்புகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் ஆளுனர் உரைமீது பேசுகிறபொழுது, திரு. ம.பொ.சி. அவர்கள் புதிய அமைச்சரவை தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆதரவு தராது என்று ஐயப்படுவதாகத் தோன்றுகிறது, அப்படிப்பட்ட ஐயமே தேவையில்லை, இந்தப் புதிய அமைச்சரவை தமிழ் மொழிக்கு நல்ல முறையில் வாழ்வு அளிக்கும் என்று குறிப்பிட்டார்கள். எனக்கு அப்படிப்பட்ட ஐயமே கிடையாது என்பதை அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் சொன்னால் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, காரணம் தெரியாத வகையில் புதிய கல்வி அமைச்சர் பயிற்சி மொழி விஷயத்தில் அதிக அக்கரை காட்டுவார் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. ஐயப்பாடு என்பதே இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், ஒன்று மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தி.மு.க. ஆட்சிக்கு வந்தால், பயிற்சி மொழித்துறையில் எந்த

அளவுக்கு வேகம் ஏற்படும் என்று நான் நினைத்துக்கொண்டிருந்தேனே! அந்த அளவுக்கு வேகம் இல்லை என்பதை நல்லெண்ணத்தோடும், பணி வோடும், அன்பு உணர்ச்சியோடும் சொல்லிக்கொள்வதில் தவறு இருக்க முடியாது என்றுதான் நான் எண்ணியிருக்கிறேன்.

இன்னொன்றையும் நாம் பார்க்கவேண்டும். தமிழ் மொழி பயிற்சி மொழியாக இருக்கும், இதே சமயத்தில் ஆங்கிலமும் நீடிக்கும் என்று சொல்லப்படுவதால், இரண்டு ஜாதிகளை நாம் நிரந்தரமாக தோற்றுவிக்குப் நிலைமைதான் ஏற்படும். இதற்கு ஒரு காலவரம்பு கட்டி முடிவு கட் வேண்டும். சட்டமன்றத்தில் நாம் கடந்த ஆண்டு ஜனவரி 23-ம் தேதி யன்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம். "இன்னும் ஐந்து ஆண்டு காலத்திற்குள் எல்லாத் துறைகளிலும், கல்வியின் எல்லா மட்ட களிலும் தமிழே பயிற்சி மொழியாகும்" என்றுதான் அந்தத் தீர்மானத் தில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், நடைமுறையில் பார்க்கிறபொழுது முத பிருந்த கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு ஐயப்பாட்டை தெரிவித்து கொண்டுவந்தார்கள். இதைப்பற்றி பேசுகிற இடந்தோறும், ஒரு தலை முறையாகலாம், பல தலைமுறையாகலாம், ஒரு நூற்றாண்டு ஆகலாம் ஆனால் என்றாவது ஒரு நாள் தமிழ்தான் எல்லா கல்லூரிகளிலும் பயிற் மொழியாகும்-என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இம்மாதிரி பி சாரம் செய்துக்கொண்டிருந்தால், மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தற்பொழுது இருக்கு கல்வி அமைச்சர் கூட, கடந்த வாரத்தில் கோவையில், தமிழ்தா எல்லா கட்டங்களிலும் பயிற்சி மொழி என்பதுதான் அரசின் கொள்கை என்று அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில், அதற்கு ஒரு காலவரம்பு கட்டமுடியாத நிலை இருக்கிறது என்பதையும் அவர்கள் ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த நிலையில் நாம் சட்டமன்றத் தில் நிறைவேற்றிய தீர்மானம் என்ன ஆயிற்று ? சட்ட மன்றத்தில் ஐந்து ஆண்டு என்று காலவரம்பு கட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றினால், ஒருக்கால் அந்தக் காலவரம்பு அனுபவசாத்தியம் இல்லாத காரணத்தினால் நீடிக்கப்படவேண்டும் என்ற நிலை ஏற்படுமானால், அப்போது அந்த நிலையில் நாம் ஒத்துழைக்கவேண்டும் என்ற நிலையையும் நான் உணராமல் இல்லை. இருந்தாலும், அப்படி இங்கே ஒரு தீர்மானம் நிறைவேற்றிவிட்டு, அதற்குப் பிறகு, அதற்கு மாறாக தமிழ் மொழி எல்லாத் துறைகளிலும் பயிற்சி மொழியாவதற்கு பல காலம் பிடிக்கும், பேரப்பிள்ளை காலத்தில் தான் அம்மாதிரி நிலை ஏற்படும், பேரப் பிள்ளைக்கு பேரப்பிள்ளை காலத்தில் தான் அம்மாதிரி தமிழ் பயிற்சி மொழியாகும்; என்றாவது ஒருநாள் தமிழ் மொழி பயிற்சி மொழியாக வந்தே தீரும்-என்று பேசும் போக்கு இருந்தால், எப்படி அந்த நிலை மாணவர்களை தமிழ் மொழியில் பயிலத் தூண்டும் ? இதை நாம் சற்று தீவிரமாக சிந்தித்துப் பார்த்து, சீக்கிரம் தமிழைப் பயிற்சிமொழியாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழைப் பயிற்சி மொழியாக்குகிற பிரச்னையை தனியார் கல்லூரிகளின் விருப்பத்திற்கு விட்டிருக்கிறார்கள். நமக்கெல்லாம் தெரியும். 200 ஆண்டு களாக நாம் ஆங்கிலேயர் ஆட்சியில் அடிமைகளாக இருந்த பொழுது, அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, எப்படியெல்லாமோ பலர் முன் னேறிவிட்டார்கள் ? அது சரித்திரம் கொடுத்த சாபம். தனிப்பட்ட முறையில் நான் யாரையும் குறை சொல்ல விரும்பவில்லை. மேல் கீழ், மேடு-பள்ளம் என்ற வித்தியாசங்களை ஜாதிவேற்றுமைகளை ஒழிக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்ட ஒரு கட்சியின் ஆட்சி நடக்கிற பொழுது, தனிப்பட்ட கல்லூரிகளின் விருப்பத்திற்கு இந்தப் பிரச்னையை விட்டால், அது நடைமுறைக்கு வருவது சாத்தியம் இல்லை. எனக்குத் தெரியும், பல இடங்களில் இதைப்பற்றி கல்லூரி முதல்வர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது. நான் பெயரைச் சொல்வது முறையாகாது. கல்லூரி முதல்வரிடம் போய் தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்றுக் கொள்ள அனுமதி கேட்டால், "நீ உருப்படுவதில்லை என்று தீர்மானித்து விட்டாயா ?" என்று அவர் மாணவரைப் பார்த்து கேட்கக்கூடிய நிலை தான் நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றி,



லூரி முதல்வர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கல்வித்துறை இயக்குநர் கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள், துணைவேந்தர்கள் பேசிக்கொண்டிருக் கிறார்கள், கல்வி அமைச்சர்களும் பேசிக்கொண்டிருக்கிறார்கள், ஆனால் இந்தப் பிரச்னையில் எவரும் அழுத்தமாக நிற்கவில்லை. இப்படி ஒரு பயங்கரமான சந்தேக சூழ்நிலையில் எப்படி மாணவர்கள் தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்றுக்கொள்வார்கள். அமைச்சரவையும், முதல மைச்சர், கல்வித்துறை அமைச்சர், கல்வித்துறை இயக்குநர் அவர்களும் இதுபற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும். ஒரு காலவரை வைத்துக்கொள்ள வேண்டும். ஆங்கிலத்தை ஒரு கல்வி மொழியாகப் படிப்பதற்கு யாருக்கும் ஆட்சேபணை கிடையாது. ஆங்கிலம் ஒரு பாடமொழியாக இருப்பதற்கு எதிர்ப்பு கிடையாது. ஆங்கிலப் படிப்பே வேண்டாம் என்று சொல்ல வில்லை. அந்த அச்சம் இருக்கத் தேவையில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்த அளவிலே அதற்கு எதிர்ப்பே கிடையாது. அதற்காக எந்த விதமா பிரசாரமும் தேவையில்லை. ஒருவித பிரசாரமும் இல்லாமலேயே ஆங்கிலத் தைக் கற்றுக்கொள்ள முடியும். ஆனால், அதே சமயத்தில் விரைவில் தமிழ் மொழி முற்றிலும் பயிற்சி மொழியாக ஆவதற்கு மாணவர்களுக்கு அதிக உற்சாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழை பயிற்சி மொழியாகக் கொண்டவர்கள் உத்தியோகத்திற்கு உத்தரவாதம் கேட்கிறார்கள் அறநிலையத்துறையை ஒதுக்குகிறோம், இன்னும் சில துறைகளையும் ஒதுக்குகிறோம்—என்று சொல்லப்படுகிறது. தமிழை பயிற்சி மொழியாகக் கொண்ட பட்டதாரிகள் இரண்டாவது நிலையில் உள்ளவர்கள் என்ற எண்ணத்தை இது நிலைநிறுத்துவது போலத் தோன்றுவதால், அவர்கள் மனதில் ஒரு அச்சத்தையும், பயத்தையும் ஏற்படுத்துவதால், இப்படி, துறைகளை ஒதுக்குவதற்குப் பதிலாக, எல்லாத் துறைகளிலும் சதவிகித அடிப்படையில் அவர்களுக்கு உத்தியோகங்களை ஒதுக்குவது நல்ல யோசனை என்று நான் நினைக்கிறேன். அப்பொழுது தான் அந்த கருத்து பற்றி ஐயப்பாடு வராமலிருக்கும். தமிழை பயிற்சி மொழியாக்க உற்சாகம் ஏற்படும், என்பதை கல்வி அமைச்சருக்குத் தெரிவிக்கிறேன். தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் குழு திருத்தி அமைக்கப் பட்டிருக்கிறது. பல மாதங்கள் ஆகியும், அந்தக் குழு கூடவேயில்லை. குழுவில், இங்கே கிடைக்காத நேரத்தில், அங்கே கருத்துக்களைத் தெளி வாகக்கூறி கல்வி அமைச்சருக்கு ஆலோசனைகள் கூறுவார்கள் என்றாலும் அதற்கும் இடமில்லை. பேரவை உறுப்பினர்களும்—மேல் அவை உறுப்பி னர்களும் கொண்ட கல்வி ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. மாதங்கள் பல ஆகியும், அதுவும் கூடவேயில்லை, நான் அதில் இருக் கிறேன். ஆகவே கூடவேயில்லை என்று உறுதியாக சொல்வேன்.

பயிற்சி மொழிப் பிரச்சினையில்—கல்விப் பிரச்சினைகளில், இந்த மன்றத்திலுள்ளவர்கள், கல்வி நிபுணர்கள், தமிழில் பற்றுள்ளவர்கள். கல்வி அமைச்சருக்கு ஆலோசனைகள் கூறும் வாய்ப்பே இல்லாமல் போகிற நிலைதான் இருக்கிறது.

இன்னொன்றையும் சொல்லவேண்டும். எஸ்.எஸ்.எல்..ஸி.யில் தேர்வு பெற்றவர்கள், தேர்வு பெருதவர்கள் என்று சான்றிதழ் கொடுக் கிறோம். தேர்வு பெற்றவர்கள்—பாஸ் செய்தவர்கள் என்று சொல்லப் படுகிறவர்களுக்கு ஒரு மதிப்பும் கிடையாது. கல்லூரிகளில் சேர தேர்வு எண்தான் முக்கியம். "பாஸ்" என்பதற்காக இடம் இல்லை, தேர்வு எண்ணைப் பார்த்துத்தான் இடம் தருகிறார்கள். ஆகவே பாஸ்—பெயில் என்று சொல்லாமல், மார்க்கைப் போட்டு, சர்டிபி கேட்டைப் கொடுத்துவிட்டால் என்ன ? என்று கேட்கிறேன். எங்கேனும் மற்ற இடங்களில்—கம்பெனிகளில் வேலைக்குப் போகலாமே. எஸ்.எஸ். எல்.ஸி. யைப் பொருத்தவரையில், ஆயுள் தண்டனைபோலத் தள்ளப் படாமல், ஏதேனும் சமுதாயத்தில் ஒரு இடம் தேடிக்கொள்ள வாய்ப்பாக இருக்கும். பிற்பட்ட சமூகத்துப் பரம ஏழைகளுக்கு இலவசக் கல்வி கொடுத்தும், இந்த எஸ்.எஸ்.எல்.ஸி.யில் தேர்வு பெருவிடில் தூக்கு தண்டனை பெற்றுவிடுகிறார்கள். ஆகவே, தேர்வு இல்லை என்பதை மாற்றி, மார்க் எண்ணை மட்டும் குறித்து அனுப்பிவிட்டால் பயன்படும் என்று நினைக்கிறேன்.

பயிற்சி மொழிப் பிரச்சினையைப் பொருத்தவரையில், நான் முன்னர் நிறையச் சொல்லியிருக்கிறேன், நிறையக் கேட்டிருக்கிறீர்கள். முதல் அமைச்சரவர்கள் ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள். 1968 ஜனவரி 23-ம் தேதி மொழிப் பிரச்சினை பற்றிப் பேசும்போது எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் கேட்டார்கள். 1968–69 கல்வி ஆண்டில் புகுமுக வகுப்பில், எல்லாப் பாடங்களுக்கும், விஞ்ஞான பாடம் உள்பட, தமிழே பயிற்சிமொழியாக இருக்கும், ஆங்கிலம் ஒரு பாட மொழி என்ற அளவில் இருக்கும் என்று முதல் அமைச்சர் உறுதிமொழி கொடுத்தார்கள். 1968–69 கல்வி ஆண்டில் புகுமுக வகுப்பில் தமிழ் பயிற்சிமொழியாக இருக்கும் என்ற நிலைதான் இருக்கிறதே அன்றி, தமிழ் மட்டுந்தான் என்று கூறி, ஆங்கிலம் நீக்கப்படவில்லை. ஏன், சட்டசபையில் உரிமைப் பிரச்சினையாக கூடிய பெருமைப் பிரச்சினை பற்றி முதல் அமைச்சர் சட்ட மன்றத்தில் கொடுத்த வாக்குறுதி சில யாதக்கணக்கிலேயே செயல் படுத்தப்பட வில்லை? கல்வி அமைச்சர் இங்கே இல்லை, இருக்கிற மற்ற அமைச்சர்கள் எடுத்துச் சொல்லி, இந்த முக்கியமான பிரச்சினையில், பிரிவிலேஜ் மோஷன் வரக்கூடிய அளவில், முதல் அமைச்சர் கொடுத்த உத்தரவாதம் ஏன் நிறைவேற்றப்படவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். இந்த ஆண்டில் புகுமுக வகுப்பில் எல்லாப் பாடங்களுக்கும் தமிழே பயிற்சி மொழி ஆக்க வேண்டும், கல்லூரி முதல்வர்களுக்கு அனும கொடுக்கும் வரையில், ஆங்கிலம் வேண்டுவோர் ஆங்கிலத்திற்குப் போ லாம். தமிழ் வேண்டுவோர் தமிழுக்குப் போகலாம் என் இருக்கும் வரையில், இரண்டு ஜாதி சிருஷ்டிக்கப் படுவார்கள். எந் சுயமரியாதை உள்ள தமிழனும் ஆங்கிலோ-இந்தியனாக இருக்க விரும்பமாட்டான். தமிழன் சுத்தத் தமிழன்தான். இந்த இரண்டு முறைகளை—ஆங்கிலத்தில் மட்டுமே படிக்கும் ஒரு ஜாதி, தமிழ் மட்டுமே படிக்கும் ஒரு ஜாதி என்று இரண்டு ஜாதிகளைச் சிருஷ்டித்தால் பின்னால் கம்பெனி வேலைக்குப் போனால், அவர்கள், ஆங்கில மீடியம் பட்டதாரியா, தமிழ் மீடியம் பட்டதாரியா என்ற கேள்வி கேட்கப்படும் நிலை உண்டாகிறது. ஆங்கில மீடியம் பட்டதாரி பெரிய ஜாதி என்றும், தமிழ் மீடியம் பட்டதாரி சிறிய ஜாதி என்றும் உருவாகும் அபாயத்தைத்தான் ஏற்படுத்திவிடும்.

"எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கும் அந்த நிலைபொது வாகும் ;
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்"

என்று பாரதியார் பாடியது போல, தமிழ் என்றால் எல்லோருக்கும் தமிழ்தான். ஒரு கட்டத்தில் அப்படி ஏற்படவேண்டும். கட்ட கட்டமாகப் போகவேண்டுமானால், போங்கள். ஆனால், ஒரு பாடம் தமிழ் என்றால் முழுக்க முழுக்க தமிழிலேயே இருக்கவேண்டும். ஆங்கிலம் தேய் பிறையாக இருக்கவேண்டும். தமிழ் வளர் பிறையாக இருக்க வேண்டும், இரண்டு சந்திரன்கள், இரண்டு சூரியன்கள் மொழி உலகத்தில் இருக்க முடியாது. இந்த முடிவோடு, பயிற்சி மொழி திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட் முடிக்கிறேன்.

*திரு. பி. துரைராஜ் : சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சபைமுன் வைக்கப்பட்டுள்ள, 1969–70-ம் ஆண்டுக்கான கல்வி மானியத்தை ஆதரித்துப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த மானியம் பற்றி பேசுவதற்கு முன் தாக, மறைந்த முதல் அமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாகவும் அஞ்சலி செலுத்த விரும்புகிறேன். இன்றைய தினம் கல்விக்கு கழக அரசானது ரூ. 66 கோடி அளவில் ஒதுக்கியிருப்பதிலிருந்து, அவர்களுக்கு கல்வியில் எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பது புலனாகும். கல்விக்கு அடிப்படை ஆரம்பக் கல்வி. அது நன்றாக அமைந்தால்தான் உயர் நிலை கல்வி நல்ல வகை





அமையமுடியும். அந்த முறையில் பார்க்கும் போது ஆரம்பக் கல்விக்குக் கணிசமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். இந்த ஆண்டு முதல் புகுமுக வகுப்புவரையில் கல்வியானது எல்லாத் தரப்பினருக்கும் ஜாதி, மத வித்தியாசம் இல்லாமல் இலவசமாகச் செய்திருப்பதற்காக இந்த நாடே இந்த அரசைப் பாராட்டு கிறது. இளைஞர்கள் மட்டுமன்றி, படிக்காதவர்களே இருக்கக் கூடாது என்ற வகையில், முதியோர்களுக்கும் கல்விப் பயிற்சி கொடுக்க இந்த ஆண்டு மொத்தமாக 500 முதியோர் பள்ளிகளை ஏற்படுத்த வாய்ப்பு ஏற்படுத்தியதைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். சுதந்தரம் பெற்று 20 ஆண்டுகளாகியும், கையெழுத்துப் போடத்தெரியாத நிலையில் இன்னும் மக்கள் இருக்கிறார்கள். ஆகவே, கல்வியில் இந்த அரசு அக்கறை கொண்டு இருக்கிறதைப் பாராட்டுகிறேன்.

கிராமங்களில் பள்ளிகள் ஏற்படுத்தும்போது, இலாகாவின் விதிகளை செம்மையாக அனுசரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால், ஜாதி, மதம், அரசியல் காழ்ப்புக்காரணமாக, ஒரே கிராமத்தில், 40, 50 கஜம் தூரத்திலேயேகூட வேறு வேறு பள்ளிகள் ஆரம்பிக்கும் நிலை இருக்கிறது. கல்வி இலாகா அதிகாரிகள் இந்த நிலைகளைப் போக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

கடந்த காலத்தில் கல்வியைப் பரப்ப பள்ளிக்கூடங்கள் அதிகமாகத் திறக்க வேண்டும் என்று, ஓராசிரியர் பள்ளிகள் பல திறக்கப் பட்டன. அந்தப் பள்ளிகளில், ஐந்து வகுப்புகளையும் நிர்வகிக்க வேண்டிய நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களால் மாணவர்களை நன்றாகக் கவனிக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகையினால் ஓராசிரியர் பள்ளிகளுக்கு குறைந்தபட்சம் இரண்டு ஆசிரியர்களாவது நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க 3,450 ஆரம்ப ஆசிரியர்களுக்கும், 1,500 உயர் நிலை ஆசிரியர்களுக்கும் வேலை வாய்ப்புக் கொடுத்திருப்பதற்காக அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டும். இப்படி வேலை வாய்ப்புகள் கொடுக்கும் போது, ஏற்கெனவே ஆசிரியர்கள் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு சில சலுகைகள் கொடுத்திருப்பதற்காக மகிழ்ச்சி. 1965 ஏப்ரல் முதல் ரிடையர் ஆனவர்களுடைய குடும்பங்களுக்கு குடும்பப் பென்ஷன் வழங்கப்பட்டிருந்தாலும், நீண்ட காலமாக இருந்துவரும் அவர்களுடைய கோரிக்கை, மருத்துவச் சலுகை, மற்ற அரசாங்க ஊழியர்கள் போல, கொடுக்கப் படவேண்டும் என்பது. அதைச் செய்து கொடுக்க வேண்டும்.

இவ்வளவு கோடி ரூபாய்கள் செலவழித்தாலும், பணியாற்றும் ஆசிரியர்கள், பஞ்சாயத்து யூனியன், கல்வி அதிகாரிகள் என்கிற இரண்டு தரப்பினருக்கும் இடையில், இருதலைக் கொள்ளி எறும்பு போலக் கஷ்டப்படுகிறார்கள். பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் இருக்கும் எஸ்.இ.ஓ. என்கிற அதிகாரியை இந்த அரசாங்கம் நீக்கிவிட்டு வேறு வேலை வாய்ப்புக் கொடுத்துவிட்டு, அந்த ஆசிரியர்களை கல்வி அதிகாரிகளுடைய அதிகாரத்தின் கீழேயே வரக்கூடிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். வருகிற ஆண்டுகளிலாவது, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு மாணவர்களை தேர்ந்தெடுக்கும்போது, தேர்வுக் குழுவில் சட்ட மன்ற உறுப்பினர்களும் இடம் பெறும் வகையில் செயல் பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

*திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய கட்சியின் பெயரால் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 65 கோடி ரூபாய்க்கான மானியக் கோரிக்கையை இந்த அவை முன் வைத்திருக்கிறார்கள். நமது கையில் கொடுக்கப் பட்டிருக்கிற குறிப்புப் புத்தகத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை மாநில மொத்தச் செலவில் 23 சதவீதம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஐந்தாண்டு நிதிநிலை அறிக்கைகளைப் பார்க்கும்போது ஒவ்வொரு

ஆண்டுப் பாக்குறைய 23 சதவீதம் வருவாயில் கல்விக்காக ஒதுக் கிருப்பதைப் பார்க்கிறோம். இந்த ஆண்டு மாத்திரம் கல்விக்கா இந்த அரசு அதிக ஆதரவு காட்டியதாகத் தெரியவில்லை. 1960-61 லிருந்து காங்கிரஸ் அரசு கம்பல்ஸரி எஜுகேஷனை கொள்கையா கைக்கொண்டிருந்தது. அன்று முதல் இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான பள்ளிகள் அமைக்கப்பட்டன. 1966-67-ம் காங்கிரஸ் அரசு இருந் பொழுது, ஒவ்வொரு கிராமத்திலும், 300 ஜனத்தொகை இருந்த சுற்றுவட்டாரத்தில் ஒரு மைலுக்கு வேறு பள்ளிகள் இல்லாமலிருந்தால் அந்தக் கிராமங்களில் ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்க வழி செய்தது ஆனால், 1966-67-ம் ஆண்டில் அறிக்கையைப் பார்க்கும்போது அ வரையிலும் 90 சதவீத மாணவர்கள்தான் பள்ளிகளுக்குச் சென்று படிக்கிறார்கள். இன்னும் 10 சதவீத மாணவர்கள் கல்வி கற்க வாய்ப் இல்லாமலும் வசதி இன்மையிலும் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. நமக்கு அளிக்கப்பட்ட அறிக்கையில்கூட 91·9 சதவீ மாணவர்கள்தான் இன்று பள்ளிகளில் படிக்கிறார்கள் என்று குறிப்பிட பட்டிருக்கிறது. காங்கிரஸ் அரசு வகுத்த கொள்கையை இன்னு முழு அளவுக்கு நிறைவேற்றப்படவில்லை.

இன்று கல்விக்காக அதிகமான பணம் ஒதுக்கப்படவில்லை. அதிகமா பள்ளிகளையும், மாணவர்கள் படிக்க, தகுந்த வசதிகளையும் இந் அரசு ஏற்படுத்தித் தரவில்லை என்றே தெரிகிறது. இந்த அறிக்கையை பார்க்கும்போது, சில பள்ளிகள் கடந்த ஆண்டைவிட எண்ணிக்கையில் குறைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கான காரணத்தைக் கூறியிருக்கிறார்கள் **They are being converted into High Schools and hence the reductio in their number,** என்று, மிடில் ஸ்கூல்கள் எல்லாம் ஹைஸ்கூல்கலா மாறும்போது, ஆரம்பப் பாடசாலைகளை மிடில் ஸ்கூல்களாக மாற் வேண்டும் அல்லவா? அதற்கு மாருக, பள்ளிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது. அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் சமாதானம் ஏற்கத்தக்கதல்ல. இன்னும் டிரைனிங் ஸ்கூல்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது கடந்த ஆண்டைவிட எண்ணிக்கையில் குறைந்திருக்கிறது. நாம் கம்பல்ஸரி எஜுகேஷன் கொள்கையைக் கடைப்பிடித்து வருவதால் ஆரம்பப் பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அதன் காரணமாக கிராமங்களில் தேவையான ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கு கிறோம். அதே சமயத்தில் பயிற்சிப் பள்ளிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டியதன் அவசியம் என் என்பது புரியவில்லை. பள்ளிகளை விஸ்தரிப்பது என்றால் அதற்கு ஆசிரியர்கள் தேவைப்படுகிறது. ஆசிரியர் களுக்குத் தக்க முறையில் பயிற்சி அளிக்க வேண்டும். அதற்கான ஆதாரத்தையும் இந்த அரசு செய்வதாக அறிக்கையில் ஒன்றும் குறிப்பிட படவில்லை.

அடுத்தபடியாக, எனக்குமுன் பேசிய நண்பர், "கல்வியின் நோக்கம் மாணவர்களின் தரத்தை உயர்த்துவது" என்று கூறினார். அதாவது **training their charactor** என்பதற்கு இன்றைய நிலையில், நாம் 65 கோடி ரூபாய் செலவு செய்தாலும், நமது நோக்கம் நிறைவேறுகிறதா என்று பார்த்தால் இல்லையென்றே தோன்றுகிறது என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். இன்றைய கல்வியின் தரம் குறைக்கப்பட்டிருக் கிறது. நமது நோக்கம் இன்னும் நிறைவேறவில்லை. ஏழை எளியவர் களின் வரியாக வசூல் செய்கிற பணம் சரியான முறையில் செலவழிக் கப்படவில்லை. இந்த அரசுதான் அதற்குக் காரணமாகும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாணவர்களை இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் கலந்துகொள்ளும் படி அழைத்தார்கள். அந்தப் போராட்டப் பாதையில்தான் இன்றைக்கும் மாணவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். படிப்பில் மாணவர்கள் அக்கறை காட்டுவதில்லை. படிப்பதற்கோ மாணவர் களுக்கு வாய்ப்பு அளிப்பது இல்லை. பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய இந்த அரசு, பிரச்சினைகள் எல்லாம் தாமாகவே தீர்ந்துவிடும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறது. பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியவர்



கள் தீர்க்காமல் இருக்கிறார்கள். மொழிப் பிரச்சினையானாலும் சரி, தேசியகீதம் எந்தெந்த இடத்தில் பாடப்பட வேண்டும் என்ற பிரச்சினை யானாலும் சரி, மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படுகிற பிரச்சினை யானாலும் சரி, பரீட்சை எழுத வேண்டுமா, எழுத வேண்டாமா என்ற பிரச்சினையானாலும் சரி, ஒழுங்காக வகுப்புகள் நடைபெற வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினையானாலும் சரி, மாணவர்களே தீர்த்துக் கொள்ள வேண்டுமென்றுதான் இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. ஒழுங்காக படிப்பு நடைபெறுவதில்லை. படிப்பின் தரமும் குறைந்து கொண்டே போகிறது என்பதை நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். தற்பொழுது எல்லாக் கல்லூரிகளும் சாதாரணமாக வேலை நிறுத்தத் தினால் மூடப்படுகின்றன. ஒரு சிறிய பிரச்சினைக்காக கல்லூரிகள் மூடப்படுகின்றன. எந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானாலும், மாணவர்களின் தயவு தேவையாக இருக்கிறது. அங்கும் அரசியல் புகுந்திருக்கிறது. இதற்கெல்லாம் இந்த அரசுதான் காரணம்.

அடுத்தபடியாக, பள்ளிகளில் ஆசிரியர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்ப்பதற்கும், சினிமா உலகத்திற்கு மாணவர்களைச் அழைத்துச் செய்வதற்கும்தான் தங்களை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார்கள். பள்ளிகள் அந்த நிலைமையில் தான் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன.

கடைசியாக உடற்பயிற்சி ஆசிரியர்களைப் பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். லோயர் கிரேடு உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும், ஹையர் கிரேடு உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் ஒரே விதமான சம்பளம் அளிக்கப்படுகிறது. அதாவது 90—140 என்ற வீதத்தில் "பே ஸ்கேல்" இருக்கிறது. லோயர் கிரேடு ஆசிரியர்கள் ஆரம்பப் பள்ளிக் கூடங்களிலும், ஹையர் கிரேடு ஆசிரியர்கள் உயர்நிலைப்பள்ளிகளிலும் பாடம் சொல்லிக்கொடுக்கிறார்கள். ஹையர்கிரேடு உடற்பயிற்சி ஆசிரியர் களின் சம்பள விகிதம், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் சம்பளத்தைப் போன்று மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த அரசின் இரு மொழிக் கொள்கையினால் பாதிக்கப்பட்ட இந்தி ஆசிரியர்கள் இன்னும் வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள். அவர்களை உடனடியாக மாற்று வேலையில் அமர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுரைப் பல்கலைக் கழகத்தின் கீழ் ஒரு சட்டக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனனுடைய தொகுதியில் அம்மணியில், 38,000 ஜனத் தொகையுள்ள இடத்தில் ஒரு தனியார் உயர்நிலைப்பள்ளிதான் இருக் கிறது. ஒரு ஆரம்பப் பாடசாலை மத்தியதர பாடசாலையாக உயர்த்தப் பட்டது. அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் பள்ளிக் கட்டிடங்கள் எல்லாம் சீரழிந்த நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. பள்ளிக் கட்டிடங்களை நல்ல முறையில் கட்டித் தருவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**புலவர் க. முருகையன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே கல்வித்துறை நிதிக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசும் வாய்ப்பைப் பெற்றமைக்கு நன்றி உடையவனாக இருக்கிறேன். கல்வித்துறை மானியத்தை வரவேற்கும் முகத்தான் பல சொல்ல வேண்டு மென்று கருதினாலும் நேரம் இல்லாத காரணத்தினால் சுருக்கமாக பகல் 11-30
இரண்டொன்று சொல்ல விரும்புகிறேன்.

1967 தேர்தலுக்கு முன் இவர்கள் வந்தால் பள்ளிக் கூடங்கள் எல்லாம் மூடப்படும் என்று பரவலாகப் பேசப்பட்டது. பதினைந்து கோடி, 66 கோடிச் செலவுக்குத்தான் இப்போது வந்திருக்கிறது. பலன் கிடைக்கிறதா என்ற கேள்விகள் பரப்பப்படுகின்றன. நிச்சயமாகப் பலன் தருகிறதென்பதை நாளாவட்டத்தில் நாம் கண்டுவருகிறோம்.

[புலவர் க. முருகையன்] [1969 மார்ச் 12

இன்று நான் முக்கியமாக இரண்டு பிரச்னைகளை எடுத்துச் சொல்லக் கருதுகிறேன். நான் ஒரு தமிழாசிரியர் என்ற முறையில் இன்று தமிழாசிரியர்களுக்கு இருக்கக்கூடிய குறைகளைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். தமிழுக்காக வாழுகிற சர்க்கார் ஆட்சியில் இருந்தும், தமிழ் மொழி முதல் மொழியாக ஆக்கப்படும் என்கிற நிலையை அரசு மேற்கொண்டு இருப்பினும் பல்வேறு பயிற்சிப் பள்ளிகளில் எல்லாம் இன்றைக்குத் தமிழாசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டிய இடங்கள் கொடுக்கப்படவில்லை. பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் இது பற்றிய முறைப்பாட்டை கல்வித் துறைக்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. ஒரு தமிழாசிரியரை நியமிக்க வேண்டிய இடத்தில் வேறு ஓர் ஆசிரியரை நியமித்து நியாயமாக தமிழுக்குச் செய்ய வேண்டிய கடமையினை செய்யாமல் இருக்கிறது. பல மாவட்டங்களில் இருக்கிற இந்த நிலைமையைக் கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

இன்னொன்று. இரண்டாந்தர தமிழாசிரியர்களுடைய நிலைமை. 1948-லே ஒருவர் தமிழாசிரியராக இருந்து 1-1-1948-இல் கொடுக்கப்பட்ட உத்தரவுப்படி 64-4-120 கிரேடில் இருந்தால் அவரை முதல் நிலை தமிழாசிரியராக நியமிக்கலாம் என்ற உத்தரவு இருக்கிறது. அதன்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்; 1956-லேயே. 1960-லே போடப்பட்ட உத்தரவும் 60-4-120-லே வேலை செய்கின்றவர்கள் முதல் நிலை தமிழாசிரியர்களாக நியமிக்கப்படலாம், என்றே இருக்கிறது. அதன் அடிப்படையில் 140 அடிப்படைச் சம்பளம் என்ற நிலையில் அவர்கள் வேலை செய்து வந்தார்கள். ஆனால் 1967-லே போடப்பட்ட உத்திரவுப்படி சிலர் மறுபடியும் இரண்டாம் நிலை தமிழாசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற காரணம்—அவர்கள் ஆசிரியர் பயிற்சி பெறாதவர்கள் என்பதாகும். ஆசிரியர் பயிற்சி என்று இல்லாவிட்டாலும் 64-4-120 கிரேடில் இருந்தவர்களை முதல் நிலை தமிழாசிரியர்களாகப் போடலாம் என்பதுதான் முன் இருந்த உத்தரவு. அதன்படிதான் அவர்கள் முதல் நிலை தமிழாசிரியர்களாக நியமிக்கப்பட்டார்கள். அப்படி நியமிக்கப்பட்டு வேலை செய்து கொண்டு வந்தவர்களை இப்படி இரண்டாம் நிலைக்கு மாற்றுவது என்பது பெரும் அநியாயமாக இருக்கிறது. அது சம்பந்தப்பட்ட பேப்பர் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்துவிட்டது என்று நினைக்கிறேன். இதை அரசாங்கமும் நன்கு உணரும். இத்தகைய அநீதி ஏற்படாதவாறு உடனடியாகத் தடுக்க வேண்டும். இவர்கள் திருத்தாவிட்டாலும் வழக்கு மன்றத்திற்குச் சென்றால் இந்த நிலை நிற்காது என்பதையும் உணர்வார்கள். இப்படிப்பட்ட தாங்க முடியாத கொடுமைகளுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஐந்தாறுபேர்கள் உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே இதை உடனே கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று விழைகிறேன்.

அடுத்து, இந்திப் பள்ளிகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரையில் நமது அமைச்சரவை திட்டவட்டமாக இந்த தமிழகத்தில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் போதும். இந்தி வேண்டாமென்று சொல்லிவிட்டது. இப்படிச் சொல்வதற்கு அண்ணா அவர்களுடைய தனிப்பட்ட எண்ணமோ, அண்ணாவின் தலைமையில் இயங்குகின்றவர்களுடைய தனிப்பட்ட எண்ணமோ அல்ல, தமிழகத்தில் உள்ள மக்களது ஒருமித்த எண்ணமாகும். 1965-இல் மிகப் பெரிய போராட்டம் நடந்தது. மாணவர்கள் தங்கள் உயிரைப் பணயமாக வைத்து நடத்தியிருக்கிறார்கள். அதைத் தமிழகம் உணர்ந்த பிறகுதான் இனி இங்கே இந்திக்கு இடமில்லை என்று அறிவித்தோம். அதற்குப் பிறகு மாணவர்கள் நிம்மதியாக இருக்க வேண்டும். மக்கள் வாழ்வில் சலசலப்பு இருக்கக் கூடாது. என்கிற எண்ணமின்றி மத்திய அரசு இங்கே இந்திப் பள்ளிக் கூடங்களை உண்டாக்க முனைகிறது. இது ஏதாவது பலன் தருமா? 300-க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கள் உயிரை இந்தி கூடாது என்பதற்காக தியாகம் செய்திருக்கிற போராட்டம் இன்னும் நமக்கு மறக்கவில்லை. மாணவர்கள் மத்தியில் மீண்டும் இதுபற்றி சலசலப்பு உண்டாகிறது. ஏறக்குறைய 30 ஆண்டு காலமாக இந்தி கூடாது என்பதற்காகப் போராடிய அரசு இன்றைக்குப் பதவியில் இருக்கிறது.



1969 மார்ச் 12] [புலவர் க. முருகையன்]

எல்லா அரசியல் தலைவர்களும் இந்தி வேண்டாம் என்றுசொல்கிறார்கள். இந்த நிலை புரிந்தும் இந்திப் பள்ளிகளை இங்கே துவக்க முன் வருகிறார்கள் என்றால் அதன் அடிப்படைப் பொருள் என்ன? சென்னை மாநிலத்தில் இங்கே கூட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகிறார்கள், சட்டம் இல்லை, ஒழுங்கு இல்லை, நிம்மதியான ஆட்சி நடக்கக்கூடாது. என்பதாக. சட்டம், ஒழுங்கு, நிம்மதி இல்லாத நிகழ்ச்சிகள் ஆந்திரத்திலும், மைசூரிலும், மகாராட்டிரத்திலும் நடப்பது அவர்களுக்குத் தெரியாது. காதில் விழாது. ஒருவர் கூட உயிர் விடும் நிலை இல்லாத இந்த மாநிலத்தில் சட்டம் இல்லை, ஒழுங்கு இல்லை என்று பேசுகிறார்கள் என்றால் நிலைமை அப்படி இல்லை. அவர்கள் உள்ளம் எதை விரும்புகிறதோ அதைச் சொல்கிறார்கள். அந்த நிலை ஏற்பட்டு—இந்த அரசு கவிழாதா என்கிற நப்பாசை.

அதனால்தான் கேட்கிறார்கள். அவர்கள் அப்படி இங்கே ஏற்படுத்தினால் அதற்கு என்ன ஆ சேபனை என்பதாக இந்திமீது இவர்களுக்கு வந்திருக்கிறது ஆர்வம் அல்ல. இந்தச் சர்க்காரை கவிழ்க்க இது ஒரு வழியாக அமையாதா என்கிற நப்பாசை. இப்போது நான் சொல்லிக்கொள்வது எல்லாம், சொல்ல நினைப்பது எல்லாம் இந்த வகையில் இந்தி தமிழகத்தில் காலெடுத்து வைக்க மாணவர்கள் அனுமதிக்கமாட்டார்கள். நிச்சயமாக மாநில ஆட்சி நிம்மதியாக நடக்க வேண்டுமென்றால் மத்திய அரசு இந்த எண்ணத்தைக் கைவிட வேண்டும். தமிழர்கள் அனுமதிக்கமாட்டார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இந்த நாட்டின் வாழ்வை நினைத்தாகிலும் வீணான இந்தி ஆசையைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லி பேச அனுமதி அளித்ததற்கு நன்றி கூறிமுடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியத்தின் பேரிலே பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக் கொண்டு சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்வித்துறையில் ஒரு பெரிய சீர்திருத்தம் வேண்டுமென்பது எல்லோருடைய விருப்பம். நல்ல தரமான கல்வியை ஆரம்பத்தில் இருந்தே தரவேண்டுமென்பது விருப்பம். காரணம் கல்வி அறிவைப் பெறுவது தம் வாழ்வைச் சரியான பாதையில் நடத்திச் செல்லப் பயன்பட வேண்டும். வாழ்க்கைக்குப் பயன் அளிக்கக்கூடிய முறையில் கல்வித் திட்டம் அமைய வேண்டும். அத்தகைய முறையில் நமது கல்வி இல்லை என்பதே இப்போதுள்ள சூழ்நிலை. இன்றைக்கு நாம் ஆரம்பக் கல்வியை எடுத்துக் கொண்டாலும்—பி.யு.சி. வரை இலவசக் கல்வி அளித்திருக்கிறோம். அதே நேரத்தில் ஆரம்பக் கல்வியை பல பேர்களுடைய குழந்தைகள் கான்வென்ட் ஸ்கூல் என்ற முறையில் தனிப்பட்ட பள்ளிகளில் படிப்பதைப் பார்க்கிறோம். ஆக, இலவசக் கல்விச் சாலைகள், வசதியுள்ளவர்கள் பணம் கட்டிப்படிக்கிற கல்விச் சாலைகள் என்று இரண்டு வகை வந்துவிட்டன. இதன் காரணமாக இலவசக்கல்விச் சாலையில் சரியான முறையில் பாடத் திட்டம் நடத்தப்படுவதில்லை. கல்வித் தேர்ச்சி மிகவும் குறைவாக இருக்கிறது. இந்த இரண்டுவிதமான அமைப்பு சமூகத்தில் ஏன் இருக்க வேண்டும்? வசதி உள்ளவர்களுக்கு ஒரு கல்வி, வசதியற்றவர்களுக்கு ஒரு கல்வி என்கிற நிலை எதற்காக வேண்டும்? ஆகவே இதைப் போக்கி—இலவசக் கல்வி என்றால் —எல்லோருக்கும் என்கிற நிலையில் ஒரேவிதமான கல்வித் திட்ட அமைப்புபாடமுறைகளை வகுக்க அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஆசிரியர்கள் மிகவும் ஏழ்மை நிலையிலேயே இருந்து வருகிறார்கள். 150 ரூபாய் சம்பளத்திற்குள்—விலைவாசி நிலை உயர்ந்திருக்கிற இந்தக் காலத்தில் அவர்கள் வாழவேண்டியதாக இருக்கிறது. இந்தக் கொடுமையைச் சரிக்கட்ட மாணவர்களை வீட்டில் வைத்து ட்யூஷன் சொல்லிக்கொடுத்து, ஏதாவது வருமானம் செய்து கொள்ள வேண்டிய சூழ்நிலை இன்னமும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட நிலைமையை மாற்றி ஆசிரியர்களைச் சீராக வைக்கக்கூடிய முறையில் பொருளா

தாரத் துறையிலேயும் கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்கு
வாழ்க்கை வசதி அளிக்கவில்லையென்று சொன்னால் கல்வித் துறையும்
அப்படித்தான் இருக்கும். எனவே, அந்தவகையில் அரசாங்கம் கவனம்
செலுத்தி பொருளாதாரத் துறையிலும் அவர்களை ஊக்குவிப்பதற்கு
சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரி வரை படிக்க வைக்கிறோம். அதற்குப் பிறபாடு என்ன
தொழில் செய்வது? அரசாங்கத்தை நம்பித்தான் இருக்கவேண்டும்.
அரசாங்க உத்தியோகத்திற்காக அப்ளை பண்ணவேண்டும். அதுதான் இப்
பொழுது உள்ள நிலை. கல்வியறிவைக் கொண்டு தொழில்களில் ஈடு
படக்கூடிய நிலைமையில் கல்வி இன்றைய தினம் கிடையாது. அரசாங்
கத்தை நம்பி உத்தியோகத்தைப் பெறக்கூடிய நிலைமையை வைத்துக்
கொண்டால் அதனால் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. எனவே
தொழிற்கல்வியை அதிகப்படுத்தி எந்தத் துறையிலே அவர்கள் பயிற்சி
யுள்ளவர்களாக இருக்கிறார்களோ அந்தத் துறையிலே ஈடுபடுவதற்கான
நிலைமை வரக்கூடிய வகையில் கல்வித் துறையை உண்டாக்கி தொழில்
களிலே ஈடுபடக்கூடிய வாய்ப்புக்களை அளிக்கின்ற நிலைமையை உரு
வாக்கினால்தான் இந்தப் பிரச்னை தீரும்.

இப்பொழுது மருத்துவக் கல்லூரியை எடுத்துக் கொண்டால் இருப்பது
1,500 இடங்கள்தான். அதற்கு 5 ஆயிரம் பேர்கள் விண்ணப்பம் போடு
கிறார்கள். ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு 400 இடங்கள்தான் இருந்தாலும்
3 ஆயிரம் பேர்கள் போடுகிறார்கள். இப்படி எந்தத் துறையை எடுத்துக்
கொண்டாலும் பயிற்சி அளிக்கப்படுகிற இடங்களில் எல்லாம் அதிகப்
படியாக விண்ணப்பங்கள் போடுவதால் இடம் கிடைப்பதில்லை. இடம்
கிடைக்காதவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள், எப்படி வாழ்
கிறார்கள் எந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது பற்றி ஆலோ
சிப்பது இல்லை. இருக்கிற நிலைமையிலே அவர்களுக்கு என்ன செய்து
கொடுக்கமுடியும் என்ற முறையில்தான் செய்கிறோம். அவர்கள் எந்தத்
துறையிலே ஈடுபடவேண்டுமென்று விரும்புகிறார்களோ அந்தத் துறையிலே
அவர்களை ஈடுபடுத்தக்கூடிய சூழ்நிலை உருவாகவில்லை. இந்த நிலை இருக்
கிறபோது உள்ளபடியே கல்வியினால் உண்டான திறன் சமூகத்திற்குப்
பிரயோஜனம் இல்லாமல் போய்விடும்.

எஞ்சினியரிங் தொழிலை எடுத்துக் கொண்டால் ஆயிரம் பேர்கள்வரை
வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களை எந்தத் துறையில் ஈடுபடுத்து
வது என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட நிலைமை இருப்பதன் மூலம்
கல்வியின் நிலையிலே மாறுதல் வந்துவிடும் என்று சொல்லிவிட முடியாது.
இந்தப் பிரச்னையெல்லாம் சமுதாய அமைப்பிலே மக்கள் மத்தியிலே,
கல்வியறிவை பயன்படுத்துகின்ற அளவுக்கு எந்த எந்தத் துறைகளிலே
பயிற்சி உள்ளவர்களாக இருக்கிறார்களோ அவர்களை அந்த அந்தத்
துறைகளிலே சேர்த்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு கல்வி இலாகா
முனைந்து செயல்பட்டால்தான் இந்த பிரச்னைக்கு பரிகாரம் காண முடியும்.
இப்பொழுது மொத்தத்தில் கல்வி இலாகாவுக்கு 25 சதவீதம் ஒதுக்கி
யிருக்கிறோம்.

கல்லூரிகளிலும், ஹைஸ்கூல்களிலும் லேபரட்டரிகள் கூட இல்லாமல்
இயங்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்றால் அந்த ஆண்டுகளிலே
பயிற்சி மாணவர்களுக்கு குறைவாகத்தான் கிடைக்கும். எனவே, அந்த
நிலைமையை மாற்றி லேபரட்டரிகளை அதிகப்படுத்தி அந்தக் குறையை
நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, தமிழாசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள்
ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே சேருவதற்கு இடம் கிடைக்கவில்லை.
அதற்கு விண்ணப்பம் போடவேண்டுமென்றால் 23 வயதாகியிருந்தால்
அதாவது அதற்கு மேல் போனால் எடுத்துக் கொள்ள முடியாது என்று
சொல்லி விடுகிறார்கள். ஹைஸ்கூல்களிலே தமிழாசிரியர்களாக நியமிக்கப்
பட வேண்டுமென்றால் கூட 3 மாதம் அன்ட்ரெயண்டு ஆக வேலை செய்திருந்
தால்தான் பயிற்சிப் பள்ளியில் படிக்க இடம் கிடைக்கக் கூடிய சூழ்நிலை





இருக்கிறது. டிரெய்ண்டுக்குத்தான் வேலை கொடுக்க முடியும். அன்
ட்ரெயின்டுக்கு வேலை கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள்.
பயிற்சிப் பள்ளி ஆசிரியர் வேலைக்கு படிக்காதவர்களுக்குக் (தமிழ்
ஆசிரியர்களுக்கு) காலியுள்ள ஸ்தானங்களுக்கு போட முடியாது என்று
சொல்கிறார்கள். அவர்கள் மிகவும் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.
எனவே அன்ட்ரெயின்டு ஆக இருந்தாலும் பயிற்சி கொடுப்பதற்காக
இருக்கின்ற பள்ளிகளில் உடனடியாக பயிற்சி கொடுக்க வயதைக் காட்டி
மறுக்கப்படுவதை நிறுத்தி, பயிற்சியில் சேர்த்துக் கொள்ளுமாறு காலி
யுள்ள பள்ளிகளில் அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்க வேலைக்குக்கூட 25 வயதுக்கு மேற்பட்டால் விண்ணப்பம்
போடமுடியாத நிலைமை இருக்கிறது. அதற்குள் வேலை தேடி அப்ளி
கேஷன் போடும் வேலை கிடைக்காவிட்டால் அவர்கள் உத்தியோகம்
பெற முடியாத நிலைமை இருக்கிறது. எனவே அந்த முறையை மாற்ற
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி சம்பந்தமாக அவர்களுக்கு வீட்டுவசதி
செய்து கொடுக்காவிட்டாலும்கூட வீட்டு அலவன்ஸை அதிகப்படுத்திக்
கொடுக்க வேண்டும். பல இடங்களிலே அதிகப்படுத்திக் கொடுக்கவில்லை.
ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுடைய நிலையைப் பக்குவப்படுத்துவதற்கு
அந்த அந்த இடங்களிலே வீட்டு அலவன்ஸை அதிகப்படுத்திக் கொடுக்க
வேண்டும். கல்வித் துறையிலே பெரிய மாறுதல் உண்டாக்குவதற்கு
பிற்காலத்தில் அரசாங்க உத்தியோகத்தை நம்பியில்லாமல் இருப்பதற்
காகவும் அவர்கள் பிற தொழில்களிலே ஈடுபடுவதற்கும் இந்த அரசு
முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னு
டைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு
கல்வி மானியத்தின் மீது எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல
விரும்புகிறேன். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் கல்வியே
அடிப்படையாகும். அந்தக் கல்விக்கு இந்த அரசாங்கம் உதவி செய்ய
எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை எனக்கு முன்னால்
பேசிய உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியினர்
எங்களுடைய ஆட்சியில் தான் கல்விக்கு நிறையச் செய்திருக்கிறோம் என்
றெல்லாம் சொன்னார்கள். பத்து ஆண்டுகளுக்கு முன்னால் கல்விக்காக
செலவழிக்கப்பட்டிருப்பது 12·22 கோடி ரூபாய். இன்றைய தினம் இந்த
அரசு வந்ததற்குப் பிறகு கல்விக்காக அளிக்கப்பட்டது 65·39 கோடி
ரூபாய். அந்த அளவுக்கு எத்தனை மடங்கு உயர்ந்திருக்கிறது என்பதைப்
பார்க்க வேண்டும். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டார்கள்.
அந்தத் திட்டங்களிலே கல்விக்காக எந்த அளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது
என்று பார்த்தால் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 381 லட்ச ரூபாய்,
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,141 லட்ச ரூபாய், மூன்றாவது
ஐந்தாண்டுத் திட்டத்தில் 3,409 லட்ச ரூபாய் என்ற அளவிலே இருக்கிறது.
ஆனால் இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களையும் சேர்த்துப் பார்த்தால்
கூட அதைவிட அதிகமாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த
அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 5,317 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டு
இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம்பப் பள்ளி
ஆசிரியர்கள் 17,100 உயர்நிலைப்
ஆசிரியர்கள் 18,750-ம், இடைநிலைப்பள்ளி ஆசிரியர்கள் 45,850 ஆசிரியர்களுக்கு
பள்ளி ஆசிரியர்கள் 10,000-மும் ஆக மொத்தம் இருந்து வருகிறது. இந்த
வேலை வாய்ப்புக் கிடைக்கக் கூடிய நிலைமை வேலைவாய்ப்புக் கிடைக்கக் கூடிய திட்டத்
ஆண்டு 7,900 ஆசிரியர்களுக்கு இப்படிப் பல சாதனைகளை இந்த
தை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.
அரசு செய்து கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில் இன்னும் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு
கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சீப் எஜுகேஷனல் ஆபீஸர் என்று
போட்டு இருக்கிறார்கள். அவர்கள் எப்படிப் பணியாற்றுகிறார்கள் என்ப
தைக் கண்காணிக்க வேண்டும். என்னுடைய தொகுதியிலே கல்வ

தொகையானது, 1969-70 ஆண்டில் 65·39 கோடியாக உயர்த்தப்
டுள்ளது. நடப்பு ஆண்டை விட வருகிற ஆண்டுக்கு 644 லட்சம் அதிகமா
செலவழிக்கப்பட இருக்கிறது. மாநிலத்தின் மொத்த வருமான
தில் 23 சதவிகிதம் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.
நம்முடைய மாநிலம் காட்டுகிற முக்கியத்துவத்தை இது கல்வி

நம்முடைய மாநில சர்க்கார் எல்லா மாணவர்களுக்கும் எடுத்துக் காட்டுகிறது.
புக்கு இலவசக் கல்வி அளிக்க முன் வந்திருப்பதை புகுமுக வகு
பாராட்டுகிறேன். புகுமுக வகுப்புக்கு அதிக நெருக்கடி வரவேற்கிறேன்
நிலை இருப்பதால் அதிகக் கல்லூரிகளை ஏற்படுத்தியும், ஏற்படும் என்
கல்லூரிகளில் அதிக இடங்களை ஏற்படுத்தியும் விஸ்தரிக்க ஏற்கனவே உள்
கேட்டுக் கொள்கிறேன். மாணவர்களுடைய விடுதிகளுக்காகவும் வேண்டுமென்
அதிகத் தொகை ஒதுக்க வேண்டுமென்று பல உறுப்பினர்கள் அர
டார்கள். நானும் அதைப்பற்றி இங்கு வலியுறுத்துகிறேன். குறிப்பி
கல்லூரிகளை எடுத்துக் கொண்டால், மாணவர்களுக்குச் சரியான உதகை
இடையாது. வேறு மாவட்டங்களில் இருந்தும், கிராமப் பகுதிகளில் வி
தும் மாணவர்கள் வந்து இந்தக் கல்லூரிகளில் படிக்கிறார்கள். இரு
வசதி இல்லாததால் அவர்கள் வசதியாகத் தங்கிப் படிக்க முடியவில்லை
ஆகவே, மாணவர்களுக்கான விடுதி ஒன்றை வசதியாக உதகையில் அ
கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் குறிப்பிலே, ஹையர் கிரேடு ஆசிரியர்களை படிப்படியாக நிறுத்
விட்டு செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று காண
படுகிறது. அவ்வாறு செய்தால் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு வே
இல்லாத நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே, புதிதாகப் பயிற்சி கொடுக்கு
போது செகண்டரி கிரேடுக்கு மட்டும் பயிற்சி கொடுத்து, போகப் போ
செகண்டரி கிரேடு ஆசிரியர்களை நியமிக்கும் முயற்சியை மேற்கொண்டா
நல்லது. ஆகவே, இருக்கின்ற ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு வே
வாய்ப்பு அளித்த பிறகு செகண்டரி கிரேடு ஆசிரியர்களை நியமிக்க வேண்
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர் பெண்கள் பயிற்சிப் பள்ளி நம்முடைய மாநிலத்தில் நீலகி
மாவட்டத்தைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் இருக்கிற
கடந்த இரண்டு ஆண்டுகளாக நீலகிரி மாவட்ட சட்ட மன்ற உறுப்பின
களும், மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் இருந்தும், நீலகிரியிலே ஒ
பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஏற்படுத்த வேண்டுமென்று கோரி
கைகள் விடுத்தும், வலியுறுத்தியும் ஒருவிதமான பலனும் கிடைக்கவில்லை
நீலகிரி மாவட்டத்தில் இருந்து அதிகப் பெண்கள் ஆசிரியர் பயிற்சி பெ
முன் வருகிறார்கள். போதிய இடம் கிடைப்பதில்லை. புதிய பெண்க
ஆசிரியப் பயிற்சிப் பள்ளி நிறுவ முடியாவிட்டாலும் ஏற்கனவே உள்
ஆண்கள் பயிற்சி பள்ளியில் 160 பேர்களுக்கு இடம் இருப்பதை இரண்
டாகப் பிரித்து பெண்கள் பயிற்சிப் பள்ளிக்கு 80, ஆண்கள் பயிற்சிப்
பள்ளிக்கு 80 என்ற முறையில் ஏற்படுத்தினுலாவது நலமாக இருக்கும்.
அரசு உடனடியாக இதைச் செய்ய வேண்டுமென்று தாழ்மையோடு
கேட்டுக்கொள்கிறேன்.

செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தொடக்கப் பள்ளிகளில்
ஹையர் கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு
ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்குண்டான சம்பளந்தான் கொடுக்கப்படுகிறது.
இதை மாற்றி செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர்க
ளாகப் பணியாற்றினுலும் அவர்களுக்கு செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்
குண்டான சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்களைப்பற்றியும், கல்லூரிகளைப் பற்றியும் அதிகமாகப் பேசிக்
கொண்டிருக்கிறோமே தவிர, ஆசிரியர்களுக்குச் செய்யப்பட வேண்டிய
வசதிகள், காட்டப்பட வேண்டிய சலுகைகள் பற்றி அதிகமாகக் குறிப்பிட
வில்லை. எந்த தேசத்திலும், பெரிய உத்தியோகஸ்தராக இருந்தாலும்,
தலைவர்களாக இருந்தாலும் அவர்களை அந்த நிலைக்கு உயர்த்தக் கூடிய
பணிகளை இருக்கின்ற ஆசிரியர்களுடைய வாழ்க்கை மேம்பாடு அடை





முன்னேற்றம் அடைய வழிவகைகளைக் காணவேண்டும். அந்த ஏணிப் படியிலே பலரும் ஏறி முன்னேற்றம் அடைந்து விட்ட போதிலும் ஏணி இருக்கின்ற நிலையிலேயே இருக்கிறது. எனவே, சர்க்கார் ஆசிரியர்களுடைய குறைகளைப் போக்கி அவர்களுக்கு வேண்டிய சலுகைகளை எல்லாம் செய்து தரவேண்டும். ஏனைய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு எந்த விகிதத்தில் அடிப்படைச் சம்பளம், மற்ற அலவன்சுகள் எல்லாம் கொடுக்கப்படுகின்றனவோ அந்த ரீதியில் ஆசிரியர்கள் அனைவருக்கும் கொடுக்க வேண்டுமென்று சர்க்காரைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை வருடத்திற்கொரு முறை மாற்றுவதில் அதிக பாரபட்சம் நடந்து வருகின்றன. அதில் அதிகாரிகள் நல்ல முறையில் நண்பகல்
நியாயமான முறையில் நடந்துகொள்வதில்லை. ஆகவே இந்நிலையை 12-00
மாற்றியமைக்கவேண்டும். பஞ்சாயத்து ஒன்றியங்களில் உள்ள ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை மாற்றுவதற்கு ஒரு அட் ஹாக் கமிட்டி நியமித்திருப்பது போல் இதற்கும் ஒரு அட்ஹாக் கமிட்டி நியமித்து சர்க்கார் உத்தியோகஸ்தர்களையும், உத்தியோகப் பற்றற்றவர்களையும், அதில் உறுப்பினர்களாகப் போட்டு அதன் மூலம் மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்வதனுல் ஒரு பாரபட்சமற்ற நிலை ஏற்படும். அதோடு ஆசிரியர்களின் குறைகளும் விடுபட வசதியாக இருக்கும். நீலகிரி மாவட்ட உயர்நிலைப்பள்ளி அலுவலகத்திற்குச் செல்லவேண்டுமென்றுல் நாங்கள் கோவைக்குத்தான் செல்லவேண்டியிருக்கிறது. காரணம் நீலகிரி மாவட்டத்தை கோவை மாவட்டத்தோடு இணைத்து இருப்பதன் காரணமாக சீப் எஜுகேஷனல் ஆபீசர் அலுவலகம் கோவையில்தான் இருக்கிறது. ஆகவே கோவைக்குச் சென்றுதான் நாங்கள் காரியங்களைப் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே நீலகிரியைத் தனியாகப் பிரித்து அங்கு ஒரு சீப் எஜுகேஷனல் ஆபீசரை நியமித்து எங்களுக்கு அப்படி தனியாக ஒரு ஆபீசை திறந்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, இப்போது நம் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் என். சி. சி. நிறுவனம் தடைப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக மாணவர்களின் ஒழுக்கமும், ஆரோக்கியநிலையும் கெடுவதற்கு ஏதுவாகயிருக்கிறது. ஆகவே முன்பிருந்ததுபோல் சாரணர் அணியை விஸ்தரித்து எல்லாப் பள்ளிகளிலும் கல்லூரிகளிம் அதை விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வாய்ப்பினை தந்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது நான் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்தினை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம் பட்ஜெட்டில் போதுமான தொகை, கல்விக்காக 23 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, அதை வரவேற்கிறேன்.

அடுத்து, ஆரம்பப் பள்ளிகளிலிருந்து கல்லூரிகள் வரையில் ஜாதிகளின் பெயரால் பெயர்கள் வைக்கப்பட்டு இருக்கும் முறையை மாற்றுவதற்கு அரசு முயற்சிக்கவேண்டும். அப்படி ஜாதியின் பெயரைமாற்றவில்லையென்று சொன்னுல் அவர்களுக்கு நாம் கொடுக்கக்கூடிய மானியத்தை பேர் பாதிக்கு குறைப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். கல்லூரிகள் அல்லது பள்ளிகளுக்கு ஜாதியின் பெயர்களை வைத்திருப்பது மாணவர்கள் மத்தியில் ஜாதி உணர்வை போக்க வேண்டுமென்று நினைக்கக்கூடிய காலத்தில் இது ஜாதி உணர்வை ஊட்டக்கூடிய முறையில் இருக்கிறது. ஆகவே, இந்த அரசு கண்டிப்பாக ஜாதிகளின் பெயர்களை நீக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். அப்படி ஜாதிப் பெயரை நீக்குவதற்கு தனியார் துறையினர் விரும்பவில்லை என்று சொன்னுல் அவர்களுக்கு கொடுக்கக்கூடிய மானியத்தைக் குறைக்கவேண்டும், இல்லையென்றுல் 50 சதவிகிதமாவது மானியத்தைக் குறைத்துக் கொடுக்க வேண்டும்.

அடுத்து, ஆசிரியர்கள் நியமனம் சம்பந்தமாக தனியார்த்துறை பள்ளிகளானுலும்சரி அல்லது பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளானுலும் சரி தங்களுக்கு வேண்டியவர்களை, தங்கள் சொந்தக்காரர்களை அல்லது

[திரு. ந. வீராசாமி] [1969 மார்ச் 12

என்னுடைய [illegible] ஒரு [illegible] [illegible] தீவிரத்து
[illegible] பள்ளி பற்றி [illegible]. அங்கே [illegible] ஆபீஸர்,
வேலூரில் இருக்கிறார். [illegible]
[illegible], ஒரு அதிகாரி [illegible] [illegible]றுகக்
என்று [illegible]. [illegible] இப்பேயே
[illegible] ஆபீஸருப்
[illegible]. 30 [illegible] 20 [illegible] [illegible] சொல்லி
[illegible] இருக்கிறார்கள். [illegible] செய்து
என்னுடைய [illegible] [illegible].

என். சி. சி. இருக்கும். இந்தியாவிலே [illegible]
அந்த என். சி. சி. [illegible] தமிழ்நாடு கேடட் [illegible] இங்கே பயிற்சி
[illegible] [illegible] கொள்
[illegible].

தமிழகத்திலே [illegible] [illegible] இருக்கிற [illegible]
[illegible]. 1921-ஆம் ஆண்டிலிருந்து அது [illegible] [illegible]
நடந்துகொண்டிருக்கிறது. அதை [illegible] போல 20 ஆண்டுகளுக்கு ஒரு
முறை புதுப்பிக்க வேண்டுமென்று இருந்ததை இப்பொழுது மூன்று
ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்.
அப்படிச் செய்தால் [illegible] [illegible] [illegible] [illegible]
வேண்டும்.

அடுத்தபடியாக, இதுவரை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு
வரப்படாமல் இருந்த கமர்ஷியல் பயிற்சிபற்றி சில கருத்துக்களை நான்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பதினைந்து ஆண்டு காலம் ஆக
எனக்கு அதில் பயிற்சி உண்டு. அதிலே எனக்கு அனுபவம் உண்டு.
அதையொட்டி நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.
சாதாரணமாக ஒரு கமர்ஷியல் இன்ஸ்டிடியூட்டை ஆரம்பிப்பது என்றால்
எங்கு வேண்டுமானாலும் ஆரோக்கியமான இடத்தில் ஆரம்பிக்கலாம்;
ஒரு வீதியிலே எத்தனை வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம், ஒரு தெருவிலே
எத்தனை வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம் என்ற நிலை இருக்கிறது.
இந்த இலாகாவிலே, செகரட்டரி [illegible] [illegible] [illegible] [illegible]
எக்ஸாமினேஷன்ஸ் என்பவரோடு கூட தற்போது ஒரு அடிஷனல் செக
ரட்டரியைப் போட்டிருக்கிறார்கள். இந்தத் துறை நல்ல முறையில் செயலாற்ற
வேண்டுமெனபதற்காகப் போட்டிருக்கிறார்கள். ஆனால், முன்பு இருந்ததை
விடத் திறமைக் குறைவுதான் அந்த இலாகாவிலே உருவாகியிருக்கிறது
அந்த அதிகாரிக்கு டைப்ரைட்டிங் ஷார்ட்ஹாண்ட் என்றால் என்ன என்றே
தெரியாது. அப்பேர்ப்பட்டவர் இருப்பதால் எந்தவிதமான பணியும் ஒழுங்
காக நடைபெறவில்லை.

உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். ஒரு இன்ஸ்டிடியூட் ஆரம்பிப்
பதற்காக ஒருவர் விண்ணப்பம் போட்டார். புதிதாக அந்த அதிகாரிக்கு
இதைப் பற்றியெல்லாம் ஒன்றும் தெரியாத காரணத்தால், புதிதாக
ஆரம்பிக்கப்பட்டிருக்கிற அந்த இன்ஸ்டிடியூட்டுக்கும் அந்தப் பகுதியிலே
உள்ள மற்ற இன்ஸ்டிடியூட்டுகளுக்கும் இடையே 200 கஜ தூரம் இருக்
கிறதா என்று கேட்டு பதில் அனுப்பினார். அப்படிப்பட்ட ஒரு விதி இருக்
கிறதா என்றால், இல்லை. அரசாங்கத்தின் கவனத்திற்காகச் சொல்லு
கிறேன். தியாகராய நகரிலே ஸ்ரீ ராமகிருஷ்ணா இன்ஸ்டிடியூட் என்று
ஒரு இன்ஸ்டிடியூட் இருக்கிறது. அங்கேயே ராபின் ஷார்ட்ஹாண்ட்
இன்ஸ்டிடியூட் என்றும் ஒன்று இருக்கிறது. அந்த இரண்டும் ஒரே
வீட்டிலேயே அமைந்திருக்கிறது. இந்த நிலையில் ஒரு டிவிஷனுக்கு
அப்பால், தெருவுக்கு அப்பால், ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்கு அப்பால் ஒரு
இன்ஸ்டிடியூட் ஆரம்பிக்கும் போது 200 கஜ தூரம் இருக்கிறதா என்ற
கேள்வி கேட்டு அந்த இன்ஸ்டிடியூட்டை நடத்த முடியாத அளவுக்கு
இலாகாவினர் தொந்தரவு கொடுத்தார்கள். அதைப்பற்றி அமைச்சர்
அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்த பிறகு அங்கீகரித்தார்கள்.



1969 மார்ச் 12] [திரு. ந. வீராசாமி]

இந்தத் தேர்வுகளை நடத்துவதிலே உள்ள முறைகேடுகளையும், தவறு
களையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதிலே, ஆண்டு ஒன்றுக்கு
40,000 க்கு மேற்பட்ட மாணவர்கள் பயிற்சி பெற்று தேர்வு எழுதுகிறார்
கள். இந்தச் சட்டமன்ற நடவடிக்கைகளின் குறிப்புகள் எல்லாம் இன்று
எடுக்கப்படுகின்றது என்றால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு தட்டெழுத்தின்
மூலமாகத் தரப்படுகிறது. அப்பேர்ப்பட்ட தேர்வுக்கு எந்த அளவு கவனம்
செலுத்த வேண்டும்? கடந்த 20 ஆண்டுகளாகவே இந்தத் துறையிலே
எந்தவித கவனமும் செலுத்தப்படவில்லை என்பதைப் பொதுவான குற்றச்
சாட்டாகக் கூறுகிறேன். ஷார்ட்ஹாண்ட் டைப்ரைட்டிங் என்றால் வேடிக்
கையாகக் கற்றுக் கொள்வது என்று நினைக்கிறார்கள். இந்தத்
தேர்விலே முழுக் கவனத்தையும் செலுத்தினால் தான் தேர்ச்சி, திறமை
பெற முடியும். தேர்வு எழுதும் பத்து நிமிடங்களிலே ஒரு நிமிடத்தை
வீணாக்கிவிட்டால்கூட தேர்ச்சி பெற முடியாது. அப்பேர்ப்பட்ட தேர்வை
நடத்துவதற்கு யார் யார் தேர்வாளராக நியமிக்கப்படுகிறார்கள்? அனுப
வம் இல்லாதவர்கள் ஷார்ட்ஹாண்ட் டிக்டேஷன் கொடுக்கக்கூடிய நிலை
இருக்கிறது. 80 வார்த்தை, 100 வார்த்தை, 120 வார்த்தை என்று
சீராக டிக்டேஷனைப் படிப்பது என்பது பயிற்சி பெற்றவர்களாலும்,
அனுபவம் பெற்றவர்களாலுமே முடியக் கூடிய ஒன்றாகும். ஆனால்
இப்போது டிக்டேஷன் படிப்பதற்கு இலாகாவிலே பணியாற்றுகிறவர்கள்
டிக்டேஷன் படிப்பதற்காக நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் படிக்க
ஆரம்பித்து 10 நிமிடத்தில் படிக்க வேண்டியதை 9 நிமிடத்திலேயே
முடித்துவிடுகிறார்கள், சிலர் 11 நிமிடம் படிக்கிறார்கள். இதனால் மாண
வர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இவர்கள் சீராகப் படிக்காத
காரணத்தாலே மாணவர்கள் தேர்வு பெறுவது கடினமாகிறது. அதோடு
நம்முடைய தமிழ் நாட்டிலே உள்ள ப்ரொனவுன்சியேஷனுக்கும் கேரள
நாட்டிலிருந்து வந்திருப்பவர்களுடைய ப்ரொனவுன்சியேஷனுக்கும் வித்தி
யாசம் இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் டிக்டேஷனைப் படிக்கிறபோது
"அக்கேஷன்" (occasion) என்பதை "ஒக்கேஷன்" என்று படிக்
கிறார்கள். இந்தத் தகராறு வேறு. இப்படிப்பட்ட தொல்லைகள் நிரம்ப
இருக்கின்றன. ஆகவே, வர்த்தகப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரி
யர்களை, மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து வருகிறவர்களை டிக்டேஷ
னுக்காக நியமித்தால் நல்ல முறையில் நடக்க முடியும் என்று தெரிவித்
துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இப்போது இந்த இலாகாவிலே வேலை அதிகமாக
இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஒரு ஆண்டு தேர்வு எழுதி தேர்ச்சி
பெற்ற பிறகு அடுத்த ஆண்டு வரை சர்டிபிகேட் வருவதில்லை. 1969-ல்
தேர்வு எழுதினால் 1970 வரை சர்டிபிகேட் வருவதில்லை. தேர்ச்சி பெற்று
ஓராண்டு வரை சர்டிபிகேட் வரவில்லை என்று சொன்னால் மாணவர்கள்
எப்படி வேலைக்கு முயற்சி செய்வது? கெசட்டை எடுத்துக் கொண்டு
போனால் எல்லோரும் ஏற்றுக் கொள்ளுவதில்லை, சர்டிபிகேட்டைக் காட்டு
என்று கூறுகிறார்கள். ஆகவே, சர்டிபிகேட்டை உடனடியாகக் கொடுக்க
நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த இலாகாவில் இருந்து காமர்ஸ் பிரிவை டைரக்டர் ஆப் டெக்னிகல்
எஜுகேஷனுக்கு மாற்றப் போவதாகக் கேள்விப்பட்டேன். அதுபற்றி இது
வரையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.
எல்லா எஜுகேஷனையும் ஒரே இடத்தில் வைத்துக்கொண்டு பார்ப்பதற்கு
ஆள் இல்லை என்று சொல்லும் நிலையை மாற்றி இதை டைரக்டர் ஆப்
டெக்னிகல் எஜுகேஷனுக்கு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.
அங்கே ஒரு கமர்ஷியல் செக்ஷன் நடப்பதை பத்து நாட்களுக்கு முன்னால்
பார்த்தேன். அது சிறந்த முறையில் நடக்கிறது. அந்த வகையில்
இந்த இலாகாவிலே விஷயம் தெரிந்தவர்களைப் போடுவதன் மூலமாகத்
தான் இது திறம்படச் செயலாற்ற முடியும் என்று தெரிவித்துக்கொண்டு
என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

***திரு. கே. போஜன் :** தலைவர் அவர்களே, கல்வி மீதான மானியக்
கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகி
றேன். 1959–60ம் ஆண்டில் 15·15 கோடியாக இருந்த இந்த மானியத்

தங்களுக்கு வேண்டியவர்களை, தங்கள் சொந்தக்காரர்களை அல்லது தங்க ளுக்கு சலுகைகள் கிடைக்கக்கூடிய முறையில் அவர்கள் நியமனம் செய் கிருர்கள். பத்தாண்டுகளுக்கு முன்னராக தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலை கிடைக்காமல் இருக்கும்போது சிலருக்கு படித்தவுடன் வேலை கிடைக்கிறது. அதிலும் குறிப்பாக ஹரிஜன ஆசிரியர்களுக்கு கட்டாயமாக வேலை கிடைப்பதில்லை என்ற நிலை இருக்கிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளானாலும் சரி அல்லது தனியார் துறை பள்ளிகளானாலும் சரி ஆசிரியர் நியமனம் சம்பந்தமாக மாவட்ட அளவில் தேர்ச்சி பெற்றுள்ளவர்களின் ஒரு லிஸ்டைப் போட்டு அதன் அடிப்படையில், அந்த ஸீனியாரிட்டி அடிப்படையில் ஆசிரியர்களை நியமிக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டை செய்வது பற்றி அரசு யோசனை செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை நியமிக்கும்போது பெண் ஆசிரியர்களுக்கு அதிகபடியான முக்கியத்துவம் கொடுத்து அவர்களை நியமித்தால் ஆரம்ப வகுப்புகளில் உள்ள குழந்தைகள் நல்ல முறையில் கல்வி கற்க அது வசதியாகயிருக்கும்.

அடுத்து, ஆரம்பப் பள்ளி ஆரம்பிக்கும்போது ஒரு மைல் கண்டிஷன் இருக்கவேண்டும் என்று கல்வி இலாகா ஒரு ஜி. ஓ. அனுப்பியிருக் கிருர்கள். ஒரு மைல் என்று சொல்லும்போது நகரத்தில் அது கஷ்டமாகயிராது. நகரங்களில் பத்து அல்லது இருபது கஜத் தூரத்தில் பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் கிராமங்களைப் பொறுத்தவரையில் இந்த ஒருமைல் கண்டிஷன் அவ்வளவு பொருத்தமாகயில்லை. 300 ஜனத்தொகை என்று இருப்பதை வைத்துக்கொள்ளலாம். கிராமங்களில் போக்குவரத்து வசதிகள் கிடையாது. சின்னக் குழந்தைகள், ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் மழைக்காலங்களில் ஒரு மைல் தூரம் பள்ளிகளுக்கு நடந்து போகமுடியாத நிலையில் அவர்களின் பள்ளிப் படிப்பு கெட்டு விடுகிறது. காரணம், நடுவில் ஆறு, ஓடை போன்றவைகளைக் கடக்கவேண்டிய நிலை இருக்கிறது.

அடுத்து, எங்கள் தாலுகாவில் பஞ்சாயத்து யூனியனுல் திறக்கப் பட்ட ஒரு பத்து பள்ளிகளுக்கு அங்கீகாரம் கிடைக்காமல் மாணவர்கள் ஐந்து வரைப் படித்து விட்டு மேலும் படிக்க முடியாதொரு நிலை இருக்கிறது, ரிக்கார்ட் ஷீட்ஸ் வாங்க முடியவில்லை. ஆக, இந்த ஒரு மைல் கண்டிஷன் என்பது நீக்கப்படவேண்டும், 300 ஜனத்தொகை என்ற அடிப்படையில் போதுமான குழந்தைகள் இருந்தால் பக்கத்து மானேஜ்மென்டை பாதிந்தாலும் சரி அல்லது யாரைப் பாதித்தாலும் சரி பள்ளிகள் திறப்பதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும்.

அடுத்து, ஆசிரியர்களை நியமிக்கும் கோட்டா முறை. ஆரம்பப் பள்ளிகளில் ஒரு வருடத்திற்கு பத்து பதினைந்து குழைந்தைகள் வீதம் அதிகரித்திருந்தாலும் கூடுதல் ஆசிரியர் நியமிக்கப்படுவதில்லை. அவர்கள் சொல்லக் கூடிய கண்டிஷன், ஒரே வருடத்தில் ஒரு ஆசிரியருக்குள்ள குழந்தைகளை சேர்த்திருந்தால்தான் இந்த வருடக் கோட்டா ஒதுக்க முடியும் என்று சொல்கிருர்கள். ஆக, வருடாவருடம் பத்து பதினைந்து குழந்தைகள் என்று அதிகப்படியாக சேர்ந்திருந்தாலும் இரண்டு ஆசிரியர்கள் உள்ள பள்ளியில் நூறு குழந்தைகள் இருந்தாலும் மேற் கொண்டு ஆசிரியர் நியமிப்பதற்கு அனுமதி கிடைப்பதில்லை. ஆகவே அதிகப்படி ஒரு ஆசிரியருக்கும் போதுமான குழந்தைகள் சேர்க்கப் பட்டிருந்தால் இன்னொரு ஆசிரியரை நியமிக்கும் முறையில் விதிகளை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மத்திய உணவுத் திட்டம் பற்றி அனைவருக்கும் தெரியும், அதிகாரிகளுக்கும் தெரியும். ஆறு பைசா சர்க்கார் கொடுத்தால் பொது மக்களிடமிருந்தோ அல்லது பஞ்சாயத்துக்கள் நன்கொடை பெற்ருேர் தலைக்கு பத்து பைசா அளவிற்கு மதிய உணவு போடவேண்டுமென்று சொல்கிருர்கள். எனக்குத் தெரிந்த மட்டில் பலயிடங்களில் ஆசிரியர்கள் முதற்கொண்டு குழந்தைகள் வரையில் பொய் சொல்லி, ஆசிரியர்கள் பொய் கணக்கு எழுதிவருகிருர்கள். நான்கு பைசா வீதம் நன்கொடை



பெற்றுக் கொண்டு விட்டதாக கணக்கு எழுதி வைத்து விடுகிருர்கள். ஆகவே, ஒன்று அரசாங்கமே தலைக்கு பத்து பைசா என்றுகொடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும் அல்லது அவர்கள் கொடுக்கிற கணக்கை அப்படியே எழுத அனுமதிக்க வேண்டும்.

அடுத்து, உயர்நிலைப் பள்ளிகள். உயர் நிலைப் பள்ளி என்பதில் 9, 10, 11 வகுப்புகள் மட்டும் இருப்பதற்குப் பதிலாக ஆருவது வகுப்பிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். காரணம், பல ஆசிரியர் களுக்கு, தொழில் ஆசிரியர் மற்ற ஏனைய ஆசிரியர்களுக்கு வேலை குறைவாக இருக்கிறது. ஆகவே, ஆருவது வகுப்பிலிருந்து உயர்நிலைப் பள்ளியை ஆரம்பிக்கவேண்டும்.

அடுத்து இப்போது பி. யூ. சி.க்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இலவசக் கல்வியைப் போல் தொழில் கல்விக்கும் சலுகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மெடிக்கல் காலேஜ் பரீட்சை எழுதுவதற்கு ஏப்ரல், செப் டம்பர், டிஸம்பர் என்று இருந்ததை செப்டெம்பர் மாதத்தை நீக்கி விட்டதாகத் தெரிகிறது. ஆகவே செப்டம்பர் மாதத்திலும் பரீட்சை எழுதுவதற்க்கு அனுமதிக்கவேண்டும். எம். எஸ்ஸி., எம். லிட். படிக்கும் மாணவர்களுக்கும் அந்த சலுகை வழங்கவேண்டும்.

தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் போது அவர்கள் இஷ்டம்போல் விடாமல் அதற்கு ஒரு அட்மிஷன் கமிட்டி ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும். அதிலுள்ள ஊழல் கள்பற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

அடுத்து, கல்லூரிகளில் பரீட்சை வர இருக்கிறது. ஆனால் பாடங்கள் முடிவுருமல் இருக்கின்றன என்று தெரிகிறது. ஆகவே பரீட்சைகளை இரண்டு வாரங்களாவது நீட்டி பின்னல் தள்ளி வைக்கவேண்டுமென்ற யோசனையைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

***புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழுக்கு உயிரை நிகராக்கிக் காட்டி தமிழை அமிழ்தாக்கி ஊட்டி பெருந்தகை அண்ணு அவர்களுக்கு என் இயற்கையெய்திய அறிஞர் சார்பிலும் முதலாவதாக அஞ்சலி சார்பிலும் என் தொகுதி மக்கள் அடுத்து மாண்புமிகு கல்வி அமைச்சர் செலுத்திக் கொள்கிறேன். இந்த கல்வி மானியத்தை எள்ளத்தனையும் அவர்கள் கொணர்ந்திருக்கும் மானியத்தின்மீது பேச முற்படுகிறேன். விடாமல் வரவேற்று அந்த நாட்டிப் பயிலக்கூடிய வகையில் கேடில்விழுச் செல்வமாம்கல்வியை பெருக்கியும், உயர்நிலைப்பள்ளிகளைப் தொடக்கப் பள்ளிகளை உருவாக்கியும் பெருக்கியும், பயில்வோரின் எண்ணிக்கையும் பெருக்கியும், கல்லூரிகளைப் பெருக்கியும் திட்டங்கள் வகுத்து நிறை மிகுதியாகப் பெருக்கக் கூடிய வகையிலும் வரவேற்கக்கூடிய ஒன்ருக வேற்றுகிற முறையைப் பார்க்கும்போது அது செயல்களையும் எடுத்துரைத்து வரவேற்க அமைகிறது. அத்துணை காலம் இடம் தராத காரணத்தால் வாய்ப்பில்லாத காரணத்தால் மட்டும் விடுத்து அமைவதற்கு நான் என்னுடைய வேண்டுகோள்களை முயலுகிறேன்.

புகுமுக வகுப்பைப் பொறுத்தவரையில் இலவசக்கல்வியைக் கழக அரசு தந்திருக்கிறது. ஆனல், இந்த இலவசக் கல்வி தந்திருப்பதை பிற்பகல் 12-10
அருமைக் காங்கிரஸ் நண்பர்கள் சொல்லுகின்ற நேரத்தில், நாங்கள் சொன்னதைத்தான் இவர்கள் செய்திருக்கிருர்கள் என்று பேசக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கிறோம். உண்மையிலே நான் அவர்களைக் கேட்டுக் கொள்வேன், எதிர்க்கட்சியிலிருப்பவர்கள், சொல்லுகின்ற கருத்தை ஆளுங் கட்சி ஏற்கக்கூடாது என்பதுதான் மக்களாட்சியா? அதுதான் மரபா? எதிர்கட்சியிலேயிருக்கின்றவர்கள் கூறுவதில் இருக்கின்ற நல்லதை ஏற்றுக் கொள்ளலாம் என்பதுதான் மக்களாட்சியின் மரபா என்று கேட்க விரும்புகிறேன். அவர்கள் கடந்துவந்த காலத்திலே கடைப்பிடித்த வழியையே எண்ணி இப்படி பேச முற்படுகிருர்கள் என்று நினைக்கிறேன்.

[புலவர். பொ. பொன்னம்பலம்] [1969 மார்ச் 12

நாங்களும் சொல்லி இருக்கிறோம், இலவசக் கல்வியைப் புதுமுக வகுப் பிற்கும் கொண்டுவரவேண்டும் என்பது பற்றி முன்னுலே சொல்லியிருக் கிறோம். அனைத்தையும் ஒட்டி நடைமுறைக்கு ஏற்றவகையில் நல்லவை யாக ஆக்க வேண்டுமென்ற காரணத்தினுல் புதுமுக வகுப்பிற்கு இலவசக் கல்வியை அளிக்க வேண்டுமென்ற நிலை உருவாக்கப்பட்டிருக் கிறது என்பதை அவர்களுக்கு உணர்த்த ஆசைப்படுகிறேன்.

அடுத்து, கல்வித் திட்டத்தைப் பொறுத்தவரையில், நாங்கள் வலி யுறுத்தி வந்த திட்டத்தின் அடிப்படையில்தான் தந்திருக்கிறோம், கழக அரசு தந்திருக்கிறது. இருமொழிக் கல்வித் திட்டத்தைத்தான் தந்திருக் கிறது ஆனால், காங்கிரஸ் நண்பர்கள் பேசுகின்ற நேரத்திலே கொள்கையில்லை என்று சொல்லுகிறார்கள், வலியுறுத்தக்கூடிய நிலை இல்லை என்று சொல்லுகிறார்கள். யாருக்கு இல்லை என்று அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களுடைய காலத்திலேதான் எலிகளெல்லாம் கூடி பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற நிலையில் இருந்தார்கள். எலி களெல்லாம் சேர்ந்து பூனைக்கு மணி கட்டி விட்டால் பூனை வரும்பொழுது மணியின் ஒலியை எழுப்பிக்கொண்டு வரும். நாமெல்லாம் தப்பித்துக் கொள்ளலாம் என்று சிந்தித்து, யார் மணியைக் கட்டுவது என்று தெரியாமல், பூனைக்கு மணி கட்ட முடியாத நிலையில் இருந்தனவாம். அதைப்போல அவர்கள் இருந்தார்கள். நாங்கள் பூனைக்கு மணி கட்டிவிட்டோம் அதனுடைய ஒலி எழும்பிக்கொண்டிருக்கிறது. அந்த வகையில் நீங்கள் ஒத்துழைப்புத்தர வாருங்கள், தமிழகத்தில் அந்தத் திட்டம் நல்ல வகையில் நடைபெற தாய் மொழிகாக்க எங்களுடன் சேர்ந்து ஒத்துழைப்புத்தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். சிறந்த வகையில் இருக்கும் இந்த இருமொழித்திட்டத்தை நல்ல முறையில் செய்து நடைமுறைக்குக் கொண்டுவந்து நிறைவேற்றிக் கொடுக்க நீங்களும் வாருங்கள் என்று அவர்களையும் அழைக்கிறேன்என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், காடுமுரடான கல்லையும் அப்படியே கனிவான கவின் கலையாக ஆக்கக்கூடிய சிற்பியைப்போல கட்டாந் தரையாக இருக்கக்கூடிய பகுதிகளை கலையோடு வளம் கிடைக்கக்கூடிய வயலாக ஆக்குகின்ற உழவரைப்போல, உணர்ச்சிகளையெல்லாம் கட்டுப் படுத்தி, கருத்தில் தெளிவூட்டி, மாணிக்கச் செல்வங்களை வருங்காலக் குடிமக்களை—உருவாக்குவது ஆசிரியர்களின் சிறப்பு. சிற்பியைப் போல, உழவர் பெருங்குடி மக்களைப்போல இருப்பவர்கள் ஆசிரியர்கள். அப்படிப் பட்ட ஆசிரியர் பெருமக்களுக்கு, மண்டபத்திற்கு முன்னாலே மரியாதை தந்து, மற்றநிலைகளிலும் முன்னுக்கக் கருதுகின்ற அளவில் நாம் இருக் கிறோம். அன்றைக்கெல்லாம் வாத்தியார் என்று எண்ணிக்கொண்டி ருந்த நிலையை மாற்றி, மாசு மருவகற்றி மாண்பூட்டும் இவர்களை ஆசிரியர்கள் என்று அழைக்கும் நிலைக்கும் நாம் வந்திருக்கிறோம். இதிலே ஒரு புது முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு நாம் விரிவான சலுகை களைச் செய்திருக்கிறோம் என்று சொன்னாலும் அவர்களுக்கு மருத்துவப் படியை நாம் நிச்சயமாக அளிக்க வேண்டும். ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் நிச்சயமாக அவர்கள் உடல் நலத்தைப் பேணும்வகையில் அவர் களுக்கு மருத்துவப்படியை அளிக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஓய்வூதியத்தைப்பற்றிக் குறிக்கப்பட்டிருக்கிறது. அரசினர் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு எந்தவகையிலே ஓய்வூதியம அளிக்கப் படுகிறதோ அதைப் போலவே தனியார்துறை பள்ளிகளில் வேலைபார்க்கும் ஆசிரியர்களுக்கும், பாதியாக இல்லாமல், முழுவதுமாகக் கொடுக்க வேண்டுமென்று நான் பணிவன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

தமிழாசிரியர்களைப் பொறுத்தவரையில் சில குறிப்பிட்டுக்கூற ஆசைப் படுகிறேன். தமிழாசிரியர்களுக்கு என்று எத்தனையோ நடைமுறைகளை, அரசாணைகளை ஆக்கிவைத்திருக்கிறார்கள். ஆனால் நடைமுறைப்படுத்த வில்லை. பழைய விதிமுறைகளைப் பற்றி கல்வியதிகாரிகளைக் கேட்டால்



1969 மார்ச் 12] [புலவர். பொ. பொன்னம்பலம்]

தெரியவில்லை, தலைமை ஆசிரியர்களைக் கேட்டால் தெரியவில்லை. எனவே, பழைய விதிமுறைகளை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரச் செய்ய வேண்டுமென்று விரும்பி வேண்டி கேட்டுக் கொள்ளுகின்றேன். இது மிகவும் இன்றியமையாதது ஒன்று என்பதை வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழாசிரியர்கள் அவ்வளவுபெரும் அனுபவ அடிப் படையில் தலைமையாசிரியர்களாக உயர்நிலைப்பள்ளிகளில் வரவேண்டிய சூழ்நிலை உருவாக்கித்தர வேண்டுமென்று பணிவன்புடன் வேண்டி, விரும்பிக்கேட்டுக்கொள்கின்றேன்.

அமெரிக்க நாட்டிலுள்ள நிக்ஸன் கூறிய கருத்து என்னுடைய நினை விற்கு வருகிறது.

**'As our eyes catch the dimness of the first days of Dawn, let us not curse the remaining Dark. Let us gather the Light.'**

என்று சொன்ன அந்த நிலையை நினைத்துப் பார்க்கும் பொழுது, இன்றைக்கு நம்முடைய நாட்டிலே விடிவெள்ளி தோன்றிச் சென்றிருக்கிறது. அதனுடைய ஒளி கிடைக்கப்போகிறது என்று நினைக்கத் தோன்றுகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் அந்த விடிவெள்ளி. அந்த ஒளியைத் தந்து விட்டிருக்கிறார்கள். அதை நம்முடைய நாட்டில் வாழ்க்கை ஒளியாக, அரசியல் ஒளியாக, ஆக்க ஒளியாகக்கொண்டு நாம் வாழவேண்டுமென்று கூறி, எனக்கு இந்த நல்வாய்ப்பை அளித்த தலைவ ரவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

* **திரு. வ. ஜார்ஜ் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, முதலாவ தாக இந்த அரசு அண்ணாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பதாகக் கூறி, ஆனால் உண்மையில் அதற்கு மாறாக, அந்த அடிச்சுவட்டை மீறி, காங்கிரஸ் கட்சி வற்புறுத்தி வந்ததை ஒப்புக்கொண்டு புகுமுக வகுப்புக்கு இலவசக் கல்வியளிக்க முன் வந்தமைக்கு நான் மனமாரப் பாராட்டு கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

அடுத்தபடியாக காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

இன்று இந்த மானியக் கோரிக்கையில், கல்வி சம்பந்தமாகக் கூறுவ தில், இத்தனை பாடசாலைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்று ஒரு நீண்ட பட்டியல் இருக்கிறது. இதைக்கொண்டு பார்த்தால்கூட நாம் நிறை வேற்ற வேண்டிய குறிக்கோளை, கொள்கைகளில் குறிக்கோளை எய்தி விட்டோமா என்று பார்த்ததால் இல்லை. அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி 10 வருஷ காலத்திற்குள்ளாக 14 வயது வரையிலும் உள்ள அத்தனை மாணவர்களுக்கு இலவசக் கல்வியை அளிக்க வேண்டுமென்று "டைரக்டிவ் பிரின்ஸ்பிள்ஸ்"—இல் குறிக்கோளாக கொண்டிருக்கிறோம். ஆனால், அந்த 10 வருஷங்கள் கழிந்த பின்னர்தான் நமது மாநிலத்தில் 1961-ஆம் வருஷம் முதல் அந்தக் காரியங்களை நாம் கொண்டுவர திட்டம் தீட்டினோம். ஆனால், இன்றும் அந்த நிலையிலேயே, சுமார் 10 வருஷங்களாக, அந்தக் குறிக்கோளை எட்டிப்பிடிக்க முடியவில்லை. புள்ளி விவரத்தைப் பார்த் தாலே தெரிகிறது. 6 முதல் 11 வயது வரை உள்ள மாணவர்களை எடுத்துக்கொண்டால் சுமார் 92 சதவிகிதம் படிக்கின்றார்கள். ஆனால் 11 வயது முதல் 14 வயது வரையுள்ள மாணவர்கள் படிக்கும் சதவிகிதம் 54 சதவிகிதமாகத்தான் இருக்கிறது. எனவே, மொத்தத்தில் 14 வயது வரையுள்ள மாணவர்களின் சதவிகிதம் மிகவும் குறைவாகயிருக்கிறது. இந்த நிலையில் நாம் போனால் நம்முடைய குறிக்கோளை என்று எட்டிப் பார்ப்பது என்று தெரியவில்லை.

குறிப்பாக, இந்த அரசு கல்விக்காக அரிய பெரிய பணிகளை நிறை வேற்றியிருப்பதாகச் சொல்கிறார்கள். ஒன்று கேட்பதற்கு விரும்புகிறேன். 1967-இலே 6 முதல் 11 வயது வரையுள்ள மாணவர்களின் தொகை 92 சதவிகிதமாக இருந்தது என்று இந்த அரசாங்கத்திலேயே கூறப்பட் டிருக்கிறது. ஆனால் இன்னும், 1969-இலும் 92 சதவிகிதம்தான்

பயில விரும்பும் மாணவர்களுக்கு, இஷ்டபாடமாகப் படிக்க விரும்பும் சிலருக்கு நிச்சயமாக ஏதாவது வழிவகைகளைச் செய்தாக வேண்டும். ஹிந்தி மொழி திணிக்கப்படுவதை நாம் எதிர்க்க வேண்டும். ஆனால், அதே நேரத்திலே அன்னிய மொழிகள் இருக்கின்றன. நாம் ஆங்கிலம் கற்கிறோம், மலையாளம், உருது, பிரெஞ்ச், சான்ஸ்கிரிட் போன்ற மற்ற மொழிகளையும் படிக்கின்றோம். அதற்குத் நாம் கல்வித் துறையிலே வசதி செய்து கொடுக்கிறோம். ஆனால், அதைப்போல, ஆட்சிமொழியாகக் கருதிக்கொள்ளாது, ஹிந்தி மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளாமல், அதே நேரத்தில் ஹிந்தி மொழியை ஒரு அன்னிய மொழியைப் போல் கருதி அந்த மொழியைக் கற்க விரும்பும் மாணவர்களுக்கு வசதி செய்து தரவேண்டியது நமது அரசினுடைய கடமை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாம் திணிப்பை எதிர்க்க வேண்டும். அதே நேரத்திலே யாராவது இஷ்ட பாடமாக படிக்க விரும்பினால், அவர்களுக்கு அந்தச் சலுகையைக் கொடுக்க வேண்டும்.

என்.சி.சி.யை எடுத்துக்கொள்வோம். ஹிந்தி ஆணைச் சொற்களை நீக்க வேண்டுமென்பது பற்றி வேறுபாடான கருத்துக்கள் இருக்கின்றன. அந்த என்.சி.சி.யை எடுத்துவிடுவதால் நமக்கு ஏற்படக்கூடிய இழப்புக்களைப் பற்றியும் எனக்கு முன்பு பேசியவர்கள் சொன்னார்கள். அந்த இழப்புகளைப் பற்றி நாம் ஆலோசிக்கும்போது, அதிலே பயிற்சி பெற மாணவர்கள் யாராவது இஷ்டப்பட்டால், அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கக்கூடிய முறையிலே நாம் நடந்து கொள்ளவேண்டும். ஹிந்தி ஆணைச் சொற்கள் என்.சி.சி.யிலே வேண்டாமென்று சொல்பவர்கள் இருந்தால், அவர்கள் என்.சி.சி.யை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், இதை எடுத்துக் கொள்வதால் பாதகம் இல்லை என்று நினைப்பவர்கள் அந்த பயிற்சி பெற விரும்புபவர்கள், அதனால் ஏற்படக்கூடிய நன்மைகளை விரும்புபவர்கள், அவர்கள் இஷ்டப்பட்டால் என்.சி.சி.யில் சேருவதற்கு நாம் வசதி செய்து கொடுக்க வேண்டும். அந்த துறையைப்பற்றியும் இந்த நேரத்திலே அரசாங்கம் சற்று சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, நகரசபை உயர்நிலைப் பள்ளிகளுக்கு அளிக்கக்கூடிய மானியத்தைப் பற்றி ஒரு வார்த்தைசொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். சாதாரணாமக, நாம் தனியார் பள்ளிகளுக்கு முழு அளவு மானியம் கொடுக்கிறோம். ஆனால் நரகசபை பள்ளிகளுக்கு, அவர்களுக்கு ஆககூடிய செலவிலே, மான்யமாக, அதில் 50 சதவிகிதம் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது 3-ல் 2 பங்கு கொடுக்கப்படுகிறது. நகரசபைகள் கல்வி வரி வசூலிக்கிறார்கள். அந்த வருவாயைக் கழித்து, மீதி எவ்வளவு தொகை ஆகிறதோ, அவர்களது பள்ளிகளை நிர்வகிக்க, அவ்வளவு தொகையையும் அரசு கொடுக்கவேண்டும். கல்விக்காக அவர்கள் செலவழிக்கக்கூடிய தொகை எவ்வளவு, உயர்நிலைப் பள்ளிகளுக்காக எவ்வளவு தொகை செலவழிக்கிறார்கள், இவையெல்லாம் கணக்கெடுத்து, வருகின்ற வருவாயைக் கழித்து, மீதியுள்ள பூரா தொகையையும் அவர்களுக்கு மானியமாக அளித்தால்தான், இந்த நகரசபைகள் மேற்கொண்டு தொடர்ந்து பள்ளிகளை நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும்.

ஒரு நகரசபையை எடுத்துக் கொண்டால், அந்த நகரத்திலே தனியார் நடத்தக்கூடிய பள்ளிகள் பல இருக்கலாம். உதாரணமாக, என்னுடைய ஊரிலே அருப்புக்கோட்டையை எடுத்துக்கொண்டால், அங்கு மூன்று தனியார் பள்ளிகள் இருக்கின்றன. ஆனால், பொதுத்துறையிலே அருப்புக்கோட்டை நகரசபைப் பள்ளி ஒன்று இருக்கிறது. தனியார் பள்ளியிலே யாருக்கு சலுகைகள் இருக்கின்றன என்பதைப் பற்றி நான் சொல்லாமலே அங்கத்தினர்களுக்குத் தெரியும். தனியார் பள்ளிகளில், என்னதான் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டாலும் முதலிலே அந்தந்த வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு சலுகை அளிக்கப்படுகிற நிலைமை இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. எனவே அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள், அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், இவர்களுக்குத்தான் அங்கு முதலில் இடம் கிடைக்கிறது. மற்ற மாணவர்களுக்கு பொதுத் துறையிலே இருக்கக்கூடிய பள்ளிகள் தான் பாதுகாப்பாக இருக்கின்றன. அந்த பள்ளிகளுக்கு





நாம் ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டியது அவசியமாகும். எனவே அந்த முறையிலே அரசாங்கம் எவ்வளவு மானியம் கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றி மறுபடியும் பரிசீலனை செய்து, அந்த அளவுக்கு நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. க. ந. இராமச்சந்திரன் :** பேரவை தலைவரவர்களே இந்த கல்வி மானியத்தை ஆதரித்து என்னுடைய இரண்டொரு கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். கல்விக்காகத் தமிழக அரசு 65 கோடி ரூபாய் மொத்த வருமானத்தில் 24க்கு அதிகமாக ஒதுக்கி இருக்கிறார்கள். இராமகிருஷ்ணர் 'எவ்வளவு விழுக்காடு கல்விக்காகச் செலவிடுகிறார்கள். தான் உயர உயரப் பறந்தாலும் கழுகினுடைய நோக்கும் போக்கும் செத்த எலியின் மேல்தான் இருக்கும்' என்றார். அதைப்போல காங்கிரஸ்காரர்கள் புதியதைப் பாராட்டாமல், 'நாங்கள் சொன்ன, திட்டத்தைக் கொண்டு வந்து விட்டார்கள், நாங்கள் சொன்ன திட்டத்தைக் கொண்டு வந்து விட்டார்கள்' என்ற சொத்தை வாதத்தையே திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே அவர்களுக்குப் பெருமை ஏற்படுமானால், அதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். நம்முடைய திட்டத்தைப் பொறுத்தமட்டில் எவ்வளவு அதிகமாகச் செலவிடுகிறபோதிலும், இரண்டொரு திருத்தங்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

ஆரம்பக் கல்வியைப் பொறுத்தமட்டில், பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் பணிபுரிகின்ற நேரத்தில் ஆங்காங்கு இருக்கிற சட்டமன்ற உறுப்பினர் ஒரு கட்சியைச் சார்ந்தவராக இருந்தால், ஆணையாளர் ஒரு பகுதியைச் சேர்ந்தவராக இருக்கிறார், சேர்மன் ஒரு பகுதியைச்சேர்ந்தவராக இருக்கிறார். இவர்கள் மூன்று பேரும் மூன்று பகுதிகளாக இருப்பதால், அவர்களுடைய எண்ணப்படி அங்கு பணி புரிகின்ற ஆசிரியரைப் பழி வாங்குகின்ற நிலையிலே பல பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் இன்றைய தினம் நடந்து கொண்டிருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளின் ஆசிரியர்களை மீண்டும் நியமனம் செய்வதோ, அல்லது மாற்றுவதோ ஆகிய அதிகாரங்களை மீண்டும் சீப் எஜுகேஷனல் ஆபீஸரிடமோ அல்லது மாவட்டக் கல்வி அதிகாரியிடமோ கொடுத்தால்தான் கல்வியினுடைய தரம் உயரும் என்று நான்மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் அவர்களுக்குப் பல வகைகளிலும் அளிக்கப்படுகிற சலுகைகள் போதாது என்று கூறுகிறார்கள். எல்லா வகைகளிலும் நாம் ஆசிரியர்களைத் திருப்திபடுத்திவிட முடியாது.

அடுத்து, உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ்த்துறையைச் சார்ந்த ஆசிரியர் பி.ப 12-30
களை எடுத்துக் கொண்டால், 4, 5 பாகுபாடுகள் இருக்கின்றன என்று எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழ் அறிந்த ஒருவர் இன்று கல்வி அமைச்சராக இருப்பதால், இந்தக் குறைகள் நிச்சயம் களையப்படும் என்ற எண்ணத்தில்தான் தமிழ்த் துறையைச் சார்ந்த ஆசிரியர் பெருமக்களின் குறைகளை நீக்கவேண்டுமென்பதற்காக நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, பள்ளிகளுக்குத் தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்படும்பொழுது எத்தனை ஆண்டுகள் பணி புரிந்தார்கள் என்ற நியதியை வைத்துக் கொண்டு, பல பேர் தகுதியற்றவர்களாக இருந்தாலும் அவர்கள் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு விடுகிறார்கள். 100-க்கு 50 என்ற சதவிகிதத்தின் அடிப்படையிலாவது அவர்களுடைய திறமையைக் கருத்தில் கொண்டுதலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டால், பள்ளி நிர்வாகமும், பள்ளிகளில் கட்டுப்பாடும், ஒழுங்கும் மிகச் சிறந்த முறையில் இருக்கும். 10 ஆண்டுகளுக்கு பி.டி. ஆசிரியராக ஒருவர் இருந்துவிட்டால், 11-வது ஆண்டு அவருக்குத் தலைமை ஆசிரியர் பதவி கொடுத்துவிடுகிறார்கள். சில பள்ளிகளில் மிகத் திறமை வாய்ந்தவர்கள், மிகச் சிறந்த முறையில் பணியாற்றக்கூடியவர்கள் தலைமை ஆசிரியராக வரக்கூடும். ஆனால் பல

தொடர்ந்து இருந்துகொண்டு வருகிறது என்றால், நாம் இந்தத் துறையில் எப்படி முன்னேறியிருக்கிறோம் என்று பொருளாகும்? நாம் தொடர்ந்து அந்த நிலையிலேயே இருக்கிறோம் என்றால் இதில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை என்பது தென்படவில்லையா? 1961-இலே 18 கோடி ரூபாய் ஒதுக்கியது என்றால் அப்பொழுது அரசின் வருமானம் 100 கோடியாகத்தான் இருந்தது. ஆனால் இப்பொழுது வருமானம் 285 கோடியை எட்டிப்பிடித்திருக்கிறது. எனவே, அந்த முறையில் வருமானம் எத்தனை சதவிகிதம் என்பதுதான் முக்கியம். அப்படிப் பார்த்தால் கல்வி அன்று எந்த நிலையிலேயிருந்ததோ, அதே நிலையில்தான் இன்றும் இருக்கிறோம். எனவே, திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் தங்களுடைய அரிய பெரிய சாதனை என்று சொல்லிக் கொள்ளக்கூடிய அளவுக்கு ஒன்றுமில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இன்று கல்வியின் குறிக்கோள் என்ன? தேசியக் குறிக்கோளை எட்டிப்பிடிக்க வேண்டியதாக இருக்கிறதா? தேசிய ஒற்றுமையைப் பற்றி 'Preamble of the Constitution'-இல் 'to promote among them all Fraternity assuring the dignity of the individual and the unity of the Nation'.

என்று சொல்கிறார்கள். அது முக்கியம். நம்முடைய தனி நபருடைய மதிப்பையும் காப்பாற்ற, தேசிய ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுவது கல்வியின் குறிக்கோளாக இருக்க வேண்டும். சமத்துவம் போன்ற பல கொள்கைகளைப் பரப்புவதும் கல்வியின் கொள்கையாக இருக்க வேண்டும். நாம் இந்தக் கொள்கைகளுக்கு எள்ளளவாகிலும் உதவியிருக்கிறோமா என்றால் இல்லை. மொழிப் பிரச்சினை அப்படியே இருக்கிறது, என்.சி.சி. பிரச்சினை அப்படியே இருக்கிறது. தேசிய ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கின்ற முறையிலே இருந்தால் அந்தத் தேசிய ஒருமைப்பாடு மாணவர்கள் மத்தியில் எந்தவிதத்தில் ஆக்கபூர்வமான முறையில் செயல்பட முடியும்? இதைப்பற்றியெல்லாம் எடுத்துக்கூறினால் நேரம் போய்விடும், வேறு சில விஷயங்களை எடுத்துக்கூற இயலாமல் போய்விடும்.

கல்வியினுடைய மொழிக்கொள்கை பற்றிப் பேசும்பொழுது, தமிழரசுக் கழகத்தலைவர் திரு ம. பொ. சி. அவர்கள், இரு வேறு போதனை மொழியினால் வகுப்பு வேறுபாடான மாணவர்களை வருங்காலத்தில் உற்பத்தி செய்யக்கூடாது என்று கூறினார்கள். அதை நான் முழுக்க முழுக்க வரவேற்கிறேன். ஒரு வகுப்பில் அல்லது ஒரு பாடத்தில் தமிழ் போதனை மொழியென்றால் தமிழ்தான் மாநிலமெங்குமுள்ள கல்லூரிகளிலும்
பிற்பகல் 12.20 இருக்க வேண்டுமேயொழிய தற்போது இருப்பதுபோல ஆங்கிலமும் கூட அல்ல, அதுபோலவே கல்லூரிகளில் "எக்ஸ்பெரிமெண்ட்" டாக, புகுமுக வகுப்பிலே தமிழிலே நடத்தப்படுகிறது. இப்பொழுது ஆங்கிலத்தில் நடத்தப்பட்டாலும் ஒவ்வொரு வகுப்பிலும் முழுவதும் தமிழிலேயே நடத்தப்படவேண்டும். அதிலே இரண்டு வகுப்பான சமுதாயம் எழும்புவதற்கான சந்தர்ப்பமே கொடுக்கக் கூடாது. அந்த நிலைமையில் எல்லாவற்றையும் தமிழிலேயே நடத்த வேண்டும். வரவர இங்கிலீஷ் மீடியம் ஸ்கூல்கள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. அந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, பாலர் பள்ளிகளைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். 25 பாலர் பள்ளிகளை திறக்கப்போவதாக நான்காவது ஐந்தாண்டுக் திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. இந்த வருஷம் 5 திறக்கப் போவதாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்த பாலர் பள்ளிகளை எப்படி தமிழகம் பூராவும் திறக்கப் போகிறார்கள். என்று தெரியவில்லை. வருஷத்திற்கு 25 பள்ளிகளாவது இருக்க வேண்டும். அப்பொழுதுதான் (மணி அடிக்கப்பட்டது) ஒரு மாவட்டத்திற்கு ஒன்று, இரண்டு என்றாவது இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பள்ளிகளை பட்டணங்களில்தான் துவக்குகிறார்கள். பட்டணங்களில் தனியார் பள்ளிகள் பல இருக்கின்றன. எனவே, இவை பட்டிக்காட்டில் துவக்கப்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.



எங்கள் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், எம்.ஈ.ஆர்., பி.எஸ்,எஸ்.எஸ்., டி.இ.சி. என்று மூன்று திட்டங்கள் இருக்கின்றன. அதாவது எம்.ஈ.ஆர்., பிரைவேட் செக்கண்டரி ஸ்கூல் ஸ்கீம், திருவாங்கூர் எஜுகேஷனல் கோட் என்று மூன்று திட்டங்கள் இருக்கின்றன. அங்கே இவை மூன்றிலும் ஒரே குழப்பம். எந்த திட்டத்தை எப்பொழுது அமுல்படுத்துவது என்று கல்வி அதிகாரிகளுக்கே தெரியாது. ஏதோ, அவர்களுக்குத் தோன்றுவது போல் ஒரு சமயம் எம்.ஈ.ஆர். என்று சொல்கிறார்கள். இன்னொரு சமயம் பி.எஸ்.எஸ்.எஸ். என்று சொல்கிறார்கள். இன்னொரு சமயம் டி.இ.சி. என்று சொல்கிறார்கள். எனவே, ஒரு பெரிய குழப்ப நிலை இருக்கிறது. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். அங்குள்ள அலுவலகங்களில், குறிப்பாக டெப்புட்டி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல் அலுவலகத்தில் பார்த்த போது திருவாங்கூர் எஜுகேஷனல் கோட் என்று ஒன்று இருப்பதாகவே தெரியவில்லை. நான், ஒரு ரெபரன்ஸுக்காக பார்க்க வேண்டுமென்று கேட்டபோது, அந்த மாதிரி திருவாங்கூர் எஜுகேஷனல் கோடே கிடையாது என்பது தெரியவந்தது. அப்படி ஒன்றுமே இல்லாததை இருப்பதாக வைத்துக்கொண்டு நிர்வாகம் செய்ய முடியுமா? எனவே நிச்சயமாக இவற்றை எல்லாம் பரிசீலனை செய்து, இந்த நிலைமைகளை மாற்றவேண்டும். இந்த எம்.ஈ.ஆர். கூட இந்தக் காலத்திற்கு ஒவ்வாததாக இருக்கிறது. எனவே, அதை மறு பரிசீலனை செய்து, குமரி மாவட்டத்தையும் இணைத்து, சேர்த்து, ஒரே திட்டமாக மாற்றியாக வேண்டும். அதற்காக தனியாக அனுபவம் வாய்ந்த டைரக்டரை ஏற்படுத்தி, உடனடியாக நல்லவகையில் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று கோருகிறேன். (மணி அடிக்கப்பட்டது).

***திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி**: கனம் சபாநாயகர் அவர்களே, கல்வி மானியத்தின்மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களையும் இங்கு இந்த நேரத்திலே கூற ஆசைப்படுகிறேன். தமிழக அரசுக்கு இருக்கக்கூடிய பொறுப்புகளிலே முக்கியமானதும், இப்பொழுது இருக்கக்கூடிய முக்கியமான பிரச்சினையும் மாணவர் சமுதாயத்தின் மத்தியிலே இருக்கக்கூடிய ஒரு மன அமைதிக் குலைவு தன்மையைப் பற்றியதாகும். அந்த ஒரு தன்மையை இந்த அரசு எந்த முறையிலே சமாளித்து, அதற்குரிய ஒரு வழியை கண்டு பிடிக்கப்போகிறது என்பது அறியவேண்டிய நிலையிலே இப்பொழுது தமிழகம் இருக்கிறது என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஹிந்தி ஆட்சிமொழி போராட்டத்திற்குப் பிறகு மாணவர்கள் ஈடுபட்ட ஸ்டிரைக்குகள் எத்தனை, அந்த ஸ்டிரைக்குகள் எந்த அளவில் இருக்கின்றன, அந்த ஸ்டிரைக்குகளுடைய தன்மை என்ன என்பதைப்பற்றியும், அதில் மாணவர்களுடைய குறை என்ன என்பதைப்பற்றியும் ஆராய்வதற்காக ஒரு கமிஷன் நியமிக்க வேண்டும். அந்த கமிஷன் மூலம் மாணவர்கள் மனதிலே இருக்கக்கூடிய குறை என்ன என்று கண்டு, அந்த குறைகள் இனிமேல் ஏற்படாமல் இருக்கக்கூடிய அளவுக்கு என்ன என்ன வழிவகைகளைக் கையாள வேண்டுமோ, அந்தந்த வழிவகைகளைக் கையாளுவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும். அந்த கமிஷன் கொடுக்கக்கூடிய ரிப்போர்ட்டில் மூலமாக மாணவர்கள் இனிமேல் கல்வித்துறையிலே அவர்கள் கடைபிடித்து ஒழுகவேண்டிய விதிமுறைகளை நிர்ணயம் செய்ய வேண்டும். அந்த விதிமுறைகள் பிரகாரம் மாணவர்கள் நடக்க வேண்டுமென்பதற்காக அவர்கள் நடக்கக்கூடிய நிலையைப் கண்காணிப்பதற்காக அந்த பொறுப்பை கல்வித்துறையிடமே விட்டுவிட வேண்டும். அப்படி இருந்தால்தான் மாணவர் சமுதாயம் நல்ல கட்டுப்பாட்டுடன் இருந்து நல்லவகையிலே செயல்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த முறையில் ஈடுபட வேண்டியதற்குக் காரணம் இருக்கிறது என்பதை அரசுக்குத் தெரிவித்துக் கொள்வதுடன் அந்த முறையிலே அரசு ஈடுபட வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹிந்தியைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன். ஹிந்தி ஆட்சிமொழியாவதை, ஹிந்தி திணிப்பை தான் நாம் எதிர்க்கிறோமே தவிர, ஹிந்தி மொழியை அல்ல. எனவே ஹிந்திமொழி

[திரு. க. ந. இராமச்சந்திரன்] [1969 மார்ச் 12

பள்ளிகளிலும் பார்த்தால், நிர்வாகமும் ஒழுங்காக நடைபெறவில்லை கட்டுப்பாடு உணர்வும், ஒழுங்கும் இல்லாத நிலையில் மாணவர்கள் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் திறமையுள்ளவர்களை தலைமை ஆசிரியர்களாக வராததுதான். நேரடியாக எம்.பி.எஸ்.ஸி. தேர்வு இருப்பது போல, ஆசிரியர்கள் எத்தனை ஆண்டுகள் வேலை செய்திருக்கிறார்கள் என்பதை மட்டும் கணக்கில் கொள்ளாமல், திறமையைப் பொறுத்துப் பல பேர்களை வெளியிலிருந்து தலைமை ஆசிரியர்களாக எடுத்துக் கொண்டால் பள்ளி நிர்வாகம் ஒழுங்காக நடைபெறும் என்பதை நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அண்ணா அவர்களைப் பொறுத்தமட்டில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவ வேண்டும் என்று கூறப்பட்டது. அண்ணா அவர்கள் இலக்கியத் துறையில் பெரும் பணிகளை ஆற்றியுள்ளார்கள் என்பதை நாம் அறிவோம். அவர் அறிவில் சிறந்த அரசியல் வாதி, சிறந்த ஸ்டேட்ஸ்மான் என்று பலரும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். பல்கலைக் கழகம் அண்ணா அவர் களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அண்ணாவின் பெயரால் "அண்ணா சேர் ஆஃப் பாலிடிக்ஸ்" என்று அண்ணாவின் பெயரால் ஒரு அரசியல் பேராசிரியரை நியமித்தால், தமிழுக்கு நல்ல சேவை செய்தவர்களா வோம். அதே மாதிரி "அண்ணா சேர் ஆஃப் மாடர்ன் டமில் லிட்ரேச்சர்" அதாவது அண்ணாவின் பெயரால் நவீன தமிழ் இலக்கிய பேரா சிரியர் ஒருவரை நியமிக்கலாம். இந்த நியமனங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4, 5 லட்சம் தான் செலவாகும். கல்விக்காக ஒதுக்கப்படிருக்கிற தொகையில் இது மிகக் குறைவான தொகை. ஆகவே, இதை அரசு ஏற்று, நிச்சயம் அதற்கான முறையில் செயல் படவேண்டும் என்று கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கல்லூரிகளைப் பொறுத்த மட்டில் முன்பெல்லாம் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர், கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றுக்கொண்டிருக்கையில் ரூ. 80 சம்பளம் பெற்றுக்கொண்டிருந்தார்கள். அதே சமயத்தில் ஆங்கிலப் பேராசிரியர் ரூ. 500, 600 சம்பளம் பெற்றுக்கொண்டிருந்தார்கள். இந்த இழிவு நிலை இன்றைக்கும் நீடித்துக்கொண்டிருக்கிறது. தமிழ்த் துறையிலே பல ஆண்டுகளாக ஆசிரியர்களாக இருப்பவர்கள், தமிழ் படித்த காரணத்தினால், 16 ஆண்டுகள் ஆகியும் துணைப் பேராசிரியர் களாகவே இருந்துகொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் 4, 5 ஆண்டுகளாக ஆங்கிலத்துணைப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர்கள், அடுத்த ஆண்டில் ப்ரொஃபஸராக ஆகக்கூடிய ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது இந்தக் குறை விரைவிலே நீக்கப்படவேண்டும். பல புதிய கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டன. அங்கெல்லாம் ஆங்கிலம் அல்லது சரித்திரம் அல்லது விஞ்ஞானப் பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுவிட்டார்கள். தமிழ்த் துறைக்கு 7, 8 கல்லூரிகளில் மட்டிலும் இன்னும் பேராசிரியர்கள் நியமிக் படவில்லை. இந்தக் குறையை நீக்குவதற்கு நமது கல்வி அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தமிழ்துறையில் மட்டும் தான் முதல் நிலை ஆசிரியர்கள் (ஃபர்ஸ்டு கிரெடு), இரண்டாவது நிலை ஆசிரியர்கள் (செகண்டு கிரெட்) என்று வைத்திருக்கிறார்கள். அவர்கள் இப்படிப்பட்ட இழிவான நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து வேலை வாங்கப்பட்டாலும், சம்பளம் குறைவாகக் கொடுக்கக்கூடிய நிலைதான் இருக்கிறது. செகண்டு கிரேட் ஆசிரியர்கள் என்ற நிலை இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. இந்தக் குறையை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

*திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை ஒட்டி, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் இந்த அவையின் முன் வைக்க விரும்புகிறேன். தமிழகத்தில் அறிவில் சிறந்த நிபுணர்களும், கல்வியில் பெரிய கரைகண்ட பேராசிரியர்களும் ஏராளமாக இருந்தும், கல்வியின் நிலை இன்று குறைந்து இருக்கிறது, அதனுடைய தரத்தில் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்ற ஒரு குறையை



1969 மார்ச் 12] [திரு. டி. மார்டின்]

பொதுவாக எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை ஒத்துக்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது என்பதை மிக வேதனையோடு நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, இந்த மாநிலத்தைப் பொறுத்த மட்டில் மாணவர்கள் மத்தியில் தங்களுடைய எதிர்காலத்தைப்பற்றி ஒரு ஐயப்பாடு நிலவி வருகிறது என்பதை அரசு நன்றாக உணர்ந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். கல்லூரிப் படிப்பு முடிந்து வெளியே வந்ததும், தங்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத நிலையில் அவர்கள் இன்று தங்களுடைய நிலையைப் பற்றி மிகவும் எண்ணிக் கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டு பி.யூ.ஸி. கல்வியை இலவசமாகக் கற்ற மாணவர்கள் தொடர்ந்து அந்தக் கல்லூரியில் படிக்க முடியாத நிலையில், பி.யூ.ஸி. யோடு தங்களின் படிப்பை விட்டிருக்கிறார்கள். பி.யூ.ஸி. படிப்பதற்கு அரசாங்கத்தின் உதவி தேவை என்றால், அந்தப் படிப்பைத் தொடர்ந்து பட்டப் படிப்பு படிப்பதற்கு அரசாங்கத்தின் உதவி தேவை இல்லையா? என்வே, இந்த ஆண்டு எல்லா மாணவர்களுக்கும் பி.யூ.ஸி. படிப்பதற்கு இலவசக் கல்வி அளிக்கக் கூடிய நேரத்தில், கடந்த ஆண்டு பி.யூ.ஸி.யில் இலவசமாகப் படித்தவர்கள் தொடர்ந்து கல்லூரியில் இலவசமாகப் படிக்க வசதி செய்து கொடுப்பதற்கு அரசு தவறி விட்டது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், ஊராட்சி ஒன்றியங்களில் பள்ளிகள் திறப்பதிலும், பள்ளி ஆசிரியர்களை அதிகப்படுத்துவதிலும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும், கல்வித் துறைக்கும் எற்சனவே சிற்சில நேரங்களில் கருத்து வேறுபாடு இருந்து கொண்டிருக்கிறது. இந்த விதத்தில் கருத்து வேறுபாடு ஏற்படுவதால் பல புதிய பள்ளிகள் திறப்பதிலும் புதிய ஆசிரியர்களைக் கொடுப்பதிலும் தாமதம் ஏற்படுகிறது. இந்தக் காரணத்தை ஒட்டி, தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்த மட்டில் ஒன்று ஊராட்சி ஒன்றியங்களுக்கு அந்தத் துறையைக் கொடுத்துவிட வேண்டும், அல்லது கல்வி இலாகாவே அதை எடுத்துக் கொள்ள வேண்டும், இரண்டில் ஒரு முடிவை நிச்சயமாக அரசு எடுத்தால் தான் இதுபோன்ற பிரச்சினைகளை முன்கூட்டியே தீர்ப்பதற்கான வகையில் ஒரு ஏற்பாடு செய்வதாக கருதப்படும். மேலும் ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் குறிப்பாக உடன்குடி, சாந்தாங்குளம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் கடந்த மூன்று மாதங் களாக சம்பளம் பெறாமல் இருக்கிறார்கள். இதை உடனுக்குடன் கண்கா ணித்து ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

நடப்பு ஆண்டில், 7,900 ஆசிரியர்களை நியமிக்கப் போகிறார்கள் என்று பார்க்கிறபொழுது பயிற்சி பள்ளிகளின் எண்ணிக்கையைக் குறைத்திருக்கி றார்கள். அந்த எண்ணிக்கை 140-லிருந்து 137 ஆகக் குறைந்திருக்கிறது. நெல்லை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் ஒரே சர்க்கார்பள்ளியில் 60 இடம் இருக்கக் கூடிய பள்ளிக்கு 4,000 அப்ளிகேஷன்கள் வந்திருக் கின்றன என்று சொல்லுகிறார்கள். ஆகவே, 7,900 ஆசிரியர்களை புதிய தாக நியமிக்கப் போகின்ற அரசு புதியதாக ஒரு பயிற்சிப் பள்ளியை சாத்தான்குளம், உடன்குடி, நான்குனேரி ஆகிய இடங்களில் ஏதாவது ஒரு இடத்தில் அமைக்க ஏற்பாடு செய்து ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க வழி செய்யவேண்டும.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏராளமாக எஸ்.எஸ்.எல்.சி. படித்த பெண்கள் வேலையில்லாமல் தங்கள் வீடுகளில் இருக்கிறார்கள். அவர்கள் படிப்பின் முழுப்பயனை அடைய முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கென்று பயிற்சி பள்ளி திறப்பதினால் எந்தவிதமான நஷ்டமும் ஏற்பட்டுவிடாது. எஸ்.எஸ்.எல்.சி. படித்த பெண்கள் ஆசிரியர் பயிற்சி பெருவார்களானால், அவர்கள் குழந்தை களுக்கு நல்ல முறையில் கல்வி கற்றுக்கொடுப்பதறகு ஒரு வாய்ப்பு ஏற்படும். குறிப்பாக, நாங்குநேரி, ராதாபுரம் சப்-தாலுகாவில் அனக்கரை என்ற ஊரில மூன்று வருடங்களாக பிஷப் தாமஸ் என்பவர் பெயரால் நடக்கும் ஒரு ஆர்பனேஜ் ஏற்படுத்துவதற்காக அனுமதி கேட்டிருக்கிறார்கள். அதேமாதிரி புளியம்பட்டி என்ற இடத்திலும் ஒரு ஆர்பனேஜ் ஏற்படுத்து

வதற்கு மூன்று வருட காலமாக மனுக்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இதுவரையில் எந்த விதமான செகண்ட் ரூட் கொடுக்கப்படவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், டைரக்டர் ஆஃப் காலேஜியேட் எஜுகேஷன் என்ற உத்தியோகஸ்தருக்கு அந்தப் பதவி தவிர, அவருக்கு எக்ஸ்-அபிஷியோ அடிஷனல் செகரடரி என்ற உத்தியோகம் தேவைதானா என்று கேட்கத் தோன்றுகிறது. தலைமை செயலகத்தைப் பொறுத்தமட்டில் ஒரு ஐ.ஏ.எஸ். செகரடரி இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவியாக டெப்யூடி செகரடரி இருக்கிறார்கள். மேலும், சாதாரணமாக கல்வியைப் பொறுத்தமட்டில், டைரக்டர் ஆஃப் ஸ்கூல் எஜுகேஷன் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கீழே எத்தனையோ டெப்யூடி டைரக்டர்கள் இருக்கிறார்கள். எனவே அவ்வாறு இருக்கும்பொழுது, இந்தப் பதவி தேவையா என்பதைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். பொதுவாக நமது கல்வித்துறையில் உள்ள கோளாறுகளை ஆராய்ந்து, அவைகளைக் களைவதற்கான பரிந்துரைகளை அரசுக்கு அனுப்புவதற்கு ஒரு கமிஷன் போன்ற அமைப்பில் அவரை ஏற்படுத்துவது நல்லது. எனக்கென்னவோ இருக்கிற செகரடரியைத் தவிர, எக்ஸ்-அபிஷியோ அடிஷனல் செகரடரி இப்படி இரண்டு செகரடரிகள் தேவையா என்பதை அரசு புனராலோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த ரூல்ஸ் Madras Education Rules and Rules relating to Elementary Education:ஐ statutory ஆக ஆக்கிவிட்டோமானால், ஆசிரியர்களும் மானேஜ்மெண்டார்களும் நிலைமைகளை நன்றாகப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு இருக்கும். fixation of class, fixation of additional section and fixation of teachers in a particular class. இவை சம்பந்தமாக நிர்வாகிகள் டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷனுக்கு மனுச் செய்கிறார்கள். வருஷ ஆரம்பத்தில் செய்யும் மனுக்கள் 7, 8 மாதங்களாகியும் தேங்கிக் கிடக்கின்றன. அதன் பிறகு பள்ளி நிர்வாகிகளுக்கு வருகிறது. உத்தியோகத்தில் ஆசிரியர்கள், அடிஷனல் கிளாஸ்களுக்கு தேவையென்று, 7, 8 மாதங்களாக அமர்த்தியிருப்பதால், அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. உடனடியாக அதைத் தவிர்க்க சீப் எஜுகேஷனல் அட்வைசர் என்று ஒரு ஆபீசர் இருக்கிறாரே, அவரிடம் இதைக் கொடுக்கலாம். மதிய உணவுத் திட்டம் பற்றிச் சொல்லும்போது, குறிப்பாக, அது சரிவர நடக்கவில்லை. தூத்துக்குடியில் ரூ. 5,000 காணாமல் போயிருக்கிறது. காரணம் எதுவாக இருந்தாலும், ஊராட்சித்தலைவரே மதிய உணவுக்கும் பொறுப்பு உள்ளவராக இருக்கிறார். மதிய உணவு கொடுக்கிறோம் என்று சொல்லி, இப்படி கொடுக்காமல் இருப்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உடனடியாக இதன்பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும், கலைக் கல்லூரிகளுக்கு விளையாட்டு சம்பந்தமாக ரூ. 14,474 குறைத்திருக்கிறார்கள். விளையாட்டு முக்கியமாக மாணவர்களுக்குத் தேவை.

மேலும், பாவம், ஆங்கிலோ-இந்தியன் பிள்ளைகளுக்கு டீச்சிங் கிராண்டை ஒரு லட்சம் அளவில் குறைத்திருக்கிறார்கள். ஆங்கிலோ-இந்தியன் ஏழைக் குழந்தைகளுக்கு உதவி கொடுப்பதில் ரூ. 2,345 குறைத்திருக்கிறார்கள். லைப்ரரி என்ற வகையில் 1967–68ல் இருந்ததைவிட இப்பொழுது 4,40,000 ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில், கல்வியை அதிகமாக்க வேண்டும் என்கிற இந்த சமயத்தில், எல்லோரும் அதில் அதிக அக்கறை கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும் என்று சொல்லும்போது, இது போன்று நல்ல பல ஆக்க வேலைகளைப்பற்றி பரிசீலனை செய்ய ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்றாலும், அமைக்க வேண்டும், தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லுகிறேன். அதே நேரத்





திலே பிரதான எதிர்க்கட்சியின் சார்பில் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையையும் எதிர்த்து என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் இந்த கல்வி மானியத்திற்காக ரூ. 66 கோடியைக் கேட்கிறார்கள். உண்மையிலேயே இது மிகமிகச் சிறந்த சாதனையாகும். ஏனென்றால், கல்வியை எல்லா மக்களுக்கும் கொடுத்தால்தான், சமுதாயத்தில் மக்கள் முன்னேற முடியும். இப்படிப்பட்ட சிறந்த சாதனை காரணமாகத்தான், மாண்புமிகு அமைச்சர் ரூ. 66 கோடியை மானியமாகக் கேட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், கல்வியானது, கிராமப்புறங்களில் பரவ வேண்டும். இன்னும் தினம் பெரிய பெரிய நகரங்களிலே பரவிக்கொண்டு இருக்கிறது. ஆனால் கிராமப் புறங்களிலே பரவ வேண்டும் என்பதற்காக அமைச்சர் ... முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

துவக்கப் பள்ளிகள் ஆரம்பிப்பதில் நாம் எவ்வளவு அக்கறையோடு இருந்தாலும், ஜனத்தொகை அடிப்படையில் ஒரு மைலுக்கு உள்ளாக ஆரம்பிக்க முடியாது என்றும், 300க்கு 10, 20 குறைந்தால் கூட இடம் கொடுக்க முடியாது என்கிற சட்டம் குறுக்கே இருக்கிறது. ஆரம்பிக்க முடியாத நிலை இருக்கிறது. காலதாமதம் செய்கிறார்கள். அரசாங்கத்திற்கு எழுதி, உத்தரவு வருவதற்குள்ளாக 4, 5 மாதங்கள் ஆகிவிடுகின்றன. உரிய காலத்தில் உத்தரவுகள் கொடுக்க அரசாங்கம் தனிக்கவனம் செலுத்தி, ஜூன் மாதத்தில் உத்தரவு கொடுக்கக் கூடிய முறையில் ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும். ஜனவரியிலிருந்து ஆரம்பித்து, துவக்கப் பள்ளியை ஆரம்பிக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பல கிராமங்களில் பள்ளிகளுக்குக் கட்டடம் இல்லை. காரணம் பஞ்சாயத்துக் களின் பங்கை அவர்களால் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. அதன் காரணமாக, கூரைக் கட்டடத்தில் 10, 15 ஆண்டுகளாக நடத்திவிட்டு, நல்ல முறையிலே கட்டடம் கட்டப்படாமல் இருப்பதால், அரசாங்கம் தனியாக கவனம் செலுத்தி, எங்கு பஞ்சாயத்துக்கு தன் பங்கைக் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறதோ, அங்கே அரசாங்கத்திலேயே கட்டடம் கட்டித்தரக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பல உயர் நிலைப் பள்ளிகள் சென்ற அரசினாலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. 80, 90 பிள்ளைகள் இருக்கும் இடங்களில் உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. அவற்றை மூடிவிட வேண்டும் என்று சொல்லவில்லை. ஒரு பள்ளியில் 90 பிள்ளைகளும், மற்றொன்றில் 73 பிள்ளைகளும் படிக்கிறார்கள். ஆனால் ஆசிரியர்கள் 10 பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன செலவு ஆகிறது? என்ன காரணத்தாலோ இவற்றை ஆரம்பித்து விட்டார்கள். இந்தப் பள்ளிகளெல்லாம், மூன்று மைலுக்குப் பக்கத்திலே இரண்டு பள்ளிகள் இருக்கின்றன. இதுபோன்ற பள்ளிகளை எல்லாம் மாற்றி அமைக்க வேண்டும். ஆண்களுக்கு ஒன்றும், பெண்களுக்கு ஒன்றும் என்று மாற்றி அமைத்து, பெண்கள் படிக்க கொஞ்சம் சதவிகிதம் அதிகமாக இருக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பல உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டடம் இல்லாமல் இருக்கிறது. துவக்கப் பள்ளிகளுக்கும் நீண்ட காலமாக கட்டடம் இல்லாமல் இருக்கின்றது. அதில் அக்கறை காட்டப்படவில்லை. கூரைக் கட்டடத்திலும், தெருத் திண்ணையிலும் இருக்கின்றன. இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். ஐந்தாண்டுத் திட்டத்தில் பணத்தை மத்திய சர்க்காரில் கேட்டு வாங்கி, இந்தத் துவக்கப் பள்ளிகளுக்கு கட்டடம் கட்டவும், உயர் நிலைப் பள்ளிகளுக்கு கட்டடம் கட்டவும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பெண்களுக்கென்று பள்ளிகள் திறக்கப்பட வேண்டும். பரவலாக ஆண்களுக்கு திறக்கிறார்கள். இப்படிப்பட்ட கோரிக்கைகள் கிராமப் புறங்களில் இருக்கின்றன. இனித் திறக்க இருக்கும் பள்ளிகளை பெண்களுக்கு அதிகமாகத் திறக்க வேண்டும். சில மாணவர்கள் கால் நொண்டியாக இருக்கிறார்கள். அவர்கள் உயர் நிலைப் பள்ளி வரையில் படித்து விடுகிறார்

கள். ஆனால் அவர்கள் வேலைக்குச் செல்லும்போது, கலை ஆசிரியர் என்று சொல்லி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் கூட எடுப்பதில்லை. அவர்களைப் பத்தாவது வகுப்பில் படிக்கக் கூடிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்துவிட்டு, பிறகு வேலைக்கு போகும்போது அவர்களுக்கு [illegible] இருப்பது வருந்தத்தக்கது. ஆகவே, உடனடியாக [illegible] கவனித்து பயிற்சிப் பள்ளியில் அவர்களுக்கு இடம் கொடுக்க ஆவன செய்ய வேண்டும்.

ஒன்றே ஒன்று சொல்லவேண்டும். திருவண்ணாமலையில் ஒரு கல்லூரி ஆரம்பித்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. பல்கலைக் கழகம் ஒரு நபர் கமிஷனை அனுப்பி பட்டப் படிப்புக்கு வசதி செய்வது குறித்து, போதிய கட்டடம் இல்லாததால், முடியாது என்று சொல்லியிருக்கிறது. மூன்று ஆண்டு காலத்திற்கு பட்டப் படிப்புக்கு இடம் இல்லாவிட்டாலும், இரண்டு ஆண்டுக்கு வேண்டிய இடம் இருக்கிறது. அது மட்டுமல்லாமல், கட்டட வேலை இந்த ஆண்டு ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு அதற்குள்ளாக பட்டப் படிப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

* **திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது சில கருத்துக்களை கூற வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவிக்கிறேன். ஆரம்ப பள்ளி முதல் கல்லூரி வரை கல்விக்காக நம்முடைய அரசு ரூ. 66 கோடி செலவு செய்யக் கோரியிருக்கிறது. அது பாராட்டத்தக்கது. ஆனால் அதே சமயத்தில் கல்வியின் தரம் உயரவில்லையென்று நம்மிடையே பரவலாகக் கருத்து நிலவுகிறது. பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் இருக்கும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் அல்லலபடுகிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும், அந்தப் பள்ளிகளையெல்லாம் அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனில் ஒரு எஜுகேஷனல் ஆபீசர் இருக்கிறார். தணிக்கைக்காக சர்க்கார் ஆய்வாளர் வருகிறார். இப்படியுள்ள இரட்டை நிர்வாகத்தைத் தவிர்ப்பதற்கும், இதிலுள்ள சிக்கல்கள், கஷ்டங்களைத் தீர்ப்பதற்கும் ஒரே வழி என்னவென்றால், இந்தப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்துவதுதான். சர்க்கார் இதுபற்றித் தீவிரமாக கவனம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுவரையில் நடைபெற்றுவரும் நண்பகல் உணவுத் திட்டம் சீரான முறையில் நடைபெறுவதில்லை, இதில் பல சீர்கேடுகள் இருக்கின்றன, குறைபாடுகள் இருக்கின்றன என்று பல உறுப்பினர்களும் சொன்னார்கள். இவைகளை நிவர்த்திக்க ஒரே வழி என்னவென்றால், பள்ளி ஆசிரியர்களை திட்டத்திலே சேர்க்காமல், ஆசிரியர்களைச் சம்பந்தப்படுத்தாமல் இருப்பது தான். தற்போது சேக்காட்டில் மைய சமையற்கூடம் வைத்து நடத்துவது போன்ற ஒரு திட்டத்தை மாநிலம் முழுவதற்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாண்டு அமெரிக்க நாட்டு "கேர்" நிறுவனத்தார் 60 லட்சம் ரூபாய் தருகிறார்கள். 1969-70-ஆம் கல்வி ஆண்டிலே 30 ஊராட்சி ஒன்றியங்களில் மைய சமயற்கூடத் திட்டத்தை விரிவுபடுத்தி, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளாக இந்தத் திட்டத்தை மாநிலம் முழுவதிலும் விரிவுபடுத்த வேண்டும். ஆசிரியர்களை இந்தத் திட்டத்தில் பண வசூல், பொருள் வசூல் போன்ற காரியங்களில் ஈடுபடுத்தக்கூடாது.

மேலும், நாம் அமெரிக்க "கேர்" நிறுவனத்தாரை அதிக தொகையைக் கொடுக்கும்படி கேட்டு, வருஷத்திற்கு 60 என்ற அளவில் மைய சமையற்கூடங்களை விரிவுபடுத்திக்கொண்டு போனால், நான்காவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் எல்லா யூனியன்களிலும் மைய சமையற்கூடங்கள் அமைக்கப்பட்டுவிடலாம்.

அடுத்தபடியாக, முன்பு கழக உயர்நிலைப் பள்ளிகளாக—போர்ட் ஹைஸ்கூல்ஸ்—இருந்தவை தற்போது சர்க்கார் உயர்நிலைப் பள்ளிகளாக—கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல்ஸ்—மாறியிருக்கின்றன. முன்பு கழக உயர்நிலைப் பள்ளிகளாக இருந்ததற்கும், தற்போது சர்க்கார் உயர்நிலைப்



பள்ளிகளாக இருப்பதற்கும் வித்தியாசம் அதிகம் இருக்கிறது. கல்வியின் தரம் குறைந்துகொண்டே வருகின்றது. இந்த கவர்ன்மெண்ட் ஹைஸ் கூல்களை எடுத்துக்கொண்டால் ஒழுங்கான பர்னிச்சர்கள் கிடையாது, நல்ல கட்டிடங்கள் கிடையாது. "கட்டிடக் கமிட்டி" இதை நல்ல முறையில் கவனித்து நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுடைய பேச்சை இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** தனியார் பள்ளியில் இருக்கிற—"நான்-டீச்சிங் ஸ்டாஃப்"—குமாஸ்தாக்கள், எழுத்தர்கள் போன்றவர்களுக்கு ஓய்வுக்கால பென்ஷன் திட்டம் விரிவுபடுத்த வேண்டும். கணக்கெடுத்துப் பார்த்தால் அவர்கள் எண்ணிக்கை பத்து சதவீதம்தான் இருக்கக்கூடும். ஆகவே, அரசாங்கத்திற்கு இதில் அதிக சிரமம் இல்லை, ஏனெனில், செலவு அதிகம் இல்லை, ஒரே பள்ளியில் வேலை செய்யும் நிலைமை ஆசிரியர் முதற்கொண்டு எல்லோரும் பயன் அடைந்து வரும் திட்டத்தில் ஏழை எழுத்தர்களுக்கு மட்டும் விதிவிலக்கு இருக்கும் நிலை நியாயமற்றது.

அடுத்தபடியாக, சர்க்கார் பிறப்பிக்கும் உத்தரவுகளிலே முரண்பாடுகள் இருக்கின்றன. உதாரணமாக, என் பகுதியில் ஒரு பள்ளியில், செகரடேரியட் அசிஸ்டெண்டாக, தகுந்த யோக்கியதாம்சங்கள் பெற்று நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருந்தார். அவரும் வேலை செய்து வந்தார். பின்னர் வந்த ஒரு தாக்கீதைச் சுட்டிக்காட்டி, அவர் நேஷனல் டிப்ளமா பெற்றிருக்க வேண்டும், இல்லாவிட்டால் பதவியில் இருக்க முடியாது என்று கூறி, அவரைப் பதவியிலிருந்தும் நீக்கிவிட்டார்கள். நியாயமாக அவருக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கக்கூடாது. அவர் பல நாட்கள் கெட்டு அலைந்து, கல்வி இலாகாவிலிருந்து வியாக்யானம் பெற்று, மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இப்படிப்பட்ட அவதி நிலை யாருக்கும் ஏற்படாதிருக்க, **qualifications and scales of pay** என்பது போன்ற அதிகார பூர்வமான ஒரு வெளியீட்டை "புக்லெட்" ரூபத்தில் ஆக்கிக் கொடுத்து, முன்னுக்குப்பின் முரண் இல்லாமல் காரியங்களை ஆற்ற இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கூறி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. இரா. மாணிக்கவாசகம் :** தலைவர் அவர்களே, கல்வி மானியத்தின் மீது பேசுவதற்கு முன், "கற்றதனாலாய பயனென் கொல்" என்றவள்ளுவன் வாக்கிற்கேற்ப வாழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவுக்கு என்னை ஈன்றெடுத்த தாயின் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் முதற்கண் வணக்கத்தையும் இரங்கலையும் தெரிவித்து, என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கல்விக்காக நம்முடைய அரசு 23 சதவீதம் தொகை ஒதுக்கியிருக்கிறது. "கல்வியின் தரம் குறைந்து விட்டது, சீர்பட வேண்டும்" என்று பலர் பேசுகிறார்கள். நம்முடைய உழைப்பெல்லாம் விழலுக்கிறைத்த நீராகப் போகும் முறையில் நாம் செயல்படவில்லை. "இளமையில் கல்" என்ற முதுமொழிக்கும், "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்ற பழமொழிக்கும் ஏற்ப நாம் ஆரம்பக் கல்வியையும் சீர்படுத்த வேண்டும். இந்தத் துவக்கம்தான் "ஒழுக்கம் விழுப்பம் தரலான்; ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்ற வகையிலே சேர்க்கும் என்று கருதுகிறேன். எனவே ஆரம்பக் கல்வி, நடுத்தரக் கல்வி சிறப்புறும் வகையிலே அமைச்சர் அவர்கள் வகை செய்திருக்கிறார்கள். இதற்கு முன்னாலே இருந்த கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பெரிய நாயக்கன்பாளையத்தில் உள்ள பயனீர் மில்ஸ் ஹைஸ்கூலில் 1,000 மார்க் (ஆயிரம் மார்க்) என்ற திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். நானும் அதை நேரிலே சென்று கண்டிருக்கிறேன். அமைச்சர் அவர்களையும் அழைத்துச் சென்று காண்பித்திருக்கிறேன். இந்தச் சட்ட மன்ற உறுப்பினர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் காண வேண்டுமென்று விழைகிறேன். 400 மார்க்குகள் கையெழுத்திற்கும்

நன்னடத்தைக்கும், ஓவியம் தீட்டுவதற்கும் மற்ற ஒழுக்க நெறிக்களுக்கும் கொடுக்கப்படுகின்றன. பையன் 600 மார்க்குக்கு குறைவாக பாடத்தில் மார்க் வாங்கியிருந்தாலும், ஒழுக்கத்தின் மூலமாக அதிகமான மார்க் வாங்கியிருந்தால் மாணவன் வகுப்பில் தேறும் நிலையில் வைக்கப் படுவான். அந்த மாணவன் உண்மையிலேயே ஒழுக்கம் நிறைந்தவனாக, ஆற்றல் நிறைந்தவனாக காட்சியளிப்பதைப் பார்க்கிறோம்.

அடுத்தபடியாக ஆரம்பப் பள்ளிகளில் பொதுவாக இரண்டு ஆசிரியர்கள் இருப்பார்கள். 50, 60 மாணவர்கள் இருக்கிறார்கள் என்றால் இந்த இரண்டு ஆசிரியர்கள் போதும். ஒரு பள்ளியில் இரண்டு ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்றால், அதில் ஒரு ஆசிரியர் மதிய உணவுத் திட்டத் திற்காக வேலை செய்யவோ, மற்றக் காரியங்களுக்கோ போய்விடுவார், மற்ற ஆசிரியர் ஒருவரே இந்த 50, 60 மாணவர்களைத் திரட்டி வைத்துக் கொண்டு பாடம் நடத்தும் நிலையைப் பார்க்கிறோம். இந்தக் குறை களையெல்லாம் அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மத்திய அரசு உயர்தரக் கல்விக்காக மானியம் வழங்கு கிறது, கல்லூரிப் படிப்புக்கு மானியம் வழங்குகிறது. ஆனால் அடிப்படை கல்வியான ஆரம்பக் கல்விக்கு மானியம் தர மறுக்கிறது. இந்த நிலையைப் போக்க இந்த அரசு வலிமையாகவும், கடுமையாகவும், அதே நேரத்தில் பண்பாகவும் மத்திய அரசிடமிருந்து ஆரம்பக் கல்விக்கு மானியத்தைக் கேட்டுப் பெற வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆசிரியராகவும் இருந்திருக்கிறார். ஆரம் பப் பள்ளியிலே ஆசிரியராக இருந்து, உயர்ந்த அமைச்சரவையையும் ஆக்கித் தந்திருக்கிறார். பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைவாக சிறப்பு பரிசு நிதித் திட்டத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியைப் பொறுத்து, கணபதி கிராமத்திலும், சுண்டப் பாளையம் கிராமத்திலும் பள்ளி மோசமான நிலையில் இருக்கிறபடியால் கட்டிடம் கட்டித்தர அரசு கவனம் செலுத்த வேண்டுகிறேன்.

அடுத்தபடியாக, கோவை மாவட்டத்திலே விவசாயக் கல்லூரி, பொறி யியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்ற கல்லூரிகள் இருக்கின்றன. அரசு அருள்கூர்ந்து, மெய்வருத்தம் பாராமல், பசி நோக்காமல், கண் துஞ்சாமல், எவ்வெவர் தீமையையும் பாராமல் கோவை மாவட்டத் தில் சர்வகலாசாலை ஒன்றை அமைக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்தில் என்னுடைய கட்சி கொண்டுவந்த வெட்டுத் தீர் மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கல்விக் காக பல கோடி ரூபாய்களை ஒதுக்கியிருந்தும் கூட, வரவு-செலவுத் திட்டத்தில் 23 சதவீதத்தை ஒதுக்கியிருந்தும் கூட பூரணமாக எந்த நோக்கத்திற்காக நாம் பயன்படுத்தவேண்டுமோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோமா என்றால், மிகவும் வருந்தத்தக்க நிலையில் இந்தத் திட்டம் இருக்கிறதென்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். கல்வி என்பது மிகவும் முக்கியம். எல்லோருக்கும் கல்வி முக்கியம். மக்களுடைய அறியாமையைப் போக்க வேண்டும், வறுமையைப் போக்க வேண்டும். வறுமை போனால்தான் இந்த நாடு
பி.ப. -00 பண்புள்ள நாடாக அமையும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

நமது தமிழக சென்னை சர்வகலாசாலைக்கு முன்னாலே நல்ல பெருமை இருந்தது. இதில் படிக்கிறவர்கள் தான் சிறந்தவர்கள் என்று கருதப் பட்டது. தரம் உயர்வானது என்று இந்தியாவில் மட்டும் அல்ல, உலகத்தி லேயே பெருமை இருந்தது. அப்படிப்பட்ட சென்னை சர்வகலாசாலையின் நிலையை இப்போதுள்ள நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்ப்போமானால்



மிக மிக வெட்கப்படவேண்டியதாக இருக்கிறது. முன்பு நம் மாநி லத்தைச் சேர்ந்தவர்கள் தான் ஐ.ஏ.எஸ்., ஐ.சி.எஸ். ஆகியவற்றில் மிக அதிக அளவில் தேர்ச்சி பெற்றார்கள். உயர்ந்த பதவியில் இருந் தார்கள். ஆனால் இன்றைக்கு அந்த நிலை போய்விட்டது. ஒருவர், இருவர் தேர்ந்தெடுக்கப்படுவது கூட இல்லை என்கிற நிலைக்கு வந்து விட்டோம், இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? கல்வியின் தரம் முன்னால் இருந்த மாதிரி கிடையாது. பெருமளவாகக் குறைந்து வருகிறது. இதற்கு சர்க்கார் மட்டும் காரணம் அல்ல. மாணவர்கள் மட்டும் காரணம் அல்ல, ஆசிரியர்கள் மட்டும் காரணம் அல்ல. ஆனால்தவறு எங்கோநடந்து கொண்டிருக்கிறது. உண்மையில் மிகவும் பிற்போக்கான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறோம்.

இதற்குக் காரணம் மாணவர்களிடையே அரசியல் புகுந்தது தான், ஆசிரியர்களிடையே அரசியல் புகுந்ததுதான். இல்லை என்று மறுக்க முடியுமா ? ஆசிரியர்கள் ஆசிரியர்களாக இருக்கிறார்களா ? நான் முன்பும் இந்த மன்றத்திலேயே சொல்லியிருக்கிறேன். கேள்வித் தாள்களை எல்லாம் கொண்டு வந்து காட்டினேன். " ஏ " இஸ்டு "பி" இஸ்டு ".ஸி " என்கிற அல்ஜீப்ரா கணக்கிலே " டி " இஸ்டு " எம் "; இஸ்டு " கே " என்பதாக—"டி.எம்.கே. " அந்த வார்த்தையை கணக்கு வினாத்தாளிலே புகுத்துகிறார்கள் என்றால் அவர்களிடையே அரசியல் புகுந்து விடவில்லையா ? அது மட்டுமா ? கூட்டு வியாபாரக் கணக்கிலே மந்திரிகளின் பெயர்களையெல்லாம் இழுத்திருக்கிறார்கள். மதியழகனும் கருணாநிதியும், நாவலரும் கூட்டு வியாபாரம் செய்தார்கள் என்பதாக வினாத்தாள் குறிக்கப்படுகிறது என்றால் இதை அனுமதிக்கலாமா ? இந்த மன்றத்திலே அதைக்கொண்டுவந்து காட்டினேனே, உடனே அந்த ஆசிரியர் பதவியில் இருந்து நீக்கப்பட்டிருந்தால் இது போன்ற நிலை வளருமா ? கல்வியின் தரத்தை உயர்த்தவேண்டும் என்று நினைத்திருந் தால் அப்போதே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா ? இன்றைக்கு இந்த அரசாங்கம், நாளைக்கு வேறு ஒரு அரசாங்கம்—கல்வித்துறையிலே அரசியல் புகலாமா ? இன்றைக்கு மாணவர்கள் தங்கள் இஷ்டம் போல் நடந்துகொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் தங்கள் இஷ்டம்போல் நடந்துகொண்டிருக்கிறார்கள். எப்படி கல்வியின் தரம் உயரும் ? இது நல்ல போக்கா ? ஆட்சியாளர்கள், பொறுப்பில் உள்ள வர்கள் இதை உணர வேண்டுமென்றுதான் பணிவோடு வற்புறுத்து கிறேன்.

சர்க்காரிடத்தில் நிலையான கொள்கை கிடையாது. மொழிப் பிரச்சி னையை எடுத்துக்கொள்ளுங்கள். இவர்களுக்குத் திட்டவட்டமான கொள்கை இருக்கிறதா ? ஏதோ எல்லாம் தானாகவே இயங்கி, தானாகவே சரியாகப்போய்விடும் என்று நினைக்கிறார்கள். எப்படிப்போகும் ? ஏற் கனவே இருக்கக்கூடிய பல பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு, பல கட்சிக்காரர்களையும் கலந்துகொண்டு மும்மொழித் திட்டத்தை ஏற்படுத் தினோம். இந்தச் சர்க்கார் வந்தவுடன் இருமொழிக் கொள்கை என்று சொல்லிவிட்டார்கள். இதனால் ஏற்படுகிற சாதக பாதகங்கள் என்ன என்று ஆராய்ந்து பார்த்தார்களா ? நம்முடைய எதிர்காலச் சந்ததி யார்களுக்கு எது நல்லது என்று ஆராய்ந்தார்களா ?

தமிழ் ஆட்சி மொழி ஆகவேண்டுமென்பதில் சந்தேகம் கிடையாது. 1956 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே ஆட்சி மொழிச் சட்டத்தைக் கொண்டுவந்தோம். அதிலாவது வேகமாக முன்னேறினோமா ? அங்கே யும் விவகாரம். நாம் இங்கே தமிழ்மொழியின் மூலம் போதனை நடத்தப்பட வேண்டும் என்று சொல்வோம். இங்கே ஒத்துக்கொள்கிற ஆசிரியர்கள் அங்கே போய் மாணவர்களை " இதை எண்டா எடுத்துக் கொள்கிறாய் ? ஆங்கில மீடியத்திலேயே சேர் " என்று சொல்வார்கள். ஆக, இன்றைக்கு நாட்டில் கல்வித்துறை சீரழிந்து வருவதற்குக் காரணம் ஆசிரியர்கள்தான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலை வளர்ந்துவிட்டது. படிக்க வேண்டுமென்ற ஆர்வமே போய்விட்டது.

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே யிவர்க்குநா மென்று"

என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு அந்த நிலை எங்கே இருக்கிறது? ஒன்று சொல்லுகிறேன். என்னுடைய மகன் என்ஜினீயரிங் கல்லூரியில் படிக்கிறான். நான்கு நாட்கள் பள்ளிக்குப்போகவில்லை என்றவுடன் நான் டெலிபோனில் பிரின்சிபாலைக் கூப்பிட்டு அவனை வெளியேற்றச் சொன்னேன். அவர் ஆச்சரியப்பட்டார். அதே நேரத்தில் போர்ஜரி கையெழுத்திட்ட நம்முடைய மாணவரை பள்ளியைவிட்டு வெளியேற்றவேண்டாம் என்று இன்னொரு போனட் வந்து கெஞ்சிக்கொண்டிருந்தார். எதற்காகச் சொல்கிறேன்? பெற்றோர்களும் கண்டிப்புடன் நடந்து கொண்டாகவேண்டும். படிக்கவில்லை என்றால் என் முகத்தில் விழிக்காதே என்று என் பிள்ளையிடம் சொல்லிவிட்டேன். இப்படித்தான் ஒவ்வொரு தந்தையும் இருந்தாகவேண்டும். மாணவர்கள் ஒழுக்கத்தோடு இருக்கவேண்டும் என்பது மட்டும் அல்ல, ஆசிரியர்களும் ஒழுங்காக இருக்க வேண்டும். பெற்றோர்களும் ஒழுங்காக இருக்க வேண்டும். அதை விட்டு கட்சி விளம்பரத்திற்காக—கட்சி பிரச்சாரத்திற்கு அதை ஓரிடமாகக் கொள்வது நாட்டுக்குப் பெரும் தீங்கை விளைவிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்படித்தான் மாணவர்களிடம் இந்த ஆட்சி உண்மையான பரிவோடு நடந்துகொள்கிறதா என்று பார்த்தால் இல்லை. போன வருஷம் மார்ச் 25 ஆம் தேதி அன்று ஹாஸ்டலுக்குள் எல்லாம் நுழைந்து, கல்லூரிகளுக்குள் எல்லாம் நுழைந்து சக்கைஅடி அடித்தார்களே, பட்டை தீட்டினார்களே, சோமசுந்தரம் கமிஷனைப் போட்டார்களே, என்ன ஆயிற்று ? ஜனவரியில் ரிபோர்ட் வரும் என்றார்கள், ஜனவரி ஆயிற்று, பிப்ரவரி ஆயிற்று, மார்ச்சும் வந்துவிட்டது, எங்கே ரிபோர்ட் ? மாணவர்களுக்கு நஷ்ட ஈடு தருவதாகச் சொன்னார்களே, மதிப்பிற்குரிய ம.பொ.சி. அவர்கள் வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் என்றார்களே, நஷ்ட ஈடு தருகிறேன் என்று சொன்ன வாக்குறுதி என்ன ஆயிற்று ? அஷ்யூரன்ஸ் கமிட்டிக்குப் போய் வருவதற்குள் 3 ஆண்டு ஆகிவிடும். " ஜஸ்டிஸ் டிலேய்ட் ஈஸ் ஜஸ்டிஸ் டினைய்ட் " என்று சொல்வார்கள். நீதி தாமதப்படுகிறபோது, நீதி மறுக்கப்படுகிறது. மாணவர்களுக்கு எப்படி நிம்மதி ஏற்படும் ? அவர்களுடைய பிரச்சினை எங்கே தீர்க்கப்பட்டது ?

பிரச்னைகளிலே அரசியல் புகுந்துவிடுகிறது. அண்மையிலே சட்டக் கல்லூரியில் ஒரு சிறிய பிரச்னை—பெரிய பிரச்னையாகிவிட்டது. மறைந்த முதலமைச்சருக்குச் சிலை அங்கே வைக்கவேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்னை. அரசியலைக் கல்லூரியிலே கொண்டுவைக்கிறார்கள். மெஜாரிடி, மைனாரிடி அபிப்ராயம் பற்றி எனக்கு அக்கறையில்லை. ஒரு சிலர் சிலை வைக்கவேண்டுமென்று கேட்டார்கள். யார் சொன்னாலும் சரி சிலை வைக்கக்கூடாது என்ற நிலையும் இருந்தது. அந்த மாணவர்கள் முதலமைச்சரைச் சந்தித்திருக்கிறார்கள். அவர்கள் என்ன பேசினார்கள் என்பதுபற்றித் தெரியவில்லை. என்னிடம் அவர்கள் வந்தார்கள். நான் முதலமைச்சரைச் சந்தித்து பிரச்னையைத் தீர்த்து வைக்கிறேன் என்று சொன்னேன். நான் அரசியலாக்கிக்கொண்டு விளையாடி இருக்கலாம். அது வேண்டாம். நான் உடனே அந்தக் காரியத்தை சுமுகமாக சீராக முடிக்கக்கூடிய பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். மாணவர்களும் ஒத்துக் கொண்டார்கள். முதலமைச்சர் அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். அவர் நல்லவர்தான். சட்டசபையில் வந்தவுடனே கொடுத்தால் கையெழுத்து வேண்டாமா என்று கேட்கிறார்கள், நான் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தை நான் படிக்கவில்லை. கனம் சபாநாயகர் அவர்கள் நான் படிக்கப்போகிறேன் என்று நினைத்துப் பார்க்கிறார்கள். நான் விஷயத்தைத்தான் சொல்ல விரும்புகிறேன். கடிதமும் எழுதியிருக்கிறேன். அண்ணா அவர்கள் சிலை வைப்பது சம்பந்தமாக 1-ம் தேதி மாணவர்கள்



அவர்களைச் சந்தித்தார்கள், என்னையும் சந்தித்தார்கள். அவர்கள் சந்தித்துப் பேசிய சமயத்திலே ஒரு கல்வி ஸ்தாபனத்திலே ஒரு அரசியலாக ஆகிவிடும், அதுமாதிரி வேண்டாம். அண்ணா அவர்களுக்குச் சிலை வைப்பதாலே பெருமை வந்துவிடப்போவதில்லை, சிலை வைக்காததாலே கௌரவம் குறைந்துவிடப் போவதில்லை. குழப்பம் இருக்கக்கூடிய சூழ்நிலையிலே இதை சிக்கலான பிரச்னையாக ஆக்கக்கூடாது என்று சொன்னோம். அவருக்குக் கௌரவம் அளிப்பதைவிட ஒரு சிக்கலான பிரச்னையை உண்டுபண்ணுவது நல்லதல்ல என்று நாம் ஒருமித்த கருத்துக்கொண்டோம். மாணவர்களிடையே அமைதியின்மையையும் குழப்பத்தையும் கிளப்பி இருக்கும் இந்தப் பிரச்னையை ஒத்திப்போடுவது நலம் என்று முடிவு செய்தோம் என்று எழுதியிருக்கிறேன். ஆகவே இந்த விஷயத்தை ஒத்திப்போடுவதற்கு வேண்டிய துரித நடவடிக்கையை மேற்கொள்வதன்மூலம் மாணவர்களிடையே அமைதியைக் காக்க வழிகோலும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்வதுடன், தங்கள் உடன் நடவடிக்கையை அறிய மிக்க ஆவலுள்ளவனாக இருக்கிறேன் என்றும் கடிதத்திலே எழுதியிருக்கிறேன். இதற்குப் பதில் வேண்டாமா ? எதிர்க் கட்சித் தலைவருக்கு கௌரவம் அளிக்கிறேன் என்று சொல்கிறார்கள். நானே போஸ்ட்மாஸ்டர் வேலை பார்த்து நேரிலேயே கொடுத்தேன். அதற்கு உண்டா இல்லையா என்று பதில் சொல்லவேண்டாமா ? என்ன நடவடிக்கை என்றால் சிலையும் முதலமைச்சரால் திறக்கப்பட இருக்கிறது. இதுதானா எதிர்க் கட்சித் தலைவருக்குக் கொடுக்கக்கூடிய மரியாதை. வேண்டாமென்று சொல்லவில்லையே, இப்பொழுது குழப்பமாக இருக்கிறது என்று சொன்னேன். ஒத்திப்போடவேண்டுமென்று சொன்னேன்..

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எதிர்க் கட்சித் தலைவர் முதலமைச்சர் அதுபற்றிப் பேசவில்லை என்று கோபித்துக்கொண்டார்கள். அந்தக் கடிதம் கிடைத்ததற்குப் பின்னாலே உங்களோடு அவர்கள் விவாதித்து இருக்கிறார்களா, இல்லையா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கடிதத்திற்குப் பதில் சொல்லவில்லை என்பதுதான் நான் சொல்வது...

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உங்கள் கடிதம் வந்ததாகவும் அதுபற்றி உங்களுடன் விவாதித்ததாகவும் சொன்னார்கள். எனவே அதுபற்றி உங்களுடன் பேசியிருக்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** விவாதித்தார்கள் என்பது வேறு. நான் கொடுத்த கடிதத்திற்கு இப்படி இப்படி விவாதித்தோம், இன்ன முடிவுக்கு வந்திருக்கிறோம் என்று கடிதம் மூலமாக எழுதியிருக்கலாமே. ஒரு பகுதியிலே இருக்கக்கூடிய மாணவர்கள் குழப்பமடைந்திருக்கக்கூடிய நிலைமையிலே, ராஜினாமாச் செய்யக்கூடிய நிலைமையிலே, நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். அந்த மாணவர்கள் இப்பொழுது என்னைச் சந்தேகப்படுகிறார்கள். குழப்பம் வேண்டாமென்ற முறையில் சமாதான முறையில் போகவேண்டுமென்பதற்காகத் தானே கடிதம் கொடுத்தேன். எதற்காகக் கடிதம் எழுதினேன். இந்தப் பிரச்னையை அரசியலாக்க விரும்பவில்லை. ஆனால் நீங்கள் அரசியலாக்கினால் நாங்கள் அதற்குத் தயாராக இருக்கிறோம். ஏற்கெனவே நீங்கள் முடிவு எடுத்துக் கொண்டு அந்த முடிவைத் திணிப்பதற்காகக் குறுக்கு வழியில் போவதா என்பதுதான் பிரச்னை. தைரியமாகச் சொல்லலாமே, இப்படி முடிவு செய்தோம் என்று சொல்லலாமே. மக்கள் உங்கள் பக்கம் இருக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். மெஜாரிடி இருக்கிறது. இந்தப் பிரச்னைகளைக் கல்விக்கூடங்களிலே புகுத்தக்கூடாது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சட்டக் கல்லூரி மட்டுமல்ல, எல்லாக் கல்லூரிகளிலுமே கூடாது. பிரெய்ன் வாஷ் மாதிரி, டி:எம்:கே. என்று எல்லாம் போட்ட மாதிரி இப்படியெல்லாம் செய்கிறார்கள். அதற்கு ஒத்திகை பார்க்கிறார்கள். அப்படிச் செய்வோம், எல்லாம் நாங்கள்தான் என்று சொன்னால், அவர்கள் கையை ஆட்டுகிறார்கள், நாங்கள் அதைப் பார்த்துக்கொள்கிறோம், அந்த சவாலை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 மார்ச் 12

கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டுமென்றால் தமிழ் பாஷை இருக்கவேண்டும். தமிழ் பாஷைதான் வரவேண்டும். என்னுடைய தாய் பாஷை தமிழ் அல்ல, கன்னடம்தான். என் வீட்டிலே கன்னடம் தான். இருந்தாலும், தமிழிலே அவ்வளவு புலமை இல்லாவிட்டாலும் ஓரளவுக்குத்தமிழ் [illegible] நினைக்கிறேன். நான் தமிழை மட்டும் படித்து [illegible] அல்ல, ஆங்கிலத்தையும் படித்து பட்டம் பெற்றிருக்கிறேன். ஆங்கில மொழியைப் படித்து, தமிழ் மொழியையும் படித்திருப்பது சிறப்பு. தமிழை மட்டும் படித்தால் தேவாரத்தோடும் திருவாசகத்தோடும் நின்று இருக்கும். தமிழ், தமிழ் என்று சொல்கிறார்கள், தமிழ் வாட்டும், தமிழிலே விஞ்ஞானம் வர வேண்டும், தொழில் நுட்பம் வரவேண்டும், பெரும் பெரும் மேதைகள் தமிழிலே விளங்கினார்கள் என்றால் தமிழுக்குப் பெருமைதான். ஆனால் பிறர் மேல் தமிழைக்கொண்டு திணிப்பது கூடாது. மொழியிலே பாண்டித்யம் இல்லாவிட்டாலும் விஞ்ஞானத்திலே விற்பன்னர்களாகவும், தொழில் துறையில் வல்லுநர்களாகவும் இருக்கிறவர்கள் சிறப்பாக அவற்றையெல்லாம் தமிழிலே கொண்டுவந்து பிறரை ஈர்க்கக்கூடிய வகை யில் செய்தால் எல்லோரும் அதற்கு முன்வருவார்கள். ஜெர்மன், பிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து, போன்ற நாடுகளிலே...

***திரு. ம. பொ. சிவஞானம் :*** எதிர்க் கட்சித் தலைவர் பயிற்சி மொழிக் கருத்தைத் தவறாக அறிமுகப்படுத்துகிறார்கள். தமிழில் விஞ்ஞானம் படிக்கவேண்டுமென்று சொல்வது, தமிழை மட்டும் படிக்க வேண்டுமென்று சொல்வதல்ல. எஞ்சினியரிங், மருத்துவம் போன்ற வற்றைத் தமிழைப் பயிற்சி மொழியாகக்கொண்டு படிக்கவேண்டுமென்று சொல்லுகிறோம். ஒன்று நினைவோடு அவர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இன்றைய மத்திய அரசாங்கத்தின் கொள்கையை காங்கிரஸ் பாரம்பரியக் கொள்கையை—அதாவது, ஒரு கோடி ரூபாய் எல்லாக் கலை நூல்களையும் பயிற்சிமொழிகளில் கொண்டுவர மத்திய அரசு ஒதுக்கியிருப்பதை அவர்கள் ஏற்கிறார்களா, இல்லையா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, திரு. ம.பொ. சி. அவர்களுக்கு எவ்வளவு வேகம், எவ்வளவு சிரத்தை இருக் கிறதோ அதைவிட 10 மடங்கு எனக்கு இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எல்லாம் தான் தான் என்று சொல்கிற விவகாரம்தான் இது. அதுதான் வேண்டாமென்று சொல்கிறேன். அதே நிலையிலிருந்து கொண்டு நாம் குருடனுகக் கூடாது. விஞ்ஞானம் வளரவேண்டும், மெய்ஞானம் அந்தக் காலத்திலே. ஆங்கிலத்தைக் கற்றறிந்தவர்களால்தான் தமிழில் விஞ்ஞானத்தை வளர்க்க முடியும். அவர்களுடைய கருத்தை அவர்கள் சொல்லட்டும். எங்களுடைய கருத்தை நாங்கள் சொல்கிறோம். தமிழ் வேண்டுமென்று சிலபேர் அட்மிஷன் பண்ணிவிட்டார்கள், பிறகு வேண்டாமென்று ஆங்கிலத்தில் சேர்ந்துவிட் டார்கள். நான் பெயரைச் சொல்லவில்லை. தமிழுக்காக பாடுபடுகிற சிலர் தமிழ் மீடியம் வேண்டுமென்று சொல்லாமல் ஆங்கிலப் பிரிவிலே இடம் கொடுங்கள் என்று கேட்கிற நிலைமை இருக்கிறது.

***திரு. ம. பொ. சிவஞானம் :*** தலைவர் அவர்களே, என்ன மனத் திலே கொண்டு இத்தகைய குற்றச்சாட்டைச் சாட்டுகிறார்களோ என்று நினைக்கிறேன். ஏற்கெனவே இந்த மன்றத்தில் இத்தகைய ஒரு குற்றம் சாட்டப்பட்டு, அதை அவர் வாபஸ் வாங்க மறுத்து, அப்போதிருந்த முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்திய பிறகு, சபையே வற்புறுத்திய பிறகு வாபஸ் பெற்றார்கள். திரும்பவும் நான் குறுக்கிட்ட நேரத்திலே அத்தகைய கருத்தைக் கூறுகிறார்கள். அவ்வாறு அவர்கள் கூறியதைத் திரும்பப் பெறுதிருப்பது கண்ணியமாகாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்போது நான் யாரையும் குறிப் பிட்டுச் சொல்லவில்லையே. இன்னார் என்று நான் யாரையும் குறிப் பிடாமல் சிலர் என்றுதானே சொன்னேன்.



1969 மார்ச் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மா. பொ. சி. அவர்கள் குறுக்கிட்டு விளக்கம் கேட்டவுடனே நீங்கள் இதைக் கூறுகிறீர்கள். ஆகவே, அது தன்னைச் சுட்டுகிறதோ என்று அவர்கள் நினைக்கிறார்கள். இதிலே தெளிவாகச் சொல்லிவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அது பிரச்சினை அல்ல. அவர் பெயரை நான் இப்போது குறிப்பிடவே இல்லை. முன்பு நடந்தது முடிந்து போன விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பலமுறை எடுத்துச் சொல்லியிருக் கிறேன். இந்த மன்றத்திலே குற்றச்சாட்டைச் சொல்லுவதாக இருந்தால் தெளிவாகச் சொல்லவேண்டும். தமிழ் மொழிக்காகப் பாடுபடுகின்ற இன்னின்னர் இவ்வாறு செய்தார்கள் என்று சொல்லவேண்டும். இவ் வாறு பொதுவான குற்றச்சாட்டாகக் கூறும்போது அவர்கள் வேறு ஒன்றைக் கூறுகிறார்கள். அதற்கு இந்த மன்றத்தைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது ; அதிலும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்த முறையிலே பேசக்கூடாது. பொதுவான குற்றச்சாட்டு தேவையில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் சொன்னதைப்பற்றி எந்தக் கல்லூரிப் பிரின்ஸிபாலிடம் வேண்டுமானாலும் சர்க்காரே விசாரித்துப் பார்க்கட்டும். நானும் இப்போது யாரையும் தனிப்பட்ட முறையில் குறிப்பிட வில்லை. சில பேர் என்றுதான் சொல்லியிருக்கிறேன்.

***திரு. ம. பொ. சிவஞானம் :*** தலைவர் அவர்களே, மீண்டும் வற் புறுத்துகிறேன். அரசாங்கமே போய் விசாரிக்கட்டும் என்கிறார்கள். அர சாங்கம் எந்தப் பெயரைச் சொல்லி, யாரிடத்தில் விசாரிப்பது ? அவ்வாறு விசாரிப்பதற்குத் தகவல் கொடுக்க வேண்டும். விசாரிப்பதை நான் வர வேற்கிறேன். எந்தக் கல்லூரியில், யார் பெயரை யார் சிபார்சு செய்தார் என்ற தகவல் தெரிந்தால்தானே அரசாங்கம் விசாரிக்க முடியும். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றும் புரியாமலா வந்திருக்கிறார்கள் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கல்லூரிகள் எத்தனையோ இருக் கின்றன. எத்தனையோ ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள். எந்த மாண வருடைய தந்தை அப்படிக் கேட்டார் என்பது தெரிந்தால்தானே அதைப் பற்றி அரசு விசாரித்தறிய முடியும் ? அப்படிக் கோடிட்டாவது காட்டுவது தேவையில்லையா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அது ஒன்றும் தேவையில்லை. இப்படித் தமிழுக்காகப் பாடுபடுகின்ற ஒரு சிலர் என்றுதான் சொன்னேன். அது நானுகவே கூட இருக்கலாம். நான் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினை. பரீட்சை எதற்காக பரீட்சை வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினை. பரீட்சை எதற்காக வைக்கிறார்கள் ? மாணவர்கள் ஒழுங்காகப் பள்ளிக்கு வந்தார்களா, படித்தார்களா என்பதை அறிவதற்காகத்தான். அந்தப் பரீட்சை முறை நம்முடைய நாட்டில் வெற்றி பெற்றதா, இல்லையா என்பதையெல்லாம் சொல்லுவதற்கு நான் அருகதையற்றவன். அமெரிக்காவில் செமிஸ்டர் குவார்ட்டர் ஸிஸ்டம் என்று இருக்கிறது. கண்டிப்பாக இவ்வளவு நாட்கள் அட்டெண்டன்ஸ் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. அந்தந்த வாரத்தி லேயே தகுதி திறமை நிர்ணயிக்கப்படுகிறது. மூன்று மாதம் ஆறு மாதம் என்று போய்விடுமானால் பரீட்சை என்ற நிலையில் இருந்து விலக்கு இருக்கிறது. இப்போது இங்கே உள்ள நிலை என்ன ? பரீட்சை கஷ்டம், என்பதோடு மட்டுமல்ல, இலவன்த் ஹவர் பிரப்பரேஷன்தான் நடக்கிறது. முந்திய நாள்தான் படிப்பதற்கே ஆரம்பிக்கிறார்கள். எப்படிப் பரீட்சையில் தேர்ச்சி பெற முடியும் ? எப்படி திறமை, ஒழுக்கம் எல்லாம் ஏற்பட முடியும் ? நான் பெரிய பிரச்னைகளையெல்லாம் பேச வேண்டுமென்று நினைத்தேன். நேரமாகிவிட்டது. கடைசியாக ஒரு சில விஷயங்களை மாத் திரம் குறிப்பிட விரும்புகிறேன்.

மாணவர்களுக்கு ஒழுக்கம் நிச்சயமாக இருக்க வேண்டும். மாணவர் களிடையே தேச விரோத சக்திகள் கிளம்பிக்கொண்டிருப்பதை இந்த சர்க்கார் பார்த்துக்கொண்டிருக்குமானால் அது தேசத்தை நாசம் செய்வ தாகத்தான் ஆகும். நேற்று ஒரு பெரிய பிரச்னையை அவை முன் கொண்டுவந்தேன். அதைப் பற்றிப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது என்று கூறி சபாநாயகர் அவர்கள் அதற்கு அனுமதி தரவில்லை. மதுரை யில் ஒரு நிகழ்ச்சி. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கலந்துகொண் டார்கள். தேசிய கீதம் பாடும்படியான ரெகார்டையே உடைத்திருக்கிறார் கள் மாணவர்கள். அதைச் சகித்துக்கொண்டிருக்க முடியாது. தேசிய கீதத்தை அவமதிப்பு செய்வதை எப்படிச் சகித்துக்கொள்வது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எந்த விவரத்தை வைத்துப் பேசுகிறார்கள் என்று தெரியவில்லை. தேசிய கீதம் ரெக்கார்டு அங்கு போடப்படவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இது முன்னாலே நடந்த நிகழ்ச்சி. அப்போது பிளேட்டையே எடுத்து உடைத்திருக்கிறார்கள். இப்போதும் தேசிய கீதம் பாடியவுடனே சத்தம் போட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களே அவர் களைச் சமாதானப்படுத்துவதற்காகக் கடைசியில் சங்கே முழங்கு பாட அனு மதித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது தீர்ந்துபோன விஷயம். அந்த நிகழ்ச்சி பற்றி முதலமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்த பிறகு முடிந்து போன விவாதத்தை மீண்டும் பேசுவது சரியல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதைப் பற்றிப் பேசுவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது என்று கூறி தாங்கள் ஒத்திவைப்புப் பிரேரணையை நிராகரித் தீர்கள். இது எங்கள் ஜீவாதாரமான பிரச்னை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுடைய உரிமையைப் பறிக்க வில்லை. நீங்கள் என்ன சொல்ல வேண்டுமோ அவ்வளவும் சொல்லி, கல்வியமைச்சர் அவர்கள் தன்னுடைய விளக்கத்தைச் சொல்லி முத லமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசி, அந்த நிலைமைக்கான விளக்கத்தை யும் சொல்லி, நீங்கள் "நீங்கள் தானே சொல்லியிருக்கிறீர்கள் கல்வியமைச்சர் அப்படிக் கருத்துத் தெரிவிக்கவில்லையே " என்று கேட்டு, "நான் அவ்விதம் கருதினால் அவரும் அப்படிக் கருதுவதாகத் தான் அர்த்தம்" என்று முத லமைச்சர் அவர்கள் கூறி, இவ்வளவும் ஆன பிறகு அந்தப் பிரச்னையைப் பற்றி மீண்டும் பேசவேண்டுமா ?

**திரு பி. ஜி. கருத்திருமன்:** இதிலே மாணவர்களுடைய பிரச்னை இருப்பதால்தான் பேசுகிறேன். **Discipline is an essential factor for the achievement of anything in the world** என்று மறைந்த நேருஜி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சரவைக்கு வலியூட்ட வேண்டு மென்றுதான் நான் இதைக் கூறுகிறேன். ஒழுக்கத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதற்காகத்தான் சொல்லுகிறேன். எவ்வளவுதான் செலவு செய்தாலும்கூட மாணவர்களிடையே ஒழுக்கத்தை ஏற்படுத்துவதற்கு அரசு பொறுப்பை ஏற்றுக்கொள்ளாத வரையில் பலன் ஏற்படாது. இதுவரை குற்றச்சாட்டுகளை எல்லாம் சொன்னேன். இனி செய்யப்பட்டிருக்கின்ற சில நல்ல காரியங்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

கல்வியமைச்சர் அவர்கள் எல்லா விஷயத்தையும் நன்றாகப் படிக்கக் கூடியவர்கள். அவர்களுக்கு ஒரு தனி மதிப்புண்டு. அவர்கள் எதையும் நன்றாக, அழகாகச் சிந்தித்துப் பேசக்கூடியவர்கள் என்று போன வருஷமே கூடச் சொன்னேன். அதனால் சிலருக்குக் கோபம் கூட வந்தது. டெக்னிக்கல் எஜுகேஷனுக்காக **'A five year Degree Course in electronics and communication engi- neering'**





ஏற்படுத்தியிருப்பது வரவேற்கத் தக்கது. படிப்பை மட்டும் ஏற்படுத்தி விடுவது போதாது. வேலை வாய்ப்பு கிடைக்கும் நிலைமை இல்லை. தமிழ் நாட்டில் ஆராய்ச்சி பெருக வேண்டும். எதிர்காலத்திலே ஆராய்ச்சி பெருகி அதைப் பயன்படுத்திக்கொண்டால்தான் நாட்டு மக்கள் வாழ்வு மலர முடியும். ரிசர்ச் ஸ்காலர்ஸ் பெருக வேண்டும். அதற்கு அதிகப் பணத்தை ஒதுக்க வேண்டுமென்று கூறி எங்கள் கட்சியின் சார்பில் கொண்டுவரப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். பி. ப. 1-30

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை மானியத்தில் மாண்புமிகு அங்கத்தினர்கள் எல்லாம் சிறந்த அக்கறை எடுத்துக்கொண்டு நம் தமிழ் நாட்டிலே கல்வி வளர்ச்சி சிறப்பாக அமைவதற்கான நல்ல பல ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் முன்னாலேயே என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தமிழ்நாடு கல்வித் துறை மற்ற நாடுகளெல்லாம் போற்றத்தக்க அளவிற்கு சிறந்த முறையில் இயங்குகிறது என்பது பல்லாண்டு காலமாக இந்த நாடு ஒப்புக்கொண்டுள்ள உண்மையாகும். அந்தத் துறையில் பணியாற்றக்கூடிய நம்முடைய அரசு அலுவலர்கள் எல்லாம் இன்னும் உற்சாகத்துடன் கல்வித் துறையைச் சீராக நடத்து வதற்கு வாய்ப்பு உருவாகும் இந்த மன்றத்தின் விவாதத்தின் மூலம் என்று நம்புகிறேன். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்க இது ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் கல்வித் துறையில் உள்ள பல பகுதிகள் பற்றி, ஆங்காங்குள்ள குறைகள், அவற்றை மாற்றுவதற்கு வேண்டிய ஆலோசனைகள் இவை பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவற்றை நம் துறையினர் ஒன்றும் விடாது பரிசீலித்து தக்க முடிவுகள் எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக் கிறது.

கல்வி வளர்ச்சி என்பது எதிர்கால சமுதாயத்தை உருவாக்குவதற்கு அடிப்படையானது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இன்று உலகிலே கல்வி வளர்ச்சி போகிற வேகத்தில் நாமும் செல்ல வேண்டும். அறிவியல் கருத்துக்களைப் பெறவேண்டும். நம் நாட்டுக் கல்வி முறை மற்ற நாட்டுக் கல்வி முறைகளோடு ஒப்பிட்டு நோக்கக்கூடிய அளவிற்கு அமைய வேண்டும். அந்த அளவிற்குக் கல்வி வளர்ச்சி நம் நாட்டில் விரைவாக ஏற்பட வேண்டுமென்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. நான் அதைத்தான் பேச வேண்டுமென்று விரும்பு கிறேன். தமிழர் சமுதாயம் எதிர்காலத்தில் சிறப்பாக அமைவதற்கு கல்வி வளர்ச்சியில் நாம் இன்னும் விரைவாகச் செல்ல வேண்டும், அதற் கான ஆலோசனைகளை இந்த மன்றத்தில் நாம் உருவாக்கி அதைப் பரி சீலிக்க வேண்டும். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், இங்கு அதைப் பற்றித்தான் பேசவந்தேன், நிறையக் கொண்டுவந்தேன், ஆனால் நேரம் இல்லையே என்று வருத்தப்பட்டார்கள். நானும் மிகவும் வருத்தப் பட்டேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நமக்காக, நம் நாட்டின் கல்விக்காக, கல்வித் துறையை மேம்பாடு அடையச் செய்வதற்காக, எவ் வளவோ சேகரித்து வந்திருக்கிறார்களே, ஒன்றைக்கூட சொல்லாது கடைசி யில் சிலைக்குப் போய் நின்றுவிட்டார்களே என்ற வருத்தம் எனக்கு ஏற் பட்டது. உண்மையிலே கல்வி வளர்ச்சிக்காக அவற்றைச் சொல்லவேண்டு மென்று கருதினார்களே, அதை நான் பாராட்டுகிறேன், அந்த முயற்சிதான் இன்று நாட்டுக்குத் தேவை.

நல்லதொரு கருத்தை அவர்கள் சொன்னார்கள், அரசியல் கட்சிகளின் பிரசாரங்கள், வாதப் பிரதிவாதங்கள், இவை கல்லூரிகளுக்குப், பள்ளி களுக்கு உள்ளே செல்லாமல் தவிர்த்தால், அது எதிர்கால சமுதாயத் திற்கு நாம் ஆற்றும் ஒரு பெரிய பணி என்று சொன்னார்கள். ஆனால், அந்த வாதங்கள் எல்லாம் எப்படி இந்த சூழ்நிலையைத் தனக்கு சாதகமாக்கிக்கொள்ளலாம் என்ற முறையில் அமைந்தது என்பதை உணர்ந்தேன். இதுதான் இன்று நாட்டின் நிலைமை. இது ஒரு அரசியல்

கட்சி மாணவர்கள் என்பதால் அல்ல. நம் நாட்டிலே இப்படி ஒரு
பாரம்பரியம். ஒரு கட்சியை வளர்ப்பதற்கு எங்கேயாவது பிரச்னைகள்
இடைக்காதா, கட்சியை வளர்ப்பதற்கு அந்தப் பிரச்னைகளைப் பயன்படுத்திக்
கொள்ளலாமே, அடி அடி அடிக்க வைத்து அல்லது கட்டாயமாக சில
ஆணைகளைப் பிறப்பிக்க வைத்து அதன் காரணமாக அரசியல் இலாபம்
பெறலாமா என்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. ஒரு கட்சியைச் சொல்வ
தாக எண்ண வேண்டாம். இன்று நாட்டின் அரசியல் சூழ்நிலை அப்படி
இருக்கிறது. அதைத்தான் அவர்கள் மறைமுகமாக சுட்டிக் காண்பித்தார்
கள். அரசியலை மாணவர்களிடையே புகுத்தாமல் கல்வி வளர்ச்சிக்காகப்
பாடுபட வேண்டும் என்ற கருத்தை அவர்கள் வலியுறுத்திச் சொன்னார்
கள். அவர்கள் சொன்னது, “எங்கள் வருத்தம் எல்லாம் முதல் அமைச்
சர் அவர்களிடம். அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். அதற்குப் பதில்
அளிக்கக் கூடாதா” என்று வருத்தப்பட்டார். எங்கள் முதல் அமைச்சர்
அவர்களைப் பற்றி நாங்கள் அப்படி நினைக்கவில்லை. உங்களிடம் அவர்கள்
மிகுந்த அன்பு கொண்டிருக்கிறார்கள், அடிக்கடி உங்களோடு பேசுகிறார்,
விவாதிக்கிறார், எத்தனையோ பிரச்னைகள்பற்றி உங்களோடு பேசுகிறார்கள்.
நான் இங்கு இருக்கும்போதுகூட மேலே அழைத்தார்கள். எதிர்க் கட்சித்
தலைவர் அவர்களிடம் பேசினேன் என்று சொன்னார்கள். ஆகவே, ஒருக்
காலும் அவர் மனம் புண்பட வேண்டாம். எங்களுக்கு வேண்டியது, நம்
ஆட்சி நல்ல ஆட்சியாக மலர்வதற்கான நல்ல பல யோசனைகள் அந்தத்
தரப்பிலிருந்து வரவேண்டும் என்பதுதான்.

கல்வித் துறையில் நாம் ஏராளமாகச் செலவு செய்கிறோம், நம் வரு
மானத்தில் கால் பங்கு கல்விக்காகச் செலவழிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை
இன்றிருக்கிறது. கல்வி வளர்ச்சியே இல்லை என்று சொல்ல மாட்டார்கள்
என்று நம்புகிறேன். இந்த ஆட்சி வந்து எதையுமே செய்யவில்லை என்று
சொல்ல மாட்டார்கள். என்று நம்புகிறேன். கன்னியாகுமரி மாவட்ட
அங்கத்தினர் அவர்கள் வருத்தப்பட்டார்கள். நாங்கள் கல்லூரிகள் கட்டி
னோம், 66 கோடி ரூபாய் செலவழித்தோம், பள்ளிக்கூடங்களை உரு
வாக்கினோம், ஆசிரியர்களின் எண்ணிக்கையைப் பெருக்கினோம் என்றால்,
இதெல்லாம் ஒரு பெருமையா, நாங்கள் செய்யவில்லையா என்று கேட்டார்
கள். என் நினைவு பின்னோக்கிச் சென்றது. எவ்வளவு பள்ளிக்கூடங்கள்
கட்டப்பட்டன, எவ்வளவு உயர்நிலைப் பள்ளிகள் கட்டப்பட்டன, எவ்வளவு
கல்லூரிகள் திறக்கப்பட்டன, மதிய உணவு இவை பற்றியெல்லாம் கேட்ட
காட்சி என் நினைவுக்கு வருகிறது. ஒரு பெரும் தலைவர் பேசிய பேச்சு
என் நினைவிற்கு வருகிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தால்
இந்த நாட்டிலே உள்ள பள்ளிக்கூடங்களை எல்லாம் மூடிவிடுவார்கள்
என்று சொன்ன பேச்சு நினைவிற்கு வருகிறது. யார் இருந்தாலும் சரி,
தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி ஏற்படத்தான் செய்யும் என்ற பேருண்மையை
1967-ம் ஆண்டு அவர்களுக்கு உணரவைத்தது. இன்று நாம் கல்வி
வளர்ச்சியைப் பெருக்குவதில் எவ்வளவு முயற்சிகளை மேற்கொண்டிருக்
கிறோம் என்பதைப் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டும். அறுபத்து ஆறு
கோடி ரூபாய் என்றால் அந்தப் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது.
அந்தப் பொறுப்பை இந்த அரசு கொஞ்சம்கூட தட்டிக் கழிக்காது.
அதைத் தொடர்ந்து செய்யும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கல்லூரிகள் ஏராளமாக வேண்டும் என்று சொன்னார்கள். மாணவர்
கள் கல்லூரியில் சேரும்போது ஏற்படும் கஷ்டங்களைப் பற்றியெல்லாம்
சொன்னார்கள். இவற்றையெல்லாம் அரசு உணர்ந்து அதற்கு பரிகாரம்
காண முயலுகிறது. கல்லூரிகளை அதிகப்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்
பதை யாரும் மறுக்க முடியாது. ஆண்டுக்காண்டு தனியார் துறையிலும்
அரசுத் துறையிலும் சேர்ந்து பத்துக்குக் குறையாமல் தொடர்ந்து அதி
கரித்துக்கொண்டிருக்கிறோம். இருக்கிற பிரச்னை எல்லாம் எந்தக் கல்லூரி
யில் சேருவது என்பதுதான். எவ்வளவு புகுமுக வகுப்புகள்
வைத்திருக்கிறோமோ அந்த அளவிற்கு மாணவர்கள் சேர வரவில்லை.
அதுதான் உண்மை நிலை. எந்தக் கல்லூரியில் சேருவது, எந்த ஊருக்குச்
சென்று படிப்பது, என்பதில்தான் கொஞ்சம் குழப்பம் இருக்கிறது. அவ[illegible]
சீராக்குவதற்குத்தான் மாநிலம் முழுவதும் அந்தக் கருத்தைக் [illegible]





இன்னின்ன இடங்களில் காலி இடங்கள் உள்ளன என்று அறிவித்து ஓரளவிற்கு அதைச் சீராக்குவதற்கு முயற்சி எடுக்கிறோம். நம் பல்கலைக் கழகத்திடம் சொல்லி அந்தப் பகுதிகளில் உள்ள கல்லூரிகளில் அந்தந்தப் பகுதி மாணவர்களுக்கு முதல் இடம் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கினால் இந்தப் பிரச்சினை வராது என்று சொல்லியிருக்கிறோம். இதைக் கட்டாயப்படுத்த முடியாது என்றாலும் நிச்சயமாக அதைச் சீர் செய்ய முடியும். அதில் இறுதியில் வெற்றி காண்போம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

கல்வித் துறையில் உள்ள கஷ்டங்களைப் போக்குவதற்கு யாரும் ஆட்சேபனை செய்ய மாட்டார்கள். கல்வித் தரம் குறைந்துவிட்டது என்று கருத்து சொல்லப்படுகிறது. அது சரியா, தவறா என்ற ஆராய்ச்சியில் நான் இறங்கவில்லை. உண்மையில் கல்வியின் தரம் பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இன்று எப்படி இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நாட்டுப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் இன்று பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் செல்லக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. குக்கிராமத்தில் உள்ள ஒரு விவசாயியின் மகனும் இன்று பட்டப் படிப்பு படிக்கக்கூடிய வாய்ப்பை சுதந்திர நாட்டில் நாம் பெற்றிருக்கிறோம். ஆக, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்படும்போது, பரவலாகக் கல்வி கற்கும்போது கல்வியின் தரத்தைப் பற்றி நாம் நிதானித்து அணுக வேண்டும்.

ஒன்றை நான் சொல்லுவேன். எனக்குத் தெரிந்த செய்திகளிலிருந்து தமிழ் நாட்டிலிருந்து படித்துப் பட்டம் பெற்று வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடிய மாணவர்கள் மிகவும் சிறந்த நிலையில் இருப்பதை வெளி நாட்டார் சொல்வதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். திறமையில் அவர்கள் தாழ்ந்துவிடவில்லை. இதைவிடத் திறமையாக உருவாக்க வேண்டும் என்றால் அதற்குத்தான் இன்று முயற்சி எடுத்து வருகிறோம் பள்ளிகளையும், கல்லூரிகளையும் ஏராளமாகத் தோற்றுவித்து, ஏராளமான மாணவர்கள் படிப்பதற்கான ஒரு முயற்சியை அரசாங்கம் துரிதமாக எடுத்து வருகிறது. பள்ளிகள், கல்லூரிகள் பாடத் திட்டங்கள் பற்றிய ஒரு பிரச்னை இருக்கத்தான் செய்கிறது. எல்லோரும் எதை எதைப் படிக்க வேண்டும் என்ற ஒரு நிலை இருக்க வேண்டும். அதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. ஒரு குறிப்பிட்ட அளவிற்கு எல்லா மாணவர்களுக்கும் பொதுவான அறிவை சிறந்த முறையில் கொடுத்துவிட்டு அதற்குப் பின்னால் அவர்கள் பெறக்கூடிய அறிவெல்லாம் ஒரு குறிக்கோளின் அடிப்படையில் கொடுத்தால், அது நாட்டுக்கும், எதிர்கால சமுதாயத்திற்கும் நல்லதாகயிருக்கும் என்ற கருத்தைக் கல்வி நிபுணர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். நிச்சயமாக அவர்கள் இவற்றிற்கெல்லாம் நல்லதொரு முடிவை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. நம் அரசைப் பொறுத்தளவிற்கு நாம் பல்கலைக் கழக நிர்வாகத்தில் தலையிடுவதில்லை. அவர்களுக்கு அந்த உரிமை இருக்கிறது. கொஞ்சம்கூட அதை மறுக்கக் கூடாது. கல்வி நிபுணர்கள் நடத்தக் கூடிய பல்கலைக் கழகங்கள் நம் போன்ற மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு சிறந்த முறையில் கல்வித் தரத்தை உயர்த்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதில் நாம் தலையிட்டு, அரசியல் கட்சிப் பிரச்னைகளை, கொள்கைகளை பல்கலைக்கழக நிர்வாகத்தில் புகுத்துவது எதிர்கால நோக்கத்திற்குச் சாலச் சிறந்ததாக அமையாது என்று கருதுகிறேன். அந்த முறையிலும் நாம் அந்த அளவுக்குப் பின்தங்காமல் பல்கலைக் கழகம் முன்னேறிச் செல்கிறது.

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள், நம்முடைய சென்னை பல்கலைக் கழகம் ஒரு காலத்திலே எவ்வளவு பெயர் வாங்கியது, இன்று அது குறைந்துவிட்டது என்று சொன்னார்கள். எதை வைத்துச் சொன்னார்கள் என்று புரியவில்லை. ஐ.எ.எஸ். ஆபீசர்கள் தேர்வில் அல்லது மத்திய நிர்வாகம் நடத்தக் கூடிய தேர்வுகளில், வேலைக்காக நடத்தக்கூடிய தேர்வுகளில் நாம் கொஞ்சம் பின்தங்கியிருக்கிறோம். ஆனால், அதற்கான காரணங்கள் என்ன என்பதைத் தனியாக வாதிக்க

[திரு. செ. மாதவன்] [1969 மார்ச் 12

வேண்டிய விஷயமாகும். அந்த நிலையை மாற்ற நாம் என்ன செய்யப்
போகிறோம்? தரம் குறைந்தது மட்டுந்தான் அதற்குக் காரணமா,
அல்லது வேறு அரசியல் சூழ்நிலை காரணமா, என்பதைக் கட்சி வேறு
பாடில்லாமல் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.
ஆட்சியிலே ஏற்பட்ட மாற்றம், சூழ்நிலை, மொழிப் பிரச்னை இத்தனையி
னாலும்தான் தமிழகத்திற்கு பாதகம் வருகிறது. நாமெல்லோரும் அதை
எதிர்த்துப் போராட வேண்டும்.

பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு கருத்துச் சொல்லப்பட்டது. சிறந்த
கல்வி பெறக்கூடிய மாணவர்கள் எல்லாம் எங்களுக்கு நிர்வாகம் வேண்
டாம், சாதாரண உத்தியோகம் வேண்டாம், அறிவியல் துறையிலே
செல்வோம் என்ற கருதுவதாக கருத்தும் இருந்தது. அதுதான்
காரணமா என்று பார்க்க வேண்டும். முழுக்க முழுக்கக் கல்வித் தரம்
குறைந்துவிட்டது என்று சொல்லுவது அவ்வளவு பொருத்தமானதா?
ஆனாலும், எதிர்க் கட்சித் தலைவரவர்கள், நம்முடைய கல்வித் தரத்தை
உயர்த்திக் கொண்டுவர வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தத்தான்
அப்படிச் சொன்னார்கள் என்று நான் எடுத்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
அந்த முறையிலே கல்வி வளர்ச்சியிலும் நாம் கொஞ்சங்கூடத் தயக்கம்
காட்டக் கூடாது.

தனியார் துறை, அரசுத் துறையிலுள்ள கல்விப் பிரச்னை பற்றி
எடுத்துச் சொன்னார்கள். இது நீண்டகாலப் பிரச்சினை. அரசாங்கமே எல்லா
வற்றையும் நடத்தவேண்டுமென்று ஒரு கருத்து. இதைத் தவறு என்று
சொல்லவில்லை. இன்னொரு கருத்து, இல்லை, இல்லை, அரசாங்கமே தலை
யிடக் கூடாது, சுதந்திரமாக இருக்க வேண்டும் என்பது. அதையும் தவறு
என்று சொல்ல முடியாது. அரசைப் பொறுத்த வரையில் எந்தெந்த
அளவுக்கு அரசின் சக்தியும், வாய்ப்பும் இருக்கிறதோ அங்கே ஏற்
றிருக்கிறது. அது இல்லாத அளவில், தனியார் துறையில் சிறந்த முறை
யில் கல்விச்சாலைகள் நடத்துவது பற்றி யாரும் மறுக்கவில்லை. அதிலே
எந்தவிதமான தவறும் இடையாது என்பது அரசாங்கத்தின் கொள்கை.
ஆனால், கல்விச்சாலைகளை நடத்துகிறவர்கள் அதைத் தொழிலாக நடத்து
கிறார்கள், தவறு செய்வதற்கு நிலைக்களனாக இருக்கிறது என்று சொல்லு
கின்ற கருத்தைப் பரிசீலிக்க வேண்டும். அதற்கான சட்ட விதிகளை
ஒழுங்குபடுத்தி, அந்த முறையில் அந்தந்த நிறுவனங்கள் நடக்குமாறு
பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு, அதற்கான
எல்லாவற்றையும் செய்யும் என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.

மாணவர்களைப் பற்றிச் சொன்னார்கள்.
சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஆசிரியர்களைப் பற்றியும்
கூண்டிலே நிறுத்தினார்கள். அதற்காக ஆசிரியர்களை குற்றவாளிக்
மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஆசிரியர்கள் கோபித்துக்கொள்ள

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கோபம் உண்டாகக்கூடிய விதத்தில
தூண்டுவது போலிருக்கிறது. ஆசிரியர்களைப் பார்த்து, ஜாக்கிரதை, தப்பா
கச் சொல்லியிருக்கிறார் என்று தூண்டுவது போலிருக்கிறது. எனவே,
அரசாங்கம் எனக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்
களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் தயங்கவே தயங்
காது. ஆனால், அரசாங்கத்தின் பாதுகாப்பை நம்பி எதிர்க் கட்சித் தலைவ
ரவர்கள் வாழக் கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்களை நம்பி வாழ முடியாது என்பது
தீர்மானம் பண்ணிய விஷயம்.



1969 மார்ச் 12]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மக்களுடைய சக்தியை நம்பித் தான் வாழ வேண்டும். ஆசிரியர்களைமட்டும் குறை கூறுவது சரியல்ல. ஆசிரியப் பெருமக்கள் சிறந்த தொண்டாற்றுகிறார்கள். அவர்களுடைய திறமையைப் பொறுத்துத்தான் மாணவர்களின் திறமையிருக்கிறது. அப்படிப்பட்ட ஆசிரியர்களை இழிவுபடுத்தி, குறைத்துப் பேசுவது நல்லது அல்ல. ஆசிரிய சமுதாயம் அரசியலிலே பங்கு பெறக்கூடாது என்பதை வலியுறுத்த அவர்கள் விரும்புகிறார்கள். அதை நம்முடைய ஆசிரிய சமுதாயம் பாதுகாக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. நாமே சென்று, அரசியல்வாதிகள் சென்று, ஆசிரியர்களோடு ஊடாடி அவர்களை நம் பக்கம் இழுக்கக் கூடாது. அதிலே தெளிவாகயிருந்தால் இந்தப் பிரச்சினையே வராது. நம்முடைய ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் பெரிதும் கவலையெடுத்து பல முயற்சிகளைச் செய்ய வேண்டியது கடமையாகும்.

இன்று அவர்களுக்குள்ள குறைகள் பற்றிப் பேசப்பட்டது. அதைக் கேட்டு வேதனை ஏற்பட்டது. ஆசிரியப் பெருமக்களின் எண்ணிக்கை ஏராளம். அரசாங்கம் அவர்களுக்கு ஒரு துளி நன்மை செய்தால் அது பெருவெள்ளமாக நிதி நிலையைப் பாதிக்கிறது. ஆசிரியர்களுக்குக் கொடுப்பதிலோ, அவர்களுடைய கோரிக்கைகளிலோ தவறு என்று யாரும் சொல்ல முடியாது. அவர்களுக்கு நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதுதான் இப்போதுள்ள பிரச்னை. தரம் உயர்த்த, திறமையை வளர்க்க நாம் இன்று முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆசிரியப் பயிற்சி முடிந்த பிறகு, வேலை பார்க்கும்பொழுது அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும், அது நாடு முழுவதும் பரவ வேண்டும். புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சில ஆண்டுகளில் தமிழ் நாட்டிலே வேலை செய்கின்ற அத்தனை ஆசிரியர்களும் வேலை செய்யும் பொழுது அன்றன்றைக்கு அறிவை, அவர்களுடைய திறமையை வளர்க்கக் கூடிய சிறந்த திட்டம் செயல்பட்டு வருகிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆசிரியர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்ய, அவர்களுடைய திறமையை வளர்க்க இந்த அரசு பாடுபட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, மாணவர்களைப் பற்றிச் சொன்னார்கள். மாணவர்களிடம் கட்டுப்பாடு இல்லை, எங்கு பார்த்தாலும் ஸ்டூடண்ட்ஸ் அன்ரெஸ்ட் என்று சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் அதிலேதான் ஆரம்பித்தார்கள். மாணவர்களிடையே கட்டுப்பாடு வேண்டும், ஒழுக்கம் வேண்டும், போராட்டம் கூடாது என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், இப்படிச் சொல்லிக்கொண்டே அவர்கள் நம் பக்கம் வருவார்களா, போராட்டத்திற்கு அழைக்கலாமா என்று பார்ப்பது கவலை தரக் கூடிய செய்தி. பத்திரிகைகளிலே பார்க்கிறோம், மாணவர்கள் மோதினார்கள், எதிர்க் கட்சித் தலைவரவர்களைச் சந்தித்துப் பேசினார்கள் என்று. அது உண்மையில்லாமலும் இருக்கலாம். மாணவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதி, கால் வெட்டப்பட்டது, கை வெட்டப்பட்டது, என்று போடப்பட்டு, மறுநாள் பத்திரிகையில் தவறாகப் போட்டுவிட்டோம் என்றும் வருகிறது. இலட்சக்கணக்கான மாணவர்கள் தமிழ்ப் பண்பாட்டைக் காத்துப் பயிற்சி பெறுகிறார்கள். எங்கோ சிலபேர், யாராலோ தூண்டப்பட்டோ அல்லது தவறுதலாக உந்தப்பட்டோ இருக்கலாம், ஒரு சில நிகழ்ச்சிகள் நடந்திருக்கலாம். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எப்போது வரும் என்று அரசியல் கட்சிகள் காத்துக்கொண்டிருப்பது சரியாகாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சரவர்கள் சொன்னதிலிருந்து யாரோ ஏற்பாடு செய்துவிட்டார்கள் என்பதுபோல் சொல்கிறார்கள். போன வருஷம் மாணவர்களுக்கும் பஸ் தொழிலாளர்களுக்கும் மோதல் ஏற்பட்டது, அது அரசியலினாலே ஏற்பட்டதா? அல்லது தானாக நடந்ததா? கேட்பதற்குக் காரணம் என்னவென்றால், அமைச்சரவர்கள் சொல்வதைப் பார்த்தால், முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல, எங்கோ நடந்தது, எங்கோ நடந்தது என்கிறார்கள். அதை விசாரிப்பதற்காக சோமசுந்தரம் கமிஷன் நியமிக்கப்பட்டதே, அதனுடைய அறிக்கை எங்கே?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எங்கேயோ சுற்றி வருகிறார்கள்.

**திரு பி. ஜி. கருத்திருமன்:** இது முக்கியம். சாதாரண விஷயம்
அல்ல. அதைக் கேட்பதற்கு எங்களுக்கு உரிமை கிடையாதா ? இதில்
அரசியலுக்காகக் கேட்கவில்லை. எனவே, அரசியலுக்காக என்று இழிவு
படுத்திக் கூறுவதைச் சகித்துக்கொண்டிருக்க முடியாது. அந்த விசாரணை
நடந்ததே, அதைப் பற்றி அறிக்கை எங்கே ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எதிர்க்கட்சித் தலைவரவர்கள்
ஆத்திரப்படுவது புரிகிறது, எங்கோ விஷயம் இருக்கிறது. ஆனால், நாட்
டிலேயுள்ள நிலைமை, எங்கே நிகழ்ச்சிகள் நடந்தாலும் அதைப் பயன்
படுத்திக்கொள்ளலாமா ? இது சரியானதுதானா ? அதைச் சிந்தித்துப்
பார்க்க வேண்டும். பஸ் தொழிலாளர் மாணவர் பிரச்சினை என்றால்,
இப்படிப்பட்ட சுவையான நிகழ்ச்சிகள் கிடைக்காதா என்று காத்திருக்
கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இது நடந்ததா , இல்லையா ? பத்திரிகை
யிலே வந்தது. இதே மன்றத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா ?
இல்லையா ? காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் இவர்கள்தான் காத்துக்
கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நீதிபதி போரட்டோம், விசாரணை
முடிவு வரவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முடிந்து எவ்வளவு நாள் ஆகிவிட்டது ?
அதைப்பற்றிக் கேட்பதற்கு எங்களுக்கு உரிமையில்லையா ? ஜனவரியில்
ஒப்படைக்கிறோம் என்று சொன்னார்கள். பிப்ரவரியும் ஆகிவிட்டது. ஏன்
இன்னும் அறிக்கையை வைக்கவில்லை ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நீதிபதி இன்னும் அறிக்கை
சமர்ப்பிக்கவில்லை. ஏன் காலதாமதமாகிறது என்றால், ஏராளமான சாட்சி
கள். அறிக்கை வந்தால் அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும். நான் சொன்
னது குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை மட்டுமல்ல. மாணவர்கள் சம்பந்தமாக
எந்த நிகழ்ச்சி வந்தாலும் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்
னும் நிலை சரியா ? மாணவர்களைத் தாக்கினார்கள், அடக்குமுறை ஆட்சி,
கை, கால் ஒடிக்கப்பட்டது என்று பத்திரிகையிலே வருகிறது. இந்தச்
செய்திக்கு அடுத்த பக்கத்திலே பார்த்தால் மாணவர்கள் ஒழுக்கம் கெட்டு
விட்டார்கள், கட்டுப்பாட்டை இழந்துவிட்டார்கள் என்றிருக்கிறது. மாணவர்
கள் சம்பந்தமாக நிகழ்ச்சிகள் நடந்தால் அதைத் தேர்தலுக்குப் பயன்
படுத்தலாமா என்று பார்த்தால் நாட்டுக்கு நன்மை வருமா ? அதை
எல்லாத் தலைவர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்றுதான்
இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகரவர்களே....

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கல்வியமைச்சரவர்கள் ஆரம்பத்தி
லிருந்து பொதுவாக அரசியல் கட்சிகள் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது
என்றுதான் சொன்னார். ஆனால், எதிர்க் கட்சித் தலைவர்களுக்குக் கோபம்
வந்ததற்குத்தான் காரணம் புரியவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எனக்குக் கோபம் ஒன்றும் கிடையாது.
நான் மிகவும் பணிவாகத்தான் சொல்லியிருக்கிறேன். ஐயா, நீங்கள்
தான் சொல்கிறீர்கள், எங்களுக்குக் கோபம் இருக்கிறது, ஒன்றுமே தெரி
யாது, அரசியலே தெரியாது என்று. நாங்கள் மிகவும் பணிவாகத்தான்
இருக்கிறோம். நீங்கள் ஏன் இந்த விஷயத்திலே இப்படிப் பேசுகிறீர்கள்
என்பதுதான் எனக்குத் தெரியவில்லை. அரசியலில் யார் அதை உப
யோகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது பொதுமக்களுக்கும் தெரியும்,
மாணவர்களுக்கும் தெரியும்.



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாட்டு மாணவர்களைப்
பொறுத்த அளவுக்கு எங்களுக்குச் சிறந்த நம்பிக்கை இருக்கிறது. அவர்
கள் பண்புள்ளவர்கள், ஒழுக்கமானவர்கள், கட்டுப்பாட்டை விரும்புகின்றவர்
கள், என்பதில் எங்களுக்கு ஆழ்ந்த நம்பிக்கையிருக்கிறது. எதிர்க் கட்சித்
தலைவர் அவர்களுக்கு என்ன நம்பிக்கை இருக்கிறது என்று எனக்குத்
தெரியாது. அவர்களும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். முத
லமைச்சரவர்களும் சொன்னார்கள், தமிழ்நாட்டிலே உள்ள எல்லா எதிர்க்
கட்சித் தலைவர்களும், சட்டமன்றத்திலே உள்ள எல்லா எதிர்க் கட்சித்
தலைவர்களும், கட்சி சார்பற்ற நல்ல கருத்துக்களை மாணவர்களுக்குத் தரு
வதற்கு ஒரு முயற்சி எடுக்க வேண்டும் என்று. அரசு அந்த முயற்சி
எடுக்கத் தயாராக இருக்கிறது. அந்த முயற்சியிலே மாணவர்களும்
சேர்ந்துகொள்வதைப்பற்றி மாணவர்கள் ஆலோசனை செய்ய வேண்டும்.
எந்த அரசியல் கட்சியும் கல்விக்கூடங்களிலே சென்று கூடாரம் அடித்துக்
கிளர்ச்சி ஏற்படுத்தி, கல்லூரிகளை மூடிவிடுவது, அதை வைத்து மூடிவிட்டார்
கள் பார்த்தீர்களா, இந்த ஆட்சியிலே எத்தனை நாள் மூடிவிட்டார்கள்
என்று கூப்பாடு போடுவதற்கு வழி கொடுக்க வேண்டுமென்று நினைக்கக்
கூடாது. இதையெல்லாம் சிந்தித்து ஒரு முயற்சி எடுக்க வேண்டும்.
எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் அதை வலியுறுத்தியிருக்கிறார்கள்.
நிச்சயம் இந்த அரசு அதை அமலாக்கப்போகிறது.

அது மட்டுமல்ல, ஒவ்வொரு ஊரிலும் அங்கே உள்ள எல்லா அரசியல்
தலைவர்களும், பெற்றோர்களும், கல்லூரி நிர்வாகத்தினரும், போர்டும்
சேர்ந்து ஒத்துழைத்து மாணவர்களிடத்திலே ஒரு முன்னேற்றத்தைப்
பெறுவதற்கு, மாணவர்களை வளப்படுத்துவதற்கு ஒரு திட்டம் அளிக்க
வேண்டுமென்று கல்வித் துறையிடத்திலே அரசு கூறி இருக்கிறது. அந்த
முயற்சி வந்தால், மாணவர்கள் பிரச்சினைகளை, நாட்டிற்கு, அரசுக்கு, நிர்
வாகத்திற்கு சிரமமில்லாமல் துரிதமாகத் தீர்ப்பதற்கு வழி ஏற்படுமென்று
நான் நம்புகிறேன். இந்த சந்தர்ப்பத்திலே எல்லா எதிர்க் கட்சித் தலைவர்
களும் ஒன்றுபட்டு முழு ஒத்துழைப்பு அரசுக்குத் தரவேண்டுமென்று நான்
கேட்க ஆசைப்படுகிறேன். மாணவர்களுடைய பிரச்சினை தீர்க்கப்பட்டால்
கல்வி தருவதிலே கொஞ்சம்கூடத் தயக்கம் காட்டாது முன்னேறுவதற்கு
நமக்கு வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, பயிற்சி மொழிப் பிரச்சினை. மொழிப்பிரச்னையிலே குழப்பம்,
சரியான திட்டம் இல்லை, மும்மொழித் திட்டத்தை ஒப்புக்கொள்கிறீர்களா,
இல்லையா, இதனால் பயன் உண்டா இல்லையா, என்றெல்லாம் பேசப்
பட்டது. யாருக்குக் குழப்பம் என்பதுதான் என்னுடைய கேள்வி. 1965-ம்
ஆண்டு இந்த மன்றத்திலே நடந்த விவாதத்தை எல்லாம் பார்த்தேன்.
"காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கையைத் தெளிவாக வைத்துவிட்டோம்.
இரு மொழிக் கொள்கையிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு சந்தே
கம் இருக்கிறது" என்று சொல்லுவது வேடிக்கையான வாதம். எங்கே
சந்தேகம் ? அதை நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கவ
னிக்க வேண்டும். டெல்லியிலே இரண்டு அமைச்சர்கள், தமிழ்நாட்டைச்
சேர்ந்தவர்கள் ராஜிநாமாச் செய்தார்கள். இங்கே இருந்த முதலமைச்ச
ரவர்கள், "ஏதோ பெரிய அமைச்சர்கள் ராஜிநாமா பண்ணிவிட்டார்கள்,"
என்று சொன்னார். கிண்டலாகச் சொல்லியிருக்கிறார். இங்கே இருந்த
முதலமைச்சரவர்களைப் பார்த்து இரு மொழிக் கொள்கையை ஆதரித்தீர்
களா என்று கேட்டார்கள். டெல்லிக்குச் சென்று இரு மொழிக்
கொள்கையை வலியுறுத்திவிட்டு வருவேன் என்று சொல்லிவிட்டுச்
சென்றார்களே. செய்தார்களா? "ஆமாம், போனேன், பேசினேன், ஆனால்,
அங்கே உள்ள அமைச்சர்களே மும்மொழிக் கொள்கை என்று சொல்லி
விட்டார்கள். நானும் சரி என்று ஒத்துக்கொண்டேன் என்று" இங்கு
வந்து சொல்லியிருக்கிறார். எங்கே குழப்பம் ? யாரிடத்தில் குழப்பம் ?
ஆக, மும்மொழித் திட்டம் என்ன என்பதை நாம் தெளிவாகச் சிந்தித்துப்
பார்க்க வேண்டும். டெல்லி அமைச்சர்களிடத்திலே நீங்கள் பொதுப்
படையாகக் கேட்க வேண்டாம், வெளிப்படையாகக் கேட்க வேண்டாம், தனி
யாகப் பேசும்போது கேளுங்கள்." நீங்கள் ஆங்கிலத்தை விரட்டிவிட

[Dr. H. V. Hande] [1969 மார்ச் 12

of according to the request of the student so that the student need not waste Rs.20 by applying for four colleges, paying Rs. 5 for each college ? Will the Government come to a decision on this matter?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கல்லூரிகளைப் பொறுத்தவரையில் இடங்களைக் குறைத்ததின் பொறுப்பாகாது. இதைப் பற்றிப் பல்கலைக் கழகத் துணைவேந்தருக்குக் கருத்து தெரிவித்திருக்கிறோம். இப்படிப்பட்ட நிலை இருந்தால் காரணத்தால் மாணவர்கள் வெளியேறவேண்டுமா என்று கேட்டிருக்கிறோம். இடம் இல்லாமல் இல்லை. சென்ற ஆண்டைப் பொறுத்தவரையில் 1968–69-ல் பி.யு.சி.யில் 42,985 இடங்கள் இருந்தன; சேர்ந்த மாணவர்கள் 38,933 பேர். இதே மாதிரி 1967–68-ல் இருந்த இடங்கள் 39,230; சேர்ந்த மாணவர்கள் 35,634 பேர். 1966–67-லும் பத்தாயிரத்து சொச்சம் இடங்கள் இருந்தன. சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை இருபத்தொன்பதாயிரத்து சொச்சம் பேர். ஆக, இடம் இல்லையென்ற பிரச்சினை இல்லை. மாணவர்கள் அந்தந்தப் பகுதிகளிலுள்ள கல்லூரிகளில் சேரவேண்டுமென்ற கருத்தைத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழக துணைவேந்தரும் ஒரு குறிப்பு அனுப்பியிருக்கிறார். மாணவர்கள் முதலில் ஒரு ரூபாய் கட்டி அப்ளிகேஷன் ஃபாரம் வாங்க வேண்டும், பிறகு ஒரு ரூபாய் கட்டி, விண்ணப்பத்தைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். பிறகு அட்மிஷன் ஆன பிறகு இரண்டு ரூபாய் வசூலிக்கப்படும் என்று துணைவேந்தர் ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். மாநில அளவில் ஒரு குழு அமைத்தது பொருந்தாது. எல்லோரும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அரசாங்கத்தின் சார்பிலே பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கு எழுதிச் சொல்லியிருக்கிறோம். அந்தந்தப் பகுதியில் உள்ள கல்லூரிகளில் அந்தந்தப் பகுதி மாணவர்களுக்கு முதலிடம் கொடுத்து குறையைப் போக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதையும் பல்கலைக் கழகம் சுற்றறிக்கை மூலம் சொல்லியிருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், பிரச்சினை இல்லை.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, எலிமெண்டரி எஜுகேஷனை சட்டபூர்வமாக ஆக்குவது பற்றி அரசாங்கத்தின் நிலை என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுது எப்படி சட்டபூர்வமாக இல்லையென்று கருதிவிட முடியும்? விதி என்று சொன்னாலே ஸ்டாச்சுடரி எஃபக்ட் இருப்பதாகத்தான் பொருள். கவர்ன்மெண்ட் ஆர்டர் என்றால் அப்படிப்பட்ட நிலை இல்லை. உயர்நீதி மன்றத்திலே விதியிலே ஒன்றை அமல் நடத்தவில்லை என்று சுட்டிக் காட்டி, ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பதாக நினைவிருக்கிறது. இப்போதிருக்கிற விதி அமல் நடத்தப்படும். அதை நிறைவேற்றுகின்ற உரிமை இருக்கிறது.

**Dr. H. V. HANDE :** If the University cannot decide with regard to the central point, will the Government at least do this ? A student might not have applied, say for the Presidency College. He might have applied to some other college and been denied seat. The seat may be vacant in Presidency College. But since he has not applied to Presidency College, on that small technical ground he might be denied the seat. My suggestion to Government is that they can avoid this by giving suitable instructions to the University.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாணவர்களுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டுமென்பதில் அரசு அவ்வப்பொழுது நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறது. ஒரு கல்லூரியிலே மனு போடாத காரணத்தினால், கால தாமதமானாலும் கூட, இடம் இருக்கிறது என்று தெரிந்தால், அந்தக் கல்லூரியிலே மாணவரைச் சேர்த்துக்கொள்ள இடம் அளித்திருக்கிறோம்.



1969 மார்ச் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் நிதிக் கோரிக்கையின் மீதான விவாதம் முடிவுற்றது. அடுத்து, வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டுவந்த பிரதான எதிர்க் கட்சி உறுப்பினர் திரு. கே. விநாயகம் அவர்களும், திரு கே. என். குமாரசாமி அவர்களும் தங்களுடைய இருப்பிடங்களில் இல்லையாதலால், அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி, திரு. கொ. இர. ஞானசம்பந்தன், திரு சோ. அழகர்சாமி ஆகியோர் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால், அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி :—

"கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 66,04,43,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்குக் கூடும். 2–24 p.m.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 5. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

*88. Audit Report on the Annual Accounts of the Tamil Nadu Electricty Board for the year 1966–67 and Balance Sheet as on 31st March 1967. (*Laid on the Table of the House under section* 69(5) *of the Electricity* (*Supply*) *Act*, 1948 (*Central Act* 54 *of* 1948)].

### B. Reports, Notifications and other papers.

†79 Review on Industrial Development in Tamil Nadu 1968–69 (English and Tamil.)

---

* Laid on the Table of the House on 11th March 1969.

† Desposited to Members on the 10th March 1969.

மாநிலங்களுடைய பொறுப்பு என்று சொல்லப்பட்டதோ, அதற்கும் பின்னாலே மத்திய அரசு இதற்காக கொள்கை வகுப்பது. அதை இங்கே அமல் நடத்த வேண்டும் என்று வற்புறுத்துவது, அதற்காக ஒரு மானியத்தை ஏற்படுத்தி, அந்த மானியத்தின்மூலம் கொள்கையைக் கொண்டு வர முயற்சிப்பது இவையெல்லாம் மிகமிகத் தவறாகும். கட்சி பேத மற்ற நிலையில் இதை எல்லோரும் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். மற்ற மாநிலங்களிலும், காங்கிரஸ் அமைச்சரவை உள்ள மாநிலங்கள் உள்பட, கல்வித் துறையிலே மத்திய அரசின் குறுக்கீடு கொஞ்சம் கூட இருக்கக்கூடாது என்ற நிலையில் தெளிவாக இருந்தால், கல்வித் துறையில் குழப்பங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்காது.

மத்தியில் முன்னாள் கல்வி அமைச்சராக இருந்தவர் எதற்கும் இந்தி வேண்டும் என்று ஒரு ஆணையை பிறப்பித்தார்கள். புதிய கல்வி அமைச்சர் வந்ததும், அவர் தென்னாட்டைச் சேர்ந்தவர்—உடனே அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டதை நாம் பார்க்கிறோம். ஆட்சி மொழிப் பிரச்சினையை கல்வித் துறையிலே புகுத்த முயற்சி எடுப்பது நம்முடைய எதிர்காலத்தில் பெரிய பாதகத்தை விளைவிக்கும் என்பதைத் தான் மத்திய அமைச்சரவை பரிசீலித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்களின் தரத்தை உயர்த்துவதற்காக பாடமொழித் திட்டம், புத்தகங்கள், இதுதான் முக்கியமான பிரச்சினை ஆசிரியர்களுக்கு அடுத்த படியாக. இந்தப் பிரச்சினையை தீர்ப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. 8-வது வகுப்பு வரையில் புத்தகங்களையும், பாட திட்டங்களையும் நாமே போடவேண்டும் என்று அரசாங்கமே இன்றைக்கு பாட திட்டங்களைக் கொடுப்பதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த முயற்சி இன்னும் வளர்ந்து, பாட திட்டங்கள் மிகச் சிறந்த முறையில் அமைந்து, சிறந்த முறையில் மாணவர்கள் படிப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்க இந்த அரசாங்கம் தயங்காது செயல் படும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு அடல்டு எஜுகேஷன், அதாவது முதியோர் கல்வியைப் பொறுத்த வரையில், "பங்ஷனல் சிஸ்டம்" என்ற புதிதான முறையை செயல்படுத்துவதற்கு பணம் ஒதுக்கியிருக்கிறோம். அதைப்பற்றி ஒரு அங்கத்தினர் கூட குறிப்பிடவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். புதிய முறைப்படி, நாடு முழுவதும் வயதானவர் களுக்கு கல்வியைப் போதிக்கிறோம் என்ற அளவிலே இல்லாமல், செயல்முறை திட்டங்களை வகுத்து, ஒரு விவசாயக் குடும்பத்திற்கு தேவை யான அறிவை புகட்டுவதற்கான ஒரு கல்வி முறையைக் கொண்டு வருவதற்கு பணம் ஒதுக்கியிருக்கிறோம். இந்த ஆண்டு 60 இடங்களில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆண்டுதோறும் வளர்ச்சி அடைந்து, நாடு முழுவதும் ஒரு விவசாயிக்குத் தேவையான, வேளாண்மைத் துறைக்குத் தேவையான தொழில்துறைக்குத் தேவையான கருத்துக்களில் பயிற்சி பெறக்கூடிய அளவுக்குஒரு திட்டத்தை உருவாக்கி, மத்திய அரசின் அனுமதியோடு அதை இன்றைக்கு செயல்படுத்துவதற்கு முன்வந்திருக்கிறோம். இந்தத் திட்டம் விரிவான முறையில் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறதுஎன்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரி வித்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

கல்வித் துறையில் இவ்வளவு பெரிய சீர்திருத்தங்கள் கொண்டு வந்ததற்குப் பின்னாலேகூட, சீர்திருத்தங்கள் வேண்டும் என்ற கோரிக்கை நாட்டில் இருக்கத்தான் செய்கிறது. அதில் கூட தவறு இல்லை என்று கருதுகிறேன். மற்ற நாடுகளிலுள்ள நிலையையும் நான் விசாரித்துத் தெரிந்துகொண்டிருக்கிறேன். எந்த நாட்டிலும் அறிவுப் பெருக்கம் விரிவு அடைய அடைய, கல்வி வளர்ச்சி மாறிக்கொண்டு வருகிறது, கல்வித் திட்டம் மாறிக்கொண்டு வருகிறது, பாடத் திட்டங்கள் மாறிக்கொண்டு வருகின்றன. எந்தெந்தக் காலத்தில் எப்படிப்பட்ட பாடத் திட்டங்கள் அறிவு வளர்ச்சிக்குத் தேவை என்ற முறையில் அப்படிப்பட்ட கல்வியை பெறக்கூடிய வாய்ப்பை இன்று உலகம் முழுவதும்



பெற்றுக்கொண்டு வருகிறது. உலகத்தோடு மாறுபட்ட சூழ்நிலையில் தமிழ்நாடும் வளர வேண்டும், அதைத்தான் நாம் வலியுறுத்த வேண்டும். அதற்கு கல்வி நிபுணர்கள் முயற்சி எடுக்க வேண்டும். நம்முடைய ஆட்சி வந்ததற்குப் பின்னாலே அரசியல் கட்சியைச் சேர்ந்த வர்கள் தங்களுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு, கல்விக்காக ஒரு குழுவை அமைத்திருக்கிறது. நிபுணர்கள் கருத்துக்களை கூறுவதற்கும் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட குழுக்கள் மத்தியில் கருத்து பரிமாறிக்கொண்டு, புதிய முறையில் கல்வி வளர்ச்சி பெறுவதற்கு, விஞ்ஞான அறிவைப் பெறுவதற்கு நாம் தொடர்ந்து முயற்சி எடுத்துக் கொள்வோம் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சீர்திருத்தங்கள், மாறுதல்கள் என்ற முறையில், அரசாங்கத்தை நிர்வகிக்கும் கட்சி மாற மாற, ஆட்சி மாற மாற, அவரவர்கள் சித்தாந் தத்திற்கு ஏற்றபடி கல்வி முறையையும் மாற்ற இயலுமா? இது இன்றைக்குப் பெரிய பிரச்சினை. எங்களைப் பொறுத்தவரையில், அதைக் கொஞ்சங்கூட நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. கல்வித் துறை, நம் தமிழ்நாட்டின், நம் நாட்டின் எதிர்காலத்தைப் பொறுத்து அன்றி தனிப்பட்ட சித்தாந்தங்களின் அடிப்படையில் அமையக்கூடாது. நம் முடைய தமிழ்நாட்டில் அரசியல் கட்சிகள் எல்லாம், கல்வி நிபுணர்களும், அந்தக் கருத்தை ஏற்று, அப்போதைக்கப்போது, அவசியத்திற்கேற்ப மாற்றங்களைக் காணவேண்டுமேயல்லாது, தனிப்பட்டவர்களுடைய எண்ணத் திற்கு மாற்றக் கூடாது என்பதில் நாங்கள் தீவிரமாக இருக்கிறோம். அதைப் பின்பற்றி செயல்பட்டால் கல்வித் தரம் நன்கு தடையில்லாமல் உயரும்.

பல்கலைக்கழகங்கள், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வேண்டும் என்று ஒவ்வொருவரும் கேட்டார்கள். அது ஒரே பல்கலைக்கழகமாக இருந்தால் தான் நலமாக இருக்கும் என்று ஒரு சாராரும், இல்லை, இல்லை வேறு நாடுகளில் இருப்பதுபோல ஏராளமான பல்கலைக்கழகங்கள் இருந்து, ஆசிரி யர்களும் மாணவர்களும் தொடர்பு கொண்டு, கல்வி நிறுவனங்கள் நடத்தினால், கல்வி சீராக இருக்கும் என்ற மற்றொரு கருத்தும் இருக்கிறது. ஏராளமான பல்கலைக்கழகங்கள் ஏற்பட வேண்டும் என்ற கருத்து நல்ல கருத்துத்தான், அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இன்னும் பல மாவட்டங்களிலும் பல்கலைக்கழகங்கள் ஏற்பட்டு, கல்வித் தரம் உயரும் வகையில் கல்லூரிகளை இணைப்பதை வரவேற்கிறேன். அப் படிப்பட்ட கருத்து செயல்படுத்தப்பட வேண்டுமென்றால், அது நம் முடைய நிதி நிலையைப் பொறுத்து, அந்தச் செயல் திட்டங்களை உருவாக்க வேண்டும். அந்த வகையில் அமைக்கப்படும்போது, நிச்சய மாக பல்கலைக்கழகங்கள் சிறந்த முறையில் செயல்படும் என்று நினைக் கிறேன்.

மதுரையிலே நடந்ததைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கல்வி அமைச்சர் கூட இருந்தார்கள் என்று எதிர்க் கட்சித் தலைவர் திரும்பத் திரும்பச் சொல்லுகிறார்கள். ஏன் சொல்லுகிறார்கள் என்று புரிகிறது. அவர் களுக்கு தேசியப் பாடலில் அவ்வளவு அக்கறையில்லை, ஆனால், மந்திரி மாட்டிக் கொண்டு. . . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** "அக்கறையில்லை" என்று சொன்னதை தயவுசெய்து...........பூரண அக்கறையிருக்கிறது. அக்கறையில்லை என்று சொல்லுவது நல்லதல்ல.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தேசியப் பாடல் பாடப்பெற்ற நிகழ்ச்சியிலே தேசியப் பாடலுக்கு ஏற்பட்ட அவமானத்தைப் பற்றிச் சொல்வதைவிட, மந்திரி மாட்டிக்கொண்டாரே, அவர் அடுத்த பாட்டைக் கேட்காமல் இறங்கி வந்திருந்தால்—முதல் அமைச்சர் சொன்னாரே அந்த விதமாக நிலைமைகள் ஏற்பட்டு—நிலைமைகள் ஏற்பட்டு நமக்கு சாதகமாக இருக்குமே என்கிற எண்ணந்தான் அதிகமாகத் தெரிகிறது. என்னைப் பொறுத்தவரையில், இந்த அரசைப் பொறுத்தவரையில்

இணைப்பு.

[22-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

**கோரிக்கை 13—கல்வி—கொள்கை விளக்கக் குறிப்பு—1969–70.**

**கல்வி.**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, அதிலும் குறிப்பாக பொருளாதார வளர்ச்சி குன்றியுள்ள ஒரு நாட்டின் வளர்ச்சிக்குக் கல்வி மிகவும் இன்றியமையாததாகும். கடந்த பத்தாண்டுகளிலான மாநில வரவு-செலவுத் திட்டங்களிலும் திட்ட விளக்கக் குறிப்புகளிலும் இந்தக் கருத்து எதிரொலித்திருப்பதை நன்கு காணலாம். 1959–60 ஆண்டில் கல்வி குறித்த செலவு ரூ. 15·15 கோடியாக இருந்தது. 1969–70 ஆண்டில் ரூ. 65·39 கோடியாக அது உயர்ந்துள்ளது. வருவாய்க் கணக்கில் இம் மாநிலத்தின் மொத்தச் செலவில் 23 சத விதம் கல்விக்காகச் செலவாகிறது.

கீழேயுள்ள விவர அறிக்கை கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் போதும், மூன்று ஆண்டுத் திட்டங்களின் காலத்திலும் கல்வியின் பல்வேறு துறைகளுக்குச் செய்துள்ள நிதி ஒதுக்கத்தையும் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கத்தையும் 1969–70-ம் ஆண்டிற்குச் செய்ய எண்ணியுள்ள நிதி ஒதுக்கத்தையும் குறிப்பிடுகிறது.

| | முதல் ஐந்தாண்டுத் திட்டம். | இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம். | மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம். | ஆண்டுத் திட்டங்கள். 1966–67 | 1967–68 | 1968–69 | நான்காவது ஐந்தாண்டுத் திட்டம். | செய்ய எண்ணியுள்ள திட்ட நிதி ஒதுக்கீடு 1969–70. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் லட்சத்தில்) | | | | |
| பொதுக் கல்வி மீதான செலவு .. .. | 3,81·00 | 11,41·00 | 34,09·00 | 5,59·00 | 6,72·49 | 6,94·78 | 53,17·22 | 4,67·13 |
| தொடக்கக் கல்வி மீதான செலவு .. .. | 3,02·00 | 8,30·00 | 20,80·00 | 2,98·43 | 3,62·24 | 3,56·36 | 26,60·47 | 1,77·65 |
| [illegible] கல்வி மீதான செலவு .. | 54·00 | 2,64·04 | 9,20·00 | 1,96·92 | 2,34·22 | 2,04·34 | 15,95·25 | 1,52·72 |



முதல், இரண்டாவது திட்டங்களில் தொடக்கக் கல்வியை விரிவுபடுத்துவதற்கு வலியுறுத்தப்பட்டது. அடுத்து வந்த திட்டங்களில் உயர்நிலைக் கல்வியை விரிவுபடுத்த வேண்டும் என்று வலயுறுத்தப்பட்டது. மேலே கண்டுள்ள அட்டவணையிலிருந்து இது தெளிவாகிறது. முதலில் தொடக்கக் கல்வி நிலைகளில் மாணவர்களைக் கட்டாயமாகச் சேர்த்துக்கொள்ளும் முறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அடுத்து வரும் திட்டங்களில் கல்லூரிக் கல்வி நிலைகளிலும் பல்கலைக் கழகக் கல்வி நிலைகளிலும் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது வலியுறுத்தப்பட்டது. இன்றைய தேதி வரையில் 31,271 தொடக்கப் பள்ளிகளும், 2,376 உயர்நிலைப் பள்ளிகளும், 126 கல்லூரிகளும் இம்மாநிலத்தில் உள்ளன. 6—11 வயதுத் தொகுதியிலுள்ள சிறுவர்களில் 91 சதவீதத்தினரும், 11–14 வயதுத் தொகுதியினரில் 59 சதவீதத்தினரும், 14–17 வயதுத் தொகுதியினரில் 37 சதவீதத்தினரும் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்பதைக் காணும்போது உளமகிழ்வு ஏற்படுகின்றது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்கால அளவில் 6-11வயதுத் தொகுதியினர் அனைவரும், 11–14 வயதுத் தொகுதியினரில் சுமார் 80 சதவீதத்தினரும், 14–17 வயதுத் தொகுதியினரில் 55 சதவீதத்தினரும் பள்ளிகளில் சேர்க்கப்படுவர் என்று நம்பப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் கல்வி வசதிகள் விரிவடைந்ததைக் கீழ்க்கண்ட புள்ளிவிவர அறிக்கை காட்டுகின்றது :—

| கல்வி நிலையங்களின் பெயர். | கல்வி நிலையங்களின் எண்ணிக்கை. 1964–65 | 1965–66 | 1966–67 | 1967–68 | 1968–69 |
|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் .. .. .. .. .. .. | 24,383 | 24,641 | 25,091 | 25,217 | 25,432 |
| நடுநிலைப் பள்ளிகள் .. .. .. .. .. .. | 6,158 | 6,066 | 6,065 | 6,054 | 6,023 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. .. .. .. .. .. | 2,094 | 2,179 | 2,303 | 2,376 | 2,437 |
| பயிற்சிப் பள்ளிகள் .. .. .. .. .. | 140 | 139 | 139 | 138 | 137 |
| கல்லூரிகள் .. .. .. .. .. .. | 78 | 92 | 105 | 116 | 126 |
| பயிற்சிக் கல்லூரிகள் .. .. .. .. .. .. | 18 | 18 | 19 | 20 | 23 |
| பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் .. .. .. | 33 | 35 | 35 | 35 | 36 |
| பொறியியல் கல்லூரிகள் .. .. .. .. .. | 11 | 11 | 12 | 12 | 12 |

குறிப்பு.—நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்படுகின்றன, எனவே அவற்றின் எண்ணிக்கை குறைவாக உள்ளது.

கல்வித் துறையில் பெருமளவில் முன்னேற்றம் காணப்பட்டாலும் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான வாய்ப்புகளும் மிகுதியாக உள்ளன என்பதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. பல பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் தேவையாக உள்ளன. பல உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக் கூடங்களும் அவற்றிற்கான கருவிகளும் தேவைப்படுகின்றன. ஆசிரியரின் தகுதிகளையும் கற்பிக்கும் திறனையும் மேம்படுத்த வேண்டியுள்ளது. அப்போதுதான் கல்வியின் தரம் உயர முடியும். கல்வித் துறையைப் பொறுத்த வரையில் உள்ளம் ஆறுதல் அடையக்கூடிய நிலை ஒன்று எப்போதுமே ஏற்பட முடியாது என்பதை அரசு உணரும். எனவேதான், கல்வி வளர்ச்சிக்கான செலவை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

பொதுக் கல்வியைப் பொறுத்தவரையில், 1968–69-ம் ஆண்டில் ரூ. 58,95 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்க 1969–70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் (திட்டப்பணி, திட்டமில்லாப்பணி இரண்டிற்குமாக) ரூ. 65,39 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| தொடக்கநிலைக் கல்வி .. .. .. .. .. | 29,16·95 |
| உயர்நிலைக் கல்வி .. .. .. .. .. | 20,76·52 |
| பல்கலைக்கழகக் கல்வி .. .. .. .. | 4,03·50 |
| சிறப்புக் கல்வி .. .. .. .. .. | 1,24·56 |
| தொழில் நுட்பக் கல்வி .. .. .. .. | 2,74·38 |
| ஏனைய இனங்கள் .. .. .. .. .. | 7,43·00 |
| | 65,38·91 |

1968–69-ல் ஒதுக்கியுள்ள தொகையைக் காட்டிலும் 1969–70 திட்ட மதிப்பீட்டில் அதிகப்படியாக ஒதுக்கியுள்ள தொகை ரூ. 644 லட்சமாகும். மாநில வருவாய்க் கணக்கிலான மொத்தச் செலவில் பொதுக் கல்விக்கான செலவு ஏறக்குறைய 23 சத வீதமாகும்.

1968–69-ல், பொது நூலகங்கள், முதியோர் கல்வி குறித்த இனங்கள் கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆளுகைக்கு மாற்றப்பட்டுள்ளன.

### அ. தொடக்க நிலைக் கல்வி.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களையும், ஆண்டுத் திட்டங்கள் மூன்றினையும் தொடர்ந்து நிறைவேற்றியதாலும், 6–11 வயதுத் தொகுதியிலுள்ள சிறுவர்களுக்கு இலவச கட்டாயக் கல்வியைச் செயல்படுத்தியதாலும், தொடக்க நிலைக் கல்வி பெருமளவிற்கு விரிவடைந்தது. ஒரு கல் சுற்றளவிற்குள் 300-ம் அதற்கு மேற்பட்டும் மக்கள் தொகையுள்ள பெரும்பாலான எல்லாப் பகுதிகளிலும் தொடக்க நிலைப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன. 31–3–1968 அன்றைய நிலவரப்படி, உயர் தொடக்கப்பள்ளிகள் உட்பட தொடக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை 31,271 ஆக அதிகரித்துள்ளது. முதல் திட்டக் காலத்தின் இறுதியில் 24·60 லட்சம் சிறுர்கள் பள்ளிக்குச் சென்றனர். 31–3–1968 அன்றைய நிலவரப்படி பள்ளியில் பயின்ற மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 48·46 லட்சமாகும். அதாவது, 91·9 சதவீதம் சிறுர்கள் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

எல்லாச் சிறுர்களையும் பள்ளிகளில் சேர்ப்பது என்னும் குறிக்கோள் அளவை எய்துவதற்கென நான்காவது திட்டத்தில் இப்பணி தொடர்ந்து நிறைவேற்றப்படும். 1969–70-ல் 6–11 வயதுத் தொகுதியிலுள்ள 1·5 லட்சம் சிறுர்களைப் பள்ளிகளில் சேர்ப்பதென கருதப்பட்டுள்ளது. அதற்கேற்ப, 1969–70 வரவு-செலவுத் திட்டத்தில் 3,650 ஆசிரியர்களை நியமிக்க-



வும், ஆசிரியர் ஒருவருக்கு ரூ. 300 வீதம் சாதனங்களுக்கும், 10 சதவீத ஆசிரியர்களுக்கு ரூ. 1,125 வீதம் கட்டிடத்திற்கும், ஆசிரியர் ஒருவருக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 3 வீதம் சில்லறைச் செலவுகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது திட்டக்காலத்தில் 6–11 வயதுத் தொகுதியிலுள்ள சிறுர்களைப் பள்ளிகளில் சேர்ப்பதில் முன்னேற்றம் கண்டதால், அடுத்து வரும் ஆண்டுகளில் 11–14 வயதுத் தொகுதியிலுள்ள பிள்ளைகளை அதிக அளவில் சேர்த்துக்கொள்ள முடிந்தது. முதல் திட்டக் கால அளவின் இறுதியில் மத்திய பள்ளி வகுப்புகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 4·48 லட்சமாயிருக்க 1967–ல் பள்ளி சென்ற சிறுர்களின் எண்ணிக்கை 12·34 லட்சமாக இருந்தது. அதாவது சேர்த்துக் கொள்ளப்பட்ட சிறுர்களின் எண்ணிக்கை 53·47 சதவீதமாயிருந்தது. 1968–69-ல் இந்த வயதுள்ள 1·50 லட்சம் மாணவர்கள் கூடுதலாகச் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நான்காவது திட்டத்தில் தொடர்ந்து நிறைவேற்றப்படும் வேலைத் திட்டங்களின்கீழ் 1969–70-ல் 1 லட்சம் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, வரவு-செலவுத் திட்டத்தில் 2,807 ஆசிரியர்களை நியமிக்கவும், ஆசிரியர் ஒருவருக்கு ரூ. 350 வீதம் சாதனங்களுக்கும், 10 ஆசிரியர்களுக்கு ரூ. 1,125 வீதம் கட்டிடத்திற்கும், ஆசிரியர் ஒருவருக்கு ரூ. 3 வீதம் சில்லறைச் செலவுகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு வயதுத் தொகுதியினரைக் கூடுதலாகச் சேர்த்துக் கொண்டதால், கட்டிடத்திற்கான உதவியின் அளவு பள்ளிக் கொட்டகை ஒன்றுக்கு சென்ற ஆண்டு ரூ. 1,000 வழங்கப்பட்டிருக்க இவ்வாண்டு அது ரூ. 1,125 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் ஒருபுறமிருக்க, நான்காவது திட்டத்தில் ஏற்பளித்துள்ள வேலைத் திட்டங்களை ஒட்டி, கற்பிக்கப்படும் கல்வியின் தரத்தையும் உயர்த்த உரிய நாட்டம் செலுத்தப்பட்டுள்ளது: உயர் துவக்கத் தர ஆசிரியர்களை (Higher Grade Teachers) படிப்படியாக நீக்கிவிட்டு, அவர்களுக்குப் பதிலாக உயர் இடைநிலைத் தர ஆசிரியர்களை (Secondary Grade Teachers) நியமிக்கும் முடிவை அரசு செயல்படுத்துகின்றது. கல்வித் தரங்கள் சீராக இருக்கும் பொருட்டு, III-ம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்க ஏற்பாடு செய்தபின் அதற்கென உயர் இடைநிலைத்தர ஆசிரியர்களைக் கூடுதலாக நியமிப்பதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது. அதாவது, இம்மாநிலத்திலுள்ள எல்லாத் தொடக்கப் பள்ளிகளிலும் III-முதல் V வகுப்புகளில் (இரண்டிலும் சேர்ந்து 3 பிரிவுகளுக்கு மேற்பட்டவை) ஆங்கிலம் கற்பிக்க ஒரு கூடுதலான உயர் இடைநிலைத்தர ஆசிரியர் தேவைப்படுவார். இந்த மூன்று வகுப்புகளிலும் உள்ள பிரிவுகளின் எண்ணிக்கை 6-க்கு மேற்பட்டால் கூடுதலாக இரண்டு உயர் இடைநிலைத்தர ஆசிரியர் தேவைப்படுவர். மேற்படித் திட்டத்தின்கீழ் நியமிக்கப்படும் உயர் இடைநிலைத்தர ஆசிரியர்கள் தகுதி பெற்ற உயர் இடைநிலைத்தர ஆசிரியர்களாக இருக்கவேண்டியது தவிர, உயர் துவக்கத்தரப் பதவிகளில் குறைந்த சம்பள வீதத்தில் பணியாற்றுபவர்களாகவும் இருக்க வேண்டும். 1967–68-ல் உயர் துவக்கத்தரப் பதவிகளுக்குப் பதிலாக, 5,000 உயர் இடைநிலைத்தர பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1968–69-ல் 3,000 பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. நான்காவது திட்டத்தின் கீழ் தொடர்ந்து நிறைவேற்றப்படும் வேலைத் திட்டத்தின் கீழ், ஏற்கெனவேயுள்ள உயர் துவக்கத் தரப் பதவிகளுக்குப் பதிலாக, 1969–70-ல் 3,000 உயர் இடைநிலைத்தரப் பதவிகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வியின் தொடக்கத்திலிருந்தே அறிவியல் கல்விக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன், முழு மானிய அடிப்படையில் அறிவியல் கருவிகளுக்கு நிதி ஒதுக்கும் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படுகிறது. ஒவ்வொரு தொடக்க நிலைப் பள்ளிக்கும், நடுநிலைப் பள்ளிக்கும் முறையே 300, 1,000 ரூபாய் வீதம் நிதி ஒதுக்கப்படுகிறது. 1969–70-ல் 2,000

தொடக்கநிலைப் பள்ளிகளுக்கும், 400 மத்தியப் பள்ளிகளுக்கும் இத் திட்டத்தைச் செயல்படுத்த எண்ணியுள்ளது.

தொடக்கப் பள்ளிகளில் நூலகங்களை ஏற்படுத்துவது அவசியமெனக் கருதப்படுகிறது. ஒவ்வொரு தொடக்க நிலை இளநிலை ஆதாரப் பள்ளிக்கும் பள்ளி ஒன்றுக்கு ரூ. 30 வீதமும், நடுநிலைப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் ரூ. 60 வீதமும் நூலக மானியம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வழங்கத்தக்க மானியம் இணை மானிய அடிப்படையில் வழங்கப்படும். அதாவது இதற்கென அரசு வழங்கும் மானியத்திற்குச் சமமான ஒரு தொகையை ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது உள்ளாட்சி மன்றங்கள் அல்லது மானிய உதவி பெறும் நிறுவனங்கள் வழங்க வேண்டும். 1969-70-ல் 10,000 தொடக்கநிலை இளநிலை ஆதாரப் பள்ளிகளுக்கும் 2,500 நடுநிலைப் பள்ளிகளுக்கும் நூலகங்கள் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

### நண்பகல் உணவுத் திட்டம்.

தொடக்கப் பள்ளி, உயர் தொடக்கப் பள்ளிகளைச் சேர்ந்த ஏழை மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கும் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப் படுகிறது. சுமார் 17 லட்சம் மாணவர்கள் இத்திட்டத்தால் தற்போது பயனடைகின்றனர். இத்திட்டம் நான்காவது திட்டத்தில் தொடர்ந்து நிறைவேற்றப்படுகிறது. 1969-70-ல் சேர்த்துக்கொள்ளப்பட இருக்கிற 6-11, 11-14 வயதுத் தொகுதியிலுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில், இத்திட்டத்தின் கீழ் கூடுதலாகக் கொண்டுவரப்படவிருக்கிற 67,000 மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்க 1969-70 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 6·03 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, சேக்காட்டிலுள்ள மையச் சமையற்கூடத் திட்டத்தினையும் அத்திட்டத்தைச் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களுக்கு நீட்டிப்பதற்கும் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2 லட்சம் ஒரு மொத்தமாக ஒதுக்கப் பட்டுள்ளது. மையச் சமையற்கூடங்கள் முக்கியமாக செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களிலும், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் சில ஊராட்சி ஒன்றியங்களிலும் ஆக மேலும் 30 ஊராட்சி ஒன்றியங்களில் நிறுவப்படுமென "கேர்" நிறுவனம் அறிவித்துள்ளது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்காக "கேர்" நிறுவனத்தால் மொத்தம் ரூ. 60 லட்சம் செலவிடப்படும்.

கோதுமை நொய், தானியமாவு, சமையலுக்கான எண்ணெய் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் நண்பகல் உணவுத் திட்டத்திற்கு அமெரிக்க "கேர்" நிறுவனம் உதவி வருகின்றது. 1967-68 வரை "கேர்" நிறுவனத்தால் வழங்கப்பட்ட பொருள்களின் மொத்த மதிப்பு ரூ. 14·47 கோடியாகும்.

### புத்தகங்களையும், பலகைகளையும் இலவசமாக வழங்குதல்.

தொடக்கநிலைப் பள்ளிகளைச் சேர்ந்த முதல் இரண்டாம் மூன்றும் வகுப்புகளில் பயிலும் மொத்த மாணவர்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்குப் புத்தகங்களையும், பலகைகளையும் இலவசமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படுகிறது.

### மாநிலக் கல்வி நிறுவனம்.

பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தின் ஒரு பகுதியாக விளங்குகிற மாநிலக் கல்வி நிறுவனம் உள நிறைவு அளிக்கும் வகையில் இனிதே பணியாற்றி வருகின்றது. தொடக்கநிலைப் பள்ளி, இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பற்பல பாட முறைகளில் பயிற்சியளிப்பதற்காகப் பணியிருப்புப் பயிற்சிப் பாடமுறைகள் பலவற்றை இந்த நிறுவனம் நடத்தியுள்ளது. இவ்வண்ணமே, துறை அதிகாரிகளுக்கும், பயிற்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கும் (Teacher Educators) அவர்களுடைய தொழில்



திறமையை உயர்த்துவதற்காகப் பொருத்தமான பணியிருப்புப் பயிற்சிப் பாடமுறைகள் நடத்தப்பட்டுள்ளன. இந்த நிறுவனம் கீழ்க்கண்ட பணிகளையாற்றி வருகின்றது :—

(1) ஆசிரியர்களுக்கும், பார்வையிடும் அதிகாரிகளுக்கும் பணியிருப்பு பயிற்சியளித்தல் ;

(2) கல்விச் சிக்கல்கள் குறித்து ஆய்வு செய்தல் ;

(3) ஆராய்ச்சித் திட்டங்கள், கற்பிக்கும் பாடப் பொருள்கள் பற்றிய முடிவுகளை வெளியிடுதல் ;

(4) தொடக்கநிலைப் பள்ளி வளர்ச்சிப்பணி ;

(5) ஏனைய பணிகள்.

இந்த நிறுவனம் "Madras Education" என்ற பெயரில் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றை மூன்று திங்களுக்கு ஒரு முறையும் "தமிழகக் கல்வி" என்ற பெயரில் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை திங்களுக்கு ஒரு முறையும் வெளியிடுகின்றது. சுமார் 35,000 கல்வி நிலையங்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

1969-70-ம் ஆண்டில் இந்த நிறுவனத்தின் பணியாளர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கவும், ஆசிரியர்களுக்கும், பார்வையிடும் அதிகாரிகளுக்கும் கூடுதலான பணியிருப்புப் பயிற்சிகளை அளிப்பதன் மூலம் நிலையத்தின் பணிகளை விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### ஆசிரியர்களுக்குப் பரிசு.

ஆசிரியர்களுக்கு அரசாங்கம் பரிசுகள் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1968-69-ம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதிலும் 70 ஆசிரியர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. இவர்கள் ஒவ்வொருவருக்கும் (1) ரொக்கப் பரிசாக 200 ரூபாயும், (2) ரூ. 30 பெறுமானமுள்ள வெள்ளிப் பதக்கமும், (3) நன்மதிப்புச் சான்றிதழ் ஒன்றும் அளிக்கப்படும்.

ஆசிரியர்களுக்கு தேசிய விருதுகளும் வழங்கப்படுகின்றன. 1968-69-ல் இம்மாநிலத்தைச் சேர்ந்த 9 ஆசிரியர்களுக்கு (6 தொடக்க நிலைப்பள்ளி ஆசிரியர்கள், 3 இடைநிலைப்பள்ளி ஆசிரியர்கள்) தேசிய விருதுகள் வழங்கப்பட்டன.

### அரசாங்கம் பாடப் புத்தகங்களை வெளியிடுதல்.

தொடக்கநிலைப் பள்ளிகளுக்கும் நடுநிலைப் பள்ளிகளுக்கும் உரிய பாட நூல்களை அரசாங்கமே தயாரித்து வெளியிடும் திட்டம் செயல்பட்டு வருகிறது. 1968-69- வரை 4 முதல் 7 வகுப்புகளுக்குரிய ஆங்கிலப் பாட நூல்களையும், 1 முதல் 7 வகுப்புகளுக்குரிய தமிழ்ப் பாட நூல்களையும் அரசாங்கமே தயாரித்து வெளியிட்டுள்ளது. 1969-70-ம் ஆண்டில், 8-ம் வகுப்புக்குரிய ஆங்கிலப் பாட நூல்களை இத் திட்டத்தின் கீழ் வெளியிடக் கருதப்பட்டுள்ளது.

### ஆ. இடைநிலைக் கல்வி.

மாணவர்கள் அனைவருக்கும் இலவசக் கல்வி 11-ம் வகுப்பு வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளதால், இடைநிலைப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது. 1967-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதியில் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 2,303 ஆக இருந்ததற்கு மாறாக, 1968-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதியில் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 2,376 ஆக உயர்ந்துள்ளது. 1960-61-ல் 2·68 லட்சமாக இருந்த மாணவர்களின் எண்ணிக்கை மூன்றாவது திட்டக் கால இறுதியில் 5·57 லட்சமாக உயர்ந்தது. 1967-ம் ஆண்டில் 6·47 லட்சம் மாணவர்கள் பயின்று வந்தனர். புதிதாகச் சேர்த்துக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 33·96 சதவீத

மாகும். நடப்பு ஆண்டின் இறுதியில் இந்த வயதுத் தொகுதியில் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 7 லட்சமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது இந்த வயதுத் தொகுதியில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கையில் 37 சதவிகிதமாகும். இந்த சதவிகிதம் 55 ஆக உயர்த்தப்பட நான்காவது திட்ட வரைவு வகை செய்கின்றது. அதன்படி இத் திட்டக்காலத்தில் கூடுதலாக 4 லட்சம் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கிணங்க, ஆசிரியர் பயிற்சியில் பட்டம்பெற்ற ஆசிரியர்கள் 10,000 பேர் கூடுதலாக நியமிக்கப்படுவார்கள். இந்த வயதுத் தொகுதியில் கூடுதலாக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக ஆசிரியர்களை நியமிப்பதற்காகவும், கருவிகளுக்காகவும் நான்காவது திட்டக் காலத்தில் 9·18 கோடி ரூபாய் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது. 1969-70-ம் ஆண்டில் 0·60 லட்சம் மாணவர்களைக் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளவும், ஆசிரியர் பயிற்சிப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் 1,500 பேரை நியமிக்கவும், புதிதாகத் திறக்கப்படும் பிரிவு அல்லது வகுப்பு ஒவ்வொன்றிற்கும் ரூ. 1,500க்கு கருவிகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு எடுக்கும் முயற்சிக்கு இணையாக, இப்பள்ளிகளில் கற்பிக்கப்படும் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இடைநிலைப் பள்ளிக் கல்வியின் திருத்தப் பாடமுறையில், 1967–68 முதல் 10-ம் வகுப்பிலிருந்து தேர்வுப் பாடங்கள் (Electives) பயில வகை செய்யப்பட்டுள்ளது. திருத்த அமைப்பின் கீழ் உள்ள மாணவர்களின் முதல் தொகுதியினர் 1969 ஏப்ரலில் பள்ளி இறுதிப் பொதுத் தேர்வு எழுதுவர். இத்தேர்வுப் பாடத்தின்கீழ் இயற்பியல் (Physics), வேதியியல் (Chemistry), உயிரியல் (Biology) ஆகிய அறிவியல் பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே, அறிவியல் ஆய்வுக் கூடத்தை, செய்முறைப் பயிற்சிக்குத் தேவையான கருவிகளுடன் விரிவுபடுத்த வேண்டியது தேவையாகிறது. 1969–70-ம் ஆண்டு அத்தகைய வசதிகளை ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 40,000 செலவில் 100 இடைநிலைப் பள்ளிகளில் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் கட்டடத்திற்கான செலவு சுமார் ரூ. 25,000-ம் அறிவியல் கருவிகளுக்கான செலவு ரூ. 15,000-ம் அடங்கும். இது தவிர, படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின் கீழ் பெரிய பள்ளிகளில் ஆய்வுக்கூட சிற்றெழுத்தர்களை நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1969-70-ம் ஆண்டில் மானியம் பெறும் பள்ளிகள் 48-ல் ஆய்வுக்கூடச் சிற்றெழுத்தர்களை நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வியின் தரத்தை உயர்த்தும் ஒரு நடவடிக்கையாக உயர்நிலைப்பள்ளிகளில், நூலக வசதிகளை மேம்படுத்தவும், மானியம் வழங்கப்படுகின்றது. ஆண்டுத் திட்டங்கள் மூன்றிலும் சேர்த்து 450 பள்ளிகள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளன. 1969–70-ம் ஆண்டில் இத் திட்டத்தை 200 பள்ளிகளுக்கு விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளிக்கும் வழங்கப்படும் மானியம் ரூ. 2,000-ம் ஆகும்.

மாணவர்களுக்கு "பணிப்பயிற்சி" அளிப்பதற்காக இடைநிலைப் பள்ளிகள், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் அனைத்திலும் பணிக்களரிகள் ஏற்படுத்துவதற்குத் தேசியக் கல்வி ஆணைக்குழு பரிவுரை செய்துள்ளது. இப்பரிவுரையை 1969-70-ம் ஆண்டு முதல், படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. கட்டிடங்கள் கட்டுவதற்காக, 1969–70-ம் ஆண்டிற்கான திட்ட நிதிநிலை அறிக்கையில் ரூ. 40 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆசிரியைகள் எளிதில் சென்றடைய முடியாத வால்பாறை முதலிய இடங்களில் பணியாற்ற இயலும்படியாக நான்காவது திட்ட வரைவில் ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1969–70-ம் ஆண்டில் எளிதில் சென்றடைய முடியாத வால்பாறை முதலிய இடங்களில் உள்ள அரசாங்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியைகளுக்குப் புதுக் குடியிருப்புகள் கட்டும் பணி தொடங்கப்படும். 1969–70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கென ரூ. 1 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



பள்ளிகளில் கல்விச் சம்பளம் வசூலிப்பது நிறுத்தப்பட்டு விட்டதால், நகராட்சி மன்றங்களுக்கு பள்ளிச் சம்பளத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் நின்றுவிட்டது. எனவே, அவை உயர்நிலைப் பள்ளிகளைப் பேண இயலாது இடருறுகின்றன. அதன் விளைவாக, உயர்நிலைப் பள்ளிகளைப் பேணி வருவதற்காக நகராட்சி மன்றங்களுக்கும், சென்னை மாநகராட்சிக்கும் அளிக்கப்படும் மானிய வீதம் நிகரச் செலவின் 50 சதவிகிதத்திலிருந்து 66⅔ சதவிகிதமாக 1967–68 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

## இ. சிறப்புப் பள்ளிகள்.

பாலர் கல்வி (Pre-Primary Education) பெருமளவில் விரிவுபடுத்தப்படவேண்டுமென்று கல்வி ஆணைக்குழு பரிவுரை செய்திருப்பதை ஏற்றுக்கொண்டு, ஐந்து வயதிற்குக் கீழேயுள்ள சிறுவர்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 1969–70-ம் ஆண்டில் 5 பாலர் பள்ளிகளை ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது.

கல்வி பயில்விக்கும் முறை மேம்படுத்தப்பட வேண்டும் என்று தற்போது வற்புறுத்தப்படுவதற்கு இணங்க, ஒவ்வொரு பயிற்சிப் பள்ளியிலும் தேவையான அளவு கருவிகள் கொண்ட ஆய்வுக் கூடம் ஒன்றை அமைப்பது இன்றியமையாத் தேவையாகிறது. பயிற்சிப் பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்கக் கருதப்பட்டுள்ளது. (ஆய்வுக்கூடம் ரூ. 2,000, நூல்நிலையம் ரூ. 1,000.) மேற்கூறிய திட்டத்திற்கு 1969–70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1,67,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி பயில்விக்கும் புதிய முறைகளையும், உத்திகளையும் ஆசிரியர்கள் நன்கு அறிந்து தங்களுடைய தொழில் திறமையை அதிகரித்துக் கொள்வதற்காக நினைவூட்டு வகுப்புகள், சிறப்புப் பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள் ஆகியவை 1969-70-ம் ஆண்டில் தொடர்ந்து நடத்தப்படும். இந்த வகுப்புகள், தலைமை கல்வி அதிகாரிகள், மாவட்டக் கல்வி அதிகாரிகள், பெண்கள் பள்ளிகளின் ஆய்வாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் மாநிலக் கல்வி நிறுவனத்தினால் நடத்தப்படுகின்றன.

ஆறு முதல் 8 வரையிலான வகுப்புகளில் ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் புதிய முறைகளில் பயிற்சியளிக்கும் திட்டம் தொடர்ந்து நடத்தப்படுகின்றது. 1969–70-ம் ஆண்டில் 1,600 இடைநிலைத் தர (Secondary Grade) ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக 40 வகுப்புகள் நடத்தக் கருதப்பட்டுள்ளது.

ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களில் கல்வி கற்பிக்கப்படும் தரத்தினை மேம்படுத்தும் நடவடிக்கையாக பயிற்சி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் பல்வேறு பாடங்களைக் கற்பிக்கும் புதிய முறைகளில் சிறப்புப் பயிற்சி பெற்றிருப்பதுடன், சாதாரண ஆசிரியர் பயிற்சி முதல் பட்டத்திற்கு மேற்பட்ட கல்வித் தகுதி பெற்றவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகும். அதன்படி கல்வியின் புதிய கருத்துக்களை அறியும்பொருட்டு 1969–70-ம் ஆண்டில் எம்.இட். பயிற்சிக்காக 10 ஆசிரியர்களை அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஐந்தாண்டுத் திட்ட வேலையின்படி, 1969–70-ம் ஆண்டில் குருடர் பள்ளி ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர, குருடர்களுக்குக் கல்வி பயில்விப்பதற்காக ஒரு பயிற்சி வகுப்பும் செவிடர்களுக்குக் கல்வி பயில்விப்பதற்காக ஒரு பயிற்சி வகுப்புமாக ஆசிரியர்களுக்கு இரண்டு பயிற்சி வகுப்புகள் நடத்தக் கருதப்பட்டுள்ளது.

நான்கு தென் மாநிலங்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக, பூவிருந்தவல்லியில் குருடர்களுக்காக உள்ள அரசாங்கப் பள்ளி முதல்வரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் குருடர்களுக்கான எழுத்துமுறை அச்சகம் (பிரெய்லி) ஒன்று மத்திய அரசின் உதவியுடன் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது.

## ஈ. பொது.

### (i) நிர்வாகம்.

மாணவர்கள் ஏராளமாகச் சேர்த்துக்கொள்ளப்படுவதன் விளைவாக, பள்ளிகளின் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது. ஆய்வாளர் அலுவலகப் பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்துவது அவசியமாகிறது. ஆய்வாளர் அலுவலகப் பணியின் தரமேம்பாட்டிற்காகவும், பள்ளிகள் நாடோட திறமையாகச் செயல்படுவதற்காகவும், ஐந்தாண்டுத் திட்டவேலையின்கீழ் 1969–70-ம் ஆண்டில், தேவையான இணைப்பணியாளர்களுடன் 20 துணை ஆய்வாளர் பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 6 முதல் 11 வரையுள்ள வயதுத் தொகுதியில் உள்ள மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் திட்டத்தில் இச் செயற்குறிப்பு சேர்க்கப்பட்டுள்ளது.

இத்துறையின் பொறுப்புகள் பெருமளவிற்கு அதிகரித்துள்ளதால் கல்வித் துறையின் நிர்வாக அமைப்பை, குறிப்பாக, மாவட்ட நிலையில் சீரமைப்பது அவசியமாகிறது. எனவே, துறையின் நிர்வாக அமைப்பு 1968–69-ம் ஆண்டில் சீரமைக்கப்பட்டது.

சீரமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ், தற்போது பள்ளிகளின் முன்னுள் கோட்ட ஆய்வாளர் பதவித்தரத்தில் 10 தலைமைக் கல்வி அதிகாரிகள், 45 மாவட்டக்கல்வி அதிகாரிகள், மகளிர் பள்ளிகளின் ஆய்வாளர்கள் 6 பேர் உள்ளனர். கல்வித் துறையின் நிர்வாக அமைப்பு, இவ்வாறு மாவட்ட நிலையில் வலுப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் கல்வி விரைந்து வளர்ந்துள்ளதன் காரணமாகவும் அதன் விளைவாகக் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதனாலும், முன்னுள் மாவட்ட வாரிய இடைநிலைப் பள்ளிகளை அரசாங்கப் பொறுப்பின்கீழ் எடுத்துக்கொண்டுள்ளதனாலும் கணிசமான அளவிற்குப் பெருகியுள்ள பொறுப்புகளை துறை நிறைவேற்ற இது உதவியாயிருக்கும்.

### (ii) உடற்பயிற்சிக் கல்வி.

பள்ளிகளில் உடற்பயிற்சிக் கல்விக்கான வசதிகள் தொடர்ந்து செயல் பட்டு வருகின்றன. பொதுமக்களிடையே விளையாட்டுகளுக்கும், பந்தயங் களுக்கும் ஊக்கமளிப்பதில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் அமைந்துள்ள விளையாட்டு மன்றங்கள் பயனுள்ள வகையில் பணியாற்று கின்றன. இந்த ஆண்டில், மாவட்ட, மாநில நிலைகளில் பொங்கல் பண்டிகையின்போது விளையாட்டுகள் நடத்தப்பட்டன. இது ஆண்டுதோறும் மேற்கொள்ளக் கருதியுள்ள திட்டமாகும்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கான திட்டம் தொடர்ந்து நிறைவேறி வருகின்றது. 1969–70-ம் ஆண்டில் இத் திட்டத்தை மேலும் 2 மாவட்டங்களுக்கு நீடிக்கக் கருதப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அரசாங்க மானியமாக ரூ. 1 லட்சம் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

### (iii) ஆசிரியர்களுக்கு வசதிகள், நலன்கள், சலுகைகள்.

1923-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு முன்னர், தனியார் நிர்வாகத்தின்கீழ் உள்ள பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஓய்வுகால வசதிகள் எதுவுமில்லை. ஆனால் உள்ளாட்சி மன்றங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் வருங்கால வைப்பு நிதியும், அரசாங்கப்பணியில் உள்ள ஆசிரியர்கள் ஓய்வூதியமும் பெறத் தகுதியுள்ளவர்களாயிருந்தனர். 1923-ம் ஆண்டு ஏப்ரல் முதல், தனியாரால் நிர்வகிக்கப்படும் கல்வி நிலை யங்களில் உள்ள ஆசிரியர்களின் நலனுக்காக வருங்கால வைப்பு நிதித் திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. மானியம் பெறும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு 1955 முக்கூறு நலத் திட்டத் திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. ஏற்கெனவே தொடங்கப்பட்ட வருங்கால



வைப்பு நிதித் திட்டமும் இதில் அடங்குகிறது. அத்துடன், ஆசிரியர்களுக்கு ஈட்டுறுதி, ஓய்வூதியம் ஆகிய நலன்களும் அளிக்கப்படுகின்றன. தொடக்க நிலை இடைநிலைத் தர ஆசிரியர்களுக்கெனத் தொடங்கப்பட்ட இம்முக்கூறு நலத் திட்டம், கல்லூரிகள் உட்பட எல்லா வகையான மானியம் பெறும், உள்ளாட்சி மன்றக் கல்வி நிலையங்களிலும் பணியாற்றும் எல்லாவகை யான ஆசிரியர்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. மேலும் அரசாங்கப் பணி யாளர்களுக்குப் பொருந்தக் கூடிய குடும்ப ஓய்வூதியத் திட்டமும் ஆசிரியர் களுக்கு நீட்டிக்கப்பட்டது. ஆனால் அதே கால அளவுக்கு அரசாங்கப் பணி புரிந்துள்ள ஆசிரியர்களுக்கு அளிக்கப்படக் கூடிய குடும்ப ஓய்வூதியத்தில் பாதியாக மானியம் பெறும் பள்ளி அல்லது உள்ளாட்சி மன்றப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக அளிக்கப்படுமென்கிற திருத்தத்துடன் அத்திட்டம் செயல்படும். குடும்ப ஓய்வூதியத் திட்ட நிதித் துறைகளை மேலும் தளர்த்தக் கருதப்பட்டுள்ளது. அதன்படி. குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி அளிக்கும் குறைந்த பணிக் கால அளவு 5 ஆண்டுகளாகும். முதலில் 1955-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் செயலுக்கு வந்த ஓய்வூதியத் திட்டம், 1955-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்குப் பொருந்தும்படியாக தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிகளில் பணி புரியும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு இத் திட்டத்தை 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் செயல்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

முக்கூறு நலத் திட்டத்துடன் கூட, ஆசிரியர் நலனுக்கான தேசிய நிறுவனத் திட்டமும் நிறைவேறி வருகின்றது. தேசிய நிறுவனத்தின் மாநிலச் செயற்குழு, தகுதிவாய்ந்த, தேவையுள்ள ஆசிரியர்களுக்கும், அவர்களைச் சார்ந்துள்ளவர்களுக்கும் திங்களுக்கொரு முறையும், ஒரு மொத்தமாகவும் மானியம் அளித்துவருகிறது. இன்றைய தேதியில் இந் நிதியின்கீழ் வசூலான தொகை ரூ. 20·38 லட்சமாகும். தகுதியுள்ள 113 ஆசிரியர்களுக்கு மானியமாக ரூ. 44,308 அளிக்கப்பட்டுள்ளது.

உயர் கல்வித் தகுதி பெறும் ஆசிரியர்களுக்கு ஊக்கத்தொகை அளிக்கப்பட வேண்டும் என்பதை அரசு கொள்கையளவில் ஒப்புக்கொண் டுள்ளது. அதன்படி., உயர்கல்வித் தகுதிபெற்ற ஆசிரியர்களுக்கு 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதி முதல், முன்கூட்டியே இரண்டு சம்பள உயர்வுகள் அளித்துள்ளது. ஆசிரியர்கள் தங்கள் கல்வித் தகுதியை உயர்த்திக்கொள்ள இது ஊக்கமளிக்கும்.

சிறப்புப் பள்ளிகள் உட்பட இடைநிலைப் பள்ளிகள், தனியார் நிர்வாகத் தின்கீழ் உள்ள பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர் களுக்குப் பொருந்தக் கூடிய விடுப்பு விதிகளை அரசாங்கம் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் தளர்த்தியுள்ளது. அரசாங்கப் பள்ளி ஆசிரியரைப் போலவே, நிலையான பணியில் உள்ள ஓர் ஆசிரியர் ஓராண்டுப் பணிக்காக 3·2/11 நாட்களுக்கு ஈட்டிய விடுப்பு பெறத் தகுதி பெறுவார்.

### (iv) மாற்றப்பட்ட பகுதிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் சிறப்புச் சலுகைகள்.

முன்னுள் திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து இந்த மாநிலத் திற்கு அனுப்பப்பட்ட ஆசிரியர்களுக்குச் சில குறைகள் இருந்தன. அவர் களுடைய குறைகளைப் போக்குவதற்காக பல்வேறு சலுகைகள் அளிக்கப் பட்டுள்ளன. II-ம் தர ஆசிரியர்களாக எடுத்துக்கொள்ளப்பட்ட பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு துறைத் தேர்வுகளில் தேருமலேயே I-ம் தர ஆசிரியர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளி களில் தலைமையாசிரியர்களாக நியமிக்கப்பட்ட 352 பேர்களுக்கு கூடுதலாகக் கொடுக்கப்பட்ட சிறப்புச் சம்பளத்தினைத் திரும்ப வசூலிப்பதை அரசாங்கம் தள்ளுபடி செய்துள்ளது. தாற்காலிகமாக நியமிக்கப்பட்ட அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர்கள் 18-பேரும், மாவட்டக் கல்வி அதிகாரிகளும் பணியில் முறைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் நியமிக்கப்பட்ட தேதியி லிருந்து சம்பள நிலுவையைப் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் பின்னர், துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவது குறித்த விதி

களைத் தளர்த்துவதன் மூலம் அவர்கள் தகுதிகாண் கால அளவை (period of probation) முடித்தவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். கோவை பல்கலைக் கழகத்தின் வித்துவான் தகுதி பெற்ற II-ம் தர தமிழ்ப் பண்டிதர்கள் I-ம் தர தமிழ்ப் பண்டிதர்களாக, முறையான பதவி உயர்வு பெற இயலும்படியாக அரசாணை, கல்வித் தகுதி குறித்த விதிகளைத் தளர்த்தியுள்ளது. ஓராண்டுப் பயிற்சி பெற்ற இரண்டாம் தர ஆசிரியர்கள் ஐந்து ஆண்டுகள் பணி புரிந்த பிறகு இந்த மாநிலத்தில் இரண்டாம் தர ஆசிரியர்களுக்கு இணையாக ஆக்கப்பட்டுள்ளனர். ஆசிரியர்களின் ஓய்வூதியத் திட்டம் மாற்றப்பட்ட பகுதிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் நீட்டிக்கப்பட்டது. அவ்வாணையில், 1956-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதி அன்றோ அல்லது அதற்குப் பிறகு, அதாவது இந்தப் பகுதி, இம்மாநிலத்துடன் இணைக்கப்பட்ட நாளன்றோ அல்லது அதற்குப் பிறகு பகுதியிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்குப் பொருந்தும்படியாக இத்திட்டம் தளர்த்தப்பட்டுள்ளது.

### (v) கல்வியில் சமூகத்தின் பங்கு.

கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ள பள்ளிகளின் மேம்பாட்டிற்காக, உள்ளூர் மக்களிடமிருந்து நன்கொடைகளைப் பெறும் இயக்கம் தொடர்ந்து நிறைவேறி வருகின்றது. 1968 டிசம்பர் இறுதி வரையில் 379 பள்ளி மேம்பாட்டு மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மதிப்பு ரூ. 10·00 கோடியாகும்.

### (vi) இந்தி, மொழி ஆசிரியர்களுக்கு வேலை அளித்தல்.

இரு மொழித் திட்டம் செயல்படுத்தப்பட்டதன் விளைவாக, பாதிக்கப் பட்டவர்களும், தகுதியுடையவர்களுமான எல்லா இந்தி ஆசிரியர்களுக்கும் ஏனைய மொழி ஆசிரியர்களுக்கும் மாற்று வேலை அளிக்கப்பட்டுள்ளது அல்லது அளிக்கப்பட்டு வருகின்றது.

இது கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தெளிவாகிறது.

| | இந்தி ஆசிரியர்கள். | மற்ற மொழி ஆசிரியர்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1. இரு மொழித் திட்டம் செயல் படுத்தப்படும்பொழுது இருந்த மொத்த ஆசிரியர்கள். | 2,395 | 236 | 2,631 |
| 2. ஏ-பிரிவின்கீழ் மொழிப் பாடம் கற்றுத்தர தொடர்ந்து அமர்த்தப்பட்ட ஆசிரியர்கள். | 67 | 108 | 175 |
| 3. இடைநிலை ஆசிரியர்களாகவும், எழுத்தர்களாகவும், நூல் நிலையப் பணியாளர்களாகவும் மாற்று வேலை அளிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை. | 1,677 | 112 | 1,789 |
| 4. வாய்தா காலம் முடிவடைந்த போது நீக்கப்பட்ட தற்காலிக, தகுதியில்லாத, பகுதி நேர ஆசிரியர்களின் எண்ணிக்கை. | 651 | 16 | 667 |
| 5. மேலே கொடுக்கப்பட்ட 4-ம் பிரிவின் எண்ணிக்கையில் தற்காலிகமாக இருந்தும் அடுத்தபடியாக மாற்று வேலை அளிக்கப்பட்ட தகுதி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை. | 13 | 1 | 14 |
| 6. மேலே கொடுக்கப்பட்ட 4-ம் பிரிவின் எண்ணிக்கையில், தற்காலிகமாகவும், தகுதி யில்லாமலும், பகுதி நேர ஆசிரியர்களாகவும் இருந்த படியால் மாற்று வேலை அளிக்கப்படாதவர்களின் எண்ணிக்கை. | 638 | 15 | 653 |



இதிலிருந்து தகுதியில்லாத, பகுதி நேர, தற்காலிக ஆசிரியர்கள் மட்டுமே மாற்றுவேலை அளிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

### (vii) தேசியக் கல்வி—ஆராய்ச்சி—பயிற்சி மன்றம்.

தேசியக் கல்வி—ஆராய்ச்சி—பயிற்சி மன்றத்தின் ஆதரவில் 1968–69-ம் ஆண்டின் கருத்தரங்கில் பங்கு கொள்ளும் திட்டத்திற்கான அனைத்திந்தியப் போட்டி நடத்தப்பட்டது. இது குறித்து வந்த 37 கட்டுரைகளில் 10 கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. மாநிலக் கல்வி நிலைய இயக்குநர் அவற்றை பரிசீலனை செய்து, தேசியக் கல்வி நிலையத்தின் களப்பணித் துறைக்கு (Department of Field Services) அனுப்பினார். 1968–69-ம் ஆண்டிற்கான கருத்தரங்கில் படிப்பதற்காக அவை அனுப்பப்பட்டன.

### (viii) புகுமுக தொழிற் பயிற்சி நிலையங்கள்.

தொடக்க நிலைக்குப் பிந்திய நிலையில் படிப்பைத் தொடர இயலா நிலையில் உள்ள 11 அல்லது 12-லிருந்து 14 வரையுள்ள வயதுத் தொகுதியில் உள்ள சிறுவர்களுக்கு படிப்பு, தொழில் வசதிகளைச் செய்து தருவதற்காக இளைஞர் தொழில் நிலையங்களை ஏற்படுத்த இந்திய அரசு வகுத்துள்ள திட்டத்தின்படி இம் மாநிலத்தில் அடியிற் கண்ட இடங்களில் 6 நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன :—

(1) எம். சிடி. முத்தையா செட்டியார் உயர்நிலைப் பள்ளி, சென்னை.

(2) அடிப்படைக் கல்விக்கும், பிந்திய கல்வியாளிக்கும் பள்ளி, தெ. கல்லுப்பட்டி.

(3) வாரிய உயர்நிலைப்பள்ளி, பூவிருந்தவல்லி.

(4) கே. வி. உயர்நிலைப் பள்ளி, விருதுநகர்.

(5) நகராட்சி உயர்நிலைப் பள்ளி, வடக்கு கோயம்புத்தூர்.

(6) டாக்டர் எ.சி.டி.சி. மாதிரி உயர்நிலைப் பள்ளி, காரைக்குடி.

இந்த நிலையங்கள் தொடர்ந்து திறம்படச் செயலாற்றி வருகின்றன.

### (ix) இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூடம்.

உயர்நிலைப் பள்ளிகளுக்காக பௌதிகவியல், வேதியியல் பரிசோதனைக் குத் தேவையான சோதனைக் கருவிகளுடன் கூடிய தொடர்வண்டி பொருத் தப்பட்ட இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூடத் திட்டம் "கேர்" நிறுவனத்தின் உதவியுடன் தமிழ்நாட்டில் முன்னோடித் திட்டமாக மாயூரம் கல்வி மாவட் டத்தில் தொடங்கப்பட்டது. இந்தியாவில் இதுபோன்ற திட்டம் தொடங்கப் பட்டது இதுவே முதல் தடவையாகும். தக்கபடியான ஆய்வுக் கூட வசதி களில்லாத பல பள்ளிகள் இதுபோன்ற முழு வசதிகளும் நிரம்பப்பெற்ற இயங்கும் ஆய்வுக் கூடத்தால் பயன்பெறும். தாற்காலிக நடவடிக்கை யாக முதலில் முன்னோடி ஆய்வுக்காக தஞ்சாவூர் வருவாய் மாவட்டத் தில் மாயூரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தெரிந்தெடுக்கப்பட்ட சில உயர்நிலைப் பள்ளிகளுக்காக இரண்டு இயங்கும் வண்டிகளும் பயன்

படுத்தப்பட்டன. இதற்கென வகுத்துள்ள ஓர் அட்டவணையின்படி ஒவ்வொரு வண்டியும் தெரிந்தெடுக்கப்பட்ட 20 பள்ளிகளுக்குச்சென்று வரு கிறது. இந்த 20 பள்ளிகளையும் ஒரு சுற்று முடிப்பதற்கு 15 நாட்கள் ஆகின்றன. முன்னோடியான இந்த ஆய்வுத் திட்டம் பயனுள்ளதாகத் தெரியவந்தால், ஏனைய கல்வி மாவட்டங்களுக்கும் இது விரிவுபடுத்தப் படும். இதற்குப் பொருமான நன்கொடை வழங்க "கேர்" நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது.

### (x) பள்ளிகள் இணைந்து செயல்படுதல்.

இணைந்து செயல்படும் திட்டத்தின்கீழ் இடைநிலைப் பள்ளிகளையும் தொடக்கப் பள்ளிகளையும் ஒருங்கிணைத்துச் செயல்படச் செய்யும்படி கல்விக் குழு பரிந்துரை செய்துள்ளது. இத் திட்டத்தினால் இரண்டு வகைப் பள்ளி களும் ஒன்றுக்கொன்று பயனடையும். இந்த வேலைத் திட்டத்தின்கீழ் ஓர் இடைநிலைப் பள்ளியைச் சுற்றி 10 முதல் 20 ஆரம்பப் பள்ளிகளையும் 3-லிருந்து 4 உயர் தொடக்கப் பள்ளிகளையும் ஏற்படுத்துவதால் கல்விச் சீர்திருத்தத்திற்காகவும் மேம்பாட்டுக்காகவும் திட்டமிடுதல், ஆலோசனை கூறுதல், மேம்படுத்துதல் ஆகியவற்றில் இணைந்து செயல்படுவது இயலும் என்று கருதப்படுகிறது. இம் மாநிலத்தில் இதுவரை 113 பகுதிகளில் இந்த ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

### (xi) இயங்கும் மருத்துவ வண்டி.

உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோ தனை செய்து அவர்களுக்குத் தேவையான சிகிச்சை அளிப்பதற்காக தேவை யான மருத்துவர்களுடனும், பணியாளருடனும் கூடிய இயங்கும் மருத் துவப் பிரிவு ஒன்றை வட ஆற்காடு மாவட்டத் தலைமையாசிரியர்கள் தாமாகவே முன் வந்து தொடங்கி வைத்தனர். இந்த முன்னோடித் திட்டம் நல்ல பயனளித்ததன் விளைவாக அதே மாவட்டத்தில் மேலும் இரண்டு வண்டிகள் செயல்படத் தொடங்கின. இதைப் போன்ற வண்டிகள் நாமக்கல், ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மாவட்டங் களிலும் செயல்படத் தொடங்கின. இந்த மருத்துவ வண்டிகளைச் செயல் படுத்தி வருவதற்கான தொடர் செலவுகள், மாணவர்களிடமிருந்து வசூலிக் கப்படும் மருத்துவக் கட்டணத்திலிருந்து ஈடு செய்யப்படுகின்றன. தங்கள் நலனிற்காக முன் வந்து அளிக்கப்படும் இந்த உதவியை மாணவர்கள் வரவேற்றுள்ளனர்.

## உ. கல்லூரிக் கல்வி.

சென்னையிலுள்ள கல்வித் துறை இயக்குநர் அலுவலகத்தில் ஓர் இயக்குநர், ஒரு துணை இயக்குநர், இயக்குநரின் நேர்முக உதவியாளர் ஒருவர், நூலகச் சிறப்பு அதிகாரி, கல்வி உதவிச் சம்பளம் (நிர்வாகம்) சிறப்பு அதிகாரி கல்வி உதவிச் சம்பள (கணக்குகள்) சிறப்பு அதிகாரி (ஆங்கிலம்) ஆகிய நான்கு சிறப்பு அதிகாரிகளும் உள்ளனர்.

1968 செப்டம்பரில் அரசாங்கம் கல்வி தலைமை ஆலோசகர் அரசாங்கக் கூட்டுச் செயலாளர் (அலுவல் காரணமாக) பதவி ஒன்றை ஏற்படுத்தியது. இந்த அதிகாரி கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகங்களுக்கும் பொது நூலகங்களுக்கும் பொறுப்பேற்பார். நூலகங்கள் அன்றிலிருந்து பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு மாற்றப்பட்டு விட்டன. "முதியோர் கல்வி" என்பதும் கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆளுகைக்கு மாற்றப்பட்டுவிட்டது.

உயர்நிலைக் கல்வியைப் பெருமளவில் விரிவுபடுத்தியதனாலும் தாராளச் சம்பளச் சலுகைகள், கடன் உதவிச் சம்பளங்கள், தகுதிச் சம்பளங்கள் ஆகிய வசதிகளையும், அரசாங்க உதவிச் சம்பள வசதிகளையும் ஏற்படுத்திய தாலும் கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை பெருகியது. இந்தத் தேவையை நிறைவு செய்வதற்காக ஆண்டுதோறும் அரசாங்கமும்.



தனியார் நிர்வாகங்களும் புதிய கல்லூரிகளைத் தொடங்கின. மேலும் தற்போதுள்ள கல்லூரிகளில் இயன்றவிடங்களி லெல்லாம் சேர்த்துக் கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

### 1969–70-ம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டம்.

1969–70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 403·50 லட்சம் மொத்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள கல்லூரிகளைப் பேணி வருதல் அவற்றை மேலும் மேம்படுத்துதல், கல்லூரிக் கல்வி வசதிகளை விரிவுபடுத்துதல் ஆகியவற்றிற்கு இத் தொகை செலவிடப்படும்.

1969–70-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| கணக்குத் தலைப்பு. | திட்டத்தில் சேராதவை. | திட்ட வேலைகள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கு மானியம் வழங்குதல். | 44·48 | 20·00 | 64·48 |
| 2 கல்லூரிக் கல்வி நிறுவனங்கள் | 311·12 | 27·90 | 339·02 |
| 3 பொது (தேசியக் கடன் நீங்கலான) நிர்வாகம் உதவிச் சம்பளம், நூலகங் கள் பல்வகை. | 20·55 | .. | 20·55 |
| மொத்தம் .. | 376·15 | 47·90 | 424·05 |

மேற்படித் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 47·90 லட்சம் கீழ்க்கண்ட வற்றிற்காகச் செலவிடப்படும். புதிய அரசாங்கக் கல்லூரிகளைத் தொடங் குதல், புதிய பட்டப் படிப்புகளையும் கூடுதலான பட்டப்படிப்புகளையும் பட்ட மேற்படிப்புகளையும் ஏற்படுத்துதல், பணியிருப்புப் பயிற்சியளித்தல், பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை வழங்குதல், நூலகப் பணியை விரிவுபடுத்துதல், முதியோர் கல்வி, உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு மாநில அரசு வழங்கும் உதவித் தொகை, இயக்குநர் அலுவலகத்தில் கூடுதலாகப் பணியாளர்களை நியமித்தல் ஆகியவை மேற் படி திட்டத்தில் அடங்கும். மதுரை பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட விருக்கிற தொடர் மானியத்திற்கு ரூ. 8·00 லட்சம் வழங்குவதும் மேற்படி தொகையில் சேரும்.

### 1968–69-ம் ஆண்டில் அடைந்த முன்னேற்றம்.

#### (a) பல்கலைக் கழகங்களுக்கு மானியத் தொகை.

சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் திற்கும் ஆண்டுதோறும் வழங்கப்படும் ஒரு மொத்த மானியம், அவை தமது கூடுதல் செலவினங்களை ஈடு செய்ய 1968–69 முதற்கொண்டு முறையே ரூ. 19 லட்சத்திலிருந்து ரூ. 21·5 லட்சமாகவும் ரூ. 11,61,300 லிருந்து ரூ. 14,11,300 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

#### (b) 1968-69-ல் கல்லூரிகளில் மாணவர்களை அனுமதித்தல்.

1968–69-ல் கல்லூரி புகுமுக வகுப்பில் சேர விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை எப்பொழுதும் போலவே அதிகமாகவே இருந்தது. குறிப் பாக தமிழ் நாட்டில் மக்கள் தொகை நெருக்கமாக உள்ள நகர்ப் பகுதி

களில் இந்தப் போக்கு அதிகமாக காணப்பட்டது. பொதுவாக இம்மா நிலத்தில் கல்லூரிகளில் சேர விரும்புவோருக்குத் தற்போதுள்ள வசதிகள் போதுமானவையாக இருந்தன. பெருகியுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கிணங்க, கல்லூரிகளில் (அரசாங்கக் கல்லூரிகள், மானியம் பெறும் கல்லூரிகள்) இட வசதி கருதி வசதிகளுக்கேற்ப கூடுதலான பிரிவுகளைத் தொடங்க அல்லது கல்வி கற்பிப்பவர்கள் கூடுதலாக உள்ளனர் எனக் கருதப்படுமிடங்களிலெல்லாம் மேலும் பல மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள பல்கலைக் கழகங்கள் அக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளன.

எல்லாக் கல்லூரிகளிலும் கல்லூரிப் புகுமுக வகுப்பில் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 65,000 ஆகும். ஆனால் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையோ 60,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### (c) 1968-69ல் தொடங்கப்பட்ட புதிய கல்லூரிகள்.

வளர்ந்து வரும் கல்லூரிக் கல்வி ஆர்வத்தை நிறைவேற்றும் வகையில் 1968-69-ல் அரசாங்கம் நான்கு புதிய கலைக் கல்லூரிகளைத் தொடங்கியது. (ஆண்கள் கல்லூரி மூன்று, மகளிர் கல்லூரி ஒன்று.)

1. திருவள்ளுவர் ஆண்கள் அரசாங்கக் கலைக் கல்லூரி, ராசிபுரம்.
2. அறிஞர் அண்ணா ஆண்கள் கலைக் கல்லூரி, நாமக்கல்.
3. ஆண்கள் அரசாங்கக் கலைக் கல்லூரி, விழுப்புரம்.
4. மகளிர் அரசாங்கக் கல்லூரி, வாலாஜாப்பேட்டை.

மேற்சொன்ன கல்லூரிகளைத் தவிர, தனியார் நிறுவனங்களும் ஆறு கலைக் கல்லூரிகளைத் தொடங்கின. (ஆண்கள் கல்லூரி நான்கு, மகளிர் கல்லூரி இரண்டு.) அவையாவன : (1) ஸ்ரீ தேவ் குன்வார் நானாலால் பட் வைஷ்ணவ மகளிர் கல்லூரி, குரோம் பேட்டை, சென்னை, (2) கோபி கலைக் கல்லூரி, கோபிச்செட்டிப்பாளையம், (3) ஸ்டாண்டர்டு தீப்பெட்டி தொழிற்சாலை நிர்வகிக்கும் ராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி, (4) மடத்துப்பட்டி கோபால நாயக்கர் ஆண்கள் கல்லூரி, சங்கரன் கோயில், (5) பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி, உசிலம்பட்டி, (6) முக்கியத்துவ சிறுகரு வாக்ஃ வாரியக் கல்லூரி, மதுரை.

1968-69-ல் இந்த 10 கல்லூரிகளையும் புதிதாகத் தொடங்கியதனால், தமிழ்நாட்டில் உள்ள கலை அறிவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை, 1967-68-ல் 116 என்பதிலிருந்து 1968-69-ல் 126 ஆக அதிகரித்துள்ளது.

### (d) புதிய பாட முறைகள்.

1967-68-ல் புகுமுக வகுப்பில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததினால், புகுமுக வகுப்புத் தேர்வில் வெற்றிபெற்றவர்களின் எண்ணிக்கையும் கூடுதலாகியது. அதன் விளைவாக 1968-69-ல் பட்டப்படிப்பு வகுப்புகளில் சேர விரும்புவோரின் எண்ணிக்கையும் கணிசமான அளவு உயர்ந்துவிடவே பட்டப்படிப்பு வகுப்புகளில் இடங்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டிய அவசியம் உணரப்பட்டது. இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக அடியிற்கண்ட கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புகள் கூடுதலாகத் தொடங்கப்பட்டன. (1) திருச்சிராப்பள்ளியிலுள்ள பெரியார் ஈ. வே. ரா. கல்லூரி, (2) புதுக்கோட்டையிலுள்ள மேன்மை தங்கிய ராஜா கல்லூரி, (3) வட சென்னையிலுள்ள மகளிர் அரசாங்கக் கலைக் கல்லூரி, (4) கும்பகோணத்திலுள்ள மகளிர் அரசாங்கக் கலை கல்லூரி, (5) மதுரையிலுள்ள ஸ்ரீ மீனாட்சி மகளிர் அரசாங்கக் கல்லூரி மேலும், செய்யாறு அரசாங்கக் கலைக் கல்லூரியிலும், திண்டுக்கல்லில் பெண்கள் அரசாங்கக் கலைக் கல்லூரியிலும் பட்டப் படிப்பு வகுப்புகளும் தொடங்கப்பட்டன. அதன் மூலம் 1968-69-ல் அந்த இரண்டு கலைக் கல்லூரிகளிலும் தரம் உயர்த்தப்பட்டன.



சில அரசாங்கக் கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க அந்தந்தப் பல்கலைக் கழகங்களிடமிருந்து தனியாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்சொன்னவற்றைத் தவிர, 1968-69-ல் அரசின் உதவித் தொகை பெறும் கல்லூரிகளில் கூடுதலாகப் பட்டப் படிப்பு வகுப்புகள் தொடங்கப்பட்டன அல்லது அத்தகைய கல்லூரிகள் மேனிலைப்படுத்தப்பட்டன.

### (e) மாலைக் கல்லூரிகள்.

வாழ்க்கையில் மேலும் முன்னேற்றம் காண்பதற்காகக் கல்லூரிப் படிப்பை தொடர வேண்டும் என்னும் விருப்பம் உடையவர்களுக்குப் பல்கலைக் கழகக் கல்வி அளிக்கும் வகையில் பல கல்லூரிகளில் கலை-அறிவியல் பாடங்களில் மாலைக் கல்லூரிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டன. வேலூரில் உள்ள முத்துரங்கம் அரசாங்கக் கலைக் கல்லூரியில் புகுமுக வகுப்பில் மாலைக் கல்லூரி 1968-69-ல் தொடங்கப்பட்டது. இதையும் சேர்த்து மாலைக் கல்லூரிகள் மொத்தம் 11 கல்லூரிகளில் நடத்தப்படுகின்றன. இந்த 11 கல்லூரிகளில் 8 கல்லூரிகளில் புகுமுக வகுப்பிலும் பட்டப் படிப்பிலும் மாலைக் கல்லூரி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

### (f) ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகள்.

1968-69-ல் புதிதாக ஆசிரியை பயிற்சிக் கல்லூரிகள் மூன்று ஏற்படுத்தப்பட்டன. (1) சாரதா மகளிர் பயிற்சிக் கல்லூரி, சேலம், (2) ஸ்ரீஅவிநாசி லிங்கம் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, கோயம்புத்தூர், (3) செயிண்ட் ஜஸ்டின்ஸ் மகளிர் பயிற்சிக் கல்லூரி, மதுரை.

மேற்சொன்னவற்றோடு சேர்த்து ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கை 1967-68-ல் 20 என்பதிலிருந்து, 1968-69-ல் 23 ஆக அதிகரித்துள்ளது. இம் மாநிலத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுதற்குத் தேவையான பட்டதாரி ஆசிரியர்களுக்கும் பயிற்சியளிப்பதற்கு இம் மாநிலத்தில் தற்போதுள்ள ஆசிரியக் கல்லூரிகளே போதுமானவையாகும்.

### (g) பயிற்சி மொழி

1966-67 கல்லூரி புகுமுக வகுப்பிலும் 1967-68-ல் பி.ஏ. வகுப்பிலும் மாற்றுப் பயிற்சி மொழியாகத் தமிழை கொண்டு வந்ததால் புகுமுக வகுப்பில் தமிழ்ப் பயிற்சி மொழியாகக் கொண்ட கல்லூரிகளின் எண்ணிக்கை கிட்டத் தட்ட 92 ஆக அதிகரித்துவிட்டது. 1967-68-ல் 83 கல்லூரிகளே இருந்தன. இங்கு படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 1967-68-ல் 6,400 ஆக இருந்தது. ஆனல் 1968-69-ம் ஆண்டிலோ மாணவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 13,784 ஆக அதிகரித்துவிட்டது. 1967-68-ல் பி. ஏ. வகுப்பில் தமிழை பயிற்சி மொழியாகக் கொண்ட கல்லூரிகள் 48 இருந்தன. 1968-69-ம் ஆண்டில் இக் கல்லூரிகளின் எண்ணிக்கை 57 ஆகும். இந்த வகுப்பில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 2,601.

பி.எஸ்.ஸி. நிலையில் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்கும் திட்டத்தைப் படிப்படியாகச் செயலுக்குக் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்கு தேவையான பாட புத்தகங்களையும் தமிழிலேயே வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கணக்கியல், இயற்பியல், வேதியியல், தாவரவியல் (Botany), விலங்கினவியல் (Zoology) ஆகிய ஐந்து பிரிவுகளிலும் தொழில் நுட்பச் சொற்களைத் தரமான வகையில் உருவாக்குவதற்காக முதற்கண் ஒரு குழு அமைக்கப்பட்டது. இது குறித்த பணி முடிவடைந்துள்ளது. மேற்படி ஐந்து பிரிவுகளிலும் பாட புத்தகங்களைத் தமிழில் எழுதத் தொடங்கிவிட்டனர். வேலை நிறைவேறி வருகிறது.

[1969 மார்ச் 12

### (h) கல்லூரிப் புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி.

1967–68-ம் கல்வி ஆண்டு முதல் குறிப்பிட்ட அளவுள்ள வருமானத் தைப் பொறுத்தும், குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கல்லூரிப் புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி அளிக்கப்பட்டது. அரிசனங் கள், பழங்குடி மக்கள், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர் களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பெற்றோர்களது வருமான வரம்பு ரூ. 2,000 ஆகும். பிற வகுப்பினர்க்கு இது ரூ. 1,500 ஆகும். அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்களின் பிள்ளைகளுக்கும், குறைந்த வருவாய் பெறும் உள்ளாட்சி மன்ற ஊழியர்களின் பிள்ளைகளுக்கும், அரசாங்க மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கும் புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி அளிக்கப்பட்டது. சாதி, சமய வேறுபாடின்றியும் வருமான வரம்பு இல்லாமலும் கல்லூரிப் புகுமுக வகுப்பில் கல்விச் சம்பளம் செலுத்துவதிலிருந்து விலக்களிப் பதன் மூலம் கல்லூரிப் புகுமுக அளவில் எல்லா மாணவ, மாணவியர் களுக்கும் இலவசக் கல்வி அளிக்க அரசு இப்போது முடிவு செய்துள்ளது.

### (i) சம்பளச் சலுகைகளும், கல்வி உதவிச் சம்பளங்களும்.

குறிப்பிட்ட சில நிபந்தனைகளின் கீழ் கல்லூரி புகுமுக வகுப்பு மாணவர் களுக்கு 1967–68-ல் வழங்க ஒப்புதலளிக்கப்பட்ட தாராள சம்பளச் சலுகைத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.

மெட்ரிக் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பைத் தொடருவதற்காக தகுதி யுள்ள மாணவர்கள் பெறக்கூடிய மத்திய அரசின் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டங்கள் மூன்றும் தொடர்ந்து செயலில் இருந்து வருகின்றன.

(1) உயர் தகுதி பெற்ற மாணவர்களுக்குத் தேசியக் கல்வி உதவித் தொகை.

(2) தொடக்கநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற் றில் பணியாற்றும் ஆசிரியர்களின் குழந்தைகளில் தகுதியுள்ளவர்களுக்கு வழங்கப்படும் தேசியக் கல்வி உதவித் தொகை.

(3) தேசியக் கடன் கல்வி உதவித் தொகை.—1968–69-ம் ஆண்டில் மேற்சொன்ன மூன்று திட்டங்களின் கீழும் புதிதாகக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை முறையே 591, 39, 1,137 (மொத்தம் 1,767) மேலும் கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்டவர்களில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டவர்கள் சுமார் 5,300 பேர். இந்த வகையில் கிட்டத்தட்ட இந்த மூன்று திட்டங்களின் கீழ் சுமார் 7,070 மாணவர்கள் நிதி உதவி பெற்று வருகின்றனர்.

மேலே குறிப்பிட்ட இந்திய அரசு கல்வி. உதவித் தொகைகள் தவிர குறிப்பிட்ட சில நிபந்தனைகளுக்குட்பட்டு, மாநில அரசு வழங்கும் கல்வி உதவித் தொகையும் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. (1) 1963-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதியிலிருந்து ஓராண்டுக் காலத்திற்காவது வாழ்க்கை நடத்துவதற்காக பொன் நகைகள் செய்வதையே தொழிலாக நம்பியிருந்த பொற்கொல்லர்களின் சிறுார்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல், (2) அரசியல் தியாகிகளின் குழந்தைகள், மாற்றான் குழந்தை கள். மரணமடைந்த அவர்களது மகன்களின் மூலம் பிறந்த பேரக் குழந்தைகள், இந்திய தேசிய இராணுவத்தில் பங்கு கொண்டவர்களின் குழந்தைகள் ஆகியோர் கல்லூரி புகுமுக வகுப்பில் பி. ஏ., பி.எஸ்ஸி., பி.டி., ஆகிய வகுப்புகளில் படித்துக் கொண்டிருந்தால் அவர்களுக்குத் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கான உதவித் தொகைகளும் தங்கிப் பயிலாத மாணவர்களுக்கான உதவித் தொகையும் வழங்குதல், (3) பாது காப்புப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு உதவித் தொகை வழங்குதல், (4) பர்மா, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளின் குழந்தை களுக்கு உதவித் தொகை வழங்குதல், (5) முகமதியர்களுக்காகத் தனிப் பட்ட வகையிலும் மாணவியருக்காகத் தனிப்பட்ட வகையிலும் வழங்கப் படும் தகுதி-வருவாய அடிப்படையில் கொடுக்கப்படும் கல்வி உதவித் தொகை, (6) கைம்பெண்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குதல்



1969 மார்ச் 12]

(7) ராணி மேரிக் கல்லூரி, வெலிங்டன் சீமாட்டி உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் பயிலும் பிராமணரல்லாத மாணவியர்க்கு கல்வி உதவித் தொகை வழங்குதல், (8) கீழ்த் திசைக் கல்வி பெறுவதற்கு கல்வி உதவித் தொகை வழங்குதல், (9) பட்ட மேற்படிப்புக்கான கல்வி உதவித் தொகை வழங்குதல், (10) ஆராய்ச்சிக்கான கல்வி உதவித் தொகை வழங்குதல். மோரிஸ் தீவுகள், பீஜித் தீவுகள், மலேசியா ஆகிய இடங்களில் குடியேறி யுள்ளவர்களில் தமிழ் பேசும் மாணவர்களைத் தெரிந்தெடுத்து மெட்ரிக் வகுப்பிற்கு பிந்திய கல்லூரி படிப்பைத் தொடருவதற்காக கல்வி உதவித் தொகை இம் மாநிலத்தில் வழங்கப்படுகிறது. மோரிஸ் தீவுகள், பீஜித் தீவுகள், மலேசியா ஆகிய இடங்களில் ஒவ்வோரிடத்திற்கும் இரண்டு பேருக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

### (j) தேசிய மாணவர் படை.

தேசிய மாணவர் படை அணி வகுப்பையும் முகாம்களையும் நிறுத்தி வைக்கும்படி அரசாங்கம் கட்டளையிட்டுள்ளதால் 1968–69-ம் ஆண்டில் தேசிய மாணவர் படை குறித்த நடவடிக்கைகள் எவையும் நடைபெறவில்லை.

### (k) திட்ட அரங்குகள்

நாட்டு நலனுக்காக வகுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்களைப்பற்றி கல்லூரி மாணவர்கள் ஆசிரியர் களிடையே ஓர் உற்சாக உணர்ச்சியைத் தோற்றுவித்து அவை குறித்து அவர்கள் திறனாய்வு செய்யும் வகையில் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் திட்ட அரங்குகள் செயல்பட்டு வருகின்றன. சென்னை மாநகரில் இயங்கி வரும் திட்ட அரங்குகளுக்கு மானியங்கள் வழங்க, கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வெளியூர் களில் இயங்கி வரும் இத்தகைய கல்லூரிகளுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மானியங்கள் வழங்குகின்றனர்.

### (l) நூலகங்கள்.

1968–69-ல் கிளை நூலகங்கள் 12, புத்தகங்கள் ஒப்படை நிலை யங்கள் 67 ஆகியவை உள்ளூர் நூலக அதிகார நிறுவனத் தால் தொடங்கப்பட்டன. இதன் விளைவாக உள்ளூர் நூலக அதிகார நிறுவனத்தின்கீழ் உள்ள நூலகங்களின் மொத்த எண்ணிக்கை (மாவட்ட மத்திய நூலகங்கள் 12 உட்பட) 1,349 என்பதிலிருந்து 1,361 ஆகவும், ஒப்படை நிலையங்கள் 2,156 லிருந்து 2,223 ஆகவும் அதிகரித் துள்ளது.

உள்ளாட்சி நூலக அதிகார நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்ட அடியிற்கண்ட திட்டங்கள் மனநிறைவளிக்கும் வகையில் 1968–69-ம் ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

(1) இயங்கும் நூலகப் பணி.

(2) குழந்தைகளுக்காக புத்தகங்களை வீட்டிற்குக் கொண்டு சென்று ஒப்படைத்தல்.

(3) சிறுவர்களுக்காக நூலகப் பணி.

(4) சீருலாப் பயணிகளுக்காக நூலகப் பணி.

(5) சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்காக நூலகப் பணி.

(6) காவலர் துறைப் பணியாளர்களுக்காக நூலகப் பணி.

(7) இராமத்தில் நூலகப் பணி.

(8) மருத்துவ மனை நூலகப் பணி.

உள்ளூர் நூலக அதிகார நிறுவனங்கள் தொடங்கிய நூலகங்களைத் தவிர ஊராட்சிகள், இராம சங்கங்கள், தனியார் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், நகராட்சிகள் ஆகிய பல்வேறு நிர்வாகங்களின் கீழும் நூலகங்கள் உள்ளன. நகராட்சிகளின் ஆணையின்கீழ் உள்ள நூலகங்கள் தவிர ஏனைய நிர்வாகங்களின் கீழ் உள்ள நூலகங்களுக்கு ஆண்டு தோறும் மாநில நிதியிலிருந்து மானியம் வழங்கப்படுகிறது.

## 1969-70-க்கான வேலைத் திட்டம்.

### (a) புதிய கல்லூரிகளும் பாட முறைகளும்.

கல்லூரிப் புகுமுக வகுப்பில் சேருவதற்குத் திரளாக வரும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுவதற்கும், பல கல்லூரிகளில் அளவுக்கு மேற்பட்ட மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதைத் தவிர்ப்பதற்கும் பல்கலைக் கழகங்களின் மானிய ஒதுக்கீட்டைப் பொறுத்து, 1969–70-ல் (1) எங்கெங்கு பொது மக்களின் ஆதரவு உள்ளதோ அவ்விடங்களில் மொத்தமாக நான்கு புதிய அரசாங்கக் கலைக் கல்லூரிகளைத் தொடங்கவும்; சில அரசாங்கக் கலைக் கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் கூடுதலான பிரிவுகளைத் தொடங்கவும்; (2) தற்போது செயல்பட்டு வரும் பட்டப்படிப்பு அளிக்கும் கல்லூரிகளில் மேலும் பல பட்டப் படிப்புப் பாட முறைகளைத் தொடங்கவும்; புகுமுக வகுப்பு பயிற்சியளிக்கும் கல்லூரிகளை பட்டப் படிப்புக் கல்லூரிகளாக மேம்படுத்துவதற்கும் ; (3) சில அரசாங்கக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்புப் பாட முறைகளைத் தொடங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

**(b) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ள சம்பள வீதங்கள்:** அரசாங்கக் கல்லூரிகளிலும் அரசு மானியம் பெறும் கல்லூரிகளிலும் பயிற்சிக் கல்லூரிகளிலும் பணியாற்றும் ஆசிரியப் பணியாளர்களுக்கு பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு பரிந்துரைத்துள்ள சம்பள வீதங்களை 1966-ம் ஆண்டு எப்ரல் 1-ம் தேதி முதல் வழங்க மாநில அரசு 1967 ஜனவரியில் ஒப்புதலளித்தது. அடியிற்கண்ட வகையைச் சேர்ந்த பணியாளர்களுக்கும் இந்தப் புதிய சம்பள வீதங்களைக் கொடுப்பதற்கு நிதி உதவியளிப்பதாக இந்திய அரசு தகவல் ஏதும் அறிவிக்காததால் இந்த சம்பள வீதங்கள் அடியிற்கண்ட வகையைச் சார்ந்த பதவிகளுக்கு அளிக்கப்படவில்லை.

(1) கல்லூரிப் புகுமுக வகுப்பு மட்டுமே உள்ள கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள்.

(2) உடற்பயிற்சி ஆசிரியர்கள், நூலகர்கள்.

(3) தமிழ்நாடு கல்விப் பணியிலும் தமிழ்நாடு கல்வி சார்நிலைப் பணியிலும் உள்ளவர்களும், மாநிலக் கல்வி நிலையம் போன்ற நிறுவனங்களுக்கும் தொழில் கல்லூரிகளுக்கும் முகமையில் அனுப்பப்பட்டவர்களுமான ஆசிரியர்களும் அதிகாரிகளும்.

(4) 1966-ம் ஆண்டு எப்ரல் மாதல் 1-ம் தேதிக்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட பதவிகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள்.

மேலே குறிப்பிட்ட பணித்தரத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த புதிய சம்பள வீதங்கள் பொருந்தாதென்று செய்ததால், பணியாளர்கள் இடர்ப்படும் வகையில் சிக்கல்களும் செயல் முறையில் தொல்லைகளும் ஏற்பட்டன. அதனால் இந்த பணித்தரத்தைச் சேர்ந்தவர்களுக்கும் புதிய சம்பள வீதங்களையே 1966-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து அளிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம், 1968-ம் ஆண்டு எப்ரலில் உத்தரவிட்டது. இந்திய அரசிடமிருந்து இதற்குத் தேவையான நிதி உதவியைப் பெறுவதற்கான ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளது.

மத்திய அரசின் நிதி உதவி பெறக் கூடியவை என்ற வகையில் கல்லூரி, புகுமுக வகுப்புக் கல்லூரி ஆசிரியர்கள் இந்த சம்பள வீதங்களைப் பெற உரிமையுள்ளவர்களெனக் கொள்ள இந்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. 1966-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதியன்று கல்லூரி புகுமுக வகுப்புகளைக் கொண்டவையாகவும் 1966–67-ல் மூன்றாண்டுப் பட்டப் படிப்பின் முதலாண்டைத் துவக்கிவிட்டவையாக அக்கல்லூரிகள் இருக்க வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டே மேற்கண்ட ஒப்புதலை மத்திய அரசு தெரிவித்தது.

உடற்பயிற்சி ஆசிரியர்களையும், நூலகர்களையும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுத் திட்டத்தின் கீழ்க் கொண்டு வரவும் இந்திய அரசு ஏற்பளித்துச் சில சம்பள வீதங்களைப் பரிவுரை செய்தது. இந்தச் சம்பள



வீதங்களைச் செயல்படுத்துவது குறித்து ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. தொழிற் பயிற்சிக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் (கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள்) சம்பள வீதங்களை மாற்றியமைப்பதற்கு நிதி உதவி வழங்குவது பற்றி இறுதியான பதில் இன்னும் வரவில்லை.

1966-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதிக்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட பதவிகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு பரிவுரை செய்த சம்பள வீதங்களை வழங்குவதற்கு நிதி உதவி அளிக்க இயலாதென இந்திய அரசு மறுத்துவிட்டது. ஏனெனில், இந்நியமனங்கள் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ்ச் செய்யப்படும்.

### (c) எம். ஏ. (ஆங்கிலம்) படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை.

ஆங்கில பாடமுறை கற்பிக்கும் துணைப் பேராசிரியர்களை நியமிப்பதற்கு போதுமான ஆசிரியர்கள் கிடைப்பது அரிதாக இருப்பதால், ஆங்கிலம் பட்ட மேற்படிப்பு வகுப்பில் சேருவதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு எம்.ஏ. (ஆங்கிலம்) பாட முறையில் பயிற்சிபெறும் காலத்தில் சில நிபந்தனைகளின் பேரில் உதவித் தொகை வழங்குதல் போன்ற ஊக்கமூட்டும் செயல்கள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

### (d) கல்லூரி ஆசிரியர்கட்குப் பணியிருப்புப் பயிற்சியும் புதுமுறைப் பயிற்சியும் அளித்தல்.

உயர் கல்விநிலை உட்பட எல்லா நிலைகளிலும் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொள்ள வேண்டும் என்ற அரசின் கொள்கையை யொட்டி, 1969–70 முதல் பி.எஸ்.ஸி. பட்டப் படிப்புப் பாடமுறையில் 3-வது பகுதியின்கீழ் உள்ள பாடமுறைகளில் சிலவற்றில் தமிழைப் பயிற்சி மொழியாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பாட முறைகளைத் தமிழில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு அவர்களுக்கு பணியிருப்புப் பயிற்சி (மறு பயிற்சியளித்தலும் சேர்ந்தது) அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### (e) முதியோர் கல்வி.

முன்பிருந்ததுபோல் அல்லாமல் முதியோர்களுக்கு கல்வி அறிவூட்டுதல் மிகுந்த அக்கறையுடன் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும். 1969–70-ல் முன்னோடித் திட்டமாக 10,000 முதியோர் பயனடையும் வகையில் நான்கு மாதப் பாட முறை கொண்ட 500 முதியோர் கல்வி கற்பிக்கும் பள்ளிகளைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### (f) தொழில் தொடர்பான கல்வி.

இந்திய அரசு, "யுனெஸ்கோ", உணவு வேளாண்மை நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள உடுமலைப் பேட்டை, குடிமங்கலம், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கிய உடுமலைப்பேட்டை வட்டத்தில் தொழில் தொடர்பான கல்வித் திட்டத்தினைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. மிகு பயன் தரும் பயிர் விளைச்சல் திட்டங்களில் பங்கு கொள்ளும் குடியானவர்களுக்கு மட்டுமே தொழில் தொடர்பான கல்விப் பயிற்சியளிக்கும் 60 நிலையங்கள் தனிப்பட்ட முறையில் தொடங்கப்படும். ஆறு மாத காலத்திற்கு இந்த 60 நிலையங்களை நடத்த மொத்தம் ரூ. 30,600 தேவைப்படும். இச்செலவுத் தொகை முழுவதும் இந்திய அரசினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

### (g) நூலகப் பணி.

இடைநிலைக் கல்வியில் இதுவரை எய்தியுள்ள கல்வி வசதிகளைக் கூர்ந்து நோக்குகையில், போதுமான நூலகப் பணி தேவை என்று கருதப்படுகிறது. 1969–70-ல் மேலும் 60 நூலகங்களைத் திறப்பதன் வாயிலாக இத்தகுதிகளை விரிவுபடுத்தக் கருதப்படுகிறது.

### (h) உடல் ஊனமுற்றோருக்கு மாநிலத் திட்டங்களில் கீழ்ப்படிப்பு உதவித் தொகை வழங்குதல்.

முடவர், குருடர், செவிடர் போன்ற உடல் ஊனமுற்றோருக்கு இந்திய அரசு ஏற்கெனவே படிப்பு உதவிப் பணம் வழங்கி வருகிறது. இம் மாநிலத்தில் ஒவ்வொரு வகையிலும் 25 மாணவர் வீதம் பயனடைகின்றனர். இந்திய அரசினுடைய ஆணைகளிலுள்ள நிபந்தனைகள் கடுமையாக இருப்பதாலும், இம் மாநிலத்திலுள்ள உடல் ஊனமுற்றோர் அனைவரும் பயன்பெற இயலவில்லை. மேற்கூறப்பட்டுள்ள பயிற்சியை மேற்கொள்ளுவதற்கு உடல் ஊனமுற்றோருக்கு உதவும் வகையில் 1969–70 முதல் இதற்கான மாநிலத் திட்டம் ஒன்றை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

### (ஊ) தொழில் நுட்பக் கல்வி.

தொழில் நுட்பக் கல்வியிலும், பிற பயிற்சிகளிலும் தமிழ்நாடு எல்லா மாநிலங்களையும்விட முன்னணியில் உள்ளது. மூன்றாவது திட்டக் காலத்திலும் அதற்குப் பிந்திய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை முழுமையாகச் செயல்படுத்துவதிலேயே முழு நாட்டமும் செலுத்தப்பட்டது. 1966–67, 1967–68-ம் ஆண்டுகளில் முறையே ரூ. 157·55 லட்சமும், ரூ. 173 லட்சமும் தொழில் நுட்பக் கல்விக்காகச் செலவிடப்பட்டன. தொழில், தொழில் நுட்பப் பாடமுறை பயிலும் மாணவர்களுக்கான கடன் உதவியும் கட்டிடங்களுக்கான செலவுத் தொகையும் இதில் சேர்க்கப்படவில்லை. கட்டிடங்களுக்காக ரூ. 56 லட்சமும், மாணவர்களுக்கான கடன் உதவித் தொகைக்கு ரூ. 16 லட்சமும், 1968–69-ல் செலவிடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர, ரூ. 223 லட்சம் செலவிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1969–70-ல் ரூ. 212 லட்சம் செலவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கட்டிடங்களுக்காக ரூ. 40·67 லட்சமும், கடன் உதவிக்கான ரூ. 14 லட்சமும் இதில் சேர்க்கப்படவில்லை.

2. இம் மாநிலத்தில் 12 பொறியியல் கல்லூரிகளும், 36 பல்தொழிற் பயிற்சிப் பள்ளிகளும் அதே அளவில் நடைபெறுகின்றன (தனியார் கல்வி நிலையங்களும் இதில் சேர்ந்துள்ளன), பதினாறு தொழில் நுட்ப உயர் நிலைப் பள்ளிகளும் (Technical High Schools) செயல்பட்டு வருகின்றன. பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளுடன் இணைந்தாற்போல் இவை செயல்பட்டு வருகின்றன. பல்தொழிற் பயிற்சிப் பள்ளிகளும், தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளும் தமிழ்நாடு மாநிலத் தொழில் நுட்ப கல்விப் பயிற்சி வாரியத்தைச் சேர்ந்தவையாகும்.

3. பொறியாளர்களிடையே வேலைவாய்ப்பின்மையைக் குறைக்கும் பொருட்டு பி.ஈ., ஐந்தாண்டுப் படிப்பில், தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் ஆளுகையில் உள்ள 7 பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 1967–68-ல் 1,400 ஆக இருக்க, 1968–69-ல் 1,000 ஆகக் குறைக்கப்பட்டது. இதனுடன் இக்கல்லூரிகளில் 1963–64 முதல் அறிவியல் பட்டதாரிகளுக்காக மொத்தம் 260 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் வகையில் செயல்பட்டு வரும் 3 ஆண்டு பொறியியல் பட்டப் படிப்பும் 1968–69 முதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்திலுள்ள மற்ற ஐந்து பொறியியல் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்பவர்களின் எண்ணிக்கையையும் கணக்கில் கொண்டால், 1968–69-ல் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த பொறியியல் பாடமுறையில் சேர்த்துக்கொள்ளப் பட்டவர்களின் எண்ணிக்கை 1,738-ம் அறிவியல் பட்டதாரிகளுக்கான 3 ஆண்டுப் பட்டப் படிப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை (குரோம் பேட்டையிலுள்ள சென்னை தொழில் நுட்பக் கல்வி நிலையம்) 100-ம் ஆகும். 1967–68-ல் இந்த எண்ணிக்கை ஐந்தாண்டுப் பட்டப் படிப்பில் 2,240 ஆகவும், மூன்று ஆண்டுப் பட்டப் படிப்பில் 460 ஆகவும் இருந்தது.

4. கோயம்புத்தூரிலுள்ள, கோயம்புத்தூர் தொழில் நுட்பக் கல்வி நிலையத்தில் 1968–69 முதல் ஒவ்வொரு பிரிவிலும் 20 பேரைச் சேர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் மின் அணு, செய்தித் தொடர்பு பொறியியல்



பாடமுறையில் ஐந்தாண்டுப் பட்டப் படிப்புப் பாட முறைகள் தொடங்கப்பட்டுள்ளன. மின் அணு, உலோகத் தொழிலியல் பாடங்களிலும் ஐந்தாண்டுப் பட்டப்படிப்பு பாட முறைகள் கோயம்புத்தூரிலுள்ள பி.எஸ்.ஜி. கல்லூரியில் 1968–69 முதல் தொடங்கப்பட்டுள்ளன. இப்பாடமுறைகளில் முறையே 30, 20 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். மேற்கூறிய இரண்டு தனியார் பொறியியல் கல்லூரிகளிலும் புதிய பாடமுறைகளில் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை, இக் கல்லூரிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டதாகும்.

தகுதிப் பட்ட (Diploma) அளவில் பாட முறைகளை பல கூறுகளாகப் பகுக்கும் திட்டத்தின்கீழ், சென்னை மத்தியப் பல்தொழிற் பயிற்சிப் பள்ளியில் (இந்தியாவிலும் தென் கிழக்கு ஆசியாவிலும் பல்தொழிற் பயிற்சியளிக்கும் பெரிய நிலையங்களில் இதுவும் ஒன்றாகும்). ஒவ்வொரு பிரிவிலும் 20 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் வகையில் உலோகத் தொழிலியல் கருவி வடிவமைப்பு ஆகிய பிரிவுகளில் பகுதி நேரப் பாடமுறைகள் தொடங்கப்பட்டுள்ளன.

5. கல்லூரிப் புதுமுக வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் சம்பளச் சலுகை 1968–69 முதல் பல்தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் புதுமுகத் தொழில் நுட்பப் பயிற்சி மாணவர்களுக்கும் வழங்கப்படும்.

**6. நான்காவது திட்டக்கால அளவில் (1969–74) கருதியுள்ள மேம்பாட்டுத் திட்டங்கள்**—மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் தொடங்கப்பட்ட பாட முறைகளை உறுதிப்படுத்துவதே நான்காவது திட்டத்தின் குறிக்கோளாகும். ஏற்கெனவே செயல்பட்டுவரும் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளினின்றும் முற்றிலும் மாறுபட்டவையும் வேலை வாய்ப்பு பெறுவதற்கென்றே கல்வியும் பயிற்சியும் அளிப்பவையுமான பல்தொழிற் பயிற்சிப் பள்ளிகள் (ஒன்று அல்லது இரண்டு) தனியார் துறையில் தொடங்கப்படலாம். உடற் பொறியியல் (Bio-Engineering) வாணிபப் பாட முறைகளில் பட்டப் படிப்பு பாடமுறைகளைப் பல்தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. புதுமுகத் தொழில் நுட்பப் பாடமுறையை மேலும் மேம்படுத்துவதற்காக பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் இயற்கைப் பாடப் பிரிவுகளில் கற்பிக்கும் வசதிகளை ஏற்படுத்துவது தேவையானது என்று கருதப்படுகிறது. இதனால் பல்தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் முதலாண்டு பயிலும் மாணவர்கள் பட்டப்படிப்பளவில் பொறியியல், அறிவியல், உடற் பொறியியல் அல்லது மருத்துவப் பிரிவுகளை தெரிந்தெடுக்க வகை செய்ய முடியும்.

7. பாடமுறைகளை பல கூறுகளாக்குதல், பட்ட மேற்படிப்புப் பாடமுறைகளை மேம்படுத்துதல், பேரறிஞர் படிப்பு நிலையிலும் (Doctorate) பேரறிஞர் பட்டப் படிப்பு நிலையிலும் (Post-Doctorate) ஆராய்ச்சி, பாடமுறைகளைத் திட்டமிடுதல், பாட நூல்களைத் தயாரித்தல், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்தின் பிரிவாக வேலைவாய்ப்பு ஆலோசனைப் பிரிவு ஒன்றை நிறுவுதல், கலையியல் மேம்பாடு, பாடம் கற்பித்தலில் மேம்பாடு ஆகிய மேம்பாட்டுத் திட்டங்கள் நான்காவது திட்டத்தில் செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும்.

**8. 1969–70-க்கான திட்டம்.**—கிண்டி பொறியியல் கல்லூரியிலுள்ள ஆய்வுக் கூடங்களையும் பணிக்களரிகளையும் மேம்படுத்துதல், புதுமுறைக் கருவிகளை வாங்கி மேனிலைப்படுத்துதல் திட்டத்தின்கீழ் (1) மின்சார ஆய்வுக்கூடம், (2) இயந்திரப் பொறியியல் ஆய்வுக் கூடம், (3) கட்டிடப் பணி ஆய்வுக் கூடம், (4) செய்முறை இயக்கவியல் ஆய்வுக்கூடம், ஆகியவற்றினை விரிவுபடுத்துதல், மேம்படுத்துதல் ஆகிய பணிகள் சுமார் ரூ. 23 லட்சம் செலவுத் தொகையில் மேற்கொள்ளப்படும். கோயம்புத்தூர் அரசாங்க தொழில் நுட்பக் கல்லூரிக்கும், கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரிக்கும் தேவையான கூடுதல் கருவிகள், நூலகத்திற்கு மேலும் பல நூல்கள் ஆகியவற்றை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கோயம்புத்தூர்

போது மதிப்பீடு செய்தல், முன்னேற்றச் சோதனைகள் நடத்துதல், முறையாகக் கற்பித்தல், இவற்றின் மூலம் இந்தத் தொழில் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சியின் தரம் குறையாமலும் காக்கவும், தரம் உயரவும் வழி செய்ய முடிகிறது. கடந்த இரண்டு அனைத்து இந்தியத் திறமைப் போட்டிகளின் முடிவுகளிலிருந்து தெளிவாக்கப்பட்டவாறு இம்மாநிலத்தில் பயிற்சி பெறுபவர்களின் திறன் உயர்ந்துகொண்டு வந்துள்ளது. அனைத்து இந்தியத் திறமைப் போட்டி கொண்டுவரப்பட்டதிலிருந்து இரண்டொரு தொழில்களில் ஒவ்வொரு போட்டியிலும் தமிழ் நாடு முதல் பரிசைப் பெற்று வந்துள்ளது.

முதலாவது அனைத்து இந்தியத் திறமைப் போட்டியில் நமது மாநிலம் இயந்திர வேலையாள் தொழிலில் முதலாவதாகவும், மின்சார வேலையாள் தொழிலில் இரண்டாவதாகவும் வந்தது. அடுத்து வந்த போட்டிகளில் மேலும் நல்ல பெயர் கிடைத்தது. கீழ்க்கண்ட தொழில்களில் ஒவ்வொரு போட்டியிலும் இரண்டு தொழில்களில் தமிழ்நாடு முதல் நிலையைப் பெற்றது :—

| | |
|---|---|
| மூன்றாவது அனைத்திந்தியத் திறமைப் போட்டி. | பற்றவைப்பவர் தொழில், கடைச்சல் பிடிக்கும் தொழில். |
| நான்காவது அனைத்திந்தியத் திறமைப்போட்டி. | இயந்திரப் பணியாள், மின்சாரப் பணியாள். |
| ஐந்தாவது அனைத்திந்தியத் திறமைப்போட்டி. | கடைச்சல் பிடிக்கும் தொழிலாளர் மின்சாரப் பணியாள். |

மொத்தச் செயல்திறனிலும் இந்தியாவில் தமிழ்நாடே சிறந்ததென அறிவிக்கப்பட்ட பெருமையும் நமது மாநிலத்தையே சாரும். தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு, அதாவது 1965, 1966-ம் ஆண்டுகளுக்கு குடியரசுத் தலைவரின் சுழற் கேடயம் பெறும் சிறப்பும் தமிழ் நாட்டிற்குக் கிடைத்துள்ளது.



அரசாங்கத் தொழில் நுட்பக் கல்லூரிக்கு நீர் வழங்குவதற்கான அடங்கல்
திட்டப் பணிகளை ரூ. 3·60 லட்சம் செலவில் மேற்கொள்ள திட்டமிடப்
பட்டுள்ளது.

9. சென்னை மாநகரில் வசிக்கும் ஏழை மாணவர்களுக்கு உதவும்
பொருட்டும், வேறு எந்த இடத்திலும் மாணவர் விடுதியில் தங்கிப் பயிற்சி
பெறுவதற்கு வசதியில்லாதவர்களுக்கு மாநகரிலேயே கல்விப் பயிற்சி
யளித்து அவர்கள் பொறியியல் பாடமுறையைப் பயில்வதற்கு வகை
செய்வதற்காகவும் கிண்டி பொறியியல் கல்லூரிக்குப் புற நிலையம் ஒன்றை
(Off-Centre Campus) அடையாற்றிலுள்ள மத்தியப் பல்தொழில்
பயிற்சிப் பள்ளியின் எல்லைக்குள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
மொத்தத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை
இதன் காரணமாக உயரக் கூடாது. ஆனால், இதற்கேற்ப பிற கல்லூரி
களில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை குறைக்கப்படும்.

10. மாணவர்களுக்கான வசதிகள் திட்டத்தின்கீழ் பொறியியல்
கல்லூரிகளுக்கும், பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளுக்கும் வண்டிகள்,
மாணவர் நிலையம் உணவகம் ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்படும்

11. (1) உலோகவியலில் பட்டப் படிப்பினைத் தொடங்குதல், (2) சென்னை
மகளிர் அரசாங்க பல்தொழிற்பயிற்சி நிலையத்தில் வாணிகவியலில் பட்டப்
படிப்பினை தொடங்குதல், (3) சென்னை திரைப்பட தொழில் நுட்பப்
பயிற்சி நிலையத்தில் திரைப்படப் பிரிவு ஒன்றைத் தொடங்குதல்,
(4) சென்னையிலுள்ள வட்டார அச்சுத் தொழில் பயிற்சிப் பள்ளியில்,
உற்பத்தி பயிற்சிப் பிரிவினைத் தொடங்குதல் போன்ற பணிகள் 1969–70-ல்
செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படவிருக்கும் பிற முக்கியபணிக
ளாகும். கிண்டி பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த கணக்கு இயந்திரப்
பிரிவு (Computor Centre) தமிழ்நாட்டிலும் தமிழ்நாட்டிற்கு வெளி
யிலுமுள்ள கல்வி நிலையங்களாலும், ஏனைய நிறுவனங்களாலும் ஆராய்ச்சிக்
காகப் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் பல திட்டங்
களை நிறைவேற்றுவதற்காக இது மேம்படுத்தப்பட்டுள்ளது.

(எ) பல்வகை.

1. **சென்னையிலுள்ள அரசு அரும்பொருட்காட்சிச் சாலை.**—சென்னை
யிலுள்ள அரசு அரும்பொருட்காட்சிச்சாலையும், புதுக்கோட்டை அரசு
அரும்பொருட்காட்சிச் சாலையும், அரும்பொருட்காட்சிச்சாலை இயக்கு
நரின் ஆளுகையில் உள்ளன. 1968–69-ல் அரும் பொருட்காட்சிச்
சாலைகளின் சீரமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், இந்திய அரசு,
சென்னையிலுள்ள அரசு அரும்பொருட்காட்சிச் சாலைக்கு ரூ. 7,500
மானியம் வழங்க ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1969–70-ல் அரும்பொருட்
காட்சிச் சாலை துறையினர் அரும்பொருட்காட்சிச் சாலையினை ஓரளவு
விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளனர். அரும்பொருட்காட்சிச் சாலை
யின் வெளியீடுகள் மறுபடியும் அச்சிடப்பட வேண்டும். அரும்பொருட்
காட்சிச் சாலையை காணவரும் பொதுமக்களுக்குப் புதுமுறை வசதிகள்
செய்து கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பாதுகாப்பாளர் ஒருவரை நிய
மிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

2. **தொல்பொருள் ஆய்வு** .—தொல்பொருள் ஆய்வு இயக்குநர்
தலைமையில் செயல்பட்டுவரும் தொல்பொருள் ஆய்வுத் துறை திரு
நெல்வேலி மாவட்டத்திலுள்ள பாஞ்சாலங்குறிச்சி, கொற்கைப் பகுதி
களில் அகழ்ந்தெடுக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. பாஞ்சாலங்
குறிச்சியை அகழ்ந்தெடுக்கையில் கட்டபொம்மனுடைய கோட்டையும், மாளி
கையும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கொற்கையில் அகழ்ந்தெடுக்கும்
பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 1968–69 இத்துறை புகழ்
பெற்ற சோழ அரசனாகிய ராஜ ராஜனைப் பற்றி "ராஜ ராஜன்" "மாமல்ல
புரம் குறித்த தனி நூல்" என்ற இரண்டு நூல்களையும் வெளியிட்
டுள்ளது. பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருள்களைக்



கொண்டும், நிழல் படங்களைக் கொண்டும் 1968 டிசம்பர் திங்களில் இத்துறை
யினர் பொருட்காட்சி ஒன்றை நடத்தினர். தமிழ்நாடு வரலாற்றுச்
சிறப்புள்ள நினைவுச் சின்னங்கள், தொல்பொருள் சிறப்பு மிக்க இடங்
கள் குறித்த 1966-ம் ஆண்டுச் சட்டம் 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம்
15-ம் தேதி முதல் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது.

3. **தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம்.**—தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம்
இசை, நடனம், நாடகம், திரைப் படங்கள் அதையொட்டிய கலைகளை
வளர்ப்பதற்காகவும், பேணுவதற்காகவும், அவற்றின் மூலம் நாட்டின்
பண்பாட்டினை மேம்படுத்துவதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட நிறுவனம்
ஆகும். இது திறமையான இளம் கலைஞர்கள் தங்களது திறனைவெளிப்
படுத்த ஆதரவு நல்கி வருகிறது. புதிய நாடகங்கள் தயாரிப்பதற்கும்,இசை,
நடனம், நாடகம் ஆகிய துறைகளில் சிறப்பான நூல்களை வெளியிடவும்
இது உதவி செய்கிறது. இசை, நடனம், நாடகம், திரைப்படத்துறை
களில் தேர்ச்சிபெற்ற கலைஞர்களுக்கு பரிசுகளும் விருதுகளும் வழங்கு
கிறது. இந்திய அரசின் ஒத்துழைப்புடன் கலைக் குழுவினர் ஒரு மாநிலத்தி
லிருந்து மற்றொரு மாநிலத்திற்குச் சென்று நிகழ்ச்சிகள் நடத்து
வதற்கு ஏற்பாடு செய்யும் பொறுப்பையும் இச்சங்கம் ஏற்றுக்கொண்டுள்
ளது. ஒவ்வோர் ஆண்டும் இம்மாநிலக் கலைக் குழுவினர் வட இந்தியா
விலுள்ள இரண்டு மாநிலங்களுக்கு செல்கின்றனர். அது போல் வட
இந்தியாவிலிருந்து கலைக்குழுவினர் தென்னிந்தியாவுக்கு வருகின்றனர்.
இந்த ஆண்டில் வங்காள, உத்திரப் பிரதேச கலைக் குழுவினர் தமிழ்
நாட்டிற்கு வருகை தந்தனர். அதுபோல் தமிழ் நாட்டு கலைக்குழுவினர்
உத்திரப்பிரதேசம், ஹரியானா மாநிலங்களுக்குச் சென்றனர். இந்திய
அரசு பண்பாட்டுக் கலைத் திட்டத்தின் கீழ் ரஷ்யா, செகோஸ்லோவாக்கியா
நாட்டுக் கலைக்குழுவினர் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தனர். அவர்
களுடைய கலை நிகழ்ச்சிக்கு இச்சங்கம் எல்லா ஏற்பாடுகளையும் செய்தது.
இச்சங்கம் சட்டப்படி அமைந்த நிறுவனமாகும். அதற்கான நிதி முழு
வதும் அரசு நிதியிலிருந்தே கிடைக்கிறது. 1968–69-ல் தனது நடவ
டிக்கைகளுக்காக மொத்தம் ரூ. 2.15 லட்சம் மானியம் பெற்றுள்ளது.
1969–70-லும் அதே அளவு நிதி உதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

4. **லலித கலைகள் நிலையம்.**—லலித கலை நிலையம் திறம்பட செயல்படாத
தால் 1968–69 முதல் தமிழ்நாடு லலித கலை நிலையத்திற்கு அளித்து
வந்த மானியத்தை நிறுத்திவிட அரசு முடிவு செய்துள்ளது. ஆனால்
பண்பாட்டுக் கலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வந்த, செகேயன் சூகாவ்
அவர்களது ஓவியப் பொருட்காட்சியையும், ஓரே காலத்தில் பிரஞ்சு நாட்டின்
சித்திரம் தீட்டிய ஆடைகளின் பொருட்காட்சியையும் 1968–69 நவம்பர்,
டிசம்பர் திங்களில் ஏற்பாடு செய்வதற்கு புது டில்லியிலுள்ள லலித
கலை நிலையத்திற்கு அரசு உதவி அளித்துள்ளது.

5. **கர்நாடக இசை மத்தியக் கல்லூரி.**—இம்மாநிலத்தின் கர்நாடக இசை
(பாடல் கருவிமிடற்று இசை) மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க இம்மாநில
அரசு ஒரு கல்லூரியை ஏற்படுத்தியுள்ளது. இக்கல்லூரியில் இரண்டு ஆண்டு
கள் பயின்று சங்கீத வித்வான் பட்டம் பெறலாம். இக்கல்லூரியில்
இசை ஆசிரியர் பயிற்சிப் பாட முறையும் உள்ளது. இக்கல்லூரியின்
ஆட்சிப் பொறுப்பு அரசைச் சேர்ந்ததாகும். நான்காவது திட்டக்காலத்தில்
இக்கல்லூரி மாணவர்களுக்காக மாணவர் இல்லம் ஒன்றைக் கட்ட
ரூ. 3 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ஏ) கைப்பணியாளர் பயிற்சித் திட்டங்கள்**

(தொழில் தொழிலாளர் நல, வீட்டு வசதி துறையினரால்
தயாரிக்கப்பட்டது.)

பயிற்சி பெற்ற மனித சக்தி கிடைப்பதைப் பொறுத்துத்தான்
இத்திட்டங்களின் வளர்ச்சி அமைந்துள்ளது. இம்மாநிலத்தின் விரைந்த
தொழில் முன்னேற்றத்தின் காரணமாகக் கைப்பணியாளர் பயிற்சியின்

## LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

Madras Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs. Higginbothams, Private Limited, Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons, Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. Rukmani Corporation, Vepery, Madras-7.
Messrs. Mohan Pathippagam and Book Depot, Madras-1.
Messrs. Book Corner, Book-sellers, No. 2/6, Mount Road, Madras-2.

### IN MUFASSAL OF MADRAS STATE.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
The Oriental Book House, Madurai.
Messrs. Vivekananda Press, Printers, Publishers and Book-sellers, Madurai.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswamy & Co. Tiruchirappalli.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli.
Sri S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 239, Raja Street, Coimbatore.
Sri S. M. Jaganathan, Book-seller and Publisher, Nagercoil, Kanyakumari district.
Messrs A. K. Chandrian Chettiar & Sons, Salem.
Messrs. Meenakshi Pathippagam, Pudukkottai.
Messrs. K. V Narayana Iyer & Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari district.
Messrs. Baby Stores, Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-B, Town Hall Road, Madurai-1.

### IN OTHER STATES.

Messrs. Janatha A [illegible], Book-sellers, Gudur
Messrs. [illegible] Book Agency, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation, Narayanaguda, Hyderabad-29
Messrs. The Books Syndicate, Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

PUBLISHED UNDER RULES 234 AND 267 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

வெளியீடு—25—5—1970]
Issued—25—5—1970]

தமிழ் நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, 1969 மார்ச் 13

Thursday, 13th March 1969

தொகுதி XVIII—எண் 4
Volume XVIII—No. 4

தமிழ் நாடு அரசு
1970

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50 காசுகள்]
Price, 50 Paise]

## உள்ளடக்கம்.


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள் .. .. .. .. | 519—539 |
| 2. | கவன ஈர்ப்பு— | |
| | (அ) அருப்புக்கோட்டையில் கடன் தவணை செலுத்தாத நெசவாளர்கள், வீடுகளிலிருந்து வெளியேற்றப் பட்டது .. .. .. .. .. | 539—541 |
| | (ஆ) கோயம்புத்தூரில் உள்ள சில பஞ்சாலைகளுக்கு கடன் வழங்க வங்கிகளின் மறுப்பு .. .. | 542—544 |
| 3. | 1969-70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.— | |
| | கோரிக்கை எண். 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் ... | 544—615 |
| 4. | அறிவிப்பு— | |
| | ஓர் உறுப்பினருடைய குற்றச்சாட்டை விசாரிக்க குழுவை அமைத்தல் .. .. .. ... | 559 |
| 5. | பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் ... ... ... | 615 |
| 6. | இணைப்புகள் .. .. .. ... ... | 616-659 |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

**வியாழக்கிழமை, 1969 மார்ச் 13**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள் விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### கொல்லிமலை காடுகளில் மரம் வெட்டுதல்

குறுகிய கால * **வினா 1.—திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு உணவு, வேளாண்மை அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் துறையூர் கொல்லிமலைக் காடுகளில் விலையுயர்ந்த சந்தன மரங்களை அனுமதியின்றி வெட்டி விற்றிருப்பது என்பது உண்மையா ?

(இ) இது பற்றி அரசுக்கு ஏதாவது புகார் வந்துள்ளதா ?

(உ) அங்கு பணியாற்றி வந்த அதிகாரி ஒருவர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) & (இ) புகார்கள் வரப்பெற்றதன் பேரில், வனத்துறை அதிகாரிகள் முதற்கண் நடத்திய புலனாய்விலிருந்து துறையூர் சரகத்தைச் சேர்ந்த அரும்பாவூர் சோபனபுரம் ஒதுக்கக் காடுகளில் சந்தன மரங்களை வேருடன் பெயர்த்து வண்டிகளில் ஏற்றிச் சென்று, சந்தனமர வணிகர்களுக்கு விற்பனை செய்யும் நோக்கத்துடன் அடுத்துள்ள பட்டா நிலங்களில் நட்டிருப்பதாக தெரியவந்தது. மேலும் குற்ற விசாரணைத் துறையால் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

(உ) சம்பந்தப்பட்ட மாவட்ட வனத்துறை அதிகாரியும் ஏனைய வனத்துறை வருவாய்த்துறைச் சார்நிலைப் பணியாளர்களும், தற்காலிகமாய் வேலையிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர்.

**திரு. கே. விநாயகம் :** அப்படிச் சட்டத்திற்கு விரோதமாக சந்தன மரங்களை வெட்டி அகற்றினார்களே, அதிலே எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது அரசாங்கத்திற்கு ? அதற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டு விசாரித்து ஏதாவது முடிவுக்கு வருவதற்கு எத்தனை நாட்கள் ஆகும் ? தற்காலிகமாக அவர்களை வேலை நீக்கம் செய்திருப்பது போதிய தண்டனை என்று அரசாங்கம் கருதுகிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** 75 டன் சந்தன மரங்கள் வேரோடு பிடுங்கி எடுக்கப்பட்டு விற்கும் நோக்கத்தோடு தங்களுடைய பட்டாநிலங்களிலே கொண்டுபோய் நட்டு வைத்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக தகவல் வந்தவுடன் சம்பந்தப்பட்ட வனத்துறையைச் சேர்ந்த 12 அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். பூரணமாக விசாரித்த பிறகுதான் யார் யார் குற்றவாளிகள் அவர்களுக்கு எத்தகைய தண்டனை விதிக்கப்படவேண்டும் என்று தெரியும். இது ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு ஆகுமா என்றால் சொல்லமுடியாது. எவ்வளவு சீக்கிரம் நடவடிக்கை எடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நடவடிக்கை எடுக்கப்படும். இது சம்பந்தமாக 112 பேர்கள் இந்தச் சதியிலே ஈடுபட்டு மரங்களை வெட்டிச் சென்றார்கள்

என்று வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அதன்மேல் நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படுகிறது. தாற்காலிகமாக நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். முதலிலே சஸ்பெண்ட் பண்ணிவிட்டு பிறகுதான் நடவடிக்கை எடுப்பார்கள். இதெல்லாம் வழக்கறிஞரான கனம் உறுப்பினருக்குத் தெரியும்.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்த முறைகேடான காரியங்கள் நடைபெறுவதுபற்றி யார் தகவல் கொடுத்தார்கள் ? யார் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார்கள் என்ற விவரம் அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதைச் செய்கிற முறையிலே நம்முடைய கொறடா அவர்கள்தான் தகவல் கொடுத்தார்கள். இந்த நல்ல காரியம் செய்ததற்காக அரசாங்கம் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கிறது. இந்தமாதிரி தகவல் கொடுத்தால் சம்பந்தப்பட்டவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கும், அரசாங்கத்தின் சொத்தைப் பாதுகாப்பதற்கும் பயன்படும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** உயர்ந்த விலையுள்ள சந்தன மரங்களை எடுத்துச் சென்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதனுடைய மதிப்பு என்ன என்று சொல்லமுடியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** 75 டன்னுக்கு இருக்கும் என்று சொன்னேன். அதனுடைய மதிப்பு சுமாராக இரண்டு கோடி ரூபாய் இருக்கலாம்.

**திரு. சொ. கோவிந்தராசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கோடி ரூபாய் சர்க்காருக்கு மிச்சப்படுத்திக் கொடுத்த கனம் உறுப்பினர் அவர்களுக்கு அரசு ஏதாவது பரிசு வழங்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அரசாங்கத்தினுடைய நல்ல எண்ணம் அவர்கள் பால் இருக்கும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** இரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள சந்தன மரங்களை வாங்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? அதிக லாபம் வரக்கூடிய இந்த சந்தன மரங்களை மற்றப் பிரதேசங்களிலே வளர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இதிலே 112 பேர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. இதிலே சில பேர்கள்தான் ஒதுக்கப்பட்ட காடுகளில் இருந்து எடுத்துச் சென்றிருக்கிறார்கள். சில பேர்கள், பட்டாதார்கள் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். யார் யார் வாங்கினார்கள், யார் யார் கொண்டு சென்றார்கள் என்ற தகவல் விசாரணைக்குப் பிறகுதான் தெரியும்.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, இந்தச் சந்தன மரங்கள் திருட்டுப்போவது எத்தனை ஆண்டுகளாக நடந்துகொண்டிருக்கிறது என்பதை தெரிந்துகொள்ளலாமா ? திருட்டுப்போன மரங்களைக் கண்டுபிடிக்கக்கூடிய வகையில் மரங்களுக்கு நம்பர் கொடுக்கக்கூடிய முறையை இனிமேலாவது அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சந்தன மரங்கள் எங்கெங்கே இருக்கின்றவோ அங்கெல்லாம் பரவலாக திருட்டு நடந்துகொண்டிருக்கிறது. கண்காணிப்பு தொடர்ந்து இருந்துவருகிறது. வேலியே பயிரை மேய்வது போல் அதிகாரிகளே அதற்கு உடந்தையாக இருந்ததால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது. இதனால் வேண்டிய பந்தோபஸ்து போட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சாதாரணமாக காடுகளிலே திருட்டுப் போன செய்தி பல வருஷங்களாக இருந்துகொண்டிருக்கிறது. அதைத் தடுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்படுகின்றன.



**திரு. என். எஸ். வி. சித்தன் :** இரண்டு கோடி மதிப்புள்ள சந்தன மரங்கள் எப்போது வெட்டி எடுக்கப்பட்டன ? இனிமேலாவது அப்படி நடைபெறாமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதற்காக காட்டிலாக்காவில் நிறைய அதிகாரிகள் இருக்கிறார்கள். கார்ட், ரேஞ்ஜர், பாரஸ்டர், ஜில்லா அதிகாரிகள், கன்சர்வேடர் எல்லோரும் இருக்கிறார்கள். ஆகவே நிறைய கண்காணிப்பு செய்யப்படுகிறது. வேரோடு அவர்கள் பிடுங்கிக்கொண்டு போவதற்குக் காரணம் இலையாக இருந்தால் கண்டுபிடித்துவிடுவார்கள் என்பதால்தான். வேரோடு பிடுங்கிச் சென்றுவிட்டால் அடையாளம் கண்டுபிடிக்க முடியாது. சந்தன மரத்தை வெட்டிக்கொண்டு போவதாக இருந்தால், சிறு சுள்ளி எடுத்திருந்தால்கூட கண்டுபிடித்துவிடலாம். தகவல் கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** சந்தன மரங்கள் உள்ள காடுகளைப் பாதுகாக்க தனி அதிகாரிகளையும் சிப்பந்திகளையும் நியமித்து தக்க பாதுகாப்பு கொடுக்கின்ற அளவில் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சந்தனக் காடுகளைப் பாதுகாக்கத்தான் இந்த அதிகாரிகள் இருக்கிறார்கள். சில காடுகள் சந்தனக் காடுகளாக இருக்கலாம், சில காடுகள் மூங்கில் காடுகளாக இருக்கலாம். இந்தப் பகுதியில் அடர்த்தியாக இருப்பது சந்தன மரங்கள்தான். அங்கங்கே அதிகாரிகள் கண்காணித்து வருகிறார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சந்தன மரங்களை வெட்டி எடுத்துப் போவது என்பது வருஷக் கணக்காக நடந்துவருகிறது. இப்போது வேரோடு பிடுங்கக்கூடிய அளவிற்கு வந்திருக்கிறது. இது ஒரு நாள் இரண்டு நாள் நடந்திருக்கிறதா ? மாதக்கணக்காக நடந்திருக்கிறது. இதிலே பல அதிகாரிகள் உடந்தையாக இருந்திருக்கவேண்டும். இது போன்று வருஷக் கணக்கிலே நடக்கவிடாமல் வழக்குகளை உடனடியாக விசாரணை செய்து அவர்களை வேலையிலிருந்து நீக்கினால் மட்டும் போதாது, கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அரசு நிச்சயமாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கும். பெரிய அதிகாரிகள் என்றாலும் தயக்கம் கிடையாது. இந்தச் சதிக் குற்றத்திலே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நீங்கலாக 112 பேர்கள் என்றுதான் சொல்வதற்கில்லை. மேலும் தகவல் கிடைத்து இன்னும் அகப்படுவார்கள். இதற்காக சென்னையிலிருந்து பெரிய அதிகாரிகள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். விரைவிலே இந்த வழக்குகள் முடிவு பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. கே. வினாயகம் :** இந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. இதை அந்தத் துறையிலே இருக்கிற அதிகாரிகளே பார்வையிட்டு கண்காணிப்பதைவிட இதற்கென்று தனியாக ஒரு ஸ்பெஷல் ஆர்ம்டு போலீஸ் போட்டு, குறிப்பிட்ட விலை உயர்ந்த மரங்களைப் பொறுத்தவரையிலாவது, தனியாகப் போட்டுக் கண்காணிப்பு செய்யக்கூடிய அளவில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சில அதிகாரிகள் தவறு செய்வதாலே அந்த இலாகாவில் உள்ள அத்தனை பேர்களும் குற்றவாளிகள் என்று சொல்லிவிட முடியாது. குற்றத்தைச் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்பொழுது குற்றம் செய்யாதவர்கள் மீது சந்தேகப்படுவது கூடாது. இதற்காக தனியாக ஒரு ஆர்ம்டு போலீஸ் போட்டால் ஏதாவது துப்பாக்கிச் சூடு நடந்தால் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று கனம் அங்கத்தினர் நினைக்கிறார் போலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** துணைக் கேள்விகள் செய்திகளை தெரிந்துகொள்வதற்காக இருக்கவேண்டுமே தவிர யோசனைகளைச் சொல்வதாக இருக்கக்கூடாது.

[1969 மார்ச் 13

THIRU K. VINAYAKAM : I am suggesting a method.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுதான் கூடாது. துணைக் கேள்விகளில் அது கூடாது என்று சொன்னேன்.

**திரு. எம். எஸ். மணி :** இந்தச் சந்தன மரங்களை வேரோடு பிடுங்கி விட்டு அது தெரியாமல் இருப்பதற்காக நீலகிரித் தைல மரத்தை அந்த இடத்திலே கொண்டுவந்து வைத்து கணக்குக் காட்டுகிறார்களே, அதைத் தடுக்கக்கூடிய முறையிலே அவ்வப்பொழுது எவ்வளவு சந்தன மரங்கள் இருக்கின்றன என்று அதிகாரிகள் கணக்குக் கொடுக்கக்கூடிய முறையிலே அரசாங்கம் கவனம் செலுத்துமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்த இடத்திலே சந்தன மரங்களுக்குப் பதிலாக நீலகிரித் தைல மரங்கள் வைத்ததாகத் தகவல் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்விகள் 304 முதல் 310 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### *Hyacinth as cattle feed.*

* 311 *Q*.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether water hyacinth is used as a good feed for milch cattle ; and

(*b*) whether the animal nutrition section of the Madras Veterinary College processed hyacinth into a cattle feed ?

**மாண்புமிகு திரு.ஏ. கோவிந்தசாமி :** (அ) ஆகாயத் தாமரையை கால்நடைகள் சில தீவனமாகக் கொள்வது காணப்பட்டது. கறவை மாடுகளுக்கு அது நல்ல தீவனமாகப் பயன்படுமா என்பதை ஆராய வேண்டும்.

(இ) ஆம், சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஊட்டச் சத்துப் பிரிவு ஆகாயத் தாமரையின் சில மாதிரிகளை (அ) பசுந் தீவனக் குழிபதன் முறையிலும் (ஆ) உணவாகவும் பரிசோதனை மூலம் ஆராய்ந்து பார்த்தது. இப்பணி நடைபெற்று வருகிறது. இந்த ஆராய்ச்சியின் முடிவு வெளிவந்ததும், இப்பொருளைக் கால்நடைத் தீவன பொருளாகப் பயன்படுத்துவது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. விநாயகம் :** சார், இந்த ஹையசிந்த் என்ற ஆகாசத் தாமரை அதிகமாகக் கூவம் ஆற்றிலேயும், பக்கிங்காம் கேனாலிலும் பரவியிருக்கிறது. அதற்குக் கீழே தண்ணீர் இருக்கிறதா இல்லையா என்றே சந்தேகமாக இருக்கிறது. இது மாட்டுக்குத் தீவனமாக வைப்பது எனபது ஒருவிதம். இதையே நிலத்திற்கு உரமாகப் போடக்கூடும் என்ற செய்தி இருக்கிறதே, அந்தத் துறையிலே அதிகாரிகள் ஆராய்ச்சி செய்தார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் உறுப்பினர் அவர்களுடைய கேள்வி, கால்நடைத் தீவனமாக அது பயன்படுகிறதா என்பது தான். அதுபற்றிப் பரிசீலனை செய்து உபயோகப்படுத்துகிறோம் என்ற தகவல் வந்திருக்கிறது. கனம் உறுப்பினருடைய மற்றொரு யோசனையைப் பரிசீலனை செய்யலாம்.

### உணவு தானியங்கள் பதுக்கல்

* **வினு 312.—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1967-68-ல் பதுக்கல் தானியங்களைப் பிடிப்பதற்காக திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டனவா ?



1969 மார்ச் 13]

(இ) தானியங்கள் மற்றும் உணவுப் பொருள்களை பதுக்கி வைத்து இருந்ததாக எத்தனை வழக்குகள் தொடரப்பட்டன ? அவற்றில் எத்தனை பேர் தண்டிக்கப்பட்டார்கள் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) நீலகிரி மாவட்டம் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன.

(இ) உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்து இருந்ததாக 1,435 வழக்குகள் தொடரப்பட்டன. அவற்றில் 313 பேர்கள் தண்டிக்கப் பட்டார்கள்.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், தண்டிக்கப்பட்டவர்களுடைய லைசென்ஸ்கள் எத்தனை ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. தண்டிக்கப் பட்டது சம்பந்தப்பட்ட பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தண்டிக்கப்பட்டவர்களுடைய பொருள்கள் அத்தனையையும் பறிமுதல் செய்து இருக்கிறோம்.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, அவ்வாறு பறிமுதல் செய்யப் பட்ட பொருள்களின் அளவு என்ன ? அவற்றின் மதிப்பு என்ன ? அவர்களுடைய பெயர்களைச் சொல்லமுடியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதுபற்றிய தகவல் இல்லை, தனிக்கேள்வி போடவேண்டும்.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் வந்ததற்குப் பின்னுல் பதுக்கியிருக்கிற உணவு தானியங்களை கண்டு பிடித்து பதுக்கியவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டித்து இருக்கிறோம். இதற்கு முன்னுலே இருந்த காங்கிரஸ் அரசாங்கம் ஏதாவது அப்படிச் செய்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அப்போதும் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே எதிர்பார்க்கும் உணவுப் பஞ்சத்தைத் தவிர்க்கும் முதல் நடவடிக்கையாக உணவு தானியங்களைப் பதுக்குகிறவர்களின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ? அவர்களுக்குக் குறைந்தது 10 ஆண்டுக் கடுங்காவலாவது கொடுக்கக்கூடிய அளவில் சட்டம் கொண்டுவரப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இது சட்டப் பிரச்னையைக் கிளப்புவதால் எந்த எந்தக் குற்றத்திற்கு எவ்வளவு எவ்வளவு தண்டனை என்பது எல்லாம் சட்டத்தில் இருக்கிறபடியே விதிக்கப்படுகிறது. கண்டிப்பாக உணவு தானியங்களைப் பதுக்கி வைக்கிறவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அப்படிப்பட்ட சமூக விரோதிகள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது. தண்டிக்கப்பட்டவர்களின் பொருள்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. நெல், மற்ற உணவுத் தானியங்கள் கைப்பற்றப்படுகின்றன. அதற்குமேலே அபராதம் விதிக்கப் படுகிறது. அபராதத் தொகை கட்டாதவர்களுக்குப் பிற தண்டனைகள் தரப்படுகின்றன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மொத்தம் 1,435 வழக்குகள் தொடரப் பட்டு அதிலே 313 வழக்குகளில்தான் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிகமான வழக்குகளில் விடுதலை செய்யப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன ? வழக்குகள் சரியாகப் போடப் படவில்லையா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** திறமையான வழக்கறிஞர்களை வைத்து வாதாடியிருக்கலாம். சில சந்தர்ப்பங்களில் கொலை செய்யாதவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள், கொலை செய்தவர்கள் தப்பித்துக்கொள்கிறார்கள். அதுவெல்லாம் வழக்கறிஞர்களின் திறமையைப் பொறுத்திருக்கலாம்.

**திரு எஸ்.ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, எந்த எந்த மாவட்டத் தில் எத்தனை பதுக்கல் பேர்வழிகள்மீது வழக்குகள் போடப்பட்டிருக் கின்றன ? உணவு நெருக்கடி உள்ள இந்த நேரத்தில் மேலும் பதுக்கல் பேர்வழிகளுக்குத் தீவிர தண்டனை கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சென்னையில் 196 வழக்குகள், செங்கற்பட்டில் 2, தென் ஆற்காட்டில் 14, வட ஆற்காட்டில் 1, சேலத்தில் 12, தர்மபுரியில் 11, திருச்சியில் 15, மதுரையில் 965, இராமநாத புரத்தில் 34, தஞ்சாவூரில் 92, திருநெல்வேலியில் 77, கன்னியாகுமரியில் 15 வழக்குகள் போடப்பட்டன.

**திரு. கே. என். குமாரசாமி :** சார், உணவுப் பொருள்களைப் பதுக்கி வைக்கிறவர்களுக்குத் தண்டனை மட்டும் கொடுத்தால் போதாது. அதற்கு மேல் அவர்கள் எவ்வளவு உணவுப் பொருள்களை பதுக்கிறார்களோ அதற்கு ஈடாக அவர்களுடைய சொத்துக்களையும் பறிமுதல் செய்ய அர சாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சட்டப்படி அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ, எந்த அளவுக்குச் சட்டத்தில் இடம் இருக்கிறதோ அதுவெல்லாம் மேற்கொள்ளப்படுகிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** இந்த போலீஸிலே கேடி லிஸ்ட் என்று வைத்துக்கொண்டு தவறு செய்கிறவர்களையெல்லாம் கண்காணித்துக் கொண்டுவருகிறார்கள். அதுமாதிரி பதுக்கல் செய்கிறவர்கள், கள்ள மார்க்கெட்டுகாரர்கள் இவர்களுடைய லிஸ்டை தயார் செய்து அவர்களைத் தீவிரமாகக் கண்காணிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** முதல் பதுக்கலில் அகப் பட்டால் அவர்களைச் சந்தேகத்தோடு கண்காணிப்புச் செய்யப்படுகிறது. அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் காட்டப்படுவதில்லை.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் பதுக்கல் செய்கிறவர்கள் செல்வாக்குப் படைத்தவர்கள், வசதி யுள்ளவர்களாக இருக்கிறார்கள். அந்தப் பதுக்கல்காரர்களைக் கண்டுபிடிக் கச் செல்லுகின்ற அதிகாரிகள் அவர்களின் செல்வாக்குக்குட்பட்டவர்கள் ஆகிவிடும் காரணத்தால், பதுக்கலை வெளியே கொண்டுவர முடியாமல் போய்விடுகிறது. எனவே, பதுக்கலை வெளியே கொண்டுவரக்கூடிய அளவில் ஒரு பொதுமக்கள் கமிட்டி இதற்காக அமைத்து அதன்மூலம் தீவிர கவனம் செலுத்தினால் நல்லது. இதிலே அரசாங்கத்தினுடைய கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பதுக்கல் இருக்கிறது என்று ஒரு இடத்திலே இருந்து தகவல் வந்தது. உடனே அதிகாரிகள் சென்று கண்டுபிடிக்கிறார்கள். இதற்காக ஒரு கமிட்டி போட்டால் அதைப்பற்றி அவர்கள் கூடிப்பேசி நடவடிக்கையில் இறங்குவதற்கு முன்பாக பதுக்கல் காரர்கள் ஜாக்கிரதையாக தங்களுடைய இடத்திலிருந்து வேறு இடத் திற்குப் போகக்கூடிய வாய்ப்பு இருக்கும். அதிகாரிகள் பெரியவர்களாக இருந்தால் விட்டுவிடுகிறார்கள் என்று சொல்லமுடியாது. எப்பேர்ப்பட்டவர் களாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லியிருக் கிறோம். தகவல் வந்ததும் இரவோடு இரவாக அதிகாரிகளை அனுப்பி நடவடிக்கை எடுக்கிறோம். 500 மூட்டை இருப்பதாகத் தகவல் கிடைத்து, உடனே போய் பரிசோதனை செய்கிற நேரத்தில் 700 மூட்டை கிடைத்தது. பெரும்புள்ளி என்பதால் விடப்படுவதில்லை. அவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.





### ரூபாய்க்குப் படி அரிசி திட்டம்

*313. **விஞ.—திரு. டி. மார்டின் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரு ரூபாய்க்கு ஒருபடி அரிசித் திட்டத்தை நெல்லைமாவட்டத் திலுள்ள சாத்தான்குளம் தொகுதி போன்ற நஞ்சை நிலங்களதிக மில்லாத பகுதிகளுக்கு நடப்பு ஆண்டிலாவது விஸ்தரிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் தற்சமயம் தமிழ்நாடு அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) & (இ) அந்தமாதிரித் திட்டம் இப்போது கிடையாது.

**திரு. டி. மார்டின் :** நஞ்சை நிலம் அதிகமில்லாத பகுதிகளிலும் தொழிலாளர்கள் அதிகமாக உள்ள பகுதிகளிலும்—சென்னை கோவை யைப் போல தூத்துக்குடி சப் தாலுக்கா, ராதாபுரம் சப் தாலுக்கா, சாத்தான்குளம் சப் தாலுக்கா ஆகிய இடங்களுக்கு 1972-ஆம் வருஷத் திற்கு முன்னதாவது பரீட்சார்த்தமாகப் படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சென்னையிலும், கோவை யிலும் குடும்பக் கார்டு திட்டத்தை வைத்திருந்தார்கள். ஆகவே உட னடியாக இங்கே படி அரிசித் திட்டத்தைக் கொண்டுவந்தோம். மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று நாம் விரும்பினாலும் இன் றைக்கு இருக்கிற வறட்சி நிலை, நிதிநிலை ஆகியவற்றின் காரணமாக இப்போதைக்கு இதை விரிவுபடுத்துவதற்கு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இந்தப் படி அரிசித் திட்டம் சென்னையிலும் கோவையிலும் இருக்கிற காரணத்தினால் கிராமங்களில் இருந்து பெரு வாரியான மக்கள் நகரத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். அதனால் இங்கே ஜனத்தொகை கூடுகிறது. ஆகவே இதைக் குறைக்க மற்ற இடங்களுக்கும்—ஆர்கனைஸ்டு லேபரர்ஸ் என்ற அடிப்படையில் தொழி லாளர்கள் இருக்கும் பகுதிக்கும் படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கத்திறகு எண்ணம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தெளிவாகப் பலமுறை கூறிய பிறகும் இதைப்பற்றிக் கேட்பதற்கு ஒன்றும் இல்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்தப் பிரச்சினை எழவில்லை என்றுதான் சொன்னேன்.

**THIRU B. VENKATASWAMY :** Sir, may I know whether this Government will come forward to issue one-rupee-a-measure-rice to the drought-affected areas of our State especially like the Hosur taluk in thé Dharmapuri district which has been worst hit by drought for the last four years ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** வறட்சியான பகுதிகளுக்கு ஏற்கெனவே நெல்லாக, கோதுமையாக, சோளமாக தானியங்கள் வழங்கப் பட்டுவருகின்றன. அங்கே படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்க வழியில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேறு இடங்களுக்கு படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்க வழியில்லை என்று சொன்ன பிறபாடு எங்கள் பகுதிக்கு விஸ்தரிக்கப்படுமா, எங்கள் பகுதிக்கு விஸ்தரிக்கப்படுமா என்று கேட்கவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி** : படி அரிசித் திட்டத்தினுல் இந்தச் சர்க்காருக்கு 8·73 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுவதாகக் காணப்படுகிறது. மேலும் படி அரிசித் திட்டத்தை விஸ்தரிப்பதினுல் எத்தனை கோடி நஷ்டம் ஏற்படும் ? அப்படி விஸ்தரிப்பது இப்போது சாத்தியமா ? (திரு. கே. விஞயகம் :—நூறுகோடி).

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : படி அரிசித் திட்டத்தினுல் 8·73 கோடி நஷ்டம் என்பது தவறுனது. அது பலமுறையும் இந்த மன்றத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. எட்டுகோடி செலவாகும் என்று மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற எந்த அறிக்கையிலும் நஷ்டம் காண முடியாது. சென்னை, கோயம்பத்தூர் பகுதி மக்களுக்கு படி அரிசித் திட்டம் அளிப்பதனுல் 40 லட்சம் மக்களுக்கு 4 கோடிதான் ஆகிறது. ஆனுல் நான் முன்பு குறிப்பிட்டபடி 42 ரூபாய் அரிசிக்கு 3 ரூபாய் போனஸ் என்று சேர்த்துக் கொடுப்பதனுல்

—that is not passed on to the consumer—

பாக்கியுள்ள தொகை எல்லா ஊர்களிலும் உள்ள விவசாய மக்களுக்குத்தான் கொடுக்கிறேம். எல்லா ஊர்களிலும் உள்ள மக்களுக்கு அந்த நன்மை போய்ச் சேருகிறது.

அடுத்து படி அரிசித் திட்டம் இரண்டாம் ரக நெல்லைப் பொறுத்துத் தான் முதல் ரக அரிசிக்குக் கிடையாது. இரண்டாம் ரக அரிசி உற்பத்தியும் இப்போது குறைவாக இருக்கிறது. இன்றைக்கும் தமிழ்நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரச்சினை படி அரிசித் திட்டத்தை விஸ்தரிப்பது என்பதல்ல வறட்சி நிலை ஏற்பட்டுள்ள நிலையில் உணவு தானியங்களின் விலை ஏறிவிடாதிருக்க கட்டுப்பாடான விலையில் மக்களுக்கு தானியங்கள் கிடைக்கும்படி செய்வதுதான்.

## *Scale of pay of Librarians*

* 314 *Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the scale of pay of Librarians in Government Colleges are likely to be revised on a par with U.G.C. scales ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இவ்விஷயம் பரிசீலனையிலிருக்கிறது.

## தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவப்படி

*315 **விஞ—திரு. எம். பூபதி** : மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த வைத்திய அலவன்சை 1958-ம் ஆண்டுக்குப் பின் நிறுத்திய காரணம் என்ன ?

(இ) ஆசிரியர்கள் பெற்று வந்த இந்தச் சிறு சலுகையை [illegible]ாக அளிக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் [illegible]வர் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு செ. மாதவன்** : (அ) தனியார் பள்ளிகளி[illegible] [illegible]க் [illegible]பி யாற்றும் ஆசிரியர்களுக்கு எந்த விதமான வைத்திய அலவன்[illegible] காலத்திலும் அளிக்கப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.





**திரு. எம். பூபதி** : தலைவர் அவர்களே, இனிமேலாவது அந்தமாதிரி வைத்திய வசதி கொடுக்க பரிசீலனை செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இப்போதைக்கு இல்லை.

**திரு. டி. மார்டின்** : மெடிகல் அலவன்ஸ் கொடுப்பதனுல் சர்க்காருக்கு நஷ்டம் இருக்கும். ஆகவே தனியார்துறை பள்ளி ஆசிரியர்களுக்கு பண்டிகைக்கு முன்பணமாகக் கடன் வழங்கும் திட்டத்தையாவது கொண்டு வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தனியாகக் கேள்வி கேட்கவும்.

**திரு. வ. ஜார்ஜ்** : கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒருபோதும் மெடிகல் அலவன்சு கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். மாநிலத்தின் மற்றப் பகுதிகளில் இருப்பதைப்போலவாவது அங்குள்ளவர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : குமரிமாவட்டம் என்ற வார்த்தையை நான் உபயோகிக்கவில்லை.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்** : ஆசிரியர்கள் என்றுல் எல்லோரும் ஆசிரியர்கள். அரசாங்கப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைக்கிற சலுகைகள் மற்றப் பள்ளி ஆசிரியர்களுக்கும் கிடைப்பதுதான் நியாயம் என்பதை உணர்ந்து எத்தனை செலவாஞலும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் இந்தச் சலுகைகளை விஸ்தரிக்க முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : கனம் உறுப்பினர் ஆசிரியர்களிடம் காட்டுகிற பரிவுக்கு மகிழ்ச்சி அடைகிறேன். இலவசக் கல்வித் திட்டம் வந்தபிறகு தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம், அலவன்சு முழுவதையும் அரசாங்கமே கொடுக்கிறது. மற்றவர்களுக்கு இப்போது கொடுக்கிற சலுகைகளை தனியார் பள்ளிகளுக்கும் விஸ்தரிப்பது என்றுல் 7 லட்சம் வரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. எந்தச் சந்தர்ப்பத்தில் நிதிநிலை நமக்கு இடம் கொடுக்கிறதோ அப்போது கவனிக்கவேண்டிய பிரச்சினை இது.

**THIRU K. VINAYAKAM : Sir, this medical allowance is now given to the teachers working in recognised institutions under the control of the Government, Corporation and Local Bodies. As the expenditure that would be incurred if the same benefit is extended to the teachers working in private schools would not be more than Rs. 7 lakhs, what is the difficulty which the Government feel now to fritter away this small amount for those teachers also ?**

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : முன்னே குறிப்பிட்ட அந்தக் கருத்தையே கனம் உறுப்பினர் பரிவோடு கூறியது மகிழ்ச்சியைத் தருகிறது.

**திரு. நா. சௌந்தரபாண்டியன்** : தலைவர் அவர்களே, செகண்டரிகிரேட் ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டதன் காரணமாக—அவர்கள் பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளம் கிடைக்காது இருக்கிறது. எல்லா ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்குமே உபகாரச் சம்பளம் வழங்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : அதுபற்றிய தகவல் என்னிடத்தில இல்லை.

**திரு. பி. துரைராஜ் :** தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குத் தற்போது மருத்துவ வசதி கொடுக்க இயலாவிட்டாலும் வருங்காலத்திலாவது அவர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை கொடுக்க வேண்டுமென்பதை உணர்ந்து அடுத்த ஆண்டு அதற்கென நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளுமா ?

முற்பகல் 9 30

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** "தற்போது" என்று சொல்லியதிலிருந்தே அதையெல்லாம் ஊகித்துக் கொள்ளலாம்.

## *Introduction of Tamil as Official Language.*

* 316 *Q.*—THIRU K. VINAYAKAM, THIRU S. RAMACHANDRAN, THIRU K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state --

(*a*) whether there is any proposal to introduce Tamil, being the State Official Language, in all departments for all correspondence maintenance of records, transaction of business , etc. ; and

(*b*) the steps taken towards the speedy introduction of the Official Language ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) அரசு அலுவலகங்களில் தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டு வரும் பணி படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆட்சிமொழியைச் செயல்படுத்துவதற்காக அரசு எடுத்துள்ள பற்பல நடவடிக்கைகளை விளக்கும் விவர அறிக்கை† ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. விநயகம் :** தாய்மொழி தமிழாக அல்லாதவர்கள் புரொபேஷன் பீரியட் முடிவதற்குள் தமிழ் படிக்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது மானிடரி இன்செண்டிவ்ஸ் கொடுக்கிறதா ? நமது சட்டசபை நிகழ்ச்சிகள் எல்லாம் தமிழில் நடைபெறுகின்றன. ஆனால் நாம் இயற்றும் சட்டங்களைத் தமிழிலே கொண்டு வருவதில் என்ன கஷ்டம் இருக்கிறது ? அது எத்தனை நாளில் அமலுக்கு வரும் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரே கேள்வியில் எத்தனை பொருள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** என்ன இன்செண்டிவ்ஸ் கொடுக்கப்படுகிறது என்ற கேள்விக்கான விவரம் என்னிடம் இல்லை. தமிழ் நாட்டிலே வாழும் மக்கள் எந்த விதமான பிரதி பிரயோசனத்தையும் எதிர்பார்க்காமல் தமிழைக் கற்பதுதான் நல்லது என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். சட்டத் தொகுப்புகளை எல்லாம் தமிழிலே கொண்டு வருவதைப் பற்றி முன்னரே சொல்லியிருக்கிறேன். நம்முடைய சட்ட விதிகள் அரசமைப்புச் சட்டப்படி இன்றைக்கு இருக்கக் கூடிய சட்டப்படி ஆங்கிலத்தில் கொண்டு வந்தால்தான் செல்லும். சட்டத் தொகுப்பு அகராதி தயாராகிவிட்டது. அதை அடிப்படையாக வைத்து நீதித் துறையில் பணியாற்றுகின்றவர்களை வைத்து எந்த முறையில் இதனைச் செய்யலாம் என்று முடிவு செய்து அதற்குப் பிறகு மசோதாக்களைத் தமிழில் கொண்டு வருவதற்கு இயலும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** அரசாங்கம் தமிழை ஆட்சி மொழியாக ஆக்குவதற்கு இவ்வளவு நடவடிக்கைகளை எடுத்த பிறகும் அரசாங்கத்தினுடைய நேரடிப் பார்வையில் இருக்கிற தலைமைச் செயலகத்தில் தமிழ் முழுவதும் பயன்படுத்தப்படவில்லை. எங்களுக்கு வருகின்ற பதில்கள் எல்லாம்

† 616–618-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



ஆங்கிலத்தில்தான் வந்து கொண்டிருக்கின்றன. அதற்கான உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்கவில்லை என்று கூறுவது உண்மையா ? தமிழ் சில துறைகளில் பயன்படுத்தபடுகிறது என்றால் எந்தெந்த அமைச்சரவையின் துறைகளில் பயன்படுத்தப்படுகின்றன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைமைச் செயலகத்தில் மட்டுமல்ல, எல்லா அலுவலகங்களிலும் தமிழைப் பயன்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறோம். அமைச்சர்களுக்கு எழுதப்படுகின்ற குறிப்புகள் எல்லாம் கூட தமிழிலே எழுதப்படுகின்றன. அமைச்சர்களும் தமிழிலே குறிப்புகளை எழுதுகிறார்கள். முழுமையாகத் தமிழைப் பயன்படுத்த வேண்டுமென்ற கனம் அங்கத்தினர் அவர்களுடைய விருப்பம் படிப்படியாகச் செய்து விட முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** எல்லாத் துறைகளிலும் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லுகிற அமைச்சர்கள் மனுக்களைக் கொடுக்கிறபோது "மே பி லுக் டு இண்டு" என்று ஆங்கிலத்திலே குறிப்பு எழுதுகிறார்கள். அவற்றையெல்லாம் தமிழிலே எழுதுவதற்கு முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழிலே எழுதவில்லை என்று சொல்வது தவறு. தமிழிலும் எழுதுகிறோம். ஆங்கிலத்தில் எழுதுகிறோம் என்றால் அது பழக்கம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நீதிமன்றங்களில் ஜில்லா மட்டத்திலாவது உடனடியாகத் தமிழைக் கொண்டுவர போதிய நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நீதிமன்றத்தைப் பொருத்த அளவில் நாமே செய்துவிடக் கூடிய முடிவு அல்ல. உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி ஒத்துக் கொண்டார்கள். மாவட்ட அளவில் எல்லா நீதிமன்றங்களிலும் சாட்சிகளை விசாரிக்கும்போது தமிழிலே கேட்கிறார்கள். தமிழிலே எழுதப்பட்ட அந்தக் குறிப்புகளை தமிழ் தெரிந்த நீதிபதியாக இருந்தாலும் ஆங்கிலத்திலே மொழிபெயர்க்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மொழி பெயர்ப்பிலே இரண்டு வக்கீல்களுக்கிடையேயே கருத்துவேறுபாடு ஏற்பட்டு விடுகிறது. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், கொறடா அவர்களும் வழக்கறிஞர்கள். இந்த நிலைமையை மாற்ற தமிழிலேயே எழுத வேண்டுமென்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கூறும்போது நமக்கும் உயர்நீதி மன்றத்திற்கும் இடையே சிறிது வேறுபாடு இருக்கிறது. அதைப் பற்றி கடிதப் தொடர்பு இருந்து வருகிறது.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை அமல் நடத்துகின்ற வகையில் தாலூகா மட்டத்திலோ, மாவட்ட மட்டத்திலோ அரசாங்கத்தின் எதேனும் ஒரு இலாகாவிலாவது முழுக்க முழுக்க தமிழிலே ஆட்சி மொழி என்ற நிலை இருக்கிறதா ? அப்படி எத்தனை அலுவலகங்களில் இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. எல்லாம் தமிழிலேதான் இருக்க வேண்டுமென்று சொன்னால் சங்கடம் ஏற்படும். அலுவலர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள், நீதித் துறையை எடுத்துக் கொண்டாலும் தமிழர்கள் அல்லாத தெலுங்கர்கள், கன்னடர்கள், மலையாளிகள் இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்குச் சங்கடம் ஏற்படும் என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே, கட்டாயம் என்று சொல்லாமல் எங்கெங்கு தமிழைக் கொண்டுவர முடியுமோ அவ்வாறு கொண்டு வருவதற்குக் கூடிய விரைவில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு திரு, மா. முத்துசாமி :** கதர் கிராம வாரியத்தில் 96 சத விகிதம், அக்கவுண்டண்ட் ஜெனரல், பே அண்டு அக்கவுண்ட்ஸ் கணக்குகள் தவிர எல்லாம் தமிழிலேதான் நடைபெறுகிறது என்பதைச் சிலம்புச் செல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** நகராட்சிகளுக்கு அனுப்பப்படுகின்ற தாக்கீது கள் எல்லாம் ஆங்கிலத்திலே அனுப்பப்படுகின்றன. அவை தமிழில் அனுப் பப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அவை எல்லாம் விரைவில் மாறும்.

**திரு. க. ர. நல்லசிவன் :** கஷ்டங்கள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறுவதை ஒத்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் தமிழை முழுமையாக ஆட்சி மொழியாக்குவதற்கு என்ன கால கட்டம் வைத்திருக் கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாளைக்கே அது முடியும் என்றால் அந்தக் காலகட்டத்தைக்கூட அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.

**திரு. கே. என். குமாரசாமி :** தமிழை ஆட்சி மொழியாகச் செய்வதி திலே அரசாங்கம் படிப்படியாகக் கொண்டு வரும் என்று சொன்னார்கள். அமைச்சர்களுடைய டூர் புரோகிராம் கூட-ஒரு அமைச்சரவை தவிர-ஆங்கிலத் திலே வந்துக் கொண்டிருப்பது தமிழிலே வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதைப் பற்றி ஏற்கெனவே ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டதாக நினைவு. இனி தமிழிலே போட வேண்டு மென்று தலைமைச் செயலாளருக்குக் குறிப்பு அனுப்பியதாக நினைவு. அதற்குப் பிறகு சுற்றுப் பயணத் திட்டங்கள் எல்லாம் தமிழிலேதான் வருகின்றன என்று கருதுகிறேன்.

**திரு. ந. வீராசாமி :** ஆட்சி மொழியைத் விரைவில் செயல்படுத்த பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அது செம்மையாக நிறைவேற வேண்டுமென்றால் அதிகமான தட்டெழுத்தாளர்களும், சுருக்கெழுத்தாளர் களும் தேவை. அதற்காகப் பல்வேறு பயிற்சி பெறுவதற்கு நவம்பர் 1961-ல் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. ஆயிரக்கணக்கான சுருக்கெழுத்தா ளர்கள் தேவை என்ற நிலையில் நூற்றுக் கணக்கான சுருக்கெழுத்தாளர் களே பயிற்சி பெறக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, இனியாவது அப்ப டிப்பட்ட சுருக்கெழுத்தாளர்களுக்கும் தட்டெழுத்தாளர்களுக்கும் பயிற்சி கொடுக்க துரித நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஆங்கிலத்திலே தேர்ச்சி பெற்ற தட்டெழுத்தாளர்கள் தமிழிலும் பயிற்சி பெற ஏற்கெனவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தற்போதே தமிழில் தட்டெழுத்துப் பொறிகள் நிறைய இருக்கின்றன. பயிற்சியும் பெற்று வருகிறார்கள். நீதிமன்றங்களிலும் அந்த வகையிலே பயிற்சிகள் பெற்று வருகிறார்கள். ஆங்கிலத் தட்டெழுத்தாளர்கள் உடனடியாக தமிழுக்கு மாற வேண்டு மென்று சொன்னால் கஷ்டமாக இருக்கிறது. தமிழ் தட்டெழுத்துப் பொறிகளைக் கொடுத்து விரைவில் தமிழில் கொண்டு வர முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

**THIRU K. VINAYAKAM:** Whereas all the Acts of our State as well as of the Centre are all in the English language now and even while practising in law courts, different lawyers are capable of giving different interpretations for the same section or article of the Act and if these are translated in Tamil, it will lead to complication of interpretation with regard to the weight and meaning of the real



factor, will the Government desist from translating these Acts into Tamil ? Will the Government also issue instructions to the High Court that Tamil documents in suits to be given to the High Court should be translated in English ? Will the Government take action to instruct officers in this regard ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முதலிலே, நம்முடைய கனம் அங்கத்தினர் அவர்கள் தமிழிலே சட்டங்கள் கொண்டு வரப்படுமா என்று கேட்டார்கள். இப்போது அவ்வாறு தமிழிலே சட்டங்களைக் கொண்டு வரும்போது சிக்கல்கள் ஏற்படாதா என்று கேட்கிறார்கள். சிலம்பு செல்வரிடத்திலே பயிற்சி பெற்றவர் தமிழ் மொழியைப் பற்றி இவ்வாறு கருத்துக் கொண்டிருப்பது சரியல்ல. டில்லியில் இந்தியில்கூட லா ஜர்னல் போடத் தொடங்கி இருக்கிறார்கள். அந்த நிலையில் நம்முடைய தமிழில் முடியாது என்று கருதுகிறார்கள் ? இடைக்காலத்தில் ஏற்படக்கூடிய சங்கடங்களை தவிர்த்து தமிழிலே எல்லாவற்றையும் கொண்டு வர வேண்டு மென்பதுதான் திட்டம்.

### கோவையில் உரத் தொழிற்சாலை

* **317 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் சிறிய அளவு உரத்தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்—**

(அ) கோவை மாவட்டத்தில் சிறிய அளவு உரத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற் குறிப்பு எதும் அரசாங்கத்திடம் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. சு. துரைசாமி :** கோவை மாவட்டத்திலுள்ள விவசாயிகள் மற்றப் பகுதிகளை விட அதிகமான அக்கறை எடுத்துக் கொண்டு அங்கு விவ சாயம் செய்கிறார்கள். ஆகவே அந்த இடத்தில் அவர்களுக்கு ஒரு உரத் தொழிற்சாலை ஏற்படுத்திக் கொடுத்தால் போக்குவரத்துச் செலவும் குறை யும், அதோடு எளியமுறையில் அது கிடைக்கவும் வசதியாக இருக்கும். ஆகவே அதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உரத் தேக்கம் பற்றிதான் அரசாங் கம் கவலை கொண்டிருக்கிறது.

**திரு. எம். பூபதி :** கோவை காரமடையில் தனியார் நடத்தும் தொழிற்சாலையை விரிவுபடுத்த அவர்கள் அரசாங்கத்தைப் கோரியிருக்கிறார் களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

### தாடகைநாச்சியம்மன் ஓடைத்திட்டம்

* **318 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் தாடகைநாச்சியம்மன் ஓடைத் திட்டத்திற்கு எஸ்டிமேட் (estimate) போடப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : (அ) ஆம்.

(இ) இத்திட்டம் ஆதாயமற்றதாக இருந்தமையால் இத்திட்டம் பரிந்துரைக்கப்படவில்லை. இதன் செலவு குறைக்கப்படக்கூடும் என்பதை அறிய இத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**திரு. பி. எஸ். மணியன்** : இதுபோன்ற முக்கியமான திட்டங்களை நிறைவேற்றுகிற காலத்தில் ஓவர் எஸ்டிமேட் என்ற காரணத்தைக் காட்டி தள்ளிவிடுகிறார்கள். ஆகவே இதுபோன்ற திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றை செயல்படுத்தும் முறையில் சட்டத்தை தளர்த்துவது குறித்து அரசாங்கம் பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: ஏற்கெனவே குறிப்பிட்டது போல் இத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

## தமிழ் நாட்டிலுள்ள நெடுஞ்சாலைகள்.

* 319 **வினா—திரு. கே. போஜன்**: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்குப் விடையளிப்பாரா—

(அ) நம் மாநிலத்திலுள்ள நெடுஞ்சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகள் என்றும், மாநில நெடுஞ்சாலைகள் என்றும் எந்த அடிப்படையில் பிரிக்கப்பட்டிருக்கின்றன?

(இ) இந்த தேசிய நெடுஞ்சாலைகளின் பராமரிப்புக்காக மத்திய சர்க்கார் ஏதேனும் உதவித் தொகை அளிக்கின்றதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : (அ) சாலைகள் (i) தேசிய நெடுஞ்சாலைகள் எனவும் அதாவது படைப்போக்குவரத்துக்கு அவசியப்படுகிற சாலைகள் உட்பட பெரிய துறைமுகங்கள் வெளிநாட்டு நெடுஞ்சாலைகள், மாநிலங்களின் தலைநகரங்கள் ஆகியவற்றை இணைத்து இந்தியா வெங்கும் உள்ள முதன்மையான நெடுஞ்சாலைகள் எனவும்,

(ii) மாநில நெடுஞ்சாலைகள் எனவும், அதாவது மாநிலத்தின் ஏனைய முதன்மையான பெருவழிகள் அல்லது உயிர்நாடி போன்ற நெடுஞ்சாலைகள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்திய அரசுக் சட்டலைக் இணங்க 1943-ல் நாகபுரியில் நடைபெற்ற மத்திய மாநில அரசாங்கங்களின் தலைமைப் பொறியாளர்கள் மாநாட்டுப் பரிவுரைகளின் அடிப்படையிலே இவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(இ) & (உ) : ஆம். நகர எல்லைக்குள் அமைந்த பகுதிகளைத் தவிர தேசீய நெடுஞ்சாலைகளுக்காகும் செலவு முழுவதையும் இந்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. நகர எல்லைக்குள் அமைந்த பகுதிகளுக்கு மைல்கள் ஒன்றுக்கு ரூ. 5,000 அல்லது நடைமுறையில் ஏற்படும் பேணுதல் செலவு இவற்றில் எது குறைந்ததோ அந்த வீதப்படி மானியம் வழங்க இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

**திரு. கே. போஜன்** : நம் மாநிலத்தில் இவ்வித தேசீய நெடுஞ்சாலைகள் எவ்வளவு மைல் அல்லது எவ்வளவு கிலோ மீட்டர் இருக்கின்றன?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா** : தேசிய நெடுஞ்சாலைகள் பம்பாய்—சென்னை சாலை 78மைல் ; கல்கத்தா—சென்னை 28 மைல் 3 பர்லாங் : வாரணசி—கன்னியாகுமரி 405 மைல் ; சென்னை திருச்சி—திண்டுக்கல் 257 மைல் 5 பர்லாங் ; ராணிப்பேட்டை—கிருஷ்ணகிரி 89 மைல், 5¼ பர்லாங் ; சேலம்—கொச்சி 111 மைல், 6 பர்லாங் ; மதுரை—தனுஷ்கோடி 93 மைல் 3 பர்லாங். கூட்டிப்பார்த்தால் மொத்தம் தெரிந்து கொள்ளலாம்.



DR. H. V. HANDE : The work on the Eastern Highway from Madras to Kanyakumari via Mahabalipuram is being postponed for a number of years, whereas work on the Western Highway from Bombay to Kanyakumari is being implemented very fast. Why is there such a difference in attitude between the Eastern Highway and the Western Highway ? When are we going to have the work on the Eastern Highway completed, is the State Government in touch with the Central Government in regard to the Eastern Highway and what are the steps taken so far ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : உறுப்பினர் அவர்கள் கூறுகிறபடி ஒரு குறைபாடு இருந்துவருகிறது. அதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள அரசாங்கம் இப்போது தொடர்ந்து முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : These National Highways require a lot of money for repairs, etc., and the State Governments are spending almost all the money on them and neglect the interior roads. Cannot the maintenance of the National Highways be with the Central Government and the State Governments enabled to spend their resources on the roads in the interior parts of the State ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா** : தேசீய நெடுஞ்சாலை பராமரிப்புப் பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : கன்னியாகுமரி—பம்பாய் நெடுஞ்சாலை கன்னியாகுமரி பகுதியிலிருந்து இதுகாறும் ஆரம்பமாகவில்லை என்ற தகவல் இந்த அரசின் கையில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: அந்தத் தகவல் தற்போது என்னிடத்தில் இல்லை.

**திரு. கா. வேழவேந்தன்** : தேசீய நெடுஞ்சாலைகளுக்காகவும், நெடுஞ்சாலைகளுக்காகவும் ஒதுக்கப்படுகிற மானியத் தொகையைக் கொண்டு தார் போட்ட ரோடுகளால் மேலும் மேலும் தார் போட்டுக் கொண்டு இருப்பதை விட அதில் வந்து சேருகிற கிளைச் சாலைகளை, பஸ் ஓடுகிற பகுதிகளையாவது இந்த மாதிரி சீரமைக்க இதிலிருந்து மானியத்தை ஒதுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா**: தேசீய நெடுஞ்சாலைகளுக்குக் கொடுக்கிற மானியத்தை மற்ற சாலைகளுக்கு செலவிடமுடியாது.

## திருப்பூர் நகராட்சி

*320 **வினா : திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

திருப்பூர் நகரமன்றத்தை " தேர்வு நிலை நகராட்சியாக " மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி** : ஆம்.

**திரு. சு. துரைசாமி** : "திருப்பூர் நகரமன்றத்தை தேர்வு நிலை நகராட்சியாக " மாற்றும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்போது அது நடைமுறைக்கு வரும் ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை கண்காணிப்பாளரிடமிருந்துகடைசிப்புள்ளி விவரங்கள் எதிர்பார்க்கபடுகிறது. திருப்பூர் நகராட்சியைதேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பைப் பற்றி சில நகராட்சிகளை மீண்டும் வகைப்பாடு செய்வதற்கான அடங்கல் செயற்குறிப்புகளுடன் சேர்ந்து ஆய்வு செய்யப்படும்.

**திரு. நா. காசிராமன் :** ஃபர்ஸ்ட் கிரேட் முனிசிப்பாலிட்டியாக இருப்பதை செலக்ஷன் க்ரேட் முனிசிபாலிட்டியாக ஆக்கவேண்டுமென்றால் அந்த முனிசிப்பாலிட்டிக்கு என்னென்ன க்வாலிபிகேஷன்ஸ், தகுதிகள் வேண்டும் என்பதை தெரிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஒரு லட்சம் ரூபாய் முதல் 2½ லட்சம் ரூபாய் வரையில் உள்ளதும் தனி நபர் வருமானம் இருபதுக்கு மேற்படுகிற வருமானம் உள்ள நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக வகைப்பாடு செய்யப்படும்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** நகராட்சிகளின் தரத்தை உயர்த்துவது ஜனத்தொகை அடிப்படையில் என்றால் 1966-ம் ஆண்டு சென்ஸஸ்படி உயர்த்தப்படுமா ? அல்லது இப்போதைய ஜனத்தொகைப்படி உயர்த்தப் படுமா ? இப்போதுள்ள ஜனத்தொகைப்படி ஆரணி நகரமன்றத்தில் தரம் உயர்த்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மக்கள் தொகைபற்றி மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை கண்காணிப்பாளரிடமிருந்து தகவல் எதிர் பார்க்கப்படுகிறது. அந்த அடிப்படையில் உயர்த்தும் முயற்சி மேற்கொள்ளப் படும்.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** திருப்பூரைப் போன்று கோவை மாவட்டத்தில் ஈரோடும் ஒரு பெரிய நகரமாக இருந்து வருகிறது, வளர்ந்து வருகிறது. அதையும் செலக்ஷன் கிரேட் முனிஸிபாலிட்டி யாக்க ஏதாவது திட்டமுண்டா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் அந்தக் கணக்கெடுப்புகள் எல்லாம் நம் கைக்கு வந்த பிறகு ஈரோடும் அதில் அடங்குமானால் அதுபற்றியும் பரிசீலிக்கப்படும்.

**திரு. சு. துரைசாமி:** அமைச்சர் அவர்கள் மக்கள் தொகை, வருமானம் என்ற இரண்டு முறைகளைப் பற்றித் தெரிவித்தார்கள். இந்த இரண்டு முறையும் திருப்பூர் நகரமன்றத்திற்குப் பொருத்தமாகயிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மக்கள் தொகை குறித்த கடைசிப் புள்ளி விவரங்கள் மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை கண்காணிப்பாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

### *Nutrition Programme*

* 321 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the "Applied Nutrition Programme' has been introduced in our State;

(*b*) if so, the places where they are introduced ; and

(*c*) the details thereof ?



**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) ஊட்டச் சத்துணவுத் திட்டம், முதன் முதலில் 1962-63-ம் ஆண்டில் ஆரணி (வட ஆர்க்காடு மாவட்டம்), பவானிசாகர் (கோயம்புத்தூர் மாவட்டம்), கிருஷ்ணகிரி (தருமபுரி மாவட்டம்), கோவில்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்), பட்டுக்கோட்டை, திருவிடைமருதூர் (தஞ்சாவூர் மாவட்டம்), தெ. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்) ஆகிய இடங்களில் கொண்டுவரப்பட்டது. பின்னர் 1966-67-ம் ஆண்டில் இத்திட்டம் ஆத்தூர்-1, பூவிருந்தவல்லி ஆகிய வளர்ச்சி வட்டாரங்களுக்கும், 1967-68-ம் ஆண்டில் சாத்தூர், அகஸ்தீஸ்வரம், பெரியநாயக்கனபாளையம் ஆகிய வளர்ச்சி வட்டாரங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது.

(உ) விவரங்கள் கொண்ட தனிக்குறிப்பு* ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, will the Hon. Minister for Local Administration be pleased to extend the scheme to the Dharmapuri district also ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அத்தகைய தகவல்கள் இப் பொழுது எதுவுமில்லை.

### வேதாரண்யத்தை அடுத்துள்ள தோப்புத்துறை துறைமுகம்.

* **322 வினா—திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு தொழிலாளர்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த தோப்புத்துறை துறைமுகத்தை செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு உண்டா ?

(இ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) அவ்விதமான செயற் குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

### ஆசிரியர்களுக்கு வீடுகள்

* **323 வினா—திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை போன்ற பெரிய நகரங்களில் ஆசிரியர்களுக்கென தமிழ் நாட்டு வீட்டு வசதி யூனிட் மூலம் வாடகைக்கு விடும் திட்டத்தின் கீழ் அல்லது தவணை முறையில் செலுத்தும் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் என்றால் எப்போது முதல் அமல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், மதுரை போன்ற பெரிய நகரங்களில் ஆசிரியர்களுக்கு ஒரு வசதி செய்து கொடுக்கும் முறையில் இனிமேலாவது இம்மாதிரியான ஒரு திட்டத்தை பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** ஹவுஸிங் யூனிட்டில் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு 10 சதவீதம் வாடகை வீதத்தில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. அது மாத்திரமல்லாமல் 500 ரூபாய்க்கு

* 618—622-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1969 மார்ச் 13

மேலே சம்பளம் வாங்குபவர்களுக்கு கவர்ன்மெண்ட் கோட்டா 20 சத வீதம் இருக்கிறது. அதிலும் இம்மாதிரி ஆசிரியர்களுக்கு ஒதுக்கிக்கொடுக்கப் படுகின்றன. ஆகையால் ஆசிரியர்களுக்காகத் தனியாக ஒரு திட்டம் தேவையில்லை என்று அரசு கருதுகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினுக்கள் 304, 305, 306, 307 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒற்றி வைக்கப்படுகின்றன.

## சேலம் மாவட்ட வருவாய்த்துறையில் வேலை நீக்கம்

*** 308 வினு—திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் ரெவின்யூ இலாக்காவில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்தவர்களில் எத்தனை பேர் 1967 மார்ச் முதல் 1968 மார்ச் முடிய வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் ?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்**: தமிழ் நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகம் மூலமாக வேலைக்கு எடுக்கப்பட்டு, சேலம் மாவட்ட வருவாய்த் துறையில் மூன்று ஆண்டுக் காலத்துக்கு அதிகமாகப் பணியாற்றிய எவரும் 1—3—1967-லிருந்து 31—3—1968 வரை வேலை நீக்கம் செய்யப்படவில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : பேரவைத் தலைவரவர்களே, சிக்கனச் சீரமைப்புத் திட்டத்தை அமல்படுத்தவிருப்பதாக மேலவையில் அமைச்ச ரவர்கள் சில நாட்களுக்கு முன்பு தெரிவித்தார்கள். அப்படிச் சிக்கனச் சீரமைப்புத் திட்டத்தின் மூலம் ஆட்குறைப்பு செய்யப்போவதில்லை என்று இந்தச் சபையின் மூலம் தமிழக மக்களுக்கு அமைச்சரவர்கள் திட்ட வட்டமாக உறுதி அளிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : இது கொள்கை பற்றிய விஷயம். கேள்வி நேரத்தில் இதற்குப் பதிலளிக்க முடியாது. உறுப் பினரவர்கள் ஒரு கருத்தைத் திருத்திக்கொள்ள வேண்டும். நான் மேல் சபையில் சொன்ன கருத்து, சிக்கனச் சீரமைப்புத் திட்டம் என்றால் ஏதோ 4 இளார்க்குகளைக் குறைத்து விடுவது, அல்லது 32 ரூபாயில், 45 ரூபாயில் சிக்கனம் செய்து விடுவது சிக்கனச் சீரமைப்பு அல்ல. சிக்கனச் சீரமைப்புத் திட்டம் என்பது இன்றையதினம் இருக்கும் நம்முடைய நிர்வாக இயந்திரத்திலே பல மாறுதல்கள் செய்ய வேண்டும்; " டெலிகேஷன் ஆப் பவர் " மாற்ற வேண்டும். ஒரே அதிகாரி நான்கைந்து காரியங்களைச் செய்கிறார். ரைஸ் மில்லை எடுத்துக் கொண்டால், தாசில்தார், பிற்பாடு டி. ஆர். ஓ., இப்படி 4 மாதங்கள் தூங்கிக்கொண்டு பிறகு மந்திரிகளின் கையெழுத்துக்கு என்று வருகிறது. உதாரணமாக, அதிகாரங்கள் மாற்றப்படவேண்டும். " பப்ளிக் செக்டார் அண்டர்டேக்கிங்ஸ் ", பஸ் டிரான்ஸ்போர்ட், ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ், மாதவரம் மில்க் காலனி இவைகளில் இருக்கும் லாபங்களை, வருவாயைப் பெருக்க வேண்டுமென்றுதான் நான் சொன்னேனே தவிர 4 பேர்களைக் குறைப்பது என்று சொல்லவில்லை. குறிப்பாகக் கூறினால், அதனுடைய பெயர் வேலையிலிருந்து வீட்டிற்கு அனுப்புவது என்பது அல்ல.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : சார், சிக்கனச் சீரமைப்பு அவசியம் தான். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டியதும் அவசி யம்தான். சிக்கனச் சீரமைப்பு என்ற பெயரால் வீட்டிற்கு அனுப்பக் கூடிய அதே நேரத்திலே, 55 வயதுக்கு மேல் ஆகி ஓய்வு பெறக்கூடியவர் களை மறுபடியும் நீடித்து இருக்கக்கூடிய அளவுக்கு நீடிக்கப்படுகிறது. அது சரிதானு ? ஆகவே, அதையும் கைவிட வேண்டும். அதிகமாக இருக்கக்கூடிய நேரத்தில் இதை மாத்திரம் சிக்கனச் சீரமைப்பு என்று சொல்லிக்கொண்டு அதை மாத்திரம், ஆயிரக்கணக்காகச் சம்பளம் வாங்கக்கூடியவர்களை நீடித்து வைத்திருப்பது சரியான சிக்கனச் சீரமைப்புத் திட்டமாகுமா ?



1969 மார்ச் 13]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : மாண்புமிகு உறுப்பினவர் களின் கொள்கையை நான் வரவேற்கிறேன். புதிய அரசாங்கம், அறிஞர் அண்ணுவின் அரசாங்கம் வந்ததற்குப் பிறகு, ஏற்கெனவே 58 வயது வரையில் வேலையில் நீடித்திருந்த பல இலாக்காக்களில் 55 வயது போதும் என்ற புதிய ஏற்பாட்டைச் செய்தது தெரியும். அந்தப் புதிய ஏற்பாட்டினுல் இளைஞர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்பது கருத்து. ஆனுல், இன்னும் சில அதிகாரிகள் கல்வி இலாக்காவில் வேறுசில இலாக்காக்களில் இருக்கின்ற சில நிலைமைகள் நீடிக்கின்றன. அவைகளை அவ்வப்பொழுது பரிசீலனை செய்யலாம். எனவே, விட்டுவிட்டதாக, முடிந்த முடிவாகக் கருதத் தேவையில்லை.

**திரு. டி. மார்டின்** : ஸ்பீக்கர் சார், சேலம் மாவட்டத்தில் எந்த விதமான ஊழியர்களும் தள்ளிவைக்கப்படவில்லை என்று அமைச்சரவர் கள் கூறினுர்கள். ஆனுல் இந்த மாநிலத்திலுள்ள மற்ற மாவட்டங் களில் இதேபோன்று பல ஊழியர்கள் வேலையிலிருந்து அனுப்பப் பட்டிருக்கிருர்கள் என்ற குறையிருக்கிறது. அதைப்பற்றி வருகின்ற ரெவின்யூ டிமாண்டின் நேரத்திலாவது அமைச்சரவர்கள் எல்லா மாவட் டங்களிலும் இத்தனை பேர் வேலையிழந்திருக்கிருர்கள் அல்லது ஒரு மாவட் டத்திலும் யாரும் வேலையை இழக்கவில்லை என்று அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : உறுப்பினரவர்கள் இந்தக் கேள்வியைத் தவருகப் புரிந்து கொண்டிருக்கிருர்கள். திரு. சித்தன் அவர்களது கேள்வி மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்தவர்களில் எத்தனை பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர் என்பது. மூன்ருண் டுகளுக்கு அதிகமாகப் பணியாற்றியவர்கள் நீக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய பதிலின் பொருள். சேலம் மாவட்டத்திலிருந்து யாருமே நீக்கப்படவில்லை என்று பொருள் இல்லை. தற்காலிகமாக இருந்தவர் கள் 56 பேர்கள் நீக்கப்பட்டிருக்கிருர்கள். அதிலும் 15 பேர்கள் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டு விட்டார்கள். எல்லோருக்குமே, அந்த 56 பேர்களையும் வேலைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இன்றைய தினத்தில் இருக்கிறது. கலெக்டர் அவர்கள் பரிந்துரை அனுப்பியிருக்கிருர்கள். சேலம் இரும்பாலைக்கு 6 தாசில்தார்கள், 9 அசிஸ்டெண்டுகள், 24 ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் தேவைப்படுகிறது. தொழில் அமைச்சரவர்களுடைய இலாக்காவிலும் அந்தப் பரிந்துரை இப் பொழுது பரிசீலனை செய்யப்படுகிறது.

ஒன்றை மட்டும் தெரிந்து கொள்ளவேண்டும். தற்காலிகமாக சில வேலைகள் கொடுக்கப்படுகின்றன. அந்தமாதிரி வேலைகளில் இருக்கின்ற வர்கள், ப்ரொக்யூர்மெண்ட், செக் போஸ்டுகள் போன்றவைகளில் வேலைக்கு இருப்பவர்களை, தேவையில்லாத நேரத்திலும் அவர்களை வைத்திருந்தால் ஏன் அவர்களை எடுக்கவில்லை என்றும் கேள்வி வரும். பல தனியான வேலைகள் இருப்பதால், அவைகளிலெல்லாம் அசைன்மெண்ட் வேலைகள், வேறு இரும்பாலை சம்பந்தமாக ஆர்ஜிதத்திற்கு, எலெக்ஷன் வேலைகள் போன்றவைகள் 3, 4 மாதங்கள் நடக்கின்றன. அதற்குப் பிறகு அதில் வேலை பார்ப்பவர்கள் போய்விடுகிருர்கள். அதுதான் ஒவ்வொரு மாவட் டத்தினுடைய நிலைமையே தவிர, வேலையில் நிரந்தரமாக இருப்பவர்கள் நீக்கப்பட்டார்கள் என்று எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. தற்காலி கமாக செக் போஸ்ட் போன்றவைகளில் இருப்பவர்களை வேலை முடிந்ததற்குப் பிறகு நீடிக்க வேண்டியதில்லை என்ற நிலைமைகளைத் தவிர நிரந்தர மானவர்கள் யாரும் வேலையிலிருந்து நீக்கப்பட்டதாக எப்பொழுதுமே நிகழவில்லை.

**Thiru K. VINAYAKAM** : Sir, whereas of late during the past two years, employment opportunities for young and educated men are dwindling gradually, will the Government think of the possibility of recruiting fresh men for the Revenue Department not

under the temporary category under rule 10 (*a*) (i) by the officers themselves without consulting the PublicService Commisson or the Employment Exchange but continue torecruit either through the Employment Exchange or the Madras Public Service Commissison.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It is a dangerous proposition and the Government do not share the view of the hon. Member.

### நீலகிரி மாவட்ட கடைநிலை ஊழியர்களுக்குச் சீருடை.

***309. வினா—திரு கே. போஜன்** : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள சர்க்கார் கடைநிலை ஊழியர்களுக்கு சில ஆண்டுகளாக சீருடை வழங்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால் இதற்குக் காரணம் என்ன ?

(உ) இவர்களுக்கு உடனடியாக சீருடை வழங்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன்:** (அ)(உ) சிலயிடங்களில் கடைநிலை ஊழியர்களுக்கு சீருடை வழங்கப்படவில்லை என்பதாக நிலைமைகள் இருக் கின்றன. ஆனால் அவைகள் சீக்கிரமாகக் கிடைக்கும்படியான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. கே. போஜன்** : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்திலுள்ள கடைநிலை ஊழியர்களுக்கு சுமார் 3, 4 ஆண்டுகளாக சீருடை கொடுக்கப் படவில்லை. எனவே, சர்க்கார் உடனடியாகக் கவனித்து விரைவில் அவைகளைக் கொடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** சர்க்காருடைய கவனத்தில் இருக் கிறது. சப்ளை வந்து சேரவில்லை ஒவ்வொரு இலாக்காவிற்கும் எழுதி இருக்கிறோம். துணிவரவில்லை என்று எழுதியிருக்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கேள்வியைக் கொண்டு அது விரைவு படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

### இனும் நிலங்கள் ஒப்படை

***310. வினா—திரு. பி. வேலுசாமி** : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இனும்காலை பூமிகளை விவசாயம் செய்து கொண்டுள்ளவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன்:** ஆம். இனும்தாரரோ அல்லது உழவரோ நிலம் ஒன்றின் பட்டா பெறுதவிடத்து, சந்தர்ப்பத்திற்கேற்ற வாறு தமிழ் நாடு 1963-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டம் அல்லது தமிழ் நாடு 1963-ம் ஆண்டு சிறு இனும்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தில் விதித்துள்ள வாறு அந்த நிலத்தின் பட்டா பெறுவதற்குப் பயிரிடும் குத்தகைக்காரர் தகுதியுடையவராவார்.





**திரு. பி. வேலுசாமி :** சார், இன்னும் சில பூமிகளிலே விவசாயம் செய்பவர்கள் கடன் வாங்கி நீதிஸ்தலங்களுக்குப் போன பிறகுதான் பட்டா கிடைக்கிறது. எனவே, 25 வருடங்கள், 30 வருடங்கள் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கும் பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. கொடுக்கக் கூடிய முறை இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு கே.ஏ. மதியழகன் :** அது சம்பந்தமான குறை இருக் கிறது என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் கண்டிப்பாகக் கவனிக்கப்படும்.

**திரு. ஆர்.பொன்னப்ப நாடார் :** சார், பட்டா வழங்குவதில் கன்னியா குமரி ஜில்லாவில் ஒரு கஷ்டம் இருக்கிறது. போர்ட் ஸ்டாண்டிங் ஆர்டர் அமலாக்கப்படவில்லை. எனவே, போர்ட் ஸ்டாண்டிங் ஆர்டரை அந்த ஜில்லாவில் அமல் நடத்த நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** இப்போதுதான் இப்படிப்பட்ட முன்னேற்றங்கள் ஏற்படுகின்ற காரணத்தினால் எந்தக் கட்டத்தில் அமுல் படுத்த வேண்டுமோ அதைப்பற்றிய யோசனையை அரசாங்கம் செய்யும்.

**திரு க.கோமதிசங்கர தீக்ஷிதர் :** சபாநாயகர் அவர்களே, கோடாரங்குளம், செவந்திபுரம் முதலிய கிராமங்களில் இன்னும் அதிகமான வழக்குகளைப் போட்டு, அங்கே பயிர் செய்கிற விவசாயிகள் இந்த இனும் ஒழிப்புச் சட்டத்தினுடைய பலனைப் பெற முடியாமல், காலதாமதம் செய்து வருவதால் இந்த அரசாங்கம் அந்த வழக்குகளை உடனடியாக தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்து, அந்த விவசாயிகள் பயன் பெறும்படி செய்ய துரிதமான நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு கே.ஏ. மதியழகன் :** நீதிமன்றங்கள், சட்டமன்றங்கள், நிர்வாகத்துறை எல்லாம் ஜனநாயகம் செம்மையாகவும், தூய்மையாகவும் நடப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துவருகின்றன.

**திரு க.ர. நல்லசிவன் :** இதற்கு முன்னால் நண்பர் கேட்ட கேள்வியைத் தான் கேட்கிறேன். அதாவது, இந்த இனும் ஒழிப்பு சட்டத்தின் கீழே யாரெல்லாம் நிலம் கைப்பற்றி, சட்ட விரோதமில்லாமல் தங்களுடைய நிலங்களை கையிலே வைத்திருக்கின்றார்களோ, அவர்களுக்குப் பட்டா கிடைப்பது கிடையாது. மற்ற, சட்டவிரோதமான நிலையில் நிலம் வைத்திருப்பவர்களுக்கு பட்டா கொடுப்பதற்கான ஏற்பாடு உள்ளது இதிலே. ஆகவே, அமைச்சரவர்கள் இதைக் கவனத்திலே கொண்டு இரு சாராருக்கும் பட்டா கொடுப்பதிலே தீவிர கவனம் செலுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு கே.ஏ. மதியழகன் :** இது சம்பந்தமான நடவடிக்கை கள் வெகு தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், எங்கோ ஒரு தவறு நிகழ்கின்றது என்ற காரணத்தைக் காட்டி அதை பொதுவாக ஆக்கிவிடக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக்குறிக்கும்.]

### (2) கவன ஈர்ப்பு

**(அ) அருப்புக்கோட்டையில் கடன் தவணை செலுத்தாத நெசவா ளர்கள், வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசர அவசியப் பொது முக்கியமான காரியம் ஒன்றை திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி அவர்கள் மாண்புமிகு கல்வித்-தொழில் அமைச்சரவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள்.

**திரு சௌடி. எஸ். சுந்தரபாரதி :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசர அவசியப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

“ அருப்புக்கோட்டை நகரில் ஏழை நெசவாளர்களுக்கு தமிழக அரசு கொடுத்த கடன் தொகையுடன் அவர்களுக்கு கட்டிக் கொடுத்த 200 வீடுகளில் இருக்கும் பெரும்படி நெசவாளர்கள் வருமானக் குறைவு காரணமாக தவணைத்தொகையை உரிய காலத்தில் செலுத்தாததால் 20—2—1969-ம் தேதியன்று கூட்டுறவு அதிகாரிகள் போலீஸ் உதவியுடன் வந்து அவ்வீடுகளிலிருந்து அவர்களை வெளியேற்றியுள்ள நிலைபற்றி .”

***மாண்புமிகு திரு செ. மாதவன் :** அருப்புக்கோட்டையில், நெசவாளர் குடியிருப்புக் காலனியில் வசிப்பவர்கள் உரிய காலத்திற்குப் பின்னரும், மாதத் தவணை தொகைகளைச் செலுத்தத் தவறியதற்காக அவர்களை 20—2—1969 தேதியன்று காவலர் அப்புறப்படுத்தியதைப்பற்றி உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார வசதிகளுடன் வீடு, தொழிலிடத்தை அடைந்து அதனைச் சொந்தமாக்கிக் கொள்வதற்கு, நெசவாளர்களுக்கு உதவி செய்வதற்காக நெசவாளர் வீட்டு வசதித் திட்டம் வகுக்கப்பட்டது. இவ்வீட்டு வசதித் திட்டம் தகுந்த ஏனைய பகுதிகளில் தகுதியுடைய நெசவாளர்களுக்கு நீட்டிப்பது, அது வெற்றிகரமாகச் செயல்படுவதைப் பொறுத்ததாகும். அதாவது, இச்சங்கங்கள் அரசிற்கு செலுத்த வேண்டிய கடனைத் திருப்பச் செலுத்துவதற்குச் வசதியாக இச்சங்கங்களுக்கு நெசவாளர் உறுப்பினர்கள்—குடியிருப்போர் மாதத் தவணைகளைத் தவறாமல் திருப்பிச் செலுத்தினால் தான், திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுகிறதெனலாம். அரசு நிதி உதவி பெற்று இராமநாதபுரம் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை நெசவாளர் கூட்டுறவு வீட்டு வசதிக் காலனியைச் சேர்ந்த நெசவாளர் உறுப்பினர்களுக்கு 200 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு 1957-ல் அனுமதி அளித்தது. இவ்வீடுகள் கீழே விவரித்துள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஐந்தின் உறுப்பினர்களால் கட்டப்பட்டு அனுபோகத்தில் உள்ளன :—

| | | வீடுகள். |
|---|---|---|
| 1 | அருப்புக்கோட்டை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் .. | 85 |
| 2 | புளியம்பட்டி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் .. | 72 |
| 3 | திருநகரம் சாலியர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் .. | 20 |
| 4 | பொட்டுலுப்பட்டி செங்குந்தர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம். | 17 |
| 5 | புளியம்பட்டி செங்குந்தர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் .. | 6 |
| | மொத்தம் .. | 200 |

கூட்டுறவு வீட்டு வசதிக் காலனியில் பங்கு மூலதனம் பகுதியை ஈடு செய்வதற்கு அந்தந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அந்தந்தச் சங்கங்களால் ரூ. 500 வரை பங்கு மூலதனக்கடனும் வழங்கப்பட்டது. இதற்கு 3½ சதவீத வட்டி மட்டுமே வாங்கப்பட்டது. கடன் பகுதியுடன் அரசு அனுமதித்துள்ள இத்தொகைக்கு மேலாக, இச்சங்கத்தின் நிர்வாகச் செலவு, பொது வசதிகள் முதலியவற்றுக்கான செலவு அந்தந்த வீடுகளுக்கு விகிதாச்சாரமாகப்பற்று எழுதப்பட்டன. அதன்மேல், தவணைத் தொகைகள் முடிவு செய்யப்பட்டு உரிய சங்க உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்றன. உறுப்பினர்கள் எழுதிக்கொடுத்த தவணைக் கொள்முதல் ஒப்பந்தத்திற்கிணங்க ஒவ்வோர் உறுப்பினரும் செலுத்த வேண்டிய மாதத் தவணைத் தொகை ரூ. 16 அல்லது ரூ. 17 ஆகிறது.



வீடுகள் கட்ட அரசு ஒப்பளித்த ரூ. 5·62 லட்சம் மொத்தக் கடனில் 1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதியன்றுள்ள நிலவரப்படி, இச்சங்கம் கட்ட வேண்டிய அரசுக் கடன் ரூ. 3·81 இலட்சம் ஆகும். 1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதி நிலவரப்படி, முதலும் வட்டியுமாக இச்சங்கங்கள் செலுத்திய மொத்தத் தொகை ரூ. 2·96 இலட்சம் ஆகும். அனேகமாக எல்லா நேர்வுகளிலும் காலனியில் குடியிருப்போர் தவணைத் தொகைகளை சங்கங்களுக்கு முறையாகச் செலுத்தாத காரணத்தால் உரிய தேதிக்குப் பின்னரும் பாக்கியுள்ள அசல் வட்டி, தண்ட வட்டி ஆகியவற்றின்கீழ் அவர்களிடமிருந்து நிலுவையாகவுள்ள தொகை மிக அதிகமாக உள்ளது. பங்கு மூலதனக் கடன், வீட்டுக் கடன் இவற்றின் மீதான தவணைத் தொகைகளை, ஒவ்வொரு வீட்டிலும் மூன்று முதல் நான்கு தறிகள் வேலை செய்வதால் உறுப்பினர்கள் எளிதில் செலுத்தியிருக்கக் கூடும். ஒவ்வொரு வீட்டிலும் உறுப்பினர்களுக்கு மூன்று அல்லது நான்கு தறிகள் இருந்தபோதிலும்கூட, இச்சங்கங்களுக்கு ஒரே ஒரு தறியை மட்டுமே இவர்கள் பயன்படுத்துகின்றனர். மற்ற தறிகளைத் தறி உடையார் தறி முதலாளிகளுக்கு வேலை செய்ய பயன்படுத்துகின்றனர். சில நேர்வுகளில் இவை சங்கங்களுக்கு இத் தறிகளைப் பயன்படுத்துவதேயில்லை.

மேலும், நெசவாளர் உறுப்பினர்களிடமிருந்து அசல், வட்டி, தண்ட வட்டி குறித்து அதிகத் தொகை நிலுவையாக இருந்தபோதிலும், ஐந்து நெசவாளர் கூட்டுறவுச்சங்கங்கள் தங்கள் சொந்த நிதியிலிருந்து அரசாங்கக் கடன்களை முறையாக அரசுக்குத் திருப்பிச்செலுத்திக் கொண்டுவருகின்றன. அதாவது இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியிடமிருந்து வாங்கிய நடைமுதல் மூலதனத்திலிருந்து, இவை இக்கடனைத் திருப்பிச் செலுத்தி வருகின்றன. இதன் விளைவாக, உற்பத்திக்கான நடைமுதல் மூலதனம் குறைந்து விடுகிறது. மொத்த வாணிகத் தொகை சரிவடைவதால், இவர்களுக்கு விரயம் ஏற்படுகின்றன. நெசவாளர் குடியிருப்பு காலனிகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் செயற் குறிப்பை இந்திய அரசு ஒப்புக் கொள்ளாததால், வீட்டுக் கடன் மீதான அதே 4½ சதவீத வட்டியை மாநில அரசு இந்திய அரசுக்குத் செலுத்த வேண்டியதாகிறது. மாநில அரசுகளிடமிருந்து நிலுவையாயுள்ள இத்தகைய கடன் தவணைகளின் மீது, இந்திய அரசு தண்ட வட்டி விதித்து வசூலிக்கின்றது.

நெசவாளர்களை வெளியேற்றுவது சம்பந்தமாக, கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக நிலுவை செலுத்தாத ஐந்து பேர், ஒவ்வொருவரும் ரூ. 1,000-க்கு மேல், செலுத்தத் தவறியிருக்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் நால்வர் 1969-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதியன்று வெளியேற்றப்பட்டனர். ஒரே ஒரு நேர்வில் அந்த வீட்டில் அவ்வமயம் குழந்தை பிறந்ததால் வெளியேற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி :** ஐயா, மாதம் ஒன்றுக்கு சுமாராக ரூ. 16. அல்லது ரூ. 17 ஒரு நெசவாளி வாடகையாக, அந்த தவணைத் தொகையாக கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால், இந்தத் தவணைத்தொகையை குறைந்த அளவுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ. 6 அல்லது ரூ. 7 கொடுக்கும்படியாக ஒரு ஏற்பாடு செய்து அதன் மூலம் அவர் தங்கள் முழுத் தொகையையும் திருப்பித் தருவதற்குத் தேவையான அவகாசம் கொடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுது ரூ. 16, ரூ. 17தான் இருக்கின்றது. இந்த நெசவாளர்களுக்கு இப்படிப்பட்ட ஒரு குறைபாடு பல இடங்களிலே இருக்கிற காரணத்தால் அந்தந்த பகுதியிலே எவ்வளவு அசல் வர வேண்டியிருக்கிறது, வட்டி, தண்ட வட்டி எவ்வளவு வர வேண்டி இருக்கிறது போன்ற விவரங்களையெல்லாம் சேகரிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்கிறது. அந்த விவரங்கள் வந்த பிறகு என்ன செய்யலாம் என்பதை பரிசீலிக்கலாம்.

## (ஆ) கோயம்புத்தூரில் உள்ள சில பஞ்சாலைகளுக்கு கடன் வழங்க வங்கிகளின் மறுப்பு.

**திரு. எம். பூபதி :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை
யின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசர அவசியப் பொது முக்கிய
மான காரியத்தை மாண்புமிகு கல்வித்-தொழில் அமைச்சர் அவர்களின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். "கோவையிலுள்ள சோமசுந்தரா
மில்ஸ், கோயம்புத்தூர் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் காளீஸ்வரா
மில்ஸ் போன்ற மில்களை நடத்த பாங்குகள் மூலம் கடன்பெற சர்க்கார் சில
நிபந்தனைகளுடன் உத்திரவாதக் கடிதங்கள் கொடுத்தும் அந்த நிபந்
தனைகளை ஏற்று வங்கிகள் மேற்படி மில்களுக்குக் கடன் கொடுக்க மறுக்கும்
நிலை பற்றி."

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பேரவைத் தலைவர் அவர்களே,
"தமிழக அரசு கோவையிலுள்ள சோமசுந்தரா மில்ஸ், கோயம்புத்தூர்
ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், காளீஸ்வரா மில்ஸ் போன்ற மில்களை
நடத்த பாங்குகள் மூலம் கடன்பெற சர்க்கார் சில நிபந்தனைகளுடன், உத்திர
வாதக் கடிதங்கள் கொடுத்தும் அந்த நிபந்தனைகளை ஏற்று வங்கிகள்
மேற்படி மில்களுக்குக் கடன் கொடுக்க மறுக்கப்பட்டுள்ளன" என்பது
பற்றி உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்கள்.

பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட
ஆலைகளில் சோமசுந்தரம் ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்; கோயம்
புத்தூர் நூற்பு நெசவாலை, கோயம்புத்தூர், காளீஸ்வரா ஆலை, கோயம்
புத்தூர் ஆகிய ஆலைகளும் அடங்கும்.

(2) இம் மாநிலத்தில் நிதி வசதி சீராக இராத / மூடப்பட்ட ஆலை
களைப் பற்றி ஆய்வு நடத்தவும், அவற்றை மீண்டும் திறப்பதற்கான வழி
வகைகளைக் பரிந்துரைக்கவும் டாக்டர் பி. எஸ். லோகநாதன் தலைமையில்
இந்த அரசால் அமைக்கப்பட்ட முக்கூட்டுக் குழுவினர், இந்த மூன்று ஆலை
களைப் பற்றிக் கருதிப் பார்த்து, இவ்வாலைகளுக்கு அரசு உத்திரவாத உதவி
அளிக்கலாம் என்று பரிந்துரைத்தது.

(3) சோமசுந்திரம் ஆலை தங்கள் ஆலையின் சார்பாக, மைசூர்
ஸ்டேட் வங்கிக்கும், தென்னிந்திய வங்கி லிமிடெட்டுக்கும், அல்லது
ஸ்டேட் வங்கிக்கு அல்லது தென்னிந்திய வங்கிக்கு அரசாங்க உத்தர
வாதம் அளிக்கப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தது. இந்த
ஆலைக்குக் கடன் கொடுக்கக் கொள்கையளவில் தென்னிந்திய வங்கி லிமி
டெட் ஒப்புக்கொண்டது. இவ்வாலையின் முக்கிய வங்கியாகிய மைசூர் ஸ்டேட்
வங்கி அரசாங்க உத்தரவாதம் அளிப்பதாயின் தாங்கள் கடன் வழங்கக்
கருதக் கூடும் என்று தெரிவித்தது. அவ்வண்ணமே, மைசூர் ஸ்டேட்
வங்கியிடமிருந்தும் தென்னிந்திய வங்கியிடமிருந்தும் அல்லது மைசூர்
ஸ்டேட் வங்கியிடமிருந்து அல்லது தென்னிந்திய வங்கியிடமிருந்து பெறக்
கூடிய ரூ.25 லட்சத்தை ஆலை திருப்பித் கொடுப்பதற்கு உத்திரவாத மளித்து
ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, இவ்வாலைக்குத்
தங்களால் கடன் வழங்க இயலாதெனத் தென்னிந்திய வங்கி கூறிவிட்டது
என்று ஆலை தெரிவித்துள்ளது. எனவே, இவ்வாலை, திருவாளர்கள்
சிண்டிகேட் வங்கி லிமிடெட், சில நிபந்தனைகளுக்குட்பட்டு கடனளிக்க
விரும்புவதெனத் தெரிவித்திருப்பதால், தென்னிந்திய வங்கிக்குப் பதி
லாக, சிண்டிகேட் வங்கியின் பெயரை அமைத்துக் கொள்ளுமாறு இந்த
அரசினை ஆலை வேண்டிக்கொண்டது. இவ்வேண்டுகோள் ஆய்வில் உள்ளது.

(4) கோயம்புத்தூர் நூற்பு—நெசவாலையைப் பொறுத்தவரையில்
ஆலை இயக்குநர் திரு. பழனியப்ப செட்டியார் கடனுக்காகத் தாம் சொந்த
மாக உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்றும் நிபந்தனைக்குட்பட்டு, வணிக
வங்கி எதனிடமிருந்தேனும் இந்த ஆலை பெறக்கூடிய ரூ. 24 லட்சம்
கடன் திருப்பிக் செலுத்தப்படுவதற்கு உத்திரவாதமளிக்கத் தயாரா
யிருப்பதாக அரசு தெரிவித்துள்ளது.





(5) ஆந்திரா வங்கிக்கு அரசாங்க உத்தரவாதம் அளிக்கப்படலாம் என்று காளீஸ்வரர் ஆலை வேண்டிக் கொண்டது. அவ்வண்ணமே, அரசாங்க உத்தரவாதத்தின் மீது ஆந்திரா வங்கி வழங்கும் ரூ. 25 லட்சம் கடனை இவ்வாலை திருப்பிச் செலுத்துவதற்கு உத்தரவாதமளித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(6) இந்த வங்கிகள், இந்திய ரிசர்வ் வங்கி விதிக்கும் விதிமுறை-நிபந்தனைகள் பின்பற்றப்படுகின்றனவா வென்று மனநிறைவு கொண்ட பிறகு சம்பந்தப்பட்ட ஆலைகளுக்குக் கடன் வழங்க ஒப்புக் கொள்கின்றன.

அரசு உத்தரவாதமளித்த சில ஆலைகள் வேலை செய்வதை நிறுத்தி விட்டதை முன்னிட்டு, அரசு உத்தரவாதத்தின் பேரில் கடன் வழங்கு முன்பு வங்கிகள் ஆலை நிலை குறித்து முழுவதும் அறிந்து கொள்ள விரும்புகின்றன.

(7) கோயம்புத்தூர் நூற்பு-நெசவாலையைப் பொறுத்தவரையில் வங்கிகள் அதற்குக் கடன் வழங்குவதற்கு முன் அவ் வாலையைக் கலைத்து விடுவதற்கான மனுக்கள் திரும்பப் பெறப்படுவதை அவை எதிர்நோக்கி யுள்ளன.

(8) இந்த மூன்று ஆலைகளும் வணிக வங்கிகளிடமிருந்து விரைவிலேயே கடன் பெற இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, சர்க்கார் கொடுத்திருக்கிற அந்த நிபந்தனைகளில் சில மாற்றம் செய்தால் அந்த வங்கிகள் மீண்டும் கடன் கொடுக்க முன்வந்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அவற்றைப் பற்றி பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை ஜில்லாவில் பாதிக்கப்பட்ட 18,000 தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பங்கு தொழிலாளர்கள் இந்த மூன்று மில்களிலும் வேலை செய்பவர்கள். இந்த வங்கிகள் மூலமாக இந்த மில்களுக்குக் கடன் கிடைப்பதன் மூலம் இந்த மூன்று மில்களும் பாதுகாக்கப்படும். ஆகவே, சர்க்காருக்கு இருக்கிற பெரும்பளு அதனால் குறையும். அதைச் செய்வதற்கு அரசு முன்வருமா ?

பதினெட்டு மாதங்களாக மத்திய சர்க்காரை எதிர்பார்த்தும் எந்த விதமான உதவியும் கிடைக்கவில்லை. அதேசமயத்தில் ஒரு புதிய கருத்தை, அதாவது பலவீனமான மில்களை பலமுள்ள மில்கள் எடுத்து நடத்தலாம் என்ற யோசனையும் தெரிவிக்கப்பட்டது. இதில் பல்வேறு சட்ட சம்பந்தமான சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே அரசே இந்த மில்களை எடுத்து நடத்த தைரியமாக முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் பல கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள். வங்கிகளைப் பொறுத்த மட்டில், அவர்கள் எந்த வங்கியில் பணம் பெறுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்கிறார்களோ, அதற்கு நம்முடைய ஒத்துழைப்பைத் தருகிறோம், அந்தப் பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அந்தப் பொறுப்பை ஏற்று அந்த வங்கிகள் கடன் கொடுப்பதற்கு முன்னால், அந்த ஆலைகள் ஓடுமா என்று பரிசீலித்து, கொடுக்கப்பட்ட பணம் திரும்பி வருமா என்று நிதானித்துப் பிறகு தான் கொடுக்க முன் வருகின்றன. அதிலே பல சங்கடங்கள் வருகின்றன. சில ஆலைகள் ஓட்டப்பட முடியாத நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஆலைகளுக்கு எந்த வங்கியும் கடன் கொடுக்க முன்வர மாட்டேன் என்று சொல்லும்பொழுது, அசராங்கம் பொறுப்பு கொடுத்தும், கொடுத்த பணத்திற்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்று வங்கிகள் கடன் கொடுக்க முன்வரவில்லை. அப்படி வங்கிகள் கடன் கொடுக்க முன்வரவில்லை என்றால், அரசாங்கம் கொடுக்கக்கூடிய பொறுப்பில் சில மாற்றங்கள் செய்தால் அந்த வங்கிகள் கடன் கொடுக்க முன்வருமா என்றால், என்ன மாற்றம் என்பதைச் சொல்லியிருந்தால்

[திரு. செ. மாதவன்] [1969 மார்ச் 1

உண்மை புலப்படும். உண்மை என்னவென்றால், நாம் போடுகின்ற நிபந்தனை அந்த முதலாளி கடன் தொகையை செலுத்த இயலாது முறை தவறினால் தான், அதற்குப் பின்னரும் வங்கிகள் அவரிடம் வரவேண்டும் என்று சொல்கிறோம். அப்படிச் சொல்வதற்குக் காரணம், அரசாங்கம் இருக்கிறதே நாம் கவலைப்பட வேண்டியதில்லை என்று எண்ணி அந்த வங்கிகள் விட்டுவிடாமல் நடவடிக்கை எடுப்பதற்கு சில கண்டிஷன்ஸ் போட்டிருக்கிறோம். பொது மக்களுடைய பணத்திற்கு நல்ல பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் அப்படிப்பட்ட கண்டிஷன்ஸ் போடப்பட்டிருக்கின்றன. அதை எடுத்துவிட்டால் ஆபத்து. கனம் அங் கத்தினருக்குள்ள முக்கியமான கவலை காளீஸ்வரா மில்ஸ் பற்றி. அவர் களுக்கும் தெரியும். இந்த ஆபத்தில் அரசாங்கம் ஈடுபடுவதற்குமுன் கொஞ்சம் நிதானமாகச் செல்ல வேண்டும். வங்கிகளைப் பொறுத்த அளவில் எந்த வங்கி அவர்களுக்குக் கடன் கொடுக்க வருகிறதோ, அதற்கு அரசு பொறுப்புக் கொடுக்க முன்வந்து கொண்டிருக்கிறது. லீசுக்கு விடுவது, பலவீனமான மில்களை பலமுள்ள மில்கள் எடுத்து நடத்துவது என்பதெல்லாம் கொள்கைப் பிரச்னை. இந்தக் கொள்கை பிரச்னையைப் பற்றி மத்திய அரசு அமைச்சர் திரு. மனுபாய்ஷா ஒரு அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார். அந்த அறிக்கையின் மீது நம்முடைய கருத்துக்களையும் சொல்லியிருக்கிறோம். அதிலே வருமான வரி கஷ்டம் இருக்கிறது, நம்முடைய விற்பனை வரி கஷ்டம் இருக்கிறது. இந்த இரண்டையும் பரிசீலித்து, அப்படி எடுக்கக்கூடிய ஆலைகளுக்கு இந்த வரிகளிலிருந்து விலக்குக் கொடுக்க முடியுமா என்பதைப் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம் என்று நாம் சொல்லிருக்கிறோம். இவைகளையெல்லாம் அரசாங்கம் கவனத்தில் கொண்டு செயல்பட்டுவருகிறது.

## 3. 1969–70-ம் ஆண்டிற்கான நிதி கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர் மானத்தை நான் முன்மொழிகிறேன் :

"கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்" என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,97,01,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss policy I move the Cut motion standing in my name—

"That the allotment of Rs. 6,97,01,600 under Demand No. 25 Welfare of the Scheduled Tribes, Castes and Other Backward Classes — be reduced by Rs. 100.

**திரு. எஸ். பரமசிவம் :** தலைவர் அவர்களே, பழங்குடி மக்கள், அரிசனங்கள் ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்" என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 6, 97,01,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழி கிறேன்.



1969 மார்ச் 13]

**திரு. சோ. அழகிரிசாமி :** தலைவர் அவர்களே வீட்டு மனை இல்லாத எல்லா அரிசனங்களுக்கும் ஒரு வருடத்தில் வீட்டு மனைகள் வழங்க நட வடிக்கை எடுக்க வேண்டியது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்" என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 6,97,01,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழி கிறேன்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, அரிசனங்கள் குடியிருக்கும் இடங்களுக்கு நடைபாதை, குடி தண்ணீர், மின் விளக்குகள் போட்டுக் கொடுக்காதது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள் ஏனைய பின் தங்கிய வகுப்பினர் நலன்" என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 6,97,01,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழி கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு இன்னும் மனைக்கட்டுகள் பாதை வசதிகள், சுடுகாடு போன்றவைகள் பெரும்பாலானவர்களுக்குச் செய்து கொடுக்கப்படவில்லை என்பது பற்றி விவாதிக்க—

I move :—

"That the allotment of Rs. 6,97,01,600 under Demand No. 25—Welfare of the Scheduled Tribes, Castes and Other Backward Classes—be reduced by Rs. 100."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மான்யக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு விடப்படுகின்றன.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து :** தலைவர் அவர் களே, அரிசன மக்கள், பழங்குடி மக்கள் இவர்கள் மீது நீங்காப் பற்று வைத்து, இந்த மக்களது வாழ்வின் உயர்வுக்காக தனது அரசியல் வாழ் வைத் தொடங்கி, இறுதி வரையிலும், இறுதி மூச்சு வரையிலும் அவர் களது உயர்வுக்காகப் பாடுபட்டு, அவர்களுக்கு உயர்வைத் தருகின்ற ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுவிட்ட பிறகு, அவரை நம்பியிருந்த மக்களுக்கெல்லாம் நல்வாழ்வு தருகிற நேரத்தில், இந்த மக்களையெல்லாம் பிரிந்துசென்ற நமது மாண்புமிகு முன்னாள் முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில் இருக்கவில்லையே என்று தான் இந்த மானியக் கோரிக்கையை இந்த அவையின் முன் வைப்பதற்கு முன்னால் நான் மெத்தவும் வேதனைப்படுகிறேன்.

காலம் அதிகமாக இல்லாத காரணத்தினால் நான் முன்கூட்டியே விளக்கவுரை† தந்திருக்கிறேன். அந்த விளக்க உரையையே என்னுடைய கொள்கை உரையாக ஏற்கனவே மன்ற உறுப்பினர்களுக்கு நான் அளித்திருக்கிறேன். அதிலே கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கங்களை யெல்லாம் ஏற்கனவே உறுப்பினர்கள் படித்திருப்பார்கள் என்று நான் கருது கிறேன். அவர்கள் தங்களுடைய நல்ல கருத்துக்களையும் ஆலோசனைகளை யும் எடுத்துக் கூறி, இந்த மானியக் கோரிக்கையை வெற்றிபெறச் செய்யு மாறு கேட்டுக்கொள்வதோடு, இந்த விளக்க உரையையே அரசாங்கத்தின் பதிவேட்டிலும் எனது முன்னுரையாக பதித்துக்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

† 622-659-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 23 உறுப்பினர்கள் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அலுவல் ஆய்வுக் குழுவில் ஒவ்வொரு கட்சிக்கும் இவ்வளவு நேரம் என்று ஒதுக்குவது என்றும், அந்த நேரத்தை அந்தக் கட்சியிலிருந்து பேசுகிற உறுப்பினர்கள் பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்றும் ஏற்பாடு. தி.மு.க. சார்பில் 13 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கட்சிக்கு 40 நிமிடங்கள் தான் கிடைக்கும். 13 உறுப்பினர்கள் 40 நிமிடங்களைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் ஒரு உறுப்பினருக்கு 3 நிமிடங்கள் தான் கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்று பேசும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொடுக்க வேண்டும் அல்லது, 13 உறுப்பினர்களும் இந்த நேரத்தை பங்கிட்டுக்கொள்ள வேண்டும். கட்சிக் கொறடா அவர்கள் மறுபடியும் இது பற்றி யோசித்து வேறு பட்டியல் கொடுத்தால் கூட நல்லது.

**திரு. எம். கோபால் :** தலைவர் அவர்களே, இந்த மானியம் மிக முக்கியமானது. இது பல ஆண்டுகாலமாக, பல நூற்றுண்டுக் காலமாகப் பேசப்பட்டு வரும் விஷயம். அரிசன மக்களுக்கு நல்லது செய்ய என்பதற் காகப் பேசி வருகிறோம். ஆகவே, இந்த மானியத்தின் பேரிலே விவாதத்தை பிற்பகலும் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைப் பற்றி கட்சித் தலைவர்கள் பேசி முடிவு எடுக்க வேண்டும்.

***திரு. எஸ். சிவசுப்பிரமணியம் :** சபாநாயகர் அவர்களே, 1969-70 ஆண்டில் நம்முடைய அரிசனநல இலாகா அமைச்சர் கொண்டு வந்திருக்கும் இந்த மானியத்தின் பேரில் எங்களுடைய கட்சியில் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வந்திருக்கிறேன்.

இருபது ஆண்டுகாலமாக, காங்கிரஸ் கட்சியானது இந்த நாட்டை ஆண்டு வந்திருக்கிறது. இந்த இருபது ஆண்டுகாலமாக அரிசன மக்கள் நல்ல முறையிலே சந்தோஷமான முறையில் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதையும் கண்ணால் கண்டோம். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகமானது, கழக ஆட்சியானது இந்த இரண்டு ஆண்டு காலமாக ஆண்டு வந்திருக்கிறது. இந்த இரண்டு ஆண்டு காலத்தில் நாங்கள் படும்பாடு, அரிசன மக்கள் படும்பாடு எந்தப் பக்கம் திரும்பினாலும், சண்டை, அரிசனங்களுக்கு அடி, உதை என்பதைத்தான் நாம் காண்கிறோம். வேதனைப் படுகிறோம். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், இது அரிசன மக்கள் சார்பில், அந்த மக்களுடைய நலனுக்காக அவர்கள் சார்பில் நடக்கும் மானியக் கோரிக்கை. எங்கள் சமூகத்தைச் சேர்ந்த அமைச்சர் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே தான் சொல்லு கிறேன். இந்த இரண்டு ஆண்டுச் சாதனை என்ன ? எங்களால் இதை மறக்க முடியவில்லை. இருபது ஆண்டுக் காலத்தில் நடந்த நன்மைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த இரண்டு ஆண்டுச் சாதனை மறக்க முடியாததாக இருக்கிறது. அந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்லப் போனால், எல்லோரும் பேசினார்கள். எல்லாக் கட்சிக்காரர்களும் பேசினார்கள். எல்லோரும் பேசிய நேரத்தில் கேலிச் சிரிப்பாகச் சொல்லப்பட்டது என்ன? கீழ் வெண்மணிச் சம்பவம். ஒரு அங்கத்தினர் கூறினார், கீழ் வெண்மணிச் சம்பவத்தில் காங்கிரஸ் காரர்கள், சுதந்திராக்காரர்கள், சம்பந்தப்பட்டார்கள் என்று சொல்லு கிறார். திராவிட முன்னேற்றக் கட்சிக்குச் சம்பந்தம் இல்லை என்று சொல்லு கிறார். அதையெல்லாம் விடுங்கள். யாராக இருந்தால் என்ன ? பட்டது யார் ? ஜாதி இந்துக்கள்தானே காரணம் ? மூன்று கட்சிக்காரர்களும், காங்கிரஸாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, சுதந்திராவாக இருந்தாலும் சரி, யாராக இருந்தால் என்ன ? அடி பட்டவர்கள், எரிக்கப்பட்டவர்கள் யார், கொளுத்தப்பட்டவர் கள் யார் ? அரிசனங்கள் தானே ? இதிலே இவர்கள் போட்டி போட்டுக் கொள்ளுகிறார்கள். கேவலமான விஷயம், அதைச் சொல்லுகிறேன்.



காங்கிரஸ் செய்தது, திராவிட முன்னேற்றக் கழகம் செய்தது, சுதந்திரா செய்தது எப்படி இருந்தால் என்ன ? யாராக இருந்தாலும், 43 பேர்கள் அரிசனங்கள் கொளுத்தப்பட்டார்கள். எரிக்கப்பட்டார்கள். இதை சாதி இந்துக்கள் செய்தார்கள். எங்கேனும் கேட்டதுண்டா ? எங்கேயாவது ஒரு வார்த்தை இருக்கிறதா ? இந்த 43 பேர்களும் யார் ? வாழ்க்கை வசதி அற்று, ஏழை எளிய மக்கள். பட்டப் பகலிலே பகற்பொழுதில் கொளுத்தி யிருக்கிறார்கள். அதிலே இவர்களா, இதிலே அவர்களா என்பது வாதம். மொத்தமாக யாரானாலும், சாதி இந்துக்கள் தானே ? காங்கிரஸ் காரர்களிடத்தில் நியாயம் கிடைக்காவிட்டால், விட்டு விடுவோமா ? எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, பட்டவர்கள் அரிசன மக்கள்தான். திராவிட முன்னேற்றக் கட்சிக்கு சம்பந்தம் இல்லை என்று அந்தக் கட்சிக்காரர் சொல்லுகிறார். ஆகவே, கொளுத்தப்பட்டவர்கள் அரிசன மக்கள்தான். ஆகவே, கீழ் வெண்மணியில் 43 அரிசன மக்கள் உயிரோடு கொளுத்தப் பட்டார்கள். அதே நேரத்தில், நாகர்கோயிலில் கிட்டு என்பவர் கொலை செய்யப்பட்டார். உண்மை தான். கேஸ் இருக்கிறது. அப்படி ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்பதற்காக மந்திரிமார்கள் கூடி பெரிய மௌன ஊர்வலம் நடத்தி, கண்டனக் கூட்டம் போட்டார்கள். இங்கே 43 பேர்கள் எரித்துக் கொளுத்தப்பட்டார்களே, என்ன கண்டனம் செய்தார் கள் ? எங்கேனும் மௌன ஊர்வலம் உண்டா ? அதுதான் அந்த இருபது ஆண்டு காலத்திற்கும், இந்த இரண்டு ஆண்டு காலத்திற்கும் இருக்கும் வேற்றுமை.

இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஹரிஜனங்கள் படும்பாடு என்ன என்பதைத் தெரிந்துக் கொண்டிருக்கிறார்கள். கேட்டது ஆறு லிட்டர் ; கூலி ஆறு லிட்டர் ; ஆறே லிட்டர் ; ஆறு லிட்டர் கூலி ; அளந்து பார்த்தால் எவ்வளவு இருக்கும் ? அது தினக்கூலி ; கேட்பது யார், அரிசனக் கூலி ; கேட்டவன் பள்ளன், பறையன். அவர்கள் குடும்பம் எத்தனை பேர்கள் ? பெரிய குடும்பம் ; ஒரு ஆள் சம்பாதிக்கிறான். ஆறு லிட்டர் கூலி கேட்டதைக் கொடுக்க மறுத்து, மிராசுதார் வர்க்கம், அவர்களை அடித்து, அடைத்துக் கொளுத்தியிருக்கிறது. இதற்கு மந்திரிமார்கள் என்ன செய்தார்கள் ? உங்கள் கூட்டணியைச் சேர்ந்த ஒருவர், முதல் அமைச்சருக்குத் தந்தி கொடுத்தேன். கல்வி அமைச்சருக்குக் கடிதம் போட்டேன். அந்த அமைச்சருக்குச் சொன்னேன், இந்த அமைச்சருக்குச் சொன்னேன், எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று சொன்னார் ; உங்கள் கூட்டணியைச் சேர்ந்த நண்பர் ஒருவர் சொல்லு கிறார். நான் கேட்கிறேன், என்ன செய்தீர்கள் ?

அது மாத்திரமல்ல, அதே கூட்டணியைச் சேர்ந்தவர் சொல்லுகிறார், ஏராளமான துப்பாக்கிகள் அங்கே இருக்கின்றன, குண்டுகள் இருக்கின்றன. ட்ராக்டர்கள் இருக்கின்றன என்று. அவ்வளவும் ஏழை அரிசன மக்களைக் கொல்லுவதற்காகவா என்ற சந்தேகம் இருக்கிறது என்று உங்கள் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். நான் கேட்கிறேன், இவைகளெல்லாம், அரிசன மக்களைக் கொல்வதற்காகவே தான் ? இந்தத் துப்பாக்கிகளும், பீரங்கிகளும், ட்ராக்டர்களும் இருப்பது, இந்தச் சமுதாயத்தைக் கொல்லுவதற்காகவேதான். இந்த ஆட்சியைப் பற்றி சந்தேகப்படுகிறார்கள். ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ? கூட்டணியைச் சேர்ந்தவர் சொன்னாரே, அதைக் கண்டு பிடித்து, ஸி.ஐ.டி.யை போட்டு என்ன நடவடுக்கை எடுத்தீர்கள் ? இதுவரையிலும் எதையும் செய்ய வில்லையே, எதையும் சொல்லவில்லையே, ஏன் என்று கேட்கிறேன்?

வேதனையோடு கேட்கிறேன். இந்தச் சமுதாயத்தினர் செய்த குற்றம் என்ன ? கூலி கேட்டார்கள். இன்றைக்குத் தொழிலாளிகளுடைய கூலி என்ன ? தொழில் நிறுவனங்களில் கூலிகள் என்ன ? சம்பளம் என்ன? போனஸ் எவ்வளவு ? எவ்வளவு நாட்கள் வேலை செய்கிறார்கள் ? ஆனால், இந்த விவசாயத் தொழிலாளர்கள், ஒரு வருஷத்திலே மூன்று மாதத்திற்கு மேல் வேலை கிடையாது. கேட்கப்பட்ட ஆறு லிட்டர் கூலியை, மூன்று மாதத்தில் சம்பாதித்து, ஒன்பது மாதம் சும்மா இருக்கிறான். இந்த நாட்களுக்குக் கூலி கேட்டதற்கு, ஆறு லிட்டர் கேட்ட தற்கு, என்ன செய்தார்கள் ? உயிரோடு கொளுத்தி, குடிசைக்கு நெருப்பு

வைத்து, பெண்கள், குழந்தைகள் கொளுத்தப்பட்டிருக்கிறார்கள்; வயது வந்த பெண்கள், கல்யாணம் ஆகாத பெண்கள் கொளுத்தப்பட்டிருக்கிறார்கள். இருபது ஆண்டு காலத்திலே இந்த விதமான நிலைமைகளைப் பார்த்தோமா? இந்த ஆட்சியில் பார்த்தோம். உலகத்திலேயே எங்கேயும் இடையாது. கேட்டதுண்டா? 43 பேர்களை, அரிசன மக்களை, தாழ்த்தப்பட்ட மக்களை, உயிரோடு கொளுத்தினது இந்த நாட்டில்தான். நம்முடைய தமிழ் நாட்டில், முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் நடந்திருக்கிறது என்பதை வேதனையோடு சொல்ல வேண்டியிருக்கிறது. செத்தது அரிசன மக்கள். எதற்காக, ஆறு லிட்டர் கூலி கேட்டதற்கு, ஆறே லிட்டர் கூலி கேட்டார்கள். போகட்டும், உங்களுடைய திட்டம் என்ன? விவசாயக் கூலிகளுக்கு நிரந்தரமாகக் கூலியைக் கொடுக்க வேண்டிய நிலைகளை உண்டாக்க, இந்தச் சட்டசபையில் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலம் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்பு. நான் நினைத்தேன், புது ஆட்சி வந்திருக்கிறது. இருபது வருஷம் காங்கிரஸ் ஆட்சி செய்தது, என்னென்னவோ செய்தார்கள், மனைக்கட்டு கொடுத்தார்கள், வீடு கட்டிக் கொடுத்தார்கள், குளம் வெட்டிக் கொடுத்தார்கள், கிணறு வெட்டிக் கொடுத்தார்கள். ஆனாலும், இவையெல்லாம் பொதுவாக இருந்தாலும், தீண்டாமை ஒழியவில்லை. புதிதாக வந்திருக்கும் ஆட்சி ஒருக்கால், நிச்சயமாக ஏதேனும் திட்டம் கொடுப்பார்கள் என்று நினைத்திருந்தேன். ஆனால், ஒன்றும் இல்லை. உங்கள் கட்சியில் என்ன திட்டம் இருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலம் அமைச்சரவையைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தீண்டாமை ஒழிப்பிற்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? எங்கு பார்த்தாலும் தீண்டாமை இருந்துகொண்டே இருக்கிறது. மறைந்த முதல் அமைச்சர் இருந்த காலத்தில் நான் சொன்னேன், பல இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடியைப் போட்டுக்கொண்டு, எம்.ஜி.ஆர்., அண்ணா இவர்களுடைய படங்களை வைத்துக் கொண்டு, டீ கடைகளில் அரிசனங்களை உள்ளே விடுவதில்லை என்று. அமைச்சர் நேரில் வந்தால் என்னால் அதைக் காட்ட முடியும். ஆனால், அதன்பேரில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

தீண்டாமை ஒழிப்புக்கு அரிசன வெல்பேர் ஆபீசர் மட்டும் போதாது. அவரால் அதைச் செய்ய முடியாது. போலீஸ்காரர்களுக்கு ஒரு சரியான சட்டம் இபற்றிக் கொடுக்க வேண்டும், அப்படிச் சட்டத்தைக் கொடுங்கள். எப்படி மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் இத்தனை குற்றங்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்கிற முறை இருக்கிறதோ, அதே போல, தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் இத்தனை கேஸ் காட்டாவிட்டால், சம்பளம் ரெட்யூஸ் செய்யப்படும், உத்தியோகம் கீழே போகும் என்று ஒரு சட்டத்தைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

முற்பகல் 10-30 தீண்டாமை ஒழிப்பிற்காக 1967–68-ம் ஆண்டில் ரூ. 19,28,029 ஒதுக்கப்பட்டிருந்தது, இந்தத் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில்தான். ஆனால் 1969–70-ல் 16,85,000 ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். சுமார் இரண்டு லட்சத்து நாற்பத்திமூவாயிரம் ரூபாய் சென்ற ஆண்டை விடக் குறைக்கப்பட்டிருக்கிறது. அரிசன மக்களுக்கு என்ன வாழ்வு வந்துவிட்டது, குறைந்ததற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. ஆகவே, அரிசன மக்களுக்கு ஒதுக்கப்படும் தொகையைக் குறைக்கக் கூடாது. மேலும் அதிகமாகத் தர வேண்டும் என்று சபாநாயகர் மூலமாக அமைச்சரவையைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மதிய உணவுத் திட்டம் போதுமான அளவுக்கு அதிகப்படுத்தப்படவில்லை. மதிய உணவு கொடுத்தால்தான் குழந்தைகள் பள்ளிக்கூடம் போகிறார்கள். மதிய உணவுத் திட்டத்திற்கு உதவித் தொகையை அதிகப்படுத்தினால் குழந்தைகள் படிக்கவும், பள்ளிக்கூடம் செல்வதற்கும் வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக, அரிசனங்கள் கீழ்வெண்மணியில் கொளுத்தப்பட்டது பற்றி எல்லோரும் பேசிவிட்டார்கள். இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு இராமமூர்த்தி அவர்களும், "இந்த அரசாங்கத்தினுடைய நிலை சரியானது அல்ல, சரியான நடவடிக்கை எடுக்கவில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். கீழ்வெண்மணி விஷயமாக கைது செய்யப்பட்டவர்களையெல்லாம் தற்பொழுது ஜாமீனில் விட்டுவிட்டார்கள். ஓர் உறுப்பினர் பேசும்பொழுது, "நம்முடைய அரசாங்கத்திற்கும் கீழ்வெண்மணி சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை" என்று சொல்கிறார். அப்படியானால், "கீழ்வெண்மணியில் நடந்த 43 கொலைக்கும் உங்களுக்கும் சம்பந்தமில்லையா? கீழ்வெண்மணியில், பெண்கள், குழந்தைகள் செத்தார்களே, அதற்கும் உங்களுக்கும் சம்பந்தமில்லையா?" என்று நான் கேட்க விரும்புகிறேன். சம்பந்தமில்லை என்று அந்த உறுப்பினர் சொன்னதை நான் மறுக்கிறேன். அவர் அப்படிச் சொல்லக் கூடாது. இன்னொரு உறுப்பினர் "நான் இந்த விஷயத்தைப்பற்றித் தந்திகொடுத்தேன், நேரிலே சொன்னேன்" என்று சொல்கிறார். எப்படி சம்பந்தமில்லையென்று உறுப்பினர் சொல்லுகிறார். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று சபாநாயகர் மூலமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலூர் தாலுகாவிலே கோண்டூர் என்ற கிராமம் இருக்கிறது. அங்கு அரிசன மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் சாமி தூக்கிக் கொண்டு சாவடி கிராமத்திற்குப் போயிருக்கிறார்கள். சாவடி கிராமம் சாதி இந்துக்கள் வசிக்கிற கிராமமாகும். அப்படி அரிசனங்கள் சாமி தூக்கிக் கொண்டு போகும்போது சாவடி கிராமத்திற்கு அருகில் அவர்களை மடக்கி கேட் பணம் (சுங்கப் பணம்) கேட்டிருக்கிறார்கள். சாமிதானே தூக்கிக் கொண்டு போகிறோம் என்று அரிசனங்கள் சொல்லியிருக்கிறார்கள். ஜாதி இந்துக்கள் பணம் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தவே, நான்கு அணா கொடுத்துவிட்டு, சாமி தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள். பிறகு திரும்பி வரும்போது அரிசனங்களை அடித்துவிட்டார்கள். அரிசனங்கள் வெட்டப்பட்டார்கள். அடிபட்டவர்கள் மீது போலீஸ் கேஸ் போடப்பட்டிருக்கிறது. அடித்தவர்களை இன்னும் கண்டுபிடிக்கவில்லை. அரசாங்கம் இதில் தீவிரமாகக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் காலேஜ் ஹாஸ்டல்களில் படிக்கும் அரிசன மாணவர்களுக்காகும் சாப்பாட்டுச் செலவு, மற்ற ஜாதிப் பிள்ளைகள் சாப்பிடும் அளவுக்கு ஆகும் செலவாக இருந்தபோதிலும் அதை அரசாங்கமே ஏற்றுக் கொண்டது. மற்ற ஜாதிப் பிள்ளைகளுக்கு எவ்வளவு தொகை ஆகிறதோ, அந்தத் தொகையையே அரிசன மாணவர்களுக்கும் கொடுத்து வந்தார்கள். இப்போது அரிசன மாணவர்களுக்கு ஒரு தொகை—400 ரூபாய்—என்று ஒதுக்கிவிட்டு, அதற்குமேலே ஒரு பைசாவும் கொடுக்க முடியாது. அதற்கு மேலே போனால் நீங்களே தான் கொடுக்க வேண்டும் என்று இப்போது சொல்லப்படுகிறது. ஆகவே, அரசாங்கம் அரிசன மாணவர்களுக்காகும் அதிகப்படியான சாப்பாட்டுச் செலவுத் தொகையை ஏற்றுக்கொள்ள வேண்டும், (மணியடிக்கப்பட்டது).

எனக்கு கொஞ்சநேரம் அதிகமாகக் கொடுங்கள். என் கட்சியின் சார்பில் நான்தான் முதலாவதாகப் பேசுகிறேன். போன தடவை நீங்கள் எல்லாம் எதிர்க் கட்சியில் இருந்தபொழுது உங்களுக்கு அதிகமான நேரத்தைக் கொடுத்தார்கள். இந்த விஷயம் கனம் சபாநாயகர் அவர்களுக்குத் தெரியும்.

தவிர, ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதெல்லாம் தற்போது டைரக்டர் ஆஃப் அரிசன் வெல்பேர் ஆபீசிலிருந்து ஜில்லாவுக்குப் போகப் போவதாகக் கேள்விப்படுகிறேன். ஜில்லாவுக்குப் போனால் அங்கே விண்ணப்பங்கள் எல்லாம் சரியான முறையில் பைசலாகாது. இந்த அலுவலகம் இங்கே இருப்பதால் நேரில் சென்று, விவரங்கள் அறியலாம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஜில்லாவுக்கு மாற்றப்பட்டால், எம். எல். ஏ. போய்க் கேட்பதற்கு வசதியிருக்காது. சென்னையிலே, சேப்பாக்கத்தில் எழிலகத்தில்

இருப்பதால் விவரம் தேவை யென்றால், போய டைரக்டரைப் பார்க்கலாம், ஸ்பெஷல் ஆபீஸரைப் பார்க்கலாம், இவர் எங்கள் தொகுதியைச் சேர்ந்தவர், இவருக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கலாம் என்று சிபார்சு செய்ய முடியும். ஆகவே, அரசாங்கம் இதைக் கொஞ்சம் மனதில் வைத்துப் பார்க்க வேண்டும். மற்றப்படி இது மாற்றப்பட்டால், இன்றைல் எத்தனையோ மசால்ஜிகள், அட்டெண்டர்கள், ப்யூன்கள், கிளார்க்குகள், சூப்பிரண்டெண்டுகள் வேலையிழக்க நேரிடும். அப்போது வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். ஆகவே, இதை மாற்றக் கூடாது என்பதை சபாநாயகர் மூலமாக அமைச்சரவைக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த நாட்டிலே தலையாரி, தோட்டி போன்றவர்கள் செய்த பாவம் என்ன என்று தெரியவில்லை. ஓர் ஊர் என்றால் அங்கே தலையாரி, தோட்டி தவிர மற்றவர்கள் எல்லாம் மற்ற ஜாதிக்காரர்கள். தாழ்ந்தவன் என்ற காரணத்திற்காக அவன் வேலையிலிருந்து நீக்கப்படுகிறான். தென்னார்க்காடு மாவட்டத்திலே நான்கு தோட்டிகள் இருந்ததால் இரண்டு தோட்டிகளை எடுத்து விட்டார்கள். மற்றவர்களைவிட இவன் வாங்கும் சம்பளம் மிகக் குறைவு. சர்க்கார் சட்டம் அப்படியிருக்கிறது. மணியக்காரர் இருக்கிறார், கணக்கப்பிள்ளை இருக்கிறார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் இருக்கிறார், ஆனால், தோட்டி, தலையாரிகள் தலையிலேதான் கைவைத்து வேலையிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். நான்கு தோட்டிகள் வாங்குகிற சம்பளம் என்ன ? மற்றவர்களில் ஒருவர் வாங்கும் சம்பளம் என்ன என்பதைக் காண வேண்டும். அப்படியும், மணியக்காரரும், கணக்கப்பிள்ளையும் சம்பளம் என்று பார்த்துக் கொடுத்தால்தான் உண்டு. அவன் வாழக் கூடாதா ? இந்த அமைச்சரவை இதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக,பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் அரிசன ஆசிரியர்களைப் போடுவதில்லை. பஞ்சாயத்து யூனியன் சேர்மேனைக் கேட்டால், எம்ப்ளாய்மெண்ட் ஆபீசிலிருந்து வரட்டும் என்கிறார், கமிஷனரைக் கேட்டால் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலிருந்து பெயர் வரட்டும், பிறகு போடுகிறேன் என்று சொல்லுகிறார். எம்ப்ளாய்மெண்ட் ஆபீசிலே ஒரு இடம் இருக்கிறதென்றால், குறைந்தது பத்து பேர்களையாவது அனுப்புவார்கள். நான் பஞ்சாயத்து சேர்மேனையே இது பற்றிக் கேட்டேன், "ஐயா, என்னிடத்தில் ஏராளமான அரிசனங்கள் வருகிறார்கள், ஏன், அரிசனங்கள் வாழக் கூடாதா ? பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் ஒரு அரிசன ஆசிரியரைப் போடக் கூடாதா"? என்று கேட்டேன். ஒரு இடத்திற்கு எம்ப்ளாய்மெண்ட் ஆபீசிலிருந்து ஏழெட்டுப் பேர்கள் வரும்போது எப்படி ஒருவருக்கு மேல் இடம் அளிக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. இந்த விஷயம் அமைச்சர் அவர்களுக்கு தெரிய வேண்டுமென்பதற்காக இதைக் குறிப்பிடுகிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ் ஸ்டேஷனிலே எங்களுடைய ஜாதி படுகிற பாடு ஆண்டவனுக்குத்தான் தெரியும். எல்லோரும்தான் குற்றம் செய்கிறார்கள். ஆனால், தாழ்ந்தவன், பறையன் என்ற காரணத்திற்காக, வாயிலே வந்தபடி, ஏகதேசமாக, நீ ஆதித்திராவிடன், பறையன் என்று போலீஸ் அதிகாரிகள் பேசுவதா ? சப்-இன்ஸ்பெக்டராக இருக்கட்டும், ஜில்லா சூப்பிரண்டென்டாக இருக்கட்டும், யாராக இருந்தாலும், அரிசன், பறையன் என்று பேசுகிறார்கள். இது அமைச்சரவை உணர வேண்டும்.

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கனம் உறுப்பினர் அவர்கள் மிகவும் ஆக்ரோஷத்துடன் பேசிவருகிறார்கள். "தாழ்த்தப்பட்ட மக்களைப் புண்படுத்தும் முறையில் பேசுகிறார்கள்" என்று உறுப்பினர் இப்போது பேசுகிறார். "இந்த அநீதியைப் பொறுக்க முடியாது, பொறுக்க முடியாது" என்று இப்போது பேசுகிறார். கனம் உறுப்பினர் அவர்கள் இப்படிப்பட்ட எத்தனை புகார்களை, எந்த அளவுக்கு இந்த அரசுக்குக் கொடுத்திருக்கிறார் என்று தெரிந்தால் நல்லது. அப்படிப் புகார் கொடுத்திருந்து நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் பதில் சொல்ல நியாயமிருக்கிறது. புகார் கொடுக்காமல், பொறுக்க முடியாது, பொறுக்க முடியாது என்று பேசிக் கொண்டே போனால் முறையாகாது. இதை நிரூபிக்க முடியாது.



**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, என் சார்பாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒவ்வொன்றுக்கும் புகார் கொடுக்க முடியாது. அப்படிக் கொடுத்தால் இந்த ஆட்சிக்கு அது அவமானம். (ஆளும் கட்சித் தரப்பில் குறுக்கீடு) இதற்கெல்லாம் நான் பயப்படவில்லை. இந்த மாதிரியான புகார்களை இங்கு சொல்லக் கூடாது என்றாவது சொல்லட்டும், அதை விட்டுவிட்டு, ஒவ்வொன்றுக்கும் எழுதிக் கொடுங்கள், எழுதிக் கொடுங்கள் என்று கேட்டால் முடியுமா ? அப்படி எழுதிக் கொடுக்க வேண்டுமென்றால், எழுதிக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அரிசன சமூகத்தைச் சேர்ந்தவர் அமைச்சராக இருந்து கொண்டிருக்கும் நேரத்தில் "சரி அப்படியா, நாங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கிறோம்" என்று சொன்னால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இது சாதாரண பிரச்சினையில்லை. அரிசன மக்கள் தாக்கப்படுகிறார்கள். மிகக் கேவலமாக கொடுமையான முறையில் நடத்தப்படுகிறார்கள் என்றால் அகில இந்தியா பூராவும் எதிரொலிக்கும் பிரச்னை. டெல்லி பாராளுமன்றத்தின் கவனத்தை ஈர்க்கக்கூடிய செய்தியாகும். டெல்லி பாராளுமன்றத்தின் கவனத்தை ஈர்த்து, பெரிய பிரச்னைகளைத் தோற்றுவிக்கக்கூடிய பிரச்சினையாகும். பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், அதுவும் அந்த சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் உள்ளம் நொந்து முறையிடுகிறார் என்றால், நிகழ்ச்சி நடைபெற்றவுடனே அவர் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்திருக்க வேண்டும். அதன் பிறகு அரசு சரியான முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை யென்றால், அதை இந்த மாமன்றத்தில் வலியுறுத்திச் சொல்ல அவருக்கு உரிமை உண்டு. இதுவரையில் அரசின் கவனத்திற்குக் கொண்டுவராத புகார்களை இந்த மாமன்றத்தில் பேசினால், அது அகில இந்தியாவின் டெல்லி பாராளுமன்றத்திலே ஒரு பெரிய பிரச்னையைத் தோற்றுவிக்கக்கூடிய சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் என்பதால், புகார்களை முதலில் எழுதிக் கொடுங்கள் என்று நான் குறிப்பிட்டேன். அப்படிப்பட்ட புகாரின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை யென்றால் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புகார்களை கொடுக்காத நேரத்தில் அதிகமாக இட்டுக்கட்டிப் பேசுவதாக அது அமையும் என்பதால் இந்த மாமன்றத்தில் அதை எழுப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.,

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அமைச்சர்களிடம் எங்களுடைய அனுபவத்தைக் கூட சொல்ல முடியாத நிலைமை இருக்கிறது. என்னுடைய தொகுதியில் கூட அரிசன மக்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். நான் இதைச் சொல்லப் போனால், "எழுதிக் கொடுங்கள்" என்று சொல்கிறார்கள். நாங்களும் பொறுப்புள்ளவர்கள்தானே சொல்கிறோம். எங்களுக்குப் பொறுப்பு இல்லையா ? ஒவ்வொன்றுக்கும் எழுதிக் கொடுங்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம் ? புகார் வருகிறது என்று சொல்லுகிறோம். அதற்கு "நாங்கள் பார்க்கிறோம், கவனிக்கிறோம்" என்று சொல்ல வேண்டும். அதை விட்டுவிட்டு எழுதிக் கொடுங்கள் என்றால், என்ன அர்த்தம் ? போலீஸ்காரர்கள் என்றால் தவறே செய்ய மாட்டார்களா ? எங்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. ஒரு புகார் வந்தால், எத்தனை மணிக்கு நடந்தது, எப்போது நடந்தது, ஏன் நடந்தது என்பவற்றை யெல்லாம் எழுதிக் கொடுங்கள் என்று சொன்னால் அது முடியாத காரியம்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போதே கொடுக்க வேண்டுமென்று கேட்கவில்லை. இது பற்றிய புகாரை முன்பும் அவர் கொடுத்ததில்லை. இனி மேலாவது கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் சொல்வதை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எங்கள் கவலை எல்லாம் உங்களுக்கு சக்தி அளிக்க வேண்டும், உங்கள் கரத்தை உயர்த்த வேண்டும் என்பது தானே தவிர வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுவாக இந்த மன்றத்தில் பேசு கின்ற நேரத்தில் பொதுவான குற்றச்சாட்டுகளைச் சொல்லக் கூடாது என்று சொல்லியிருக்கிறேன். குற்றம் சாட்ட வேண்டாமென்று சொல்லவில்லை. ஆதாரத்தோடு குற்றம் சாட்ட வேண்டும். கனம் உறுப்பினர் இதுவரை அது போன்ற புகார்கள் எதுவும் அளிக்கவில்லை என்று அமைச்சர் சொல் கிருர். இனிமேலாவது கொடுத்துவிட்டுப் பேச வேண்டும் என்கிருர். குறிப் பிட்டு ஆதாரத்தோடு குற்றம் சாட்டாது பொதுவாகக் குறை கூறிக் கொண்டு போவது முறை அல்ல.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஸபீக்கர் சார், பொதுவாக........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் என்ன எழுப்புகிறீர்கள் ?..

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பேச அனுமதித்தால்தானே சொல்ல முடியும் ? பேசக்கூட உரிமை இல்லையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தலைவர் எழுந்தால் மற்றவர்கள் உட்கார வேண்டும். அந்த விதியையாவது கடைப்பிடிக்க வேண்டும். உரிமையில்லை என்று சொல்லவில்லை. எந்தவிதியின் கீழ் நீங்கள் பேச விரும்புகிறீர்கள் ? அவரவர்கள் எழுந்து பேசுவது என்ருல் சபை எப்படி நடக்கும் ? உரிமையை மறுக்கவில்லை. எந்த முறையில் பேச விரும்பு கிறீர்கள் ?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சார், பாயின்ட் ஆப் ஆர்டர். போலீஸ் ஸ்டேஷன்களுக்கு இந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் சென்ருல் மிகவும் கீழ்த்தரமாகப் பேசப்படுகிருர்கள் என்கிற புகார்கள் என்னிடத்திலும் வந்திருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் முன்பே சொல்லியிருக்கிறேன் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து உறுப்பினர் தாம் சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்வதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. நடைமுறையில் தவறு இருந்தால் தான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். இங்கே என்ன நடைமுறைத் தவறு நடந்து விட்டது ?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அதைத்தான் நான் சொல்ல வரு கிறேன். அமைச்சர் அவர்கள் தவருன விவரத்தைக் கொடுத்தார்கள்.

I want to say that the Hon. Minister has made an incorrect statement. If a person goes and makes a complaint, penal action would be taken against that person.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நான் தவருன தகவல் எதுவும் தரவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தவருன தகவலை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதாகச் சொன்ஞர்கள். என்ன தவருன தகவலைக் கொடுத்தார்கள் என்பதை விளக்க வேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** புகார்கள் கொடுத்தால் அதன்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள். புகார்கள் கொடுக்கப்பட்டன. நானே கொடுத்திருக் கிறேன். அது சம்பந்தப்பட்ட போலீஸ் பைலே என்னிடம் இருக்கிறது. கொடுத்ததன் பயன் அந்த போலீஸ் அதிகாரி மீட்டும் அவர்களிடம் போய் சட்டமன்ற உறுப்பினர்களிடம் போய்ச் சொன்ஞயா என்று மிரட் டுவதோ தவிர வேறு ஒன்றும் நடக்கவில்லை. காங்கிரஸ் ஆட்சியாலும் அவர்களை அடக்க முடியவில்லை. தி.மு.க. ஆட்சியாலும் முடியாது......



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பேரவைத் தலை வர் அவர்களே, புகார்கள் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தான் நான் சொன்னேன். நாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டு— அதன்பேரில் விசாரணை நடத்தப்பட்டிருப்பதன் காரணமாகத்தான் மீண் டும் சட்டமன்ற உறுப்பினரிடம் போய்ப் புகார் செய்தாயா என்று மிரட்டப் படுகிற நிலை வந்திருக்கிறது. நாங்கள் அது பற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளாதிருந்தால் அந்த நிலை வந்திருக்காது. ஆகவே, புகார்கள் கொடுத்தால் நாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறோம் என்று நான் சொன்னதில் எவ்விதத் தவறும் இல்லை. நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வதனுல் அந்த மக்கள் மீண்டும் மிரட்டப்படுகிருர்கள் என் பது வேறு பிரச்சினை. ஆகவே, நான் சொன்னதில் தவறு இல்லை. நான் தவருகச் சொன்னதாக கனம் உறுப்பினர் குறிப்பிட்டதை திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Dr. H. V. HANDE :** I am going to prove it with facts and figures.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** அமைச்சர் அவர்கள் சொன்னதில் உள்ள ஒரு சிக்கலை, விளங்காத பகுதியை தெளிவுபடுத்த வேண்டும் என்பதற்காகக் கனம் உறுப்பினர் இதைக் குறிப்பிட்டிருக்கிருர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த மானியத்திற்குச் சில மணி நேரங்கள் ஒதுக்கி, இன்ன இன்ஞர் பேச வேண்டுமென்று பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டு அதன்படி ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிருர். அவரைப் பேசவிடாது —இப்படி விவாதத்தின் திசை திருப்பி பல குறுக்கீடுகள் இருப்பது நம் முடைய மரபுக்கு உகந்ததா ? இப்படியாஞல் நிகழ்ச்சி எப்படி நடக்கும் ? ஆகவே சபை நடவடிக்கை சீராக நடக்கும்படியாகச் செய்யத் தாங்கள் தங்கள் தீர்ப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** திரு ஹாண்டே அவர்கள் ஒழுங்குப் பிரச்சினையில் அமைச்சர் அவர்கள் தவருன தகவலைக் கொடுப்ப தாகச் சொன்ஞர்கள். ஆஞல், அதை விளக்கிப் பேசுகின்றபோது அவரே அதை மறுத்திருக்கிருர். குறிப்பாக சட்டமன்ற உறுப்பினரிடம் போய்ச் சொன்ஞயா என்று அவர்கள் மிரட்டப்படுவதாகச் சொன்ஞர். அவர் கொடுத்த புகாரின் மீதில் நடவடிக்கை எடுக்கப்படுவதன் காரணமாகத்தான் இப்படி மிரட்டப்படுகிற நிலை வருகிறது. ஆகவே, இன்கரெக்ட் ஸ்டேட் மெண்டு கொடுத்ததாகச் சொன்னது சரியல்ல. அப்படி மிரட்டுவது சரியா, அது சாதகமா, பாதகமா என்பது வேறு விஷயம். அமைச்சர் நட வடிக்கை எடுக்கப்படுவதாகச் சொன்னதில் தவறு இல்லை. ஆகவே இந்தக் கோணத்தில் இதைப் பெரிய பிரச்சினை ஆக்கிவிடாது முடித்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தவருன தகவலை அமைச்சர் அவர் கள் கொடுத்ததாக அவர்கள் சொன்ஞர்கள், தயவு செய்து அவர்கள் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் ஒன்றைக் கூறிய நேரத்திலே, எந்தவித மான தகவலையும் அரசுக்குக் கொடுக்கவில்லை என்று கூறிஞர்கள். டாக்டர் ஹாண்டே பற்றி அமைச்சர் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. அந்த நிலையிலே டாக்டர் ஹாண்டே அவர்கள் நான் கொடுத்திருக்கிறேன். நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிருர்கள். அமைச்சர் அவர்கள் அதன்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறேன் என்று சொல்லி யிருந்தால் அது தவருன தகவல் என்று சொல்லலாம். ஆஞல் டாக்டர்

ஹாண்டே அவர்கள் பற்றியது அல்ல, அமைச்சர் அவர்கள் சொன்னது திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் கூறியது பற்றித்தான் சொன்னார்கள் அப்படியிருக்கும்பொழுது டாக்டர் ஹாண்டே அவர்கள் அமைச்சர் அவர்கள் தவருன தகவல் கொடுத்திருக்கிருர்கள் என்று சொல்வது அவர் களுக்கும் நல்லதல்ல. இந்தச் சபையின் மரபுக்கும் முறையாக இருக்காது. டாக்டர் ஹாண்டே அவர்கள் நான்கு ஐந்து ஆண்டுகளாக இந்த அவையி லும், மேலவையிலும் பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்கள், அவர்கள் இந்த சபையின் நடவடிக்கைகளை நல்ல முறையிலே பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தொடர்ந்து பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்துகொண்டு பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்லாதவற்றையே சொல்கிருர்கள். அது இந்த மன்றத்தின் கௌரவத்தையும் மரபையும் காப்பதாக ஆகாது. அவர்களே இல்லாத ஒன்றைக் கற்பித்துக் கூறியது தவறு. எனவே அவர்கள் அதை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் புகார் கொடுத்தபொழுது.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் மீண்டும் அதையே சொல் கிறீர்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் சொல்வதைத் தயவு செய்து பொறுமையாகக் கேட்க வேண்டும். இந்தச் சபையும் அதைப் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பு இருக்கும். என்னுடைய அனுபவத்தைச் சொல் கிறேன். எலிபெண்ட் கேட் போலீஸ் ஸ்டேஷனில் அடித்து இருக்கிருர்கள். (மணியடிக்கப்பட்டது) கொலையும் செய்திருக்கிருர்கள்.... (மணியடிக்கப் பட்டது). (குறுக்கீடு) (மணியடிக்கப்பட்டது). நீங்கள் எதற்காகப் பயப்படு கிறீர்கள்? பயப்படாதீர்கள்.

**THIRU ALADI ARUNA :** We are not afraid.

**திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, நான் முதலில் எழுப்பிய பிரச்னைக்குத் தங்களுடைய தீர்ப்பு என்ன என்பதை அறிய விரும்புகிறேன். இரண்டாவதாக உறுப்பினர் ஹாண்டே அவர்கள் 'இங்கே அமர்ந்திருக்கிற எங்களை யெல்லாம் பார்த்து, காங்கிரஸ்காரர்களையும் சேர்த் துத்தான், நீங்கள் எல்லாம் எதற்காகப் பயப்படுகிறீர்கள் என்று இந்தச் சபையினுடைய ஒழுங்குமுறைக்கு முரணை வகையிலே சொன்னது மக்களால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டிருக்கிற எங்களுடைய உள்ளங் களைப் புண்படுத்துவதாக இருக்கிறது. முதலில் அவர்கள் திரும்பப்பெற வேண்டுமென்பது ஒன்று. இரண்டாவது, கனம் உறுப்பினர்களுடைய உரி மையைப் பாதுகாப்பது தங்களுடைய பொறுப்பு. எனவே நீங்கள் எல்லாம் பயப்படுகிறீர்கள் என்ற வார்த்தைகளைச் சொன்னதையும் திரும்பப் பெற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும். இந்தச் சபை எவ்வளவு கண்ணியத்துடன் நடந்து கொண்டு வருகிறது. இந்தச் சபையின் கண்ணியத்தைத் தொடர்ந்து பாதுகாப்பதற்கு அவர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது என்பது தங்களுக்குத் தெரியும். எனவே, அந்த வார்த்தைகளை அவர்கள் திரும்பப் பெற் றுக்கொள்ள வேண்டுமென்று நான் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த மன்றத்திலே 234 உறுப்பினர் கள் இருக்கிருர்கள். அவரவர்களுடைய தொகுதிப் பிரச்னைகள் இருக் கின்றன. அவைபற்றி அவரவர்கள் போலீஸ் நிலையங்களுக்குச் சென் றிருக்கலாம், அப்பொழுதெல்லாம் தக்க நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்ற குறைபாடுகள் இருக்கலாம். அதைக் கூறுவதற்கு உரிமை இருக் கிறது. ஆனல், அதை முறையாகக் கூற வேண்டும். எப்பொழுது அவரவர்களுக்கு வாய்ப்பு வருகிறதோ அப்பொழுது பேச வேண்டும். அதை விட்டுவிட்டு வேறு ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கின்ற நேரத்திலே அமைச்சர் அவர்கள் அந்த உறுப்பினர் கூறுகின்றவை ஆதாரமற்றவை





என்று கூறுகிற நேரத்திலே, இன்னொரு உறுப்பினர் எழுந்து கொண்டு அமைச்சர் அவர்கள் கூறியது தவருன தகவல் என்று சொல்வது முறையாகாது. அது அமைச்சர் அவர்களுடைய கௌரவத்தைப் பாதிப்ப தாகும். எனவே, உறுப்பினர் அவர்கள் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு என்னுடைய அறை யிலேகூடச் சொல்லியிருக்கிறேன், அப்படி யெல்லாம் பேசுவது அவர் களுக்கும் நல்லதல்ல, இந்தச் சபையினுடைய கண்ணியத்தையும், மரபை யும் அது காப்பாற்றுவதாகவும் இருக்காது என்றுகூறியிருக்கிறேன். எனவே, டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்தச் சபையின் கண்ணியத்தைக் காப்பாற்றக் கூடிய முறையில் அச்சொற்றொடரைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் இன்னொரு உறுப்பினர் பேசிய பேச்சில், தானும் நேரடியாகக் கம்ப்ளெயின்ட் கொடுத்ததாகவும் சொன்னார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள், கம்ப்ளெயின்டு கொடுத்திருந்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று திரு. ஹாண்டே அவர்கள் சொல்வதிலிருந்து தெரிகிறது என்று சொன்னார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள், கம்ப் ளெயின்ட் கொடுத்தால் அதற்கு அப்பால் வருகிற ரீ-ஆக்ஷனைப்பற்றியும் சொன்னார்கள். It is a sort of insinuation. இந்த நிலையிலே இதை இப்படியே விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் என்ற முறையிலே சொல்லியிருக்கலாம். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லும்பொழுதுதான் இப்படிப்பட்ட சிக்கல் வருகிறது. ஏற்கனவே பல கம்ப்ளெயின்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தமாதிரித்தான் இருக்கிறது. இனிமேலாவது கம்ப்ளெயின்டுகள் கொடுத்தால் கவனித்து அதன்மூலம் பொதுஜனங் களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மூக்கையா தேவர் அவர் களுக்கும் மரபைக் காப்பதிலே பொறுப்பு இருக்கிறது என்பதை உணர்த்த வேண்டும். உறுப்பினர் அவர்கள் முறைதவறி அமைச்சர் அவர்கள் தவருன தகவலைக் கொடுத்திருக்கிருர்கள் என்று சொல்லி இருக்கிருர்கள், அதை அப்படியே விட்டுவிட வேண்டுமென்பது முறைதானு? இதிலே ஒவ்வொரு உறுப்பினருக்கும், கட்சித் தலைவருக்கும் பொறுப்பு உண்டு; எனவே அது முறைதானு என்பதை திரு. மூக்கையா தேவர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்தச் சபை இன்னும் நல்ல முறையிலே நடைபெறுவதற்கு ஏற்ற முறையிலும் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருப்பதைப் பொறுத்தும் இந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் எக்ஸ்பஞ்ச் செய்யும்படி தாங்கள் உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே தாங்கள் கூறினீர் கள், இன்னும் கொஞ்சம் புனராலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது ரொம்ப முக்கியமான விவாதம். இந்த விவாதம் நடைபெறுகிற நேரத்திலே, ஹரிசன நல மானிய விவாதத்திற்கு ஒவ் வொருவருக்கும் மூன்று நிமிடம் என்று சொன்னீர்கள். விலைமதிக்க முடியாத நேரம் போகிற காரணத்தினலே அந்த நிகழ்ச்சிக் குறிப்புகளை யெல்லாம் எக்ஸ்பஞ்ச் செய்யலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**DR. H. V. HANDE :** Sir, in view of what my Leader has stated and in view of the explanation given by the Hon. Minister, and if I have hurt her feelings, I withdraw those words. I did not mean any insinuation against any Hon. Minister. At the same time, may I request this Government to examine those cases more accurately and in greater detail?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டதாலே இந்த விவகாரத்தை மேலும் தொடர வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, திரு. சிவசுப்பிரமணியம் அவர்களுடைய பேச்சைத் தொடரலாம்கள். இரண்டு நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியம் :** தஞ்சாவூரிலே சின்னத்தம்பியை வண்டியில் ஏற்றிக்கொண்டுபோய் கொலை செய்திருக்கிறார்கள். மேக்கடையில் ஒருவனைக் கொலை செய்திருக்கிறார்கள். சிக்கல் பக்கிரிசாமியைக் கொலை செய்திருக்கிறார்கள். அதுபற்றி இதுவரை ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை. நீங்கள் எது செய்யாவிட்டாலும் நாங்கள் கவலைப்படவில்லை. எங்களுக்கு இருக்க இடமாவது கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறோம்.

பார்லிமெண்டரி கமிட்டி அறிக்கையிலே என்ன என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதைச் செய்தாலே ஹரிஜன மக்களுக்கு நல்லதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நந்தனூர் பள்ளி ஆசிரியர்களுக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும். அதோடு அங்கே ஹரிஜனப் பெண்கள் குளிப்பதற்கு கூட இடம் இல்லாமல் இருக்கிறார்கள், அங்கே ஒரு குளம் இருக்கிறது, அதிலே படிக்கட்டுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார விளக்குகள் சேரிப் பக்கமே திரும்பவில்லை. பைப் லைன்களைப் போட்டுக் கொண்டே வருகிறார்கள் சேரிக்குப் பக்கத்திலே வரும்பொழுது கட் ஆகிவிடுகிறது. அதைப் போலவே மின்சார விளக்குகளைப் போட்டுக் கொண்டே வருகிறார்கள், சேரிக்குப் பக்கத்திலே வருகிறபோது கட் ஆகிவிடுகிறது. அப்படி கட் ஆகாமல் அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையின்மீது நான் சொன்னதையெல்லாம் ஏற்றுக்கொண்டு நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

(திரு. பி. ஜெயராமன் அவர்கள் பேச அழைக்கப்பட்டார்.)

முற்பகல் 11-00

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** ஒரு விளக்கம். கனம் அங்கத்தினர் அவர்கள் வெண்மணியைப் பற்றிப் பேசினார்கள். வெண்மணியிலே நெருப்பு வைக்க காங்கிரஸ்காரர்கள்தான் பிரதான சக்தியாக இருந்தார்கள் என்பது அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியுமா?

**THIRU K. VINAYAKAM:** Sir, it is a great insult to us and he has been indulging in this kind of insinuation many times and this is not the first time he has been doing so.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. விநாயகம் அவர்கள், ஒரு உறுப்பினர் ஒன்றைச் சொன்னவுடனே சபையை நடத்திச் செல்லுகிற தலைவர் என்ன முறையைக் கையாளுகிறார் என்று பார்த்த பிறகு பேச வேண்டும். திரு. ஞானசம்பந்தன் அவர்கள் அங்கே காங்கிரஸ்காரர்கள் தான் முன்னணியில் இருந்தார்கள் என்று சொல்லுவது அவ்வளவு பொருத்தமாக இல்லை. ஆகவே, அதை அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளுவது நலம்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** திரும்பப் பெற விரும்பவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர் அதைத் திரும்ப பெற்றுக் கொள்ளுகிறாரா இல்லையா என்பது தெரிய வேண்டும்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** அங்குள்ள காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். யதார்த்த நிலை இருக்கும்போது எப்படி திரும்பப் பெறுவது?

யதார்த்த நிலை





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த மன்றத்திலே குற்றச்சாட்டுகளைக் கூறுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் அப்படிக் கூறுகின்றவர்கள் அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். உறுப்பினர் அவர்கள் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளுகிறாரா?

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** ஏற்றுக் கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** காங்கிரஸ்காரர்கள்தான் செய்தார்கள் என்று சொன்னதை வாபஸ் வாங்குகிறாரா இல்லையா?

**திரு. வி. கே. கோதண்டராமன் :** வாபஸ் வாங்குகிறாரா இல்லையா என்று மிரட்டுகிறாரா? யாரை மிரட்டுகிறார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோதண்டராமன் அவர்களை அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். நடைமுறை விதிகளைப் பொருத்த அளவில் தலைவர் எழுந்து நின்று கொண்டிருக்கும்போது உறுப்பினர்கள் உட்கார்ந்து விட வேண்டும். அதைக் கூடக் கடைப்பிடிக்கவில்லையென்றால் எப்படிச் சபையை நடத்திச் செல்லுவது? எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அவரை வாபஸ் வாங்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த மன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்களுக்குப் பேச உரிமை இருக்கிறது. எப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளையும் கூற உரிமை இருக்கிறது. யாரும் அதை மறுக்க முடியாது. நடைமுறை விதிப்படி குற்றம் சாட்டுகிற உறுப்பினர் அந்தக் குற்றச்சாட்டுக்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். அப்படிப் பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன் என்று கூறும் நிலையில் அவரைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லுவதற்குப் பேரவைத் தலைவருக்கு அதிகாரம் கிடையாது. மற்ற உறுப்பினர்களுக்கும் அதிகாரம் கிடையாது. திரு. ஞானசம்பந்தன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைக் கூறினார்கள். அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளுகிறீர்களா என்று கேட்டதற்கு "ஏற்றுக் கொள்ளுகிறேன்" என்று அவர் கூறிவிட்டார். அதற்கு மேல் உண்டான விவகாரங்களை நீங்கள் வழக்குமன்றத்தில் நடத்த வேண்டியதுதான். வழக்கு மன்றத்தில் கட்சிக்குக் கட்சி நடத்திக் கொள்ள வேண்டுமே தவிர, பேரவைத் தலைவர் இதிலே ஒன்றும் செய்வதற்கில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** "பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பேசாமல் இருந்துவிடலாம். இப்படி நாங்கள் கூடத்தான் சொல்லிவிடலாம். "பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன்" என்று சொன்னால் அதற்கு ஒரு வரம்பு கட்ட வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு குற்றச்சாட்டைச் சாட்டிவிட்டு "பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன்" என்று சொல்லுகிற நேரத்தில் யார் மீது குற்றம் சாட்டினார்களோ அவர்கள் நீதிமன்றங்களுக்குப் போகும் நேரத்தில் அங்கே பொறுப்பேற்றுக் கொள்ளாத நிலைமை ஏற்பட்டால் அதற்குப் பிறகு இந்த மன்றத்திலே என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்ல முடியும்.

**திரு. கே. விநாயகம் :** சட்டசபைக்குள்ளே எதையும் பேசலாம். "பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டு அவர் போய் விடலாம். This cannot become a subject matter in a court. கோர்ட்டுக்கு நாங்கள் போகமுடியாது. எங்களைக் காக்கவேண்டிய பொறுப்பு உங்களுக்குத்தானே தவிர, நீங்கள் சாக்குப் போக்குச் சொல்லி தட்டிக் கழிப்பது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் பேசும்போது சொற்களை நிதானத்தோடு பயன்படுத்த வேண்டும். "சாக்குப் போக்குச் சொல்லி தட்டிக் கழிப்பது" என்ற முறையில் பேரவைத் தலைவரைப் பார்த்துச் சொல்லுவது சரியல்ல.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, திரு. ஞானசம்பந்தன் அவர்கள் வெண்மணி சம்பவத்திற்கு காங்கிரஸ்காரர்கள் தான் காரணம் என்று சொன்னார்கள். தாங்கள், அதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு உறுப்பினருக்கு இருக்கிறது என்று சொன்னீர்கள். அவர்களும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று சொல்லிவிட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களோ அதை வாபஸ் வாங்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆதாரம் இருந்தால் உறுப்பினர்கள் குற்றம் சாட்ட உரிமை உண்டு. ஆதாரம் இல்லாமல் சொல்லியிருந்தால் அவர்கள் அகப்பட்டுக் கொள்ளப் போகிறார்கள். ஆதாரம் இருக்கிறது என்று திரு. ஞானசம்பந்தன் அவர்கள் கூறும்போது அதைத் திரும்பப் பெற வேண்டுமென்று கூற சபாநாயகர் அவர்களுக்கே கூட உரிமை இல்லை. அவர் சொன்னதைப் பற்றி ஆராய ஒரு கமிட்டி நியமிப்பதற்குத் தங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு கமிட்டி அமைத்து அவர் சொன்னது சரிதானா அல்லது தவறாகச் சொல்லியிருந்தால் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது என்பதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. அந்த வகையில் ஒரு கமிட்டியை அமைக்கலாம் என்ற யோசனையை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பாராளுமன்ற நடைமுறைப் பண்பைத் தலைவர் அவர்கள் பாதுகாக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். நான் ஒரு தவறைச் செய்தால் அதைத் திரும்பப்பெற வேண்டுமென்று கேட்பதற்கு அங்கத்தினர்களுக்கு உரிமை இருக்கிறது. இவ்வளவு பேர் இங்கே உட்கார்ந்திருக்கும்போது, சபாநாயகர் அவர்கள் உட்கார்ந்திருக்கும்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் "திரும்பப் பெறப் போகிறாரா இல்லையா?" என்று மிரட்டுவது சபையினுடைய பண்புக்கு உகந்தது அல்ல; நீங்கள் அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதற்கு முன்னால் அமைச்சர் "வாபஸ் வாங்குகிறாரா இல்லையா?" என்று கேட்டது நியாயம், நான் கேட்பது மட்டும் தவறா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** எதிர்க் கட்சிக் கொறடா திரு. விநாயகம் அவர்கள் ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்புகிறபோது "தலைவர் அவர்கள் சாக்குப் போக்குச் சொல்லுகிறார்" என்ற முறையிலே பேசினார். அப்படிப் பேசியது சரியா? அது தலைவர் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுவதாக இருப்பதால் அந்த வார்த்தைகளைச் சபை நடவடிக்கையில் இருந்து நீக்கி விடும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**THIRU K. VINAYAKAM :** Sir, I do not mind withdrawing that particular word. சாக்குப் போக்கு என்ற வார்த்தைகளை எடுத்துவிடுங்கள். 'Some kind of explanation' என்று வைத்துக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சபை நடவடிக்கையில் இருந்து அச் சொற்றொடரைப் பேரவைத் தலைவர் எடுத்து விடுவதை விட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுவது நலம்.

**திரு. கே. விநாயகம் :** அந்த வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுகிறேன்.



## அ. அறிவிப்பு.

### ஓர் உறுப்பினருடைய குற்றச்சாட்டை விசாரிக்க குழுவை அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசம்பந்தன் அவர்கள் கீழ் வெண்மணிச் சம்பவத்தில் காங்கிரஸ்காரர்கள் தான் முன் நின்று நடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதைக் காங்கிரஸ் கட்சித் தரப்பிலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மறுக்கிறார்கள். அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன் என்று திரு. ஞானசம்பந்தன் அவர்கள் கூறுகிறார்கள். எப்படி அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுவார் என்பது பற்றிய விவாதம் வந்திருக்கிறது. நம்முடைய சட்ட மன்ற விதி முறைகளையொட்டி நம்முடைய மன்றத்திலேயே ஒரு கமிட்டி அமைத்து அந்தக் கமிட்டியிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாம் சாட்டிய குற்றச்சாட்டுக்கு ஆதாரங்கள் கூற வேண்டுமென்றும் அதையொட்டி வருகிற நிகழ்ச்சியைக் கமிட்டி முடிவு செய்ய வேண்டுமென்றும் விதிமுறைகள் இருக்கின்றன. அதையொட்டி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. டி. மார்டின் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். அதிகாரிகளைப் பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புகார் கூறுகின்ற நேரத்தில் ஆதாரங்கள் இருக்கின்றனவா என்று கேட்கப்படுகிறது. இதே முறையில் 1958 மார்ச் 18-ம் தேதி அன்று காலஞ்சென்ற முதலமைச்சர் அவர்கள் போலீஸ் துறையைப் பற்றிப் பேசுகிறபோது அவர்கள் கூறியதை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன் . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றால் எப்போது விதிமுறைகள் மீறப்படுகின்றனவோ, அப்போது அந்த நேரத்தில் அதைச் சுட்டிக் காட்ட வேண்டும். அப்போது அவர்கள் சொன்னார்களே, அப்போது அவர்கள் இப்படிப் பேசியிருக்கிறார்களே, ஆகவே இப்போது அப்படிப் பேசுவதற்கு மறுப்பானேன் என்று கேட்பது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல.

## 3. 1969-70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**திரு. பி. ஜெயராமன் :** தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே மண் குடிசைகளில் வாழ்கிறவர்களும் பாராள முடியும் என்று சரித்திரத்தை மாற்றியமைத்துவிட்டு இன்று நம்மை யெல்லாம் விட்டுப் பிரிந்திருக்கும் உலகப் பேரொளி அறிஞர் அண்ணா அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொண்டு இம் மானியத்தின் மீது என் கருததுக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். கடந்த இருபது ஆண்டுகளாக ஆதித்திராவிட மக்களுக்குச் செய்ய முடியாத சிறப்பான காரியங்கள் இன்றைய தினம் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கடந்த இருபது ஆண்டுகளாக ஆதித்திராவிட மக்கள் எந்த வகையிலும் முன்னேற்றம் அடையாமல் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தார்கள். ஆதித் திராவிட மக்களுக்காக காலம் எல்லாம் உழைத்து, கண்ணீர் சிந்திக் கொண்டு வருகிற திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பீடத்திற்கு வந்த பிறகு கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆதித் திராவிட மக்களுக்கு உபகாரச் சம்பளங்களும், மற்ற பல சலுகைகளும் குறையில்லாமல் சிறப்பான முறையில் கிடைத்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆதித் திராவிட மக்களுக்காக ஆரம்பப் பள்ளிகள் இருப்பது போல் அவர்களுக்காக மாவட்டத்திற்கு ஒரு கல்லூரியை ஏற்படுத்தி ஆதித் திராவிட மக்கள் அனைவருக்கும் கல்லூரிகளில் இடம் கிடைக்கக் கூடிய ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் சட்டமன்றத்தில் இருப்பவர்கள் ஆதித் திராவிட மக்களின் நிலைபற்றி அங்கலாய்த்துக் கொள்கிறார்கள். இன்றையதினம் வெணமணிக் கிராமத்தில் நடைபெற்ற கலவரங்களுக்கு யார் காரணம், யார் பொறுப்பு என்பதை எதிர் வரிசையில் இருப்பவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெண்மணி கிராமத்தில் அம் மக்கள் சுட்டு எரிக்கப்பட்டவுடன், இந்த நாட்டின் தலைமகனான பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ணீர் வடித்து போலீஸ் அதிகாரிகளை அந்த இடத்திற்கு உடனடியாகச் சென்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொல்லி சில அமைச்சர்களையும் அங்கு அனுப்பினார்கள். அப்படி அனுப்பப்பட்டு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆதித் திராவிட மக்களைப்பற்றிப் பேசுகிறவர்களை நான் பாராட்டுகிறேன். ஆதித் திராவிட மக்களின் கஷ்ட நஷ்டங்களைப்பற்றி எடுத்துக் கூறியவர்களை நான் பாராட்டுகிறேன். ஆதித்திராவிட மக்களின் கஷ்ட நஷ்டங்களைப்பற்றி இங்கு சட்ட மன்றத்தில் எடுத்துப் பேசுவது பத்திரிகைகளில் வந்துவிட்டால் போதும் என்ற எண்ணத்தை மாற்றிக் கொண்டு சட்டமன்ற அங்கத்தினர்கள் தாங்கள் வாழக்கூடிய பகுதியில் தங்கள் பக்கத்திலுள்ள சேரிகளில் நுழைந்து அவர்களோடு உண்டு அவர்களையும் தங்கள் வீடுகளுக்கு அழைத்துச் சென்று உணவு கொடுத்து அவர்களோடு உண்டு, இவ்வளவு ஆதித் திராவிட மக்களின் வீடுகளில் நான் உண்டிருக்கிறேன், இவ்வளவு ஆதித் திராவிட மக்களுக்கு என் வீட்டில் உணவு கொடுத்து அவர்களோடு உண்டிருக்கிறேன் என்ற பட்டியலை இங்கு வந்து கொடுத்தால் அவர்களை நான் பாராட்டுவேன். பேசுவது என்பது உதட்டளவில் இருக்கக் கூடாது.

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு."

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார். இந்த நாட்டில் தீண்டாமை ஒழிய வேண்டுமென்றால் எல்லாக் கட்சித் தலைவர்களும் சேரிகளில் நுழைந்து அவர்களிடம் நல்ல பல கருத்துக்களை எடுத்துக்கூறி, ஜாதி வெறி பிடித்தவர்களிடம் தீண்டாமை ஒழிவதற்கான கருத்துக்களைக் கூறி எல்லோரும் ஒரு தாய் மக்கள் என்ற நிலையை இந்த நாட்டில் உருவாக்க வேண்டும். அப்படிப்பட்ட பாச உணர்வை நாட்டில் உருவாக்க வேண்டும்.

பெரியார் ராமசாமி அவர்கள் இந்த நாட்டில் தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்றும், ஜாதிமத பேதங்களை ஒழிக்க வேண்டுமென்றும், இந் நாட்டிலுள்ள எல்லா மக்களும் சமமாக வாழ வேண்டும் என்றும் சுய மரியாதை இயக்கத்தை அன்றையதினம் தோற்றுவித்து திருவிதாங்கூர் சென்று போராடி சிறை சென்றார்கள். அந்தப் பரம்பரையில் வந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்பதைத் தெரிவித்துக் கொள்ளு றேன். தீண்டாமையை போக்க வேண்டும், மனிதன் மனிதனாக வா வேண்டும் என்பதற்கான அறிவை நம் நாட்டுக்குக் கொடுத்தது திராவி முன்னேற்றக் கழகம். அப்படி நல்ல பல கருத்துக்களை திராவி முன்னேற்றக் கழகம் கொடுத்த காரணத்தினால்தான் இன்று ஓரளவாவது ஜாதி மத வித்தியாசம் தணிந்திருக்கிறதே தவிர திராவிட முன்னேற்ற கழகம் இந்த நாட்டில் தோன்றியிருக்காவிட்டால், அறிஞர் அண்ண அவர்களோ, கலைஞரோ, நாவலரோ இந்த நாட்டில் தோன்றவில்லை யென்று சொன்னால் இந்தக் கருத்துக்களை மக்களிடம் எடுத்துக் கூ தீண்டாமையை இந்த அளவிற்காவது போக்கியிருக்க முடியாது.

காங்கிரஸ் ஆட்சி காலத்தில் இந்த மானியத்திற்கு அளிக்கப்பட்ட விட இப்போது சிறப்பான முறையில் மானியம் ஒதுக்கப்பட்டிருக்கிறது கொடுத்திருக்கக் கூடிய புத்தகத்தைப் பார்த்தால் தெரியும். அந்த காலத்திற்கும் இந்த இரண்டு வருட காலத்திற்கும் இடையே எவ்வளவ பணம் ஆதித் திராவிட மக்களின் முன்னேற்றத்திற்காக அதிகமாக இ டோது ஒதுக்கியிருக்கிறார்கள் என்பது. ஆக, ஆதித் திராவிட மக்களி நலனுக்காகவும் பிற்பட்ட வகுப்பு மக்களின் நலனுக்காகவும் இந்





திராவிட முன்னேற்றக் கழக அரசு முழு மூச்சாகப் பாடுபட்டு வருகிறது என்பதை நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், எதிர் வரிசையில் இருப்பவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆகவே, நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், சட்ட மன்றத்தில் சொல்வதினால் மட்டும் ஆதித்திராவிட மக்களின் குறைகளைப் போக்கி அவர்களுக்கு நன்மை செய்து விட்டதாகக் கருத முடியாது. காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில் தஞ்சை மாவட்டத்தில் கள்ளக் குப்பம் என்று நினைக்கிறேன், பெயர் நினைவிற்கு வரவில்லை, அங்கு குப்புசாமி என்ற ஒரு ஆதித் திராவிடனை ஒரு போலீஸ்காரர் ஓட ஓட விரட்டி சுட்டிருக்கிறார். இப்படி யெல்லாம் சொல்லிக் கொண்டே போகலாம், ஆனால் அதற்கு சட்ட மன்றத்தில் நேரம் இல்லை. ஆகவே இங்குள்ள உறுப்பினர்கள் எல்லாம் தங்கள் பகுதியில் தங்கள் பக்கத்திலுள்ள குடிசைகளில் நுழைந்து, ஆதித் திராவிட மக்களின் வீட்டு அடுப்பங்கரையில் நுழைந்து அவர்களோடு கூட சாப்பிட்டு, அவர்களையும் தங்கள் வீடுகளுக்கு அழைத்து அவர்களோடு சாப்பிட்டு நான் இவ்வளவு வீடுகளில் ஆதித்திராவிட மக்களோடு உண்டிருக்கிறேன், இவ்வளவு ஆதித்திராவிட மக்களோடு என் வீட்டில் உண்டிருக்கிறேன் என்ற பட்டியலை இங்கு காண்பித்தால் உள்ளபடியே அவர்களை நான் போற்றுவேன், அவர்களுக்குத் தலை வணங்கவும் காத்திருக்கிறேன். ஆதித்திராவிட மக்களுக்கு நூற்றுக்கு நூறு பக்கபலமாக அமைந்து, அவர்களை வாழ வைப்பது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோளாக அமைந்திருக்கிறது என்று கூறி எனக்கு இதுவரை பேச வாய்ப்பளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. அ. ஏ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். சற்று நேரத்திற்கு முன்பு கமிட்டி ஒன்றை ஃபாரம் செய்தார்கள். அது "சப் ஜுடீஸ்" ஆகாதா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தலைவர் அவர்கள் நாளைக்குத் தீர்ப்பு வழங்குவார்கள்.

* **திரு. எஸ். ஆறுமுகம்:** தலைவரவர்களே, இன்றையதினம் நம்முடைய பொதுநலத்துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முதலில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பின் தங்கிய மக்களுக்கு நன்மையே செய்யவில்லை, நாங்கள் தான் நன்மைகளையே செய்து கொண்டிருந்தவர்கள் என்று ஒரு தவறான பிரச்சாரத்தையே பேசி வருகிறார்கள். அதை இந்த மன்றத்திலே மட்டுமல்லாமல், வெளியிலேயும் பேசுவது, பாவம். அவர்களுக்கு ஐயோ போய் விட்டதே என்ற ஏக்கத்தினாலே பேசக்கூடிய பேச்சாக இருந்துகொண்டிருக்கிறது. ஒரு கணக்கை நான் பார்த்தேன் 1952–53-லிருந்து ஹரிஜன மக்களுக்கும், பின் தங்கிய மக்களுக்கும் ஒதுக்கப்பட்ட தொகையை வரிசையாகப் படிக்க விரும்புகிறேன். 1952–53-இல் 173 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய்; 1953–54-இல் 173 லட்சத்து 23 ஆயிரம் ரூபாய்; 1954–55-இல் 166 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய்: 1955–56-இல் 191 லட்சத்து 11 ஆயிரம் ரூபாய்; 1956–57-இல் 133 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய்; 1957–58-இல் 194 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய்; 1958–59-இல் 233 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய்; 1959–60-இல் 233 லட்சத்து 79 ஆயிரம் ரூபாய் என்று வரிசையாக இந்த மன்றத்திலே நிதிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இறுதியாக 1966–67 இல் கூட 533 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் 1967–68-இல் 657லட்சத்து 15 ஆயிரத்து 900 ரூபாயும் 1968–69-இல் 651 லட்சத்து 11 ஆயிரத்து 200 ரூபாயும், இந்த ஆண்டில் 691 லட்சம் ரூபாயும் ஒதுக்கியிருக்கிறோம். ஆகவே, பின் தங்கிய மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஒதுக்குகின்ற தொகையில் எந்த நிலையிலும் திராவிட முன்னேற்றக் கழகம்

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு நிதி ஒதுக்கவில்லை, அவர்களுக்கு நன்மை செய்யவில்லை, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிகப்படியான சலுகைகள் செய்யவில்லை' என்று எப்படிக் குறை சொல்லுகிறார்கள் என்பது நமக்குப் புரியவில்லை.

எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. இருபதாண்டுக் காலத்தில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை காங்கிரஸார் தீட்டி இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்தார்கள். இந்த 20 ஆண்டுக் காலத்தில் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் நல்ல முறையில் நன்மைகள் செய்திருப்பார்களேயானால் 1967-இல் தமிழகத்திலே மட்டும் அல்ல, இந்திய உபகண்டத்திலுள்ள பல் வேறு மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி தோற்றிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. திராவிட முன்னேற்றக் கழகம் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு தெள்ளத் தெளிவாக எடுத்து வருகிறோம். இன்னும் சொல்லப் போனால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த, பக்கத்திலே இருக்கின்ற சட்ட மன்ற உறுப்பினர்களைப் பார்த்தால், யார் எந்த வகுப்பைச் சார்ந்தவர்கள் என்று கேட்டுத் தெரிந்து கொள்ளலாமா என்ற அளவில், அப்படிக் கேட்பதற்கும் கூச்சப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. யாரைப் பார்த்தாலும், அவர் எந்த இனத்தைச் சேர்ந்தவர் என்று சொல்ல முடியாது. ஆனால் காங்கிரஸ்காரர்களை நாம் பார்க்கிறோம், காங்கிரஸிலே உள்ளவர்களைப் பார்த்தால், யார் எந்த ஜாதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் என்பதைச் சுலபமாகத் தெரிந்துகொள்ளும் அளவுக்கு நிலைமையிருப்பதை அவர்கள் மறந்து விட வேண்டாமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இன்னொன்றையும் உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஜாதிமத பேதமின்றி எல்லா மக்களிடத்திலும் சமத்துவமாகப் பழகுகின்றது. நான் பஞ்சாயத்து யூனியன் தலைவர் என்ற முறையில் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவர் ஒருவர் என்னிடத்திலே இருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஹரிஜன மெம்பர்கள் அந்த ஊராட்சி ஒன்றியத்தில் இணைக்கப்பட்ட மெம்பர்களாக இருக்கிறார்கள். நாங்கள் ஒரு விழாவிலே புகைப்படம் எடுக்கும் நேரத்தில் ஹரிஜனத் தோழர், அந்தக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த, உயர்ந்த ஜாதிக்காரர் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றவருடைய பக்கத்திலே நிறுத்தப்பட்டார். அந்தக் காங்கிரஸ்காரர் உடனே அந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்கு நகர்ந்தார். அவரை ஏன் இப்படி நகர்ந்து விட்டீர்கள் என்று கேட்டால் அவர் சொன்னார், எனக்கு அந்த இடத்திலே அவரோடு படம் பிடித்துக்கொள்ள விருப்பமில்லை. இடத்திற்கு நகர்கிறேன் என்று சொல்லக்கூடிய நிலையிலே இருப்பவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தானே தவிர வேறு ஒருவருமில்லை என்பதை மறந்துவிட வேண்டாம்.

ஜாதி எப்படி தலைதூக்குகிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். சமீபத்திலே நாகர்கோயில் இடைத்தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் நடந்தது என்ன ? யார் ஜாதியைத் தூண்டிவிட்டார்கள் ? காமராஜர் என்று சொன்னால் தெரியாதா ? அங்கே காமராஜ நாடார் என்று போட்டால்தான் அவரை மக்கள் தெரிந்து கொள்வார்களா ? ஆகவே, எந்தத் தேர்தல் நேரத்திலும் எந்த ஜாதிக்காரரைப் பிடிப்பது, எப்படி ஜாதியைக் காட்டி ஓட்டுப் பிடிப்பது என்று 20 ஆண்டு காலமாக இந்த நாட்டில் ஜாதியை வளர்ப்பதையே தொழிலாகக்கொண்டு, ஜாதியின் மூலம் வெற்றி பெற வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்கியவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தானே தவிர வேறு ஒருவரும் அல்ல. இப்படிப்பட்ட நிலை நீடிக்கப்பட்டதனால்தான் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி தோற்றது. பக்கத்திலேயிருக்கக்கூடிய புதுச்சேரியிலும் உங்களுக்கு நல்ல பாடத்தை அங்கேயுள்ள மக்கள் காண்பித்திருக்கிறார்கள். இது 1967,





1968, 1969-இல் மட்டுமல்லாமல் 1972-லேயும் காங்கிரஸ் கட்சி இப்படி ஜாதியைத் தூண்டிவிட்டே நாட்டிலே ஆட்சியைப் பிடிக்கலாம், ஜாதியைக் காட்டியே ஆட்சிக்கு வரலாம் என்று நினைப்பார்களேயானால் புதுச்சேரியிலே பாடம் காண்பித்ததைப்போல் இன்னும் மற்றும் வடக்கே இருக்கக்கூடிய இடங்களில் பாடம் காண்பித்திருப்பதைப்போல் இன்னும் உங்களுக்கு ஆழமான குழி காத்திருக்கிறது என்பதை மறந்து விட வேண்டாமென்று தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** சட்டமன்றத் துணைத் தலைவரவர்களே, ஹரிஜனத்துறைக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில கருத்துகளைத் கூற விரும்புகிறேன். ஹரிஜனத்துறை மானியக் கோரிக்கையிலே, பின்தங்கிய சமுதாயமாகிய முக்குலத்தோர் சமுதாய நலன்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அது இன்று மட்டுமல்ல, மகாகவி பாரதியார் சொல்லியிருக்கிறார், "பறையருக்கும் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை ; பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை" என்று. அந்தமாதிரியாக தமிழகத்திலே மிகவும் பின்தங்கிய சமுதாயமாகிய முக்குலத்தோர் சமுதாயமும், கள்ளர் சமுதாயமும், வெள்ளைக்காரர்கள் ஆட்சி நடத்திவந்த காலத்திலே அதை எதிர்த்து நின்ற காரணத்தினாலே அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய சலுகைகள் புறக்கணிக்கப்பட்டன, அவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள். அதன் காரணமாக "குற்றப் பரம்பரைச் சட்டம்" என்ற பெயரால் ஒரு கொடுமையான சட்டத்தை இயற்றி அதன்மூலம் தங்களை எதிர்த்தவர்களை அடக்கி ஒடுக்கியது வெள்ளைக்கார அரசாங்கம். அதை எதிர்த்து எங்களுடைய முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் 1937-ஆம் ஆண்டு மாபெரும் போராட்டத்தை அகில இந்திய ரீதியில் நடத்திய காரணத்தினால் குற்றப் பரம்பரைச் சட்டம் எடுத்தெறியப்பட்டது. அதன் பின்னரும்கூட, காங்கிரஸ் ஆட்சி வந்த காலத்திலே, முக்குலத்தோர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களில் பெரும்பகுதியினர் காங்கிரஸை எதிர்த்த காரணத்தினால் 20 ஆண்டுக் காலமாகக் கிடைக்கவேண்டிய சலுகைகள் புறக்கணிக்கப்பட்டன என்பதோடு அவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு, துப்பாக்கியால் சுடப்பட்டு பலர் கொல்லப்பட்டார்கள். பின்தங்கிய சமுதாயத்தினருக்கு நன்மை செய்ய வேண்டுமென்று ஒரு ஆட்சி வந்தது என்றால் அது 1967-இல் அமைக்கப்பட்ட அறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சிதான். அறிஞர் அண்ணா அவர்கள் பின்தங்கிய வகுப்பினரைப்பற்றிக் கூறுகையில் எந்தவித நன்மையும் காணாதவர்கள் அந்த மக்கள் என்று ஆயிரம் ஆயிரம் முறை சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, கள்ளர் சமுதாயத்திற்காக 37 லட்சம் ரூபாயாக இருந்ததை 41 லட்சம் ரூபாயாக உயர்த்தி 4 லட்சம் ரூபாயை அதிகமாக்கினார்கள்.

அதுமட்டுமல்லாமல், சமுதாயத்தின் பின் தங்கிய மக்களிடம் காலஞ்சென்ற முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய அக்கறையை அது காட்டுகிறது. அதுபோல உசிலம்பட்டியில் கள்ளர் சீர்திருத்த இலாகா மூலமாக தேவர் பெயரால் ஒரு கல்லூரி நிறுவப்பட்டது உங்களுக்குத் தெரியும். அதை நடத்தத் தமிழக அரசு தன்னாலியன்ற அளவுக்கு எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அவ்வளவும் செய்தது. அதோடு மட்டுமல்ல, கல்லூரிக்காக 100, 150 ஏக்கர்கள் நிலங்களை இனாமாக வழங்கியிருக்கிறது. அந்தப் பிராந்தியத்திலேயுள்ள கள்ளர் சமுதாயத்தினர், குற்றப்பரம்பரைச் சட்டத்தின் பாரம்பரியத்தின் கீழ் வந்தவர்கள் நிறையப்பேர் படிக்கிறார்கள். அவர்கள் கல்லூரியிலே படித்துமுடித்துவிட்டால் மட்டும் போதுமா ? படித்து முடித்த பின்பு அவர்களுக்கு உயர்வான வேலை கிடைக்க வேண்டாமா ? அவர்களுக்கு அந்தஸ்து இருக்கப்பட வேண்டாமா ? படித்துவிட்டுப் போய்விட வேண்டியதுதானா ? திருமங்கலம், உசிலம்பட்டி தாலுக்காவில் இன்று வரை மருத்துவக் கல்லூரியில் ஒரு மாணவர் கூடக்கிடையாது. டாக்டர் கூட கிடையாது. சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு ஏழாண்டுக்காலம் சிறைச்சாலையிலிருந்த முத்துராமலிங்கத் தேவரின் ஊரான முதுகுளத்தூரில் மருத்துவக் கல்லூரியில் ஒரு மாணவர் கூட படிக்கவில்லை.

இப்படியாக கடந்த காலத்திலே இருந்தாலும், இன்றைய நிலைமைகூட, இப்பொழுதுகூட, இந்த இரண்டு ஆண்டு காலத்திலேகூட, துரதிருஷ்ட வசமாக அந்த நிலை நீடிக்கிறது. இந்த அரசாங்கம் கவனித்து, அரிஜன மக்களோடு சேர்ந்து வாழக்கூடிய, இந்த பின்தங்கிய சமுதாயத்தினருக்கு, அவர்களுக்கு என்ன இன்னல்கள் இருக்கின்றனவோ அதைப் போலவே இவர்களுக்கும் இருக்கின்றன, அவர்கள் எப்படி சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்களோ, அதேபோல் அடக்கப்பட்டு, பிற்படுத்தப்பட்டுள்ள இந்த மக்களுக்கு ஆவன செய்யவேண்டும்" ஜனநாயக ரீதியாக இந்த மக்கள் பெரும்பான்மையானவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்காக நியாயமான நடவடிக்கைகளை நமது அரசு எடுக்கும் என்று நம்பிக்கை எனக்கிருக்கிறது.

இந்த முக்குலத்தோருக்கு, முதுகுளத்தூர், சங்கரன்கோவில், உசிலம்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள இவர்களுக்கு, இந்த தேர்வுக்குரிய விதிகள், கேள்விகள், பொர்சனலிட்டிகள், இந்த சட்ட முறைகளை எல்லாம் கொஞ்சம் ஒதுக்கி வைத்து மிகவும் பின்தங்கிய சமுதாயம் என்ற பெயரிலே அவர்களுக்குரிய பங்கை இந்த அரசு கொடுக்க வேண்டும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனே எடுக்கவேண்டுமென்று தாழ்மையோடு, பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக வரக்கூடியவர்கள், பின்தங்கிய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், முக்குலத்தோர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒரே ஒருவர் தான் இருந்தார்கள். வி.கே.சி. நடராஜன் அவர்கள்தான் இருந்தார்கள். அவரும் காலமாகிவிட்டார். அவர் காலமாகிவிட்ட இந்த சமயத்திலே இந்த குலத்தைச் சார்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளே கிடையாது. இந்த சமுதாயத்திலே, பதவி உயர்வுக்கு லாயக்கானவர்கள் நிறைய இருக்கிறார்கள். அதையெல்லாம் கவனித்து, இவர்கள் அடக்கப்பட்ட சமுதாயம், ஒதுக்கப்பட்ட சமுதாயம் என்பதை நினைவிலே கொண்டு, பதவி உயர்வுகளை அவர்களுக்குத் தரவேண்டும், அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யவேண்டுமென்று பணிவோடு, தாழ்மையோடு தெரிவித்து, நம்முடைய தமிழக அரசு கொண்டுவந்துள்ள இந்த அரிசன நல மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. எஸ். முத்துலிங்கம்**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பேறறிஞர் அண்ணா அவர்கள் மறைவுக்காக என்னுடைய சார்பாகவும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும் எங்களுடைய மனமார்ந்த அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அரிசன மானியக் கோரிக்கையின் மீது நான் சிலபல கருத்துக்களை கூற ஆசைப்படுகிறேன். நமது தமிழக அரசு பல கோடி ரூபாய்களை செலவு செய்து, அரிசன மக்களுக்கு நல்லபல நன்மைகளைச் செய்துவருவதை நாம் எல்லோரும் அறிவோம். அதற்காக நாம் எல்லோரும் பாராட்டவும் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம்.

அரிசனக் காலனிகளில் குடி தண்ணீர் வசதிக்காகவும், நடைபாதைகள் போடுவதற்காகவும், தெரு மின்விளக்குகள் அமைப்பதற்காகவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்கள் விடுதிகளில் இப்பொழுதிருக்கும் சலுகைகளை அதிகப்படுத்தி மாணவர்களை அதிகரிக்க வேண்டுமாய் மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால் மாணவர்கள் படிப்பு விஷயத்திலே முன்னேறிவருகின்றார்கள். அவர்களுக்கு மேன்மேலும் ஊக்கம் தருவதற்காக வேண்டி மாணவர் விடுதிகளிலே அதிகமாக இடம் கொடுத்து, அவர்கள் முன்னேறுவதற்கு நமது அரசு வழிவகை செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி ஹாஸ்டல்களில் நியமிக்கும்படியான வார்டன்கள் சுமார் 40 வயதிற்கு மேம்பட்டவர்களாகவும், அனுபவம் வாய்ந்தவர்களாகவும், ஆசிரியர்கள் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டியவர்களாகவும் இருந்தால், மிக நன்றாக இருக்கும். அம்மாதிரியாக இருக்கும்படி அரசு வழிவகை செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக, கூடுமானவரையில் அரிசன ஹாஸ்டல்களை உயர்நிலைப் பள்ளிகளுக்கு அருகாமையிலோ, அல்லது காலேஜ்களுக்கு அருகாமையிலோ அமைப்பது மாலச் சிறந்ததாகும். ஏனென்றால், அவர்கள் பள்ளியைவிட்டு மதிய உணவிற்கு வெகுதூரம் போய் சாப்பிட்டுவிட்டு வரவேண்டுமென்றால் காலதாமதமாகின்றது. ஆகவே, இந்த ஹாஸ்டல்கள் பள்ளிக்கு அருகாமையிலிருப்பதுதான் நன்றாக இருக்கும். அதற்கு அரசு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, மூன்று தாலூகாக்களுக்கு ஒரு வெல்பேர் தாசில்தார் நியமிக்கிறார்கள். மூன்று தாலுக்காக்களுக்கு ஒரு தாசில்தாரை நியமிப்பதனால் அதிகமான வேலை இருப்பதனாலே, அதை முடிப்பதற்கு முடியாமல் மிகவும் காலதாமதமாகிறது. ஆகவே, நமது அரசாங்கம் ஒரு தாலுகாவிற்கு ஒரு தாசில்தாரை நியமித்தால் உடனடியாக மற்ற எல்லா வேலைகளையும் துரிதமாக நடத்த ஏதுவாக இருக்குமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே போல் வெல்பேர், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களையும் நியமிக்கிறார்கள். அவர்களை மூன்று மாதம் அல்லது 6 மாதங்களில் மாற்றிவிடுகிறார்கள். அதனால் பல வேலைகள் தாமதப்பட்டு விடுகின்றன. ஆகவே, அவர்களை நிரந்தரமாக மூன்று ஆண்டுகளுக்குப் பணி புரியும்படி நமது அரசாங்கம் செய்யவேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக்கொண்டு, இத்துடன் எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. பி. எஸ். தனுஷ்கோடி**: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1969–70-ம் ஆண்டு அரிசன நல மானியக் கோரிக்கையின் மீது நான் கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில குறைகளை சொல்ல முன் வந்துள்ளேன். தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும் பகுதியாக, 1¼ கோடிக்குமேல் இந்த மாநிலத்திலே இருக்கிறார்கள். அவர்களுக்கு குடியிருப்பு வசதிகள்கூட இல்லாமல் இருக்கக்கூடிய ஒரு நிலையைப் போக்குவதற்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு, மூன்று வருடத்திற்குள் இந்த மனைப் பட்டாக்களை வழங்குவதற்கு வேண்டிய ஒரு புதிய திட்டத்தைத் தீட்டவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, காலேஜிலே படிக்கக்கூடிய மாணவர்கள் ஸ்காலர்ஷிப் பணம் பெறுவதற்கு நிரம்ப காலதாமதமாகின்றது. அதே போல் இன்றையதினம் பள்ளிகளுக்கும் கிடைக்காமல் இருக்கின்றன. உதாரணமாக நான் ஒன்று கூறுகின்றேன். திருத்துறைப்பூண்டி தாலுகாவிலே, ஆலத்தம்பாடி ஜானகி அண்ணி உயர்நிலைப்பள்ளி, தனியார் நடத்தக் கூடிய பள்ளி. அங்கு 230 மாணவர்கள் ஸ்காலர்ஷிப்புக்காக மனு கொடுத்தும் 90 பேர்களுக்குத்தான் கிடைத்திருக்கிறது, மற்றவர்களுக்குக் கிடைக்கவில்லை. அங்கே இருக்கிற சமூகநல அதிகாரியை சந்தித்துக் கேட்டபோது, "இந்தப் பள்ளி அதிகாரிகள் அனுப்பாமல் இருந்திருக்கலாம் அதனால் தான் கிடைக்கவில்லை" என்று சொல்லி இருக்கிறார்கள். சென்ற வருடம் 230 பேர் வாங்கி இருக்கிறார்கள். இந்த வருஷத்திலே 90 பேர்களுக்குத்தான் கிடைத்திருக்கிறது. மற்றவர்களுக்கு கிடைக்கவில்லை. இந்த மாதிரி குறைபாடுகள் இருக்கின்றன. இந்தக் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிவாசிகள், பழங்குடிமக்கள், மலைப் பிரதேசத்தில் இருக்கக்கூடியவர்கள் சர்க்கார் புறம்போக்கு நிலங்களிலே குடி இருந்து வருகிறார்கள். அந்தக் குடி இருப்பை அவர்களுக்குப் பட்டாசெய்து கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடி தண்ணீர் வசதிக்காக பல இலட்சக் கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டும், பல இடங்களிலேகூட தண்ணீர் வசதி இல்லாமல் இருக்கிறது. சாலை வசதிகளும் இடையாது, 2 வருடம், 3 வருடம் அடங்கலையேத் தேட வேண்டிய நிலை இருக்கிறது. அதிகாரி

அரிசனங்கள் குடியிருக்கும் குடியிருப்பு சர்க்காருக்குச் சொந்தமான ஜா நத்தம்புறம்போக்கு நிலமாக இருந்தால், அந்தக் குடியிருப்புமனைகளை அவர்களுக்கே ஜாரி செய்துகொடுத்துவிட்டால், இந்தக் குடியிருப்பு மனை கொடுக்கும் பிரச்னையை சுலபமாகத் தீர்த்துவிடலாம். நிலச் சொந்தக்காரர்கள் சர்க்கார் புறம்போக்கு நிலங்கள் தங்கள் அனுபவத்தில் இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்லி, தங்களுக்கு வரி போடவேண்டுமென்று கர்ணம், பட்டாமணியனிடம் கூறி, தாங்கள் வரி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட குடியிருப்பு நிலங்களை, சர்க்கார் புறம்போக்கு நிலங்களை தாங்கள் வரி செலுத்திக்கொண்டிருப்பதால் தங்களுக்கு பட்டா செய்துகொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக்கொண்டு வர விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது).

**திரு. மு. மாரிமுத்து :** தலைவர் அவர்களே, அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் இம்மன்றத்தில் வைத்துள்ள மானியக்கோரிக்கைகளை வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அரிசன மக்களின் நல்வாழ்வுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்து கடைசியில் கீழ்வெண்மணி சம்பவத்தால் பேரறிஞர் அண்ணா அவர்களின் உடல் நலம் பாதிக்கப்பட்டு, அந்த சமுதாயத்திற்காகவே, தன்னையே தியாகம் செய்த பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்கு அந்த சமுதாயத்தின் சார்பாகவும் எனது தொகுதி மக்களின் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணா அவர்களின் இலட்சியங்களையும், கொள்கைகளையும் தொடர்ந்து செயல்பட பல திட்டங்கள் வகுத்துள்ளது மிகவும் பாராட்டக் கூடியது. சமுதாயத்திலே மிக மிக பின் தங்கியுள்ள இம்மக்கள் மற்றவரைப் போல் வாழ கல்வியிலும், பொதுச் சுகாதாரத்திலும், பொருளாதாரத்திலும் முன்னேற பல திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக படிப்பு உதவித் தொகையும், மற்றும் தங்கிப் படிப்பதற்கு உண்டு உறைவிடப் பள்ளிகளும், மற்றும் மாணவ, மாணவியர் இல்லங்களும் தோற்றுவித்து, கல்விக்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது மிகவும் வரவேற்கக் கூடிய ஒன்றாகும். இத்திட்டத்தினை செயல் படுத்தும்போது துரிதப்படுத்தினால் மாணவர்கள் நல்ல முறையில் பயனடைய எதுவாக இருக்கும். குறிப்பாக கல்லூரிகளிலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கும், உயர்நிலைப் பள்ளிகளிலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கும் இந்த மானியத் தொகை வழங்கும்பொழுது, குறைந்தது ஆகஸ்டு மாத இறுதிக்குள்ளாவது வழங்க ஏற்பாடு செய்தால் மிகவும் நலமாக இருக்கும். மாணவர்கள் நல்ல முறையில் பயனடைய எதுவாயிருக்கும் என்று நான் கருதுகிறேன். மற்றும் அரிசன மாணவர்கள் இல்லத்தில் தங்கிப் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு இவ்வாண்டு மாதம் தலா ஒரு ஒரு ரூபாய் வீதம் அதிகப்படுத்தியிருப்பது பாராட்டக்கூடியது. அதற்காக நான் எனது நன்றியைத் தெரித்துக்கொள்கிறேன். அகவிலை கூடுதலாக உள்ள இந்தக் காலத்தில் இச்சிறு தொகையைக் கொண்டு மாணவர்களுக்கு உணவளிப்பது மிகவும் கஷ்டமாகயிருப்பதால், உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு குறைந்தது மாதம் தலா ரூ. 30 வரை உயர்த்தியும், அதே போன்று கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் அவரவர்கள் தங்கிப் படிக்கும் இல்லங்களுக்கு அவர்களுக்காக வருடத்தில் ஆகக்கூடிய செலவினை முழுவதும் ஏற்றுக் கொள்ள அரசு ஆவன செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மாணவ இல்லங்கள் பல இடங்களில் வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றன. வசதியில்லாத இடங்களில் வைத்துப் பராமரிக்கப் படுகின்றன. அங்கே உள்ள குறைகளை நிவர்த்திக்க, வாடகைக் கட்டடங்களில் இருக்கும் இல்லங்களுக்கு புதுக்கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். என்னுடைய தொகுதியில், கொங்கவல்லி, ஆதகமூர் போன்ற இடங்களில் மாணவ இல்லங்கள் இருக்கின்றன. அந்த மாணவ இல்லங்களுக்கு இடம் இல்லாமல் புதிதாக



கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதே போல புதிய இல்லங்கள் தம்மம்பட்டி, வீரகனூர், தலைவாசல் ஆகிய இடங்களில் மாணவ இல்லங்கள் தோற்றுவிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதி, பச்சைமலையில் ஏழு கிராமங்களில் மலைஜாதி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். பஞ்சாயத்து யூனியனிலே பள்ளிக் கூடம் கட்டியிருக்கிறார்கள். இருந்தாலும், ஆசிரியர்கள் சரிவர பணி செய்யவில்லை. ஆகவே, அரிசன நலத் துறையில் வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மருத்துவ அதிகாரிகள் மாணவ இல்லங்களை பார்வையிடுவதில்லை என்ற குறையைப் போக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்லூரி மாணவர் முன்னேற்றத்திற்கு இவ்வாண்டு வகுத்துள்ள பயிற்சி அளித்தல் முறை மிகவும் பாராட்டக்கூடியது. அதை வரவேற்று அதற்கு அரசுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

சென்ற ஆண்டு வீட்டு மனைக்காக நிலங்கள் அதிகமாக ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்கப் பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் இருந்து வரப்பட்ட கோரிக்கைகளை அரசாங்கம் பரிசீலனை செய்து உடனடியாக அவர்களுக்கு வேண்டிய வீட்டு மனைகளைக் கொடுக்க உத்தரவு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். குறிப்பாக, கெங்கவல்லி, உலிபுரம், ஆணையாம்பட்டி, காட்டுக்கோட்டை போன்ற கிராமத்திற்கான கோரிக்கைகளுக்கு இதுவரை உத்தரவு வழங்கப்படவில்லை. அவற்றை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கெங்கவல்லியிலிருந்து வலசைக்கல்பட்டி வரையிலும், சிடுவாச்சூரிலிருந்து இளந்துவாரி வரையிலும் அப்பகுதியில் வாழ்கின்ற மலைஜாதி மக்களுக்கு, சாலைகளை அமைத்துக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும். மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலில் முறையிட்டு இருக்கிறேன். அந்த முறையீடு அரசுக்கு வந்திருக்கிறது. உடனடியாக அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களின் தொழில் வளத்திற்காக சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு பஸ் போக்குவரத்து திட்டத்தில் பங்குத்தொகை ரூ. 25,000-க்கு மேல் சேர்க்கப்பட்டுள்ளது. அரசு மானியத்துடன் இத் திட்டம் செயல்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது.)

*** திரு எம். சுரேந்திரன் :** துணைச் சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு சபைமுன்னால் வைக்கப் பட்டிருக்கும், அரிஜன, பழங்குடி மக்கள், பிற்பட்ட வகுப்பினர் நலத்திற்காக செலவு செய்ய என்று 1969-70 வருடத்திற்காக ரூ. 6,97,01,600 அளிக்க வேண்டும் என்று அரிஜன நலத் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சபைமுன்னால் வைத்திருக்கிற கோரிக்கையில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. இந்த அரசு அரிசனங்களின், பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காக உறுதியான நடவடிக்கைகள் எடுக்குமென்று நம்பிக்கை இருக்கிறது. ஆனால், இந்த மானியக் கோரிக்கை பற்றிய விளக்கத்தைப் பார்த்தால், பழைய கால முறையிலேயே ஒவ்வொரு பகுதிக்கும் சிறிது, சிறிது தொகைகளை ஒதுக்கியிருக்கிறது. எந்த விதமான புதிய முறையையும் காணவில்லை. சமுதாயத்தில் மிகச் சீர்கேடுற்ற, பொருளாதாரத்தில், சமுதாய நிலையில் மிக அடித்தளத்தில் இருக்கின்ற, இந்த மக்களை ஒரு சராசரி மனிதனாக மாற்றுவது என்பது சாதாரண வேலை இல்லை. நீண்ட நெடுங்காலமாக இருக்கிற அதே வழியைத்தான் காண்கிறோம். புதுமை ஒன்றையும் கொண்டு வரவில்லை. அதிலே பல கஷ்ட நஷ்டங்கள், சங்கடங்கள், நெருக்கடிகள், எதிர்ப்புகள் இருக்கின்றன. இவை எல்லாமே இருக்கக் கூடும். தவிர்க்க முடியாது.

[திரு. எம். சுரேந்திரன்] [1969 மார்ச் 13

மேலும், அந்தந்தப் பகுதியில் இருக்கிற மாவட்ட அரிசன நல அதிகாரிகள் எவ்வளவு தூரம் சிரத்தை காட்டுகிருர்கள் என்று பார்த்தால் அவர்களுடைய சிரத்தை மிகக் குறைவான அளவில்தான் இருந்து வரு கிறது. கல்வியும் பொருளாதாரமும் பெற்றுவிட்டால் அரிசனங்கள் உயர்ந்தவர்களாக ஆகிவிடுவார்களா என்பது கேள்விக்குரிய விஷயம். கல்வியிலும் பொருளாதாரத்திலும் உயர்ந்து வந்திருக்கிறவர்கள்தான் இப்போது அதிகாரிகளாகவும், மற்றவர்களாகவும் இருக்கிருர்கள். அவர் கள் மற்றவர்கள் சாதாரணமானவர்கள் என்ற அளவில்தான் நினைக் கிருர்கள். தங்களைப்போல் மற்றவர்களை உயர்த்த வேண்டுமென்ற உணர்வு அவர்களுக்கு வருவதில்லை. மாவட்ட அரிசன நலத் துறை அதிகாரிகளாக இருப்பவர்கள் தாங்கள் ஒரு சமுதாயத்தை மாற்று கின்ற பணியிலே ஈடுபட்டிருக்கிருேம் என்ற உணர்விலே செயல்படுபவர் களாக இருக்க வேண்டும். நாம் அந்தப் பணியை என்றைக்கு நிறைவேற்றுகிருேமோ அன்றைக்குத்தான் அரிசன சமுதாயம் மேம்பாடு அடைய முடியும். இத்தனை வருடங்களுக்குள் இன்னின்ன காரியங் களைச் செய்து முடிக்க வேண்டும் என்று வரையறை செய்துகொண்டு பணியாற்ற வேண்டும். இவ்வளவு வருடங்களில் இவ்வளவு காரியங் களைச் செய்கிருேம், என்ற திட்டத்தை வகுத்துக் கொண்டு, அதன் அடிப்படையில் இந்தப் பிரச்சினைகளை ஆராய வேண்டும். முற்போக்கான இடங்கள், பிற்போக்கான இடங்கள் என்பதைப் பிரிக்க வேண்டும். இனி வருங்காலத்திலாவது அப்படிச் செய்தால், அதிகமான பலனைப் பெற முடியும் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ந. சோமசுந்தரம்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டோர் நல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதற்கு முந்திய அரசாங்கம் செய்த நன்மை களோடு, இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையை வைத்துப் பார்த்தாலே, " இந்த அரசு பலகோடி ரூபாய்களை தாழ்த்தப் பட்டோர் நலனுக்கு ஒதுக்கி, பல உதவிகளைச்செய்து வருகிறது " என்பது நன்கு தெரியவரும். காங்கிரஸ் அரசாங்கம் செய்யாத பல காரியங்களை இந்த அரசு செய்து வருகிறது. குறிப்பாக மாணவர்களுக்கு உரிமைக் கார்டுகள் வழங்குவதன் மூலமாகவும், கலப்புத் திருமணங்களுக்குப் பரிசு அளிப்பதன் மூலமாகவும் பல உதவிகளைச் செய்து வருகிறது. இரண்டு ஆண்டுகளாக இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசிய எதிர்கட்சி உறுப்பினர்கள், " நாங்கள் எங்கள் ஆட்சியில் இரண்டு மந்திரிகளுக்கு இடம் அளித்தோம் " என்று பேசி வந்தார்கள். இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களை, கலப்படமில்லாத இரண்டு தாழ்த்தப்பட்டவர்களை அமைச்சர்களாக நியமனம் செய்ததற்கு எதிர்க் கட்சித் தலைவர் நன்றியாவது சொல்வார் என்று எதிர்பார்த்தோம். அதை அவர்கள் அப்படியே விட்டுவிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு தாழ்த்தப்பட்டவர்களுக்கு நன்மை செய்வதிலே மிக மிக அக்கறையை காட்டி வருகிறது என்று கூற விரும்புகிறேன். திரு சிவசுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது எதைஎதையோ குறிப்பிட்டார்கள். அவர் பக்கத்திலே உட்கார்ந்துகொண்டிருந்த பலரை இன்னமும் பார்க்கிருேம். காங்கிரசிலே யார், யார் இருக்கிருர்கள். என்ருல், ஏழை அரிசனங்களுக்குத் தொல்லைகளைத் தருபவர்கள், அவர்களை வாட்டி வதைப் பவர்கள் எல்லாம் அங்கேதான் இருந்துகொண்டிருக்கிருர்கள்.

கீழ்வெண்மணியில் நடந்த கொடுமையான நிகழ்ச்சியை மனிதாபிமானமு உள்ளவர்கள் எல்லோரும் உணருகிருர்கள். அங்கே மிராசுதாரர்கள் கொடுமைகளைச் செய்தார்கள். காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே ஆதித் திரா விடர்கள் தலைநிமிரவிடவில்லை. அவர்கள் 1947-லிருந்து ஆதிதிராவிட மக்களை தலை நிமிர விடாமல் எங்கெங்கே கூலி உயர்வு கேட்கிருர்களோ அங்கெல்லாம் அவர்களைக் காட்டுமிராண்டித்தனமாக நசுக்கி வந்தார்கள்.



1969 மார்ச் 13] [திரு. ந. சோமசுந்தரம்]

அவர்களுடைய கொடுமைகளுக்குச் சில உதாரணங்களைத் தர விரும்பு கிறேன். களப்பாறை குப்புசாமி என்பவர் சிறையில் அடித்துக் கொல்லப் பட்டார். மற்றும் நடேசன் என்பவரை வெட்ட வெளியிலே நிற்க வைத்துச் சுட்டார்கள். இப்படி அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் அவர்களுடைய கொடுமை பெருத்த அளவில்தான் இருந்து வந்தது. பூண்டி வாண்டையார் அவர்களும், கபிஸ்தலம் மூப்பனுர் அவர்களும், குன்னியூர் சாம்பசிவம் ஐயர் அவர்களும், நெடும் பாலம் முதலியார் அவர்களும் இன்னும் பல முதலாளிகளும் காங்கிரசிலே இருக்கிருர்கள். அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்றைக்கும் அந்தக் கொடுமைகளைச் செய்து வருகிருர்கள். தயவுசெய்து காங்கிரஸ்காரர் கள் இதை மறந்துவிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு இது தெரியாமல் இருக்கலாம். இன்றும் அந்தமாதிரியான கொடுமை காங்கிரஸ்காரர்களால் தஞ்சை மாவட்டத்தில் செய்யப்படுகிறது. காங்கிரஸ் கட்சியை பக்கத்தில் வைத்துக்கொண்டு இந்தக் கொடுமைகள் நடக்கின்றன என்பதை அவர் மறந்துவிட வேண்டாம். மேலும் இந்த ஆட்சிக்கு இழுக்கை உண்டாக்க வேண்டுமென்பதற்காகச் சில அதிகாரிகள் இருக்கிருர்கள். அவர்கள் காங்கிரஸ்காரர்களோடு இரண்டறக் கலந்து விட்ட சகவாச தோஷத்திஞல் அப்படிச் செய்கிருர்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. உயர்தர போலீஸ் அதிகாரிகள் தக்க நேரத்தில் உரிய நடவடிக்கைகளை எடுக்காமல் இருப்பதும், அமைச்சர்களின் கவனத் திற்குக் கொண்டுவராமல் இருப்பதும் அவர்களுடைய வாடிக்கையாக இருந்து வருகிறது. அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கைகளை உடனடி யாக எடுக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்களுக்கு உரிமைக் கார்டுகள் வழங்கி, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எல்லோருமே கல்வி கற்க மறைந்த முதல்வர் அறிஞர் அண்ணு அவர்கள் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். என்னுடைய தொகுதியில் இருக்கிற பூண்டி வாண்டையார் ஏற்படுத்திய புஷ்பம் கல்லூரியில், " உங்களுடைய கார்டுகளை நாங்கள் மதிக்க மாட்டோம் " என்று மாணவர் களிடம் சொல்லியிருக்கிருர்கள். அந்தக் கல்லூரியில் அப்படிச் சொன்னது மட்டுமல்ல, அரசாங்கமே நடத்துகின்ற தஞ்சாவூர் சரபோஜி அரசினர் கலைக் கல்லூரியின் முதல்வர் கேப்டன் திரு. முருகையன் அவர்கள் " அரிசன நல இலாகா மூலமாக அளிக்கப்படும் கார்டுகளுக்கு நாங்கள் மதிப்பு அளிக்க முடியாது " என்று சொல்லிவிட்டார்கள். எத்தகைய கல்லூரி களில் கல்லூரி முதல்வர்கள் தாழ்த்தப்பட்ட இனக் கார்டுகளுக்கு இடம் அளிக்க மறுக்கிருர்களோ, அத்தகைய கல்லூரி முதல்வர்களின்மீது அர சாங்கம் தக்க நடவடிக்கையை எடுக்க வேண்டும். யார் விண்ணப்பம் செய்தாலும் இடம் இருந்தால் மாணவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று கடுமையான உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும். புரட்சிகர மான மாறுதல்கள் இந்த ஆட்சியிஞல் ஏற்படும் என்று மக்கள் எதிர் பார்த்தார்கள். அவர்களுடைய எண்ணத்தில் ஏமாற்றத்தை உண்டு பண்ணக்கூடாது.

அடுத்தபடி, ஆதித்திராவிடர்கள் குடியிருக்கிற குடியிருப்பு நிலங்களை அவர்களுக்கே சொந்தமாக்கித் தரவேண்டும். அப்படி அந்த நிலம் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இல்லாவிட்டால், அந்த நிலத்தின் உரிமை யாளர் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்து உரிய பணத்தைப் பெற்றுக் கொள்ள வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த அடிப்படையிலே அவர்களுக்கு ஒரு பொருளாதார ஏற்றத்தை அளிக்க புறம்போக்கு நிலங்களை அளித்தாக வேண்டும். உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் கிடைக்கிற விவசாய நிலங்களை ஆதித்திராவிட மக்களுக்கு மட்டுமே அளிப்பது என்ற முடிவான உத்தரவை அரசாங்கம் அனுப்ப வேண்டும். ஆக வீட்டு மனை அளிப்பது, கல்விச் சலுகை அளிப்பது, உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் கிடைக்கிற நிலங்களை அளிப்பது ஆகிய இந்த மூன்று திட்டத்தைமட்டுமாகிலும் வைத்துக்கொண்டு, அரசாங்கம் உடனடியாகச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. மு. முத்தையா :** அவைத் தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்றும் அறியேன் பராபரமே" என்றார் தாயுமானவர். எல்லோரும் நன்றாக வாழவேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்றால் விவசாயத்தில்தான் மிக கவனம் செலுத்தவேண்டும். அந்த விவசாயத்தில் இன்று பெரும்பாலும் ஹரிஜன மக்கள்தான் விவசாயிகளாக, விவசாய கூலிகளாக இருந்து வருகிறார்கள். பன்னெடுங் காலமாக தொன்றுதொட்டே காடு மேட்டையெல்லாம் அழித்து கழனியாக்கி செந்நெல்லும், கரும்பும், விளையும் விளைநிலமாக ஆக்கி வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய நிலை இன்றைக்கு மிகவும் பின் தங்கியே இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயத் துறையில் மின்சாரம் வழங்குவது என்றால் ஹரிஜனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஏனென்றால் ஒரு கிராமத்தில் நான்கு பேர் மின்சாரத்திற்காக விண்ணப்பம் போட்டால் 3 பேர்களுக்கு கிடைத்துவிடும். நான்காவது நபர் ஹரிஜனன் என்றால் கிடைக்காது. அப்பேர்ப்பட்ட சூழ்நிலைதான் இன்றைக்கும் இருக்கிறது.

என்னுடைய திருநெல்வேலி மாவட்டத்தில் ஹரிஜன நல அதிகாரியாக கசமுத்து தாஸ் என்பவர் இருக்கிறார். வேறு யார் போய்ச் சொன்னாலும் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறார். ஹரிஜன மாணவர்களுக்காக நான் போய்ச் சொன்னால் கொடுப்பதில்லை. இதை அரசு கவனிக்க வேண்டும்.

இன்றைக்கு கீழ்வெண்மணி சம்பவத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நமக்கு என்ன தெரிகிறது? எந்த இடத்தில் ஆனாலும் சரி—எல்லோரும் ஹரிஜனங்களைத்தான் பயன்படுத்திக்கொள்வார்கள். எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி—கடைசியில் அவர்களை விட்டுவிடுவார்கள். உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். ஓர் ஊரில் ஒற்றைத் தலைவலிக்காரியும், ஹோமியோபதி டாக்டரும் இருந்தார்கள். அந்த ஊரில் இருந்த அந்த ஒற்றைத்தலைவலிக்காரியோடு அந்த டாக்டருக்கு கள்ள நட்பு. ஒருநாள் அந்த பெண்ணின் புருஷன், "என் மனைவிக்குத் தலைவலி" என்று அந்த டாக்டரிடம் வந்தான். அவனை எப்படியாவது ஊரைவிட்டு அனுப்பி விட்டால், அவன் மனைவியோடு தாம் கவலையில்லாமல் வாழலாம் என்று நினைத்த டாக்டர், தலைவலி போக இமயமலையில் உள்ள ஒரு கல்லைக் கொண்டுவரச் சொன்னார். அவனும் சரியென்று ஊரைவிட்டுக் கிளம்பி விட்டான். இந்த டாக்டர் அவன் மனைவியோடு கள்ளத் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் அந்தப் பெண், அந்த டாக்டரிடம், "நம் நேர்த்திக்கடனுக்காக நான் மயிலாட்டம் ஆட வேண்டும். நீங்கள் மத்தளம் அடிக்க வேண்டும்" என்றாளாம். டாக்டர் உரலை மத்தளமாக வைத்துக்கொண்டு அடிக்கின்றார். அவள் நார்க்கட்டிலில், மத்தியில் துவாரம் வைத்துக்கொண்டு மயிலாட்டம் ஆடுகின்றாள். தலைவலிக்காக, கல்லு தேடி போனவர் அங்கே சாவானோ, நாம் இங்கே வாழ்வோமோ என்று ஜாலியாகப் பாடுகின்றாள். பாதிவழியில் சந்தேகப்பட்டு திரும்பிய அவள் புருஷன் அங்கே வந்துவிட்டான். விஷயம் தெரிந்தவுடன் தன் மனைவியை "டைவர்ஸ்" பண்ணிவிட்டான். அப்படித்தான் இன்றைக்கு எந்தக் கட்சியானாலும்—இந்த மக்களை (ஹரிஜன மக்களை) தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றார்களே தவிர, அப்புறம் டைவர்ஸ் பண்ணிவிடுகிறார்கள். இன்றைக்கு காலை இந்த மானியக் கோரிக்கையில் எவ்வளவு தகராறு வந்தது? வேறு மானியக் கோரிக்கையில் வந்ததா?

என்னுடைய ஒட்டப்பிடாரம் தொகுதியில் வடருகல்மேடு, குமாரபுரம், வேலாயுதபுரம், பாமன்பச்சேரி என்ற நான்கு ஹரிஜன சேரிகள் இரு[illegible]கின்றன. அங்கே பள்ளிக்கூடம் வேண்டும் என்று கேட்டோம். 300-க்கு மேல் ஜனத்தொகை இருப்பதனால் பஞ்சாயத்து யூனியன் நான்கு கிராம[illegible]களிலும் பள்ளிக்கூடம் கொடுத்தது. ஆனால் அதற்கு அரசாங்கத்திடம் இருந்து அங்கீகாரம் இல்லை. யாரோ சொன்னார்கள் என்பதாக அங்கீகாரம் மறுப்பது நியாயமா? உடனே அந்தப் பள்ளிக்கு அங்கீகாரம் [illegible] வேண்டும்.





மேலும், தீண்டாமை ஒழியவேண்டும் என்று இன்று எல்லோரும் சொல்கிறார்கள். அப்படியானால், பெயருக்குப் பின்னால் இருக்கின்ற ஒட்டு நீக்கப்பட வேண்டும். காங்கிரஸ் சர்க்கார் ஹரிஜனங்களுக்கு பாராளு மன்றத்தில் தனித்தொகுதி கொடுத்தார்கள். அதைப்போலவே பஞ்சாயத்து யூனியன்களுக்கு, சட்ட மேல் அவைக்கு தனி ஸ்தானம் ஒதுக்க தி.மு.க. அரசு மிகவும் கடமைப்பட்டுள்ளது என்று சொல்லி உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள அரிசன நலத்துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து, பிரதான எதிர்க்கட்சி கொடுத்திருக்கக்கூடிய வெட்டுப் பிரேரணைகளை எதிர்த்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பின் தங்கிய வகுப்பினர்களுக்கும் நல்ல பல திட்டங்களை இந்த மானியக் கோரிக்கையில் சேர்த்திருக்கிறார்கள். பொதுவாக ஹரிஜன மக்களுடைய குறைகள் நீண்ட காலமாகவே தீர்க்கப்படாமல் இன்னமும் இருந்துகொண்டிருக்கிறது. 20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் ஹரிஜனங்களுக்காக ஆயிரக்கணக்கில் பணம் ஒதுக்கி எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துவிட்டதாக அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர அவர்களுடைய பிரச்சினை தீரவில்லை.

முக்கியமாக அவர்களுக்கு நல்ல முறையில் கல்வி கற்க வசதி செய்ய வேண்டும், வீடுகள் கட்டிக்கொள்ள மனைக்கட்டுகள் கொடுக்க வேண்டும். நல்ல குடிதண்ணீர் வசதி, பாதை வசதி செய்துதரப்பட வேண்டும். ஆக இந்த நான்கு பிரச்சினைகளில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். இத்துறைக்காக நாம் ஆயிரக்கணக்கில் பணம் ஒதுக்கினாலும் அவை சரியான முறையில் அவர்களுக்குப் பயன் அளிக்கிற வகையில் செலவு செய்யப்படவில்லை என்பதுதான் எனக்குத் தெரிந்த வரையில் சொல்ல முடியும்.

அது மட்டுமல்ல. இன்றையதினம் அவர்களுக்காக ஒதுக்கப்படுகிற ஸ்காலர்ஷிப் பணம் அவர்களுக்கு கல்லூரியில் சேர்ந்த 15 தினங்களுக்குள் கிடைக்கச் செய்ய வேண்டும். சென்ற ஆண்டுதான் இந்த முறையைக் கொண்டு வந்தார்கள். முன்பெல்லாம் மூன்று நான்கு மாதங்களாகும். ஆகவே உடனடியாக அந்தப் பணம் அவர்களுக்குக் கிடைக்க வழி செய்ய வேண்டும். உரிய காலத்தில் பணம் கொடுக்கப்பட்டால்தான் அவர்கள் கஷ்டமின்றி படிக்க வசதியேற்படும். அடுத்து ஹரிஜனக் காலனிக்காக நாம் மனைகளை எடுக்கிறபோது, பலர் ஹைக்கோர்ட் சென்றுவிடுகிறார்கள். மனை கொடுக்கும் விஷயத்திலும் அப்படித்தான். ஆகவே சட்டத்திலேயே ஹரிஜனக்காலனி, மனைக்கட்டு—இவை சம்பந்தமாக யாரும் கோர்ட்டுக்குப் போக முடியாதபடி சட்டம் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே அவர்களுக்கு நாலு எக்கர் என்று இடத்தைப் பார்த்து ஒதுக்கி செய்ய வேண்டிய சடங்குகளையெல்லாம் செய்ததற்குப் பிறகு நிலத்திற்குரியவர் கோர்ட்டுக்குப் போனால் மூன்று, நான்கு ஆண்டுகள் ஆகிவிடுகிறது. அவர்கள் மனைக் கட்டுகள் தங்களுக்குக் கிடைக்குமா, கிடைக்காதா என்று திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அரிசன மக்களுக்கு குடிநீர் வசதிக்காகவும், ரோடுகள் வசதிக்காகவும், கல்வி வசதிக்காகவும் தனியாக கவனம் செலுத்தினால்தான் அவர்களுடைய பிரச்சினையை, நாட்டிலே நெடுங்காலமாக பின்தங்கிய நிலையில் உள்ள அந்த மக்களுடைய பிரச்சினையை, தீர்த்தவர்களாக ஆவோம். அடுத்த ஆண்டிலாவது அமைச்சர் அவர்கள் அதிகமாகத் தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனக் காலனிகளுக்கு மின்விளக்குகள் போடுவது சம்பந்தமாக சர்க்கார் ஒரு உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமத்திலே மின் விளக்குகள் போட வேண்டுமென்றால் முதலிலே அந்தக் காலனிகளுக்குப் போட்டுவிட்டு, பிறகுதான் மற்ற இடங்களுக்குப் [illegible]

வேண்டுமென்ற ஒரு உத்தரவு அரசாங்கம் போட வேண்டும். அதில்
தவறு ஒன்றும் இல்லை. அந்த மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில்
இருக்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் அதிலே தனியாக கவனம்
செலுத்தி, முதலிலே மின்விளக்குகள் அவர்களுக்குப் போட்டுவிட்டு, பிறகு
மற்ற இடங்களுக்குப் போடக் கூடிய முறையை ஏற்படுத்த அதற்கான
உத்தரவைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்
கப்பட்டது).

* திரு, எஸ். ராமலிங்கம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
இப்பொழுது எங்கள் கட்சியின் சார்பாகக் கொண்டுவரப்பட்டிருக்கும்
வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகளை இந்த ஹரிஜன,
பின்தங்கிய, மானியக் கோரிக்கையின் மீது சொல்லிக்கொள்ள ஆசைப்படு
கிறேன். ஹரிஜன பின்தங்கிய வகுப்பாரின் நலனிலே எவ்வளவு அக்கரை
இருக்கிறது என்பதைப்பற்றியும், இந்தப் பிரச்சினை எவ்வளவு கொரேத்
தன்மை வாய்ந்தது என்பதைப்பற்றியும் இந்தச் சபையிலே இந்த மானி
யம் வருகிறபொழுது எவ்வளவு சூடாக ஆரம்பிக்கப்பட்டது என்பதிலிருந்தே
தெரியும். இந்தப் பிரச்சினையை, ஹரிஜன மக்கள், பின்தங்கியவர்கள்,
மலைஜாதியைச் சேர்ந்தவர்கள் இவர்களுடைய பிரச்சினையை எப்படியாவது
தீர்க்க வேண்டும். சமுதாயத்தினுடைய அடித்தளத்தில் உள்ளவர்கள்,
மற்ற, சமுதாயத்தில் உள்ளவர்களின் பிரச்சினையைப்போல் மேலெழுந்த
வாரியாக இவர்கள் பிரச்சினையைக் கவனிக்காமல் சீக்கிரமாக இந்தப்
பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள் எதிர்க் கட்சியிலிருந்தபோது மேவகமாக
இந்தப் பிரச்சினையைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். காங்கிரஸ் சர்க்காரில்
இந்தப் பிரச்சினை துரிதமாகத் தீர்க்கப்படவில்லையே என்று சொல்லியிருக்
கிறார்கள். இன்றைக்கு அவர்கள் அமைச்சராக அந்தத் துறைக்கு வந்
திருக்கிறார்கள். இப்பொழுது எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள்
கொஞ்சம் உணர்ச்சி வயப்பட்டு இந்தப் பிரச்சினையை எடுத்துச் சொன்னால்
அவர்கள் அதை வீம்பு ஆக எடுத்துக் கொண்டுவிடுகிறார்கள். இங்கே
அந்தப் பிரச்சினையை எடுத்துச் சொல்வது வீம்புக்காக அல்ல, வேதனை
கலந்த பிரச்சினை என்பதால்தான். எனவே அவர்கள் அதை வீம்பாக
எடுத்துக்கொள்ளாமல் தீர்த்து வைக்க வேண்டியதற்கான முயற்சிகளை
எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையிலே அவர்களை உயர்த்த வேண்டுமென்பதற்காக அதிக
மாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது அதை நான் பாராட்டுகிறேன். ஆனால்
பொதுச் சுகாதாரத்திற்கு அதிகமாக ஒதுக்கவில்லை. இப்படி ஒரு பக்கம்
அதிகமாகவும், இன்னொரு பக்கம் குறைவாகவும் ஒதுக்கியிருக்கிறார்கள்.
காரணம் கேட்டால் மத்திய சர்க்காரிலிருந்து நிதி வரவேண்டுமென்று
சொல்கிறார்கள். மத்திய சர்க்காரிலிருந்து பெறுவது, அவர்களைக் கேட்பது
எல்லாம் உங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் அங்கு கையேந்திக்
கொண்டிருப்பதைவிட, இங்குள்ள இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக
அவர்களுக்கு வீட்டு மனைகள் கொடுப்பதற்காக, அவர்களை பொருளாதாரத்
துறையிலே முன்னேற்றுவதற்காக, பொதுச் சுகாதாரத்தை அபிவிருத்தி
செய்வதற்காக, மாநில சர்க்காரைப் பொறுத்தவரையில் உங்கள் சக்திக்கு
உட்பட்டு வழிவகைகளைக் காண வேண்டும். வழியிருக்கிறது. சென்ற
ஆண்டிலே பேசும்பொழுதே நான் குறிப்பிட்டேன். உங்கள் கையிலே
பொறுப்பை வைத்துக்கொண்டு, உங்கள் கடமைக்குட்பட்டு நீங்கள் செய்ய
லாம், அதற்கு வழி இருக்கிறது. கோயில் நிலங்கள் இருக்கின்றன,
குத்தகைக்கு விடுவதன் மூலமாகவோ சாகுபடி செய்வதன் மூலமாகவோ
வருகிற வருமானத்தையெல்லாம் எடுத்து இதிலே ஏன் செய்யக்கூடாது
என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் எதிர்க்கட்சியிலிருந்த
போது சொன்னார்கள். கோயில் நிலங்களில் கைவைப்பதற்கு காங்கிரஸ்
காரர்கள் பயப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு அந்த
மாதிரி பயம் இந்த இடத்திலே வந்து உட்கார்ந்தவுடனே கைவைத்தால்
அதைப்பற்றி ஏதாவது சொல்வார்கள், இந்த நாற்காலி பறிபோய்விடும்
என்று எண்ணுகிறார்கள். அமைச்சர் அவர்கள் உங்கள் இல்லாவுக்கு
அந்தபொழுது "பிராண் ரிப்போர்ட்டில் [illegible]" என்று





கேட்டதற்கு அந்த வருமானங்களை ஹரிஜன மக்களுக்குக் கொடுக்கப்
போகிறேன் என்று சொல்லவில்லை. யாத்ரீகர்களுக்கும், பக்தர்களுக்கும்
கொடுக்கப்போகிறேன் என்று வழக்கமாகச் சொல்லுவதுபோல் சொன்னார்
கள். புதுமாதிரியாக, புரட்சிகரமாக சொல்லவில்லை. முதலாவது ஜார்ஜ்
ஆண்டுவிட்டார், இரண்டாவது ஜார்ஜ் பொறுப்பேற்றுக்கொண்டார் என்ற
முறையிலேதான் இருக்கிறது.

தஞ்சாவூர் சோமசுந்தரம் அவர்கள், நீங்கள் நிலச்சுவான்தார்களை
ஆதரிக்கிறீர்கள் நாங்கள் நிலச்சுவான்தார்களோடு தொடர்பு கொண்டவர்கள்
அல்ல என்று சொன்னார்கள். அவர்கள்தான் நிலச்சுவான்தார்களுக்குப்
பிரதிநிதிகளாக உள்ள சுதந்திராக் கட்சியோடு கூட்டு வைத்து இருக்கிறார்
கள். அவர்களிடமிருந்து நிலத்தைப் பிடுங்கவில்லை, அதனால்தான் எங்களுக்கு
இந்தக் கெட்டபெயர் என்று நினைக்கிறேன். திரு. சிவசுப்பிரமணியம்
அவர்கள் சொன்னதைப்போல் ஒரு மினிமம் புரகிராம் போட்டு வீட்டு மனை
வசதியாவது செய்து கொடுக்கவேண்டும். பி.பி. வைத்தியநாதன் கமிட்டி
ரிப்போர்ட்டு இருக்கிறது. மறைந்த பரமேஸ்வரன் கமிட்டி ரிப்போர்ட்டு
இருக்கிறது. அதை ஆராய்ந்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.
மத்திய சர்க்காரிலிருந்து பிளானிங் கமிஷனிலிருந்து, பினான்ஸ் கமிஷனி
லிருந்து பெறுவதோடு உங்கள் சக்திக்கு உட்பட்ட வகையில் இங்கு வருவாய்
பெறுவதற்குத் தைரியமாக முன்வர வேண்டும். இரண்டு, மூன்று வரு
டங்களுக்குள்ளாக இதைத் தீர்க்கக்கூடிய பொறுப்பை, நாற்காலியில்
வந்து அமர்ந்திருக்கிற நீங்கள் எடுத்துக் கொண்டால்தான் இந்தப் பிரச்சினை
தீரும். எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்
கிறோம். நீங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். மக்களுக்கு உங்களிடத்
திலே நம்பிக்கை இருக்க வேண்டும். எனவே இந்தப் பிரச்சினையை
விரைவிலே தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்
கப்பட்டது).

* திரு. மு. ராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர்
அண்ணா அவர்களுடைய மறைவு குறித்து என்னுடைய தொகுதி மக்க
ளுடைய சார்பாகவும் என்னுடைய சார்பாகவும் நான் அஞ்சலியைச்
செலுத்திக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்
கின்ற மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில கருத்துகளைச் சொல்ல
விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் மிகச் சிறந்த முறையிலே
அரிசன மக்களுக்காக தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக பின்தங்கிய சமு
தாயத்திற்காக என்ன என்ன திட்டங்களை உருவாக்கியிருக்கிறோம் என்பதை
இந்தப் புத்தகத்தின் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார்கள். இருபது
ஆண்டுகளாக இல்லாத கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். வேண்டு
மென்றே இந்த அரசின்மீது காங்கிரஸ்காரர்கள் பல குற்றச்சாட்டுகளைக்
கூறியிருக்கிறார்கள். இதுவரையில் இல்லாத சில அம்சங்கள் இந்த
அரசாங்கத்தினால் புகுத்தப்பட்டு இருக்கின்றன. சில அரிசனக் குடும்பங்
களுக்கு வியாபாரத் துறையிலே ஈடுபட்டு முன்னேறுவதற்காக இரண்டு
லட்சம் ரூபாய் 1969-70 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். இது
ஒரு நல்ல எடுத்துக்காட்டு. அவர்கள் இதைப் பாராட்ட வேண்டாமா?

நம்முடைய சமுதாயம் நல்ல முறையிலே வாழ்வதற்கேற்ற முறையில்
மனைக்கட்டுகள் வழங்கியிருக்கிறார்கள். குடியிருப்பு வசதியைப் பொறுத்த
வரையில் கடந்த இருபது ஆண்டுக் காலமாக எந்தவிதமான காரியமும்
செய்யவில்லை. இப்பொழுது அமைச்சர் அவர்கள் ரூ. 125 மானியமாகவும்
125 ரூபாய் கடனாகவும் கொடுக்க வழிசெய்திருப்பது பாராட்டுக்கு உரிய
தாகும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆயிரக்கணக்கான மனைக்கட்டுகள்
வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். வீடுகள் கட்டிக்கொள்ள
அரிசன மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்ற நிலைமையை உணர்ந்து இந்த
அரசு இந்த நல்ல திட்டத்தைச் செய்திருக்கிறது. மேலும் பல நல்ல
காரியங்களை அரிசன மக்களுடைய முன்னேற்றத்திற்காகத் துணிந்து செயல்
படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோயில் மானியங்களைப்
பொறுத்தவரை அரிசன மக்கள் அந்த [illegible]
செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30 என்னுடைய தொகுதியில் வளவனூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் அரசினர் மாணவர் விடுதி இருக்கிறது. கடந்த பத்து பன்னிரண்டு ஆண்டுகளாக நடந்து வருகிறது. அதிலே 45 மாணவர்கள் இருக்கிருர்கள். அரிசன மாணவர்கள், பின்தங்கிய வகுப்பு மாணவர்கள், முற்போக்கு மாணவர்கள் ஆகிய எல்லோரும் சேர்ந்தது. அந்த எண்ணிக்கையை 75 மாணவர்கள் என்ற அளவுக்கு உயர்த்த வேண்டுமென்று அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கண்டமங்கலம் வழுதாவூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் நூற்றுக்கு மேற்பட்ட அரிசன மாணவர்கள், பின்தங்கிய மாணவர்கள் ஏழெட்டு மைல் தூரம் நடந்து சென்று படிக்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்த இரண்டு பள்ளிகளுக்கும் அரசினர் மாணவர் விடுதி ஏற்படுத்த வேண்டுமெனபதற்காக நடவடிக்கை எடுத்து அரிசன நலத்துறை இயக்குநருச்கு அனுப்பி இருக்கிருர்கள். அதை இந்த ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். வளவனூரில் மனைக்கட்டுகளை எடுக்க வேண்டுமன்று பலமுறை கூறியும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. 1962-ல் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டு இன்னும் முடிவு பெருத நிலையில் இருப்பதால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எட்டாண்டு காலமாகியும் ஒன்றும் செய்யவில்லை. அரசு வழக்கறிஞர்கள் இதிலே முழு கவனம் செலுத்தி சீக்கிரம் முடிவு காண வழி செய்யவேண்டும். அந்த முறையில் ஏழைவாழ் மக்களுக்கு உதவி செய்யவேண்டும். என்னுடைய தொகுதியில் கூட்டுறவு பால் வழங்கும் சொசைடிகளை வி. புதுப்பாளையம், வில்லியனூர், இளங்காடு, ரிங்காரெட்டி பாளையம், வி. புதூர் ஆகிய இடங்களில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுகொண்டு எனக்குப் பேச வாய்ப்புத் தந்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. என். மருதாசலம் :** உதவி சபாநாயகர் அவர்களே, அரிசன நல அமைச்சர் கொண்டு வந்திருக்கும் மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இதற்காக இன்று 696·92 லட்சம் கோரப்பட்டிருக்கிறது. அவ்வாறு கோரப்பட்ட தொகை முழுவதும் அப்படியே அரிசன நலனுக்காகப் போய்ச் சேருகிறதா என்ருல், இல்லை. இதிலே, மாநிலத்திலே இருக்கக்கூடிய டைரக்டர்கள் உட்பட அந்தக் காரியாலயத்திலே பணியாற்றுகின்றவர்களுடைய சம்பளங்கள், மாவட்டங்களில் அந்த அலுவலகங்களில் பணியாற்றுகின்றவர்களுடைய சம்பளம் ஆகியவற்றுக்கெல்லாம் சேர்த்துத்தான் இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. மீதியுள்ள தொகையும் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று அரிசனங்களுக்கு, இரண்டாவது மலை ஜாதியினருக்கு, மூன்றாவது பின் தங்கிய வகுப்பினருக்கு என்ற முறையில் பிரிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பார்க்கும்போது அரிசன முன்னேற்றத்திற்காக மிச்சமாகக் [illegible] தொகை சமுத்திரத்தில் கரைத்த பெருங்காயம் மாதிரித்தான் இருக்கிறது. ஆகவே, இந்தத் தொகை போதாது, இதை அதிகப்படுத்த வேண்டுமென்று அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே, இரண்டு மூன்று விஷயங்கள் முக்கியமாக வரவேற்கத் தக்க முறையிலே இருக்கின்றன. வீடு கட்டுவதற்காக தகுதியுள்ளவர்களுக்கு 2,500 ரூபாய் வரை கடன் கொடுக்கப்படுகிறது. ஆயிரத்து ஐநூறு ரூபாய் கடன் கொடுத்து பாதி மானியமாகவும் கொடுக்கப்படுகிறது. இந்தக் குறிப்பிலே அரிசனங்களுக்கு உழவு மாடுகள் கொடுக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எங்களுடைய பகுதியில் இந்த இரண்டு வருஷமாக அப்படி எதுவும் வாங்கித் தந்ததாக இல்லை. வாங்கித் தந்ததாக அமைச்சர் கூறினால் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். தற்போது எல்லா இடங்களிலும் மகளிர் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. கோவை தாலூகாவில் ஒரு மகளிர் பள்ளியும் அரிசன நலப் பள்ளியும் இல்லாமல் இருப்பது வருந்தத்தக்கது. அங்கு உடனடியாக ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அரிசன நலப் பள்ளியில் படிப்பவர்களை ஊக்குவிப்பதற்காக 200 ரூபாய் கொடுக்கப்படுவது அதிகப் படுத்தப்பட்டிருப்பதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. கோவை பள்ளியில் கொடுத்ததாகத் தகவல் இல்லை. பல்நோக்குக் கூட்டுறவு சொசைடிகள், தொழில் ஒப்பந்த கூட்டுறவு சொசைடிகள் போன்ற பல ஆறு, ஏழு என்ற எண்ணிக்கையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. [illegible]



கோவையில் அப்பேர்ப்பட்ட சொசைடிகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஏதோ இரண்டொரு சொசைடிகள் இருக்கலாம். மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் கோவையில் அதிகமான அரிசனங்கள் இருக்கிருர்கள். ஆகவே, அந்த ஸ்தாபனங்களை எல்லாம் கோவை ஜில்லாவில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோவை மாவட்டத்தில் பல இடங்களில் அரிசனங்கள் பயிர்த் தொழிலைச் செய்து வருகிருர்கள். பொள்ளாச்சி தாலுகாவிலே பாலாற்று புறம்போக்கு நிலம் இருக்கிறது. அதிலே அரிசனங்கள் உழவு வேலை செய்து வருகிருர்கள். அதிலிருந்து அவர்களைத் துரத்திவிட்டு மரங்களை எல்லாம் வெட்டிவிட்டதைப் பற்றி அரசுக்கு ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. அதிகாரிகளுக்கும் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. மாநிலம் பூராவும் எடுத்துக் கொண்டால் இந்தமாதிரி மனைத் தகராறு முக்கியமான தகராறுகள் இருக்கிறது. யார் கொஞ்சம் வசதியாக இருக்கிருர்களோ அவர்களுக்கே கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. தாராபுரத்தில் லட்சுமிபதிராஜ் என்ற காங்கிரஸ்காரர் இருக்கிருர். அவர் வயலைப் பிடுங்கிக் கொண்டு அரிசன மக்களைத் துரத்திவிடுவதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிருர். அதைப்பற்றி அமைச்சரவர்களிடமும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக அந்த முயற்சியைக் கைவிடும்படி செய்து அந்த நிலத்தை அரிசனங்களுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

செங்கல் சொசைடிகள் பல ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அறிக்கையில் காணப்படுகிறது. கோவையிலே எத்தனை சொசைடிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிடவில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் வகையில் அத்தகைய சொசைடிகளை அதிகமாக ஏற்படுத்த வேண்டும்.

அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் முறையை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தரவேண்டும். இந்த சொஸைட்டிக்கு அதிகமான மானியம் ஒதுக்கித் தரவேண்டும். மாநிலத்திலிருந்து எழுதியனுப்பினால் ஸ்காலர்ஷிப் ஃபாரமே வந்து சேரவில்லை என்று சொல்லுகிருர்கள்.

(மணியடிக்கப்பட்டு, திரு. கோபால் அவர்கள் பேசுவதற்கு அழைக்கப்பட்டார்.)

* **திரு. எம். கோபால் :** அவைத் தலைவர் அவர்களே, ஹரிஜன நலத்துறை மானியத்தின்மீது நான் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் மாபெரும் தலைவரும் எங்கள் சமுதாயத்திற்காகவே பிறந்தார் என்று சொல்லக்கூடிய அந்த இதயத் தெய்வத்தை நாம் இன்று இங்கு காணவில்லை. அவர்கள் இந்த சமுதாயத்திற்காக அரும்பாடு பட்டார்கள் என்பதை அந்த சமுதாயச சாட்சியாகச் சொல்கிறேன். இன்று அவர்கள் இல்லாத ஒரு நிலையில் நான் இந்த மானியக் கோரிக்கையின் மீது பேச இருக்கிறேன். எங்கள் சமுதாய மக்கள், அவர்களை இருந்தபோதிலும் மறக்கவில்லை; இறந்த பின்பும் மறக்கவில்லை. எனக்கு முன்பு பேசிய நண்பர் ஒருவர் கொதித்தெழுந்து பேசினார்கள். அவர்கள் அப்படி கொதித்து எழவேண்டாம். இருபது ஆண்டுகளாக அவர்கள் செய்யத் தவறியதை, அவர்களால் செய்ய முடியாததை எங்கள் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் செய்தே தீரும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். எல்லோரும் ஆதிதிராவிட மக்களைப் பற்றிப் பேசுகிறோம். இந்த சமுதாய மக்களுக்கு எவ்வளவோ சலுகைகளை செய்து கொடுத்தும் கூட, இவர்கள் என் இன்னும் முன்னேறவில்லை என்பதன் அடிப்படையை நாம் ஆராய வேண்டும். வருடந்தோறும் இந்த ஆதிதிராவிட மக்களுக்காக பல சலுகைகளைச் செய்துகொண்டு வருகிறோம். ஆனால் ஒரு சிலர்தான் முன்னேறியிருக்கிருர்கள். எல்லோராலும் முன்னேற முடியவில்லை. 1961-ம் ஆண்டிலிருந்து நிதியை இந்த மானியத்திற்காக அதிகமாக்கி, அதிகமாக்கி இன்று 642 லட்சம் ரூபாய் அளவிற்கு மானியம் அளிக்கிறோம். இருந்தபோதிலும் இந்த சமுதாயத்தில் உள்ள குறிப்பிட்ட

[திரு. எம். கோபால்] [1969 மார்ச் 13

ஒரு சிலர்தான் முன்னேறியிருக்கிறார்களே தவிர எல்லோரும் முன்னேற்றம் அடைந்துவிட்டதாகச் சொல்லமுடியாது. ஹரிஜன மக்க ளுக்காகக் கொடுக்கப்படும் இந்தப் பணம் ஹரிஜன மக்களால் மட்டும் அடைய முடியவில்லை. பிற்பட்ட வகுப்பு மக்களும் அந்தப் பணத்தில் பலனை அடைந்து வருகிறார்கள். இப்படி நாம் செய்துகொண்டு போனால் எப்படி இந்த ஹரிஜன சமுதாய மக்களை முன்னேற்றத்திற்குக் கொண்டு வரமுடியும் ?

பல விவசாயக் காடுகள் தானாகவே வளர்ந்துகொண்டு வருகின்றன. அதற்காக ஒரு டிபார்ட்மெண்ட் வைத்து அதை பராமரிக்கிறோம். அந்தக் காடுகளை எல்லாம் அழித்துவிட்டு, ஹரிஜன மக்கள் யார் யாருக்கு நிலம் இல்லையோ அவர்களுக்கு இரண்டு அல்லது ஐந்து எக்கர் நிலத்தைக் கொடுத்து, கேணி எடுத்துக் கொடுத்து, மாடு போன்றவற்றைப் பிடித்துக் கொடுத்து, அவர்களுக்கு வேண்டிய கடன் வசதிகளைத் தந்தால் அவர்கள் விவசாயத்தைப் பெருக்கி முன்னேற்றம் அடைய முடியும்.

இன்று ஹரிஜன மக்கள் கூலிகளாக, அடிமைகளாக இருந்து வருகிறார் கள். ஆகவேதான் வெண்மணி நிகழ்ச்சிகள் போன்றவை நடக்கின்றன. ஹரிஜனங்களுக்காக ஒரு டிபார்ட்மெண்டை வைத்துக்கொண்டு அதைச் செய்தோம், இதைச் செய்தோம் என்று சொல்லுவதைவிட ஒரு திட்டத்தை ஏற்படுத்தி இந்த வருஷமாவது இவர்கள் இந்த அளவாவது முன்னேற வேண்டும் என்ற ஒரு திட்டத்தை ஒரு கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

என் தொகுதியில் ஹரிஜன மக்களுக்கு நிலம் வழங்குவதற்காக நிலம் கொடுத்து, கல் போட்டு, பட்டா வழங்க முன்வந்தபோது ஜாதி இந்துக்கள் கோர்ட்டுக்குச் சென்று அதை நிறுத்தி வைத்துவிட்டார்கள். இதுபோல்தான் பல கிராமங்களில் நடக்கின்றன. ஆகவே இந்த ரெவன்யூ சட்டத்தை, வெள்ளைக்காரன் வகுத்த இந்த ரெவன்யூ சட்டத்தை திருத்தி யமைக்கவேண்டும். பட்டா வழங்குவது என்றால் உடனடியாக தாசில்தாரோ அல்லது கலக்டரோ அதை வழங்குவதற்கு சட்டத்தில் இடம் இல்லை. புறம்போக்கு நிலத்தை ஜாதி நத்தமாக்கித்தான் பட்டா வழங்கவேண்டும் என்று இருக்கிறது. இதைச் செய்வதற்கு மூன்று ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே இதையெல்லாம் திருத்தியமைக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் இந்த தாழ்த்தப்பட்ட மக்கள் நல்ல முறையில் வளர்ந்து வீடு கட்டிக்கொண்டு, நல்ல முறையில் விவசாயம் செய்யக்கூடிய ஒரு நிலை ஏற்படும்.

ஹரிஜன மக்களைப்பற்றிச் சொல்லிச் சொல்லி, அரசியல் கட்சிகள் வாழ்த்தினால் போதாது. இந்த தாழ்த்தப்பட்ட மக்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு எல்லாக் கட்சியினரும் ஒன்று சேர்ந்து ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும். அப்படிச் செய்துதான் இந்த சமுதாயத்தை வாழ வைக்க முடியுமே தவிர, பேச்சாலும் எழுத்தாலும் அதைச் செய்து விட முடியாது. ஏன் இந்த தாழ்த்தப்பட்ட மக்கள் இன்னும் நசுக்கப்பட்டுக் கிடக்கிறார்கள், ஏன் இவர்கள் இன்னும் வாழ முடியாத நிலையில் இருக் கிறார்கள் என்பதை ஆராய வேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்த தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறுவதற்கு முடியும். ஆகவே எல்லாக் கட்சியினரும் ஒன்று சேர்ந்து அந்த மக்கள் வாழ வழிவகை செய்யக் கூடிய ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. பி. எஸ். எல்லப்பன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஹரிஜன மானியக் கோரிக்கைமீது இங்கு இப்போது விவாதம் நடக்கிறது. 1957-ல் இருந்து இந்த ராமாயணத்தை நான் கேட்டுக் கொண்டு வந்திருக் கிறேன். சொன்னால் போதுமா, செய்தால் தீருமா என்பார்கள். இங்கு சொல்வது தவிர செய்வது ஒன்றுமில்லை. நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. இப்போதுள்ள நிலைக்கு யாரையும் குற்றம் சொல்வதற் கில்லை. அவரவர்களுக்குத் தக்க விதத்தில் பேசுகிறார்கள். இந்தக் கட்சியி



1969 மார்ச் 13] [திரு. பி. எஸ். எல்லப்பன்]

லிருந்தும் பேசுகிறார்கள், அந்த கட்சியிலிருந்தும் பேசுகிறார்கள். மேலே இருக்கிறவர்கள் கொஞ்சம் உரக்கப் பேசுகிறார்கள். இருபது வருடங்களாக காங்கிரஸ் சர்க்கார் ஆண்டு வந்தது. இப்போது இவர்கள் ஆண்டு வருகி றார்கள். இவர்களும் என்ன சாதிக்க முடியும், நாங்கள் என்ன அனு பவிக்க முடியும் ? ஒரு திட்டத்தை வைத்து அதன்படி நடத்தி வருகிறார்கள். சர்க்காரின் பேரில் நான் தப்பு சொல்லவில்லை. இந்த சமுதாயத்திற்காக ஒவ்வொரு வருடமும் பணம் ஒதுக்கப்படுகிறது. கீழேயுள்ள உத்தியோ கஸ்தர்கள், அது சம்பந்தமான அதிகாரிகள் இவர்களிடம் தான் இருக் கிறது, இந்த முன்னேற்றக் காரியங்கள்.

செங்கல்பட்டு ஜில்லாவில் ஒரு ஹரிஜன் வெல்பேர் ஆபீஸரைப் போட் டிருக்கிறார்கள். ஸ்பெஷல் ஆபீசர், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், சர்வே யர்கள் என்று என்னவென்னமோ வெல்லாம் போட்டிருக்கிறார்கள். அவர்கள் நாற்பது பேர்கள் ஒரு கூட்டம் இருக்கிறார்கள். எந்தக் கிராமத் தில் எதை உடனடியாகச் செய்கிறார்கள் என்றால் ஒன்றுமே செய்வது இடையாது. எங்கள் பெயரில் வருகிறது பணம். அனுபவிப்பது யார் பேரிலோ போகிறது. நடுவில் அந்த மக்களுக்கு என்ன நடக்கிறது என்றால் ஒன்றும் நடப்பதில்லை. நானும் பார்க்கிறேன், இவர்கள் முன்னேற்றம் அடைய வேண்டும், முன்னேற்றம் அடைய வேண்டும் என்றெல்லாம் சொல்கிறார்கள். கல்வி விஷயத்தில் அவ்வளவு மோசமாகச் சொல்ல மாட்டேன். கல்வி விஷயத்தில் அவர்கள் இருக்கிற தொகையைக் கொண்டு சமாளிக்கிறார்கள். அது ஒன்றைத் தவிர வேறு ஒரு முன்னேற்றமும் எந்தக் காரியத்திலும் நடக்கவில்லை. இதற்கு எவ்வளவு சப்பைக்கட்டு கட்டிப் பேசினாலும் நான் அதை ஒத்துக்கொள்ள மாட்டேன். நானே நேரில் பார்க்கிறேன், அனுபவிக்கிறேன். எனக்குத் தெரியாமலா உங்க ளுக்குத் தெரிந்து போயிற்று. கல்வி விஷயத்தில் கூடுமான வரையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். மேலும் இதை ஊக்குவிக்க கண்ணால் கண்டது கோடி என்றால் காணாதது அநேக கோடி. அநேகம் கோடி மக்கள் இன்று இழிவான நிலைமையில் தாழ்மையான நிலையில் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு, குடியிருக்க வீடு இல்லாமல் இருந்து வருகிறார்கள். நீங்கள் எல்லாம் ஜாதியை ஒழிக்கிறேன் என்று சொல்லு கிறீர்கள். வேண்டாம்.

சங்கரன் காசினியில் அங்கென்ன சொன்னார் ? சண்டாளன் பக்தனும் தன் குருவென்றார். எங்கள் ராமானுஜம் தன்குலமென்று யாவரையும் கொண்டுடன் கோவிலில் சென்றார் · ராமானுஜர் காலத்திலேயும், சங்கரா சாரியார் காலத்திலேயும் ஒன்றுபடுத்த முடியாதநிலை அந்தக் காலத்திலே இருந்தது என்றால் நீங்கள் வந்து ஒன்றுபடுத்திவிடுவீர்களா ? இது நடக்கும் சமாசாரமா ? அல்ல. எல்லா ஜாதிகளையும் ஒன்றாக ஆக்கிவிட வேண்டும் என்று சொல்கிறார்கள். ஒன்றாக ஆக்குவதா ? நாங்களெல்லாம் ஆதி திராவிடன், நீங்களெல்லாம் பாதி திராவிடன். என்னை ஏன் அதில் கொண்டு போய்ச் சேர்க்கிறீர்கள் ? நான் தனித் தமிழன், அப்பழுக்கில்லாதவன், ரோஷம் உள்ளவன். சாகிற காலத்திலும் மண் வெட்டியை எடுத்து தலைக்கருகில் வைத்துக்கொள்பவன், சாகிற வரைக்கும் இன்னொருவருக்குக் கைகட்டியிருப்பது, பொய்ப் பத்திரம் எழுதுவது போன்றவைகள் என்னிடத்தில் இல்லை. ஆகவே, இந்த அரிஜன சமுதாயத்தைப்பற்றி சுப்பிரமணியம் பேசினார். அதுமாதிரி பேச வர மாட்டேனென்கிறது. உடம்பும் சரியில்லை. சொன்னாலும் கேட்க மாட்டார்கள். பேசிப்பேசி வருவதே பழக்கம் ஆகிவிட்டது. வருஷத்திற்கு ஒருமுறை தெவஷம் கொடுப்பதைப்போல் வருஷத்திற்கு ஒருநாள் பேசப்படுகிறது. போனவருஷம் சொன்ன குறைபாடுகளை இந்த வருஷம் தீர்க்க வேண்டு மென்று தெரியாதா ? நல்ல காரியங்கள் நடக்கிறதா ? ஹரிஜன் வெல் ஃபேர் டைரக்டர் மூலம் பிள்ளைகளுக்கு ஸ்காலர்ஷிப்கொடுத்தால் சீக்கிரம் நடத்தப்படும். அதைக்கொண்டு போய் கலெக்டரிடம் கொடுக்கப் போகிறார்கள். ஹரிஜன் முன்னேற்றத்தைப் பார்த்தீர்களா ? படிக்கின்ற பிள்ளை களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பதைக் கலெக்டரிடம் கொண்டு போய்க் கொடுப்பது. இது நடக்குமா ? இன்னொன்று சொல்லுகிறேன். நல்ல

[திரு. பி. எஸ். எல்லப்பன்] [1969 மார்ச் 13

அதிகாரிகளை மூன்று மாதத்திற்கு ஒருமுறை மாற்றுகிருர்கள். இப்படி மாற்றிக்கொண்டே போனுல் பின்னுலே வருபவர்கள் எந்த டைலே எப்படித் தேடி எடுப்பார்கள் ? மதுராந்தகம் தாலுக்காவுக்கு தாசில்தார் ஒருவர் வந்து 7 மாதங்கள் ஆகின்றது. அவர் வந்தவுடனே பர்மா அகதிகளுக்கு, எங்கள் பகுதியான ஆணம்பேட்டில் 214 ஏக்கராக்களை எடுத்து, காட்டையெல்லாம் வெட்டி, தங்கமான நிலமாக ஆக்கி, அந்த அகதிகளுக்கு புதிய பள்ளிக்கூடம் கட்டி, நல்ல நகரமாக ஆக்குவதற்கு முனைந்தார். நம்முடைய யேன்மை தங்கிய விவசாய அமைச்சரவர்கள் வந்து ஆரம்பித்து வைத்தார்கள். மிக அழகாக நடக்கிறது. இதுவரை 30,000 ரூபாய் செலவாகியிருக்கும். ஆனுல் சர்க்கார் காலணுக்கூடக் கொடுக்கவில்லை. "பெடரேஷன்" என்று, இன்னொரு நாட்டிலேயிருப் பவர்கள், வெளிநாட்டில் இருப்பவர்கள் இந்தியாவிற்கு வந்து கட்டுகிருர்கள் நாம் பணமே கொடுக்கவில்லை. அதுதான் வேண்டாம். நிலத்தை யாவது கொடுத்து உதவி செய்தால் எவ்வளவு பேர் ஜீவிப்பார்கள். மனுப் போட்டால் உங்களிடமிருந்து கொஞ்சத்திலே பணம் வருகிறதா ? கிணற் றுக்கோ, நிலத்துக்கோ, கடன் கேட்டிருப்பவர்கள், என்ன பாகவதரே என்று கேட்கிருர்கள். போய்ச் சொல்லுகிறேன் என்று நான் சொல்ல வேண்டிய நிலை. சொன்னுல் யார் கேட்கிருர்கள். ஆகவே சர்க்காராலே எந்தவிதமான பணமும் கொடுத்து ஏழைகளை முன்னேற்றத்திற்குக் கொண்டு வரமுடியாது. இன்னொரு நாட்டிலேயிருப்பவர்கள் வந்து செய்தால் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டாமா, அப்படிச் செய்தால் அதன் மூலம் நம் நாட்டுக்கு நல்ல வழி வராதா ? எனவே, அந்த முறையிலே செய்ய வேண்டும்.

அரிசன முன்னேற்றத்தைப் பற்றி இங்கே எல்லோரும் சொல்கிருர்கள். அளவுக்கு மீறி சொல்லியிருக்கிருர்கள். ஆகவே, எதைச் சொல்ல வேண்டும், எதைச் சொல்லக் கூடாது என்று பார்க்க வேண்டும். எதைச் சொன்னுல் நடக்கும், எதைச் சொன்னுல் நடக்காது என்று பார்த்துச் சொல்ல வேண்டும். 60 மைல் வேகத்தில் வண்டியை ஓட்டிக்கொண்டு போனுல் வழியிலே வருபவர்களெல்லாம் அகப்பட்டுக்கொள்ள வேண்டியது தான். எனவே, நிதானமாக இந்தச் சட்டசபையிலே எவ்வளவு பய பத்தியோடு, எவ்வளவு அடக்கத்தோடு சொல்ல வேண்டுமோ அந்த அளவில் பதில் சொல்ல வேண்டும். ஆளுக்கு ஒரு கம்பைத் தூக்கி வைத்துக்கொண்டு பேசுவதைப் போல பேசுவது சரியல்ல. நான் சொல்வது, எந்தக் கட்சியாக இருந்தாலும் அமைதியாக இருங்கள், சட்டசபை சபாநாயகரவர்கள் இருக்கிருர்கள், மினிஸ்டர்கள் இருக்கிருர்கள். அவர்கள் கவனித்துக் கொள்வார்கள். ஏதோ பஞ்சாயத்து யூனியன் கூட்டம் ஆலமரத்தின் அடியிலே நடக்கிறதே அந்த மாதிரியாக நடந்து கொள்வது. ஆகவே, சட்டசபையிலே நான் வணக்கமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன், இனி ரொம்ப அழகாக இது நடக்க வேண்டும். மறைந்த அண்ணு அவர்களுடைய ஆவி வட்டமிட்டுக்கொண்டேயிருக்கும், அவருடைய பெயரைக் காப்பாற்றி, கௌரவப்படுத்த வேண்டும். அண்ணு வழியில் செல்கிறோம் என்கிருர்கள். என்ன வழியோ ? தடி தூக்கிக் கொண்டு ரோட்டிலே போவதுதான் அண்ணு வழியா ? மூன்று வார்த்தைகளைச் சொன்னுர் அவர், தங்கமாக. நாலுவார்த்தைகளைச் சொன்னுலும் நல்லாச் சொன்னுனடி என்பதுபோல. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று ஏதோ சொல்லியிருக்கிருர். அதை வாயால் பேசுகிருர்களே தவிர ஒரு கட்டுப்பாட்டையும் காணேம். அப்படியெல்லாம் செய்யக்கூடாது. நான் சொல்லுகிறேன், ஆத்மசக்தி, சரீர சக்தி. அதிலே மகாத்மா காந்தியடிகள் இருந்தார். அதனுல் உலகம் பூராவும் அவரை வணங்கத் தலைப்பட்டு வந்தது. அதே சக்தி அண்ணுவிடத்திலே இருந்தது. உலகம் 30-ஆம் தேதி என்னவாயிற்று ? அண்ணுவை முருகன் என்றேன், அப்பொழுது பைத்தியக்காரான் என்று என்னைச் சொன்னுர்கள். 30-ம் தேதி அண்ணு என்னுவாயிற்று ? இந்த உலகத்திலே நடந்த சமாச்சாரமா ? மறு உலகம் இருக்கிறது என்று சொல்கிருர்களே அங்கேதான் பார்க்க முடியும். அந்த நிலையிலே அவர் சாந்தியடைந்தார். ஆகவே, அவருடைய மனம் சாந்தியடைய எல்லோரும் நடக்க வேண்டும். ஏனென்ருல் அவர் களங்க மற்ற மனமுடையவர். பேச்சுக்கு பேச்சு வருத்தம் வைக்க மாட்டார்.



1969 மார்ச் 13] [திரு. பி. எஸ். எல்லப்பன்]

அவருடைய பெயர், அவருடைய புகழ் இந்தச் சபையிலே விளங்க வேண்டு மானுல் ஒவ்வொருவரும் அவரை நினைத்து, அவரைச் சிந்தித்து, நம்மு டைய காரியத்தைச் சாதிக்கும்படி மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கி றேன். விரைவிலே கூவம் நதியைச்சீர்படுத்த வேண்டும். (மணியடிக் கப்பட்டது.) என்ன சார் சும்மா மணியடிக்கிறீர்கள். ஆகவே, கூவத்தைச் சீர்படுத்தினுல்தான் காசிப்பேட்டை அண்ணுப்பேட்டையாக மாறும் என்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. பி. எஸ். மணி** : மதிப்பிற்குரிய அவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்ட மானியக் கோரிக்கையினை நான் சார்ந்துள்ள இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பாக ஆதரித்தாலும் அவர்கள் கொண்டுவந்திருக்கும் தொகை உண்மையிலேயே போதுமானது அல்ல என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை).

கடந்த ஆண்டுக்கு இந்த ஆண்டு 54·64 இலட்சம் தொகை அதிகமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் மொத்தத் தொகையிலே, 696·92 லட்சத்தை முறையாகச் செய்யவேண்டும். எனக்கு முன்பே பேசிய சகோதரர்கள் சொன்னபடி, கணக்குப் போட்டுப் பார்த்தால் நபர் ஒன்றுக்கு 6 அல்லது 7 ரூபாய்தான் நிச்சயமாக வரும். ஆகவே, நாங்கள் பலகாலமாகச் சொல்லிக்கொண்டிருப்பது இந்தப் புத்தகத்திலே அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கும் அத்தனை திட்டங்களும் நல்ல திட்டங் கள்தான். ஆனுல் உண்மையிலேயே அவைகள் செயல்முறையில் நடைபெறு கின்றனவா ? என்ருல் நடைபெறவில்லை. இந்த நேரத்திலே நான் மிக வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள யாசிக்கிறேன், இந்த மானியக் கோரிக்கையில் நான் பேசுவதற்கு, நான் எதைப் பேசவேண்டு மென்று குறிப்பாக வைத்திருந்தேனே அதைச் செய்வதாக வாக்குக் கொடுத்த பேறறிஞர் அண்ணு அவர்கள் இப்பொழுது இல்லையே என்ற வருத்தம்தான். நான் உங்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன். அண்ணல் அம்பேத்கார் அவர்கள் சொன்னது போல, உங்கள் ஒன்றுபட்ட எழுச்சி உங்களை ஆள்பவர்களுடைய வீழ்ச்சி, ஆகவே உங்களை ஒன்றுபட அவர்கள் விட மாட்டார்கள், ஆளுபவர்கள் என்ருல் அரசாங்கத்தைச் சொல்லவில்லை, ஜாதியின் கொடுமையினுலே, சம்பிரதாயத்தாலே, மதத் தாலே, மதக் கோட்பாடுகளாலே அக்கிரமமாக நடந்து ஆள்கிருர்களே அவர்கள் உங்களை ஒன்றுபட விட மாட்டார்கள் என்று அவர்கள் எழுதி வைத்த பொன்மொழி இன்று நடைமுறையில் நடந்து கொண்டிருக்கிறது. கடந்த 1967-லே அறிஞர் அண்ணு அவர்கள் ஒரு சாதாரண விஷயத்தைச் சொன்னுர்கள், ஒத்துக் கொண்டார்கள். பேரறிஞர் அம்பேத்கார் அவர் களுடைய வாழ்க்கை வரலாற்றை பாடப் புத்தகத்திலே வைக்கவேண்டும், வைப்போம், வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிருர்கள். வைக்கப் பட்டதா ? பாடப் புத்தகத்திலே சேர்க்கப்பட்டதா ? அவர்கள் கொடுத்த வாக்குறுதியே இன்னும் நிறைவேற்றப்படவில்லை. பின், எவர் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படும் ? பிற்பகல் 1 மணி.

அடுத்து, பஞ்சாயத்து யூனியன்களிலே எங்களுக்குக் கொடுக்கப்பட்டி ருக்கிற பிரதிநிதித்துவம். நாங்கள் 42 பேர் இருக்கிறோம் இங்கே. ரிசர்வ் சீட்டுலே வந்தவர்கள், எங்கள் 42 பேரையும் நீங்கள் பார்க்கக் கூடாது. இங்கு இருக்கிற அமைச்சர்களைப் பார்க்கக்கூடாது. இந்த 42 பேர்களைச் சேர்ந்தவர்கள்தான் அவர்கள். எங்களை மட்டும் பார்த்து, இந்த சமுதாயம் முன்னேறி விட்டது என்று சொன்னுல், என்று நினைத்தால், என்று பேசினுல் அது மிகத் தவருனது. நாங்கள் இங்கே இருக்கிறோம், அமைச்சர்களோடு பழகுகிறோம், அதிகாரிகளோடு பழகுகிறோம், அவர்கள் எங்களுக்கு மரியாதை கொடுக்கிருர்கள். ஆனுல், எங்கள் உற்ருரும் உறவினரும் கிராமத்திலே வாழ்ந்துகொண்டிருக்கும் அவர்களுடைய நிலை என்ன ? அதே நேரத்தில் இங்கே அதிகாரிகளாக, ஊழியர்களாக

இருக்கிறார்களே, அவர்களுடைய நிலை என்ன? அரிசன நலத்துக்காக ஒதுக்கப்பட்ட இந்த இலாகாவிலே இன்று எத்தனை அரிசனங்கள் வேலை செய்கிறார்கள்? டைரக்டர் ஆபீஸிலே, கிட்டத்தட்ட 120, 150 பேர்கள் வேலை செய்கிறார்கள். அதிலே ஆறே ஆறு பேர்தான் அரிசனங்கள். இந்த தேவையை நாங்கள் சொல்லுகிறோம். எங்களுக்குப் பணத்தைக் கொடுத்து முன்னுக்குக் கொண்டு வர முடியாது. சட்டபூர்வமாக உத்தியோக உயர்வை எங்களுக்குக் கொடுங்கள். உங்களைக் காசு கேட்கவில்லை. பணம் கேட்கவில்லை. சட்டபூர்வமாக 16 சதவிகிதம் கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறது என்றால், அதையாவது கொடுத்திருக்கிறார்களா? அதற்கு என்ன நிதி தேவையிருக்கிறது? எந்த மத்திய மானியம் வரவேண்டியிருக்கிறது? எதுவும் தேவையில்லை. அதை நாமே கொடுக்கலாம். மத்திய அரசிலே எதையும் கேட்கவேண்டியதில்லை. கடந்த 20 ஆண்டுகாலமாக ஆட்சி செய்து கொண்டிருந்த, காங்கிரஸ் அரசாங்கம் அதைக் கொடுக்கவில்லை. அப்பொழுது எதிர்க்கட்சியிலே இருந்து பேசினோம். அதையாவது 2 ஆண்டிலே செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. இன்றையதினம் ஒன்றே முக்கால் வீசம் மக்கள் எங்கள் சமுதாயத்தை சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். மாநிலத்திலே 3-லே ஒரு பாகம் அவர்கள் இருக்கிறார்கள். ஆயிரம் பேருக்கு மாடு வாங்கிக் கொடுத்து, நூறு பேருக்கு வீடு கொடுத்து, 2 ஊருக்கு ரோடு போட்டால் முன்னேறிவிடுவார்கள் என்று சொன்னால் முன்னேற முடியுமா? நான் மேலதிகாரிகளைத் தவறாகச் சொல்கிறேன், குறை சொல்கிறேன் என்று நினைக்கக் கூடாது. இந்த "செயின்" அரசாங்க இயந்திரம், அந்த இயந்திரத்திலே பதவிகளைத்தான் எங்களுக்காகத்தான் கேட்கிறோம். இப்பொழுதுள்ள நிலை ஒன்றும் பிரயோசனம் இல்லை. அது நிச்சயமாக ஒவ்வாது. இவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள். இன்றைக்கு எவ்வளவு பேர் அரசாங்க உத்தியோகத்தில் வேலை செய்கிறார்கள். ஆனால், நாங்கள் ஒன்றுக்காக பெருமை அடையலாம். எங்கள் கட்சியும், நானும் நினைக்கிற அளவுக்கு இந்த அமைச்சரவைதான் நூற்றுக்கு நூறு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் மந்திரிசபை என்பதிலே பெருமை அடைகிறோம். இந்த நிலை மற்ற நிர்வாக இயந்திரத்திலும் வரவேண்டுமென்று நினைக்கிறேன். 75 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டவர்கள், மிகப் பின்தங்கியவர்கள் நாங்கள் இருக்கிறோம். உழைப்பவர்கள் நாங்கள், உருவாக்குபவர்கள் நாங்கள், நியாயமான ஜனநாயகம் இருக்குமானால் பிரதிநிதித்துவம் இருக்கிற மந்திரிசபை போல் தான் அதிகார வர்க்கங்களும் அமைக்கப்பட வேண்டும். அதை விட்டுவிட்டு, ஏதோ ஒருசிலர், வசதி உள்ளவர்கள், வாய்ப்பு உள்ளவர்கள், சம்பிரதாயத்திலே பெரியவர்களாக இருக்கிறோம், சமுதாயத்திலே பெரியவர்களாக இருக்கிறோம் என்று சொல்கிறார்கள் என்று அவர்கள் கையிலே ஆட்சியை கொடுத்துவிட்டு, அவர்கள் கீழே பணியாற்ற வேண்டுமென்று இருப்பதை நிச்சயமாக எந்தக் கட்சியும் எதிர்க்கும். காங்கிரஸ் கட்சி பரம்பரை சொத்துரிமை மாதிரி மத்தியிலே உரிமை கொண்டாடுகிறார்கள். அதை நாங்கள் எதிர்க்கின்றோம். அந்த சொத்துரிமை இருக்கிறது ஆட்சியிலே. நான் கேட்டுக்கொள்வது, ஆட்சி என்ன சொத்துரிமையா?

இந்த என்.ஜி.ஓ.-க்களுக்காக கொடுக்கப்பட்டிருக்கிற சர்வீஸ் ரிஜிஸ்டரிலே அதைப்பற்றி ஒரு ஜீ.ஓ. போட்டு அனுப்பி இருக்கிறார்கள். அந்த ஜீ.ஓ.-விலே தாழ்த்தப்பட்ட சகோதரனாக இருந்தால் அவன் படம் ஒட்டவேண்டும் என்றிருக்கிறது. அவனை "குளோஸ்" பண்ணுவதற்கு ஒட்டச் சொல்கிறார்களா? அல்லது பிரமோஷனுக்கு ஒட்டச் சொல்கிறார்களா? என்று தெரியவில்லை. இரண்டுமே நடக்கவில்லை. இன்னும் ஒன்று, யாராவது ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகன் கொஞ்சம் உத்தியோகம் செய்து, கொஞ்சம் மேலே வருகிறான் என்று பார்த்தால், கடைசி காலத்திலே, மேலே இருக்கிற ஆபீஸர் "அவன் வேலை சரியாக இல்லை, திடீர் திடீரென்று "ஸ்லேக்னஸ்" வந்துவிடுகிறது என்று எழுதி, அதை வைத்துக்கொண்டு 5,6 வருடத்திற்கு பிரமோஷன் கிடையாது என்று கூறுகிறார்கள். இது இப்பொழுது இங்கு நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் காலத்தில்தான் [illegible] நடந்தது என்றால் சொல்லிக்கொண்டிருந்தோம், நீங்கள், நாங்கள் [illegible] இப்பொழுதும் அப்படியே இருக்கிறது. இது எப்பொழுது



நீங்கும்? இன்றைக்கு சில ஐ.ஏ.எஸ். ஆபீஸர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. ஜாதியைச் சொல்லுவதற்குக் கூடப் பயமாக இருக்கிறது அவர்களுக்கு. யார் ஐயா, என்று கேட்டால், "நான், நான்" என்று சிந்திக்கிறார்கள். என்னதான் பயமோ? வேலையைச் செய்பவனுக்கு உயர்வு கொடுக்க வேண்டும். அரசாங்கத்திற்கு ஒன்றும் நிதி தேவை இல்லை—இதற்கு. அதற்குப் போய் சம்பிரதாயம் என்று சொல்லிக்கொண்டிருந்தால் எப்படி? அதைக்கூடச் செய்வதற்குப் பயப்படுகிறார்கள். "ராங்வே"-யில் போகவேண்டாம். நேர் வழியிலேயே செய்யுங்கள். அதிகாரிகள் எதையாவது செய்வதற்கு, "ஜாதிக்குச் செய்துவிட்டேன் என்று சொல்வார்கள், நான் என்ன செய்வது, இனிமேல் அப்படி இல்லாமல் பார்க்கலாம்" என்று சொல்கிறார்கள். எப்படிப்பட்ட கொடுமை? (மணி அடிக்கப்பட்டது). 10 நிமிஷம் கொடுத்தீர்கள், இன்னும் 4 நிமிஷம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : 10 நிமிஷம் தான். இன்னும் 2 நிமிஷம்தான் இருக்கிறது.

**திரு கே.பி.எஸ். மணி** : அதற்கடுத்து, இப்பொழுது எங்களுக்கு இழைக்கப்படுகிற கொடுமையைச் சொல்கிறேன். 4 நாளைக்கு முன்னால் ஒரு ஊரிலே அழகப்பன் என்ற பையனை, அவன் வைத்திருந்த ரூ. 812-ஐ கடன் கொடுக்கவில்லை என்பதற்காக அடித்துக் கொலை செய்திருக்கிறார்கள். போலீஸிலே சொன்னால், கேள்வியில்லை, முறையில்லை, எனக்குத் தந்தி அடித்தார்கள். நான் முதலமைச்சரவர்களிடத்திலே சொன்னேன், தந்தியைக் கொடுத்தேன். அரிசன நல அமைச்சரவர்களுக்கும் கொடுத்தேன். கீழ்வெண்மணியைச் சொன்னார்கள். பழைய கதையைச் சொல்வதால் பிரயோசனம் இல்லை. இதுவரையிலே, கொலை செய்யப்பட்டவர்கள் கணக்கைப் பார்ப்போம். கம்யூனிஸ்ட் கட்சியிலே இறந்தவர்களில் நாங்கள் தான் இருப்போம். காங்கிரஸிலே நாங்கள்தான் இருப்போம். திராவிட முன்னேற்ற கழகத்திலே நாங்கள்தான் இருப்போம். சுதந்திராக் கட்சியிலே நாங்கள்தான் இருப்போம். (குறுக்கீடு) அதிலே 2 எம்.எல்.ஏக்கள் இருக்கிறார்களே. சாவதெல்லாம் நாங்கள் தான். ஆனால் மேலே உட்கார்ந்து கொண்டு ஆட்சி புரிவது அவர்கள். இப்படி கடைசியாக வாழ்கிறோம். வேறு வழியில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள் "இந்த ஆண்டியிலே குடி இருப்பு மனைகள் கொடுக்கப்படும்", என்று. ஆனால் அதிகாரிகள் என்ன செய்கிறார்கள்? தவறான புள்ளி விவரத்தைக் கொடுக்கிறார்கள். அது அடங்கியிருக்கிறது, இது அடங்கியிருக்கிறது என்று சொல்லி விடுகிறார்கள். விளகாத்திலே கொளுத்தினார்கள். டீக் கடை தகராறு, வெளியே போ என்று அடித்து அதன் காரணமாக அங்கே சண்டை வந்தது.

திண்டிவனத்திலே, டீச்சர்ஸ் தண்ணீர் குடிக்க முடியவில்லை. அது அங்கு மட்டுமல்ல, பாராளுமன்றத்திலே, நேருவினுடைய வாரிசு ஆளுகின்றார்களே, அங்கே—அது இங்கே இல்லை, நல்ல வேளையாக—ஆபீஸர்களுக்கு வைத்துள்ள இடத்தில் "பறையன் தண்ணீர் பானை" என்று வைத்திருக்கிறார்கள். தண்ணீரிலே கூட, பறையன் தண்ணீர் என்று இருக்கிறதா? ஆதி திராவிடன் தண்ணீர் என்று இருக்கிறதா? இந்த நிலையிலே எப்படி வாழ முடியும்? நாம் ஒன்றும் செய்ய முடியாது என்று இருக்கக்கூடாது.

பஞ்சாயத்து யூனியன் ஆட்சியிலே, வருகிற தேர்தலிலே அண்ணா அவர்கள் சொன்னார்கள், இங்கேயே, "லா மினிஸ்டரிடம் சொல்லு மணி" என்று பணிவோடு சொன்னார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கிற 375 பஞ்சாயத்து யூனியன்களில் எங்களுக்காக 80 யூனியன் சேர்மன்களை ரிசர்வேஷன் கேட்கிறோம். இந்த ஆட்சி எவ்வளவு வருஷம் வேண்டுமானாலும் ஆளட்டும், வேறு கட்சி வரவேண்டும், நாங்கள் வரவேண்டுமென்ற அபிப்பிராயமே இல்லை. இப்பொழுது எம்.எல்.ஏ-க்களாக இருக்கிற நாங்கள் இது மாதிரி பேசுவதற்குத்தான் பயன்படுகிறோம். எம்.எல்.ஏ

பதவி அதற்குத்தான் பயன்படுகிறது. வேறு என்ன இருக்கிறது? ஒரு யூனியன் சேர்மன் ரூ. 18 இலட்சத்திலிருந்து ரூ. 20 இலட்சம் வரை செலவழிக்கிறார்கள்..........................................

(மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

**திரு. எஸ்.ஜே. ராமசாமி :** நான் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். இந்த மன்றத்தில் பறையன் தண்ணீர் என்று சொல்வது தவறு........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது ஒன்றும் விளக்கம் கேட்கத் தேவையில்லை.

***திரு. பா. நாகலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசன நலத்துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். கடந்த காலத்தில் அவர்களுடைய ஆட்சிகாலத்திலே அரிசன மக்களுக்குச் செய்த நன்மைகளை விட இந்த அரசு செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை அருமை நண்பர் சிவசுப்பிரமணியன் அவர்களும், அருமை அண்ணன் ராமலிங்கம் போன்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, பல ஆண்டுகளாக என்னுடைய தொகுதியில் சாதிக்கப்படாத சாதனைகளை நான் 24 மாதங்களுக்குள் அரிசனநலத் துறையில் சாதித்திருக்கிறேன் என்கின்ற அந்த பாராட்டுதலையும், நன்றியையும் அமைச்சர் அவர்களுக்கும், அந்த இலாகாவிலே பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்கும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வீடு கட்டுவதற்கு அரிசனங்களுக்கு சர்க்கார் மனைகள் வாங்கிக்கொடுப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்ற குற்றசாட்டை நான் ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டாலும், இன்றைக்கு பல பஞ்சாயத்துத் தலைவர்கள் காங்கிரஸ் தலைவர்களாக இருக்கிறார்கள். அது நியாயமான புறம்போக்காக இருந்தாலும், நியாயத்திற்கு மாறுபட்ட புறம்போக்காக இருந்தாலும், அந்தப் புறம்போக்கு நிலங்களை அரிசன மக்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்கு, அல்லது அவர்களுக்குக் கட்டிக்கொடுப்பதற்கு பஞ்சாயத்துக்கள் தீர்மானம் போட்டுத் தந்தால், அரிசனங்களுக்கு அந்த மனைகளுக்கு பட்டா வழங்கப்படும் என்று சர்க்கார்துறை விதியாக இருந்தாலும், பெரும்பாலான பஞ்சாயத்துக்களின் தலைவர்கள் அப்படிப்பட்ட தீர்மானத்தைப் போட்டுக்கொடுப்பதில்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தாலும், காங்கிரஸ் நண்பர்கள் இந்த அரிசன சமுதாயத்தின் நலன் அடிப்படையில் குறை சொல்வதை ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டாலும், இப்படிப்பட்ட நிலைமைகளை அவர்களுடைய கட்சி நண்பர்களைக் கொண்டு சரிசெய்வதற்கு ஏற்பாடு செய்து, அப்படிப்பட்ட தீர்மானங்களை அந்தப் பஞ்சாயத்துத்தலைவர்கள் துரிதமாக போட்டுக் கொடுப்பதற்கு முற்படவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்த அரிசனநலத் துறையில் பல நல்ல அம்சங்கள் இருப்பதை நான் பாராட்டுவதோடு, சில திருத்தங்களையும் செய்யவேண்டுமென்றும், சில பண ஒதுக்கீடுகள் அரிசனங்களுக்கு அதிகமாகக்கொடுக்க வேண்டுமென்றும் அமைச்சர் அவர்களை வேண்டிவிரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தையல் மிஷன் என்ற பெயரால் கொடுக்கப்பட்ட அந்தப் பணத்தில் செங்கல்பட்டு மாவட்டத்திற்கு 60 தையல் மெஷின் தரவேண்டும் என்று சொல்கிறார்கள். திரு மணி அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த எண்ணிக்கையின்படி செங்கல்பட்டு மாவட்டத்தில் எத்தனை தாழ்த்தப்பட்ட மக்கள் அந்தத் தையல் மெஷின்களைப் பெறுவதற்கு மனுக்கொடுத்திருக்கிறார்கள் என்றால், அப்படிக் கொடுத்திருக்கிற நேரத்தில் பயிற்சி பெற்றவர்கள் 68 பேர்கள், மனுக் கொடுத்தவர்கள் 112 பேர்கள், சர்க்காரால் ஒதுக்கப்பட்ட நிதி 60 தையல் மெஷின்கள் என்ற பெயரால் இருக்கிறது. [illegible] 8 பேர்களுக்கு கொடுக்க வேண்டும் என்கின்ற அளவிலே





இருக்கிறது. அந்த நிலைமையிலே இன்னும் அந்தப் பணத்தை கூடுதலாக்கிக்கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பழங்குடி மக்களுக்கு வியாபாரத் தன்மையிலே பணம் கொடுத்து, அதன் மூலமாக அவர்கள் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கின்ற வகையிலே உதவி செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டது. என்னுடைய தொகுதிக்கும், நண்பர் வேழவேந்தன் அவர்களுடைய தொகுதிக்கும், இரண்டுக்கும் சேர்த்து ரூ. 750 தான் அரிசன நலத் துறையிலிருந்து வியாபாரத்திற்காக உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது) தலைவர் அவர்களே, எங்களுக்குக் கொடுக்கப்படுவதோ மூன்றே நிமிடம். நாங்கள் ஒரே மானியத்தில் தான் பேசுகிறோம். என்னுடைய தொகுதியிலுள்ள குறைகளைப் பற்றி நான் ஓரளவுக்கு எடுத்துச் சொல்வதற்கு நீங்கள் தயவு செய்து நேரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நிதியை உயர்த்திக்கொடுக்கவேண்டும். சென்ற ஆண்டும் சரி, இந்த ஆண்டும் சரி இந்த மன்றத்தில் சொன்னேன். என்னுடைய தொகுதியில் மேம்பாலம் கட்டித்தரவேண்டும் என்று பல முறை சொல்லியிருக்கிறேன். ஆரணி, பொன்னேரி அருகே மேம்பாலம் கட்டவேண்டும் என்று இந்த மாமன்றத்தில் சொன்னேன். என்னுடைய தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிவசங்கரனும் பலமுறை இதைப்பற்றி நமது அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் மற்றவர்களிடத்திலும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நாளது வரையில் அது என்ன நிலையில் இருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

எனது தொகுதியில் ஏறத்தாழ 4,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சென்னையில் திருவற்றியூரில் பகுதியிலே வந்து தொழில் செய்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் குடும்பக் கார்டு என்ற பெயரால் இன்றைக்கு தொழிலாளர்கள் இன்ஷூரன்ஸ் வசதி செய்துகொடுத்திருக்கிறார்கள். தொழிலாளர்களோ, அல்லது அவர்களது குடும்பத்தினரோ நோய்வாய்ப்பட்டால், அவர்கள் திருவற்றியூரில் இருக்கும் மருத்துவமனைக்கு வரவேண்டியிருக்கிறது. அப்படி மீஞ்சூரிலிருந்து திருவொற்றியூருக்கு வந்து போவதற்கு நான்கு மணி நேரம் ஆகிறது. ஆகவே, மீஞ்சூரில் ஒரு ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை ஏற்படுத்த வேண்டும் என்று மனுச்செய்தும், ஒரு ஆண்டு காலம் ஆகியும், அது பரிசீலனையில் இருக்கிறது. முன்னாள் சுகாதார அமைச்சரிடம் மனுக் கொடுத்திருக்கிறேன். அரிசன நலத் துறை அமைச்சர் சுகாதார அமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்ட உடனே மனுக் கொடுத்திருக்கிறேன். மீஞ்சூரில் ஒரு ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி உடனே திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவுத் துறையைப் பொறுத்தவரையிலும் என்னுடைய தொகுதி செங்கல்பட்டு மாவட்டத்தில் இருந்தாலும், சென்னைக்கு வருகிற ரயில்கள் அத்தனையும் எனனுடைய தொகுதியில் நிற்கின்றன. பொன்னேரி, மீஞ்சூர் ஆகிய இடங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மூட்டை அரிசி சென்னைக்குக் கொண்டு வரப்படுகிறது. நான் இதைத் தடுத்துக் கட்டுப்படுத்த வேண்டும் என்று பல முறை சொல்லியிருக்கிறேன். இது பொதுவான பிரச்சினை. இந்த வறட்சி காலத்தில் என்னுடைய தொகுதியிலிருக்கிற உணவுப் பொருள்களெல்லாம் சென்னைக்கு வந்துவிடுகிறது. அது கொள்முதல் ரீதியாக வந்தாலும் பரவாயில்லை. ஆனால் அரிசி அத்தனையும் கள்ளமார்க்கெட்டிற்குப் போகிறது. அதைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். முதன்முதலாக நான் அரிசன மானியக் கோரிக்கையின் மீது சொல்லவேண்டிய முக்கியமான கருத்து

என்னவென்றால், பல ஆண்டுகளாக அரிசன மக்கள் தி.மு.க. அவர்களுக்கு பல நன்மைகள் செய்பவர்கள் என்ற ஒரு எண்ணத்தில், தி.மு.க. இங்கே அமைச்சரவையை உருவாக்கக்கூடிய ஒரு வாய்ப்பை அரிசன மக்கள்தான் உருவாக்கியிருக்கிறார்கள். அவர்கள்தான் இந்த ஆட்சியை ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறார்கள். ஆகவேதான் சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தக் குறையையும் இந்த மன்றத்தில் சொல்கிற நேரத்திலும், கட்சிக் கண்ணோட்டம் இல்லாத வகையில் உறுப்பினர்கள் என்ன சொல்கிறார்கள், எதற்காக அப்படிப் பேசுகிறார்கள், என்ன குறைகள் இருக்கின்றன என்பதை தயவுசெய்து நன்றாக ஆராய்ந்து, அந்தக் குறைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசு வழிகாண வேண்டுமே தவிர, யார் அந்தக் குறைகளை இந்த மன்றத்தில் சொல்கிறார்கள் என்பதை மனதில் வைத்துக்கொண்டு அந்தக் குறைகளை புறக்கணித்தால், ஆயிரக்கணக்கான அரிசன மக்களது குறைகளை புறக்கணித்த வகையில்தான் அது அமையுமே தவிர, மன்ற உறுப்பினரை புறக்கணித்ததாக ஆகாது.

மீண்டும் வற்புறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏழை மக்கள், பாட்டாளி மக்கள், அரிசன வகுப்பைச் சேர்ந்திருக்கக்கூடிய மக்கள், எந்த அளவுக்கு பல இடங்களில், அதிலும் குறிப்பாக காவல் துறையிலே காவல் துறையிலுள்ளவர்கள் செய்கின்ற ஆதிக்கத்திற்கு ஆளாக வேண்டியிருக்கிறது என்பதை இந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கூப்பிட்டுக் கேட்கலாம். என் பேச்சில் நம்பிக்கையில்லாவிட்டால் தி.மு.க. கிளைகளின் செயலாளர்களைக் கூப்பிட்டுக் கேட்கலாம். என்னுடைய தொகுதியில் தி.மு.க. நடத்திக்கொண்டு வருகிற எம்.ஜி.ஆர். மன்றம், அண்ணா மன்றம் ஆகியவைகளில் அமைப்பாளர்களாக, செயலாளர்களாக பணியாற்றிக்கொண்டிருக்கிறவர்கள்தான் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப் பார்த்த நேரத்தில் எனக்கு எவ்வளவோ கொதிப்பு ஏற்பட்டது. அதைத்தான் சட்டமன்றத்தில் சொன்னேன். அமைச்சருக்குக் கோபம் வந்தது. என்னால் நிரூபிக்க முடியும். ஆனாலும் சட்டமன்றத்தில் நாங்கள் எதையாவது சொன்னால் அமைச்சருக்கு அது தவறு என்று சொல்வதற்கு உரிமை இருக்கிறது. அதை வாபஸ் வாங்க வேண்டுமென்று சொன்னார்கள். அமைச்சருடைய மனது புண்படக்கூடாது என்பதற்காக, ஒரு பண்புக்காக, தலைவர் அவர்கள் சொன்னதின் பேரில் அதை நான் வாபஸ் பெற்றுக்கொண்டேன். அதில் வருத்தமில்லை.

** ** அதுவும் மன்ற உறுப்பினர்கள் ஏதாவது சொன்னால், அதை மறுத்து உறுப்பினர் சொன்னது தவறு, தன்னுடைய வார்த்தைதான் சரி என்று அமைச்சர் சொன்னால், சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் நியாயமாக இருக்கும். இவ்விஷயத்தை மிகுந்த அக்கிரமைநோடு கண்காணிக்க வேண்டும்.

தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்தபொழுது பல தடவை வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். டாக்டர் அம்பேத்கார் சிலையை ஆங்காங்கு வைப்போம், பஞ்சாயத்துப் பள்ளியாகட்டும், உயர்நிலைப் பள்ளியாகட்டும், எங்கெல்லாம் வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் அம்பேத்கார் சிலையை வைப்போம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள்.

அந்த வாக்குறுதி காப்பாற்றப் பட்டிருக்கிறதா ? எத்தனையோ தோழர்கள் டாக்டர் அம்பேத்கார் படம் வைக்க வேண்டும் என்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு கே. பி. எஸ். மணியவர்கள் நன்றாகச் சொன்னார்கள் டாக்டர் அம்பேத்கார் செய்தவற்றை. என்ன செய்து விட்டார், அண்ணல் காந்தியடிகள் பல நன்மைகளைச் செய்தார்கள், இதற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்கிறார்கள். அதற்கும் கட்சித் தலைவர் கூட உரிமைக்கும் சலுகைக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது என்பதால் எவ்வளவோ வாதாடினார்கள். அன்று எதிர்க்கட்சி அமைச்சர் எவ்வளவோ சலுகைகள் உண்டு என்று மாண்புமிகு முதல் அமைச்சர் சொன்னாலும் கூட, உரிமை வேண்டும் என்று போராடி வாங்கும் காட்சியைப் பார்த்தோம். இந்தச் சிறு விஷயத்தில் உரிமை வேண்டும் என்று சொல்லக் கூடிய அளவில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு மனக்கொதிப்பு ஏற்பட்டது. அந்த அளவிற்கு டாக்டர் அம்பேத்கார் அரிசனங்களுக்குச்

** பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





செய்திருக்கிற நன்மைகளை அவர்கள் போற்றுகிறார்கள். அவர்கள் காந்திஜி கொடுத்த சலுகை போதாது என்றும், உரிமைதான் வேண்டும் என்றும் போராடியதற்காக அரிசன மக்கள் அம்பேத்காரை கடவுளாக மதிக்கிறார்கள். அவர்களுடைய சிறிய வேண்டுகோள். ஆதி திராவிட சங்கத்தின் சார்பில் கொடுத்திருக்கும் மனுவில் இரண்டு வார்த்தைகள் சபாநாயகர் அவர்களுடைய அனுமதியின் பேரில் படிக்க விரும்புகிறேன்.

"அண்ணல் அம்பேத்கார் அவர்களின் திருவுருவப் படத்தை தமிழகத்தில் உள்ள அரசு அலுவலகங்களிலும், மாநகராட்சி, நகர மன்றம், பஞ்சாயத்து அலுவலகங்களிலும் டாக்டர் அம்பேத்காருடைய திருவுருவப் படத்தை வைக்க வேண்டும் என்றும், தமிழக அரசு வெளியிடும் பாட நூல்களில் அவருடைய வாழ்க்கை வரலாறு சுருக்கத்தைச் சேர்க்கும்படியும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை இச்சங்கம் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறது". நேரம் குறைவாக இருப்பதால் விளக்க முடியவில்லை. ஒரே ஒரு வார்த்தை மட்டும் சொல்லி முடிக்கிறேன்.

ஒரு கம்ப்ளெயிண்ட் பல ஆண்டுகளாக இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியிலும் இருந்தது, கழக ஆட்சியிலும் இருக்கிறது. யாரும் தீர்க்க முடியவில்லை. என்ன கம்ப்ளெயிண்ட் என்றால் "Our burial ground is in S. No. 107/5 south-east of the Harijan colony of Thurinjapuram and at a distance of three furlongs from the colony. As it is, we have to carry the bier to the burial ground by walking over the bunds of paddy fields and sugarcane groves in S. Nos. 86, 87, 90, 93, 95 and 107" இந்தக் குறை பல ஆண்டுகளாக இருந்துக் கொண்டிருக்கிறது. 1967 இறுதியில் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த அரசாங்கம் கவனிக்கவில்லை என்றால் அதற்கு என்ன அர்த்தம் ? வாழ்க்கையில்தான் அவர்களுக்கு உரிமை இல்லை. சலுகைகள் இல்லை. செத்தால் கூட சுடுகாட்டுக்குக் கூடப் போக உரிமையில்லை......

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அந்தப் பகுதி சட்ட மன்ற உறுப்பினர் அந்த மக்களுக்கு இடம் வாங்கிக் கொடுத்தாகி விட்டது என்று சொல்லிக் கொள்கிறார்கள். கொடுக்கப்பட்டு விட்டது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மிகுந்த மகிழ்ச்சி, மக்கள் சார்பில். (மணியடிக்கப்பட்டது).

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஒரே ஒரு பாயிண்ட். ஒரு நிமிஷம். கடைசியாக, அமைச்சர் என்ன சொன்னார்கள். மனுக்கொடுத்தால் கவனிக்கப்படும் என்று. ஆனால், ஒன்றை மட்டும் முக்கியமாகக் குறிப்பிட விரும்புகிறேன். அமைச்சருக்கு நிர்வாகத்தில் தலையிட்டு சீர்திருத்த உரிமையில்லை அதை நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன். பல இலாக்காக்கள் இருக்கின்றன. அரிசன மக்கள் போலீஸ்காரர்களால் தாக்கப்பட்டார்கள் என்றால், அரிசன மக்கள் சார்பில் எந்த அளவிற்கு அமைச்சர் தலையிட்டு போலீசைக் கேட்க முடியும் என்பதை மனச் சாட்சிப் பிரகாரம் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. போலீஸ் துறையால் தகராறு இருந்தால் அமைச்சர் நடவடிக்கை எடுக்க உரிமை இருக்கிறது. போலீஸ் இலாகாவில் ஈடுபடமுடியாது என்று சொல்வது தவறு. கூட்டுப் பொறுப்பு இருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஆகவேதான், இன்றைக்கு தனிப்பட்ட உரிமைகள் கோருகிறார்கள அரிசன மக்கள். போலீஸ் துறையாகட்டும், கல்வித் துறையாகட்டும், அட்மினிஸ்ட்ரேடிவ் சர்வீஸ் ஆகட்டும், "Let the red-tape be cut immediately and the Hon. Minister be allowed to interfere in the matter." அப்படிச் செய்தால்தான், அரிசன மக்களுக்கு மட்டுமன்றி, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் வாதாட உரிமை இருக்கும். (மணியடிக்கப்பட்டது).

*திரு. ஜே. எஸ். இராசு : பேரவைத் தலைவர் அவர்களே, 1969-70-ம் ஆண்டுக்கான இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய அமைச்சரவையில் புதிதாக இடம் பெற்றிருக்கிற மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். மிகப் பெரிய பொறுப்பினை ஏற்றிருக்கிற அமைச்சரவர்கள், வீட்டிற்கும், ஊருக்கும், உழவுக்கும்—தொழில் வளர்ச்சிக்கும் நல்ல ஒளியினைத் தருவார் என்று எதிர்பார்க்கிறேன்.

இந்தத் துறையைப் பொருத்தவரையில் இரண்டொரு விஷயங்களைச் சொல்ல முற்படுகிறேன். டாக்டர் அம்பேத்கார் அவர்களும், தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்காக தனிக்கவனம் செலுத்திய பெரியவர்களும், "ஹரிஜன்" என்ற வார்த்தையை வெறுத்திருக்கிறார்கள், எதிர்த்து இறுதிவரை போராடியிருக்கிறார்கள். நம்முடைய அரசியல் சட்டத்திலே கூட "ஹரிஜன்" என்ற வார்த்தை எந்த இடத்திலும் காணப்படவில்லை. ஆனால், மகாத்மா காந்தியார் சொன்னார் என்பதற்காகவோ அல்லது அதற்கும் முன்பாக நரசிம்ம மேடா என்பவர் மானசீகமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு "ஹரிஜன்" என்று பெயர் கொடுத்தார் என்பதற்காகவோ, அந்த வார்த்தையை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். காரணம் எதுவாக இருப்பினும் "ஹரிஜன்" என்ற வார்த்தையை உபயோகத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது என்பதை இந்த மன்றத்திலே பணிவோடு தெரிவிக்கிறேன். இந்த "ஹரிஜன்" என்ற வார்த்தை இருப்பது கூட, ஹிந்து வர்ணாசிரம தர்மத்திற்கு உதவியாக, ஹரிசன மக்கள் என்றால் தாழ்த்தப்பட்ட மக்கள் என்கிற வேறுபாட்டை நிரந்தரமாக இருக்கச் செய்வதற்காகத்தான் என்று நாங்கள் எண்ணுவதால், இந்த ஹரிஜன நலத்துறை என்ற பெயர் வைத்திருப்பதை நம்முடைய அரசு மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஷெட்யூல்ட் காஸ்ட் என்பதை தமிழில் "தொகுக்கப்பட்ட பிரிவினர்" என்றோ அல்லது "தொகுத்த பிரிவினர்" என்றோ இந்த இலாக்காவின் எல்லா மட்டத்திலும் மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். "டிப்ரெஸ்ட்" கிளாஸ் என்ற வார்த்தையை கூட டாக்டர் அம்பேத்கார் எதிர்த்திருக்கிறார்கள். "தாழ்த்தப்பட்ட" என்று சொல்லும்போதே, தன்னைத்தானே தாழ்த்திக் கூறிக்கொள்ளும் படி இருக்கிறது என்பதை முக்கியமாக வலியுறுத்திச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

இரண்டாவதாக, மத்திய சர்க்காரிலே, பாராளுமன்றத்திலே, அரசியல் சட்டத்தின் விதிகள் பிரகாரம், கமிஷன் ஒன்றை நியமித்து, பின்தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியோரின் நிலைமைகளைப் பரிசீலிக்க ஏற்பாடு செய்தார்கள். அந்தக் கமிஷனுடைய ரிபோர்ட் பாராளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்படுகிறது. அதைப் பற்றிக் கருத்துக்கள் தெரிவித்து, வாதங்கள் செய்ய ஆலோசனைகள் கொடுக்க, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. ஆனால், அதே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த அறிக்கையின் மீது எந்த விதமான கருத்துக்களையும் தெரிவிக்க வாய்ப்பு இல்லாமல் இருப்பதால், ஆண்டுதோறும் அதுபற்றி நம்முடைய மாநில சட்ட மன்றத்திலே விவாதம் செய்ய வாய்ப்பு ஏற்பட மத்திய சர்க்காரோடு [illegible] நம்முடைய அமைச்சரவர்களும், சம்மந்தப்பட்ட இலாகாவும் [illegible]க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.





மூன்றாவதாக என்னுடைய தொகுதியில் மட்டுமல்லாமல், தமிழகம் முழுவதும் இருக்கின்ற தரிசு நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் ஆகியவற்றை வசதி செல்வாக்குப் பெற்றவர்கள், அரசியலில் அந்தஸ்துப் பெற்றவர்கள் அப்படிப்பட்ட நிலங்களுக்கு அநேகமாக சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். வெள்ளையர் ஆட்சியிலேயே இப்படிப்பட்ட கொடுமைகள் நடந்திருக்கின்றன என்பதை விளக்கி ரெவின்யூ போர்டு கடந்த நூற்றாண்டில் ஒரு குறிப்பையும் வெளியிட்டது. இந்த நிலைமைகள் மேலும் ஏற்படாத வகையில் மிச்சம் உள்ள நிலத்தையாவது ஏழை அரிசனங்களுக்கு கொடுக்கவேண்டும். 1957-ல் கேரளாவில் பொதுவுடைமைக் கட்சி ஆட்சியில் இருந்தபோது அந்தந்த வட்டத்தில் உள்ள தரிசு நிலங்களை அவ்வட்ட ஏழை நிலமற்றவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கும் வகையில் ஒரு சட்டத்தை உருவாக்கினார்கள். தமிழக அரசு இன்றைக்கு இருக்கும் நிலங்களை—அநேகமாக பெரும்பாலான நிலம் பட்டா ஆகிவிட்டது—மீதமுள்ள நிலத்தையாவது தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மலை ஜாதியினருக்கு நல்லமுறையில் ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மற்றொரு குறையையும் சொல்ல விரும்புகிறேன். அரசினர் ஆண்கள் விடுதிக்கு கட்டடம் இல்லாமல் விடுதி மாணவர்கள் தொல்லைப் படுகிறார்கள். அதனால் கல்வி கெடுகிறது. உறக்கம் கெடுகிறது. 1968-ம் ஆண்டு நம்முடைய அம்மையார் அவர்களை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்று காண்பித்தேன். மாணவர் விடுதிக்குக் கட்டடம் வேண்டும் என்பதை அவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டார்கள். தலைமைச் செயலகத்தில் அண்மையில் நான் விசாரித்ததில், பார்ட் 1 ஸ்கீமில் பெரம்பலூரில் விடுதி கட்டும் திட்டத்தை சேர்த்திருப்பதாக அறிகிறேன். ஆகவே, பெரம்பலூரில் ஆண்கள் விடுதிக்குக் கட்டடம் அமைய அம்மையார் விரைவாக ஆணை பிறபிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பெரம்பலூர் தொகுதியைப் பொறுத்தவரையில் இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பச்சைமலையில் பிறபகல் 1-30
சுமார் 500 ஏக்கர் நிலம் ஓரிடத்தில் சமதரையாக இருக்கிறது. அங்கு காப்பி விளைவதற்கேற்றவாறு தட்பவெப்ப நிலைமைகள்சாதகமாக இருக்கிறது. ஆகவே, அங்கே ஒரு காப்பித்தோட்டம் ஏற்பட—ஒரு மாடல் ஸ்கீம் உருவாக்கித்தந்தால் அங்குள்ள மலைஜாதியினருக்கும், மலையின் கீழ்ப் பகுதி தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வேலைவாய்ப்பு வசதி கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒவ்வோர் ஆண்டிலும் கல்லூரியில் சேர்க்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கல்லூரி விடுதிகளில் இடம் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். நானும் மற்ற சட்ட மன்ற உறுப்பினர்களும் இதைப்பற்றி அமைச்சர் அவர்களிடம் பலமுறை சொல்லியிருக்கிறோம். ஆகவே, வரும் ஆண்டுகளிலாவது அரசாங்கத்தின் கையகத்திலுள்ள அக்காமடேஷன் கண்ட்ரோல், ஸ்டேட் ஹவுசிங்போர்டு மூலமாக இருக்கின்ற கட்டடங்களையாவது மாணவர்களுக்கு ஒதுக்கி இடம் கிடைக்கும் என்ற உத்தரவாதத்தை அளிக்கும்படி கேட்டுக்கொண்டு சமுதாய நல அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த மானியத்தை வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நடைபெறுகின்ற மானியக் கோரிக்கையின்மீது எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஆதித்திராவிட சமுதாயத்தின் மீது அக்கறை இருப்பதாகக் காட்டிக் கொண்டு பேசினார்கள். இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருக்கிற காரணத்தாலே, திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர இதர கட்சிகளின் சார்பிலே அமர்ந்திருக்கிற உறுப்பினர்கள் ஏதோ அவர்களுடைய கட்சிதான் ஆதித்திராவிட சமுதாயத்திற்கு நலம் செய்கிறது மாதிரியும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆதித்திராவிட சமுதாயத்திற்கு சரிவர நன்மை செய்யவில்லை என்கிற மாதிரியும் பேசினார்கள். நான் முதலிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர எல்லாக் கட்சிகளுக்கும் சொல்லிக்கொள்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், ஆதித்

திராவிட சமுதாயத்தை இந்த அளவுக்குக் கைதூக்கிவிட்டது திராவிடக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும்தான் என்று சொன்னால் அது மிகையல்ல. காங்கிரஸ் கட்சியாக இருக்கட்டும், சுதந்திரா கட்சியாக இருக்கட்டும், என அருமை நண்பர் K. B. S. மணி அங்கம் வசிக்கும் கட்சியாக இருக்கட்டும், அவர்கள் எல்லாம் மாஜி காங்கிரஸ்காரர்களே தவிர, இன்றைய காங்கிரஸ்காரர்களுக்கும் அவர்களுக்கும் பாரம்பர்யம் அரசியலிலே கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆதித்திராவிட சமுதாயத்தைக் கை தூக்கிவிட அன்றும் பாடுபட்டது, இன்றும் பாடுபட்டு வருகிறது, என்றும் பாடுபட்டு வரும் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்கிறேன். இன்னும் பகிரங்கமாகச் சொல்லப்போனால், ஆதித்திராவிட சமுதாயத்தைக் கை தூக்கிவிடுவதுபோல காங்கிரஸ் கட்சி பாவனை செய்கிறதே தவிர, அந்த சமுதாயத்திற்கு விரோதமாகத்தான் இருந்து வந்திருக்கிறது. அவர்களுடைய பாரம்பர்யம் அப்படிப்பட்டது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் மீண்டும் மீண்டும் பாரம்பர்யத்தைப்பற்றிப் பேசுகிறார். என்ன விரோதம் என்று சொல்லட்டும்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் தயவுசெய்து காங்கிரஸ் வரலாற்றைத் திரும்பப் படிக்கவேண்டும். காங்கிரஸ் கட்சியின் தலைவராக திரு. பானர்ஜி அவர்கள் இருந்தபொழுது, அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியிலே ஒரு தீர்மானம் போட்டார்கள். அதாவது, "காங்கிரஸ் கட்சி சமுதாய, சீர்திருத்த விஷயங்களிலே ஈடுபடக் கூடாது. அப்படி ஈடுபட்டால் காங்கிரஸ் கட்சிக்குச் செல்வாக்கு இல்லாமல் போய்விடும்" என்று தீர்மானம் போட்டு செயலாற்றினார்கள். சமுதாய சீர்திருத்தத்தில் ஈடுபட வேண்டுமென்ற எண்ணம் காங்கிரஸுக்கு இல்லை. உள்ளபடியே ஆதித்திராவிட சமுதாயத்தை மேலே தூக்கிவிட வேண்டுமென்று சொன்னால், இன்றையதினம் கடைப்பிடிக்கக்கூடிய வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பொருளாதார முன்னேற்றமாக இருந்தாலும் சரி, உத்தியோகமாக இருந்தாலும் சரி—வகுப்புவாரி அடிப்படையில் அவர்களுக்கு சலுகை தரப்பட வேண்டுமென்பதுதான் இப்பொழுது கடைப்பிடிக்கப்பட்டு வருகிற முறையாகும். இந்த முறைக்கு காங்கிரஸ் கட்சி எந்த அளவுக்கு உதவியாக இருந்து வந்திருக்கிறது என்பதை 1925-ல் நடந்த காங்கிரஸ் மாநாட்டின் சரித்திரத்தை எதிர்க்கட்சித் தலைவர் படித்துப் பார்க்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்கள் பிறந்தது எப்போது ? எனக்குத் தெரிய வேண்டும்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலைவர் அவர்களே, நிச்சயமாக எதிர்க்கட்சித் தலைவர் என்னிடத்தில் மாட்டிக் கொள்கிறார். 1925-ம் ஆண்டு காஞ்சீபுரத்தில் காங்கிரஸ் மாநாடு நடந்தது. இந்த நாட்டிலே பிறந்த பின்தங்கிய மக்களைத் தூக்கி விடுவதற்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டுமென்ற தீர்மானத்தை பெரியார் ராமசாமி அவர்கள் காங்கிரஸ் மாநாட்டிலே கொண்டுவர வேண்டும் என்று கூறி, அதைக் கொடுத்தார்கள். காங்கிரஸ் அத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறிவிட்டது. அன்றையதினமே பெரியார் ராமசாமி அவர்கள் காங்கிரஸ் கட்சியைக் கை கழுவி விட்டு, சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்தார்கள். பின்தங்கிய மக்களை மேல்தூக்கிவிட வேண்டும் என்ற திட்டத்தில் செயல்பட்டார்கள். அது போகட்டும்.

அடுத்தபடியாக, காங்கிரஸ் அரசாங்கம் ஆட்சிபீடத்தில் இருந்தபொழுது தீண்டாமை ஒழிப்புக்காக தயாரிக்கப்பட்ட ஒரு "வால் போஸ்ட்டரை" அவர்களால் ஒட்ட முடியாத நிலைமையை நாடு இன்னும் மறந்துவிடவில்லை. இந்த நிலைமை காங்கிரஸ் வரலாற்றில் இருக்கிறபொழுது, "நாங்கள்தான் ஆதித்திராவிட சமுதாயத்தைக் காப்பாற்றுகிறோம் என்று பேசுகிறீர்களே, ஒருவேளை இன்று நீங்கள் எதிர்க்கட்சியாக இருப்பதால்தான் உங்களுக்குப் பேசுவதற்கு யோக்கியதை இருக்கிறது. ஆதித்திராவிட சமுதாயத்தைப் பற்றி பேசுவதற்கு காங்கிரஸுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது ? அந்த யோக்கியதை காங்கிரஸுக்குக் கிடையாது.





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, இவர் பேசுவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறதோ, அதுவேதான் எங்களுக்கும் இருக்கிறது. ஆகவேதான் நாங்களும் பேசுகிறோம். உறுப்பினர் அவர்கள் அடிக்கடி யோக்கியதை, யோக்கியதை என்று பேசுகிறார். அது மரபுக்கு ஒத்த வார்த்தைதானா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யோக்கியதை என்றால் தகுதி என்ற அளவில்தான் வருகிறது.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் எல்லாம் பழம் பெரும் சுயமரியாதைவாதிகள் என்பதை நீங்கள் எல்லாம், ஒத்துக் கொள்வீர்கள், எதிர்க்கட்சியும் ஒத்துக்கொள்கிறது. ஆதித்திராவிட சமுதாயத்திற்கு நன்மை செய்ய இரண்டே வழிகள்தான் உண்டு. ஒன்று பொருளாதார ரீதியிலே அவர்களை கைத்தூக்கிவிடுவது ; அடுத்தது சமுதாய ரீதியிலே புரட்சி செய்து மாற்றத்தை உண்டு பண்ணுவது என்பதாகும். நாம் பொருளாதார ரீதியில் என்னதான் செய்தாலும் அதில் உருப்படியான பலன் கிடையாது, சமுதாய நிலைமை மாற்றப்பட்டாலொழிய, அதை மாற்றுவதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர, திராவிடர் கழகத்தைத் தவிர, பெரியார் ராமசாமி அவர்கள் ஏற்படுத்திய சுயமரியாதை இயக்கத்தைத் தவிர, வேறு எந்தக் கட்சியாவது சிறுவிரலை அசைத்தது உண்டா ? சுயமரியாதைக் கட்சிதான் ஆதிதிராவிட சமுதாயத்தை விழிப்படையச் செய்தது. இன்றைய தினம் இந்தச் சட்டமன்றத்தில் 42 பேர்கள் அங்கம் வகிப்பதாக நண்பர் திரு. கே. பி. எஸ். மணி அவர்கள் சொன்னார்கள். இதற்குக் காரணம் என்ன ? அவர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஊட்டியவர்கள் பெரியார் ராமசாமி அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும்தான். இந்த அளவுக்கு ஏன் விளக்க ஆசைப்படுகிறேன் என்றால், சுமார் 20, 25 ஆண்டுகளுக்கு முன்னால் நாட்டிலே இருந்த நிலைமை என்ன ? ஆதி திராவிடன் தெருவிற்குள் நுழைய முடியுமா ? கோயிலுக்குள் நுழைய முடியுமா ? ஆண்டவனை வழிபட ஆலயத்திற்குள் அவன் நுழைய முடியுமா ? யார் இதை எதிர்த்துப் போராடினார்கள் ? யார் இந்த நிலைமையை மாற்றினார்கள் ? "சூத்திரன் என்று சொன்னால் ஆத்திரம் தீரும் மட்டும் அடி" என்று ஆதித்திராவிட மக்களிடையே உணர்ச்சியைத் தூண்டியவர் பெரியார் ராமசாமி அவர்கள். "சூத்திரன் என்று சொன்னால் பல் முப்பத்திரண்டும் உடைந்துவிடும்" என்று சொல்லி ஆதித்திராவிட மக்களின் மத்தியில் சுயமரியாதையை உண்டாக்கினார்கள். வேறு எந்தக் காரணத்தினாலும், அந்த மக்களின் மத்தியில் விழிப்பு உணர்ச்சி வரவில்லை.

அடுத்தபடியாக, ஒரு காலத்தில் ஓட்டலுக்குள்ளே ஆதித்திராவிடர்களுக்கு தனி இடம், தனி டம்ளர்கள். பிராமணாள் நடத்தும் ஓட்டலுக்குள் நுழையவேமுடியாது. அதுமட்டுமல்ல, சர்க்கார் நடத்துகிற ரயில்வேக் களிலே கூட ஆதித்திராவிடர்களுக்குத் தனி இடம் இருந்தது. இதை எதிர்த்து திரு. காமராஜ் அவர்கள் போரிட்டார்களா ? அல்லது சுதந்திராக் கட்சியின் தலைவரும், தமிழ்நாட்டுப் பெரியவருமான திரு. ராஜாஜி அவர்கள் போரிட்டாரா ? ஓட்டலுக்குள் ஆதித்திராவிட மக்கள் நுழையக் கூடாது என்பதை அன்றையதினம் எதிர்த்துப் போராடியவர்கள் பெரியார் ராமசாமி அவர்களும், நாங்களும்தான்.

அடுத்து, 1957-க்கும் 1962-க்கும் இடைப்பட்ட காலத்தில், "பிராமணாள் ஓட்டல்" என்ற பெயர்ப் பலகை நீக்கப்பட வேண்டுமென்று போரிட்டது யார் ? பெயர்ப்பலகை நீக்கப்பட வேண்டுமென்று போரிட்ட பெரியார் ராமசாமி அவர்களைச் சிறையிட்டது காங்கிரஸ் ஆட்சி, ஆதித்திராவிட மக்களின் மத்தியில், நீங்கள் தாழ்ந்தவர்கள் அல்ல, உயர்ந்தவர்கள், தைரியமாக எதிர்த்துப் போராடுங்கள் என்று அவர்களுக்கு தைரியத்தைக் கொடுத்து விழிப்புணர்ச்சியை உண்டாக்கியவர் பெரியார் ராமசாமி அவர்களே வேறு எந்தக் கட்சியில் அவர்கள். அம்மாதிரி உணர்ச்சியுடையவன்

இருந்தாலும், அவன் சுயமரியாதைக் கட்சிக்காரனுக இருந்திருப்பான். சுயமரியாதைக் கட்சிக்காரனுக்குத்தான் அந்த உணர்வு வருமே தவிர, மற்றப்படி மற்றவர்களுக்கு வராது. (மணியடிக்கப்பட்டது). தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அமைச்சர் அவர்களிடம் அனுமதி வாங்கியிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையில் பத்து நிமிடத்தை குறைத்துக் கொள்வதாகச் சொன்னுர்கள்.

ஆதித்திராவிடர்கள் ஆலயத்திற்குச் செல்லக்கூடிய உரிமையை வழங்கு யது. 52, 57-ல் திரு கக்கன் அமைச்சராக இருந்தார். நானும் இருந்தேன். திரு. கக்கன் ஆதித்திராவிட மக்களுக்கு நன்மை பண்ணியதாகச் சொன்னுர். காங்கிரஸ் கட்சிதான் இல்லை, அது எங்கள் கட்சிதான் என்று நான் சொன்னேன். இல்லை நான் அமைச்சராக வந்திருக்கிறேனே, காங்கிரஸ் கட்சிதானே இன்றைக்கு அமைச்சராக ஆக்கியது என்று சொன்னுர்கள். நான் அப்போதே என்னே சொன்னேன். "நீங்கள் ஒருவர் மட்டும் அமைச்சராக வந்துவிட்ட காரணத்திஞல், உங்கள் சமுதாயத்திற்கே நன்மை வந்துவிட்டதாகக் கருதவேண்டாம் நீங்கள் இந்த மன்றத்தில் அமைச்சராக வருவதைவிட சிதம்பரம் நடராஜா கோவிலுக்குள் நந்தனுரை விடமாட்டேன் என்ருர்களே அந்த சிதம்பரம் கோயில் அர்ச்சகராகத் வந்திருந்தால் நான் நிரம்பச் சந்தோஷப்பட்டிருப்பேன்" என்று சொன்னேன். நாங்கள் தானே 1939-ல் ஆலயப்பிரவேசம் கொண்டுவந்தோம் என்று சொன்னுர் கள். ஒத்துக்கொள்கிருேம். 1921-ஆம் ஆண்டிலேயே பெரியார் அவர்கள் ஆதித்திராவிட மக்களே அழைத்துக்கொண்டு பழனி முருகன் கோவில், மதுரை மீனுட்சி கோவில் ஆகியவற்றில் ஆலயப்பிரவேசம் போராட்டத்தை நடத்திஞர்களே என்றேன். அதற்கு கக்கன் அவர்கள் "அப்போது நீங்கள் பிறந்தே இருக்கமாட்டீர்கள்" என்று சொன்னுர். பிறப்புக்கும் ஒரு விஷயத்தை அறிந்துகொள்வதற்கும் என்ன சம்பந்தம்? பதில் சொல்ல முடியாது, வேறு பாதையில் போகிருர்கள்.

இந்த அரசை நான் கேட்டுக்கொள்வது என்னவென்ருல் பொருளாதார காரியங்கள் ஒரு பக்கம் நடக்கட்டும். சமுதாய ரீதியில் ஒரு பெரிய மாற்றத்தைப் பண்ணியாகவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் இன்றைக்கே ஒத்துக்கொள்ளட்டும். நாளைக்கே எல்லாக்கோவில்களிலும் ஆதித்திராவிட மக்களே அர்ச்சகர்களாகப் போட்டுவிடுவோம். அவர் சரி என்று ஒப்புதல் அளிப்பாரா என்று கேட்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாங்கள் தான் துரோகிகள், ஒன்றுமே செய்ய வில்லை. எங்கள் ஒப்புதல் எதற்கு ? நீங்கள்தான் எல்லாவற்றையும் செய்தீர்கள். தைரியம் இருந்தால் நீங்களே செய்யுங்கள்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** இப்படி இந்தப்பிரச்சினையிலே நழுவிவிடக்கூடாது. ஆதித்திராவிட மக்கள் முன்னேறவேண்டுமென்ற அக்கறை உங்களுக்கு இருக்குமானுல், அவர்களையே எல்லா ஆலயங் களிலும் அர்ச்சகர்களாகப் போடுங்கள் என்று என் நீங்கள் சொல்லக் கூடாது?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்களுக்குத் தைரியம் இருந்தால், பண்ணுங்கள் என்றுதான் சொல்கிறேன். இதற்கு நாங்கள் என்ன ஒப்புதல் அளிப்பது ? எல்லாவற்றிலும் நாங்கள் துரோகிகள், இதற்கு மட்டும் எதிர்க்கட்சித் தலைவர் ஒப்புதல் வேண்டுமா ?

இன்னென்றையும் சொல்கிறேன். என்னுடைய வீட்டிலே எனக்குத் தெரிந்தவரையில் அந்த நாளில் இருந்து இன்றுவரை ஹரிஜனங்கள் சாப்பாட்டு அறைக்கு வந்தே சாப்பிடுவார்கள். எங்களிடத்தில் ஒன்றும் வித்தியாசம் கிடையாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** இதை ஒரு அரசியல் நோக்கத்தோடு பயன்படுத்தக்கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன். எனக்குக்கூட ஒரு ஆசை. திரு. ராமனிடம் மின்சார வாரியம் இருக்கிறது. திரு. சுப்பையா அவர்களிடம் அறநிலைய பாதுகாப்பு இலாகா இருக்கிறது.





இவர்களிடத்திலே மின்சார வாரியத்தைக் கொடுத்துவிட்டு ஆதித்திராவிட சமூகத்தைச் சேர்ந்த திரு. இராமனிடத்திலே அறநிலைய பாதுகாப்பு இலாகாவை ஒப்படைக்கவேண்டும் என்று விரும்புகிறேன். ஆக ஆதித் திராவிட மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய ஒரே ஒரு ஸ்தாபனம் திராவிட முன்னேற்க் கழகம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்தான். அந்தக் காரியத்தையும் செய்யும், செய்திருக்கிறது, செய்யவும் முடியும், வேறு எந்தக் கட்சியாலும் முடியாது என்று சொல்லி இந்த மானியத்தை ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மிகவும் நன்ருகப் பேசினுர்கள். பேசி விடலாம். திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் முதலில் ஆதித் திராவிட சமூகத்தோடு கொள்வினை, கொடுப்பினை கொள்ளட்டும், அப்படி யாராவது அரிசன சமூகத்தில் இருந்து பெண் எடுத்திருக்கிருர்களா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நான் சர்வாதிகாரியாக்கப்பட்டால், என்னிடம் அதிகாரம் இருக்குமானுல், இந்திய உபகண்டத்திற்கே ஒரு அரிசனப் பெண்மணியை ஜனுதிபதியாக ஆக்குவேன் என்று காந்தியார் சொல்லியிருக்கிருர்கள். அந்த வழியில் வந்த காங்கிரஸ்காரர்கள் இது வரையில் என்ன செய்திருக்கிருர்கள் என்று கேட்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய குடும்பத்தில் நடந்துள்ள திருமணம் ஏதாவது ஒன்றிலாவது அந்தச் சமூகத்தோடு தொடர்பு கொள்ளப்பட் டிருக்கிறதா என்று கேட்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாங்கள் தான் ஒன்றுமே செய்ய வில்லையே. நாங்கள் அந்தச் சமூகத்திற்குச் துரோகிகள் என்று சொல்லி யாகிவிட்டது. நீங்கள்தான் எல்லாவற்றையும் செய்திருக்கிறீர்கள், இதற்கும் நீங்கள் வழிகாட்டுங்கள். அப்புறம் நாங்கள் வழி காட்டுகிருேம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்தது திரு. விநாயகம் பேசு வார்கள். அவருக்கு எவ்வளவு நேரம் வேண்டும்.?

THIRU K. VINAYAKAM : Till I finish.

அரைமணி நேரம்.

பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது விவாதிக்கப்படுகிற மானியக் கோரிக்கையில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று அரிசன மக்களுக்கு சேவை செய்யவேண்டியது. இன்னென்று பின் தங்கிய மக்களுக்குச் சேவை செய்யவேண்டியது. அரிசன மக்களுக்கு காங்கிரஸ் ஒன்றுமே செய்யவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம்தான் செய்தது என்று பேசிவிடலாம். அது ஒரு குற்றச்சாட்டு. நீங்கள் வந்து என்ன செய்திருக்கிறீர்கள் ? ஒரு 50 லட்சம் முன்பு ஒதுக்கப்பட்ட தொகையில் கூடியிருக்கிறது. முன்பு 5 கோடி இப்போது 5½ கோடி, அடுத்த வருஷம் 6 கோடி யாகலாம். வார்த்தைகளில் எதையும் சொல்லலாம். சும்மா சொல்வதில் லாபம் இல்லை. செயலில் அல்லவா காட்டவேண்டும்.

The proof of the pudding is in the eating.

நாடார் இங்கே ரொம்பத் தீவிரமாகப் பேசலாம். திரு. ஆசைத்தம்பி அவர் களைத்தான் சொல்கிறேன். ஆனுல் நடப்பது என்ன ? அரிசன வீட்டிலே நாடார் பெண் எடுக்கிருர்களா ? பெண் எடுக்கும்போது தங்களுக்கு ஈடான, பொருத்தமான பெண் என்று விருதுநகரில் இருந்தே எடுக் கிருர்கள். பேசிவிடலாம்.... இது எல்லாம் என்ன பேச்சு, சரி பிரச்சினைக்கு வருவோம்.

அரிசனங்களுக்கு அதிகமான அளவில் உதவி செய்யவேண்டும் என் பதில் அபிப்பிராயபேதம் இல்லை. நான் அந்தப் பிரச்சினைக்குப் போக வில்லை. பிற்பட்ட இனம் என்று ஒன்றிருக்கிறதே, அதை விவரிக்க விரும்புகிறேன். அந்த பிற்பட்ட இனத்தவர்கள் என்பதையே முன்பு

[திரு. கே. விநாயகம்] [1969 மார்ச் 13

வேண்டுமென்று சொல்வார்கள். அந்த அம்மையாரும் ஒன்றும் சொல்ல முடியாது. அதற்காக சண்டைபோட்டுக்கொண்டு வெளியே வந்துவிட மாட்டார்கள். பேரவைத் தலைவர் அவர்களே நாங்கள்கூட பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள்தான்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைக் குறிப்பிடக்கூடாது.

**திரு. கே. விநாயகம் :** சொல்வதால் கருத்தின் ஆழத்தை சுலபமாக உணர்த்தமுடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவரைப்பற்றி குறிப்பிடக்கூடாது, இந்த விவாதத்திலே அவருடைய பெயரை இழுக்கக் கூடாது.

**திரு. கே. விநாயகம்:** எனக்கு நன்கு ஞாபகமிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் பழைய மாணவர்களுக்கு ஒரு விருந்து வைத்தார்கள். என்னையும் அழைத்தார்கள். நானும் போயிருந்தேன், என்னை அவர் பார்க்கவில்லை, கூட்டத்திலே. அப்பொழுது அவர்கள் சொன்னார்கள், 1935-ம் வருஷத்திலே விடுமுறைக்கு நான் காஞ்சிக்குப்போனேன். தாயாரிடம் பொன் சங்கிலி எங்கே என்று கேட்டேன், நீ படிக்கிறாயே, பெரிய படிப்பு அதற்குச் சம்பளம் கட்டவேண்டும், அதற்காகத்தான் அடகுவைத்தேன் என்று சொன்னார்கள். இப்படி அண்ணா அவர்கள் சொன்னபோது தாரை தாரையாக கண்ணீர் எனக்கு வந்தது. அதே கஷ்டம் தான் எனக்கும். அதற்குப் பிறகு சொன்னார்கள் "இன்னொரு விடுமுறைக்குப் போய் இருந்தபொழுது காப்பு எங்கே என்று கேட்டதற்கு பரீட்சைக்குப் பணம் கட்டவேண்டுமென்று சொன்னாயே அதற்காகத்தான்" என்று சொன்னார்கள். அப்படி யெல்லாம் கஷ்டப்பட்டு படித்தவர்கள் நாங்கள். எங்கள் காலத்திலே இதுமாதிரிச் சலுகைகளே கிடையாது. பிறகு நம்முடைய ஆட்சி வந்த பிறகு, காங்கிரஸ் கட்சி ஆட்சியாக இருக்கலாம், டி.எம்.கே. ஆட்சியாக இருக்கலாம், அது ஒன்றும் பிரமாதமில்லை, மக்களின் மதிப்பைப் பெற்று முற்போக்கு எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு நல்ல காரியங்களைச் செய்கிறோம் என்றால், ஏதோ நாமே எல்லாம் செய்துவிட்டோம் என்று சொல்லமுடியாது. நாங்கள் முற்போக்கிலே போய் கடைசியில் தவறி விலகி நின்றபோது நீங்கள் உள்ளே வந்திருக்கிறீர்கள். நாங்கள் செய்ததைத்தான் நீங்கள் தொடர்ந்து செய்கிறீர்கள். ஏதோ நீங்களே சாதித்துக் கொள்ளுவதாக எண்ணிக்கொண்டால், அது உங்களையே நீங்கள் ஏமாற்றிக் கொள்வதாகத்தான் பொருளாகும். குடிமனை நிலம் அரிசனங்களுக்குத் தரப்பட வேண்டும். அதிலே எனக்கு மாறுபாடு இல்லை.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பிற்பட்ட சமுதாயம் என்பது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்பதை எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் விளக்கினால் நலம்.

**திரு. கே. விநாயகம் :** பிற்பட்ட சமுதாயம் என்று சொல்லும்போது ஜாதி அடிப்படையில் நிர்ணயிக்கக்கூடாது. "Educationally and socially backward" என்ற முறையிலே நிர்ணயித்தால் தான் நியாயம் கிடைக்கமுடியும். இதைப்பற்றி ஒரு முடிவு எடுக்க, ஒரு குழுவை கட்சி மனப்பான்மை அடிப்படையில் போடாமல் நியாயமான அடிப்படையில் போட்டு ஆராயவேண்டும். அந்தக் குழுவிலே நீங்கள் 15 பேர், நாங்கள் 1½ பேர் என்ற அடிப்படையிலே இடம் பெறக்கூடாது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஒன்றரை பேர் என்றால் உங்கள் ஒருவரை மட்டுந்தானே குறிக்கும்.



1969 மார்ச் 13]

**திரு. கே. விநாயகம் :** நானே 1½ ஆள்தான். இதையெல்லாம் வார்த்தை நயத்தைப் பார்த்துப் புரிந்துகொள்ள வேண்டும். விளையாட்டுப் பேச்சு ஒரு புறம் இருக்கட்டும். The disease is too deep. இந்தப் பிரச்சினையை நம்மால் தீர்க்க முடியவில்லை. The problem is so deep It has got to be re-adjusted thoroughly and a solution found. அதைத்தான் நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். குடிமனைகள் தருவது அவசியமானதுதான். பிற்பட்ட இனத்தவர்களுக்கு ஏதோ கொஞ்சம் கொடுக்கிறார்கள். அரிசனங்களுக்கு குடிமனை தருவதற்காக அந்த ஊரில் உள்ள நிலத்தை வாங்குகிறார்கள் அல்லது எடுத்துக் கொள்ளுகிறார்கள். அந்த நிலம் நம்மைப்போல் ஒரு பிற்பட்டவனுக்குத் தான் சொந்தமாக இருக்கும். அவன் அதை எதற்குப் பயன்படுத்துகிறான் என்றெல்லாம் பார்த்து அதற்குப் பிறகு வாங்க வேண்டும். குறிப்பாக, புறம்போக்கு நிலங்கள் இருந்தால், அதைத்தான், முதலில் எடுக்க வேண்டும். அதிலும் புஞ்சையை முதலில் எடுத்துக்கொண்ட பிறகுதான் நஞ்சைக்குப் போக வேண்டும். ஏழைக் குடியானவர்களுடைய நிலத்தை ஆர்ஜிதம் செய்வதில் சிறிது கவனத்துடன் நடந்துகொள்ளவேண்டும். நான் பல இன்ஸ்டன்ஸஸ் அம்மையார் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். மலேயாவில் இருந்து ஒரு தமிழன் வந்திருக்கிறான். எந்த ரப்பர் தோட்டத்தில் வேலை செய்தானோ, கையிலே 2,000 ரூபாய் பணத்தைக் கொண்டு வந்து, தாயகத்தில் வாழ்க்கையை நடத்த வேண்டுமென்று நிலத்தை வாங்கியிருக்கிறான். அந்த நிலத்தை எடுத்துக்கொள்ளும் போது ப்ரொசீடிங்ஸ் எல்லாம் அவனுக்குக் கொடுக்காமலே எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ இதிலே கையெழுத்துப் போட்டால் சர்க்கரை கிடைக்கும் என்று சொல்லி கையெழுத்து வாங்கிவிடுகிறார்கள். ஏதோ சர்க்கரை வருகிறது என்று அவனும் கையெழுத்துப் போட்டிருப்பான். இந்த மாதிரி நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்போது மற்றவர்களை அதிகம் பாதிக்காமல் (Less difficulty) என்ற அளவிலே பார்க்க வேண்டும். பல இடங்களில் ஆர்ஜிதம் செய்தும் கூட குடி போகாமலே கரம்பாகக் கிடக்கின்ற நிலைமைகளும் இருக்கின்றன. அப்படி யாரும் குடிவரவில்லை என்றால், அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்திருந்தாலும் திரும்பவும் அவர்களுக்கே கொடுத்து விடவேண்டும். Dog in the manger policy. பிற்பட்ட இனத்தவர்கள் பட்டியல் மிக மோசமான நிலையில் இருக்கிற Lowest of the downtrodden —டோபிகள், பார்பர்கள் இருக்கிறார்கள். சமூகத்தில் அவர்களைத் தொடுகிறார்கள். They are not untouchables. அவர்களை ஷெட்யூல்டு வகுப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கோரிக்கை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரில் இருக்கிற சலூன் ஒன்றையோ, லாண்டரி ஒன்றையோ கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது. கிராமங்களில் இருப்பவர்கள் எல்லாம் ஏழைகள். ஒன்றும் தெரியாதவர்கள்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** சாதி அடிப்படையில் வேண்டாம் என்று சொன்னீர்கள்.

**திரு. கே. விநாயகம் :** சலுகை கொடுப்பது வேண்டாம். ஆங்கிலத்தில் நான் சொன்னதைப் புரிந்துகொண்டால் சரியாக இருந்திருக்கும். அடிப்படையில் இருப்பவர்களைச் சொன்னேன். 'பாக்வார்டு கிளாஸஸ்' என்பதிலேயே இவன்தான் கீழே இருக்கிறான். இவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை என்பது தெரியும். மற்ற மாநிலங்களில் சிலவற்றில் இவர்களை ஷெட்யூல்டு வகுப்பில் சேர்த்திருக்கிறார்கள். அங்கெல்லாம் கூட அவர்கள் டசபிள்ஸ்தான். அதைப் பற்றிக் கொஞ்சம் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

பிற்பட்ட இனத்தவர்களுக்காக 92 லட்சம்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். ஸ்காலர்ஷிப் மனுக்கள் எவ்வளவு வருகின்றன என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். நாங்களே தொல்லை கொடுக்கிறோமே. ஏதோ எங்களைப் போன்று சலுகை இருக்கிறவர்கள் உங்களிடம் வரமுடியும். மீதிப் பேர் என்ன செய்வது? எண்பத்தியோராயிரம் மனுக்களில்

ஒப்புக்கொள்ளவில்லை. முன்பு விஜயவாடா கோபால் ரெட்டி நிதி அமைச்சராக இருந்தார். திரு. சேலம் சுப்பிரமணியம் போன்றவர்கள் பிற்பட்ட இனத்தவர்களைப் பற்றிச் சொல்கிறபோது, திரு. கோபால் ரெட்டி அவர்கள் அதுவே எனக்குத் தலைவலியாக இருக்கிறது. **These backward classes are a bloody headache to me.** என்று சொன்னார்கள். அப்படி இருக்கிற காலம் மாறிப்போய் அரசியல் சட்டத்தின் 341 ஆர்டிகிள்படி ஒரு பாக்வார்டு க்ளாஸ் கமிஷனை இந்திய சர்க்கார் போட்டது. அதற்கு திரு. காகா சாகேப் கலேல்கார் தலைவர். அவர் பிற்பட்ட இனத்தவரைச் சேர்ந்தவர் அல்ல. அந்தக் கமிஷன் இந்த நாடு பூராவையும் சுற்றிப்பார்த்து—பிற்பட்ட இனத்தவர்களின் குறைகள் என்ன என்பதை எல்லாம் ஆராய்ந்து ஒரு ரிப்போர்ட் தயார்செய்து—ஆயிரம் பக்கங்களுக்குமேல் இருக்கும்—சமர்ப்பித்தார்கள். அதை அமுல் செய்யத் துணிவில்லை. **The backward class man is apotential danger to the national unity of this country if his requirements are not met. He is capable of internal revolution.** என்பதாக அதில் எழுதியி ருக்கிறது. **I am only quoting him.** பாக்வார்ட் சமூகம். என்பதாக—ஐயோ பாவம் பிராமணர்களைத் தவிர—என்ன பாவம் பண்ணி ஞர்களோ—வேறு எல்லா இனங்களும் பிற்பட்ட இனங்கள் தான். அது மாதிரித் தயார் செய்யப்பட்ட பட்டியல்தான் இது. இதை நாங்கள் செய்யவில்லை, நீங்கள் செய்யவில்லை. அட்வைஸர்ஸ் ரீஜிம் என்று இருந்ததே அப்பொழுது அதிகாரிகளாக இருந்தவர்கள் யார் முற்போக்கு இனத்தவர், யார் பிற்பட்ட இனத்தவர் என்று அப்போதே போட்டார்கள் சதித் திட்டம். அதை நீங்களும் நானும் வைத்துக்கொண்டு இப்பொழுது பார்க்கிறோம். இதிலே 144 பேக் வார்ட் கிளாஸஸ் இருக்கின்றன என்று போட்டிருக்கிருர்கள். அதிலே 54 மோஸ்ட் பேக்வார்ட் என்று சொல்லியிருக்கிருர்கள். முதலியார் அகமுடையார் என்றும், வெள் ளாளர், துளுவ வெள்ளாளர் என்றும், நாயுடு, செட்டிபலிஜா என்றும் போட்டுக்கொள்கிருர்கள். இந்த "பிராமின்" இனம் தவிர மற்ற எல்லா இனத்தவரும் அறிவுள்ளவர்களும் பிற்பட்ட வகுப்புப் பட்டியலில் சேர்ந்துவிடுகிருர்கள். அந்தப் பிரச்னைதான் இப்பொழுது....

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** வெள்ளாளர் என்பதை எப்படி துளுவ வெள்ளாளர் என்று போட்டுக்கொள்ளமுடியும் ? அறிவு இருந் தால் செய்யலாம் என்று சொல்கிருர்கள். எங்களுக்கு அந்த அறிவு தெரியாததால் அந்த வழியை அவர்கள் சொல்லவேண்டும்.

**திரு. கே. விநயகம் :** பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள் எல்லாம் சர்டிபிகேட்டைப் பார்த்தால் பேக்வார்ட் கிளாஸ் என்று இருக்கிறது. ஆனால் வெளியே கொடுக்கல் வாங்கல் எல்லாம் வேறு மாதிரியாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அப்படிப் பார்த்தால் பிராமணர் கள் கூட குருக்கள் என்று போட்டுக்கொண்டு விடுவார்கள்.

**திரு. கே. விநயகம் :** குருக்கள் என்பது இதிலே இல்லை. காட்டுங் கள். இதை வைத்துக்கொண்டுதான் நான் பேசுகிறேன். இந்தப் பிரச்சினை பெரிதாவதற்குக் காரணம் பிற்பட்டவர்கள், மோஸ்ட் பேக்வர்ட் எல்லாம் கலந்து இருப்பதால்தான் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட முடியாமல் இருக்கிறது. இதைத்தான் பன்னி பன்னி பாராளுமன்றத்திலே சொன் ஞர்கள். நாமும் சொல்கிறோம். இதைத் திரும்பவும் புனராலோசனை செய்து, சோஷியலி பேக்வர்ட், எஜுகேஷனலி பேக்வர்ட் என்று சொல்லக் கூடியவர்கள்தான் இதிலே வரவேண்டும், அவர்களுக்குத்தான் இதிலே இடம் இருக்கவேண்டும். எனக்குத் தெரிந்து துளுவ வெள்ளாளர் [illegible] வைத்துக்கொண்டு ஐ.ஏ.எஸ் ஐ.பி.எஸ் ஆபீஸர்கள் [illegible] இருக்கிருர்கள்.... இந்தச்





**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** வெள்ளாளர் சமுதாயத்திலே தமிழ்நாடு அரசாங்கத்திலே ஒரே ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரிதான் இருக்கிருர். எனவே, சலுகைகள் பெற்றிருக்கிருர்கள் என்பதற்கு ஆதாரம் இல்லை.

**திரு. கே. விநயகம் :** ஒரு வேளை அமைச்சர் அவர்களை நேரடியாகப் பாதிக்கிறதோ, என்னவோ தெரியவில்லை. நான் சொன்னவுடன்....

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** வெள்ளாளர், துளுவ வெள்ளா ளர் என்று போட்டுக்கொள்ள முடியுமா ? எப்படிப் போட்டுக்கொள்ள முடியும் ? நாமாகப் போட்டுக்கொள்ள முடியுமா ?

**திரு. கே. விநயகம் :** இவர் கொஞ்சம் நேர்மையானவர் போல் இருக்கிறது. எவ்வளவோ அப்படிச் செய்கிருர்கள், மாணவர்களுக்குத் தெரியும்....

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** உங்களுடைய நேர்மையற்ற தன்மை எங்களுக்குத் தெரியாது. அதைத் தாங்கள் கொஞ்சம் விளக்கிச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. விநயகம் :** யாரும் இதைச் செய்யவேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. அறிவு இருக்கிறவர்கள் செய்துகொள்கிருர்கள். நமக்கு ஏன் அந்தத் தொல்லை என்று நம்மைப் போன்றவர்கள் இருந்து விடுகிறோம். இது சென்ட்ரல் லிஸ்ட் அல்ல. இதற்காக ஒரு குழு அமைக்கலாம். இதை அந்தக் குழு புனராலோசனை செய்து முடிவு செய்தால், அதனால் நமக்கு எவ்வளவோ மிச்சமாகும்.

இப்பொழுது ஒதுக்கப்பட்டிருப்பது 90 லட்சம் ரூபாய்தான். ஒரு கோடி கூட அல்ல. எங்களுக்குத் தெரியும், 1948-ம் ஆண்டிலே இந்தச் சட்டசபையில் பிற்பட்ட வகுப்பினருக்குச் சலுகைகள் தரவேண்டுமென்று கேட்டபொழுது அப்போதிருந்த அமைச்சர்கள் 10 ஆயிரம் ரூபாய் ஒதுக கிஞர்கள். அதற்குப் பிறகு இதைப்பற்றிப் பேசி பேசி, ஆண்டுதோறும் பேசிப் பேசி கடைசியிலே இந்த அளவுக்கு வந்து இருக்கிறது. என்ன சலுகை இப்பொழுது கிடைக்கிறது ? பிற்பட்ட வகுப்பினரும் மோஸ்ட் பேக்வார்டும் கல்லூரியிலே படிப்பதற்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கிறது—அவ்வளவு தான். இதை இரண்டு வகுப்பாகப் பிரித்திருக்கிருர்கள். மோஸ்ட் பேக்வார்ட் என்றால் 45 சதவிகிதம் எடுக்கவேண்டும், பேக்வார்ட் என்றால் 50 சத விகிதம் எடுக்கவேண்டும். ஐந்து சத விகிதம் தான் இரண்டுக்கும் வித்தியாசம். என்னுடைய கண்ணோட்டத்திலே பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் படிக்க வழியில்லாததன் காரணமாக முற்போக்கு மாண வர்களோடு போட்டியிட கூடிய அளவுக்கு வரமுடியாது என்பதனால்தான் பேக்வார்ட் என்று சொல்கிறோம். ஜஸ்ட் ஸ்க்ரேப்பிங் த்ரூ தி எக்ஸாமி நேஷன் என்பதற்காகத்தான் 50 சத விகிதம் வாங்க வேண்டுமென்பதெல் லாம் என்ன ? ஸ்காலர்ஷிப் இல்லையென்று சொல்வதற்கு அது ஒரு வழி.

எனக்குத் தெரியும் அரசாங்கத்தின் நிதிக் கஷ்டம. நானும் ஆட்சி யிலே இருந்த கட்சியிலே இருக்கிறவன்தான். மாணவர்கள் படிக்க வேண்டும் என்று யாராய் இருந்தாலும் கல்வி இலவசகமாகத் தருகிறோம். படித்து முன்னேற்றமடையவேண்டும் என்றெல்லாம் பிரசாரம் செய்கிறோம். ஏழைப் பிள்ளைகள் உயர்நிலைப்பள்ளி வரை படிக்கிருர்கள். கல்லூரி வரை படிக்கிருர்கள் ; கொஞ்சம்கூட கெட்டிக்காரஞக இருந்தால் மெடிகல், எஞ்சினியரிங் என்று படிக்கிருர்கள். நாம் படிக்க விரும்புகிறவர்களுக்கு சலுகை செய்யவில்லை. பணம் போதாது. அம்மையார் அவர்கள் கேபினட்டிலே சொல்லலாம், அதற்குமேல் என்ன செய்யலாம். என் னுடைய இலாகாவுக்குக் கொஞ்சம் பணம் கொடுங்கள் என்று சொல்ல லாம். பைஞன்ஸ் மினிஸ்டர் பொதுவாக 250 கோடிதான் வருகிறது, அதற்கு 6 கோடிதான் கொடுக்கமுடியும் என்று சொல்வார்கள். அதற்கு மேலும் அவர்கள் கேட்டால், இரும்மா, சும்மா, காலவரய் வெட்டு

47,000 பேர்களுக்குத்தான் கிடைக்கிறது. முப்பத்தி நாலாயிரம் மாணவர் களுக்குச் சலுகை கொடுக்க முடியாது என்று தள்ளி விடுகிறார்கள். அதற்குக் காரணம் பணம் இல்லை என்பதுதான். போன ஆண்டைவிட மூன்று லட்சம் தான் இந்த ஆண்டு அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. போன ஆண்டு 91 லட்சம், இப்போது 94 லட்சம்—பாக்வார்டு கிளாசுக்கு மட்டும் சொல்லுகிறேன். மாணவர்கள் அரிசன் வெல்பேர் ஆபீசிலேயே இதற்காகக் காத்துக்கொண்டிருக்கக்கூடிய நிலைதான் இருக்கிறதே தவிர, அவர்கள் பள்ளிக்கோ, கல்லூரிகளுக்கோ, போவதற்கு நேரமே இல்லை. அதிகப் பணம் ஒதுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களும் முயற்சிக்க வேண்டும். நானும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களையும், நிதி அமைச்சர் அவர்களையும் அதிகப் பணம் ஒதுக்க வழி செய்ய வேண்டு மென்று கேட்கிறேன். உங்களைவிட அவ்வளவு செல்வாக்கு இல்லையென்று சொன்னாலும் நாங்கள் கேட்பதற்கு ஏதோ மரியாதை செய்வார்கள். நாங்கள் எங்களுக்கு உத்தியோகத்திற்குக் கூட உத்தரவாதம் கொடுங்கள் என்று கேட்கவில்லை. எங்களால் பிழைத்துக் கொள்ள முடியும். 'We can stand on our own legs.' படிப்புக்கு மட்டும் உதவி செய் யுங்கள், I know the backward class man stood first in I.A.S. Examination. டிப்பதற்கு வேண்டிய சூழ்நிலையை உண்டாக்கி விட்டால் நாங்கள் படித்து முன்னேறி விடுவோம். முற்போக்கு இனத்தவர் எவ்வளவு திறமைசாலிகளோ, அதை விட ஒரு படி அதிகத் திறமையுள்ளவர்கள் நாங்கள். படிப்பதற்கு வசதி இல்லாத காரணத்தால் தான் நாங்கள் பின்தங்கியிருக்கிறோம். இதிலே இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. கல்லூரி முதல்வர்கள் முற்போக்கு இனத்தைச் சார்ந்தவர் களாக இருக்கிறார்கள். ஸ்காலர்ஷிப்புக்கு அப்ளிகேஷன் டைரக்டருக்கு அனுப்ப வேண்டுமென்றால், முதல்வர் மூலமாக அனுப்ப வேண்டும். பல சமயங்களில் அவர்கள் அதை அனுப்புவதில்லை. மார்ச் மாதம் வரை ஒன்றும் கிடைக்கவில்லையே என்று டைரக்டரிடம் போய்த் தொல்லை கொடுத்தால், அவர் அப்ளிகேஷனே வரவில்லை என்று கூறுவார்கள். கல்லூரியில் வந்து கேட்டால், ஏதோ மிஸ் ஆகிவிட்டது என்று சொல்லு வார்கள். இந்த நிலை எனக்கே ஒரு முறை ஏற்பட்டிருக்கிறது. இதிலே கொஞ்சம் தாராள மனப்பான்மையோடு இருக்க வேண்டுமென்ற முறையில் அரசு உத்திரவு போட வேண்டும். 'Processing of these applications' சீக்கிரமாக முடிய வசதி செய்யவேண்டும்.

இந்தப் பிற்பட்ட இனத்தவர்களுக்கு இதுவரையில் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு, கிணறுகள் வெட்டிக் கொடுப்பதற்கு, எலெக்ட்ரிக் எனெர்ஜி கொடுப்பதற்கு ஒன்றும் செய்யக் காணோம். ஆனால், அவர்களுக்கு மட்டும் செய்து கொடுக்கிறீர்கள். அதைத் தப்பு என்று நான் சொல்லவில்லை. எங்களையும் சிறிது கவனிக்க வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். அவர்களிடம் சென்று வோட்டு வாங்கப்போனால், போ ஐயா, ஹரிஜனக் காலனிக்கு லைட் வசதி செய்து கொடுத்தாயே அவர்களிடம் போய் வோட்டு கேளு, எங்களிடம் ஏன் வருகிறாய் என்று கேட்கிறார்கள். அதனால்தான் எங்களுக்கு வோட்டுக் கிடைக்காமல் போய்விட்டது. ஏனெனில் கிராமங் களில் பெரும்பாலும் பின்தங்கிய வகுப்பினர்தான் இருக்கிறார்கள். வோட்டு கேட்கப்போனால், 'போ ஐயா' என்கிறார்கள். உங்களுக்குத் தெரியும் அது பின்னால். காங்கிரஸைத்தான் வீட்டுக்கு அனுப்பினோம். உங்களையும் அனுப்புகிறோம் என்று சொல்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டேகால் மணிக்குள் முடித்து விட வேண்டும்.

**THIRU K. VINAYAKAM :** This is beside the point. If there has been no interruption, I would not have digressed. ஏழைகளுக்கு நன்மை செயவதுதானே நம் கொள்கை. இந்த ஒரு படி அரிசித் திட்டத்தை பாக்வேர்ட் க்ளாஸஸ், ஷெட்யூல்ட் காஸ்ட் இவர்கள் இருக்கும் இடங்களுக்கு அதிகமாக விஸ்தரிக்க வேண்டும். உங்களால் முடியவில்லை என்றால் விட்டுவிடுங்கள்.





**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** எதிர்க்கட்சித் தலைவர் அவர் கள் நெல் விலையை உயர்த்த வேண்டுமென்று சொல்கிறார்கள். நீங்கள் படி அரிசி போட வேண்டுமென்று சொல்கிறீர்கள். ஏன் உங்களுக்குள் இந்தக் குழப்பம் ?

**திரு கே. விநாயகம் :** எங்களுக்குள் குழப்பம் இல்லை. உங்களைக் குழப்பமாக்கி வைப்பதுதான் எங்கள் எண்ணம்.

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** அது நடக்காது.

**திரு கே. விநாயகம் :** இன்னும் மூன்று வருடங்கள் இருக்கிறதல்லவா. நான் ஒரு வெட்டுத் தீர்மானம் தந்திருக்கிறேன். I want a separate Director to look after the interests of the Backward Classes. அதற்குத் தப்பெண்ணம் கற்பிக்கக்கூடாது. பாக்வேர்ட் க்ளாஸுக்கு ஒரு கோடிதான் தருகிறீர்கள். அதற்காக ஒரு புதிய அமைச்சரைப் போடவேண்டு மென்று சொல்லவில்லை. இரண்டையும் அம்மையார் அவர்கள் கவனிப்பார் கள். எங்கள் நலனும்பறிபோகாது, ஆதிதிராவிடர்களின்நலனும் பாதுகாக்கப் படும். ஏன் இரண்டு டைரக்டர்கள் வேண்டுமென்றுசொல்கிறேன் என்றால், ஒருவர் ஆதித்திராவிட மக்களின் நலனைக் கவனிக்கவும், ஒருவர் எங்க ளுடைய நலனைக் கவனிக்கவும், சரியாக இருக்கும். ஒரே டைரக்டர் இருப்ப தினால் ஹரிஜனங்களுக்காக இவ்வளவு வேண்டுமென்று கேட்டதற்குப் பிற்பாடு பாக்வேர்ட் கம்யூனிட்டிசுக்கு இவ்வளவு வேண்டுமென்று தைரிய மாகக் கேட்க முடியாது. ஆகவே, எங்களுக்கு என்று ஒரு தனி டைரக்டர் இருந்தால், எங்கள் பிரச்னைகளை அவர்களிடம் எடுத்துச் சொல்ல முடியும். இப்படிச் சொல்வதால், இப்போதுள்ள டைரக்டரோ அல்லது இதற்கு முன்னால் இருந்த டைரக்டர்களோ பாரபட்சமாக நடந்ததாகச் சொல்ல வில்லை. காரியங்கள் ஒழுங்காக, செவ்வனே நடக்க இரண்டு டைரக்டர்களைப் போட வேண்டும்.

அடுத்தபடியாக, இந்தக் காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்ன ? நாங்கள் ஆட்சியில் இருந்தபோது ஸ்காலர்ஷிப்ஸ் கொடுக்கிற விஷயத்தில் நாங்கள் ஜில்லா அதிகாரிகளை வைத்து அவர்களிடம் பொறுப்பைத் தர வில்லை. சென்ட்ரல் டைரக்டரேட்டை இங்கு வைத்திருந்தோம், ஆகவே விநியோகம் செய்வதில் தொல்லை ஏற்படவில்லை.

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** உங்கள் ஆட்சிக் காலத்திலும் மாவட்ட ரீதியாக வழங்கப்பட்டது. உங்களுக்குத் தெரியவில்லையென்றால், உங்கள் தலைவரைக் கேளுங்கள்.

**திரு கே. விநாயகம் :** அது ஆல் இந்தியா ஸ்காலர்ஷிப்.

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** தமிழக ஸ்காலர்ஷிப்பை மாவட்ட ரீதியில் அந்த அதிகாரிகளே கவனித்துக் கொடுத்து வந்தார்கள். உங்களுக்கு ஞாபகமில்லையென்றால் உங்கள் தலைவரைக் கேளுங்கள்.

**திரு கே. விநாயகம் :** அது ஆல் இந்தியா ஸ்காலர்ஷிப். இப்போது ஸ்காலர்ஷிப் கொடுப்பதை ஜில்லாக்களுக்கு மாற்றியமைத்து அவர்கள் அதை விநியோகம் செய்யலாம் என்ற யோசனை இருப்பதாகத் தெரிகிறது. அது அவ்வளவு சரியல்ல. இங்கேயிருந்து செய்ததால் அதைச் சுலபமாகத் தீர்க்க முடிந்தது. அப்படி மாவட்ட ரீதியாக வழங்குவது என்றால், அதிகப்படியான ஆள்களை, அப்பர் டிவிஷன், லோயர் டிவிஷன் க்ளார்க்கு களை அதிகமாக நியமிக்க வேண்டியிருக்கும். இங்கு பத்து அல்லது பதி னைந்து பேர்களுக்கு வேலையில்லாமல் போகலாம், ஆகவே, இந்த முறையை, கைவிட வேண்டும். 1967-க்கு முன் ஹார்ட் கேஸை எப்படிக் கவனித்து வந்தார்கள் என்று பார்ப்போம். 45 அல்லது 50 மார்க்ஸ் வாங்கினால் யாருடைய உதவியும் இல்லாமல் அவர்களுக்குப் பணம் கிடைக் கும். ஆனால், 44, 43, 42 மார்க்ஸ் வாங்கும் பார்டர் கேஸ்களுக்கு முன்பிருந்த முறைப்படி டைரக்டர்'டிஸ்க்ரீஷனரி கிராண்ட்"என்று வைத்துக்

கொடுக்கலாம் என்றிருந்தது. 1967–க்குப் பிறகு, அதை ஒன்றும் நீங்கள் செய்ய வேண்டியதில்லை, எங்களுக்கு அனுப்புங்கள், நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் நாங்கள் பார்த்துச் செய்கிறோம் என்று சொல்லியிருக் கிறார்கள். நீங்கள் பார்த்துச் செய்வதில் தவறு இருக்கிறது என்று சொல்ல மாட்டேன். எனக்குக் கொஞ்சம் உள்ளம் இருக்கிறதல்லவா? அதனால், Unusual delay ஏற்படுகிறது. இங்கிருந்து பிராஸஸ் செய்து செக்ரடரியேட்டுக்கு அனுப்பி அங்குள்ள அதிகாரிகள் அதைப் பார்த்துவிட்டு பின்னர் அம்மையார் பார்வைக்கு வர நாளாகிறது. இந்த ஆண்டின் ஹார்ட் கேஸஸ் இன்னும் கவனிக்கப்படவில்லை. அங்கிருந்து அனுப்புவதாகச் சொன்னார்கள். அதனால்தான் சொன்னேன், சீக்கிரமாகப் பரிசீலித்துக் கொஞ்சம்கூடக் குறைக்காமல் எல்லோருக்கும் கொடுத்து விட்டால் மாணவர்கள் உங்களை வாழ்த்துவார்கள் என்று. நீங்கள் தாய் ஆயிற்றே. நீங்கள் நல்ல பெயர் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற் காகத்தான் இவ்வளவும் சொல்கிறேன். நீங்கள் கெட்ட பெயர் எடுக்க வேண்டுமென்றால், இதையெல்லாம் நான் ஏன் சொல்லப்போகிறேன்? மாணவர்களின் நன்மையையும் உங்கள் நன்மையையும் மனதில் வைத்துத் தான் இதைச் சொல்கிறேன். ஹார்ட் கேஸ்களுக்கு என் தொல்லை கொடுக்க வேண்டும். முன்பிருந்ததுபோல் விட்டுவிடுங்கள். நீங்களே செய் கிறேன் என்றால் அதிலும் சந்தோஷம்தான். Decentralisation of powers என்றில்லாமல Decentralisation of the scheme என்ற முறையில் இருக்க வேண்டும். அரசாங்கத்திற்கு யோசனைகள் சொல் வதற்காக் கமிட்டிகள் போட்டிருக்கிறோம். ஷெட்யூல்டு காஸ்டுக்கு யோசனை சொல்ல ஒரு கமிட்டி, பாக்வேர்ட் க்ளாஸுக்கு யோசனை சொல்ல ஒரு கமிட்டி போட்டிருக்கிறோம். இந்தக் கமிட்டிகள் நான்கு மாதங்களுக்கு ஒரு முறைதான் கூடுகின்றன. அவை குறைந்தது இரண்டு மாதங் களுக்கு ஒரு முறையாவது கூட வேண்டும். எங்களுக்கு டி. ஏ. வரும் என்பதால் சொல்லவில்லை. அது என்ன பிரமாதம்? என்னைப் போன்ற வழக்கறிஞர்கள் கோர்ட்டுக்குப் போனால்தான் அதிக லாபமே தவிர, கமிட்டிகள், சட்டசபைக்கு வருவதற்கு 15 ரூபாய் கூலி கிடைத்தால் போதுமா? If I had been in the Court, I could have drawn a thousand rupees as my fee.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சட்டசபையில் பேசுவதற்கு 15 ரூபாய் கூலி என்று சொல்கிறார்கள். அப்படிக் கூலி என்று சொல் வது அவ்வளவு பொருத்தமல்ல.

**திரு. கே. விநாயகம் :** அலவன்ஸ் அல்லது வேஜஸ் என்று வைத்துக் கொள்ளுங்கள். கூலி இல்லை ஐயா, ஒரு மானியம் என்று வைத்துக் கொள்ளுங்கள். வர, போகிற செலவுக்குக் கொடுக்கிறார்கள். கூட்டங்கள் அடிக்கடி நடப்பதால் என்ன லாபம் என்றால் எங்களுக்கு அன்றாடம் வருகிற பிரச்னைகள் ஞாபகத்தில் இருக்கும், குறிப்புகள் வைத்திருப் போம், கமிட்டியில் சொல்ல வசதியாயிருக்கும். எவ்வளவோ தீர்மானங் கள் போடுகிறோம், ஆனால் அவை ஏன் நடைமுறைக்கு வருவதில்லை என்று தெரியவில்லை. விவாதித்துத்தான் ஒப்புக்கொள்கிறீர்கள். நீங்களே பார்க் கிறீர்கள், விளக்கம் கேட்கிறீர்கள். அனைவரும் ஒப்புக்கொண்ட தீர்மானம் சோஷியல் வெல்பேர் டிபார்ட்மெண்டுக்குப் போனால் "It is not possible to implement it." என்று சொல்லிவிடுகிறார்கள். ஐ.ஏ.எஸ். ஆபீசருக்கு நோட் போடச் சொல்லிக்கொடுக்க வேண்டுமா? ஐ.ஏ.எஸ். ஆபீசர் "It cannot be implemented.' என்று சொல்லிவிட்டால் கீழே 'Minister for Harijan Welfare' என்று ஒரு இடத்தை வைத்திருப்பார்கள். இ ஷியல் போட இடத்தை வைத்திருப்பார்கள். போடலாம், எத்தனை முறை போடுகிறோம். சிக்கல் ஏற்படும். எங்களுடைய சேர்மன், இங்குதா நீங்கள் மினிஸ்டர், எங்களுடைய சேர்மன் ஒத்துக்கொண்ட பிறகு அ அமலாக்கத்தான் உத்தரவு போடவேண்டுமே தவிர, அவர்களிடம் கொடு அபிப்பிராயம்கேட்பது 'This cannot be implemented' என்று அவர்கள் செ லுவது, அதைத் திரும்பவும் எங்கள் கூட்டத்திலே வந்து சொல்லக்கூ பரிதாபகரமான நிலையை எத்தனையோமுறை பார்த்திருக்கிறோம். உங்களு மாத்திரம்தான் இப்படி என்று அல்ல. உங்களுக்கு முன்னாலேயிருந்





களும் இப்படித் தவறு செய்தார்கள். ஆகவே, இதையெல்லாம் கொஞ் சம் கவனத்திலே கொள்ள வேண்டும். மானியமே குறைவு, 91 லட்சம் போதாது என்று சொல்லுகிறோம், இருந்தாலும் வெட்டுப் பிரேரணை கொடுத்து 100 ரூபாயைக் குறைக்க வேண்டுமென்று கொடுத்திருக்கிறோம். 'This is something unimaginable.' ஆனால் இது பார்லிமெண்டரிமுறை, வெட்டுப் பிரேரணை வரும்பொழுது பார்த்துக்கொள்கிறேன். அந்தத் தொகையைப் பெருக்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்து, இந்த மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த விவாதத்திலே கலந்துகொண்டு பேசுகின்ற நேரத்திலே ஒரு நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்டு, மேலும் * *

*   *   *

என்று தொடர்ந்து சொல்லியிருக்கிறார்கள். அது இந்த மன்றத்தைப் பெரிய அளவிலே பாதிப்பதாக இருக்கிறது.* அவர்கள் இந்த மன்றத்திலே பெரிய அளவிலே தண்டிக்கத் தகுந்தவர்கள் என்றாலும், அதை வள்ளு வர் அவர்கள்,

" பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்."

என்று கூறிய அந்த அளவில் எண்ணி, இந்தச் சபையின் நடவடிக்கை நிகழ்ச்சியிலிருந்து அந்தத் தொடரை மட்டும் நான் நீக்கிவிடுகிறேன்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்தவர்களும், இந்தக் கோரிக்கையை ஆதரித்துப் பேசியவர்களும், அவர்கள் இந்தப் பிற்படுத்தப்பட்ட, அரிசன மக்களின் நல்வாழ்க்கையில் காட்டுகின்ற அக்கறையையும், குறிப்பிட்டிருந்த நேரம் போதாமல் மேலும் இந்த மன்றத்தைத் தொடர்ந்து ஒரு மணி நேரமாவது அதிகமாக நடத்தியாவது எங்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று கேட்டதற் காக நான் அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மானியத்தின்மீது பேசிய அனைவருக் கும் கருத்துக்கள் கிடைக்கின்றன. எண்ணங்கள் இருக்கின்றன. பேச வேண்டுமென்று ஆர்வம் இருக்கிறது, ஆனால் அதற்கேற்ற காலம் கிடைக்கவில்லை. பேசியவர்கள் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள். நான் துவக்க நேரத்தில் பேசியதைப்போல, எங்கள் இதயக் கோயிலில் வீற்றிருந்த அண்ணன் அவர்கள் இந்த அவையிலே இப் பொழுது இருக்கவில்லை. அவர்கள் இருந்திருந்தால் இவர்களுக்கெல்லாம் எவ்வளவோ நல்ல முறையிலே பரிகாரம் காண்பார்கள். பேசப்பட்ட கருத் துக்களை அவர் மனதிலே தாங்கிச் செயல் உருவிலே கொண்டுவருவார். அவர் இல்லையே என்ற வருத்தம்தான் எனக்கு இப்பொழுதும் இருக் கிறது.

கீழ்வெண்மணிபற்றி ஆளுகின்ற கட்சியைச் சார்ந்தவர்களும், எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களும் பேசினார்கள். எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் பேசுகின்ற நேரத்தில் மிகவும் கண்டிக்கின்ற தொனியிலேயும், அவர்களுக்குத் தான் எரிந்த மக்களின்மீது அதிக அனுதாபம் இருக்கின்றது என்ற வகையிலேயும் இங்கே பேசினார்கள். அவர்கள் பேசியதைக் கேட்கும்போது எனக்கு 1957–ம் ஆண்டு, நானும், மறைந்த நமது முதலமைச்சரவர் களும், இப்போதுள்ள முதலமைச்சரவர்களும் நமது விவசாய அமைச்சரவர் களும் இந்த மாமன்றத்தில் உறுப்பினர்களாயிருந்தபொழுது முதுகளத்தூர் நிகழ்ச்சி சம்பந்தமாக அப்போதிருந்த ஆட்சியின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபொழுது நான் பேசியதுகூட எனக்கு நினை விருக்கிறது. எடுத்த முடிவுகூட நினைவுக்கு வருகிறது. நான்,

*பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

இப்படிப்பட்ட ஆக்ரோஷத்தோடு பேசவில்லை, கண்ணீரைச் சிந்தித்தான் பேசினேன். இறந்தவர்களுக்கு என் கண்ணீரைக் காணிக்கையாக்கு கிறேன் என்று நான் பேசியிருக்கிறேன். அந்தப் பேச்சுப் பதிவேட்டில் இடம் பெற்றிருக்கிறது. எவ்வளவுதான் பேசினாலும், நாம் கண்ணீரை சிந்தக்கூடிய இந்த நிலைமைகளையெல்லாம் நினைத்துப் பார்த்து வருத்தத் தைத் தெரிவித்துக்கொண்டுதான் செல்ல முடிகிறதேதவிர, அவர் களுக்கிருக்கின்ற நிலைமைகளையெல்லாம் மாற்றியமைக்க ஒரு புரட்சிகர மான நடையை நம்மால் போட முடியவில்லை. அந்த அளவுக்கு நாம் நடை போட மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத சமுதாய அமைப்பிலே தான், சமுதாயப் பழக்க வழக்கங்களிலேதான் நாம் இன்றைக்கும் நம்மை நாமே ஆட்படுத்திக்கொண்டிருக்கிறோம். எனவே, அந்தக் குறை களை நீக்கவேண்டுமென்பதைத்தான் வெண்மணி நிகழ்ச்சியைக் கண்டித்துக் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டுவந்து இங்கு பேசப்பட்டபோது எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களும் அதைத்தான் சொன்னார்கள். நாம் அந்த எண்ணத்தை விட்டு வேறு வகையிலே சென்று, நாம் இந்த மக்களுக்கு முன்னேற்றத்தைக் காண வேண்டுமென்று முயன்றால் அது நிச்சயமாக முடியாது என்று கூற விரும்புகிறேன்.

வயதான பெரியவர் சொன்னார்கள், சங்கரர் காலத்திலேயே, இராம னுஜர் காலத்திலேயே ஒற்றுமைப்படுத்த முடியவில்லை, ஜாதி வேறு பாட்டை நீக்க முடியவில்லை, இதற்குப் பிறகு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்று சொன்னார். அவர்களுக்கு சங்கரர் மீதும், இராமானுஜர் மீதும் நம்பிக்கையிருக்கலாம். அவர்கள் காட்டிய வழியிலே ஒற்றுமை காண முடியவில்லையே என்று சொல்லலாம். ஆனால் எங்க ளுக்கு சங்கரர் மீதும், இராமானுஜர் மீதும் நம்பிக்கையில்லை என்றாலும், பெரியார் அவர்கள் மீதும், மறைந்த எங்கள் அண்ணன் மீதும் நம் பிக்கை இருக்கிறது. அவர்கள் காட்டிய பாதையிலே சென்றால் நிச்சயமாக ஒற்றுமை ஏற்பட முடியும் என்ற நம்பிக்கையிருக்கிறது. ஆரம்ப காலத்தி லிருந்து காங்கிரஸ் கட்சியும், கழகமும் சமுதாயச் சீர்திருத்தம் செய்வதில் அணுகுகின்ற முறையில் எந்த முறை சரியென்பதை இன்று மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஒரு கண்மூடித்தனமான பழக்கத்தை, இப்படித் தான் இருக்க வேண்டும், இதுதான் ஆண்டவன் கட்டளை என்று இந்த மூடப் பழக்க வழக்கங்கள் நமது பழக்கத்திலேயிருக்கிறது என்று நம்பிக் கொண்டிருக்கிற வரையிலும் நாம் இந்த வேறுபாட்டை நீக்க முடியாது. அதை உணர்ந்துதான், அந்த நம்பிக்கையில்லாத வகையில், மனிதன் நினைத்தால் நாம் எதையும் செய்ய முடியும் என்று அறிவையே ஆண்டவ னாக வைத்து இந்த வேறுபாட்டை நீக்க வேண்டுமென்று பெரியார் அவர் கள் கூறினார்கள். தொடர்ந்து பேரறிஞர் அண்ணா அவர்களும் கூறினார் கள். அதைத் தொடர்ந்து இந்த இயக்கம் மக்கள் மத்தியில் வந்தது. அதன் விளைவாக மக்கள் நம்பிப் பொறுப்பை எடுத்துக் கொடுத்தார்கள். இங்கே அமைச்சர்களாக வந்துவிட்டால் மட்டும் உயர்ந்துவிட்டதாகக் காட்டி விட முடியுமா? ஒருவருக்கு இருவர் என்று அமைச்சர் பதவியைக் கொடுத்துவிட்டால் மட்டும், முன்னேற்றக்கழகம் இந்தச் சமுதாய உயர்வைத் தந்துவிட்டது என்று நாங்களும் சொல்லிக்கொள்ள விரும்ப வில்லை, அப்படிச் சொல்லி யாரையும் ஏமாற்ற விரும்பவில்லை. மக்க ளும் நம்ப மாட்டார்கள். ஓரிருவருக்குப் பதவி கொடுத்துவிடுவதால் மட்டு மல்ல, சமுதாயம் உயர்நிலை காண்பதற்கான அடிப்படைக் கொள்கைகள் இந்த இயக்கத்தில் இருப்பதனால்தான், நாம் வெண்மணி நிகழ்ச்சியை அணுகும் முறையும், மற்றவர்கள் அணுகும் முறையும் வெவ்வேறாக இருக்கிறது.

தோழமைக் கட்சியைச் சேர்ந்த தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்பு செல்வர் அவர்கள் இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொன்னார்கள் இது கூலி உயர்வுக்காக அல்ல, இதற்கு அடிப்படைக் காரணம், தாழ்ந்த ஜாதி மக்கள் என்றாலே அலட்சிய மனப்பான்மை இருக்கிறது, கூலி உயர்வு என்றால் விவசாய மக்களுக்கு மாத்திரம்தானா இருக்கிறது, அந்தப் போராட்டம் எல்லா வகையான தொழிலாளர்களிடத்திலும் இருக்கிற



என்ற கருத்துக்களையும் தந்தார்கள். எல்லா வகையான போராட்டங்களும் இன்று நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. கூலி உயர்வு கேட்கும் வேறு வகையான தொழிலாளர்கள் எல்லாம் இப்படிப்பட்ட முறையிலே துச்சமாக மதிக்கப்பட்டுத் தீயிட்டுக் கொளுத்தப்படும் அளவுக்கு ஆளாக்கப் படுகிறார்களா என்றால் இல்லை. காரணம், அந்தத் தொழிலாளர்கள் வெவ்வேறு இனத்தைச் சார்ந்தவர்கள். தஞ்சை மாவட்டத்தில், தாழ்த் தப்பட்ட மக்களின் தலை விதியோ என்னவோ, பெரும்பாலான மக்கள் விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள். அவர்கள் மீது காழ்ப்புக் கொள் ளும் மற்றவர்கள் அவர்களைத் துச்சமாக நினைத்து, தீயிட்டுக் கொளுத்தி, அழித்திருக்கிறார்கள். வகுப்பின் காரணமாகவும், ஜாதியின் காரணமாக வும், இன்றைக்கு நேற்றைக்கு அல்ல, ஆண்டாண்டுக் காலமாகப் பல இடங்களில் நடைபெற்று வருகிறது என்பதை அறிகிறோம். முதுகளத்தூரி லிருந்து வெண்மணி வரை நடந்திருக்கிறது. பல்வேறு மாநிலங்களில் நடைபெறுகிறது. இதனை வேதனையோடு ஆராய்ந்து பார்க்கிறோம். எடுக்க வேண்டிய முடிவை எடுத்து, செயல்படுத்துகின்ற முறையிலே செயல்பட்டால் தான் இந்தச் சமுதாயத்திலேயிருக்கும் இந்தக் கொடுமைகளையெல்லாம் நீக்க முடியும். அதற்கு அனைவரும் உளம் திறந்து செயல்பட வேண்டும். பேசுவது மாத்திரமல்ல, செய்கையிலே செய்துகாட்ட வேண்டும்.

கனம் எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் இறுதியிலே பேசும்போது சொன்னார், "ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்க முடியவில்லை" என்று. ஒன்று அந்த நிலங்களில் தாழ்த்தப் பட்ட மக்களைக் குடியேற்றுங்கள், இல்லையென்றால், திருப்பி, வாங்கியவர்க ளிடமே கொடுத்து விடுங்கள் என்று சொன்னார். அதன் உள் பொருள் என்ன? அதன் காரணம் என்ன? சர்க்கார் பணத்தைச் செலவழித்து அப்படிப்பட்ட நிலங்களையெல்லாம் ஆர்ஜிதம் செய்கிறார்கள். அதிலேகூட, அவசரமாக எடுக்க வேண்டுமென்று, "கிளாஸ் வைத்து", எடுத்துக் கொண்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்க்களுக்குக் கொடுக்கிறார்கள். தாழ்த் தப்பட்ட மக்கள் அந்த நிலமுள்ள இடங்களுக்குச் செல்ல முடியாமலும், அவர்கள் வீடு கூடக் கட்டமுடியாமலும் பல அக்கிரமங்கள் நடைபெறு கின்றன. அதனால் எத்தனையோ பேர் நாங்கள் அந்த நிலத்திலே இருக்க மாட்டோம் என்று விட்டுவிட்டு வருகின்றார்கள்.

பிற்பகல் 2·30

நான் மேலவையிலே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது சொன் னேன். மதுரை மாவட்டத்திலே ஒரு கிராமத்தில் 20 வீடுகளைக் கட்டி வைத்து விட்டு, 1965-ம் ஆண்டு கட்டி வைத்த வீடுகளில் ஏன் யாரும் குடியிருக்கவில்லையென்று கேள்வி கேட்கப்பட்டது. "அந்த வீடுகளில் இருட்டுப் போகிறது, ஆகவே, நாங்கள் போகவில்லை", என்று சொன்ன தாகக் குறிப்பு இருந்தது. ஆனால் உண்மையான காரணம் என்ன? தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்கிறார்கள் என்று சொல்லி, அக்கம் பக்கத் திலே இருப்பவர்கள் குடியிருக்க விடுவதில்லை. நிலத்தை உழுது பயிரிடு என்று கொடுத்தால் அதைச் செய்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பில்லை. 1960-ம் ஆண்டுக்கு முன்னாலே சர்க்கார் நிலத்தில், புறம் போக்கு நிலத்தில், சர்க்காருக்குத் தேவையற்ற நிலத்தில், அவர்களாகவே ஏற்கனவே வீடுகளைக் கட்டிக் கொண்டிருந்தால் அந்த வீட்டு மனைகளை எல்லாம் அவர்களுக்குப் பட்டா செய்துகொடுக்க வேண்டுமென்று இங்கே சட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள். அதிலே எவ்வளவு சிக்கல்கள் இருக் கின்றன. நிறைவேற்ற முடியாத அளவுக்குத் தடைகள் இருக்கின்றன. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒவ்வொரு தொகுதி இருக்கிறது. அந்தத் தடைகளை எல்லாம் நீக்க, உங்கள் தொகுதியிலே இருக்கிற மக்களை அனைவரையும் நீங்கள் காணமுடியும். அதை நயந்தும் சொல்ல முடி யும், அச்சுறுத்தி சொல்ல வேண்டாம், விளக்கிச் சொல்லுங்கள், சொல்லி அந்த நிலைமைகள் எல்லாம் இல்லாமல் பார்ப்பீர்களானால் அதுவே சமு தாயத்திற்கு நீங்கள் செய்கிற பெரிய தொண்டாகும்.

[டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து] [1969 மார்ச் 13

இன்றைக்கு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் சொன்னார்கள், "ஓட்டுக் கேட்கச் சென்றால்தான் தெரியும்," என்று. அந்த ஓட்டு கிடைக்காது என்ற காரணத்தால், நிலத்தை ஆர்ஜிதம் செய்கிறோம் என்று சர்க்கார் சொன்னவுடனே, நிலச் சொந்தக்காரர்கள் வழக்கு மன்றம் சென்று விடுகிறார்கள். இன்றைக்கு 115 வழக்குகள் வழக்கு மன்றத்திலே இருக்கின்றன. காரணம் என்ன? தாழ்த்தப்பட்டவர்களுக்கு நிலம் கொடுக்க வேண்டுமென்று ஆர்ஜிதம் செய்கிறோம். "ஐயையோ, செய்யக்கூடாது" என்று அதற்குத் தடை கேட்டுக்கொள்ளுகிறார்கள். "ஸ்டே" கொடுக்க வேண்டுமென்கிறார்கள். காரணம் என்ன? தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அங்கங்கே நிலம் வாங்குகிறோம். அந்த மக்கள் வாக்குகளை வாங்கித் தானே சட்ட மன்றத்திற்கு வந்தோம். அவர்களுக்கு வீடு கட்டத்தானே, உதவியாக இருக்க வேண்டுமென்றுதானே இங்கே வந்திருக்கிறோம். உடனே, "ஸ்டே", கொடுக்க வேண்டுமென்று வேறு பலர், அவர்களுக்கு வாக்களித்தவர்கள், ஆகவே, அவர்கள் நிலம் பறி போகக் கூடாது என்று அவர்கள் "ஸ்டே" கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். நாம் இரண்டுக்கும் பொதுவாகப் போய்விடலாம், தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சமாதானம் சொல்லிக்கொள்ளலாம், மற்ற சாதி மக்களுக்குச் சமாதானம் சொன்னாலும் கேட்கமாட்டார்கள் என்று பல "ஸ்டே"கள் கேட்கப்படுகின்றன. அதன் காரணமாக, இன்றைக்கு வழக்கு மன்றங்களில் 115 வழக்குகள் இருக்கின்றன. எனவே, ஸ்டே கேட்காத அளவுக்கு அந்த நிலத்தை மக்களுக்குத் தரவேண்டுமென்று நீங்கள் முன் வந்து பாடுபட வேண்டும். அப்படிப் பாடுபட்டால்தான் வழக்கு மன்றத்திலே வழக்குகளும் இருக்காது. இங்கே குடியிருக்க இடம் கொடுக்கவில்லையென்று சொல்கிற நிலையும் வராது, அவர்களும் வாழ முடியும்.

எத்தனையோ ஆண்டுக் காலமாக குறைகளை அனுபவித்திருந்த இந்த மக்களுக்கு இரண்டாண்டு காலத்திலே அரசு 'இதைச் செய்யவில்லையே, அதைச் செய்யவில்லையே' என்று கனம் உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டிருப்பதை நாம் அறிந்துள்ளோம். எதிர்க்கட்சியைச் சேர்ந்த, கனம் இராமலிங்கம் அவர்கள், "அன்றைக்கு அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கும்போது, எப்படியெல்லாம் பேசினார்கள், இன்றைக்கு ஏன் செய்யக் கூடாது", என்றார்கள். அன்று நான் பேசினேன். இப்போது நான் செய்கின்றேன். நாங்கள் வந்தவுடனே கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்க வேண்டுமென்று கலப்புத் திருமணத் தம்பதிகளுக்குத் தங்க மெடல் தருவதாக அடுத்த ஆண்டே திட்டம் கொண்டு வந்தோம். காரணம் என்ன? ஜாதி ஒழிக்கப்பட வேண்டும், பேசிக்கொண்டிருப்பதாலே அல்ல. கலப்புத் திருமணம் அவர்கள் செய்வதை நாம் ஊக்குவிக்க வேண்டும். அரசாங்கம் அவர்களை ஏற்றுக்கொள்கிறது, அரசாங்கம் அவர்களைப் பாராட்டுகிறது, கௌரவிக்கிறது, அதற்குத்தான் தங்க மெடல் கொடுத்தோம். எனவே, கலப்புத் திருமணத்தை இந்த அரசாங்கம் ஆதரிக்கிறது. எனவேதான் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கெல்லாம் தங்கப் பரிசு என்று சொன்னோம். பொருளாதாரத் துறையிலே முன்னேறவில்லை. கல்வித் துறையிலே முன்னேறி இருக்கிறோம். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள்கூட ஒத்துக்கொண்டார்கள். இன்றைக்கு பின் தங்கிய மக்களுக்கு மாத்திரம் 90 இலட்ச ரூபாய் ஸ்காலர்ஷிப் பணம் கொடுக்கிறோம், உபகாரச் சம்பளமாகத் தருகின்றோம். இப்படி இன்றைக்கு ஏறத்தாழ 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் கல்விக்காக உபகாரச் சம்பளமாகத் தருகின்றோம். 7 கோடி ரூபாய் இன்றைக்கு அனைத்தையும் சேர்த்து ஒதுக்குகிறோம் என்று சொன்னால் 2½ கோடி ரூபாய் கல்விக்கு உபகாரச் சம்பளமாகத் தருகின்றோம். மதிய உணவு, கல்விக் கூடங்கள், விடுதிகள், அதற்கான உணவுகள், ஆடைகள் இவற்றிற்கெல்லாம் சேர்த்து இன்றைக்கு 5 கோடி ரூபாய் என்று இருந்தாலும், கல்விக்கு மாத்திரம் 2½ கோடி ரூபாயை நாம் ஒதுக்கியிருக்கிறோம். எனவே, கல்வியிலே ஓரளவுக்கு முன்னேறி இருக்கின்றோம். அதிலே முன்னேறினால் மாத்திரம் போதாது. படித்தவர்களுக்குத்தான், பட்டம் பெற்றவர்களுக்குத்தான் உத்தியோகம் கிடைக்கும். ஆனால் இன்றைக்குப் பெரும்பாலானவர்கள் இருக்கிற நிலையிலே உயர வேண்டுமானால் பொருளாதாரத்திலே ஏற்றம் பெற வேண்டும்.



1969 மார்ச் 13] [டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து]

இருபது ஆண்டுக் காலமாக நாங்கள் செய்ததைத்தான் நீங்கள் செய்து கொடுக்கின்றீர்கள் என்று எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்கள் சொல்லுகின்றார்கள். நாங்கள் வந்த உடனே, பட்ஜெட் உரையில் கூறியதைப் போல், பொருளாதாரத்திலே அவர்கள் ஏற்றம் பெற வேண்டுமென்று, வட்டியில்லாத கடனாகச்சிறு தொழில்கள் செய்வதற்குக் கடன் கொடுத்து, அவர்கள் தொழிலிலே ஈடுபட வேண்டுமென்று, அவர்களை ஊக்குவிக்கத்தான் திட்டமே கொண்டுவந்திருக்கிறோம். எதிர்க் கட்சிக்காரர்கள் குறை காணவேண்டுமென்பதற்காகச் சொல்கிறார்கள். அதை ஒத்துக்கொள்கிறோம். ஆனால் நீங்கள் செய்யாத காரியங்களை நாங்கள் செய்திருக்கிறோம். 20 ஆண்டுகளாக நீங்கள் செய்யமுடியாத காரியங்களை நாங்கள் செய்திருக்கிறோம். "நாங்கள் கொடுத்த ஸ்காலர்ஷிப் தானே நீங்கள் கொடுக்கிறீர்கள், நாங்கள் கொடுத்த வீட்டு மனைகளைத் தானே நீங்கள் கொடுக்கிறீர்கள்" என்று சொல்கிறீர்களே, நீங்கள் கொடுக்காத, மக்களுக்கு மேலும் நல்ல வகையிலே பயன்படக்கூடிய இந்தப் புதிய திட்டங்களை எல்லாம் நாங்கள் பொறுப்பேற்ற பிறகு போட்டு, நன்மை செய்துகொண்டு வருகிறோம். ரூ. 1,500 வருமான எல்லையாக இருந்ததை ரூ. 2,000 ஆக உயர்த்தி இருக்கின்றோம் உபகாரச் சம்பளம் அளிப்பதற்கு. உணவு விடுதிகளில் பள்ளிப் பிள்ளைகளுக்கெல்லாம் ரூ. 18 தான் இருந்தது. பல ஆண்டுக் காலமாக உயர்த்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்ததை அப்பொழுதிருந்த அரசாங்கம் உயர்த்தவில்லை. நாங்கள் கடந்த ஆண்டே, ரூ. 18 என்று இருந்ததை, ரூ. 20 என்று உயர்த்தினோம். "ஆர்ஃபனேஜஸ்", அநாதை இல்லங்களில் ஒரு குழந்தைக்கு ரூ. 10 என்று இருந்ததை இன்றைக்கு ரூ. 12 என்று உயர்த்தி இருக்கிறோம்.

அதேபோன்று கல்லூரி மாணவர்களுக்கு போர்டிங் அண்ட் லாட்ஜிங் பணம் அதிகமாக தரப்படுவதில்லை. அதனாலே, வேற்றுச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் சொந்தப் பணத்தையும்கூட செலவழிக்க முடிகிறது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அரசாங்கம் தருகிற பணத்திலேதான் எல்லாச செலவையும் ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த வித்தியாசமான தொகையை ஈடுகட்டிக்கொள்ள முடியவில்லை என்று நாங்கள் மத்திய அசராங்கத்திற்கு எழுதி இருக்கிறோம். அவர்கள் ஒப்புதல் விரைவிலே கிடைக்குமென நம்புகிறேன். எனவே இந்த இரண்டு ஆண்டு காலத்தில் என்ன செய்திருக்கிறோம் என்று கேட்பவர்கள் இதை உணர வேண்டும். இன்னும் எத்தனையோ செய்திருந்தாலும், ஒரு சிலவற்றைமட்டும் குறிப்பிட்டுக்கூறக்காரணம், இவற்றையெல்லாம் மறந்துவிடக் கூடாது. குற்றமே சொல்ல வேண்டுமென்று விரும்புபவர்கள் இத்தனையையும் நாங்கள் செய்து இருக்கிறோம் என்று சொல்லிவிட்டால் நான் மீண்டும் வலியுறுத்திச சொல்ல வேண்டியதில்லை. இந்த அரசாங்கத்திற்குத் தாழ்த்தப்பட்டோர் வளர்ச்சியில் அக்கறை இருக்கிறது. அதற்காகப் பல காரியங்களைச் செய்கின்றோம், எவ்வளவுதான் நிதிநிலை நெருக்கடிகள் இருந்தாலும், எவ்வளவு அத்தியாவசியமான காரியங்களுக்குச் செலவு செய்ய வேண்டுமோ அவற்றிற்கு நாங்கள் செய்துகொண்டு வருகின்றோம். உறுப்பினர்கள் அனைவரும் மிகத் தெளிவான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரியப்படுத்துகிறேன்.

திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் ஒன்று சொன்னார்கள், திரு. இராமலிங்கம் அவர்கள் கூடச் சொன்னார்கள். 'பரமேஸ்வரன் கமிட்டி சொன்னதை நீங்கள் ஏன் கொண்டு வரக்கூடாது?' என்றார்கள். பரமேஸ்வரன் கமிட்டி எந்த ஆண்டு சொன்னார்கள்? அவர்கள் சொன்னது 1963-ம் ஆண்டு. நாங்கள் 1967-ல் தான் ஆட்சிக்கு வந்தோம். 1963-லே பரமேஸ்வரன் கமிட்டி சொன்னதை ஏன் இந்த ஆட்சி கடைப்பிடிக்க வில்லை?... ......(குறுக்கீடு) உறுப்பினர்களுக்கு வேண்டுமானால் ஓராண்டு கழித்துக் கூட ரிப்போர்ட் கொடுக்கப்பட்டிருக்கலாம். பரமேஸ்வரன் கமிட்டி ரிப்போர்ட்டை அப்பொழுதே கொடுத்து விட்டார்கள். உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால் செய்யவில்லை, காரணம் பல சிக்கல்கள் இருப்பதுதான். அதனால்தான் அவர்களும் விட்டுவிட்டார்கள். அப்பொழுது கேட்டிருக்க வேண்டும். பரமேஸ்வரன் கமிட்டி சொன்னது

என்ன ஆனது ? வைத்தியநாதன் கமிட்டி சொன்னது என்ன ஆனது?
என்றெல்லாம் கேட்டார்கள். வைத்தியநாதன் கமிட்டியைக்கூட மனநிலை
வைத்து ஒரு ஹை பவர் கமிட்டி போட்டு, அந்த 16 சதவிகிதம் ஏன் இந்த
மக்களுக்குத் தரப்படவில்லை என்று ஆராயப்பட்டது. அவ்வப்போது பரி
சிலனை செய்து பல சிபாரிசுகளைக் கூடச் செய்திருக்கிறது.
ஓரிரண்டு சிபார்சுகளைக் கூட இந்த அரசாங்கம் அமலுக்குக் கொண்டு
வந்திருக்கிறது. குறிப்பாக, உத்தியோக உயர்வாக இருந்தாலும், புதிய
நியமனமாக இருந்தாலும், ஒரு ஆண்டு அதற்கு தாழ்த்தப்பட்ட இனத்
தைச் சேர்ந்தவர்கள் வரவில்லை என்று சொன்னால், இந்த ஆண்டு வர
வில்லை என்றாலும், அடுத்த ஆண்டு வரையிலாவது அந்தப் பதவியைக்
காலியாகவே வைத்துக் கொண்டிருக்க வேண்டும், யாரையும் அந்தப்
பதவியில் நிரப்பிவிடக்கூடாது, அடுத்த ஆண்டு வரும்பொழுது அந்தச்
சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வந்தால் அதை நிரப்பிக் கொள்ளவேண்
டும் என்று ஹைபவர் கமிட்டி சிபார்சு செய்ததை, அரசாங்கம் அமலுக்குக்
கொண்டுவர ஏற்பாடு செய்திருக்கிறது. எனவே, எதுவுமே இந்த
இலாகாவில் செய்யப்படவில்லை என்று சொல்வது சரியல்ல. எத்தனையோ
செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் செய்துகொண்டுதான் இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள்.
நான் உள்ளபடியே வேதனைப்படுகிறேன். அவர் படித்தவர். நீண்ட கால
மாகப் பாராளுமன்ற அனுபவத்தைப் பெற்றவர். அவருக்குத் தாழ்த்தப்
பட்டவர்கள்மீது இருக்கும் அக்கறை குறித்து நான் மெத்தவும் மகிழ்ச்சி
அடைகிறேன். அவர் மேலும், மேலும் இப்படி அக்கறை கொள்ள
வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால், அவசரப்பட்டு அமைச்சர்
தவறான கருத்தைச் சொல்லிவிட்டார் என்று சொன்ன சொல்தான்
எனக்கு வேதனையைத் தந்தது. அவரது வார்த்தையிலிருந்து, போலீ
ஸார் புகார் கொடுத்தவர்களுக்கே மீண்டும் தொல்லை கொடுத்துக்
கொண்டு வருகிறார்கள் என்று சொன்னார். அதை நான் ஒத்துக் கொள்
கிறேன். தீண்டாமை ஒழிப்புச்சிறந்த முறையில் நடைபெறவில்லை என்று
சொன்னால், இதற்கு அஞ்சித்தான் போலீஸில் பல பேர்கள் புகார்
கொடுப்பதில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் புகார் கொடுத்தவர்களுக்கே
போலீஸ் தொல்லை தருகிறார்கள் என்று சொன்னார்கள். எங்கே பாது
காப்பு இருக்கிறது என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்
கொள்வதெல்லாம் அருள் கூர்ந்து நீங்கள் புகாரைக் கொடுங்கள்
போலீஸ் இலாகா அந்தப் புகாரின்பேரில் ஒழுங்காக நடவடிக்கை எடுக்க
வில்லையென்றால், அரசாங்கம் இருக்கிறது, அதற்கென்று ஒரு இலாகா
இருக்கிறது. உறுப்பினர்களுக்கு இங்கே பேசுவதற்கு வாய்ப்பு இருக்
கிறது, உரிமை இருக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு
எதையும் ஆதாரப்பூர்வமாக எடுத்துச் சொல்லுங்கள். அப்பொழுதுதான்
நீங்கள் நல்ல எதிர்க் கட்சியினராவீர்கள். ஏதோ "நான் அடிப்பது
போல் அடிக்கிறேன், நீ அழுவதுமாதிரி அழு" என்று சொல்வது
போல, "எல்லோரும் போனார்கள் மாங்காய் தோப்பிற்கு, நானும்
போனேன்" என்று சொல்வதுபோல, எல்லோரும் சொன்னார்கள்
நானும் சொல்கிறேன் என்று சொல்வதில் பயன் இல்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** எனக்கு இருக்கிற குறையெல்லாம்,
நாங்கள் அரசாங்கத்திற்கு மனுக் கொடுத்திருக்கிறோம். காலம் சென்ற
முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களிடம் நான் சொல்லி இருக்
கிறேன். மனுக்கள் கொடுத்திருக்கிறேன். அதில் இருக்கக் கூடிய சிக்கலை
அருள் கூர்ந்து கவனித்தால், நான் இதை எதற்காகச் சொல்கிறேன்
என்பதை நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். எந்த நபர் கம்ப்ளைண்டு
கொடுத்தார்களோ, அரசாங்கத்திற்கு அனுப்பினார்களோ, அந்த நபர்
மீதே மீண்டும் போலீஸ்காரர்கள் ஆதிக்கத்தை நடத்துகிறார்கள். அதைத்
தவிர்ப்பதற்கு ஏதாவது ஒரு முறை இருந்தால், நலமாக இருக்கும்.
பொறுப்போடு சொல்கிறோம். பல தடவை நான் மனுக்கள் கொடுத்திருக்
கிறேன். திரும்பவும் அவர்களைப் பாதிக்காத வகையில் எந்தவித வகை
யிலே எந்த ஒரு திட்டம் போட்டு அவர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்புத்
தரமுடியும் என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** எத்தனை முறை
கள் மனுக்கள் கொடுத்தாலும் நிச்சயம் அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும்.
யார் தவறு செய்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும். நீங்கள்
அந்தக் காரியத்தில் ஈடுபட்டு, புகார்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக்
கொண்டு வந்தால், அந்தக் காரியத்தை வெற்றிகரமாகச் செய்ய முடியும்.
எத்தனை புகார்கள் எத்தனை முறை கொடுத்தாலும், அதைக் கேட்க இந்த
அரசாங்கம் தயாராக இருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** இந்த மன்றத்தில் நான் கூறியது அந்த
முயற்சியின் தொடர்புதானே ஒழிய, வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** உறுப்பினர்
சோமசுந்தரம் அவர்கள் கூறினார்கள் உரிமைக் கார்டுகளைப்பற்றி. ஆரம்
பத்தில் உரிமைக் கார்டுகள் கொடுக்கப்பட்டபொழுது கல்லூரி முதல்வர்கள்
சற்று அதை உதாசீனப்படுத்தினார்கள். காரணம், அதிலே அவர்கள்
எவ்வளவோ சிக்கல் இருப்பதாகச் சொன்னார்கள். நானே அவர்களிடம்
பேசியிருக்கிறேன். அவர்கள் சொன்னது "பணம் வருவதை எதிர்
பார்த்து நாங்கள் மாணவர்களுக்கு உணவு தருகிறோம். உணவுக்காசப்
பல்வேறு பொருள்களை. அரிசி, இன்னும்பல பொருள்களைக் கடனுக்குத்தான்
வாங்கிக்கொடுக்கிறோம். மானியத் தொகை வந்தவுடன் இதையெல்லாம்
நாங்கள் திருப்பித் தரவேண்டும். மானியத் தொகை வருவதற்குக் கால
தாமதம் ஆகிறது. ஆகவேதான் உங்களுக்கு விரைவில் பணம்
வராது என்று சொல்லி இம்மாதிரி மாணவர்களை நாங்கள் தட்டிக் கழித்
தோம்" என்று இருக்கிற குறைகளை அவர்கள் சொன்னார்கள். பிறகுதான்
நாங்கள் அவர்களுக்கு உறுதி அளித்தோம். அரிசனங்களைப் பொறுத்த
மட்டில் எவ்வளவு காலதாமதம் ஆனாலும் கட்டாயம் பணம் வரும்.
ஏனென்றால் அரிசன மக்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதை மத்திய
அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உபகாரச்
சம்பளம் நமது அரசாங்கம் தருகிறது. பிற்படுத்தப்பட்ட மக்களைப்
பொறுத்தவரையில் அவர்களுடைய வருமானம் என்ன, படித்த படிப்பில்
மதிப்பு எண் வாங்கியது எவ்வளவு என்பதையெல்லாம் பார்த்துப் பரி
சீலனை செய்து, தகுதியிருக்கிறதா, இல்லையா என்பதை வரையறுத்து,
பிறகுதான் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதனால்தான் பிற்
படுத்தப்பட்ட மக்களுக்கு காரண்டி கொடுக்க முடியவில்லை. அவர்களுக்கு
அதிகச் சம்பளம் வரலாம். அவர்கள் மார்க்கு அதிகமாக வாங்காமல் இருக்க
லாம். இவற்றையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. பிறகு
தான் யாருக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பது என்பதை வரையறுக்க
வேண்டியிருக்கிறது. அதனால்தான் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு காரண்டி
கிடையாது. ஆனால், அரிசனங்களைப் பொறுத்தமட்டில், அத்தனை பேர்
களுக்கும் இந்தியப் பேரரசு உபகாரச் சம்பளம் அளிப்பதால், நாம்
அவர்களுக்குக் காரண்டி கொடுக்கிறோம். தாமதம் ஆகலாம், ஆனால்
எப்படியாவது பணம் வந்துவிடும் என்பதற்காகத்தான் அத்தகைய கார்டு
கொடுக்கப்படுகிறது. இப்பொழுது அப்படிப்பட்ட கார்டுகளை உதாசீனப்படுத்
தும் நிலை இல்லை. அவர்களைக் குறைவாக நடத்தும் நிலை இல்லை என்று
நான் அறிகிறேன். எல்லா மாணவர்களுக்கும் அப்படி காரண்டி கொடுக்க
முடியாது. எல்லா மாணவர்களுக்கும் நாம் உபகாரச் சம்பளம் கொடுக்க
வில்லை. அதனால் எல்லா மாணவர்களுக்கும் நாம் உத்திரவாதம்,
காரண்டி கொடுக்க முடியாது. தகுதியைப் பார்த்து, பரிசீலனை செய்து,
வரையறுக்கப்பட்ட பிறகு தான், தகுதியுள்ளவர்களுக்கு உபகாரச் சம்பளம்
கொடுக்க முடியும். எல்லோருக்கும் காரண்டி கார்டு கொடுக்க முடியாது
என்று சொல்லிக் கொள்கிறேன்.

உச்ச வரம்பு நிலத்தைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பங்கிட்டுத் தர
வேண்டும் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே கேட்டார்கள். உச்ச
வரம்பைப் பற்றி பேசும்பொழுது மிச்சம் எங்கே என்று நாங்கள் கேட்
டோம். எனக்குக்கூட நினைவிற்கு வருகிறது. 1957–62-ல் நமது எதிர்க்
கட்சி கொறடா அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் சட்ட
மன்றத்தில் இருக்கும்பொழுது (குறுக்கீடு) அன்றைக்கு ரெவின்யூ அமைச்ச

ராக இருந்த திரு. மாணிக்கவேலு அவர்களை மறைந்த அறிஞர் அண்ணா அவர்கள் இதுபற்றி கேட்டபொழுது, அவருக்கே உரிய நல்ல இனிமையான பாணியில் சொன்னார் "உச்ச வரம்பில் எங்கே மிச்சம் இருக்கும்", என்றார். மிச்சம் அப்பொழுதே கிடையாது. இப்பொழுது எங்கேயிருந்து மிச்சம் இருக்கும் ? உச்ச வரம்புச் சட்டம் வரப்போகிறது என்று தெரிந்த வுடனேயே நிலச் சொந்தக்காரர்கள் தங்கள் டிரைவர்மீதும், சமையக் காரர்மீதும் நிலத்தைப் பிரித்து எழுதி வைத்துவிட்டார்கள். எனவே, எங்கே நிலம் மிச்சம் இருக்கிறது, எங்கே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலத்தை எடுத்துப் பிரித்துக் கொடுக்க முடியும்? எனவே, உச்ச வரம்பு உபரி நிலம் கிடையாது. மிச்ச நிலம் இருந்தால்தானே தாழ்த் தப்பட்ட மக்களுக்குத் தருவதற்கு. "நாங்கள் உச்ச வரம்புச் சட்டத் தைக் கொண்டுவந்தோம்" என்று சொல்லுகிறார்கள். குன்னியூர் சாம்ப சிவய்யர் போன்ற பெரிய நிலச்சொந்தக்காரர்கள் உங்கள்மீது என் கோபப்பட வேண்டும் ? கோபப்பட வேண்டிய அவசியமே கிடையாது. நீங்கள் தான் பாகப்பிரிவினை செய்துகொள்வதற்கு வழிவகை செய்து கொடுத்துவிட்டீர்களே ? அவர்கள் குடும்பமே உங்களைப் பாராட்டுவார் களே ? யாருக்கும் கொடுக்க அவர்களுக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் உச்சவரம்புச் சட்டம் வருகிற காரணத்தினால், இருக்கிற நிலத்தைக் குடும் பத்திலுள்ள எல்லோருக்கும் பாகப்பிரிவினை செய்து, பிரித்து வைத்து விட்டார்களே ? அந்தக் குடும்பமே உங்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார் கள். எனவே, உச்சவரம்பில் மிச்ச நிலம் ஒன்றுமில்லை, எனவே, தாழ்த் தப்பட்ட மக்களுக்குக் கொடுப்பதற்கு நிலம் ஒன்றும் மிச்சம் இருக்கவில்லை, எனவே கொடுக்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் கனம் மருதாசலம் அவர்கள் ஆசிரியர்களுக்கு ரூ. 200 வரவில்லை என்று சொன்னார்கள். அது தவறு. ஆசிரியர்களுக்கு அல்ல அந்தப் பணம். எந்த விடுதியில் முறை யாகக் கற்றுத் தேர்விலே வெற்றி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறதோ, அந்த விடுதியில் காப்பாளராக இருக்கிற, அதா வது வார்டனை ஊக்குவிக்கும் முறையில், அவருக்கு ரூ. 200 பரிசாகத் தரப்படுகிறதே தவிர, எல்லா ஆசிரியர்களுக்கும் இந்தத் தொகை தரப்பட வில்லை. ஆகவே, உறுப்பினர் அவர்கள் அந்தக் கருத்தைத் திருத்திக் கொள்ளவேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமிபதிராஜு தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தரப்பட்ட நிலத்தைத் தட்டிப் பறித்துக்கொண்டுவிட்டார் என்ற குற்றச்சாட்டு இங்கே சாட்டப்பட்டது. அவற்றைப் பற்றியெல்லாம் பரிசீலனை செய்து, சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் உறுப்பினர் திரு. ஜே. எஸ். இராசு அவர்கள் அரிஜன் என்ற பெயரே இருக்கக்கூடாது, ஷெட்யூல்டு காஸ்ட் என்ற பெயர்தான் இருக்க வேண்டும், அரிஜன் என்ற பெயரை எடுத்துவிடவேண்டும் என்று கூறினார் கள். நீண்ட காலமாகவே அரிஜன் என்ற பெயரைக் காந்தியார் கொடுத்து விட்டார். சமுதாயத்தில் இருக்கிற இழிவு நிலைப் போக்கில் நாங்க ளெல்லாம் ஆலயத்திற்குள் செல்லமுடியாத நிலையில் இருக்கிறோம் என்று நாங்கள் கேட்டபொழுது, காந்தியார் சொன்னார், "உங்களுக்கு என் உரிமை இல்லை ? நீங்களெல்லாம் அரியின் புத்திரர்கள், அரிஜனங்கள்" என்று சொன்னார். இன்றைக்கு நரியின் புத்திரர்கள் என்று ஏற்றுக்கொள்ளக் கூட நாட்டில் மக்கள் இருக்கவில்லை. இன்றைக்கு அரிஜனங்கள் மனிதர் களாகக் கருதப்படவில்லை. மனிதனைக் கருதப்படாத அளவுக்கு, சமுதா யத்தில் தீ வைத்து கொளுத்தக்கூடிய கேவலமான நிலை இருக்கிறது. அந்தப் பெயர் இருக்கக்கூடாது என்று சொன்னார்கள் ? இன்னமும் சொல்லப் போனால், அரசியல் சட்டப்படி "அரிஜன்" என்ற வார்த்தை அதில் இருக்கவில்லை, "ஷெட்யூல்ட் காஸ்ட்" என்றுதான் இருக்கிறது. நீண்ட காலமாக "அரிஜன்" என்ற பெயர் வழக்கச் சொல்லாக வந் திருக்கிறது. வழக்கச் சொல்லை மாற்றுவதற்குக் காலம் இடந்தரவில்லை. மாற்றுவதும் அவசியம் இல்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்பு



தாழ்த்தப்பட்டோர் கமிஷனின் ரிப்போர்ட்டை இந்த மன்றத்திலே வைத்து விவாதிக்க வேண்டும் என்று சொன்னார்கள். உள்ளபடியே அந்த அறிக்கையில் எல்லா மலை ஜாதிகளைப்பற்றியும் அதிகமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அந்த அறிக்கை அகில இந்திய ரீதியில் தயாரிக்கப் பட்டிருக்கிறது. நமது மாநிலத்தைப் பற்றி 400, 500 பக்கங்கள் கொண்ட அந்தப் புத்தகத்தில், இரண்டு மூன்று பக்கங்கள்தான் வருகிறது. அதில் திட்டவட்டமாக இன்னின்ன கருத்துக்கள் என்று சொல்வது கிடையாது. நானே பலமுறை படித்திருக்கிறேன். இந்த மன்றத்திலே விவாதிக்கக் கூடிய அளவிற்கு அந்த அறிக்கையில் நமக்குக் கருத்துக்கள் இல்லை என்ற காரணத்தால் அறிக்கை இங்கே வருவது அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆசைத்தம்பி அவர்கள் தாழ்த்தப் பட்டவர்களுக்கு அர்ச்சகர் பதவி கொடுக்கவேண்டும் என்று கேட்டார்கள். அது பெருத்த வாதத்திற்கு இடம் தந்தது. அமைச்சர் பதவி நாங்கள் கொடுத்தோம் நீங்கள் என் கொடுக்கக்கூடாது என்றார்கள். நீங்கள் தான் அமைச்சர்களாகச் செய்தீர்கள் என்றால், என் நீங்களே அர்ச்சகர் பதவியும் கொடுத்திருக்கக்கூடாது என்று திருப்பிக் கேட்கிறோம். செய் திருக்கலாமே, என் செய்யவில்லை ? ஆலயப் பிரவேசம் செய்துகொடுத் தோம் என்றால், காந்தியார் காலத்திலிருந்து கேட்டுச் செய்யப்பட்டது. ஆலயப் பிரவேசம் என்று இருக்கிறதேயல்லாமல், நடைமுறையில் பார்த்தால் அது இருக்கவில்லை. ஒரு சில ஆலயங்கள், நகர்ப் புறங் களில் இருக்கின்றன. இங்கே அடையாளம் கண்டுகொள்ள முடியாது; ஆனால் கிராமங்களில் அடையாளம் கண்டுகொள்ளலாம். ஆகவே கிராமங்களில் அடையாளம் தெரிவதால், அது வெற்றிகரமாக ஆகவில்லை. தாழ்த்தப்பட்டவர்களை அர்ச்சகர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை நாங்களும் ஒத்துக் கொள்ளுகிறோம் என்று எதிர்க் கட்சித் தலைவரும் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால் என்னைவிட மகிழ்ச்சி அடையக் கூடியவர் யாரும் இருக்கமாட்டார்கள். அர்ச்சகர்களாகக் கொண்டு வரவேண்டும் என்பது நல்ல கருத்து, அதை நான் வர வேற்கிறேன்.

நேரம் அதிகமாக இல்லாததால், சுருக்கிக் கொள்ளுகிறேன். எதிர்க் கட்சிக் கொறடா அவர்கள், ஒரு புதிய யோசனையைச் சொல்லியிருக் கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று ஒரு டைரக்டரேட் இருக்கிறது, ஒரு இயக்குநர் இருக்கிறார். ஆனால், அதே போன்று பின்தங்கியவர் களுக்கும் ஒரு இயக்குநர் வேண்டும் என்று கேட்டார்கள். பின்தங்கிய மக்கள் சம்பந்தப்பட்ட வரையில் உபகாரச் சம்பளம் மாத்திரந்தான் கொடுக்கிறோம். இதற்குத் தனியாக ஒரு இயக்குநர் போடவேண்டுமா என்று யோசிக்கவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுகிறோம். அதற்கு ஒரு இலாகா, ஒரு டைரக்டர், துணை டைரக்டர், இன்னும் கீழ் அந்தஸ்துள்ள அதிகாரிகள், என்றெல்லாம் இருக்கிறது. பிற்படுத்தப்பட்டவர்களை மனத்தில் வைத்து, சமுதாயத்தில் இருக்கிற சீர் கேடுகளை மனத்தில் வைத்து, மிகவும் பின் தங்கியவர்கள் என்று, தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாத, மிகவும் பின்தங்கிய மக்களான சலவைத் தொழிலாளர்கள், மருத்துவர்கள், மீனவர்கள்கூட உபகாரச் சம்பளம் மட்டுமல்லாமல், தொழிலுக்குக் கருவிகள் என்ற வகையிலும் மானியம் என்று தந்து வருகிறோம். கல்விச் சலுகையோடு, பொருளாதாரத் திலே, சமுதாயத்திலே சீர்கேடு அடைந்திருக்கும் நிலைகளை இந்த அரசு பரிவோடு கவனிக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சொல்லுவேன், பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கல்விச் சலுகை தரவேண்டும் என்று இந்த அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. ஆரம்பத்தில் தொகை குறைவாக இருந்தாலும், அதிகமாகத் தரவேண்டும் என்கிற எண்ணம் இருக்கிறது. உபகாரச் சம்பளத்திற்காக ரூ. 91 லட்சம் என்றிருக்கிறது என்றாலும், மேலும் 26 லட்சம் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம், விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. விடுபட்ட மாணவர்களுக்கும் கூட்டிக் கொடுக்க முடியும் என்று இருக் கிறோம். இதுவரையிலும் 2·5 கோடி கொடுக்கப்பட்டிருக்கிறது.

[டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து] [1969 மார்ச் 13

தாழ்த்தப்பட்ட மக்கள் பட்டியலை இந்த அரசாங்கம் தயார் செய்வது
இல்லை. மத்திய சர்க்கார்தான் தாராளமாகப் பிரித்திருக்கிறது. மருத்துவர்
களையோ, சலவைத் தொழிலாளர்களையோ, இந்த இனத்தில் சேர்க்க
வேண்டும் என்று கோரிக்கை அவர்களிடத்திலிருந்து மாத்திரமல்லாமல்,
மற்றவர்களிடமிருந்தும் வந்திருக்கிறது. சலவைத் தொழிலாளர்கள் பல
போராட்டங்கள் நடத்தியிருக்கிறார்கள். அது இல்லாமல் எத்தனையோ
இன மக்கள் அந்தப் பட்டியலில் எங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்
என்று விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறார்கள். பட்டியல் சரியான
முறையில் செய்யப்படுவது எப்படி என்பது கனம் உறுப்பினருக்குத்
தெரியும். தீண்டாமைக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டவர்கள், சமுதாயத்
தில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சீர்கேட்டை வைத்து, அந்த அந்த
வகைகளில் உயர்வு தரவேண்டும் என்று, உத்தியோகத்தில் 25 சத
விகிதம் சலுகை, ஸ்காலர்ஷிப்கள், பதவியில் உயர்வு, வேறு பல வகை
களிலும் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. ஆகவே, இனங்களைச் சேர்ப்
பது இந்த அரசாங்கத்தின் பொறுப்பில் இல்லை. குறிப்பிட்ட மாநிலங்
களில் இன்னமும் தாழ்த்தப்பட்ட மக்களாகவே இவர்கள் கருதப்படு
கிறார்கள். ஆனால், இந்த மாநிலத்தில் அப்படி இருக்கவில்லை. அங்கத்
தினர் அவர்களே ஒப்புக்கொண்டார்கள், 'They are not untouchables'
என்று. தீண்டாமை என்கிற 'criteria' இருப்பதால், தாழ்த்தப்பட்ட மக்கள்
பட்டியலில் சேர்க்கப்படுகிறார்கள். சலவைத் தொழிலாளர்கள் அப்படிச்
சேர்க்கப்படுவதில்லை. இதைப் பரிசீலனை செய்து மத்திய சர்க்காரைக் கேட்டுப்
பார்த்திருக்கிறார்கள். இவர்கள் போராட்டம் நடத்தி உண்ணாவிரதம்
இருந்தார்கள். முன்னாலே இருந்த சர்க்காரையும் மறைந்த முத
லமைச்சர் அவர்களையும் பலமுறை கேட்டும் முடியவில்லை. மிகவும் பின்
தங்கியவர்களுக்கு தொழில் கருவிகளுக்கும் உதவி கொடுப்பதோடு, 25
சதவிகிதம் உத்தியோகங்களிலும் சலுகை கொடுக்கப்படுகிறது.

நன்செய் நிலங்களை எடுக்க வேண்டாம் என்று சொன்னார்கள். அதை
அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில்
எல்லாமே நன்செய் நிலங்கள்தான். புன்செய் நிலமே இல்லை. நன்செய்
நிலத்தை எடுத்து, 4 அடி உயர்த்த வேண்டியிருப்பதால், அப்படிச்
செய்ய முடியாமல், வீடு கட்டப்படாமலிருக்கிறது. ஆனால், நன்செய்
யைத்தான் எடுக்கவேண்டும் என்ற விருப்பம் இல்லை. ஆனால் புன்செய்
கிடைக்காத இடத்தில் நன்செய்யை எடுக்கவேண்டும் என்ற நிலை இருக்
கிறது. விலை சற்று ஏறத்தாழ இருந்தாலும், மக்கள் மீது அனுதாபம்
காரணமாக, பரிவின் காரணமாக, அதிக விலையைக் கொடுத்து நன்செய்
யாக இருந்தாலும் வாங்கி வழங்கவேண்டும் என்பதுதான் கொள்கை.

கனம் உறுப்பினர் அவர்கள், மலேயாக்காரர் ஒரு எக்கர், ஒன்றரை
எக்கர் வைத்திருக்கிறார், அதையும் எடுத்துக் கொண்டார்கள் என்று
சொன்னார்கள். என்னிடத்திலும் புகார் கொடுத்தார்கள். பரிசீலனை
செய்து பார்க்கக் கொடுத்திருக்கிறேன். அதிகப்படியான நிலம் இருந்தால்,
இந்த ஒரு எக்கர் எடுப்பதில் தவறு இருக்கமுடியாது. ஆனால், இருப்பதே
ஒரு எக்கர்தான் என்றால் அதைப் பரிசீலனை செய்து, கூடியவரையில்,
சிக்கலை நீக்கி, நல்ல தீர்ப்புக் கொடுக்க வாய்ப்பு இருந்தால், எடுக்க
வேண்டாம் என்று அவர்களுக்கு தெரியப்படுத்த முடியும்.

பிற்பகல் 3-00. அடுத்தபடியாக, மத்திய அரசின் உபகாரச் சம்பளங்களைப் பெற்று
வரும் ஸ்பெஷல் ஆபீசர்களை மாவட்டத்திற்கு மாற்றுகிற உத்தேசம்
இருக்கவில்லை. நிர்வாகத்திற்கு எளிமையாக இருக்கும் என்று முன்பு
நினைத்திருக்கலாம். இன்றைய தினம் அந்த எண்ணத்தில் அரசாங்கம்
இல்லை.

"ஹார்ட் கேஸஸ்" என்று இருப்பதை முன்னாலே இத் துறை
இயக்குநர் வைத்திருந்தார்கள். இப்பொழுது அரசாங்கமே அதை ஏற்
றிருக்கிறது. ஏனெனில் இயக்குநர் அவர்களிடம் இருந்தால் பல தவறுகள்
ஏற்படுகின்றன. நெருக்கடிகள் அவருக்கு ஏற்பட்டிருக்கலாம், அதனால்
[illegible] விளைந்திருக்கலாம். எதிர்க்கட்சி உறுப்பினர்களாகிய நீங்களே



1969 மார்ச் 13] [டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து]

கூட பலமுறை "எப்படிக் கொடுத்தார்கள்" என்று கேட்கலாம். ஆகவே,
அதை அனுதாபத்தோடு பார்க்கவேண்டும் என்று அரசு எடுத்துக்கொண்
டது. மாணவனின் பொருளாதார நிலை, இனத்தின் நிலை, பரீட்சை
எழுதுகின்ற நேரத்தில் உடல் நோய்வாய்ப்பட்டுவிட்டதா? பரீட்சை எழுத
தடை ஏற்பட்டுவிட்டதா என்பவைகளையெல்லாம் பரிசீலனை செய்யவேண்டி
யிருக்கிறது. சில சமயங்களில் எதிர்பாராத சம்பவங்களினால் மாணவர்கள்
பரீட்சை எழுத முடியாமல் போகலாம். உதாரணமாக, அவனுடைய
தாயோ, தந்தையோ இறந்துவிட்டிருக்கலாம். அந்த மாணவன் நல்ல
மார்க் வாங்க வேண்டியவனாக இருப்பான். இவற்றையெல்லாம்
செம்மையாகப் பரிசீலிக்க வேண்டும். ஆகவே, அரசாங்கமே பரிசீலிக்
கட்டும் என்று இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. இதில் கால
தாமதம் இருந்தால் அதை அகற்ற நிச்சயம் நடவடிக்கை எடுக்கிறோம்.

இறுதியாக அட்வைஸரி கமிட்டி நான்கு மாதங்களுக்கு ஒருமுறை
கூடுவதை இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூட வேண்டும் என்று கேட்கப்
பட்டது. நான்கு மாதத்திற்கு ஒரு தடவை கூடும்போதே, "கடந்த
மீட்டிங்கில் கொடுத்தது என்ன ஆயிற்று?" என்று கேட்கிறார்கள்.
இன்னும் பதில் வரவில்லை" என்று சொல்லவேண்டியிருக்கிறது. நான்கு
மாதத்திற்கு ஒரு தடவை கூடும்போதே சரியான விவரம் உடனுக்குடன்
கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கும்போது, இரண்டு மாதத்திற்கு ஒரு
முறை கூட வேண்டும் என்று கேட்பதில் நியாயம் இல்லை. கடந்த
ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பேசும்போதுகூட இதைப்பற்றிக் குறிப்
பிட்டேன். இது ஒரு தனி அரசாங்கம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு
வீடு கொடுக்கிறோம், தண்ணீர் தருவதற்காக, மின்சாரம் தருவதற்காக,
உடை தருவதற்காக எல்லாவிதமான காரியங்களையும் செய்ய வேண்டி
யிருக்கிறது. இதில் பலவிதமான துறைகளுடன் ஈடுபாடு கொள்ள
வேண்டியிருக்கிறது. அவசரம் அவசரமாகச் செய்து பதிலை உடனே
தர முடியாது. எல்லாத் துறைகளிலிருந்தும் பதில் வரவேண்டும்.
வந்த பதிலை அட்வைசரி கமிட்டியில் வைக்கவேண்டும். ஆகவே,
இந்த அட்வைசரி கமிட்டி நான்கு மாதத்திற்கு ஒரு முறை கூடுவதுதான்
சரியாக இருக்கும். இரண்டு மாதத்திற்கு ஒருமுறை என்றால்
சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்து கொள்ளுகிறேன்.
இப்படிப்பட்ட வகைகளிலே எல்லாம் உறுப்பினர்கள் நல்ல கருத்து
களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நல்ல எண்ணத்தோடு மானியக்
கோரிக்கைகளின்மீது கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை உறுப்பினர்
கள் திரும்பப் பெறுவார்கள் என்று எண்ணுகிறேன். எல்லா உறுப்பினர்
களுக்கும் பிற்பட்ட மக்கள்மீது அனுதாபம் இருக்கிறது. இந்த அரசாங்
கத்திற்கு உறுப்பினர்கள் எல்லோரும் முழுத் துணையோடு இருப்பார்கள்
என்ற நம்பிக்கையோடு, இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தர
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம்:** தலைவர் அவர்களே, முன்பிருந்த சர்க்கார்
செய்யாத புதிய காரியத்தைச் செய்தார்கள் என்று சொன்னால், அது
சிறு தொழில்களுக்கு வட்டியில்லாக் கடன் கொடுத்திருக்கிறார்கள். 1968-
69-ம் ஆண்டு இதற்கென 1 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு
1969-70-ல் 2 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்பொழுது ஒதுக்கப்
பட்ட பணத்தை 14 மாவட்டங்களுக்குப் பிரித்தால் 10 ஆயிரத்திற்கு
மேலே மாவட்டத்திற்கு வருவதில்லை. அதிலேயும் பஞ்சாயத்து யூனியன்
கள் பல இருக்கின்றன. அப்படி ஒவ்வொன்றுக்கும் தொகை பிரித்தால்
ஒரு யூனியனுக்கு 150, 200 ரூபாய் என்ற அளவில்தான் கிடைக்கும்.
ஒவ்வொரு யூனியனிலும் சுமார் 100 மனுக்கள் வந்திருக்கின்றன. நீங்கள்
வட்டியில்லாக் கடன் தருகிறோம், கடன் தருகிறோம் என்று விளம்பரம்
செய்துவிட்டிருக்கிறீர்கள். பஞ்சாயத்து யூனியனிலே ஏழை எளிய
மக்கள் மனுக்கள் போட்டுவிட்டு கடன் கிடைக்கும், கடன் கிடைக்கும் என்று
காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் ஆளுக்கு ஒரு ரூபாய்
தருவதா? ஆகவே, இதற்கு தாராளமான மனப்பான்மையில் அதிக
மான தொகையை 20 லட்சம் 30 லட்சம் என்று ஒதுக்கித் தரவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிகவும் பின்தங்கிய வகுப்பினர்—மோஸ்ட் பேக்வார்ட் கிளாஸ் ஸ்டூடன்ட்ஸ்—எல்லாம் கல்லூரியில் சேர்ந்தவுடனே ஸ்பெஷல் பீஸ் மட்டும் வாங்கிக் கொள்ளலாமே தவிர, ஆர்டினரி ஃபீஸ், காலேஜ் பீஸ என்பவைகளை வாங்கக்கூடாது. ஆர்டினரி ஃபீஸ்களைக் கட்டவேண்டியதில்லையென்று சலுகை இருந்தும், விதி இருந்தும், அந்தச் சலுகையை அந்த மாணவர்கள் பெறமுடியாமல், கல்லூரியில் கேட்கும் பணத்தையெல்லாம் முதலிலே கட்டிவிட்டு, ஆண்டு இறுதியிலே அதைத் திரும்ப பெற முடிகிறதே தவிர, சலுகையை அவர்கள் அனுபவிக்க முடியவில்லை. ஆகவே, மோஸ்ட் பேக்வார்ட் மாணவர்களிடத்திலே ஸ்பெஷல் ஃபீஸ் மட்டும் வாங்கவேண்டும் என்றும், மற்ற ஃபீஸ்களை வாங்கக்கூடாது என்றும் கட்டாயமான, கண்டிப்பான தாக்கீது அனுப்பப் படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் வட்டியில்லாக் கடனுக்காக ஒதுக்கிய தொகை மிகவும் குறைவு என்று சொன்னார்கள். முதலிலே இந்தக் கடனை யாருக்குத் தருகிறோம் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். வியாபாரம் செய்பவர்கள், அதிலே அனுபவம் உடையவர்கள், முன்பின் வியாபாரத்தில் பழக்கமுள்ளவர்கள் ஆகியோருக்குத் தான் கடன் கொடுக்கிறோம். எல்லா அரிசன மக்களும் வியாபாரம் செய்யமுடியாது.

**திரு. கே. விநாயகம் :** அப்படிக் கொடுத்திருக்கும் அப்ளிகேஷன்களே 100-க்கு மேலிருக்குமே ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கடந்த ஆண்டு ஒரு லட்சம் ஒதுக்கினோம், இந்த ஆண்டு இரண்டு லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படியே ஆண்டுக்காண்டு, மூன்று லட்சம், நான்கு லட்சம், ஐந்து லட்சம் என்று உயர்ந்துகொண்டு போகும். அது என் நினைவில் இருக்கிறது.

இரண்டாவதாக, மிகவும் பின்தங்கிய மாணவர்களிடத்திலே கல்லூரிகளிலே முன்பணம் கேட்கப்படுகிறது என்று சொன்னார்கள். நான் ஆரம்பத்திலேயே இதைப்பற்றிச் சொன்னேன். கல்லூரி முதல்வர்கள் முன்பணத்தைப் கேட்டுப் பெறுகிறார்கள். மிகவும் பின்தங்கியவர்கள் ஜாதி சர்டிபிகேட்டை எவ்வளவு விரைவில் சேர்க்கிறார்களோ அவ்வளவு விரைவில் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியும். இதற்கென்று ஒரு கிளார்க் வைக்கவேண்டுமே என்று எண்ணுகிறார்கள். அந்த மாணவன் பின்தங்கிய இனமா, மிகவும் பின்தங்கிய இனமா என்று பிரித்துத்தான் இலாக்காக்களுக்கு அனுப்புகிறார்கள். அப்படிப் பிரித்து அனுப்புவதிலே தாமதம் ஏற்படுகிறது. பலமுறை இதை அட்வைசரி கமிட்டியிலே சொல்லியிருக்கிறோம். எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் நிதிக் கோரிக்கையின் மீதான விவாதம் முடிவுற்றது.

அடுத்தபடியாக வெட்டுத் தீர்மானங்கள்.

**Thiru K. VINAYAKAM :** Sir, out of chivalry for the fair sex, we are not pressing our cut motion.

திரு. என். எஸ். வி. சித்தன், திரு. பி. தனுஷ்கோடி, திரு. சோ அழகர்சாமி ஆகியோர் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால் அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

திரு. எஸ். பரமசிவம், திரு. ஏ. ஆர். மாரிமுத்து ஆகியோர் தங்களுடைய இருப்பிடத்தில் இல்லையாதலால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெறப்பட்டனவாகக் கருதப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண். 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,97,01,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்குக் கூடும். பிற்பகல் 3·08

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### (5) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

*Nil.*

### *B. Reports, Notifications and other papers.*

* 80. Note on Demand No. 13—Education (English and Tamil).

† 81. Policy Note on Demand No. 25—Welfare of Scheduled Tribes, Castes and Backward Classes (English and Tamil).

---

* Despatched to members on 11th March 1969.

† Despatched to Members on 12th March 1969.

## இணைப்பு I

[528-ம் பக்கத்தில் 316-ம் எண்ணுள்ள வினாவின் விடையைக் காண்க.]

**அரசு அலுவலகங்கள் அனைத்திலும் தமிழ் திட்டத்தை விரைந் நிறைவேற்றுவதற்கு அரசு எடுத்துள்ள பற்பல நடவடிக்கைகளைக் காட் கின்ற விவர அறிக்கை :—**

(1) 1957-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ந் தேதிக்கு முன்னர் அ பணியில் சேர்ந்தவர்களும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத களும், தமிழில் போதுமான அளவு தேர்ச்சி பெறாதவர்களுமான அ பணியாளர்கள் அனைவருக்கும் அலுவலக நேரத்திலேயே பயிற்சி அளிக் திட்டம் ஒன்றிற்கு (In-service Training Scheme) ஒப்பளிப்பு வழங் பட்டது.

(2) 1957-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ந் தேதிக்குப் பிறகு அ பணியில் சேர்ந்துள்ளவர்களும், பள்ளியிறுதித் தேர்வு அளவிலே தமிழில் தேர்ச்சி பெறுவதர்களுமான அரசுப் பணியாளர்கள் அனைவ தமிழக அரசுப் பணியாளர் தேர்வுக்குழுகம் நடத்துகின்ற 2-ம் வகு மொழித் தேர்வில், தமது தகுதிகாண் கால அளவிற்குள் தமிழில் தேர் பெற வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

(3) 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ந் தேதிக்கு முன் வேலையில் அமர்த்தப்பட்ட தட்டச்சர்கள் (Typists) அனைவருக்கு உதவித்தொகைத் திட்டம் ஒன்றின்கீழ், தமிழ் தட்டெழுத்தில் பயி அளிக்கப்பட்டது.

(4) 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ந் தேதிக்குப் பின் தட்டச்சர்களாக அல்லது சுருக்கெழுத்து-தட்டச்சராகப் பணியில் சேர்ந்த கள் தங்கள் தகுதிகாண் கால அளவிற்குள் தமிழ் தட்டெழுத் அல்லது தமிழ்ச் சுருக்கெழுத்தில் தேர்ச்சி பெறவேண்டுமென உத்தர பட்டுள்ளது.

(5) பற்பல துறைகளைச் சேர்ந்த சட்டங்களையும, விதிகளையும், வி தொகுப்புகளையும், அலுவலக நடைமுறை நூல்களையும் தமிழில் மொ பெயர்க்கும் பணியை ஆட்சிமொழிக்குழு ஆற்றி வருகிறது.

(6) தமிழக அரசின் மொழி பெயர்ப்புத் துறை அரசின் எல் நிலைகளிலும் தமிழை விரைந்து ஆட்சிமொழியாக்கும் நோக்குடன், சட் பேரவை வெளியீடுகள், சட்டமன்ற வெளியீடுகள் அனைத்தையும் தமி மொழி பெயர்க்கும் பணியையும், வரவு-செலவுத் திட்டப் பேருரை, எ வரவு-செலவுத் திட்ட வெளியீடுகள், சட்ட வரைவுகள், அவசரச் சட் போன்ற பிறவற்றிற்குத் தமிழாக்கம் செய்யும் பணியையும் ஆ வருகிறது.

(7) தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் ஒன்று அச்சிட்டு வெளி பட்டுள்ளது.

(8) பொதுவான ஆட்சிச் சொல்லகராதியும், பற்பல துறைக உரிய சிறப்புச் சொல் அகராதிகளும் தயாரிக்கப்பட்டு பல துறைப் பணி ருக்கும் வழங்கப்பட்டுள்ளன. தலைமைச் செயலகத்தின் துறை பழக்கத்திலுள்ள சொற்களைக் கொண்ட துணை அகராதி ஒன்று தயாரி பட்டு வருகிறது.

(9) மாநில அளவில் ஆட்சிமொழி சட்டச் சொல்லாக்க ஆணை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. சட்டச் சொற்கள் தயாரிக்கும் பணி மாநிலச் சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும், அவற்றின்கீழ் இய பட்டுள்ள விதிகளையும், தமிழில் மொழிபெயர்க்கும் பணியும் இக்குழு ஒப்படைக்கப்பட்டுள்ளன.





(10) பற்பல துறைகளுக்கும் உரிய மாதிரிக் குறிப்புகளும், வரைவு களும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு அத்துறைகளுக்கு அனுப்பப் பட்டுள்ளன.

(11) தலைமைச் செயலகத்திலுள்ள மேற்பார்வையாளர்களுக்கும், உதவியாளர்களுக்கும், எழுத்தர்களுக்கும் தமிழிலேயே குறிப்பு எழுதவும் வரைவு எழுதவும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

(12) மாவட்டங்களில் தமிழ்த் திட்டம் தொடங்கப் பெற்றுள்ள பல்வேறு அலுவலகங்களை ஆட்சிமொழிக் குழுவின் தனி அதிகாரி ஆய்வு செய்கின்றார். சென்னை மாநகரிலுள்ள அரசு அலுவலகங்களை ஆட்சிமொழிக் குழுவின் செயலாளர் ஆய்வு செய்கின்றார்.

*Statement showing the various steps taken by the Government for the speedy implementation of the Tamil Scheme in all Government offices.*

(1) An in-service training scheme was sanctioned to give training to all Government servants recruited before 30th November 1957 whose mother tongue is not Tamil and who do not possess adequate knowledge of Tamil.

(2) All Government servants recruited after 30th November 1957 and who have not passed an examination in Tamil of at least S.S.L.C. standard have been required to qualify themselves in the Second Class Language Test in Tamil conducted by the Madras Public Service Commission within the period of their probation.

(3) Typists recruited before 9th November 1961 were given training in Tamil Typewriting under a subsidy scheme.

(4) Typists or Steno-typists recruited after 9th November 1961 have been required to qualify themselves in Tamil Typewriting or Tamil Shorthand as the case may be within the period of their probation.

(5) The Official Language Committee is attending to the work of translating into Tamil, Acts, Rules, Codes and Manuals relating to the various departments.

(6) The Translation Wing is attending to the work of translating into Tamil all Legislature publications, the Budget Speech other Budget publications, Bills, Ordinances and all other materials with a view to expedite the introduction of Tamil at all levels of the Administration.

(7) A Tamil Shorthand Manual has been printed and published

(8) A General Glossary and Supplemental Glossaries for several departments have been prepared and supplied to the staff of the various departments. A Supplemental Glossary of Administrative terms Commonly used in the Departments of the Secretariat is under preparation.

9. A State Level Official Language (Legislative) Commission has been constituted and it has been entrusted with the work of finalisation of the Glossary of Legal Terms and translating into Tamil all the State Acts and Ordinances and the Rules thereunder.

(10) Typical model notes and drafts pertaining to various departments have been translated and supplied to various departments.

(11) Superintendents, Assistants and Clerks in the Secretariat have been given training in noting and drafting in Tamil.

(12) The Special Officer (Inspections) of the Official Language Committee inspects the various Government offices in the districts in which the Tamil Scheme has been introduced and the Secretary of the Official Language Committee inspects the Government offices in the city of Madras.

## APPENDIX 2.

[*Vide* answer to Starred Question No. 321 on p. 535].

During the year 1967 the Applied Nutrition Programme has been in operation in Madras State in 9 Blocks, viz., Arni, Athoor-I, Bhavanisagar, Koilpatti, Krishnagiri, Pattukottai, Poonamallee, Tiruvidamarudhur and T. Kallupatti Blocks. The programme was extended to 3 more blocks in December 1967, i.e., Sattur (Ramanathapuram district), Agastheeswaram (Kanyakumari District) and Periyanaickenpalayam (Coimbatore district). The programme in the seven blocks was handed over to local institutions like Village Panchayats and other associated organizations after 31st March 1968 and all the aids withdrawn. The programme has to be implemented then on self-supporting basis.

Central assistance for the blocks of the second series—Poonamallee and Athoor-I (opened in 1966–67) were availed of for digging wells in School gardens and installing pumpsets, opening poultry units and for starting group projects for Mahalir Mandrams. The assistance is Rs. 34,000 per block on the basis of 50 per cent sharing by the State Government. During the year Rs. 23,000 have been utilised. Poonamallee has spent Rs. 21,000 but Athoor-I has not shown much progress in this respect.

UNICEF assistance has also been offered at the rate of Rs. 700 per Mahalir Mandram for 10 Mahalir Mandrams and Rs. 500 per Youth Club for 5 Youth Club in each block. The five new blocks of the second and third series have been instructed to send proposals for the above non-recurring assistance.

Training Programme on Applied Nutrition Programme and Nutrition Education have been conducted for Poonamallee and Athoor Blocks for 118 officials and non-officials and the amount



spent on stipend claimed from the UNICEF for reimbursement to the State Government. The training programme will be continued for all the teachers, para medical, personnel, panchayat members, Balasevikas, convenors, etc, during 1968.

Seminars have also been conducted in th d seven blocks from October 1967 to December 1967 to discu the handing over of the production units and distribution cent after March 1968. Eighthundred andninety-six officials and non-officiaals participated in these 7 seminars.

Milk and Corn Soya Meal feeding have been conducted in 310 centres in 9 blocks. A total of 50598 lbs. of CSM and 54·721 lb. of Skim Milk Powder have been distributed to 7,122 in Balwadi children in 220 days.

The achievements during the year have been as follows :

### I. Production.

(a) *Horticulture*—

| | Production Kgs. | Value Rs. |
|---|---|---|
| (i) Community Gardens .. | 36,485 | 14,693 28 |
| (ii) School Gardens .. .. | 6,994 | 2,631 40 |
| (iii) Home Gardens .. | (in all the homes where space water are available). | |

(b) *Poultry*—

| | Collection Nos. | Value Rs. |
|---|---|---|
| Eggs .. .. .. .. | 1,46,305 | 29,261 00 |

(c) *Pisciculture*—

| | Production Kgs. | Value Rs. |
|---|---|---|
| Fish .. .. .. .. | 39,452 | 39,452 00 |

### II. Distribution.

| | Quantity. Kgs. | Value Rs. |
|---|---|---|
| (i) Vegetables .. .. .. | 41,796 | 15,844 80 |
| (ii) Eggs .. .. .. | 1,04,709 | 20,941 80 |
| (iii) Fish .. .. .. .. | 30,650 | 30,650 00 |

### III. Sales.

| | Quantity. kgs. | Value Rs. |
|---|---|---|
| (i) Vegetables .. .. .. | 2,022 | 795 00 |
| (ii) Eggs .. .. .. | 40,473 | 8,035 40 |
| (iii) Fish .. .. — .. | 6,808 | 6,808 00 |

During the first 4½ years of the porgramme 100 per cent of the production were distributed free of cost to the beneficiaries but since the last 6 months of the programme sales of eggs and vegetables and fish were permitted. In the case of eggs, stocks were taken in oultry Extension Centres for hatching purposes to replace stock· Fishermen were paid wages in kind in a few cases.

In the blocks taken up during the IV Plan bigger units are being started with 110 birks and sales in allowed from the beginnin so as to build up a fund. In addition, it is proposed to supply birds to private individuals in a Panchayat to start backyard units. They will in turn supply a fixed number of eggs for feeding programme. If found successful, this may be extended to more Panchayats.

**ஊட்டச் சத்துணவு திட்டத்தின் மீதான அறிக்கை.**

1967-ம் ஆண்டில், ஊட்டச் சத்துணவுத் திட்டம் தமிழ்நாட்டில் ஆரணி, ஆத்தூர்-1, பவானிசாகர், கோவில்பட்டி, கிருஷ்ணகிரி, பட்டுக்கோட்டை, பூவிருந்தவல்லி, திருவிடைமருதூர், தெ. கல்லுப்பட்டி ஆகிய 9 வளர்ச்சி வட்டாரங்களில் செயலில் இருந்தது. இத்திட்டம் 1967-டிசம்பரில் சாத்தூர் (ராமநாதபுரம் மாவட்டம்), அகதீஸ்வரம் (கன்னியாகுமரி மாவட்டம்), பெரியநாயக்கன் பாளையம் (கோயம்புத்தூர் மாவட்டம்) ஆகிய மூன்று வட்டாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. ஏழு வட்டாரங்களில் உள்ள திட்டம் ஊராட்சி மன்றங்கள் போன்ற உள்ளாட்சி நிறுவனங்களிடமும், தொடர்புடைய ஏனைய நிறுவனங்களிடமும், 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதிக்குப் பிறகு ஒப்படைக்கப்பட்டு, அவற்றிற்கு அளிக்கப்படும் உதவித் தொகை நிறுத்தப்பட்டது. அதன்பின் இத்திட்டத்தை அவைகள் தாமே வெளி உதவி இன்றி நிறைவேற்றவேண்டும்.

1966-67-ல் ஏற்படுத்தப்பட்ட பூவிருந்தவல்லி, ஆத்தூர்-1, ஆகிய இரண்டாம் நிலை வளர்ச்சி வட்டாரங்களில், பள்ளித்தோட்டங்களுக்கு கிணறுகள் வெட்டுவதற்கும், விசையேற்றங்களை அமைப்பதற்கும், கோழி இனப் பிரிவுகள் தொடங்குவதற்கும், மற்றும் மகளிர் மன்றங்களுக்குத் தொகுதித் திட்டங்களைத் தொடங்கவும் மத்திய அரசின் உதவி பெறப்பட்டது. 50 சதவீதத்தை மாநில அரசாங்கம் கொடுப்பதென்ற அடிப்படையில், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ. 34,000 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இந்த ஆண்டில் ரூ. 23,000 பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. பூவிருந்தவல்லியில் ரூ. 21,000 செலவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஆத்தூரில் இது குறித்த முன்னேற்றம் அதிகமில்லை.

ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு மகளிர் மன்றத்திற்கு ரூ. 700 என்ற வீதத்தில் 10 மகளிர் மன்றங்களுக்கும், ஒரு இளைஞர் சங்கத்திற்கும் ரூ. 500 என்ற வீதத்தில் 5 இளைஞர் சங்கங்களுக்கும் யூனிசெஃப் உதவி அளிக்கப்படுகின்றது. இரண்டாம் நிலையிலும், மூன்றும் நிலையிலும் இத்திட்டம் தொடங்கப்பட்ட 5 புதிய வட்டாரங்களை மேற்படி தொடர் உதவிக்கான செயற்குறிப்புகளை அனுப்பும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பூவிருந்தவல்லி, ஆத்தூர் வட்டாரங்களில் 118 அலுவலர்களுக்கும் மற்றவர்களுக்கும், ஊட்டச் சத்துணவுத் திட்டம், சத்துணவுக்கல்வி குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிக்கான உதவி தொகைக்காக செலவிடப்பட்ட தொகை யூனிசெஃப் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு மாநில அரசாங்கத்திடம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. ஆசிரியர்கள் துணை மருத்துவப் பணியாளர்கள், ஊராட்சி உறுப்பினர்கள், பால சேவிகைகள் அமைப்பாளர்கள் முதலியோருக்கும் 1968-ல் பயிற்சி அளிக்கப்படும்.



1968- மார்ச்சுக்குப் பின்னர் உற்பத்திப் பிரிவுகளையும், வழங்கல் நிலையங்களையும் எவரிடம் ஒப்படைப்பது என்பது குறித்து விவாதிக்க ஏழு பழைய வட்டாரங்களில் 1967 அக்டோபர் முதல் 1967 டிசம்பர் வரையில் கருத்தரங்குகள் பல நடைபெற்றுள்ளன. இந்த 7 கருத்தரங்குகளிலும் 896 அலுவலர்களும், ஏனையோரும் பங்கெடுத்துக்கொண்டனர்.

ஒன்பது வட்டாரங்களிலுள்ள 310 நிலையங்களில் பாலும், தானிய சோயா என்ற பாலுணவும் அளிக்கப்பட்டது. பாலவாடியில் உள்ள 7,122 குழந்தைகளுக்கு, 220 நாட்களில் மொத்தம் 50,598 ராத்தல் தானிய சோயா என்ற பாலுணவும், 54,721 ராத்தல் ஆடை எடுத்த பால்பொடியும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டிற்கான சாதனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

**1. உற்பத்தி.**

| | உற்பத்தி (கிலோகிராம்) | மதிப்பு. (ரூபாயில்) |
|---|---|---|
| (ஏ) தோட்டக்கலை— | | |
| (i) சமுதாயத் தோட்டங்கள் | 36,485 | 14,693-28 |
| (ii) பள்ளித் தோட்டங்கள் | 6,994 | 2,631-40 |
| (iii) வீட்டுத் தோட்டங்கள் | (இடமும் தண்ணீர் வசதியும் உள்ள வீடுகளில் எல்லாம்). | |

| | எண்ணிக்கை. | மதிப்பு. (ரூபாயில்) |
|---|---|---|
| (பி) கோழி இன வளர்ப்பு— | | |
| முட்டைகள் .. .. | 1,46,305 | 29,261. |

| | உற்பத்தி. (கிலோகிராம்). | மதிப்பு. (ரூபாயில்) |
|---|---|---|
| (சி) மீன் வளர்ச்சி— | | |
| மீன் .. .. .. | 39,452 | 39,452 |

**2. வழங்குதல்.**

| | | அளவு. (கிலோ கிராம்). | மதிப்பு. (ரூபாயில்). |
|---|---|---|---|
| (i) காய்கறிகள் | .. | 41,796 | 15,844 80 |
| (ii) முட்டைகள் | .. | 1,04,709 | 20,941 80 |
| (iii) மீன்கள் | .. | 30,650 | 30,650 00 |

**3. விற்பனை.**

| | | அளவு. (கிலோ கிராம்). | மதிப்பு. (ரூபாயில்) |
|---|---|---|---|
| (i) காய்கறிகள் | .. | 2,022 | 795 00 |
| (ii) முட்டைகள் | .. | 40,473 | 8,035 40 |
| (iii) மீன் | .. | 6 ,808 | 6,808 00 |

இத்திட்டத்தின் முதல் 4½ ஆண்டுகளில் உற்பத்திப் பொருள்கள், பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. ஆனால் கடந்த 6 மாதங்களாக முட்டைகள், காய்கறிகள், மீன்கள் ஆகியவற்றை விற்பனை செய்வது அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்பொழுதுள்ள கோழிகளுக்குப் பதிலாகப் புதிய கோழிகளை உருவாக்குவதற்காக கோழி இனவளர்ப்பு நிலையங்களில் உள்ள முட்டைகளின் இருப்பு கணக்கெடுக்கப்பட்டது. சில நேர்வுகளில் மீனவர்களுக்கு ஊதியம் மீனாகவே கொடுக்கப்பட்டது.

நான்காவது திட்டக் காலத்தில் தொடங்கப்பட்ட வட்டாரங்களில், 110 கோழிகள் கொண்ட பெரிய பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தேவையான நிதியைச் சேர்ப்பதற்காக அவை தொடக்க நாளிலிருந்தே அவற்றிலிருந்து விற்பனை செய்வது அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்துடன், ஒரு ஊராட்சியில் உள்ள தனியார்கள், வீட்டுக் கோழிப்பண்ணை தொடங்குவதற்காக அவர்களுக்கு கோழிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து பகலுணவுத் திட்டத்திற்காக குறிப்பிட்ட அளவு முட்டைகள் பெறப்படும். இது வெற்றிகரமாக நிறைவேறினால் மேலும் பல ஊராட்சிகளுக்கு நீட்டிக்கப்படும்.

## இணைப்பு III.

[545-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

### பின்தங்கிய வகுப்பினர் நலன் கொள்கை விளக்கக் குறிப்பு

நமது பேரன்பிற்குரிய தன்னிகரற்ற தலைவர் அருமை அண்ணா அவர்களின் மரணத்தால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டுள்ள ஈடு செய்யவொண்ணா இழப்பை ஆறாத்துயரத்துடன் நான் முதற்கண் இப்பேரவையினர்க்குத் தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன். அவர் புகழேணியின் உச்சியில் நின்றபோது, காலன் அவரை நம்மிடமிருந்து பிரித்துவிட்டாலும், அவர் நமது செயல்களுக்கெல்லாம் வழிகாட்டும் விண்மீன் போன்று நம்மை நெறிப்படுத்தி இன்னும் தமது புகழுடலுடன் நம்மிடையே நிலவி வருகிறார். பின்தங்கிய வகுப்பினர்களின் முன்னேற்றத்திற்காக அண்ணா பின்பற்றி வந்த இலட்சியங்களையும், கொள்கைகளையும் தொடர்ந்து பின்பற்றுவதுடன், அந்த மாபெருந் தலைவனின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதை விட வேறு சிறந்த வகையில் நாம் அவருக்கு அஞ்சலி செலுத்த முடியாதென்று பின்தங்கிய வகுப்பினர்களின் பிரதிநிதியாயுள்ள நான் உணர்கின்றேன். இவ்வாறு உணரும்போது, மறைந்த நமது முதலமைச்சர் மிகப் போற்றிப் பாராட்டிய அரிசனங்கள், பழங்குடி மக்கள், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் ஏனைய பின்தங்கிய வகுப்பினர்கள்—இவர்களின் முன்னேற்றம், வளங்கெழு நிலை, நலன் ஆகியவற்றிற்காக வகுக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றும் விரைவு பேணிக் காக்கப்பட்டு அவை தொடர்ந்து செயல்படுத்தப்படுமென்றும், இவை குறித்துத் தேவைப்பட்டால், புதிய திட்டங்களும் வகுக்கப்படுமென்றும், தொடர்புள்ள அனைவருக்கும் நான் உறுதி கூற விரும்புகின்றேன்.

2. இவை கூறி இப்போது நான் “அரிசனங்கள், பழங்குடி மக்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்” என்பதன்கீழ் 1969-70-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையை இப் பேரவையின்முன் வைக்கிறேன். அவ்வாறு வைக்கையில், அரிசனங்களுக்காக நம் மாநிலத்தில் நிறைவேற்றப்படுகிற வேலைத் திட்டங்கள் குறித்தும், இதுவரை எய்திய சாதனைகள் குறித்தும், 1969-70 ஆண்டுக்கான வேலைத் திட்டம் குறித்தும் நான் விளக்க விழைகிறேன்.



3. இவ் வகுப்பினரின் நலனுக்காகவே நிறைவேற்றப்பட்டுவரும் நலப் பணிகளில் கீழ்க்கண்டவை முக்கியமானவையாகும் :—

(1) **கல்வி.**—படிப்பிற்கான உதவித்தொகை வழங்குதல், பள்ளிகளையும், மாணவர் இல்லங்களையும் நிர்வகித்தல், நண்பகல் உணவு வழங்கல், மாணவர் இல்லங்களைப் பேணல், புத்தகங்களையும் உடைகளையும் வழங்குதல், உணவு மானியம் அளித்தல், மாணவர்களுக்கும் மாணவர் இல்லக் காப்பாளர்களுக்கும் பரிசுகள் வழங்குதல், பகுதி நேர ஆசிரியர் நியமித்தல் முதலியன.

(2) **சுகாதாரமும், வீட்டு வசதியும்.**—குடிநீர்க் கிணறுகள், மேல்நிலை நீர்தொட்டிகள், இணைப்புச் சாலைகள் நடைபாதை முதலியவற்றை அமைத்தல், அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி அளித்தல், வீட்டு மனைகள் வழங்குதல், இயங்கும் மருத்துவப் பிரிவு முதலியவற்றை பேணிவருதல், பழங்குடி மக்கள் முதலியவர்களுக்கு வீட்டு வசதி அளித்தல்.

(3) **பொருளாதார முன்னேற்றம்.**—பாசனத்திற்கும், இறைவைக் கிணறுகளுக்கும், துளைக் கிணறுகளுக்கும் உதவித் தொகை வழங்கல், பயிற்சி-உற்பத்தி நிலையங்கள், வேலை நிலையங்கள், கருவிகளையும், துணைக் கருவிகளையும் வழங்கல், தொழில்-கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், அரிசன பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவித்தொகை அளித்தல், தொழில் கடன்கள் அளித்தல், வேலைவாய்ப்பு, பயிற்சி முதலியவை.

(4) **விளம்பரம்.**—சமூகக் கூடங்கள், அரிசன வாரக் கொண்டாட்டம், தீண்டாமை ஒழிப்பிற்காக சிறந்த தொண்டு ஆற்றியவர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல், கலப்புமணம் செய்துகொண்ட மணமக்களுக்கு தங்கப் பதக்கங்கள் வழங்கல் முதலியன.

(5) **துப்புரவுப் பணிபுரியும் அரிசனங்களின் நலன்.**—துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களும்குத் தள்ளுவண்டி வழங்கலும், வீட்டுவசதி அளித்தலும், கூட்டுறவுக் கடன் சங்கங்களும்.

(6) **பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள்.**

4. அரசு கீழ்க்கண்ட வேலைத் திட்டங்களை நிறைவேற்றுகின்றது :—

**(1) கல்வி.**

பின்னிலை வகுப்பினரின் கல்வி முன்னேற்றத்திற்கான நல நடவடிக்கைகளுக்குத் தலையாய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. 1969-70-ம் ஆண்டு கல்வி வேலைத் திட்டங்களுக்கு ரூ. 549 13 இலட்சம் தனியே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

**(i) படிப்பு உதவித் தொகை.—(அ) மாநில அரசாங்கம் அளிக்கும் படிப்பு உதவித் தொகை.**—அரிசனங்கள், பழங்குடி மக்கள், இவர்களில் மதம் மாறியவர்கள் ஆகியவர்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உண்டுறை உதவித் தொகைகளும், படிப்பு உதவித் தொகைகளும் தொடரா மானியங்களும், தொடக்க வகுப்பு முதல் பட்ட மேற்படிப்பு வரையில் கலைப் படிப்புக்கும், தொழிற் படிப்புக்கும் அளிக்கப்படுகின்றன. இம் மாநிலத்தின் ஏனைய பின்னிலை வகுப்பினருக்கு உயர்நிலைப்பள்ளிகளில் 9-ம் வகுப்பு முதல் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வரை படிப்பு உதவித்தொகை வழங்கப்படுகிறது. குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர்களும், மதம் மாறியவர்களும், சலுகைகள் பெறத் தகுதியுள்ள ஏனைய வகுப்பினராகக் கருதப்பட்டு, அரிசனங்களுக்கு வழங்கப்படுவதைப் போலவே அவர்களுக்கும் படிப்பு உதவித்தொகை வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு வகுப்பினருக்கும் கடந்த எட்டு ஆண்டுகளின்போது வழங்கப்பட்ட படிப்பு உதவித்தொகை பெற்றவர்களின் எண்ணிக்கையும் அவற்றிற்கான தொகையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. (1) | மெட்ரிக்குக்கு முன். எண்ணிக்கை. (2) | மெட்ரிக்குக்கு முன். தொகை. (3) | மெட்ரிக்குக்குப் பின். எண்ணிக்கை. (4) | மெட்ரிக்குக்குப் பின். தொகை. (5) | மொத்தம். எண்ணிக்கை (6) | மொத்தம். தொகை. (6) |
|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | | ரூ. | | ரூ |
| **I. அரிசனங்கள், பழங்குடி மக்கள், அவர்களிலிருந்து மதம் மாறியவர்கள்.** | | | | | | |
| 1960-61 .. .. .. .. .. | 83,004 | 14,61,800 | 3,230 | 7,85,400 | 86,234 | 22,47,200 |
| 1961-62 .. .. .. .. .. | 92,950 | 17,74,800 | 3,178 | 7,85,600 | 96,128 | 25,60,400 |
| 1962-63 .. .. .. .. .. | 1,17,188 | 28,58,800 | 3,045 | 7,81,200 | 1,20,233 | 36,40,000 |
| 1963-64 .. .. .. .. .. | 1,34,600 | 35,34,000 | 3,300 | 8,27,000 | 1,37,900 | 43,61,000 |
| 1964-65 .. .. .. .. .. | 1,84,500 | 43,15,000 | 3,900 | 9,60,000 | 1,88,400 | 52,75,000 |
| 1965-66 .. .. .. .. .. | 2,33,094 | 49,19,318 | 4,200 | 10,13,111 | 2,37,294 | 59,32,429 |
| 1966-67 .. .. .. .. .. | 2,65,555 | 55,56,377 | 5,071 | 12,45,255 | 2,70,626 | 68,01,632 |
| 1967-68 .. .. .. .. .. | 2,61,736 | 56,30,152 | 5,664 | 14,29,461 | 2,67,400 | 70,59,613 |
| 1968-69 (1969 ஜனவரி வரை) .. .. | 2,75,636 | 59,09,631 | 3,301 | 11,19,414 | 2,78,937 | 70,29,045 |
| **II. குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர்.** | | | | | | |
| 1960-61 .. .. .. .. .. | 2,176 | 84,400 | 595 | 2,85,700 | 2,771 | 3,70,100 |
| 1961-62 .. .. .. .. .. | 4,988 | 1,45,400 | 715 | 3,55,900 | 5,703 | 5,01,300 |
| 1962-63 .. .. .. .. .. | 6,664 | 2,24,900 | 829 | 4,17,400 | 7,493 | 6,42,300 |
| 1963-64 .. .. .. .. .. | 5,640 | 2,33,000 | 825 | 3,84,000 | 6,465 | 6,17,000 |
| 1964-65 .. .. .. .. .. | 15,100 | 44,700 | 1,300 | 6,19,000 | 16,400 | 10,66,000 |
| 1965-66 .. .. .. .. .. | 20,666 | 5,29,442 | 1,394 | 6,37,555 | 22,060 | 11,66,997 |
| 1966-67 .. .. .. .. .. | 24,745 | 6,09,730 | 1,619 | 7,60,734 | 26,364 | 13,70,464 |
| 1967-68 .. .. .. .. .. | 27,967 | 6,32,584 | 1,941 | 8,16,740 | 29,908 | 14,49,324 |
| 1968-69 (1969 ஜனவரி வரை) .. .. | 31,580 | 6,22,980 | 2,029 | 9,19,510 | 33,609 | 14,42,490 |
| **III. ஏனைய பின்தங்கிய வகுப்பினர்.** | | | | | | |
| 1960-61 .. .. .. .. .. | 10,621 | 4,02,600 | 9,235 | 36,85,800 | 19,856 | 40,88,400 |
| 1961-62 .. .. .. .. .. | 14,874 | 5,22,175 | 11,167 | 42,18,727 | 26,041 | 47,40,902 |
| 1962-63 .. .. .. .. .. | 18,954 | 6,08,190 | 12,612 | 49,04,703 | 31,566 | 55,12,893 |
| 1963-64 .. .. .. .. .. | 17,200 | 4,72,000 | 14,600 | 58,11,000 | 31,800 | 62,83,000 |
| 1964-65 .. .. .. .. .. | 14,300 | 4,51,000 | 17,100 | 65,59,000 | 31,400 | 70,10,000 |
| 1965-66 .. .. .. .. .. | 12,944 | 4,57,346 | 18,431 | 68,47,454 | 31,375 | 73,04,800 |
| 1966-67 .. .. .. .. .. | 10,306 | 3,66,031 | 21,099 | 79,24,206 | 31,405 | 82,90,237 |
| 1967-68 .. .. .. .. .. | 10,075 | 3,70,460 | 25,260 | 88,07,826 | 35,335 | 91,78,286 |
| 1968-69 (1969 ஜனவரி வரை) .. .. | 11,232 | 3,21,306 | 23,284 | 76,94,458 | 34,516 | 80,15,764 |

அண்மைக் காலத்தில் வாழ்க்கைச் செலவு உயர்ந்தது காரணமாகவும் குறைந்த வருமானம் உள்ளவர்களின் வேண்டுகோள்களை நிறைவேற்றும் கருத்துடனும் இந்த வருமான வரம்பு 1967-68 முதற்கொண்டு ரூ. 1,500 என்பதிலிருந்து ரூ. 2,000 ஆக உயர்த்தப்பட்டது. ஏனைய பின்தங்கிய வகுப்பினருக்கு B.T., B.Ed., படிப்பு குறித்து 25 படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்பட்டன. இந்த எண்ணிக்கை 50 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. B.D.S., பாட முறைக்கான படிப்பு உதவித் தொகை 1967-68-ல் நான்காக இருக்க இப்போது 12-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

நடப்பாண்டு முதற்கொண்டு கீழ்க்கண்ட புதிய பாட முறைகளுக்கும் படிப்பு உதவித் தொகைகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது :—

| பாட முறை. | அரிசனங்கள், பழங்குடி மக்கள், அவர்களிலிருந்து மதம் மாறியவர்கள். | ஏனைய பின் தங்கிய வகுப்பினர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 எம்.ஏ. (குற்றவியல்) .. .. | 1 | 1 |
| 2 நகர, நாட்டுப்புற அமைப்பு திட்டமிடுதல்—பட்ட மேற்படிப்பு சிறப்புச் சான்றிதழ்ப் படிப்பு. | 1 | 2 |
| 3 எம். லிட் .. .. .. | 1 | 1+1 (குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப் பட்ட வகுப் பினர்). |
| 4 பி. ஐ. எம். .. .. .. | 10 | 25+5(ஜே) |
| 5 கைப்பணி ஆசிரியர் பயிற்சிப் பாட முறைகள். | 5 | 10+2(ஜே) |
| 6 மதுரை, கோயம்புத்தூர் , சென்னை ஆகிய இடங்களில் உள்ள அரசாங் கப் பல் தொழில் பயிற்சிப் பள்ளி களில் வாணிகவியலில் சிறப்புச் சான்றிதழ்ப் படிப்பு. | 5 (குற்றப் பட்டிய லிலிருந்து நீக்கப்பட்டோர் நீங்கலாக). | 10 |

அரிசனங்கள், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்களை பொறுத்த வரையில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கான உதவிச்சம்பளங்களின் (உண்டுறைச் செலவுகளின்) வீதத்தை அதிகரிப்பது குறித் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.



1966-67, 1967-68-ல் செலவு, 1968-69 திருத்த மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள தொகை, 1969-70-ல் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள தொகை ஆகியவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| வகுப்பு. | செலவு. 1966-67. | செலவு. 1967-68. | நிதி ஒதுக்கம். 1968-69 திருத்த மதிப்பீடு. | நிதி ஒதுக்கம். 1969-70* திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | | |
| அரிசனங்கள், ஆதிவாசிகள், அவர்களிலிருந்து மதம் மாறியவர்கள் .. | 68·02 | 65·25 | 80·82 | 79·37 |
| குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்கள் .. .. .. | 13·71 | 15·14 | 17·44 | 16 15 |
| ஏனைய பின்தங்கிய வகுப்பினர் .. .. .. .. .. .. | 82·90 | 91·54 | 91·20 | 93·25 |

* உண்மைத் தேவைகளின் அடிப்படையிலும், நிதிகள் கிடைப்பதற்கு உட்பட்டும், நாளடைவில் கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.

**(ஆ) இந்திய அரசு அளிக்கும் மெட்ரிக் மேல் படிப்பு உதவித் தொகை.**—மாநில நிதிகளிலிருந்து வழங்கப்படும் மேற்கூறிய படிப்பு உதவித் தொகைகளைத் தவிர, குறிப்பாக இதற்கென மத்திய அரசால் வழங்கப்படுகிற நிதிகளிலிருந்து மெட்ரிக் மேற்படிப்புக்கான படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

அரிசனங்களுக்கும், பழங்குடி மக்களுக்கும், ஏனைய பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் மெட்ரிக் மேல் படிப்புக்காகப் பொருளாதார அடிப்படையில் உதவிச் சம்பளங்கள் வழங்கும் பொருட்டு, ஒவ்வோராண்டும், இந்திய அரசு முறையே ரூ. 8·71 இலட்சம், ரூ. 0.12 இலட்சம், ரூ. 14·84 இலட்சம் தொகைகளை நிலையான ஒதுக்கீட்டு அடிப்படையில் ஒதுக்கித் தருகின்றது. இதற்குக் கூடுதலாக, அரிசனங்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் 1968–69 திருத்த மதிப்பீட்டில் முறையே ரூ. 25.85 இலட்சமும், ரூ. 0.40 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட நிலையான ஒதுக்கீட்டு அளவைக் காட்டிலும் இத் தொகைகள் அதிகமானவையே. ஆனால், 1968–69 கோரிக்கை அரிசனங்களைப் பொறுத்த வரையில் ரூ. 45·93 இலட்சமாகவும், பழங்குடிமக்களைப் பொறுத்த வரையில் ரூ. 0·56 இலட்சமாகவும் உள்ளது. தேவைகளையொட்டி அவசியமான அளவிற்கு 1969–70–ல் கூடுதல் நிதி வழங்கப்படும். புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்படுகிற அரிசன, பழங்குடி வகுப்பு மாணவர்கள் கல்விக் கட்டணங்கள் செலுத்தாதிருத்தல் முதலிய வற்றின் மூலம் கல்வி நிலையங்களுக்கும் மாணவர்களுக்கும் தொல்லைகள் ஏற்படாதிருப்பதற்காக, சென்ற ஆண்டு முதல் "தகுதி அட்டைகள்" **(Entitlement Cards)** அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆனால், அவர்கள் இந்திய அரசின் படிப்பு உதவித் தொகைகளைப் பெறத் தகுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

இத்தலைப்பின் கீழ் 1969–70 வரவு செலவுத் திட்டத்தில் செய்துள்ள நிதி ஒதுக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | (ரூ. இலட்சத்தில்.) |
|---|---|
| அரிசனங்கள் .. .. .. .. | 46·46 |
| பழங்குடி மக்கள் .. .. .. .. | 0·70 |
| பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள ஏனைய வகுப்பினர் (குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்கள் உட்பட). | 14·84 |

1960–61 முதல் 1967–68 வரையிலும், 1969 பிப்ரவரி வரையிலும் அரிசனங்கள், பழங்குடி மக்கள், குறைந்த வருமானமுள்ள பிற தொகுதியினர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட படிப்பு உதவிச் சம்பளங்களின்



எண்ணிக்கை, ஒப்பளிப்பு வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, அனுமதிக்கப்பட்ட படிப்பு உதவித் தொகைகள் ஆகியவை குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | அரிசனங்கள். | | பழங்குடி மக்கள். | | குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர். | |
|---|---|---|---|---|---|---|
| | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட விண்ணப் பங்கள். | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட படிப்பு உதவித் தொகைகள். | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட விண்ணப் பங்கள். | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட படிப்பு உதவித் தொகைகள். | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட விண்ணப் பங்கள். | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | ரூ. | | ரூ. | | ரூ. |
| 1960–61 .. .. .. .. .. | 2,167 | 12,17,555 | 30 | 18,036 | 1,679 | 14,84,120·03 |
| 1961–62 .. .. .. .. .. | 2,323 | 13,09,547 | 22 | 13,715 | 1,676 | 14,84,123·65 |
| 1962–63 .. .. .. .. .. | 2,494 | 14,14,644 | 22 | 15,155 | 1,635 | 14,84,172·20 |
| 1963–64 .. .. .. .. .. | 2,804 | 15,60,041 | 24 | 14,716 | 1,731 | 14,84,091·89 |
| 1964–65 .. .. .. .. .. | 3,390 | 18,49,894 | 39 | 24,514 | 1,895 | 14,83,914 36 |
| 1965–66 .. .. .. .. .. | 4,340 | 21,80,703 | 77 | 41,789 | 2,220 | 14,83,919·15 |
| 1966–67 .. .. .. .. .. | 5,465 | 28,40,116 | 86 | 48,356 | 2,294 | 14,81,813·38 |
| 1967–68 .. .. .. .. .. | 7,575 | 38,39,580 | 98 | 58,998 | 2,452 | 14,83,100 05 |
| 1968–69 (1969 பிப்ரவரி வரையிலும்) .. .. .. .. .. | 9,198 | 45,44,252 | 96 | 50,218 | 2,527 | 14,04,925·45 |

### (ii) பள்ளிகள்.

அரிசனங்கள், பழங்குடி மக்கள், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் ஆகியவர்களுக்கென நடத்தப்பட்டுவரும் பள்ளிகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | | |
|---|---|---|
| அரிசனங்களுக்கான பள்ளிகள் .. | 850 | (கன்னியாகுமரி மாவட்டத்தில் 17 இரவுப் பள்ளிகளும் ஒரு திண்ணைப் பள்ளியும் உட்பட). |
| பழங்குடி மக்களுக்கான பள்ளிகள் .. | 65 | (இவற்றில் தங்கிப் பயிலும் வசதியுள்ளவை 61. அத்தகைய வசதியற்றவை 4). |
| குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்களுக்கான பள்ளிகள். | 270 | (கள்ளர் பள்ளிகளும் குறவர் பள்ளிகளும் உட்பட). |

நீலகிரி மாவட்டம் கள்ளம்பாளையத்திலும், திருச்சிகடியிலும் உள்ள நகராட்சி ஒன்றியப் பள்ளிகள் நடப்பாண்டில் உறையுள் வசதியுடன் கூடிய பள்ளிகளாக மாற்றப்பட்டன. 1969-70-ல் பழங்குடி மக்கள் தங்கிப் பயிலும் பள்ளிகள் இரண்டினைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கனவேயுள்ள பழங்குடி மக்கள் தங்கிப் பயிலும் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. செங்கற்பட்டு மாவட்டம், செவ்வாப்பேட்டையில் உள்ள அரிசன நல உயர் தொடக்கப் பள்ளி 1968-69-ல் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.

மாணவர்கள் பள்ளிகளுக்கு ஒழுங்காக வருவதை ஊக்குவிக்கும் பொருட்டு, ஒவ்வொரு பள்ளியிலும் ஒழுங்காக வரும் மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தத் தலைமை ஆசிரியரின்/தலைமை ஆசிரியையின் பள்ளியில் மாணவர்கள் மிக ஒழுங்காக வரும்படி செய்கின்றாரோ அவருக்கும் பரிசுகள் வழங்கப்படும். அரிசன மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தி, கல்வி கற்பதில் அவர்களுக்குப் பேரார்வத்தை ஊட்டுவதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளி இறுதித் தேர்தலில் முதன்மையாக வரும் அரிசன மாணவருக்கும், இரண்டாவதாக வரும் அரிசன மாணவருக்கும் தேசிய சேமிப்புப் பத்திரங்கள் முதலாவது இரண்டாவது பரிசுகளாக வழங்கப்படுகின்றன. இதன் பொருட்டு 1969-70ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 25 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரிசன நலத்துறை நடத்துகிற பள்ளிகளில் பயின்று வருகிற மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக, 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்பதற்குப் பதிலாக, 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் ஆசிரியரை நியமிக்க எண்ணியுள்ளது. கூடுதல் ஆசிரியரை நியமிப்பதற்காக 1969-70-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| அரிசனங்களுக்கான பள்ளிகள் .. .. .. | 0·79 |
| பழங்குடி மக்கள் பள்ளிகள் .. .. .. | 0·28 |
| குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்கள் பள்ளிகள். | 0·48 |

அரிசன நலப் பள்ளிகளில் நூல் நிலையம் இருப்பது அவசியமென உணரப்படுகிறது. 1968-69-ம் ஆண்டில் ரூ. 28 ஆயிரம் செலவில் அரிசன நலப் பள்ளிகள் அனைத்திலும் நூல் நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மாணவரும், ஆசிரியரும் அதிகம் படிப்பதற்கு வசதி ஏற்படுவதுடன் தங்கள் அறிவைப் பெருக்கிக்கொண்டு மாணவரின் கல்வித் தரத்தை உயர்த்த முடியும்.



அரிசன நலத்துறை நடத்தும் பள்ளிகளில் மேசை, நாற்காலி முதலியவற்றிற்கும், விஞ்ஞானக் கருவிகளுக்கும், பாடம் கற்பிப்பதற்கான பிற சாதனங்களுக்கும் படிப்படியாக வகை செய்யப்பட்டு வருகிறது. திட்ட வேலைகள், திட்டத்தில் சேராத வேலைகளின் கீழ் 1969-70 வரவு-செலவுத் திட்டத்தில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது :—

| | (ரூ. லட்சத்தில்). |
|---|---|
| அரிசனங்கள் .. .. .. .. .. | 5·10 |
| பழங்குடி மக்கள் .. .. .. .. | 0·40 |
| குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்கள். | 0·70 |

அதே போல், படிக்கிரமத் திட்டப்படி, பள்ளிக் கட்டிடங்கள் கட்ட 1969-70-ல் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது :—

| | (ரூ. லட்சத்தில்). |
|---|---|
| அரிசன நலப் பள்ளிகள் .. .. .. .. | 4·29 |
| பழங்குடி மக்கள் பள்ளிகள் .. .. .. | 0·60 |
| குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்கள் பள்ளிகள். | 1·97 |

அரிசன நலத் துறையினர் நடத்தும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தரும் திட்டத்தின் முதல் நிலையாக பழங்குடி மககளுக்கான பள்ளிகள் உள்ள சில இடங்களில் ஆசிரியர் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இந்த வேலைத் திட்டத்தைப் படிப்படியாக நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது. 1969-70-ம் ஆண்டிலும் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பள்ளி ஆசிரியர்களுக்கும் இத்திட்டத்தை நீட்டிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது :—

| | ரூ. |
|---|---|
| பழங்குடி மக்கள் .. .. .. .. | 20,000 |
| குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்கள். | 35,000 |

### (iii) நண்பகல் உணவு.

பள்ளிச் சிறுவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கும் ட்டம் வெற்றிகரமான வகையில் செயல்படுத்தப்பட்டு 1969-70-லும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வரும். 1968-69-ம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீட்டில் ரூ. 40.10 லட்சமும், 1969-70-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 36·54 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

### (iv) மாணவர் இல்லங்கள்.

கிராமங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் வெகு தொலைவிலிருந்து வந்து பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்கும் அரிசனங்கள், பழங்குடி மக்கள், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் ஆகியோரின் நலனுக்காக மாணவர் இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டு பேணி வரப்படுகின்றன. ஒவ்வொரு வகுப்பினருக்காகவும் நடத்தப்படும் மாணவர் இல்லங்களின் எண்ணிக்கை, அவற்றில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | இல்லங்களின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | ஆண்கள். | பெண்கள். | மொத்தம். |
| அரிசனங்கள் .. .. .. | 293 | 118 | 411 |
| பழங்குடி மக்கள் .. .. | 12 | 3 | 15 |
| குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்கள். | 29 | 8 | 37 |
| ஏனைய பின்தங்கிய வகுப்பினர் | 9 | 2 | 11 |

மாணவர்களின் எண்ணிக்கை.

| | ஆண்கள். | பெண்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| அரிசனங்கள் .. .. .. | 20,412 | 7,336 | 27,748 |
| பழங்குடி மக்கள் .. .. | 570 | 105 | 675 |
| குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப் பட்ட பழங்குடி மக்கள். | 2,794 | 810 | 3,604 |
| ஏனைய பின்தங்கிய வகுப்பினர் | 754 | 225 | 979 |

தேவைப்படுமிடங்களிலெல்லாம் புதிய இல்லங்களும் ஆண்டுதோறும் தொடங்கப்படுகின்றன. அரிசன நலத் துறையிடமிருந்து உதவித் தொகை பெறும் தனியார் மாணவர் இல்லங்களும் எடுத்துக்கொள்ளப்பட்டன. உள்ளூர்த் தேவைகளை நிறைவு செய்வதற்காக, அங்குள்ளமாணவர் இல்லங்களில் மாணவர்களின் எண்ணிக்கையையும் உயர்த்தப்படுகிறது. உணவுப் பொருள்களின் விலை அதிகரித்துவிட்டதால், உணவுக் கட்டண வீதம் நடப்புக் கல்வியாண்டிலிருந்து மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் உயர்த்தப்பட்டது. 1969–70-ல் மேலும் சில புதிய மாணவர் இல்லங்களைத் திறக்கவும், அரசு உதவி பெறும் மாணவர் இல்லங்கள் சிலவற்றை மேற்கொள்ளவும் கருதப்படுகிறது. ஏற்கனவே உள்ள மாணவர் இல்லங்களை பேணி வருவதற்கும் ரூ. 86·78 லட்சமும், இனி தொடங்கக் கருதும், மேற்கொள்ளவிருக்கும் மாணவர் இல்லங்களுக்காகவும் ரூ. 2.71 லட்சமும் 1969–70-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும் பள்ளித் தேர்வுகளில் சிறந்த பயனைப் பெறுவதற்காகவும் மாணவர்களின் படிப்பில் சிறப்பான நாட்டம் செலுத்துவதற்காகவும், அரிசன நலத்துறை பொறுப்பேற்று நடத்திவரும் மாணவர் இல்லங்களில் பகுதி நேர சிற்றாசிரியர்களை (Part time tutors) நியமிக்கப்படுகின்றனர். இந்தப் பகுதி நேர சிற்றாசிரியர்களின் எண்ணிக்கை, 1969–70-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை ஆகியவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | சிற்றாசிரியர்களின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்டுள்ள தொகை. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| அரிசன மாணவர் இல்லங்கள்— | | |
| தற்போதுள்ளவர்கள் .. .. .. | 94 | 0.62 |
| இனி நியமிக்கப்படவிருப்பவர்கள் .. | 75 | |
| பழங்குடி மக்கள் மாணவர் இல்லங்கள். | 3 | 0·11 |
| குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்கள் மாணவர் இல்லங்கள். | 7 | 0·16 |
| ஏனைய பின்தங்கிய வகுப்பினர் மாணவர் இல்லங்கள். | 1 | 0·02 |

அரசாங்க மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவது குறித்து மாணவர் இல்லக் காப்பாளர்கள் தனி நாட்டம் செலுத்தும் வகையில் அவர்களிடையே போட்டியை ஏற் படுத்துவதற்காக அந்த மாவட்டத்திலேயே சிறந்த தேர்ச்சி பெற்ற மாணவர் களை தங்கும் மாணவர் இல்லக் காப்பாளருக்கு ரூ. 200 ரொக்கப் பரி தொகை கொடுக்கப்படுகிறது.





மாணவியர் இல்லங்களில் இரவு நேர காவல்காரரை நியமிக்க வேண்டியதின் தேவை உணரப்பட்டதால், 1968–69-ம் ஆண்டில் எட்டு மாணவியரில்லங்களில் காவல்காரர் நியமிக்கப்பட்டனர். 1969–70-ம் ஆண்டில் 10 மாணவியரில்லங்களில் இரவுநேர காவற்காரரை நியமிக்க கருதப்பட்டுள்ளது.

அரிசன நலத் துறையால் நடத்தப்படும் பெரும்பாலான பள்ளிகளும் மாணவரில்லங்களும் வாடகைக் கட்டிடங்களிலேயே செயல்பட்டு வருகின்றன. இதன் தேவையை, அரசாங்கம் அறிந்திருந்தும் அத்தகைய நிறுவனங்கள் அனைத்திற்கும் கட்டிடங்கள் கட்டித்தர முன் வந்தாலும் இதற்குத் தேவைப்படக்கூடிய நிதியை ஒதுக்கித் தரும் வகையில் அரசின் வழிவகை நிதி நிலை இடம் தரவில்லை. எனினும், அவசர நிலைமைக்கேற்பவும் தேவைக்கேற்பவும் நிதி நிலைமையைப் பொறுத்தும் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 1969–70-ம் ஆண்டில் மாணவரில்லங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டும் செலவிற்கும், முந்திய ஆண்டில் தொடங்கிய கட்டிடப் பணிகளை முடிப்பதற்காகும் செலவிற்கும் 1969–70-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவு திட்டத்தில் ரூ. 5·60 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில் புத்தகங்கள், எழுதுபலகைகள், பென்சில்கள் ஆகியவை இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. அரிசன நலப் பள்ளிகளில் படிக்கும் மாணவியருக்கும் அரிசன நல மாணவியரில்லங்களில் தங்கிப் பயிலும் மாணவியருக்கும் ஆண்டுதோறும் தீபாவளியின்போதும், பொங்கலின்போதும் இரண்டு உடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. பழங்குடி மக்களுக்கான மாணவரில்லங்களில் படுக்கையும் கொடுக்கப்படுகிறது. நடப்பாண்டிலிருந்து அரிசன நலப்பள்ளிகளில் பயிலும் அரிசன மாணவர்களுக்கும், பழங்குடி மாணவர்களுக்கும் I-லிருந்து III-வது வகுப்புவரை மாணவர் ஒருவருக்கு ரூ. 10 மதிப்புள்ள உடை பொங்கலின்போது வழங்கப்படுகிறது. குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மாணவர்கள் தங்குமில்லங்களிலும் அவர்களுக்கு இலவசமாக உடை வழங்கப்படுகிறது. இத் திட்டங்கள் எல்லாவற்றிற்குமாகச் சேர்த்து 1969–70 ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் மொத்தமாக ரூ. 19·20 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## (v) உணவு மானியம்.

அரிசனங்கள், பழங்குடி மக்கள், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர், ஏனைய பின் தங்கிய வகுப்பினர் ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்கள் தனியார் நிர்வகிக்கும் மாணவரில்லங்களில் தங்கிப் படித்தால் நிதி வசதி உள்ளதைப் பொறுத்து ஒவ்வோரில்லத்திலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்பவும் தங்கும் வசதி மானியத் தொகை மொத்தமாக வழங்கப்படுகிறது. நடப் பாண்டிலிருந்து மாணவர் ஒருவருக்குத் திங்கள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் இந்த மானியத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. தனியார் நடத்தும் இம் மாணவர் இல்லங்களைப் படிப்படியாக மேற்கொள்ளும் திட்டத்தின்கீழ்அரசாங்கமேஅவற்றை ஏற்றுக்கொள்கிறது. இத்தகையஉணவு மானியங்கள் வழங்குவதற்காக 1969–70-ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத் தில் ரூ. 13·74 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## (vi) கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல்.

கல்லூரிகளில் படித்துத் தேர்வில் வெற்றி பெறாத மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை பயனின்றி வீணாவதைத் தடுக்கவும் கல்லூரிகளில் படிக்கும் அரிசன மாணவர்களும் பழங்குடி மாணவர் களும் கல்லூரி நிலையில் உயர்ந்த கல்வித் தரத்தை அடைவதற்கு உதவி செய்வதற்காகவும் கல்லூரி நேரங்களுக்குப் பின்னர் அவர்களுக்குத் தனியாகக் கல்லூரிப் பாடங்களைக் கற்பிப்பதற்காக ஆறு கல்வி கற்பிக்கும் நிலையங்களை ஏற்படுத்த அரசாங்கம் கருதியுள்ளது. 1969–70-ம் ஆண்டி லிருந்து செயல்படுத்தப்படவிருக்கும் இப் புதிய திட்டத்திற்காக ரூ. 0·43 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(vii) மருத்துவ வசதி.

அரிசன நலத்துறை நடத்தும் பள்ளிகளில் படிக்கும் அரிசன மாண வர்கள், பழங்குடி மாணவர்கள், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மாணவர்களில் பெரும்பாலானோர் ஊட்டச் சத்தற்றவர்களாக வும் உடல் நலம் குன்றியவர்களாகவும் இருப்பதால் மிக எளிதில் நோய்கள் தொற்றிக் கொள்கின்றன. இந்தச் சிறுவர்களுக்கு அவ் வப்போது மருத்துவச் சோதனை நடத்தி உடல் நலனை நல்ல முறையில் பேணி வருவதற்காக திட்டம் ஒன்றை வகுக்க வேண்டியது அவசிய மெனக் கருதப்பட்டது. அவர்களுடைய உடல் நலனைப் பேணி வருவ தற்காக இந்தப் பள்ளிகளும் மாணவர் இல்லங்களும் அமைந்துள்ள இடங்களிலிருக்கும் மருத்துவ அதிகாரிகளும் அரசாங்க மருத்துவ நிறு வனங்களும் வாரத்திற் கொருமுறை பள்ளிகளுக்கும் மாணவர் இல்லங் களுக்கும் சென்று மாணவர்களின் உடல் நலனைச் சோதிக்கும்படிச் செய்யவும் அவர்களுக்குத் தேவையான மருந்துகளையும் விட்டமின் மாத் திரைகளையும் அவர்களுக்குக் கொடுக்கும்படியும் திட்டமிடப் பட்டுள்ளது. மருத்துவச் சோதனை முடிந்த பிறகு அவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சையளிக்கப்படுகிறதாவென்று அவர்கள் தொடர்ந்து சென்று பார்த்து வருவார்கள். இச் செயற்குறிப்புப் பரிசீலனையில் உள்ளது. 1969-70-ம் ஆண்டில் இதற்கென ரூ. 1·44 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) பொதுச் சுகாதாரம்

(i) வீட்டு மனைகள்.

1960-ம் ஆண்டுக்கு முந்திய தேதியிலிருந்து மறுப்பில்லாத புறம் போக்கு நிலங்களில் வாழ்ந்து வரும் அரிசன மக்களுக்கு அந்த நிலங் களையே மனைகளாகத் தந்துவிட 1967-ம் ஆண்டில் அரசு வாக்களித்தது. இத்தகைய புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்வதை எவரும் ஆட்சே பிக்கவில்லையானால், அவற்றை ஒப்படை செய்யும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால், ஒப்படைதாரர்களுக்கு அவர்களுக்குச் சொந்தமான வீட்டு மனைகள் ஏதும் இருக்கக்கூடாது. ஒப்படை செய்யப்பட்ட நிலத்தின் பரப்பளவு குறிப்பிட்ட அளவைத் தாண்டிவிடக்கூடாது. இந்த நிபந்தனைகளுக்குட் பட்டே அவர்களுக்கு மனைகள் ஒப்படை செய்யப்படும். இது குறித்து விரைவாக நடவடிக்கை எடுக்குமாறும் இத்தகைய மக்களுக்கு பட்டா வழங்கிவிடுமாறும் ஆணையிடப்பட்டுள்ளது.

அரசாங்கப் புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்வதோடு அரிசனங் களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காகத் தனியார் நிலங்களும் கையகப்படுத்தப்படுகின்றன. வீட்டுமனை வசதி செய்து தருவதற்காக 1969-70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் (திட்டத்தில் சேராமல்) ரூ. 10·52 இலட்சமும் (திட்டத்தில் சேரும்) ரூ. 15·00 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மற்றொரு திட்டமும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் படி மனைகள் அரசாங்கச் செலவில் நில மட்டம் வரை மேம்படுத்தப் படுகின்றன. தெரிந்தெடுக்கப்பட்ட புது குடியிருப்புத் தொகுதிக்காக பொது வசதிகளுடன் கூடிய வரைபடம் தயாரிக்கப்படுகிறது. இதே திட்டமிட்டுள்ளவாறு மேம்படுத்தப்படும் ஒவ்வொரு மனைக்கும் வசதிகள் செய்துதர ரூ. 500 செலவாகும் :—

| | ரூ. |
|---|---|
| மண் அடிக்கும் செலவு .. .. | 50 |
| கட்டிடப் பொருள்கள் .. .. | 125 |
| ரொகக மானியம் .. .. .. | 25 |
| வசதிகளின் மதிப்பு .. .. .. | 300 |
| | 500 |

[illegible]

[illegible] மாவட்டத்தில் உள்ள கீழ்நத்தம் கிராமத்திலும் [illegible] மாவட்டத்திலுள்ள பழமாத்தூர் கிராமத்திலும் தெரிந் [illegible] இரண்டு அரிசன பகுதிகளில் இத் திட்டம் முதலில் [illegible] முறையில் செயல்படுத்தப்பட்டது. 1968-69-ம் ஆண்டில் இந்த வேலைத் திட்டம் மதுரை, திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய ஏனைய நான்கு மாவட்டங்களிலும் நீட்டிக்கப்பட்டது. பிற மாவட்டங்களிலும் பகுதிகளிலும் இத் திட்டத்தை விரிவுபடுத்துவது குறித்து அரசாங்கம் ஆலோசிக்கும்.

(ii) துப்புரவு வசதிகள்.

அரிசனக் குடியிருப்புகளுக்கு வீட்டு மனை வசதி செய்து தருவதோடு குடிநீர்க் கிணறுகள், நடைபாதைகள் ஆகிய துப்புரவு வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் ஆகி யோரின் நலனுக்காக குடிநீர்க் கிணறுகள் வெட்டுதல், இணைப்புச்சாலை கள் போடுதல் ஆகிய வசதிகளையும் செய்து தருவதற்கு கிராமப்பணி மானியத்திலிருந்து 20 சத வீதம் மானியத் தொகை ஒதுக்கித் தர வேண்டுமென ஊராட்சி ஒன்றியங்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. பொது மக்களின் பங்கிற்காக 1964-65-ம் ஆண்டிலிருந்து ஒவ்வோராண்டும் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 6·50 லட்சம் ஒதுக்கப்படுகிறது.

அரிசனங்களுக்காக குடிநீர் கிணறுகள் தோண்டுதல், மேல்நிலைத் தொட்டிகள், நடைபாதைகள், சிறு பாலங்கள் போன்ற வசதிகளைச் செய்து தருவதற்காக ரூ. 11·29 லட்சம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. திட்டத்தில் சேராத வேலைத் திட்டங்களுக்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றியப் பணிகளை நிறைவேற்றுவதெற்கென ரூ. 6·50 லட்சம் தனியே ஒதுக்கப்பட்டுள்ளது. அரிசனங்கள், பழங் குடிமக்கள் ஆகியோருக்காக புதிய குடிநீர்க் கிணறுகள் தோண்டுவதற்கு 1969-70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 8·40 லட்சம் நிதி ஒதுக்க வகை செய்யப்பட்டுள்ளது. மலைப் பகுதிகளில் வாழும் பழங்குடி மக்களுக்காக நல்ல முறையில் சாலை வசதிகள், அணுகு சாலைகள், இணைப்புச் சாலைகள் ஆகிய வசதிகளையும் அரிசன நலத்துறை செய்து தருகிறது. இந்த நோக்கத்திற்காக 1969-70-ம் ஆண்டில் ரூ. 1·00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(iii) மின்சார வசதி.

அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி செய்து தருவதால் தமிழ்நாடு அரசு மின்சார வாரியத்திற்கு ஒவ்வோராண்டும் ஏற்படும் இழப்பினை ஈடு செய்வதற்காக 1957-58-லிருந்து தமிழ்நாடு அரசு மின்சார வாரியத்திற்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. 1965-66-லிருந்து இந்த இழப்பீட்டுத் தொகைக்கென ஆண்டுதோறும் ரூ. 3 லட்சம் ஒதுக்கி வைக்கப்படுகிறது. இந்தத் தொகையிலிருந்து எடுத்துப் பழங்குடி மக்கள் காலனிகளுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

(iv) வீட்டு வசதி.

அரிசனங்களுக்கு வீட்டு வசதி செய்து தரவேண்டியது மிக முக்கிய மாகும். முன்னரே விளக்கப்பட்டவாறு அரிசனங்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்காக அரசாங்கம் நிலங்களை கையகப்படுத்தி அவர்களிடம் ஒப்படை செய்கிறது. இவ்வாறு நிலம் பெறுவோரின் பலர் அவர்களுடைய ஏழ்மை நிலை காரணமாக இந்த மனைகளில் வீடுகளைக் கட்டிக்கொள்ள இயலாமல் இருக்கின்றனர். இத்தகையோருக்கு உதவி செய்வதற்காக அரசாங்கம் ஒப்படைத்துள்ள நிலங்களில் குடிசைகள் கட்டிக்கொள்வதற்காக அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 250 கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இத் தொகையில் ரூ. 125 உதவித் தொகையாகவும் ரூ. 125 கடனாகவும் வழங்கப்படும்.

நன்கு மேம்படுத்தப்பட்ட மனைகள் ஒதுக்கப்பட்டுள்ளவர்களுக்குத் தீ பிடிக்காத கூரையுடன் கூடிய தற்காலிக வீடுகளை அரசாங்கச் செலவில் ரூபாய் மூன்று லட்சம் அளவில் கட்டிக் கொடுக்கும் ஒரு சோதனை முறைத் திட்டத்தை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. முதற்கண் இத் திட்டம் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் முன்னோடி முறையில் செயல்படுத்தப் படும்.

மேலும் நிலையான வருவாய் உள்ளவர்களும் தவருது கடனைத் திருப்பித் தரக்கூடிய நிலையுள்ளவர்களுக்கும் வீடுகள் கட்டிக்கொள்வதற் காக அந்தந்த வகைக்கேற்ப ரூ. 2,500, அளவிலும் ரூ. 2,850 அளவிலும் நிதி உதவி செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. இந்திய அரசின் ஒப்புதலைப் பெற்றவுடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

### (v) மருத்துவப் பிரிவுகள்.

மலைப்பாங்கான பகுதிகளிலும் காட்டுப் பகுதிகளிலும் வாழும் பழங் குடி மக்களுக்கு மருத்துவ உதவி செய்யும் பொருட்டு வட ஆர்க்காடு, கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை ஆகிய நான்கு மாவட்டங்கள் ஒவ் வொன்றிலும் சுற்றி இயங்கும் மருத்துவப் பிரிவுகள் மாவட்டத்திற்கு ஒன்று வீதம் நான்கு செயலாற்றி வருகின்றன. பழங்குடி மக்களுக்குக் குறைந்த அளவு மருத்துவ வசதிகளை அளிப்பதற்கு இத் திட்டம் பயன் படுவதாக உள்ளதால் 1969-70-ம் ஆண்டில் மேலும் ஒரு பிரிவை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இப் பிரிவு எந்த மாவட்டத்தில் தொடங்கப்படவேண்டுமென்பது விரைவில் முடிவு செய்யப்படும்.

## 3. பொருளாதார முன்னேற்றம்.

### (i) வேளாண்மை.

வேளாண்மையில் ஈடுபட்டுள்ள அரிசனங்கள், பழங்குடி மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக தகுதியுள்ள ஒவ்வொரு குடும் பத்திற்கும் இரண்டு உழவு மாடுகள் அளிக்கப்படுகின்றன. பாசனக் கிணறுகளை வெட்டுவதற்கும் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. குற்றப் பட்டியிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்களைப் பொறுத்த வரையில் கிணறுகள் வெட்டுவதற்கான உதவி, பாதி மானியம், பாதி கடன் என்ற அடிப்படையில் வழங்கப்படுகின்றது. அரிசனங்களுக்கும், பழங் குடி மக்களுக்கும் அளிக்கப்படும் உதவித் தொகை வீதத்தை உயர்த்து வதையும் பழங்குடி மக்களுக்கான நிதியுதவியை முழுவதும் உதவித் தொகையாக அளிப்பதையும் அரசாங்கம் ஆய்வு செய்து வருகிறது. இத் திட்டத்தின் கீழ் 1963—1969 ஆண்டுகளில் எய்திய சாதனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| வகுப்பினர் பெயர். | வழங்கப்பட்ட ஜோடி உழவு மாடுகள். | வெட்டப்பட்ட பாசனக் கிணறுகள். | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| அரிசனங்கள் .. .. .. | 5,815 | 1,469 | 37·30 |
| பழங்குடி மக்கள் .. .. | 1,314 | 468 | 10·69 |
| குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப் பட்ட பழங்குடி மக்கள். | 2,442 | 957 | 15·62 |

### (ii) கருவிகளும் சாதனங்களும்.

அரிசனங்களிடையே கருமார் தொழில், தச்சுத் தொழில், தையல் தொழில், தோல் பதனிடுதல் முதலிய தொழிலில் ஈடுபட்டுள்ளோர் அவர்கள் தொழிலுக்குத் தேவையான கருவிகளைச் சொந்தமாக வைத்





திராத காரணத்தினால் அத் தொழில்களில் பயிற்சி பெற்றிருந்தும் சொந்தமாகத் தொழில் நடத்த இயலாதுள்ளனர். தங்கள் தொழிலில் அனுபவமும் திறனும் பெற்ற அரிசனத் தொழிலாளர்களும் அக்கருவி களை வாங்கப் பணம் இல்லாதவர்களாயிருக்கின்றனர். இவர்களுக்கு கருவிகளும், சாதனங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின் மூலம் அவர்கள் தாங்களே சொந்தமாகத் தொழில் நடத்தி வருவாய் ஈட்ட முடியும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே ரூ. 7·29 லட்சம் மதிப்புள்ள கருவிகளும் சாதனங்களும் 5,976 பேர்களுக்கு வழங்கப்பட்டன. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இத் திட்டத்தின்கீழ் 8,423 பேர்கள் பயனடைந்தனர். 1968-69-ம் ஆண்டிற்கும் 1969-70-ம் ஆண்டிற்கும் ஒதுக்கப்பட்ட தொகை முறையே ரூ. 3·75 லட்ச மும், ரூ. 2·00 லட்சமும் ஆகும். நடப்பாண்டிலிருந்து இதனைப் புதிய திட்ட மாக, பழங்குடி மக்களுக்கும் நீடிக்க கருதப்பட்டுள்ளது. இந்நோக்கத் திற்காக ரூ. 20,000 ஒதுக்கப்பட்டுள்ளது. 1969-70-ம் ஆண்டில் இத் தொகையை ரூ. 50,000 ஆக உயர்த்தக் கருதப்பட்டுள்ளது.

பட்டு 1966-67-ம் ஆண்டு முதல் சென்னை மாநகரம் தவிர, ஏனைய மாவட் அரச ...ங்க ...ள் ஒவ்வொன்றிலும், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த 60 சலவைத் ...ாளர்களுக்கு, துணி தேய்க்கும் பெட்டிகளும், வெள்ளாவி அடுப்பு 60 முடி திருத்துவோருக்கு அவர் தம் தொழிலுக்கேற்ற கருவி ...வழங்கப்பட்டு வருகின்றன. இந் நோக்கத்திற்காக 1969-70 ...லவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 1·43

(அ) அரி...

வேலைக்கு எ...

பேட்டி கானு...

பதில் எழுதுவ...

### (iii) கூட்டுறவுச் சங்கங்கள்.

அரசுப் பணியாளங்கள், பழங்குடி மக்கள், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப் விழையும் மாண...னர் ஆகியோருக்காக தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் கோவை, திருச்சி வருகின்றன. அவற்றை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பும் உள்ள ...யுள்ளவிடங்களில் புதிய சங்கங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. நிர்வாக வசதிக்காக, இந்தச் சங்கங்கள் கூட்டுறவுத்துறை, தொழில்-வணி ... துறை, தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் ஆகியவற்றின் ...றுப்பில் உள்ளன. அரிசன நலத்துறை இந்தத் துறைகளுக்குத் இத் ...வயான நிதி வசதியை அளிக்கின்றது. அத்தகைய சங்கங்களின் பட்டி... I-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) அரிசனங்கள் தங்களுக்குள் பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களை இந்தி...மத்துக்கொள்ள அவர்களுக்கு ஊக்கமளிக்கப்படுகிறது. இத்தகைய ப...ங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகின்றது. துணைத் தொழில் ஒன்றை அவர்கள் மேற்கொள்ள இயலவேண்டுமென்பதே இதன் நோக்கமாகும். 1967-68 வரை 272 சங்கங்கள் தொடங்கப்பட்டன. அரிசனங்களின் நலனுக் காக 1966-67, 1967-68, 1968-69-ம் ஆண்டுகளில் நிறுவப்பட்ட பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியல் II-வது இணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளது. இந்தச் சங்கங்கள் பால் உற்பத்தி-கால்நடை மேம்பாட்டு ஆணையரால் நிர்வகிக்கப்படுகின்றன. 1968-69-ல் 37 சங்கங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1969-70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் புதிய சங்கங்களைத் தொடங்குவதற்காக ரூ. 4·00 இலட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

(இ) மாவட்டங்களில் பேருந்துகள் விடுவதற்காக போக்குவரத்துக் கூட் டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தவும் அரிசனங்களுக்கு ஊக்கமளிக்கப்படுகின் றது. அத்தகைய சங்கம் ஒன்று கோவை மாவட்டம் ஈரோட்டில் இயங்கி வருகிறது.

(ஈ) பழங்குடி மக்கள் காட்டுப் பகுதிகளில் வாழ்வதால் அவர்கள் காட்டுக் பொருள்கள், உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றைப் பயன் படுத்துவதன் மூலம் கிடைக்கும் வருவாயைத் சார்ந்திருக்க வேண்டி யுள்ளது. தனிப்பட்ட வணிகர்கள் அவற்றைக் கொண்டு செல்வதைத் தடுப்பதற்கும், இப்பொருள்களுக்கு தகுந்த விற்பனை வசதியையும் நல்ல மதிப்பையும் தேடுவதற்கும் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவுச்

கடன் வழங்கு சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பழங்குடி மக்களின் நலனுக்காக காடுகள் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன. காடுகளில் கிடைக்கக்கூடிய சிறு பொருள்களைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு இச்சங்கங்களுக்கு ஒப்பந்த அடிப்படை யில் உரிமையளிக்கப்படுகிறது. இந்த ஒப்பந்தங்கள் ஏலத்தில் விடப்படாமல் கடந்த சில ஆண்டுகளில் சராசரியாகக் கிடைத்த வருவாயின் அடிப்படையி லேயே வழங்கப்படுகின்றன. தற்போது பழங்குடி மக்களின் நலனுக்காக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நான்கும், காட்டுத் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆறும், விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏழும், செயல்படுகின்றன. அவை கோயம்புத்தூர், சேலம், நீலகிரி, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் உள்ளன. இவற்றிற்கு நிர்வாக உதவி அல்லது ஏனையவற்றின் மூலம் நிதி உதவி அளிப்பதற்காக 1969–70-ம் ஆண்டிற் கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள அரிசனங்களின் நலனுக்காக குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதற்கான புதிய திட்டங்கள் வகுக் பட்டுள்ளன. இந்த நோக்கத்திற்காக 1969–70-ம் ஆண்டு வரவு-செ திட்ட மதிப்பீட்டில் ரூ. 2 இலட்சம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(உ) நிலக் குடியேற்றம் பயிரிடத்தக்க அரசாங்கப் புறம்போக்கு நிலக்குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற றில் வேளாண்மைப் பணிகள் கூட்டுறவு அடிப்படையில் நடைபெற வேளாண்மை வேலைகளை மேற்கொள்ளவும் நிலங்களைப் பயிரிடவு தின் கீழ்க் கொண்டுவரவும் ஏற்பளிக்கப்பட்ட மாதிரியில் இச்சா கடனாகவும், உதவித் தொகையாகவும் நிதி உதவி நீடிக் தற்போது 58 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்கள் குறித்த விவரங் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. 1968–69, 1969–70-ம் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இதற்காக வகை செய்துள்ள நிதி ஒதுக்கம் முறையே ரூ. 1·00 இலட்சமும், ரூ. 0·92 இலட்சமுமாகும். இந்தச் சங்கங்களுக்கு ஊக்கமளிப்பதற்காக இதன் உறுப்பினர்கள் நிலங்களை பல ஆண்டுகளில் பண்படுத்துவதை அனுமதிப்பதற்குப் பதிலாக நிலங்களை அரசாங்கச் செலவில் பண்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டவர் தங்களுடைய வசதிக்கேற்ப கிணறுகள் வெ அனுமதிப்பதற்குப் பதிலாக, அரசாங்கமே கிணறுகள் வெட்டித் திட்டமிடப்பட்டுள்ளது.

### (iv) பயிற்சி-உற்பத்தி-பணி நிலையங்கள்.

பின்தங்கிய வகுப்பினரின் பொருளாதார நிலைமையையும், வேலை வாய்ப்புக்களையும் மேம்படுத்துவதற்காக வகுக்கப்பட்ட நடவடிக்கைகளில் பயிற்சி-உற்பத்தி நிலையங்களை நிறுவுவது ஒன்றாகும். அத்தகைய உற்பத்தி நிலையங்களும், பணி நிலையங்களும், அரிசனங்கள், பழங்குடி மக்கள் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினருக்காக பணியாற்றி வருகின்றன. உடனடியாக விற்பனையாகக் கூடிய பொருள்கள் இந்த நிலையங்களில் உற்பத்தி செய்யப்படவேண்டும் என்று அரசாங்கம் கட்டளைகள் பிறப்பித்துள்ளது. ஏற்கனவே தொடங்கப்பட்ட நிலையங் களைப் பேணி வருவதுடன், புதிய நிலையங்கள் திறக்கக்கூடிய வாய்ப்புள்ள இடங்களில் இந் நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அரிசனநலத்துறை நிதி உதவி அளிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், பயிற்சி-உற்பத்தி நிலையங்கள், உற்பத்திப் பிரிவுகள் ஆகியவற்றின் பட்டியல் I-வது இணைப் பில் கொடுக்கப்பட்டுள்ளன.

பயிற்சி உற்பத்தி நிலையங்களுக்கும், பணி நிலையங்களுக்கும் உதவி அளிப்பதற்காக 1969–70-ம் ஆண்டில் ரூ. 2·50 இலட்சம் ஒதுக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது.



### (v) தொழில் கடன்கள்.

அரிசனங்கள் சொந்தமாக சிறு தொழில்களான காலணி தயாரிப்பு மோட்டார் கம்மியர் தொழில், தகர வேலைக் கடை, தூவு முறையில் வண்ணம் தீட்டுதல், அச்சகம், உணவகங்கள், தேநீர் விடுதிகள் நடத்துதல் ஆகியவற்றில் திறமையும், அனுபவமும் உள்ளவர் அவற்றில் ஈடுபட்டுத் தங்கள் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்வதற்காக அவர் களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டத்திற்கு அரசு ஏற்பளித் துள்ளது. இத்திட்டம் 1968–69-ம் ஆண்டு முதல் நிறைவேற்றப்பட்டு வரு கின்றது. குறிப்பிட்ட 18 தொழில்களில் திறமையும் 3 ஆண்டு அனுபவமும் உள்ள அரிசனங்கள், சமமான 100 திங்கள் தவணைகளில் திருப்பி அளிக்கக்கூடிய வட்டியில்லாக் கடன்களைப் பெறத் தகுதியுள்ள வர்களாவர். தொழிலின் தன்மை, அதற்கு உள்ள தேவை ஆகிய வற்றைப் பொறுத்து, ரூ. 5,000 என்ற உச்ச வரம்பு வரையில் கடன்கள் வழங்கப்படும். 1968–69ம் ஆண்டில் இதற்கென ரூபாய் ஒரு லட்சம் ஒதுக்கப் பட்டது. 1969–70-ம் ஆண்டில் ரூபாய் இரண்டு லட்சம் ஒதுக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இத்திட்டத்தைப் பழங்குடி மக்களுக்கு நீடிப்பது குறித்தும் அரசு கருதிப் பார்க்கும்.

### (vi) வேலை வாய்ப்பும், பயிற்சியும்.

(அ) அரிசன மாணவர்களுக்கும், பழங்குடி மாணவர்களுக்கும் வேலைக்கு எப்படி விண்ணப்பித்துக்கொள்வது, வேலைக்காக அதிகாரிகளைப் பேட்டி காணும்போது எப்படி விடையளிப்பது, தேர்வுகளில் எப்படிப் பதில் எழுதுவது என்பன குறித்து நன்கு தெரிவதில்லை. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் நடத்தும் போட்டித் தேர்வுகளை எழுத விழையும் மாணவர்களுக்கு உண்டி, உறைவிட வசதிகளுடன், சென்னை கோவை, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும், ஒரு நிலையம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை, ஒவ்வொரு தொகுதி யிலும், 100 பயிற்சி பெறுபவர்கள் கொண்ட இரண்டு தொகுதிகளுக்குப் பயிற்சியளிக்கும் வசதியுடன் நான்கு நிலையங்களிலும் திறம்படவும், வெற்றிகரமாகவும், செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்யப்படுகிறது. இதற்கென 1969–70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப் பீட்டில் ரூ. 2·37 இலட்சம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) **தேர்வுக்கு முந்திய பயிற்சி நிலையம்.**—இந்திய காவல்துறைப் பணி, இந்திய நிர்வாகப் பணி, இந்திய வெளிநாட்டுப் பணி ஆகிய அனைத்திந்தியப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக மத்திய அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் நடத்தும் தேர்வுகளை எழுதுவதற்கு அரிசனங்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் பயிற்சியளிப்பதற்காக, தேர்வுக்கு முந்திய பயிற்சி நிலையம் ஒன்று சென்னையில் நடத்தப்படுகின்றது. இந்திய அரசின் முழு உதவியுடன் இது செயல்படுகின்றது.

நாடு முழுவதிலுமுள்ள மாணவர்கள் இந்த நிலையத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். உண்டுறை வசதிகள் அளிப்பதுடன், இவர்களுக்குச் சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்த நிலையத்தில் 60 மாணவர் களைச் சேர்த்துக்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்திற் காகக் கட்டடம் ஒன்று கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 1969–70 திட்ட மதிப்பீட்டில் ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) **தொழிற் பயிற்சி.**—1966–67 முதல் சென்னை, வேலை வாய்ப்புப் பயிற்சித் துறை இயக்குநர் அரிசன மாணவர்கள் பழங்குடி மாணவர்கள் அனைவருக்கும் முழு அளவில் படிப்பு உதவிச் சம்பளங்கள் வழங்குகிறார். அதற்காகும் செலவை அரிசன நலத்துறை ஈடு செய்கிறது. இதற்கென 1966–67-ல் ரூ. 2.51 இலட்சம் செலவிடப்பட்டது. 1967–68-ல் ரூ. 5.72 இலட்சம் செலவிடப்பட்டது. 1968–69-ம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ. 7.73 இலட்சமும், 1969–70 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 9.30 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சிபெறும் அரிசன, பழங்குடி மக்களுக்கு உண்டி-உறைவிட வசதிகள செய்துகொடுப்பதற்காக, மாணவர் இல்லங்கள் தொடங்கப்பட்டுத் தேவைக்கேற்ப நடத்தப்பட்டு வருகின்றன. இதுபோனற 7 மாணவர் இல்லங்கள் தற்போது அரிசன நலத்துறையின ரால் நடத்தப்படுகின்றன.

(ஈ) **முன்னோடிப் பயிற்சி நிலையங்கள்.**—இது 1969-70-ல நிறை வேற்றுவதற்காகத் திட்டமிட்டுள்ள புதியதொரு திட்டமாகும். பள்ளி இறுதிப் படிப்பில் அதிக சதவீதப் மதிப்பெண் பெறும் அரிசன மாணவர் களுக்கு ஒவ்வோர் ஆண்டும் தங்கப் பதக்கம் வழங்கப்படுகிறது. ஆனால், கல்லூரிகளிலும், வேறு நிலையங்களிலும் அவர்கள் தொடர்ந்து படிப்ப தற்கோ அல்லது பொருத்தமான வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கோ, எந்தத் திட்டமும் இல்லை. எல்லா மாவட்டங்களிலிருந்தும் புத்திக்கூர்மை யான மாணவர்களைச் சேர்த்துக்கொண்டு (அவர்களது பெற்றோர்களின் பொருளாதார நிலையால் அவர்களுக்கு மேற்படிப்பு படிப்பதற்கு வசதி யில்லாததால்) அவர்களுக்கு மாநகரக் கல்லூரிகளில் இடம் வாங்கிக் கொடுப்பதற்கும், இலவச உண்டி-உறைவிடப் பயிற்சி வசதிகள் செய்து கொடுப்பதற்கும் என்றே இந்த முன்னோடிப் பயிற்சி நிலையங்கள் நிறுவப் படும். இந்த நிலையங்களில் சேர்த்துக்கொள்ளப்படுகிறவர்களுக்குக் கல்வி, நல்ல பழக்கங்கள், பண்புகள் ஆகியவற்றைப் போதிக்கச் சிறப்பாக நாட்டம் செலுத்தப்படும். விடுமுறைக் காலங்களிலும், அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கிடைக்கும் வரையிலும் அவர்கள் இந்நிலையத்தில் தங்குவதற்கு வசதியளிக்கப்படும். இந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவிப் பணம் வழங்கப்படுவதால், அது தவிர பிற செலவுகளுக்கே இத்திட்டத்தின்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தைத் தொடங்கும் வகையில் 1969-70-ல் ஆண்களுக்கு ஒரு நிலையத்தைத் தொடங்க திட்டமிடப் பட்டுள்ளது. பெண்களுக்கான நிலையம் ஒன்றும் பின்னர் தொடங்கப் படும். இத்திட்டங்களுக்காக 1969-70 திட்ட மதிப்பீட்டில் ரூ. 0.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 4. செய்திப் பரப்பு.

### தீண்டாமை ஒழிப்பு இயக்கம்.

தீண்டாமையை அறவே ஒழிப்பதற்காக 1955-ம் ஆண்டு தீண்டாமை (குற்றங்கள்) சட்டம் மும்முரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மக்க ளிடையே மன மாற்றத்தை ஏற்படுத்த விளம்பரமும் செய்திப் பரப்பும் தேவையாகும்.

தீண்டாமை ஒழிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, சென்னை மாவட்ட நல அதிகாரி தவிர, மற்றெல்லா மாவட்ட அதிகாரிகளுக்கும் தகவல் பரப்புப் பணிகளுக்காக ரூ. 16,000 செலவில் 'டேப் ரிகார்டர்கள்' வழங்கப் படுகின்றன.

" தீண்டாமை " என்னும் சமூகப் பகையை அறவே ஒழிக்க அரசு பாடுபட்டு வருகிறது. அதற்காக மேற்கொள்ளப்படும் எல்லா நடவடிக்கை களுக்கும் ஊக்கம் அளித்தும் வருகிறது. இவற்றுள் ஒன்று, கலப்புத் திருமணம் செய்துகொள்ளுதலாகும். இவ்வாறு கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்கள் பொதுமக்களிடையே பாராட்டுதலையும், போற்றுதலை யும் பெறவேண்டும் என்று அரசு விரும்புகிறது. அதற்கேற்பக் கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்குத் தங்கப் பதக்கங்கள் வழங்கும் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளனர். இத்திட்டம் தீண்டாமையைப் படிப்படியாக ஒழித்து, சாதி சமயமற்ற ஒரு சமூகத்தைத் தோற்றுவிக்கும். நடப்பாண்டில் கலப்புத் திருமணம் செய்துகொண்ட 48 தம்பதிகளுக்கு ஒரு சவரன் மதிப்புள்ள தங்கப் பதக்கம் வழங்கப் பட்டது. இத்திட்டத்திற்காக நடப்பு நிதி ஆண்டில் ரூ. 10,300 செலவிடப் பட்டுள்ளது. 1969-70-க்காக ரூ. 0.35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



இம் மாநிலத்தில் நடைபெறும் பல்வேறு பொருட்காட்சிகளில் அரிசன நலத்துறையினர் பங்குகொண்டு, பின்தங்கிய வகுப்பினரின் முன்னேற்றத் துக்காக இந்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையும், திட்டங் களையும் அப் பொருட்காட்சி சாலைகளில் காண்பிக்கவும் அவற்றைப்பற்றிய வெளியீடுகளை வெளியிட்டும் வருகின்றனர்.

தீண்டாமையை ஒழிக்கும் பணியில் கிராம மக்களிடையே போட்டி மனப்பான்மையை ஏற்படுத்துவதற்காக இரண்டு பரிசுகள் வழங்குவதற்கு 1968-69 திருத்த மதிப்பீட்டில் ரூ. 19,500 ஒதுக்கப்பட்டுள்ளது. முதற் பரிசின் மதிப்பு ரூ. 1,000-ம், இரண்டாம் பரிசின் மதிப்பு ரூ. 500-ம் ஆகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை மாநகர் நீங்கலாக) தீண்டாமை ஒழிப்புப் பணியை மிகச் சிறந்த முறையில் செயல்படுத்தி யுள்ள இரண்டு கிராமங்களுக்கு இப்பரிசுகள் வழங்கப்படும்.

ஒவ்வொரு வட்டத்தில் மிகத் தூய நிலையில் வைக்கப்பட்டுள்ள அரிசனக் குடியிருப்புக்களுக்குப் பரிசுகள் வழங்கும் திட்டத்தையும் அரசு தொடங்கியுள்ளது. ரூ. 300 செலவில் ஒரு வானொலிப் பெட்டி அல்லது 5 அம்பர் சர்க்காக்கள் பரிசுப் பொருளாக வழங்கப்படுகின்றன. 1969-70-ல் இதற்காக ரூ. 25,500 செலவிடப்படும்.

### தீண்டாமை ஒழிப்பு நாள்-வாரம்.

தீண்டாமையை ஒழிக்கும் திட்டத்தின் பகுதியாக, நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள கிராமப்புறங்களிலும் நகர்ப் பகுதிகளிலும் ஒவ்வொரு திங்களும் 30-ந் தேதியன்றும், பிப்ரவரித் திங்களில்மட்டும் கடைசித் தேதி யன்றும் " தீண்டாமை ஒழிப்பு நாள் " கொண்டாடப்படுகிறது. " தீண் டாமை ஒழிப்பு வாரம் " ஆண்டுதோறும் மாநிலம் முழுவதிலும் சனவரித் திங்களில் 24-ந் தேதிமுதல் 30-ந் தேதிவரை கொண்டாடப்படுகிறது. இதற்காக ஆண்டொன்றுக்கு சென்னை மாநகருக்கு 2,000 ரூபாயும், மற்ற மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 1,000 வீதமும் செலவிட நிதி ஒதுக்கப்படுகிறது.

### சமுதாய நிலையங்கள்.

**சமுதாய நிலையங்கள்.**—இருபத்தைந்து சமுதாய நிலையங்கள் மாவட்டங் களிலுள்ள கிராமப் புறங்களில் பணியாற்றி வருகின்றன. ஒவ்வொரு நிலையத்திலும் ஆண் சமூக ஊழியர் ஒருவரும், பெண் சமூக ஊழியர் ஒருவரும், மகளிர் உதவி ஆள் ஒருவரும் பணியாற்றி வருகின்றனர். அவர்கள் தங்களது தலைமை நிலையத்திலிருந்து 5 முதல் 8 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு அமைந்துள்ளள்ள கிராமங்களில் மும்முரமாகச் செய்திப் பரப்பு வேலைகளைச் செய்து வருகின்றனர். அத்துடன், அரிசன மக்கள் தங்கள் சுற்றுப்புறங்களைத் துப்புரவான நிலையில் வைத்துக்கொள்ளவும், அவர்களுக்கு அறிவு புகட்டி வருகின்றனர். இந்த நிலையத்திற்கு விளையாட்டுக் கருவிகள், முதலுதவிச் சாதனங்கள், ஆகியவையும் அளிக்கப் பட்டுள்ளன. இந்த நிலையங்களில் நூலகங்களும் ஏற்படுத்தப்பட்டுச் செய லாற்றி வருகின்றன. கலப்பு உயிர்ச் சத்து மாத்திரைகளும் வழங்கப் படுகின்றன. ஒவ்வொரு சமுதாய நிலையத்திலும் ஏழைக் குழந்தை களுக்கு நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. இந்நிலையங்களில் நாடகங் கள், பொதுக் கூட்டங்கள் முதலிய நிகழ்ச்சிகளில் சாதி ஹிந்துக்களும், அரிசனங்களும், ஒருவரோடொருவர் கூடிக் கலந்து பழகுகின்றனர். இந்த நிலையங்களைப் பேணி வருவதற்காக 1968-69-ஆம் ஆண்டிற்கான திருதத மதிப்பீட்டில் ரூ. 1·65 இலட்சமும், 1969-70-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1·60 இலட்சமும் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

## 5. துப்புரவுப் பணியாளர் நலன்.

உள்ளாட்சி மன்றங்களில் பணி புரிந்துவரும் துப்புரவுத் தொழிலாளர் களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, உள்ளாட்சி மன்றங் களுக்கும், நகரசபைகளுக்கும், மலத்தை எடுத்துச் செல்வதற்குத் தட்டுக்

களும், காரண்டிகளும், தள்ளு வண்டிகளும் வழங்கப்படுகின்றன. தள்ளு
வண்டிக்காக 1969-70 திட்ட மதிப்பீட்டில் ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கப்
பட்டுள்ளது.

இத் துப்புரவுத் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,500 செலவில்
வீடுகள் கட்டப்படுகின்றன. இச் செலவில் பாதித் தொகை உள்ளாட்சி
மன்றத்திற்கு மானியமாக வழங்கப்படுகிறது. அவசியமாயின் இரண்டா
வது பாதியும் கடனாக வழங்கப்படுகிறது. உதவி தொகையைமட்டும்
அரிசன நலத்துறை வழங்குகிறது. 1969-70 திட்ட மதிப்பீட்டில் இதற்
காக ரூ. 9 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி மன்றங்களில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு
உதவி புரிவதற்காகக் கூட்டுறவுத் துறையின் மூலம், கூட்டுறவுக் கடன்
வழங்கு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. துப்புரவுத் தொழிலாளர்களுக்கு
கடன் உதவி வழங்குவோர் அதிக வட்டிவீதம் வசூலிக்கின்றனர்.
இதனைத் தடுக்கவே இச்சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. இச்சங்கங்களுக்கு
அரசிடமிருந்து நிதி உதவி கிடைக்கிறது.

### 6. பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்களை நிறுவுதலும், நிர்வகித்தலும்.

சேலம் மாவட்டத்தில் உள்ள ஏர்க்காட்டில் ஒன்றும், கொல்லிமலையில்
ஒன்றுமாக இரண்டு வளர்ச்சி வட்டாரங்கள் செயல்பட்டு வருகின்றன.
மேற்குறிப்பிட்ட வளர்ச்சி வட்டாரங்களில் பேணி வருவதற்காக 1969-70
வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 3 இலட்சத்திற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

### 7. திட்டங்களின் முன்னேற்றத்தை மதிப்பிடுதல்.

பல்வேறு திட்டங்களின் முன்னேற்றத்தையும், சாதனைகளையும் கண்
டறிவதற்காகவும், திட்டங்களை நிறைவேற்றத் தடைகள் ஏதேனுமிருப்பின்
அவற்றை நீக்குவதற்கும், புதிய திட்டங்கள் வகுப்பதற்கும், புதிய வேலைத்
திட்டங்களை மேற்கொள்ளுவதற்குமான ஆலோசனை வழங்குவதற்கு அரிசன
நலத்துறை அமைச்சரின் தலைமையில், கூட்டுறவு, தொழில்-வாணிபம்,
மகளிர் நலம், பொதுப்பணி, காடுகள், பால் உற்பத்தி-கால்நடை மேம்
பாடு ஆகிய துறைகளின் தலைவர்களும், கதர்-கிராமத் தொழில் வாரியத்
தின் தலைவர் ஆகியோரும் அடங்கிய மாநாடு குறிப்பிட்ட காலங்களில்
கூட்டப்படுகிறது. அரிசன நலத்துறை இயக்குநரும், தனது சுற்றுப்
பயணத்தின்போது தொடர்புடைய மாவட்ட அதிகாரிகளுடன் இதுபோன்ற
கூட்டங்கள் நடத்துகிறார்.

### 8. ஆலோசனைக் குழுக்கள்.

மாநில அளவில், அவரவர் சமுதாய நலத்திற்கும் முன்னேற்றத்திற்கு
மான ஆலோசனைகளை அரசிற்கு வழங்குவதற்காக (i) மாநில அரிசன
நலக் குழு, (ii) தமிழ்நாடு பழங்குடி மக்கள் ஆலோசனை மன்றம்,
(iii) மாநில பின்தங்கிய வகுப்பினர் ஆலோசனைக் குழு ஆகியவை செயல்
பட்டு வருகின்றன. இக் குழுக்கள் நான்கு திங்களுக்கு ஒரு முறை கூடிப்
பல்வேறு சிக்கல்களைப்பற்றி ஆராய்ந்து அவர்களுடைய கருத்துக்களையும்
ஆலோசனைகளையும் அரசின் ஆய்விற்கு அனுப்புகின்றன. அவரவர்கள்
மேற்கொண்ட பணிகளின் முன்னேற்றத்தைப்பற்றி ஆராயவும் திட்டங்
களைச் செயல்படுத்தும் விரைவினை மேம்படுத்துவதற்காகவும் மாவட்ட நல
அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டமும் நடைபெறுகிறது. மாநில அரிசன
நலக் குழுக்களின் ஆலோசனைகளில் கலந்துகொண்டு அவர்களின் அறி
வுரையைப் பெறும் வகையில் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை என்றிருந்த
மாவட்ட நல அதிகாரிகளின் கூட்டமும், நான்கு திங்களுக்கு ஒரு முறை
யாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாவட்ட நல அதிகாரிகள் உறுப்
பினர்களின் கருத்துக்களையும், ஆலோசனையும் அறிந்துகொள்ளவும்
அவற்றை எதிர்காலத்தில் பயன்படுத்தவும், அக்கூட்டங்களில் தீர்மானிக்கப்
பட்ட முடிவுகளை விரைந்து செயல்படுத்தவும் இவை பயன்படும்.



மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில், மாவட்ட அரிசன நலக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் கள்ளர்கள் ஆலோசனைக் குழு ஒன்றும் செயல்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில், மாவட்டப் பழங்குடி மக்கள் ஆலோசனைக் குழு ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

அரசாங்கத் தலைமைச் செயலாளரைத் தலைவராகவும், முதுநிலை அதிகாரிகள் 8 பேரையும், தமிழ்நாடு பொதுப்பணியாளர் தேர்வுக் கழகத்தின் தலைவரையும் உறுப்பினர்களாகக்கொண்ட "உயர்மட்ட அதிகாரக் குழு" ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இக்குழு குறிப்பிட்ட காலங்களில் கூடி அரிசனங்கள், பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் பல்வேறு அரசுத் துறைகளில் வேலை வாய்ப்பு பெறுவதைப்பற்றி நன்கு ஆராய்ந்து வருகிறது. இப் பிரிவினருக்கென ஒதுக்கப்படும் வேலை வாய்ப்பு சத வீதத்தை உயர்த்தவும், அதற்கேற்ப அவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கவும் அரசுக்கு இக்குழு பரிந்துரைத்துள்ளது. இக் குழுக்களின் பரிவுரைகளையும் ஆலோசனைகளையும், அரசு ஆராய்ந்தறிந்து அதற்கேற்ப ஆணைகளையும் பிறப்பிக்கிறது.

### 9. நிதி வாயில்கள்.

1969-70 ஆண்டு "திட்ட" வேலைகளுக்காக இந்திய அரசினால் அளிக்கப்படும் உதவியில் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்காகும் செலவுகளுக்காக மாநில அரசு வேண்டிய அளவு நிதி ஒதுக்குவதும் இயலாததாகும். இத்துணை இடர்பாடுகளுடனும், இம் மாநிலத்தின் நிதி நிலை முற்றுக்குறையாக இருப்பினும், பல திட்டங்களுக்கும், நடப்பாண்டிலும், பின்னர் வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து நிறைவேற்றப் படவிருக்கிற புதிய வேலைத் திட்டங்களுக்கும் 1969-70-ம் ஆண்டுத் திட்ட மதிப்பீட்டில் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய வகுப்பினர் நலனுக்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக இந்திய அரசின் கூடுதல் உதவியைப் பெற எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இதைத் தவிர, மாநில நிதியிலிருந்தும் நிதி ஒதுக்கம் செய்யப்படும்.

ஒவ்வோர் ஆண்டும் பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்யப்படுவதை IV-வது இணைப்பிலிருந்து தெரிந்துகொள்ளலாம். நிதி நிலை குறைந்திருப்பினும் மாறுபட்ட பருவ நிலைகள் இருப்பினும் புதிய திட்டங்கள் பல வகுக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. இவற்றிலிருந்து பின்தங்கிய வகுப்பினர் நலனிலும் முன்னேற்றத்திலும் அரசு கொண்டுள்ள தனிப்பட்ட அக்கறையும் ஊக்கமும் நன்கு விளங்குகிறது.

### 10. நிர்வாகம்.

தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறையினரால் கவனிக்கப்பட்டு வரும் பல்வேறு பின்தங்கிய வகுப்பினர் நலத் திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒருங்கிணைந்த நிறுவனம் ஒன்றை நிறுவ அரசு ஆலோசித்தது. அகில இந்திய அளவிலும் சமூக நல அமைச்சகம் ஒன்று தேவையென்று இடைவிடாமல் கேட்கப்பட்டு வந்துள்ளது. சமூக நலப் பணிகளை ஒருமுகப்படுத்தவும், சமூக நலப் பணிக்கு ஊக்கமளிக்கவும் அரசு தலைமைச் செயலகத்தில் சமூக நலத் துறை ஒன்றை அமைத்துள்ளது.

மாநில நிலையில் அரிசன நலப் பணிகள் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரால் நிர்வகிக்கப்படுகின்றன. அவருக்கு உதவி செய்யும்பொருட்டு, மாவட்ட வருவாய் அதிகாரி தரத்தில் தற்போது இணை இயக்குநராக ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் தரத்தில்

நேர்முக உதவியாளர் ஒருவரும், இந்திய அரசு படிப்புதவித் தொகை வழங்கும் வேலையைக் கவனித்துக்கொள்வதற்காகச் சிறப்பு அதிகாரி ஒருவரும், முதுநிலைக் கணக்கு அதிகாரி ஒருவர், இளநிலைக் கணக்கு அதிகாரி ஆகியோரும் இவருக்கு உதவி செய்வதற்காக நியமிக்கப் பட்டுள்ளனர்.

மாவட்டங்களில், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் தரத்திலுள்ள மாவட்ட நல அதிகாரிகளால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் மேற்பார்வையின்கீழ் செயல் படுகின்றனர். மதுரை மாவட்டத்தில் கள்ளர்களை நல்வழிப்படுத்து வதற்கான திட்டப் பணியை மாவட்ட ஆட்சிச் சிறப்புத் துணைத் தலைவர் கவனித்து வருகிறார்.

**சத்தியவாணிமுத்து,**
சுகாதார, அரிசன நல அமைச்சர்.

## பிற்சேர்க்கை I.

**1966-67-ம் ஆண்டிலும், 1967-68-ம் ஆண்டிலும், 1968-69-ம் ஆண்டிலும் உதவி அளிக்கப்பட்ட சங்கங்கள்—நிலையங்கள்.**

### அரிசனங்கள்.

### 1966-67.

#### மகளிர் நலத்துறை.

1. விற்பனை நிலையம், உதகை.

2. திருநெல்வேலி மாவட்டம், கணேசபுரத்திலுள்ள தையல் வேலைப் பிரிவு.

3. திருநெல்வேலி மாவட்டம், கீழ்க்கடையத்தில் பனை ஓலைப் பொருள் தயாரிப்போர் நிலையம்.

4. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ராஜானூரில் பிரம்புத் தொழில் நிலையம்.

5. மதுரை மாவட்டத்தில் மங்கலக் கொம்பு தயாரிப்புப் பிரிவு.

6. சேலம், பொன்னம்மார்பேட்டையிலுள்ள தையல் வேலை நிலையம்.

#### தொழில்துறை.

7. மதுரை மாவட்டத்திலுள்ள கம்பத்தில் தையல்—பூ வேலைப் பயிற்சி நிலையம்.

8. மதுரை மாவட்டத்திலுள்ள சத்திரப்பட்டியில் பனை ஓலை, மூங்கில் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம்.

9. இராமநாதபுரம் மாவட்டத்தில் விருதுநகரில் தோலினால் செய்யப்பட்ட பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம்.

10. தையல் வேலைப் பயிற்சி நிலையமும், குன்னூர்.

11. நாமக்கல் தோல் தொழில் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.



12. அரசின் செங்கற்சூளை பிரிவு, பரமக்குடி.

13. ஈரோடு தோல் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

14. பெலாக்குப்பத்தில் பாய் நெய்யும் பயிற்சி நிலையம்.

15. கயத்தாறு கூடை முடைவோர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பணிக் களரி கட்டுவதற்காக மானியம்.

16. அருப்புக்கோட்டை மூங்கில் பணியாளர்-தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்காக மானியம்.

17. திருவண்ணாமலை, தோலினால் செய்த பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம்.

18. இருப்பள்ளி பாய் பின்னுவோர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

19. குன்னூர் தோல் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட், குன்னூர்.

20. மேலநீலித்தநல்லூர் கூடை முடைவோர் தொழில் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

21. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மார்த்தாண்டத்தில் தையல் வேலைப் பயிற்சி நிலையம்.

22. குலசேகரப்பட்டினத்தில் பனை ஓலையிலிருந்து பயன்படக்கூடிய சாமான்கள் தயாரிப்பதற்குப் பயிற்சி நிலையம்.

23. வள்ளியூரில் பிரம்புப் பொருட்கள் தயாரிப்பதற்குப் பயிற்சி நிலையம்.

24. திருச்சி தோல் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

25. தண்டரை கிராமத்தில் மர விளையாட்டுக் கருவிகள் தயாரிப்புப் பயிற்சி நிலையம்.

26. சென்னையில் தையற் பயிற்சி நிலையம்.

27. உண்ணியூரில் பாய் நெசவு உற்பத்தி நிலையம்.

28. ஆண்டிக்காட்டில் பனை ஓலைப் பொருட்கள் பயிற்சி நிலையம்.

29. வாணியம்பாடி காலணி தயாரிப்போர் தொழில் கூட்டுறவுச் சங்கம்.

30. திண்டுக்கல் தோல் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

#### கதர் வாரியம்.

31. வீரப்பூர் தோல் பதனிடுவோர் கூட்டுறவுச் சங்கம்.

32. கீழ வீராணம் பனை ஓலைப் பொருள் பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுக் குடிசைத் தொழில்கள் சங்கம், திருநெல்வேலி.

33. ராதாபுரம் சுண்ணாம்புக் காளவாய் பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருநெல்வேலி.

34. கீழ வீராணம், சுண்ணாம்புக் காளவாய் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருநெல்வேலி.

35. ஏருவாடி செங்கற்சூளைப் பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருநெல்வேலி.

36. கிரத்தூரில் சுண்ணாம்புக் கிளிஞ்சல் பணியாளர்கள் கூட்டுறவுத் தொழில் சங்கம், கன்னியாகுமரி.

37. விளானூர் செங்கற்சூளை-ஓடு பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், தஞ்சாவூர்.

[1969 மார்ச் 13

38. துலுக்கங்குளம் செங்கற்சூளைப் பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருநெல்வேலி மாவட்டம்.

39. கரம்பகுடி, எண்ணெய் பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருச்சிராப்பள்ளி.

40. புளியங்குடி செங்கற்சூளைப் பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருச்சிராப்பள்ளி.

41. மணக்கால் அய்யம்பேட்டை செங்கற்சூளை-ஓடு பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுத் தொழில் சங்கம், திருநெல்வேலி.

42. இருப்புளி பாய் நெசவாளர் கூட்டுறவுத் தொழில் சங்கம், சேலம்.

43. இராமநாதபுரம் மேல்ராஜகுலராமன் (கிராமத்தில்) அயன்புரத்தில் சக்கிலிகள் வேலை செய்வதற்குப் பொதுப் பணிக் கூடாரம் ஒன்று கட்டுதல்.

44. அய்யனூர்குளம் செங்கல் தயாரிப்போர் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

45. ஸ்ரீமுஷ்ணம் கைக்குத்தலரிசி பணியாளர்கள் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

46. பெரியநாகலூர் சுண்ணாம்புக் காளவாய்ப் பணியாளர்கள் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

47. செக்கிபாளையம் சுண்ணாம்புக் கல் பணியாளர்கள் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், வட ஆர்க்காடு மாவட்டம்.

48. கத்தாளம்பட்டி கிராம பனை ஓலை குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி மாவட்டம்.

49. தோட்டப்பட்டி தோல் பதனிடுவோர் கூட்டுறவுச் சங்கம், கோயம்புத்தூர்.

50. வளையம்பட்டு தோல் பதனிடும் அரிசனக் கூட்டுறவுச் சங்கம், வட ஆர்க்காடு மாவட்டம்.

51. பெரிய கிருஷ்ணாபுரம் கைக்குத்தலரிசி அரிசனக் (மகளிர்) கூட்டுறவுச் சங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

52. சென்னிபுரம் செங்கற்சூளைப் பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், இராமநாதபுரம் மாவட்டம்.

53. ராஜன்நகர் தோல் பதனிடும் பணி கூட்டுறவுச் சங்கம், கோயம்புத்தூர்.

54. கோயிலூர் கைக்குத்தலரிசி பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுச் சங்கம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

55. நாங்குனேரி செங்கற்சூளைப் பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி.

56. துத்திவிளை செங்கற்சூளை-ஓடு பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுச் சங்கம், கன்னியாகுமரி.

## 1967–68.

### மகளிர் நலத்துறை.

1. விற்பனை நிலையம், ஊட்டி.

2. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கணேசபுரத்தில் தையல் வேலைப் பிரிவு.

3. திருநெல்வேலி மாவட்டத்தில் கீழ்க்கடையத்தில் பனை ஓலைப் பொருள் தயாரிப்போர் நிலையம்.



1969 மார்ச் 13]

4. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ராஜானூரில் பிரம்புத் தொழில் நிலையம்.

5. மதுரை மாவட்டத்தில் மங்கலக் கொம்பு தயாரிப்புப் பிரிவு

6. சேலம், பொன்னம்மாப்பேட்டையிலுள்ள தையல் வேலை நிலையம்

### தொழில் துறை.

7. மதுரை மாவட்டத்தில் உள்ள கம்பத்தில் தையல்-பூ வேலைப் பயிற்சி நிலையம்.

8. மதுரை மாவட்டத்திலுள்ள சத்திரப்பட்டியில் பனை ஓலை-மூங்கில் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம்.

9. இராமநாதபுரம் மாவட்டத்தில் விருதுநகரில் தோலினால் செய்யப்பட்ட பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம்.

10. தையல் வேலைப் பயிற்சி நிலையம், குன்னூர்.

11. நாமக்கல் தோல் தொழில் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

12. அரசின் செங்கற்சூளைப் பிரிவு, பரமக்குடி.

13. ஈரோடு தோல் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

14. பெண்ணாக்குப்பத்தில் பாய் நெய்யும் பயிற்சி நிலையம்.

15. கயத்தாறு கூடை முடைவோர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பணிக்களரி கட்டுவதற்காக மானியம்.

16. அருப்புக்கோட்டை மூங்கில் பணியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்காக மானியம்.

17. திருவண்ணாமலை, தோலினால் செய்த பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம்.

18. இருப்பள்ளி பாய் பின்னுவோர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

19. குன்னூர் தோல் பணியாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட், குன்னூர்.

20. மேலநீலித்தநல்லூர் கூடை முடைவோர் தொழில் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

21. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மார்த்தாண்டத்தில் தையல் வேலைப் பயிற்சி நிலையம்.

22. குலசேகரப்பட்டினத்தில் பனை ஓலையிலிருந்து பயன்படக்கூடிய சாமான்கள் தயாரிப்பதற்குப் பயிற்சி நிலையம்.

23. வள்ளியூரில் பிரம்புப் பொருட்கள் தயாரிப்பதற்குப் பயிற்சி நிலையம்.

24. திருச்சி தோல் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

25. தண்டரை கிராமத்தில் மர விளையாட்டுக் கருவிகள் தயாரிப்புப் பயிற்சி நிலையம்.

26. சென்னையில் தையற் பயிற்சி நிலையம்.

27. உண்ணியூரில் பாய் நெசவு உற்பத்தி நிலையம்.

28. ஆண்டிகாட்டில் பனை ஓலைப் பொருட்கள் பயிற்சி நிலையம்.

29. வாணியம்பாடி காலணி தயாரிப்போர் தொழில் கூட்டுறவுச் சங்கம்.

30. திண்டுக்கல் தோல் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

[1969 மார்ச் 13

**கதர் வாரியம்.**

31. வீரப்பூர் தோல் பதனிடுவோர் கூட்டுறவுச் சங்கம்.

32. கீழ வீராணம் பனை ஓலைப் பொருள் பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுக் குடிசைத் தொழில்கள் சங்கம், திருநெல்வேலி.

33. ராதாபுரம் சுண்ணும்புக் காளவாய் பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருநெல்வேலி.

34. கீழ வீராணம் சுண்ணும்புக் காளவாய் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருநெல்வேலி.

35. ஏருவாடி செங்கற்சூளைப் பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுக்குடிசைத் தொழில் சங்கம், திருநெல்வேலி.

36. கிரத்தூரில் சுண்ணும்புக் கிளிஞ்சல் பணியாளர்கள் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், கன்னியாகுமரி.

37. விளானூர் செங்கற்சூளை-ஓடு பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், தஞ்சாவூர்.

38. துலுக்கங்குளம் செங்கற்சூளைப் பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருநெல்வேலி மாவட்டம்.

39. கரம்பகுடி எண்ணெய் பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருச்சிராப்பள்ளி.

40. புளியங்குடி செங்கற்சூளைப் பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம். திருச்சிராப்பள்ளி.

41. மணக்கால் அய்யாம்பேட்டை செங்கற்சூளை-ஓடு பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுத் தொழிற் சங்கம், திருநெல்வேலி.

42. இருப்புளி பாய் நெசவாளர் கூட்டுறவுத் தொழில் சங்கம், சேலம்.

43. இராமநாதபுரம் மேல்ராஜகுலராமன் (கிராமத்தில்) அயன்புரத்தில் சக்கிலிகள் வேலை செய்வதற்குப் பொதுப்பணிக் கூடாரம் ஒன்று கட்டுதல்.

44. அய்யனூர்குளம் செங்கல் தயாரிப்போர் கூட்டுறவுக்குடிசைத் தொழில் சங்கம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

45. ஸ்ரீமுஷ்ணம் கைக்குத்தலரிசி பணியாளர்கள் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், வட ஆர்க்காடு மாவட்டம்.

46. பெரியநாகலூர் சுண்ணும்புக் காளவாய் பணியாளர்கள் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருச்சி மாவட்டம்.

47. செக்கிபாளையம், சுண்ணும்புக்கல் பணியாளர்கள் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம், வட ஆர்க்காடு மாவட்டம்.

48. கத்தாளம்பட்டி இராம பனை ஓலை குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி மாவட்டம்.

49. தோட்டப்பட்டி தோல் பதனிடுவோர்கூட்டுறவுச் சங்கம்,கோயம்புத்தூர்.

50. வலயம்பட்டு தோல் பதனிடுவோர் அரிசனக் கூட்டுறவுச் சங்கம், வட ஆர்க்காடு மாவட்டம்.

51. பெரிய கிருஷ்ணபுரம் கைக்குத்தலரிசி அரிசன (மகளிர்) கூட்டுறவுச் சங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

52. சென்னிபுரம் செங்கற்சூளைப் பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், இராமநாதபுரம் மாவட்டம்.

53. ராஜேன்நகர் தோல் பதனிடும் பணி கூட்டுறவுச் சங்கம். கோயம் புத்தூர்



1969 மார்ச் 13]

54. கோயிலூரில் கைக்குத்தலரிசி பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுச் சங்கம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

55. நாங்குனேரி செங்கற்சூளைப் பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி.

56. துத்திவிளைப் செங்கற்சூளை-ஓடு பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுச் சங்கம், கன்னியாகுமரி.

57. ஆதியூர், முருகம்பட்டி, தின்னனூர் ஆகிய இடங்களிலுள்ள செங்கற்சூளை-ஓடு பணியாளர்கள் அரிசனக் கூட்டுறவுச் சங்கம், வடஆர்க்காடு மாவட்டம்.

58. ஊராம்பட்டி, செங்கற்சூளைப் பணியாளர்கள் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், இராமநாதபுரம் மாவட்டம்.

59. மண்ணமங்கலம் தோல் பதனிடுவோர் கூட்டுறவுச் சங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

60. பாரதி தோல் பதனிடுவோர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

61. காந்திக்குப்பம் கைக்குத்தலரிசி அரிசனப் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

62. கீழவீராணம் செங்கற்சூளைப் பணியாளர் அரிசனக் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம், திருநெல்வேலி மாவட்டம்.

63. மேட்டுப்பாளையம் செங்கற்சூளை பணியாளர் அரிசன கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம், கோயம்புத்தூர் மாவட்டம்.

64. கதலி தோல் பதனிடுவோர் கூட்டுறவுச் சங்கம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

65. தேனி தோல் பதனிடுவோர் கூட்டுறவுச் தொழில் சங்கம், மதுரை மாவட்டம்.

66. பங்கலப்பட்டி செங்கற்சூளை பணியாளர் அரிசனக் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம், மதுரை மாவட்டம்.

67. அத்தமணஞ்சேரி செங்கற்சூளை பணியாளர் அரிசன கூட்டுறவுச் சங்கம், செங்கற்பட்டு மாவட்டம்.

68. பரவித்தந்தாங்கல் தோல் பதனிடுவோர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

**1968–69.**

**தொழில் துறை**

1. தென் ஆர்க்காடு மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், வீரபாண்டியில் பாய் பின்னும் பயிற்சி நிலையம்.

2. பெரியபட்டணம் கயிற்றுப் பணியாளர்கள் கூட்டுறவுத் தொழில் சங்கம், மதுரை மாவட்டம்.

**மகளிர் நலத் துறை**

3. சென்னை மாநகர், மங்களபுரத்தில் தையல் வேலையில் பயிற்சி உற்பத்தி நிலையம்.

## பழங்குடி மக்கள்

### 1966-67.

#### மகளிர் நலத் துறை

1. கீழ்கோத்தகிரியில் உள்ள தையல் வேலைப் பிரிவு.

#### தொழில் வாணிக இயக்குநர்.

2. திருச்சிகடியில் உள்ள (நீலகிரி மாவட்டம்) சிவப்பு மட்பாண்டங்கள் செய்யும் பயிற்சி-தயாரிப்பு நிலையம்.

3. ஜம்னமருதூரில் உள்ள ஆதாரச் தச்சு வேலை-கொல்லுப்பட்டறை வேலையில் பயிற்சி அளிக்கும் நிலையம்.

4. நெடுங்குன்றம், அட்டப்பாடி ஆகிய இடங்களில் உள்ள பிரம்பு-மூங்கில் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் தையல் வேலை நிலையம்.

5. பார்த்திபனூரில் உள்ள பாய் நெசவுப் பயிற்சி நிலையம்.

#### கதர் வாரியம்.

6. ஜம்னமருதூரில் உள்ள தேனீ வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம்.

7. நீலகிரி மாவட்டம் குன்னூரில் ஸ்ரீ சற்குரு ராஜயோக ஆசிரமத்தில் உள்ள பழங்குடி மக்கள் தங்கிப் பயிலும் பள்ளியில் தச்சுவேலை பிரம்பு வேலையில் பயிற்சி—தயாரிப்பு நிலையம்.

8. வட ஆர்க்காடு மாவட்டம் எலகிரி மலையில் தேனீ வளர்ப்புத் தொழில்.

### 1967-68.

#### மகளிர் நலத் துறை

1. கீழ்க்கோத்தகிரியில் உள்ள தையல் வேலைப்பிரிவு.

#### தொழில் துறை

2. திருச்சிகடியில் உள்ள சிவப்பு மட்பாண்டங்கள் செய்யும் பயிற்சி—தயாரிப்பு நிலையம்.

3. ஜம்னமருதூரில் உள்ள ஆதாரத் தச்சு வேலை-கொல்லுப் பட்டறை வேலையில் பயிற்சி அளிக்கும் நிலையம்.

### 1968-69.

#### தொழில்-வாணிக இயக்குநர், சென்னை

1. கூடை தயாரிப்புப் பயிற்சி நிலையம், உதகமண்டலம் (வேலைத் திட்டம்

2. பயிற்சி-உற்பத்தி நிலையம், கோத்தகிரி.

3. அரசாங்க தச்சுவேலை-கொல்லுப்பட்டறை பயிற்சி நிலையம், ஜம்னமருதூர் (திட்டத்தில் சேராதது).

#### கதர்-கிராமத் தொழில் வாரியம், சென்னை.

இல்லை.



#### மகளிர் நல இயக்குநர், சென்னை.

1. கீழ் கோத்தகிரியில் உள்ள தையல் வேலைப்பிரிவு.

2. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டப்பணி நிலையத்தின் முந்தையப் பயிற்சியாளர்களுக்கு மேசை, நாற்காலிகள், கருவிகள் வழங்குதல்.

## குற்றப்பட்டியலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர்.

### 1966-67.

#### மகளிர் நலத் துறை

1. சேலம் மாவட்டம் முத்தம்பட்டியில் கயிறு தயாரிப்பு பிரிவு.

2. திருநெல்வேலி மாவட்டம், தேவர்குளத்தில் ஆயத்த உடைகள் தயாரிக்கும் தையல் வேலை நிலையம்.

#### தொழில் துறை.

3. பார்த்திபனூரில் பாய் நெசவுப் பயிற்சி நிலையம்.

4. அஜீஸ் நகரில் கயிற்றுப் பணி பயிற்சி நிலையம்.

5. பம்மல் குடியிருப்பில் பாய்நெசவு-தையல் வேலை நிலையம்.

### 1967-68.

#### மகளிர் நலத் துறை.

1. சேலம் மாவட்டம் முத்தம்பட்டியில் கயிறு தயாரிப்புப் பிரிவு.

2. திருநெல்வேலி மாவட்டம் தேவர் குளத்தில் தையல் வேலை ஆயத்த உடைகள் தைக்கும் நிலையம்.

#### தொழில் துறை.

3. பார்த்திபனூரில் பாய் நெசவுப் பயிற்சி நிலையம்.

4. அஜீஸ் நகரில் கயிற்றுப் பணி பயிற்சி நிலையம்.

5. பம்மல் குடியிருப்பில் பாய் நெசவு-தையல் வேலை நிலையம்.

## குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர்.

### 1968-69

#### தொழில்-வாணிக இயக்குநர், சென்னை.

1. சின்னாளபட்டி கூட்டுறவுத் தீப்பெட்டித் தொழிற்சாலை.
2. கயிற்றுப் பணிப் பயிற்சி-உற்பத்தி நிலையம், அஜீஸ் நகர்.
3. பொது நோக்குப் பொறியியல் பணிக்களரி, முதுகுளத்தூர்.
4. பொது நோக்குப் பொறியியல் பணிக்களரி, வீரக்கேரளம்புதூர்.
5. பொது நோக்குப் பொறியியல் பணிக்களரி, சேக்கானூரணி.
6. தேனீ பிரம்புப் பணியாளர் கூட்டுறவுச் சங்கம்.
7. பம்மல் குடியிருப்பில் பாய் நெசவு-தையல் வேலை நிலையம்.

#### கதர்-கிராமத் தொழில் வாரியம், சென்னை.

இல்லை.

**மகளிர் நலத் துறை இயக்குநர், சென்னை.**

1. தேவர்குளம் ஆயத்த உடைகள் தயாரிப்பு நிலையம், திருநெல்வேலி
2. சேலம் மாவட்டம் முத்தம்பட்டியில் கயிறு உற்பத்தி பிரிவு.

## பிற்சேர்க்கை II.

அரிசனங்கள் பயனடைவதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்களின் பட்டியல்—

| தொடர் எண். (1) | சங்கத்தின் பெயர். (2) | மாவட்டம். (3) |
|---|---|---|
| **1966-67—** | | |
| 1 | கே. பெருமாள்பட்டி | மதுரை. |
| 2 | விரகனூர் | ,, |
| 3 | என்.எம். ஆர். சுப்பராம நகர் | ,, |
| 4 | ஷெனாய்நகர் | ,, |
| 5 | அவனியாபுரம் | ,, |
| 6 | குன்னூர் | ராமநாதபுரம். |
| 7 | கோட்டையூர் | ,, |
| 8 | ராமசாமியாபுரம் | ,, |
| 9 | கோபாலபுரம் | ,, |
| 10 | பெரும்பச்சேரி | ,, |
| 11 | மணியம்பட்டி | ,, |
| 12 | காரை | வட ஆர்க்காடு. |
| 13 | பள்ளிகொண்டா | ,, |
| 14 | செதுவாலை | ,, |
| 15 | மாதனூர் | ,, |
| 16 | எமச்சேரி | செங்கல்பட்டு. |
| 17 | சின்னாண்டிமடம் | ,, |
| 18 | மன்னஞ்சேரி | ,, |
| 19 | கல்லாடிப்பட்டு | ,, |
| 20 | சோமங்கலம் (மேலாத்தூர்) | ,, |
| 21 | முகையூர் | தென் ஆர்க்காடு. |
| 22 | துணிசிரமேடு | ,, |
| 23 | பணப்பட்டு | ,, |
| 24 | சி. தண்டேச்வர நல்லூர் | ,, |
| 25 | தில்லைவிடங்கன் | ,, |
| 26 | கொடியாலம் | ,, |
| 27 | தாதயன்பட்டி | சேலம். |
| 28 | மேல்காஸ்பாளையம் | ,, |
| 29 | சிக்கனம்பட்டி | ,, |
| 30 | பொட்டிபுரம் | ,, |
| **1966-67—தொடர்ச்சி.** | | |
| 31 | மணக்கால் | திருச்சிராப்பள்ளி. |
| 32 | அமிருதராயநல்லூர் | ,, |
| 33 | திம்மராயசமுத்திரம் | ,, |
| 34 | ஆலக்குடி | தஞ்சாவூர். |
| 35 | வண்ணாரப்பேட்டை | ,, |
| 36 | சவரியார்கோயில் | ,, |
| 37 | பாளையூர் | ,, |
| 38 | நேமம் | ,, |
| **1967-68—** | | |
| 39 | சிறுவள்ளூர் | செங்கல்பட்டு. |
| 40 | பூதூர் | ,, |
| 41 | தென்னேரி | ,, |
| 42 | தாமல் | ,, |
| 43 | ஜப்ராபேட் | வட ஆர்க்காடு. |
| 44 | ஏலகிரி | வட ஆர்க்காடு. |
| 45 | வடமூர் | தென் ஆர்க்காடு. |
| 46 | கீடுவேலிச்சாவடி | ,, |
| 47 | பி. சித்தேரி | ,, |
| 48 | செங்கல்மேடு | ,, |
| 49 | நஞ்சலூர் | ,, |
| 50 | பெருங்களூர் | ,, |
| 51 | வாண்டையான்பட்டி | ,, |
| 52 | விலகம் | ,, |
| 53 | வக்காரமாவி | ,, |
| 54 | வரகூர் | ,, |
| 55 | சிந்தார்கல் காலனி (திண்டிவனம் நகர்). | ,, |
| 56 | செம்மண்குடி | தஞ்சாவூர். |
| 57 | தாராநல்லூர் | திருச்சிராப்பள்ளி. |
| 58 | பாராவை | மதுரை. |
| 59 | வி. புதுப்பட்டி | ,, |
| 60 | வெள்ளையபுரம் | ராமனுதபுரம் |
| 61 | கல்யாணபுரம் | ,, |
| 62 | சிவகெங்கை | ,, |
| 63 | புதூர் பாண்டியபுரம் | திருநெல்வேலி. |
| 64 | தூசூர் | சேலம். |
| 65 | காவேரி குறுக்கு (மடையன்குட்டை கிராமம்). | |

| தொடர் எண்ணும், சங்கத்தின் பெயரும். | மாவட்டத்தின் பெயர். | ஒப்பளிக்கப்பட்ட நிதி உதவி. கடன். | உதவித் தொகை. | பயிரிடும் பரப்பளவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) ரூ. | (4) ரூ. | (5) ஏக்கரில். |
| **III. திருச்சிராப்பள்ளி வட்டாரம்—** | | | | |
| 12 வேலூர் | தென் ஆர்க்காடு | 7,55,400 | 5,34,350 | 6,929·00 |
| 13 மரவநத்தம் | | | | |
| 14 தென் பொன்பரப்பை (திட்டம் I) | | | | |
| 15 தென் பொன்பரப்பை (திட்டம் II) | | | | |
| 16 ராயர்பாளையம் | | | | |
| 17 கூகையூர் | | | | |
| 18 பொக்கம்பாடி | | | | |
| 19 மூங்கில்பாடி | | | | |
| 20 பங்காரம் | | | | |
| 21 புல்லூர் | | | | |
| 22 இண்டேலி | | | | |
| 23 கிளியானூர் | | | | |
| 24 திருவாமூர் | | | | |
| 25 சிறுகுடி | திருச்சிராப்பள்ளி | | | |
| 26 நெற்குணம் | | | | |
| 27 கள்ளங்காடு | மதுரை | | | |
| 28 கேசம்பட்டி | | | | |
| 29 பூஞ்சுத்தி | | | | |
| 30 கோட்டக்குடி | | | | |
| 31 சின்னமநாயக்கன்பட்டி | | | | |
| 32 சந்தையூர் | | | | |
| 33 கோபாலபுரம் | | | | |
| **IV. திருநெல்வேலி வட்டாரம்—** | | | | |
| 34 கோட்டைக்காரன்குளம் | திருநெல்வேலி | 1,64,675 | 1,77,540 | 1,046·83 |
| 35 பனங்குடி | | | | |
| 36 கனந்தனேரி | | | | |
| 37 பிடனேரி | | | | |
| 38 தாரகனேந்தல் | ராமநாதபுரம் | | | |
| 39 வேலங்குளம் | | | | |
| 40 அருப்பனேந்தல் | | | | |
| **V. சேலம் வட்டாரம்—** | | | | |
| 41 நாவலூர் | சேலம் | 7,68,619 | 6,60,857 | 4,573·46 |
| 42 நத்தக்கரை | | | | |
| 43 சிறுவாச்சியூர் (திட்டம் I) | | | | |
| 44 சிறுவாச்சியூர் (திட்டம் II) | | | | |
| 45 பெரியேரி | | | | |
| 46 மண்மலை | | | | |
| 47 தம்மண்பட்டி | | | | |
| 48 வணத்தூர் | | | | |
| 49 சிங்கிபுரம் | | | | |
| 50 புதுப்பட்டி | | | | |

| தொடர் எண். | சங்கத்தின் பெயர். | மாவட்டம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1968-69 (உதவி அளிப்பதற்காக அரசினுல் ஏற்றுக்கொள்ளப்பட்டவை)— | | |
| 66 | வல்லக்கோட்டை | செங்கல்பட்டு. |
| 67 | நாவாயூர் | தென் ஆர்க்காடு. |
| 68 | வளவனூர் | ,, |
| 69 | செங்காரப்பாளையம் | ,, |
| 70 | காட்டு கூடலூர் | ,, |
| 71 | பாலுத்தங்கரை | ,, |
| 72 | வினலூர் | ,, |
| 73 | அடிவாரகனத்தான் | ,, |
| 74 | முத்துக்குமராச்சியம்மன் | ,, |
| 75 | லால்புரம் | ,, |
| 76 | கூத்தூர் | ,, |
| 77 | ரோசாணை | ,, |
| 78 | வானமாதேவி | ,, |
| 79 | கீழ்வரைப்பேட்டை | ,, |
| 80 | மேம்லா அரசின பால் வழங்குக் கூட்டுறவுச் சங்கம். | வட ஆர்க்காடு. |
| 81 | வாச்சனூர் | ,, |
| 82 | பாளையமாங்காடு | ,, |
| 83 | கிருஷ்ணசாயபுரம் | திருச்சிராப்பள்ளி. |
| 84 | எ. பாலூர் | ,, |
| 85 | கொடியலம் | ,, |
| 86 | ஆதவத்தூர் | ,, |
| 87 | சிறுத்தையூர் | ,, |
| 88 | ஆச்சாலாபுரம் | தஞ்சாவூர். |
| 89 | சோளன்பட்டி | மதுரை. |
| 90 | சக்கம்பட்டி | ,, |
| 91 | நாகமலை புதுக்கோட்டை | ,, |
| 92 | தேவிநாயக்கம்பட்டி | ,, |
| 93 | சாத்தன்குடி | ,, |
| 94 | ராயப்பன்பட்டி | ,, |
| 95 | அல்லிநகரம் | ,, |
| 96 | புதுக்குடி | ராமனுதபுரம் |
| 97 | மானுமதுரை | ,, |
| 98 | அகசம்பட்டிக்காக வத்திராயிருப்பு பால் வழங்குக் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 99 | வெள்ளலூர் | கோயம்புத்தூர். |
| 100 | காரவைப்பட்டி | சேலம். |
| 101 | பாச்சல் | ,, |
| 102 | ஆதியம்மன்கோட்டை | ,, |



## பிற்சேர்க்கை III.

அரிசனங்களுக்கான கூட்டுறவு நிலக் குடியேற்றச் சங்கங்களின் பட்டியல்.

| தொடர் எண்ணும், சங்கத்தின் பெயரும். | மாவட்டத்தின் பெயர். | ஒப்பளிக்கப்பட்ட நிதி உதவி. கடன். | உதவித் தொகை. | பயிரிடும் பரப்பளவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) ரூ. | (4) ரூ. | (5) ஏக்கரில். |
| **I. சென்னை வட்டாரம்—** | | | | |
| 1 தம்மனூர் | செங்கற்பட்டு | 2,02,972 | 1,69,352 | 1,443·79 |
| 2 கரணைப் புதுச்சேரி | செங்கற்பட்டு | | | |
| 3 கருங்குழிப்பள்ளம் | செங்கற்பட்டு | | | |
| 4 பொன்பாடி | செங்கற்பட்டு | | | |
| 5 நெமலூர் | வட ஆர்க்காடு | | | |
| 6 கெங்கவரம் | வட ஆர்க்காடு | | | |
| 7 அய்பேடு | வட ஆர்க்காடு | | | |
| 8 பெருங்களத்தூர் | வட ஆர்க்காடு | | | |
| **II. தஞ்சாவூர் வட்டாரம்—** | | | | |
| 9 பிச்சன்கோட்டம் | தஞ்சாவூர் | 69,087 | 40,737 | 269·56 |
| 10 கொடியாலம் பரவத்தூர் | தஞ்சாவூர் | | | |
| 11 சன்னரைப்பட்டி | தஞ்சாவூர் | | | |

## உள்ளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள் .. .. .. .. .. | 661—681 |
| 2 ஒத்திவைப்புத் தீர்மானங்கள்— | |
| (அ) உணவு விடுதிகளில் பண்டங்களின் விலை உயர்வைத் தடுக்கத் தவறியமை .. .. .. | 681—682 |
| (ஆ) எண்ணூரில் மலையாளிகள் ஆதிக்க எதிர்ப்பு பொதுக் கூட்டத்தினால் பீதியடைந்துள்ள மலையாளிகள் நிலை .. .. .. .. .. | 682 |
| 3 நடைமுறைக் கேள்விகள்— | |
| (அ) வினாநேரம் முடிந்தவுடன் தகவல் கோருவதற்கு உறுப்பினர்களுடைய உரிமை .. .. .. | 682 |
| (ஆ) நீதிமன்ற விசாரணையிலுள்ள காரியத்தைப்பற்றி ஆய்வு செய்யக் குழு அமைத்தல் .. .. .. | 690 |
| 4 அரசினர் தீர்மானம்— | |
| விதி 41 (3)ஐத் தளர்த்தல் . .. .. .. | 683 |
| 5 கவன ஈர்ப்பு— | |
| (அ) மேட்டூர் இரசாயனத் தொழிற்சாலையின் கழிவு நீரினால் அண்மையிலுள்ள இணற்று நீர் பாதிக்கப் படுதல் .. .. .. .. .. .. | 683—685 |
| (ஆ) குன்னூர், உதகை ஆகிய நகரங்களில் குடிநீர்த் தட்டுப்பாடும், பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடும் .. .. .. .. .. .. | 685—687 |
| (இ) கோவை நகரில் தண்ணீர்ப் பற்றுக்குறையும் நெருக்கடியைச் சமாளிக்க உடனடி நடவடிக்கையும் .. | 687—690 |
| 6 1969–70ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி. | |
| (அ) கோரிக்கை எண் 1—நிலவரித் துறை .. .. | 690—755 |
| (ஆ) கோரிக்கை எண் 4—முத்திரைத் தாள்கள் நிர்வாகம் .. .. .. .. .. .. | |
| (இ) கோரிக்கை எண் 31—பஞ்சத் தணிப்பு .. .. | |
| (ஈ) கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள் .. .. | |
| (உ) கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப் பீடுகளும், ஒதுக்கீடுகளும் .. .. .. | |

| தொடர் எண்ணும், சங்கத்தின் பெயரும். (1) | மாவட்டத்தின் பெயர். (2) | ஒப்பளிக்கப்பட்ட நிதி உதவி. கடன். (3) | உதவித் தொகை. (4) | பயிரிடும் பரப்பளவு. (5) |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ஏக்கரில். |
| 51 மாந்தப்பள்ளி .. .. .. .. | தர்மபுரி .. .. .. | | | |
| 52 கக்கன்புரம் .. .. .. .. .. | | | | |
| 53 தல்லி .. .. .. .. .. | | | | |
| 54 சிக்கரசம்பாளையம் .. .. .. .. | கோயம்புத்தூர் .. .. | | | |
| 55 பராங் நகர் .. .. .. .. .. | | | | |
| 56 வடுகப்பட்டி .. .. .. .. | | | | |
| 57 எருமாடு .. .. .. .. .. | நீலகிரி .. .. .. | | | |
| 58 மாவனஹள்ளி .. .. .. .. | | | | |
| மொத்தம் .. | | 19,60,753 | 15,82,836 | 14,262·64 |

குறிப்பு.—(1) தஞ்சாவூர் மாவட்டம், சேலகம்பட்டி நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கம் (தஞ்சாவூர் வட்டாரம்) சங்கம் அமைப்பதற்காக அளித்த ஒப்பளிப்பு ரத்து செய்யப்பட்டுள்ளது.

(2) கோயம்புத்தூர் மாவட்டத்தில் நெய்த்தாலபுரம் நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கமும் (சேலம் வட்டாரம்) சேலம் மாவட்டத்தில் சொக்கனூர் அக்ரஹாரம் நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கமும் (சேலம் வட்டாரம்) தற்போது செயல்படுவதில்லை.



## பிற்சேர்க்கை IV.

பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின் தங்கிய வகுப்பினரின் நலனுக்காக 1961-62-லிருந்து 1967-68-வரை செலவழித்த மொத்தத் தொகை, 1968-69-ல் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படும் தொகை, 1969-70-ம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை—

| ஆண்டு. | செலவழித்த தொகை. | |
|---|---|---|
| | (ரூ. இலட்சத்தில்.) | |
| 1961-62 .. .. | 363·82 | மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலம். |
| 1962-63 .. .. | 415·60 | |
| 1963-64 .. .. | 452·95 | |
| 1964-65 .. .. | 488·42 | |
| 1965-66 .. .. | 538·09 | |
| 1966-67 .. .. | 617·12 | |
| 1967-68 .. .. | 631·19 | |
| 1968-69 (அரசாங்கத்தால் முடிவு செய்யப்பட்ட திருத்த மதிப்பீடு). | 642·28 | |
| 1969-70 .. .. திட்ட மதிப்பீடு. | 696·92 | |

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** செங்கல்பட்டிலே மட்டும் தீ அணைப்பு நிலையம் இருக்கிறது. செங்கல்பட்டிலிருந்து 60, 70 மைல் தூரத்திலிருக்கும் இடங்களுக்கான தொகுதிகளிலே தீ அணைப்பு நிலையங்கள் இல்லாததினாலும், அக்கினிகள் பெரும்பாலும் ஏற்படுவதாலும், தீ விபத்துக்கள் ஏற்படுகிற காரணத்தினாலும் இனிமேலாவது தீ அணைக்கும் நிலையங்கள் அங்கே வைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நான் முதலிலே கேள்விக்குப் பதில் சொல்லும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கையிலே இல்லை. தீ அணைப்புக்காக எந்தெந்த அழைப்புகள் வருகின்றன என்பதைப் பொறுத்துத் நான் தீ அணைப்பு நிலையங்கள் வைக்கவேண்டிய நிலை இருக்கிறது என்று சொன்னேன். மதுராந்தகத்திலே ஒரு ஆண்டு அழைப்பே இல்லாமலும், சில ஆண்டுகளில் இரண்டு மூன்று அளவில்தான் அழைப்புகள் இருந்தன. ஆகவே அந்த இடம் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 28 இடங்களில் தீ அணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப் படும் என்று சொன்னார்கள். இதிலே கோவில்பட்டியும் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி:** அந்த இடமும் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தி. பொன்னுமலை:** பெரும்பாலும் தீ அணைப்புப் படைகள் நகரப் பகுதிகளிலேதான் இருக்கின்றன. ஆனால் கிராமப் பகுதிகளிலேதான் குடிசைகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, கிராமப் பகுதிகளிலே தீ அணைப்பு நிலையங்கள் அமைத்துவைக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எல்லா இடங்களிலும் தீ அணைப்பு நிலையங்கள் வைப்பது என்பது முடியாத காரியம். மதுராந்தகம் போன்ற தாலுக்கா தலைநகரிலே இது முடியாதது, தேவையில்லாதது என்று இருக்கிற நேரத்திலே அவ்வளவு பெரிய இடத்திலே வைப்பது என்பது முடியாத ஒன்றாகும்.

*Officer oriented Scheme*

* 284 Q.—THIRU A. M. RAJA and THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether the Government have introduced the Officer-oriented Scheme in any of the departments of the Secretariat;

(*b*) if so, the names of such departments; and

(*c*) the saving effected thereby, year-war?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) நிதித் துறையில்.

(உ) ஒரு ஆண்டிற்கு ரூ. 1·10 இலட்சம்.

**திரு ஏ.எம். இராஜா:** தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்திலுள்ள அரசு பதிவுபெறாத அலுவலர்களிடமிருந்து இந்தத் திட்டத்தைப்பற்றி ஏதேனும் கோரிக்கை வந்திருக்கிறதா? அப்படியென்றால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படி எந்தக் கோரிக்கையும் வரவில்லை.



**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்திலே நிதித் துறையிலே மட்டும்தான் இந்த முறை அமல்படுத்தப்படுகிறது, அதன்மூலம் ஒரு ஆண்டுக்கு ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் மிச்சப்படுகிறது என்று சொன்னார்கள். மற்றத் துறைகளிலும் எப்போது அமல்படுத்தப்படும்? தலைமைச்செயலகத்தைத் தவிர வேறு துறைகளிலும் எப்போது அமல் படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நிதித் துறையைப் பொறுத்தவரை இந்தச் சிறைப்பு வசதியாக இருக்கிறது. நிதித் துறையில் கோப்புகளில் கருத்து அறிவிப்பு செய்வது மாத்திரம்தான் அவர்கள் வேலையாக இருக்கிறது. ஆனால் வேறு பல துறைகளில் பல பேர்கள் கைக்குப் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. மற்றத் துறைகளில் அந்தச் சங்கடம் இருக்கிற காரணத்தால் எல்லாத் துறைகளுக்கும் அதை விரிவுபடுத்த இயலாது.

*Minister's visit to Mauritius Island.*

* 285 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether the Hon. the Minister for Health and Harijan Welfare paid a visit to Mauritius Island; and

(*b*) if so, when and for what purpose?

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) மோரிஷஸ் தீவின் மக்களின் அழைப்பிற்கிணங்க மாண்புமிகு ஹரிஜனநல செய்தித்துறை அமைச்சர் 1968 ஜூனில் அத்தீவிற்கு கலாச்சார முறையில் சென்றுவந்தார்.

**திரு. கே. விநாயகம்:** அப்படி அழைப்பின்பேரிலே போன அமைச்சர் அவர்கள் அங்கிருந்து எதைக் கற்றுக்கொண்டு வந்தார்கள்? எந்த அனுபவத்தை இங்கே கொண்டு வந்தார்கள்? அந்த முறைகளை எல்லாம் செயல்படுத்துவதற்கு, அவைகள் நல்லவைகளாக இருந்தால், முதல் அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எதையும் கற்றுக்கொண்டு வர வில்லை. ஆனால் அவர்கள்தான் தமிழ் கற்றுக்கொள்ளவேண்டும், அதற்காக இங்கிருந்து ஆள் வேண்டுமென்று சொன்னதாகக் கேள்வி.

*Students Anti-Hindi Agitation Council.*

*** 286 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that the Students Anti-Hindi Agitation Council of Madurai had decided to disregard the National Anthem and National Solidarity Pledge?**

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஆம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதன் மீது அரசாங்கம் எடுத்துக்கொண்ட முடிவு என்ன? தேசிய கீதத்தை அவமதிப்பவர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தேசிய கீதம் பாட மறுத்தவர்களுக்கும் அதைத் தடுப்பவர்களுக்கும், உறுதிமொழி எடுக்காதவர்களுக்கும், தண்டனைக் கொடுப்பதற்குச் மத்திய சட்டத்திலோ, மாநில சட்டத்

இயக்குநர்களின் மீது நடவடிக்கையெடுத்து அந்தத் தொகையை அவர்களிடமிருந்து வசூலிக்க விருதுநகர் (பால் பண்ணை) துணைப் பதிவாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் பெருந் தொகை கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்டவர்கள் மீது கையாடல் செய்த குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதா? வழக்குகள் போடப்பட்டிருந்தால், அவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப்பட்டது? இது பற்றி அமைச்சர் அவர்கள் விவரமாக அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தென்காசி கூட்டுறவு பால் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. ரஹ்மான் பாட்சா காலமாய்விட்டதால் அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை. முன்னாள் செயலாளர் திரு. சாமி அவர்கள் பொய்க் கணக்கு எழுதியாக அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அந்த வழக்கு விசாரணையில் இருந்துகொண்டிருக்கிறது. அது மாத்திரமல்லாமல், அதில் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் (டைரக்டர்கள்) மீதெல்லாம் நடவடிக்கை எடுத்து அந்தப் பணத்தை வசூலிக்க ஏற்பாடாகியிருக்கிறது. மற்றப்படி, கேஸ் தொடர்ந்து நடக்கிறது. இன்னும் முடிவாகவில்லை.

**திரு. என். இட்டப்பா :** தலைவர் அவர்களே, மாயூரத்திலுள்ள கூட்டுறவுப் பால் பண்ணையில் மோசடி நடந்துள்ளது அரசினருக்குத் தெரியுமா? 24 ஆயிரம் ரூபாய் வரை கையாண்டு இருக்கக்கூடிய தலைவரை தப்பிப்பதற்கும், மறுபடியும் சங்கத் தலைவராக வருவதற்கும் மேல் அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் காரியங்கள் நடைபெறுகின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மூலக் கேள்வி தென்காசியைப் பற்றியது. மாயூரத்தைப் பற்றிய தகவலைக் கொடுத்ததற்கு நன்றி. இது பற்றி உறுப்பினர் எழுதி அனுப்பினால் விசாரித்துத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள உதவியாக இருக்கும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : For making recommendations to remove the malpractices and other evils in the Co-operative Department, our Government constituted a committee last year under the chairmanship of Thiru K. Santhanam. I also appeared before the Committee and gave my opinion. May I know from the Hon. Minister whether the report of that Committee has reached the Government ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** சந்தானம் கமிட்டியின் ரிப்போர்ட் அமல்படுத்தப்படவில்லை. அதை அமல்படுத்துகிற நேரத்தில் கனம் உறுப்பினர் யோசனை கவனிக்கப்படும்.

**திரு. சி. கோவிந்தராசன் :** கூட்டுறவு சொசைட்டிகளின் பணத்தைக் கையாடியவர் அதைத் திருப்பிக் கட்டி விட்டால் போதும் என்ற மனப்பான்மை, ஒரு கொள்கை இந்த அரசாங்கத்திற்கு உண்டா? கையாடல் மோசடி குற்றத்திற்காக அவர்கள் தண்டிக்கப்படவேண்டியதில்லையா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** குறிப்பாக இது தென்காசியைப் பற்றியது. வேறு வகையைப் பற்றிய கேள்வி அல்ல.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** கூட்டுறவு சங்கப் பால்பண்ணை டைரக்டர்கள் ஆனரோரியம் பெற இடமுண்டா? அச்சங்கத்தில் உள்ளவர்கள் பெற்று வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?



**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

**திரு. நா. வீராசாமி :** தென்காசி கூட்டுறவு பால்சங்கத்தின் தலைவர் இறந்து விட்டதால் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியவில்லை என்று அமைச்சர் சொன்னார்கள். பொதுவாக, கூட்டுறவு சங்கங்களில் கையாடல் நடைபெறுவதும், நடவடிக்கை எடுத்துக்கொள்கிறபோது தற்கொலை செய்துகொண்டுவிடுவதும் வழக்கமாக இருக்கிறது. இந்தச் சங்கத் தலைவர் தற்கொலை செய்துகொண்டாரா? இயற்கையாக மரணம் அடைந்தாரா? இது போன்று இனியாவது நடக்காதிருக்க அரசு எச்சரிக்கையாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அவர் காலமாகிவிட்டார் என்ற தகவல் தான் இருக்கிறது, தற்கொலையா, இயற்கை மரணமா என்ற விவரம் இல்லை. இறக்கப் போகிறாரா, உயிரோடு இருக்கப்போகிறாரா என்பதை எப்படிக் கண்காணிப்பது?

THIRU T. MARTIN : In cases of misappropriation like this, naturally the persons concerned with the crime will be prosecuted. But before launching prosecution, will this Government take steps to realise the amount from the persons concerned with the misappropriation and then launch prosecution ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** திட்டவட்டமாக தலைவர் கையாண்டாரா, செயலாளர் கையாண்டாரா, யார் கையாண்டார் என்பது முதலில் தீர்மானிக்கப்படவேண்டும். அதற்கு சில விசாரணைகளை நடத்தத் தான் வேண்டியிருக்கிறது. ஆகவே முதலில் நடவடிக்கை எடுக்க முடியாது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** வழக்குகளை உடனுக்குடன் விசாரணை செய்து முடிவு எடுக்காத காரணத்தினால்தான் இது போல் சிலர் இறந்து விடுவதும், அதன் பேரில் நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று வழக்கைக் கைவிடுவதாகவும் ஏற்படுகிறது. இனியாவது உடனுக்குடன் விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? ஊழலில் ஈடுபட்டவர்கள் மீண்டும் தலைவராக வர சட்டம் இடம் கொடுக்கிறது. ஆகவே சட்டத்தை மாற்ற ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** உடனுக்குடன்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் எல்லா விதமான விசாரணைகளையும் நடத்த வேண்டியிருப்பதால் காலதாமதம் ஆகிறது. எப்படியும் பணத்தை வசூல் செய்யாமல் விட்டுவிடுவதில்லை. அது சம்பந்தப்பட்ட டைரக்டர்களிடம் சர்சார்ஜ் ஆக வசூல் செய்யப்படும்.

### *Training classes in Animal Husbandry*

* 326 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state :

(*a*) whether there is any proposal to conduct training classes for the benefit of the ryots in Animal Husbandry ; and

(*b*) if so, when such training classes will be conducted ?

பக்கங்கள்

(ஐ) கோரிக்கை எண் 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு .. .. .. .. .. ..
(எ) கோரிக்கை எண் 45—ஒய்வூதியங்களை மொத்த மாக்கிக் கொடுத்தல் .. .. .. .. .. } 690—755
(ஏ) கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் .. .. ..

திரு. பாலன் அவர்களுடைய பேச்சில் கூறப்பட்ட குற்றச் சாட்டை விசாரிக்கக் குழு அமைத்தல் .. .. .. 705—706

8 பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. 755

இணைப்புகள் .. .. .. .. .. .. .. 756—766

# தமிழ்நாடு சட்டப் பேரவை

---

**வெள்ளிக்கிழமை, 1969 மார்ச் 14.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### மதுராந்தகத்தில் தீயணைப்பு நிலையம்.

* 283 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகத்தில் தீயணைக்கும் படை ஒன்று ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இல்லை.

**திரு. கே. விநாயகம் :** மதுராந்தகம் ஒரு தாலுக்கா தலைநகராக இருப்பதாலும் அதைச் சுற்றிலும் பல கிராமங்கள் இருப்பதாலும் அங்கெல்லாம் வீடுகள் குடிசைகள் நிறைய இருப்பதால் தீ விபத்துக்கள் ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தாலும் அங்கு தீ அணைப்பு ஸ்டேஷன் வைப்பதுபற்றி அந்தத் துறையினர் பரிசீலித்தார்களா ? தயவுசெய்து இந்த ஆண்டிலாவது அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு அரசு யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒவ்வொரு ஆண்டிலும் வருகிற தீ அணைப்பு அழைப்பின் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் தீ அணைப்பு நிலையங்கள் வைக்கப்படுகின்றன. புள்ளி விவரப்படிப் பார்த்தால் 1965-ம் ஆண்டு தீ அணைப்பு அழைப்பே இல்லை. 1966-ம் ஆண்டு இரண்டு அழைப்புகள் இருந்தன. 1967-ம் ஆண்டு இரண்டு அழைப்புகள் இருந்தன. 1968-ஆம் ஆண்டு அதாவது 30—7—1968-ம் தேதிவரை மூன்று அழைப்புகள் இருந்தன. ஆகவே அங்கு அழைப்புகள் மிகக் குறைவாக இருக்கிற காரணத்தால் அங்கு இப்போது வைப்பதற்கு அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

**திரு. ஆர். கருப்பையா :** தீ விபத்துக்கள் பொதுவாக கோடைக் காலங்களிலே நிகழ்கின்றன. எனவே கோடைக்காலங்களிலேயாவது ஸ்பெஷலாக தற்காலிக தீ அணைப்புப்படை வைக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இவையெல்லாம் ஆய்வு செய்து மேலும் 28 இடங்களில் தீ அணைப்பு நிலையங்கள் வைப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அவைகள் வரிசைக் கிரமமாக அந்தந்த இடங்களிலே வைக்கப்படும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, தீ அணைப்பு நிலையங்கள் தாலுக்கா தலைநகர் அளவிலே இயங்கி வருகின்றன. கும்பகோணத்தைப் பொறுத்தவரை திருப்பனந்தாளிலிருந்து 20 மைலுக்கு அப்பால் பந்தநல்லூர் இருக்கிறது. அங்கே இரண்டு ஆண்டுகளாகத் தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. அப்படி ஏற்படும் தீயை உடனே அணைக்கக்கூடிய முறையில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் எல்லைகளிலும் ஒரு தீ அணைப்பு நிலையம் ஏற்படுத்த அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவ்வளவு விரிவான முறையில் வைப்பதற்கு நிதிநிலை இடம் தராது.

**திரு. ஜெ. பெள்ளி கௌடர் :** தமிழகத்திற்கு வந்து செல்கிற சுற்றுலாப் பயணிகள் ஆண்டுக்கு எவ்வளவு பேர்கள் என்ற விவரம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தனிக் கேள்வி போடவும்.

**திரு. நா. ஜாசிராமன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது திருச்செந்தூர், கன்னியாகுமரி ஆகிய இடங் களில் சுற்றுலா மாளிகைகள் அமைக்க மத்திய அரசிடமிருந்து மானியம் பெறப்படுகிறது என்று கூறினார்கள். ஒரு ஊரிலே சுற்றுலா மாளிகை வைப்பதற்கு மத்திய அரசு மானியம் பெறவேண்டுமென்றால் அந்த ஊருக்கு என்ன என்ன தகுதிகள் இருக்க வேண்டும், எந்த அளவில் பிரயாணிகள் இருக்க வேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மத்திய அரசாங்கம் முதல் பாகம் என்றும் இரண்டாவது பாகம் என்றும் மூன்றாவது பாகம் என்றும் சுற்றுலா இடங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங் களை வைத்திருக்கிறது. முதல் பாகத் திட்டத்தில் பூராச் செலவையும் மத்திய அரசாங்கமே ஏற்றுக் கொள்கிறது. இரண்டாம் பாகத் திட்டத்தில் மாநில அரசு 50 சதவீதத்தையும், மத்திய அரசாங்கம் 50 சதவீதத்தை யும் ஏற்றுக்கொள்கின்றன. மூன்றாவது பாகத் திட்டத்தில் முழுச் செல வையும் மாநில அரசாங்கமே ஏற்றுக் கொள்கிறது. இப்படி மூன்று பிரிவுகளாகப்பிரித்திருக்கிறார்கள். பெரிய திட்டங்கள், அதாவது 10 லட்சம், 20 லட்சம் ரூபாய் என்று செலவாகிற திட்டங்களை மத்திய அரசாங்கமே எடுத்துக் கொள்கிறது. மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் சில திட்டங்களை ஏற்றுக் கொள்கின்றன. அதிகப்படியாகப் பிரயாணிகளின் கவனத்தை ஈர்க்கக்கூடிய இயற்கை வனப்புகள் இருந்தாலும், பழமை யான கலைகளைக் காட்டுகிற ஆலயங்களாக இருந்தாலும் வேறு மக்களுடைய கவனத்தை ஈர்க்கிற உல்லாச இடங்களாக இருந்தாலும், அவற்றை சுற்றுலா திட்டங்களின்கீழ் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் விரும்பு கிறது. மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதிகப்படியான செலவு வந்தால் பூராச் செலவையும் மத்திய அரசாங்கமே ஏற்றுக் கொள்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** கன்னியாகுமரிக்கு இந்தத் திட்டத்திற் காக 2 லட்ச ரூபாய் மத்திய அரசு ஒதுக்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வேலை எப்பொழுது தொடங்கப்படும் ? எப்பொழுது கட்டி முடிக்கப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கன்னியாகுமரி சுற்றுலாத் திட்டத்திற்கு 5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அ சாங்கம் 2½ லட்சமும், மாநில அரசாங்கம் 2½ லட்சமும் ஒதுக்கியிருக் கிறது. நாளைய மறுதினம் 17-ஆம் தேதிதான் அதற்கான கால்கோள் விழா நடைபெறுகிறது. விரைவிலே கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** திருச்செந்தூருக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே, குற்றாலம் அதிக மானவர்கள் வந்து போகக்கூடிய இடமாக இருப்பதால் அதற்கும் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? திருச்செந்தூர், குற்றாலம், கன்னியாகுமரி, போன்ற இடங்களுக்குத் திருநெல்வேலி மத்திய இடமாக இருப்பதால் திருநெல்வேலியை ஒரு ரேஸ்ட் சென்டராக ஆக்க வேண்டுமென்று, திரு நெல்வேலி ஹோட்டல் , உரிமையாளர்களிடமிருந்து கோரிக்கை வந்தது? அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** குற்றாலத்தையும் உல்லாசப் பயணிகள் செல்கின்ற இடமாக ஆக்க வேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. இந்த ஆண்டிலே திருச்செந்தூர் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நிதி நிலைமை இருப்பதைப் பொறுத்து இப்பொழுது குற்றாலத்தை எடுத்துக் கொள்ளக்கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத் தில் எந்த எந்த மாவட்டங்களில் உள்ள எந்த எந்த இடங்களை மத்திய அரசு சுற்றுலா மையங்களாகவும் எந்த எந்த இடங்களை மாநில அரசு சுற்றுலா மையங்களாகவும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. இதிலே சேலம் ஏர்க்காடு நல்ல இயற்கைவளமுள்ள பகுதி. அதை மத்திய அரசு சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு மாநில அரசு முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கேந்திரங்கள் பிரிப்பதிலேகூட நமக்குச் சங்கடங்கள் இல்லை. நான் ஆரம்பத்திலே குறிப்பிட்டதைப்போல அதற்கு ஏற்படுகின்ற செலவினங்களைப் பொறுத் துத் தான் மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. சிலவற்றை மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் ஏற்றுக் கொள்கின்றன. மாநில அரசாங்கமே முழுவதையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய திட்டம் உண்டு. சேலம் ஏர்க்காடுபற்றி எவ்வளவு செலவாகும் என்பதைப் பொறுத்துத் தான் மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமா அல்லது மாநில அரசாங் கம் ஏற்றுக் கொள்ளும என்று சொல்லலாம். இப்பொழுது இந்தச் செயற்குறிப்பு இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, சரித்திர முக்கியத் துவம் வாய்ந்ததும், இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாய் இருக் கக்கூடியதும், அழகு நிறைந்ததுமான செஞ்சிக் கோட்டையில் சுற்றுலா மாளிகை கட்ட அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இப்பொழுது அப்படி எதுவும் இல்லை.

## பல்லடம் தொகுதிக்கு குடிநீர் வசதி.

* 328 வினு—**திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) பல்லடம் தொகுதியில் உள்ள சூலூர், சோமனூர் ஆகிய நகரப் பஞ்சாயத்துக்களில் குடி தண்ணீர் குறையைப் போக்க அரசுக்குத்திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் என்றால், அதன் விவரமென்ன ?

(உ) அப் பஞ்சாயத்துக்களிலிருந்து ஏதேனும் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளனவா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:—**

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இருகூர் நகரப் பஞ்சாயத்து, சூலூர் நகரப் பஞ்சாயத்து, சோம நகரப் பஞ்சாயத்து, பல்லட நகரப் பஞ்சாயத்து இங்கேயெல்லாம் குடிநீர்ப்

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) கால்நடை வளர்ப்பு முறை களில் உழவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கான செயற் குறிப்பு எதுவும் இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

**THIRU B. VENKATASWAMY :** Generally in India and especially in our State we are having more number of animals. But if we compare the income from American and Danish animals with the income from our animals, it is too meagre. Will this Government give at least two-months' training by giving incentives to enable ryots to stabilise their economic position and at the same time to increase animal products like milk, egg, etc., in these hard days of food scarcity ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தனிப்பட்ட முறையில் இது சம்பந்தமாக விவசாயிகள் பயிற்சி வேண்டும் என்று கோரிக்கை அனுப் பினால் அது பற்றிக் கவனிக்கப்படும்.

**திரு. எஸ். முருகையன் :** இது போன்ற பயிற்சியை மாநில அளவில் கொடுக்காவிட்டாலும் ஒவ்வொரு ஒன்றியத்தின் அளவிலாவது கால் நடை விஸ்தரிப்பு அதிகாரிகளைக் கொண்டு அளிக்க ஏற்பாடு செய்யப்படு மா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இப்போதே கிராமத்தில் உள்ள கால்நடை விஸ்தரிப்பு அதிகாரிகள் விவசாயிகளுக்குத் தீவன முறைகள் பற்றியும், செயற்கைக் கருத்தரிப்பு மூலம் எப்படிப் பால் பெருக்க இனங்களை விருத்தி செய்ய முடியும் என்பதைப் பற்றியும் விளக்கி வருகிறார்கள். இதனால் நன்மை ஏற்பட்டு வருகிறது.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, பொதுவாக, கால்நடை வளர்ச்சிக்கு மேய்ச்சல் தரை அவசியம். ஆனால் ஆங்காங்குள்ள மேய்ச் சல் புறம்போக்குகள்கூட பட்டா செய்து கொடுக்கப்படுகிறது. இதை நிறுத்தி ஆங்காங்கே சர்க்கார் நிலங்களை மேய்ச்சல் தரைகளாக மாற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பஞ்சாயத்துக்கள், புறம் போக்கு நிலங்களை மேய்ச்சல் தரைகளாகப் பயன்படுத்தவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் சிலர் அதைக் கூட ஆக்கிரமிப்புச் செய்கிறார்கள். ஆக்கிரமிப்பாளர் சங்கம் என்று வைத்துக்கொண்டே ஆக்கிரமிப்புச் செய்கிறார்கள். அவர்களைத் தங்குதடையின்றி வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பஞ்சாயத்துகள் மேய்ச்சல் தரைகளை உண்டாக்க முன்வந்தால் மிகவும் உதவியாக இருக்கும் என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** ஹோசூரில் கால்நடைப் பயிற்சி முகாம் பள்ளி இருக்கிறது. சரியாக நடக்கவில்லை என்று அதை மூடியிருக்கிறார் கள். அதைத் திறந்து மாணவர்களுக்கு அதிகமாகப் பயிற்சி அளிக்க சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஹோசூரில் உள்ள லைவ்ஸ்டாக் பாரத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். ஒரத்தநாட்டிலும் அது போல இருக் கிறது. நன்றாக நடக்கவில்லை என்று மூடவில்லை. அதில் பயிற்சி பெற்றவர்களிலேயே 100, 150 பேர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்த



முடியாத காரணத்தினால் நிறுத்தப்பட்டது. இவர்களுக்கு வேலை கிடைத்த வுடன் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட அதை அடுத்த ஆண்டாவது மீண்டும் திறக்க ஆலோசிக்கலாம்.

**திரு. தி. பொன்னுமலை :** பெரும்பாலும் கிராமப் பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு சிந்திக்காளையின் விந்து செயற்கை முறையில் கருத் தரிக்க உபயோகப்படுத்தப்படுகிறது. அதில் உண்டாகிற காளைகள் விவ சாயத்திற்குப் பயனற்றவையாக இருக்கின்றன. ஆகவே, விவசாயத் திற்குப் பயன் தரும் காளைகளின் விந்துவைப் பயன்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தாமி :** சிந்திக்காளையின் விந்து நல்ல பால் தரும் மகத்தைப் பெருக்குவதற்குப் பயன்படும். இவர்கள் கேட்பது போல விவசாயத்திற்குப் பயன்படும் காளைகள் வேண்டுமென்றால் காங் கேயம் விந்து பயன்படுத்தப்படும். அதை விவசாயிகளே கோரிப் பயன் படுத்திக்கொள்ளலாம்.

**சுற்றுலா மையங்களுக்கு மத்திய அரசு உதவி.**

*327 வினா.—**திரு. கே. போஜன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார மும் அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) நம் மாநிலத்திலுள்ள உல்லாசப் பிரயாண ஸ்தலங்களின் அபிவிருத்திக்காக மத்திய அரசு ஏதேனும் உதவிப்பணம் தருகிறதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த ஸ்தலங்களுக்கு தருகிறது ?

(உ) ஒவ்வொரு உல்லாசப் பிரயாண ஸ்தலத்திற்கும் தரப்படும் உதவித் தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) சுற்றுலாத் திட்டத்தில் இரண்டாம் பாகத் திட்டமாக (Part II Schemes) ஒப்புக்கொள்ளப்பட்ட இடங்களுக்கு 50 சதவீத நிதி உதவி தருகிறது.

(உ) திருச்செந்தூரில் சுற்றுலா மாளிகை கட்ட ரூ. 1.30 இலட்சமும், கன்னியாகுமரியில் ஒரு சுற்றுலா மாளிகை கட்ட சுமார் ரூ. 2.25 இலட்சமும் மத்திய சுற்றுலாத் துறை ஏற்கும்.

**திரு. கே. போஜன் :** தலைவர் அவர்களே, சுற்றுலா பயணிகள் இருந்தால்தான் ஸ்தலங்களுக்கு உல்லாசப் பயணிகள் நல்ல வசதிகள் வருவார்கள். தற்சமயம் உதகையில் குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கிறது. நேற்றுப் பத்திரிகையிலே பார்த்தால் ஹோட்டல்களிலே காபி, டீ கொடுப் பதற்குக்கூட அவதிப்படுகிறார்கள் என்று தெரிகிறது. கோடை காலம் இனிமேல்தான் வருகிறது. எனவே, குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கு வதற்கு அரசாங்கம் உடனடியாக ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** சுற்றுலாத் திட்டத்திற்கு மத்திய அரசு எவ்வளவு உதவித் தொகை கொடுக்கிறது என்ற கேள்வியைப் போட்டுவிட்டு, உதகையிலே குடிநீர்த் தட்டுப்பாடு பற்றி சொல்வது சரியல்ல. உதகையிலே தண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதுபற்றி கேள்வி நேரத்திற்குப் பிறகு ரூல் 41-ன்கீழ் ஒரு கவன ஈர்ப்பு அறிவிக்கைமேல் அறிக்கை கொடுக்க இருக்கிறேன். அப்போது அதுபற்றிய விவரங்கள் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த விஷயத்தில் திரு. விநாயகம் அவர்களுக்கு எந்த இடைஞ்சலும் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** உலகத்திலே மிக எழிலான கடற்கரை மெரினா கடற்கரை. அதை அழகுபடுத்துவதற்கு உதவித் தொகை இந்திய அரசிடம் இருந்து பெறப்பட்டதா ? அதைப்பற்றிய விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றிய விவரம் இல்லை.

**திரு. நா. காசிராமன் :** மெரினா கடற்கரையை மேலும் அழகுபடுத்தும் திட்டம் ஒருபுறம் இருக்க, இருக்கின்ற அழகே கெடுகின்ற அளவுக்கு பலர் ஆக்கிரமித்துக்கொண்டு பலவிதமான நடவடிக்கைகளின் காரணமாக துர்நாற்றம் அதிகமாகி இருக்கிறது. அதைத் தவிர்த்து முன்பு இருந்த நிலைக்காவது கொண்டுவர அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை நான் முற்றிலும் ஏற்றுக்கொள்கிறேன். மெரினா கடற்கரையை அழகுபடுத்த வேண்டுமென்றால் அங்கிருக்கின்ற குடிசைகளை, ஆக்கிரமித்துக்கொண்டிருப்பவர்களை அகற்றுகிற நேரத்தில் அரசியல் கட்சிகள் தலையிடுகின்ற சூழ்நிலை இல்லாமல், அந்தக் காரியத்தைச் செய்யும் போது அரசியல் இலாபத்திற்காக எந்தக் கட்சியினுடைய மாநகராட்சி உறுப்பினரும் அதிலே தலையிடாமல் இருப்பார்களானால் அதை அடிப்படையாக வைத்து மெரினா கடற்கரையை அழகுபடுத்த இயலும். இதிலே எல்லாக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த அரசு கோருகிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்தில் பம்பாயில் உள்ளதுபோன்ற அழகான மீன் காட்சி சாலை ஒன்றை ஏற்படுத்திக் கடலில் இருக்கும் அத்தனை வகை மீன்களும் காட்சி சாலையிலே இடம் பெற ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஏற்கனவே அங்கு ஒரு மீன் காட்சி சாலை இருக்கிறது. அதை விரிவுபடுத்த வேண்டுமென்று ஆலோசனை கூறினால் பரிசீலிக்கலாம்.

### *Clerks in Panchayat Development Department*

* 301 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Local Administration be pleased to state —

(*a*) whether certain departmental examinations have been prescribed for promotion to the post of Panchayat Development Clerks;

(*b*) whether this rule has been ignored and promotions made on the basis of seniority alone, even though qualified persons are available, and

(*c*) if so, the reasons therefor ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம் ;

(இ) பேரவைமுன் விவர அறிக்கை † ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(உ) இவ்வினா எழவில்லை.

† 756—758 பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சில விதிகள் புறக்கணிக்கப்படுகின்றன என்று யாரிடத்திலிருந்தாவது அரசாங்கத்துக்கு மனு வந்திருக்கிறதா ? அவ்வாறு மனு வந்திருந்தால் அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அது பற்றிய விவரம் இல்லை.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** இம்மாதிரிப் பணி செய்யக்கூடிய அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்தால் துரிதமாகப் பைசல் செய்து புரொமோஷன் கொடுக்க உத்தரவு போடப்படுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலிருந்து பரிந்துரை வருகிறது என்றால் பல்வேறு தகுதிகளை ஆய்வு செய்ய வேண்டியதாக இருக்கிறது. கான்பிடென்ஷியல் ரிப்போர்ட்டை எல்லாம் பரிசீலித்து மாநில ரீதியில் பட்டியல் தயாரிக்க வேண்டிய பொறுப்பு கிராம வளர்ச்சித் துறை இயக்குநரிடத்தில் இருக்கிறது. அந்தக் காரியங்களைச் செய்து எவ்வளவு விரைவாகச் செயல்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவாகச் செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். தனிப்பட்டவர்களுக்குக் குறை இருந்தால் முறையீடு செய்தால் கவனிக்கப்படும்.

Thiru K. VINAYAKAM : On a point of Order, Sir. The Hon. Minister was pleased to say that a detailed brochure on this question has been placed on the table. But it is not found here.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "12—3—1969-க்கான பட்டியலிலிருந்து தள்ளிப் போடப்பட்டவை" என்று கீழே கொடுத்துள்ள குறிப்பைப் பார்க்கவும்.

Thiru K. VINAYAKAM : I am coming to the point. It is the practice in this House that any brochure or pamphlet concerning any question should be placed on the same day when the question is taken, and not on any previous day. If it is placed on any other day, it is likely to be lost or misplaced. I hope at least in future you will agree that it should be placed on the day when the related question is being discussed here.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்விகள், என்று இந்த அவையில் ஒதுக்கப்படுகின்றனவோ அன்று அவற்றிற்குரிய காகிதங்கள் இந்த அவையில் வைக்கப்படுகின்றன. அவ்வாறு வைத்தபிறகு மாண்புமிகு அமைச்சர்களுடைய வசதியை ஒட்டி வேறு ஒரு நாளைக்கு அந்தக் கேள்விகள் ஒத்தி வைக்கப்படுகின்றன. அப்படி ஒத்தி வைக்கப்படுகின்ற கேள்விகள் இன்னொரு நாள் எடுத்துக் கொள்ளப்படும்போது அந்தத் தாள்களை மறுபடியும் மேசைமீது வைக்க வேண்டுமென்று விரும்புவது முறையாகாது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அமைச்சர் அவர்கள் துணைக் கேள்வி கேட்கிற நேரத்தில் அப்படிப்பட்ட புகார்கள் வரவில்லையென்று சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதற்குத் தகவல் இல்லை என்று தான் சொன்னேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சில பேர் புகார் கொடுத்திருக்கிறார்களா என்று கேள்வி கேட்கப்பட்டது. ஆகவே, அரசாங்கம் யாராவது அவ்வாறு புகார்கள் கொடுத்திருக்கிறார்களா என்று இலாகாவுக்கு உத்தரவு போட்டு விவரங்கள் சேகரித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயாரா ?

பஞ்சம் இருக்கிறது. அதை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு குந்தாவிலிருந்து நீர் கொண்டுவந்து கொடுப்பதாக அரசாங்கத்திடம் ஒரு தி ம் இருந்த தாகத் தெரிகிறது. இப்பொழுது அந்தத் திட்டம் இருக்கிறதா, அதை ஆராய்ந்து கொண்டுவருவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பஞ்சாயத்து சார்பிலிருந்து அதுபற்றி வேண்டுகோள் வரவில்லை. கோயம்புத்தூர் மில் தொழிலாளர்களிடமிருந்து அந்த அசோஸியேஷனிடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறது. அதைப் பரிசிலனை செய்யும்பொழுது திருப்பூர் நீர்நிலை யத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரவேண்டியிருக்கிறது. திருப்பூரி லிருந்து சோமனூருக்கு 10 மைல் இருக்கிறது, சோமனூரிலிருந்து பல்லடத் திற்கு 10 மைல் இருக்கிறது. அந்த வகையிலே திருப்பூரிலிருந்து தண்ணீர் கொண்டு வரவேண்டுமென்றால் அடிப்படை வேலைகளைச் செய்வதற்குப் பஞ்சாயத்து நிதி கொடுக்க வேண்டும். பஞ்சாயத்திடம் நிதி இல்லாத காரணத்தாலே அந்த வேலையில் ஆர்வம் காட்டவோ, அதைச் செய்யவோ அவர்கள் முயலவில்லை. ஆரம்ப வேலைகளைச் செய்வதற்காக நிதி தேவைப் படுகிறது. அந்தப் பஞ்சாயத்தார் அதற்கு முன்வராத காரணத்தால் வேலை செய்யவில்லை. பஞ்சாயத்தார் அந்த ஆரம்ப வேலைகளைச் செய்ய தொகை கொடுக்கிற நேரத்தில் அதுபற்றி ஆலோசனை செய்யலாம்.

**திருமதி சு. குப்பம்மாள்:** வட ஆற்காடு மாவட்டத்திலே தண்ணீர் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. குறிப்பாக போளூரில் குளிக்கக்கூடத் தண்ணீர் இல்லாமல் 4 நாட்களாகக் குளிக்க முடியாமல் இருக்கிறார்கள் அதையும் அரசாங்கம் கவனித்துத் தண்ணீர் கொடுப்பதற்கு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தண்ணீர் பஞ்சம் இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் பல இடங்களில் இருக்கிறது. அர சாங்கம் எவ்வளவு விரைவிலே இதைப்போக்க முடியுமோ அதற்கான முறையிலே நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறது. அம்மையார் அவர்கள் குறிப்பிட்ட போளூரிலும் எந்த அளவுக்கு விரைவிலே தண்ணீர் வசதி செய்துகொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு விரைவாகச் செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சு. துரைசாமி :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது திருப்பூரில் இருந்து தண்ணீர் எடுத்துக் கொடுக்க வேண்டுமென்று சொன் னார்கள். திருப்பூரிலேயே தண்ணீர்ப் பற்றாக்குறை இருப்பதால், அதைப் போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** சோமனூருக்கும், பல்லடத்திற்கும் தண்ணீர் வரவேண்டுமென்று சொன்னால், திருப்பூர் வாட்டர் சப்ளை ஸ்கீமில் இருந்துதான் தண்ணீர் கொண்டுவந்து அந்த மக்களைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சூலூர், சோமனூர், குடிதண்ணீர்த் திட்டத்தைப்பற்றி மட்டும் கேள்வி கேளுங்கள்.

**திரு. எஸ். அக்னிராஜு:** ஒரு நகரப் பஞ்சாயத்து குடிதண்ணீர்த் திட்டத்தை எடுத்து நடத்த அரசாங்கம் எவ்வளவு பொருள் உதவி செய் கிறது. நகரப் பஞ்சாவத்து எவ்வளவு போடவேண்டும், பொதுமக்களி மிருந்து எவ்வளவு தொகை பெறவேண்டும்?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தற்போது அந்தக் குறிப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி எண்கள் 329, 330, 331 332 ஆகியவை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.



## செங்கற்பட்டு மாவட்டம் கிழக்கரை சாலை.

*333 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கிழக்கரை சாலைக்கு 1967–68-ம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட் டத்தில் எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது ?

(இ) மதுராந்தகம் வட்டத்தில் செல்லும் கிழக்கரை சாலைக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிற பணம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) கிழக்குக் கடற்கரை யோரச் சாலைக்காக 1967–68-ம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் ரூ. 2,83,272·50 செலவழிக்கப்பட்டது.

(இ) மதுராந்தகம் துணைக் கோட்டத்தில் மட்டும் ரூ. 1,82,785 செல விடப்பட்டது. வட்ட வாரியான கணக்குகளை வைத்து வராததால், மதுராந் தகம் வட்டத்தில் செலவிட்டது பற்றிய தனிப்பட்ட கணக்குகளைக் கொடுக்க இயலவில்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தற்போது போடப்பட்டுள்ள கிழக் கடற்கரைச் சாலை கடற்கரையின் பக்கத்தில் போடப்பட்டிருப்பதாலும், புதிதாக அமைக்கப்பட்டிருக்கிற காரணத்தாலும் போக்குவரத்து அதிக மாகப் போக முடியவில்லை. உடனடியாக அதற்கு மெட்டல் போட்டு தார் ரோடாக்கும் அளவுக்குச் செயற் குறிப்பு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## மெரினா கடற்கரையை அழகுபடுத்தல்.

*334 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா —

சென்னை மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆம். ரூபாய் 75 இலட் சத்துக்கு மேற்பட்ட மதிப்பீட்டுச் செலவில் மெரினா கடற்கரையை விரிவான அடிப்படையில் மேம்படுத்த வேண்டும் என்று இயற்கைக் காட்சி செயல் படுத்துக்குழு பரிவுரை செய்தது. இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற் காகும் செலவு மிக அதிகம் என்று கருதப்பட்டதால், இப்போது கிடைக்கிற நிதி ஒதுக்கத்தை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி, பூங்காக்கள் அமைக்கப்பட்டு, அலங்கார வகைச் செடிகள் வளர்க்கப்பட்டு தற்போது கிடைக்கிற நிதி ஒதுக்கத்தைக் காட்டி லும் இன்னும் சிறிது அதிக நிதி ஒதுக்கத்தைக் கொண்டு மெரினா கடற் கரையை எழில்படுத்துவதற்கு ஆவன செய்யும்படி தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். குடிசைகளை மெரினா கடற்கரையிலிருந்து அகற்றவும், கட்டுமரங்களையும் மீன் பிடி வலைகளையும் ஒழுங்காக விட்டு வைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திரு. கே. விநாயகம் :** மெரினா கடற்கரையின் ஒரு பகுதியில் "லவர்ஸ் பார்க்" என்று இருக்கிறது. அதிலே மற்றவர்கள் பிரவேசிக்காமல், சுதந் திரமாக இருக்கும் வகையில் அந்த நிலைமையை மாற்றாமல், அதிலே தலையிடாமல் இருக்க வழி செய்வார்களா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : அதுவும் இணைக்கப்பட்டிரு
கிறது.

*Tuticorin Boat Owners Association.*

* 336 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Labour be pleased to state whether the Government are aware of the decision of the Tuticorin Boat Owners Association to boycott handling of goods bound to Colombo ?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** ஆம். ஆனல் இயல்பான படகுப் போக்குவரத்து அதன்பின் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

**திரு கே. விநாயகம் :** இந்தப் படகுச் சொந்தக்காரர்கள் எந்தக் கார ணத்திற்காக சரக்குகளை ஏற்றுமதி செய்யமாட்டோம் என்று சொன்னர் கள் ? அப்போதுள்ள காரணங்கள் இப்போதும் இருக்கிறதா அல்லது அவை எல்லாம் நிவர்த்திக்கப்பட்டனவா ?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** கப்பலில் ஏற்றிச் சென்ற சில சாமான்கள் வெட்பதட்ப சூழ்நிலைக்கேற்ப அதில் இருப்பது அபாயம் என்று அந்தக் கப்பல் மாலுமி கருதியதால் அதிலுள்ள பொருள்களை கடலில் தூக்கி எறிந்துவிட்டார்கள். அப்படி எறிந்த பிறகு கப்பல் கொழும்பு போய் சேர்ந்தது. அங்கிருந்த சுங்க அதிகாரிகள் இந்தப் பொருள்களைக் கடலில் எறிந்தது குற்றம் என்று சொல்லி ஐயாயிரம் ரூபாய் அபராதம் விதித்தார்கள். அதைக் கட்ட மறுத்து பிறகு அதுகுறித்து நீதிமன்றத் தில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அது முடிந்த பிறகுதான் தெரியும்.

**திரு எஸ். ஜே. ராமசாமி :** அந்த வழக்கைப்பற்றிக் கூறினர்கள். அந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் போடப்பட்டுள்ளதா அல்லது சிலோனில் போடப்பட்டுள்ளதா ? எந்த இடத்தில் எந்தச் சர்க்காரால் போடப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அங்குள்ள வெளி விவகார இலாகா அதிகாரிகள் சுங்க இலாகா அதிகாரிகள் இவர்களோடு தொடர்பு கொண்டிருக்கிருர்கள். எங்கு வழக்கு நடக்கிறது என்ற விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

***Electricity connection to agricultural pumpsets in Sowkiapuram village.***

* 337 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the number of applications from the agriculturists of Sowkiapuram village in Santankulam Panchayat Union Council area in Tirunelveli district, pending grant of electricity connection to agricultural pumpsets ; and

(*b*) when electricity connection will be given for those applicants ?

**மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் :** (அ) & (இ) சாத்தான்குளம், ஊராட்சி ஒன்றியக் குழுப் பகுதியிலுள்ள சௌக்கியபுரத்தில் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின்சக்தி வழங்கும்படி கேட்டு ஐந்து விண்ணப்பங் கள் வந்துள்ளன. அருகிலுள்ள கிராமமாகிய அடுப்புவிளையிலிருந்து வந்த விண்ணப்பங்களையும் மேற்குறிப்பிட்ட விண்ணப்பங்களையும் சேர்த்து ஆதாய முள்ள செயற்குறிப்பு ஒன்று தயாரிக்கப்பட்டது. அதற்கு 31-7-1968



அன்று ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. விண்ணப்பதாரர்கள் மின்சக்தி வழங் கப்படுவதைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருப்பதற்குட்பட்டு, ஒப்பளிப்பு வழங்கப்பட்ட திட்டங்கள் அவற்றின் முறைவைப்புப்படி வேலை மேற்கொள்ளப்படும்.

**திரு டி. மார்டின் :** சாத்தான்குளம் தொகுதி சௌக்கியாபுரத்தில் உள்ள விவசாயிகள் மின் இணைப்புக் கேட்கும்போது அதற்கு அருகாமையில் அதைச் சேர்ந்த கிராமங்களான கீழ் நடுவக்குறிச்சி, மேல் நடுவக்குறிச்சி, விஜயராகவபுரம் போன்ற இடங்களில் உள்ள விவசாயிகள் பம்ப் செட் களுக்கான கரண்ட் சப்ளைக்கு மனு போட்டு அவைகளும் இதோடு சேர்த்துப் பரிசீலிக்கப்பட்டதா ? அவற்றின் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் :** என் விடையிலேயே அதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். அருகாமையில் உள்ள ஒரு கிராமத்தையும் சேர்த் துத்தான் கணக்கிடப்பட்டிருக்கிறது. வேறு கிராமங்களில் இருந்து விண்ணப்பங்கள் வந்ததாகச் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**திரு அ. லெ. சுப்பிரமணியம் :** பொதுவாக திருநெல்வேலி மாவட்டத் தைப் பொறுத்தவரையில் 1962-63ல் இருந்து அவர்கள் மனுச் செய்தும் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதாகப் புகார் இருக்கிறது. சாத்தான் குளம் சப் தாலுகாவில் கருங்கடல் கிராமத்திலிருந்து கிட்டத்தட்ட 30 கிணறுகளுக்கு வேண்டி மனுச் செய்யப்பட்டும் இன்னும் லைன்கள் போடப் படாமல் இருக்கின்றன. இதை நான் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இருந்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. திருநெல்வேலி மாவட்டத்தில் மின் இணைப்புக் கொடுப்பதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது என்ற குற்றச்சாட்டை டெவலப்மெண்ட் கவுன் ஸிலிலும் கூறியிருக்கிறோம். ஆகவே இது குறித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் :** உறுப்பினர் அவர்கள் சொல்வது முற்றிலும் தவறு. சென்ற இரண்டு ஆண்டுகளாக ஆண்டு ஒன்றுக்கு 50,000-க்கு மேற்பட்ட பம்ப் செட்களுக்குக் கொடுத்து இருக்கிறோம். ஆகவே, உறுப்பினர் அவர்கள் சொல்வது சரியல்ல. மேலும் விவரங்கள் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட்டால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப் பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு சித்தன் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்னை பற்றிய அறிவிக்கை கொடுத்திருக்கிருர்கள். அதை நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

**2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்**

**(அ) உணவு விடுதிகளில் பண்டங்களின் விலை உயர்வைத் தடுக்கத் தவறியமை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு சித்தன் அவர்கள் ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிருர்கள். அதாவது— முற்ப 10.0

**That the business of the House do stand adjourned to discuss a definite matter of urgent public importance, namely, the failure of the Government to bring down the prices in hotels which has caused great deal of hardship to the public**

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கடந்த காலத்தில் இப்படிப்பட்ட சில ஒழுங்கீனங்கள் நடைபெற்று வந்ததாகத் தனிப்பட்ட புகார்கள் வந்து மாநில அளவில் பாதிக்கப்பட்டவர்களை யார் யார் என்று கணக்கிடுகிறார்கள். வருங்காலத்தில் முறையாகக் குறைகளை நீக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு ஆராயப்பட்டு வருகிறது. விரைவில் இந்தக் குறைகள் நீக்கப்படும்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** பஞ்சாயத்து ஒன்றியங்களிலே மேலாளரை மாற்றுகிறார்கள். அங்குள்ள எழுத்தர்கள் மாற்றப்படுவதில்லை. அவர்கள் ஒரே நிலையில் இருப்பதால் தலைவருக்கும் அதிகாரிக்கும் இடையே உட்பூசலை வளர்க்கிறார்கள். அது நிர்வாகத்திற்கு இடையூறாக இருக்கிறது. ஆகவே, எழுத்தர்களையும் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை அந்தந்த மாவட்டத்திற்குள்ளேயே மாற்றுவது பற்றி அரசு யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** குறைகள் இருக்குமானால் எழுத்தர்களை மாற்றும் அதிகாரம் ஆட்சித் தலைவருக்கே வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** ஒரு பஞ்சாயத்து யூனியனில் பணிபுரியும் எழுத்தர்களானாலும் மற்ற யாராக இருந்தாலும், ஓராண்டு, ஒன்றரை ஆண்டுகளுக்குமேல் ஒரே இடத்தில் இருக்கக்கூடாது. அங்கே பணிபுரிகின்றவர்கள் அங்கிருந்து மாற்றப்படக்கூடாது என்று சட்ட மன்ற உறுப்பினர்கள் சிபாரிசுக்கு வந்தால்கூட ஏற்றுக் கொள்ளாது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை அவர்களை எல்லாம் கண்டிப்பாக மாற்ற வேண்டுமென்பதற்கான உத்தரவை அரசாங்கம் அனுப்ப முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஊராட்சிப் பெரியவர்கள், பணிபுரியும் எழுத்தர்கள் ஓராண்டு, ஒன்றரை ஆண்டுக்குமேல் ஒரே இடத்தில் இருக்கக்கூடாது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சிபாரிசு செய்கிறார்கள். அந்தச் சிபாரிசை ஏற்றுக் கொள்ளுவதற்கில்லை.

### செல்லப் பிராட்டி—தாமனூர் சாலை.

302 வினா.—**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி-சேத்துப்பட்டு நெடுஞ்சாலையிலிருந்து பிரிகின்ற செல்லப் பிராட்டி-தாமனூர்-வெடால் சாலையைச் செப்பனிடுவதற்கு ஐந்தாண்டுத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் என்றால், எப்பொழுது வேலை துவங்கப்படும் ?

(உ) அச்சாலை செப்பனிட எவ்வளவு தொகைக்கு மதிப்பீடு போடப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) முதல் (உ) வரை—கேள்வியில் குறிப்பிடும் வேலையானது, 3-வது திட்ட "ஏனைய சாலை" வேலைகளில் ஒன்றான "இல்லோடு, பொன்னகர-தாமனூர் சாலையில் 6-வது பர்லாங்கும், 2-வது மைலுக்குமிடையே கல் ரோடு போடுதல்" என்ற வேலையில் உட்படும். இதன் மதிப்பீட்டுச் செலவு ரூ. 46,000. மூன்றாவது திட்டத்தில் ஏனைய சாலைகளின்கீழ் சேர்க்கப்படும். மூன்றாவது திட்டத்தில் அரசின் ஒப்புதல் பெறாததுமான வேலைகளை நான்காவது திட்டத்தில் சேர்த்துக்கொள்ள அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த வேலைக்கு, மாவட்ட மன்றத்தின் கருத்துப்படி 12-வது வரிசைதானம் கொடுக்கப்பட்டுள்ளது. உரிய காலத்தில் இதற்கு அரசின் ஒப்புதலளிக்கப்படும்.

**திரு. ரா. ரா. முனுசாமி:** செஞ்சி-சேத்துப்பட்டு நெடுஞ்சாலையிலிருந்து பிரிகின்ற செல்லப்பிராட்டி-தாமனூர்-வெடால் சாலையைச் செப்பனிட திட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எப்போது அந்தச் சாலையை செப்பனிட அரசாங்கம் முன்வரும் ?



**மாண்புமிகு திரு மா. முத்துசாமி :** ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலைகளில் அது 12-வது வரிசையில் இடம் பெறுகிறது. மாவட்ட வளர்ச்சி மன்றத்தால் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலைகள் முடிந்தால் நிதிநிலை இடம் கொடுக்கும்போது அது நீடிக்கப்படும்.

### *Sethusamudram Canal Scheme.*

* 335 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR—THIRU V. K. KOTHANDARAMAN: Will the Hon. the Minster for Labour be pleased to place on the Table of the House a copy of the report on the Sethusamudram Canal Project submitted to Union Government ?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** அறிக்கையின் நகல் ஒன்று தமிழ்நாடு சட்டமன்ற நூலகத்தில் உள்ளது.

**திரு வி. கே. கோதண்டராமன் :** இந்த சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்தை உடனடியாக முடிப்பதன்மூலம் விலைவாசிகளில் குறைவு ஏற்படும் என்றளவிற்கு ஒரு சூழ்நிலை இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே அதை முன்னிட்டாவது இதை எவ்வளவு விரைவில் முடிக்க ஏற்பாடு செய்யமுடியுமோ அந்தளவிற்கு எடுத்துக் கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. திட்டக் கமிஷன் ஒப்புதல் வந்தவுடன் வேலை தொடங்கப்படும்.

**திரு எஸ். இராமச்சந்திரன் :** இந்த சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்திற்கான அனுமதி கோரி எப்போது இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது ? இதனால் என்னென்ன நன்மைகள் விளையும் என்று அரசு எதிர்பார்க்கிறது ? வட நாட்டில் கண்ட்லா துறைமுகத்தை இலவசத் துறைமுகமாகச் செப்பனிட்டார்கள். அதைவிட அதிக நன்மை இதனால் கிடைக்குமா கிடைக்காதா என்பதை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** திட்டக்குழுவிற்கு 1964-ல் அனுப்பப்பட்டு விட்டது என்று கருதுகிறேன். 1969-ல், அதாவது இந்த ஆண்டு ஒப்புதல் கிடைக்கும். அப்படி ஒப்புதல் கிடைத்தால் 1974-ம் ஆண்டில் இது நமக்கு வருவாய் தரக்கூடும். இதனால் ஏறக்குறைய ஆண்டு ஒன்றுக்கு 232 லட்சம் ரூபாய் வருவாய் கிடைக்கக்கூடும். இந்தக் கால்வாய் மூலம் 360 மைல் அளவிற்குக் கப்பல் பிரயாணம் குறையும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு 4½ சதவீதம் வட்டி, செலவு எல்லாம் போக மொத்தம் 70 லட்சம் மிச்சம் வரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

**திரு சி. வீரமணி :** சேதுசமுத்திரக் கால்வாய் திட்டம் நீண்ட பெருங் காலமாக மத்திய அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டு வந்த ஒரு திட்டமாகும். 1967-க்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக பாராளுமன்ற உறுப்பினர்கள், இதனால் கப்பல் வாணிபம் அதிகமாகும் என்றும், தமிழ் நாட்டுக்கு இதனால் ஒரு பாதுகாப்பான முறை ஏற்படும் என்றும் மத்திய அரசுக்கு ஏகமனதாக எடுத்துரைத்து வந்ததால் தற்போது இது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. அந்தத் திட்டத்தை விரைவாக ஏற்படுத்துவதற்கு தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** இதையெல்லாம் கருதி மத்திய அரசினிடம் கேட்கப்பட்டிருக்கிறது. ஒப்புதல் வந்தவுடன் வேலை துவங்கப்படும்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம் அமலுக்கு வர கேட்டிருப்பதுபோல் அத்துடன் தூத்துக்குடி ஆழ்கடல் திட்டத்தையும் சேர்த்து கேட்கப்பட்டிருக்கிறதா ?

என்ற கருத்துக்காகக் கொடுத்திருக்கிறார்கள். விலையேற்றம் என்பது திடீரென்று ஏற்பட்டுவிடக்கூடியது அல்ல. ஆகவே, இது இந்த அவையை அல்லது ஒத்திவைத்து விவாதிக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது என்ற காரணத்தினால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(அ) எண்ணூரில் மலையாளிகள் ஆதிக்க எதிர்ப்பு பொதுக் கூட்டத்தினால் பீதியடைந்துள்ள மலையாளிகள் நிலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் இன்னொரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள் அதாவது—

எண்ணூர் பிரதேசத்தில் "மலையாளிகள் ஆதிக்க எதிர்ப்பு பொதுக் கூட்டம்" என்று போட்டு பலர் வெறித்தனமாகப் பேசியுள்ள போக்கைப் பற்றியும் அதனால் பீதி அடைந்துள்ள மலையாளிகளின் நிலைமையைப்பற்றியும் விவாதிக்க" என்று கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இப்பொருள் குறித்து விரிவான விளக்கம் தந்திருக்கின்ற காரணத்தினால் நான் இதற்கு அனுமதிதர மறுக்கிறேன்.

THIRU A. A. SUBBA RAJA: Sir, on a point of information.

MR. SPEAKER: No point of information now.

3. நடைமுறைக் கேள்விகள்

(அ) வினா நேரம் முடிந்தவுடன் தகவல் கோருவதற்கு உறுப்பினர்களுடைய உரிமை

THIRU K. VINAYAKAM: Sir, on a point of order. In any Parliament or Legislature as soon as the question-hour is over—it is known as the zero hour—and before the regular agenda for the day is taken up, if any hon. Member is handicapped for want of information, information may be asked—it is also in the interest of the Government—and also to enlighten the House information may be asked. It is also the practice even in the Parliament for any hon. Member to raise a point of information. Of course, after finding out whether the point raised is relevant or not, the Chair can reject it or not. But it is the privilege of any hon. Member to ask for any information on the face of the Earth and under the Sun.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய திரு விநாயகம் அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறார்கள். ஒழுங்குப் பிரச்சினை என்பது, நான் ஏற்கெனவே சொல்லியிருப்பதைப்போல், நமது சட்டமன்ற விதிமுறைகளிலிருந்து மாறாக ஏதாவது நடந்தால் அப்பொழுது வரும். திரு விநாயகம் அவர்கள் சொல்லுகின்ற "ஸீரோ ஹவர்" நமது விதிமுறைகளில் இடம் பெற்றிருக்கவில்லை. ஆகவே, எந்தவிதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.



4. அரசினர் தீர்மானம்

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையின் 244-வது விதியின்கீழ், 41-வது விதியின்(3)-வது உட்பிரிவின் படி, அதாவது, ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. கவன ஈர்ப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொதுமுக்கியமான காரியம் ஒன்றை திரு. எம். சுரேந்திரன் அவர்கள் மாண்புமிகு சுகாதார - அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

(அ) மேட்டூர் இரசாயனத் தொழிற்சாலையின் கழிவு நீரினால் அண்மையிலுள்ள கிணற்று நீர் பாதிக்கப்படுதல்.

**திரு. எம். சுரேந்திரன்.**— தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசர அவசியப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"மேட்டூர் ரசாயனத் தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் கழிவு நீரினால் அருகாமையிலுள்ள கிராமங்களின் கிணறுகளில் தண்ணீர் கெட்டும் குடிதண்ணீர் இல்லாமலும், விவசாயம் பாதிக்கப்பட்டும் உள்ளதால் தண்ணீர் வசதி செய்ய வேண்டிய அவசியம் பற்றி"

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் இரசாயனத் தொழிற்சாலையும் இரசாயன-பிளாஸ்டிக் தொழிற்சாலையும் வெளியிடும் கழிவுநீர் புதுசம்பள்ளியில் உள்ள கால்வாய்களின் நீருடன் கலப்பதால் அண்டையிலுள்ள குடிநீர்க் கிணறுகளிலும் பாசனக் கிணறுகளிலும் நீரின் தூய்மை கெட்டு விட்டது என்று அரசாங்கத்துக்கு முறையீடுகள் வந்துள்ளன. (தொழில் துப்புரவு) பொது சுகாதார உதவி இயக்குனரும், தொழிற்சாலைகளின் மேற்பார்வையாள அலுவலகத்தைச் சேர்ந்த முதுநிலை அதிகாரியும் இது குறித்து ஆய செய்தனர். இத் தொழிற்சாலைகளிலிருந்து வெளி வரும் கழிவு நீ அகற்றுவதற்கான முறைகள் குறித்து அவர்கள் கருத்துத் தெரிவித்தன தொழிற்சாலைகளின் கழிவுநீர் மேற்சொன்ன கால்வாயுடன் சேருவ நிறுத்தி விட்டதாகவும், மேட்டூர் இரசாயனத் தொழிற்சாலையின் கழி நீர் சரிவரத் தூய்மைப் படுத்தப்பட்ட பிறகு, குழாய் மூலம் எடுத்து செல்லப்பட்டு மேட்டூர் நீர்த்தேக்கத்தில் விடப்படுவதாகவும், இரசாயன பிளாஸ்டிக் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீர் தூய்மை படுத்தப்பட்ட பிறகு அகற்றப்படுவதாகவும் அத் தொழிற்சாலைகள் அறிவி துள்ளன. கழிவு நீரை அகற்றுவதற்கென இரண்டாவது தொழிற்சா குழாய்களை அமைத்து வருகிறது. 1969 ஜூன் இறுதிக்குள் இவ்வே முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வேலையை விரைவாக முடி வேண்டுமென்றும், கழிவுநீர் அகற்றப்படுவதற்கு முன்பு ந தூய்மைப் படுத்தப்பட வேண்டுமென்றும் அந்தத் தொழிற்சாலைகளை அரசு வற்புறுத்திக் கூறியுள்ளது.

மேற்படி இரண்டு தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர் தற்போது புதுசம்பள்ளி கிராமத்திற்கு நாளொன்றுக்கு 20,000 காலன் நீரை வழங்கி வருகின்றனர். அத்துடன், மேட்டூர் இரசாயனத் தொழிற்சாலை அதன் அருகில் நிறுவப்பட்ட மூன்று குழாய்கள் மூலம் கருமலைக்கூடல் கிராம மக்களுக்கு நீர் வழங்குகின்றது. அடுத்து ஜூலைத் திங்களிலிருந்து அது வழங்கும் நீரின் மொத்த அளவு 40,000 காலனாக அதிகரிக்கும். நாளொன்றுக்கு 60,000 காலன் நீர் வழங்கவேண்டியதன் அவசியத்தைத் தொழிற்சாலைகளிடம் அரசு வலியுறுத்தியுள்ளது. 1969 மார்ச்சு 3-ம் நாளன்று நடந்த ஒரு கூட்டத்தில், மேற்படி இரண்டுத் தொழிற்சாலைகளின் முதுநிலைப் பிரதிநிதிகள் 1969 ஜூலைத் திங்களுக்குள் நாளொன்றுக்கு 60,000 காலன் நீரை வழங்குவது குறித்து இதைமேலும் ஆய்வு செய்ய ஒப்புக் கொண்டுள்ளனர்.

அத் தொழிற்சாலைகளை மீண்டும் பார்வையிட்டு, அவற்றிலிருந்து வரும் கழிவு நீரைத் தக்கவாறு தூய்மைப்படுத்துவது குறித்து மேற்கொண்டு அறிக்கை ஒன்றை அனுப்புமாறு சுகாதாரப் பணிகள் அலுவலகத்தைச் சேர்ந்த தொழில் நுட்ப அதிகாரி ஒருவருக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, இந்த இரசாயனத் தொழிற்சாலையிலிருந்து வரும் நீரினால் அங்கே குடிதண்ணீர்க் கிணறு களும், விவசாயக் கிணறுகளும் கெட்டுப் போய், குடிப்பதற்கும் விவசாயம் செய்வதற்கும் வழியில்லாமல் இரண்டு வருஷங்களாக இருக்கிறது. இப் பொழுது அமைச்சரவர்கள் அறிவித்திருக்கின்ற கருத்துப்படி 60,000 காலன் தண்ணீர் கொடுப்பதைக் குறித்து ஆய்வு செய்ய ஒப்புக் கொண்டிருக் கிறார்கள் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தக் குடிதண்ணீர் கொடுப்பதற்குத் துரித நடவடிக்கையாக அங்கே பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டிலே 1,12,000 ரூபாயில் திட்டம் இருப்பதாக அறிகிறேன். அம்மாதிரியான காரியத்தைச் செய்ய பணத்தையாவது செல வழித்து உடனடியாகக் குடிதண்ணீர் கொடுக்க வழி செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருப்பது, இந்த இரண்டு தொழிற்சாலைகளும் வெளியிடும் கழிவுநீர், கால்வாய்களின் நீருடன் கலப்பதால் அண்டையிலுள்ள குடிநீர்க் கிணறுகளிலும், பாசனக் கிணறுகளிலும் நீரின் தூய்மை கெட்டுவிட்டது என்ற காரணமாக இருக்கிறது, அதற்காகத்தான் கவன ஈர்ப்பு. மேட்டூர் குடிதண்ணீர் சம்பந்தமாக 1 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு நடவடிக்கை எடுப்பது தனிப் பிரச்சினை. கழிவுநீர், கால்வாய் மூலம் வந்து மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது கவன ஈர்ப்புத் தீர்மானம். அதை நீக்க, தண்ணீரைத் தூய்மைப் படுத்தி அகற்றுவதற்காக எல்லாவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொண்டு வருகிறது என்பதைப் பற்றி அறிக்கை யில் விளக்கமாகக் கூறினேன். அருகேயுள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினை வேறு ; கழிவுநீர்ப் பிரச்சினை வேறு.

**திரு. எம். சுரேந்திரன் :** 'குடிதண்ணீர் இல்லாமலும், விவசாயம் பாதிக்கப்பட்டும் உள்ளதால் தண்ணீர் வசதி செய்யவேண்டிய அவசியம் பற்றி அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்' என்றுதான் இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அவர்கள் கொடுத்திருக்கின்ற அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே, "தொழிற் சாலையிலிருந்து வெளியாகும் கழிவு நீரினால் அருகாமையிலுள்ள கிராமங் களின் கிணறுகளில் தண்ணீர் கெட்டும், குடிதண்ணீர் இல்லாமலும், விவசாயம் பாதிக்கப்பட்டும் உள்ளதால்" என்றுதான் கூறியிருக்கிறார்கள். கழிவுநீரினால் குடிதண்ணீர் கெட்டும், விவசாயம் பாதிக்கப்பட்டும் உள்ளதால் தண்ணீர் வசதி செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றித்தான் கூறினார் கள். கழிவுநீரைச் சுத்தப்படுத்தி அனுப்ப வேண்டும், பரிசுத்தமாகச்





செய்து அனுப்ப வேண்டுமென்று அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது கழிவு நீராகவே வந்துவிடக்கூடாது, சுத்தப்படுத்தி அனுப்பவேண்டுமென்று தான் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான காரியம் ஒன்றை திரு ஜெ. பெள்ளி கவுடர், திரு. என். எஸ். வி. சித்தன், திரு. எம். பூபதி ஆகியோர் மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

## (ஆ) குன்னூர், உதகை ஆகிய நகரங்களில் குடிநீர்த் தட்டுப்பாடும் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடும்

**திரு. ஜெ. பெள்ளி கௌடர்:** தலைவரவர்களே குன்னூர், உதகமண்ட லம் நகரங்களில் குடிநீர்க் கஷ்டம் இருந்து வருகிறது. இந்த நிலையில் கோடைகாலம் நெருங்குகின்ற காரணத்தாலும் மேலும் அங்கு வருகின்ற மக்கள் . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களிடம் தட்டச்சு செய்து கொடுத் திருக்கிறார்கள் பாருங்கள், அதைப் படிக்க வேண்டும்.

**திரு. ஜெ. பெள்ளி கௌடர்:** சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ்- கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு சுகாதார- அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். "நீலகிரி மாவட்டம், குன்னூர், உதகமண்டலம் ஆகிய நகரங்களில் குடிநீர் கிடைக்காமையால் பொதுமக்களுக்கு ஏற்படவிருக்கும் இடர்ப்பாடுபற்றி"

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர்வர்களே, சட்டப் பேரவையின 41-வது விதியின கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கிய மான காரியத்தை மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"நீலகிரி மாவட்டம், குன்னூர், உதகமண்டலம் ஆகிய நகரங்களில் குடிநீர் கிடைக்காமையால் பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இடர்ப்பாடு பற்றி".

**திரு. எம். பூபதி :** பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கிழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"நீலகிரி மாவட்டம், குன்னூர், உதகமண்டலம் ஆகிய நகரங்களில் குடிநீர் கிடைக்காமையால் பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இடர்ப்பாடு பற்றி"

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகமண்டலம் நகராட்சியில் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் செயலில் உள்ளது. 1957 ஆகஸ்டில் நகராட்சிக்கு நீர் வசதிப் பெருக்கத் திட்டம் ஒன்றிற்கு ஒப்பளிப்பு வழங்கப் பட்டது. அத் திட்டம் பயனுள்ள வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. நக ராட்சிக்குத் தற்போது நீர் வழங்கும் வாயில்கள் அங்குள்ள மக்களுக்கும், சீருலாப் பயணிகளுக்கும் ஆண்டு முழுவதும் தேவையான நீர்வழங்கப் போதுமானதாக இல்லை. நகராட்சிக்கு நீர் வழங்குவதை நிலையாக உயர்த்த பார்சன்ஸ் பள்ளத்தாக்கு நீர்த் தேக்கத்திலிருந்து ரூ. 33 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் நீர் பெறுவதற்குத் திட்டமிடப்பட்டது. உதகமண்ட லம் நகராட்சி மன்றத்தின் தற்போதைய நிதி நிலைமை, புதிய திட்டத்திற்கு நிதி வழங்கப் போதுமானதாக இல்லை. தனது வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் நகராட்சி மன்றம் ஒப்புக்

கொடுக்கவேண்டும் என்பதில் இந்த அரசாங்கம் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. நீண்டகாலமாகவே அது தள்ளிப்போடப்பட்டுவிட்ட காரணத்தினால்தான் தாமதமே தவிர, தாமதத்திற்கு இந்த அரசாங்கம் மட்டும் காரணமல்ல. இப்பொழுதுள்ள நிலைமையில் இது வெகு அவசரமாகக் கவனிக்கப்படவேண்டிய காரியமாக இருக்கிறது. எல்லோருக்கும் சௌகரியமான முறையில் முடியும்படி நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும், மற்றும் அமைச்சர்களும் திருவனந்தபுரத்தில் கேரள அரசாங்கத்தோடு இதுபற்றி விரைவில் பேச்சு வார்த்தை நடத்துவார்கள்.

### 3. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### (ஆ) நீதிமன்ற விசாரணையிலுள்ள காரியத்தைப் பற்றி ஆய்வு செய்ய குழு அமைத்தல்.

* **திரு. ஏ. அ. சுப்பராஜா :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார். நேற்றைய தினம் ஒரு கமிட்டி பாரம் பண்ணியதைப் பற்றி, கிரிமினல் ப்ரொஸீடிங்ஸ் இருக்கும் பொழுது அப்படி ஒரு கமிட்டி அமைத்தால் ஸப் ஜுடிஸ் ஆகாதா என்று பேரவைத் துணைத்தலைவர் அவர்களைக் கேட்டேன். இன்றைக்குத் தலைவர் அவர்கள் அது சம்பந்தமாகத் தீர்ப்புச் சொல்வார்கள் என்று சொன்னார்கள். இதுவரையிலும் ஒன்றும் சொல்லாததினால் தான், உங்களுடைய அபிப்பிராயத்தை, ரூலிங்கைக் கேட்பதற்கு பாயிண்டு ஆப் ஆர்டர் எழுப்பினேன்.

* **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் இதைப் பற்றி அரசாங்கத்தின் சார்பாக நாங்கள் யோசித்துப்பார்த்தோம். அங்கே கிரிமினல் வழக்கு இருக்கிறது என்றால், காங்கிரஸ்காரர்கள் என்ற காரணத்திற்காக கிரிமினல் வழக்கு இல்லை. சில நபர்கள் மீது கிரிமினல் வழக்கு இருக்கிறது. அவர்களைப் பற்றிய வழக்கின் நியாயத்தைப் பாதிக்கக் கூடியது என்று சொன்னால் தான் அது ஸப் ஜுடிஸ் ஆகும். மாண்புமிகு நாகப்பட்டினம் உறுப்பினர் அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டு, பொதுவாக ஒரு கட்சியைப் பற்றிய குற்றச் சாட்டு. அது பொதுப்படைத் தன்மை படைத்ததாக இருப்பதால், ஸப் ஜுடிஸ் ஆகாது என்பது தான் அரசாங்கத்தின் கருத்து என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதற்காக ஒழுங்குப் பிரச்னை எழுப்பக் கூடாது. ஸப் ஜுடிஸ் பற்றித் தலைவர் தீர்ப்புச் சொல்வார் என்று துணைத் தலைவர் சொன்னார்கள் என்றால், தலைவர் சொல்லும்வரை காத்திருக்கவேண்டுமே ஒழிய, அதை ஒரு ஒழுங்கு பிரச்னையாக ஆக்கிவிட முடியாது. பேரவைத் தலைவர் அதைப் பற்றி முடிவு சொல்வார்கள் என்று துணைத் தலைவர் சொல்லியிருக்கிறார்கள் என்றால், பேரவைத் தலைவர் சொல்கிறாரா, இல்லையா என்று பார்த்துவிட்டு, அதன் பிறகு தான் ஒழுங்குப் பிரச்னை எழுப்பவேண்டும். இதில் எந்தவிதமான ஒழுங்குப் பிரச்னையுமில்லை. அதைப்பற்றி பேரவைத் தலைவர் ஆராய்ந்து முடிவு கூறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 6. 1969-70ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

கோரிக்கை எண் 1—‘ நிலவரித் துறை” என்ற ... ரூ. 1,77,36,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு [illegible]



**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, முழுமையான நிலச் சீர்திருத்தச் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவது பற்றி விவாதிக்க—

“கோரிக்கை எண் 1—‘ நிலவரித் துறை’ என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,77,36,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்”

என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

**திரு ஆ. கு. சுப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, நிலச் சட்டங்களை ஒழுங்குபடுத்தி, தீவிரமான நிலச் சீர்திருத்தம் கொண்டுவருவதைக் குறித்து விவாதிக்க—

“கோரிக்கை எண் 1—‘ நிலவரித் துறை’ என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,77,36,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்” என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை நான் முன் மொழிகின்றேன்.

THIRU R. PONNAPPA NADAR. Sir, to discuss about the total abolition of Land Revenue in the State.

“கோரிக்கை எண் 1—‘நிலவரித் துறை’ என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,77,36,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்”

என்ற என் பெயரில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, to point out the need to abolish land tax on wet lands also, I move the following cut-motion standing in my name —

“That the allotment of Rs. 1,77,36,700 under Demand No. I. Land Revenue Department be reduced by Rs. 100”.

**திரு. ஏ. ஆர். சுப்பராஜா :** பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சப் பிரதேசமாக ஆக்கப்பட்ட மாவட்டங்களில் நிலவும் தற்போதைய கெடுபிடி வசூல்களை நிறுத்துவது குறித்து விவாதிக்க—

“கோரிக்கை எண் 1—‘ நிலவரித் துறை’ என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,77,36,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்”

என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிறேன்.

**திருமதி கே. பி. ஜானகி அம்மாள் :** பேரவைத் தலைவர் அவர்களே விவசாயத் தொழிலாளர்களுக்குத் தரிசு நிலங்களை ஜாரி செய்து கொடுப்பது பற்றி விவாதிக்க—

“கோரிக்கை எண் 1—“ நிலவரித் துறை” என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,77,36,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்”

என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### (ஆ) கோரிக்கை எண் 4—முத்திரைத் தாள்கள் நிர்வாகம்

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன் :

" கோரிக்கை எண் 4—' முத்திரைத் தாள்கள் நிர்வாகம் ' என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,01,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

THIRU K. RAMAMOORTHY: To discuss policy, I move the following cut motion:

" That the allotment of Rs. 31,01,300 under Demand No. IV—Stamps Administration be reduced by Rs. 100 ".

திரு. வி. கே. கோதண்டராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற் சங்கங்களின் மூலம் நடைபெறும் எல்லா வழக்குகளுக்கும் முத்திரைத்தாள் கட்டணங்களிலிருந்து விலக்களிக்க வேண்டியதைப் பற்றி எடுத்துகூற—

" கோரிக்கை எண் 4—' முத்திரைத் தாள்கள் நிர்வாகம் ' என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 31,01,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

DR. H. V. HANDE: To discuss the non-availability of stamps and stamp paper and to point out the need to make them available in a number of places so that the public are not put to any hardship, I move the following cut-motion:

" That the allotment of Rs. 31,01,300 under Demand No. 4 --Stamps Administration be reduced by Rs. 100."

திரு. ஏ. அ. சுப்பராஜா: பேரவைத் தலைவர் அவர்களே, பெருமளவு முத்திரைத் தாள்கள் கிடைக்காதது குறித்து விவாதிக்க—

" கோரிக்கை எண் 4—'முத்திரைத் தாள்கள் நிர்வாகம்' என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 31,01,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

(இ) கோரிக்கை எண் 31—பஞ்சத் தணிப்பு

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

" கோரிக்கை எண் 31—' பஞ்சத் தணிப்பு ' என்ற தலைப்பின்கீழ் ரூ. 87,44,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

THIRU K. RAMAMOORTHY: To discuss the drought conditions and the inadequate relief measures to the agriculturists in our State with special reference to Tindivanam and Gingee taluks of South Arcot district, I move the following cut motion:

" That the allotment of Rs. 87,44,100 under Demand No. 31 Famine Relief be reduced by Rs. 100."

திரு. கே. என். குமாரசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் தாலுக்காவில் பஞ்சம் ஏற்பட்டுள்ளதினால் அங்கு பஞ்ச நிவாரண வேலைகள் மேற்கொள்வது பற்றியும், ஏழை எளியவர்களுக்கு கஞ்சித் தொட்டி வைக்கவும், கடன்களை நிறுத்தி வைப்பது பற்றியும் விவாதிக்க—



" கோரிக்கை எண் 31—' பஞ்சத் தணிப்பு ' என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 87,44,100-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் "

என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கோவில் பட்டி தாலுகாவில் பருவமழை தவறிய பிரதேசத்தில் உடனடியாக நிவாரண நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று விவாதிக்க— முற்பகல் 10-30

" கோரிக்கை எண் 31—'பஞ்சத் தணிப்பு' என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 87,44,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE: Sir to discuss policy and to bring home the inadequacy of funds allotted to the district of Ramanathapuram and to point out the need to declare large areas of the districts of Ramanathapuram, Tirunelveli, Chingleput, North Arcot and Coimbatore as famine areas, I move the cut motion standing in my name:

" That the allotment of Rs. 87,44,100 under Demand 31—Famine Relief—be reduced by Rs. 100. "

திரு. எம். பூபதி: தலைவர் அவர்களே, கோவை போன்ற பல மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பஞ்ச நிலையைத் தணிக்கத் காலதாமதம் செய்தது பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 31—'பஞ்சத் தணிப்பு' என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 87,44,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்கிற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், பஞ்சம் பீடிக்கப்பட்ட நிலையில், அரசு இப்போது அளித்துள்ள தொகை போதுமானதல்ல என்பதைப்பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 31—'பஞ்சத் தணிப்பு' என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 87,44,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்கிற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

(ஈ) கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:

" கோரிக்கை எண் 32—'ஓய்வூதியங்கள்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,57,84,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, ஓய்வூதியங்கள் அளிக்கப்படும் முறை குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 32—' ஓய்வூதியங்கள் ' என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,57,84,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற என் பெயரில் உள்ள வெட்டுத்தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நகராட்சி, கோயம்புத்தூர் மாவட்ட
ஆட்சித் தலைவரைக் கலந்துகொண்டு இவ்வேலையை எடுத்துக்கொள்ளும்.
இதனால் நீர் வரவு நாளொன்றுக்கு மொத்தம் 20 இலட்சம் காலன் நீர்
இடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்சொன்ன ஏற்பாடுகள் மூலமாக, கோயம்புத்தூரில் குடிநீர்ப் பற்றுக்
குறையைப் போக்க இயலுமென்று நம்பப்படுகிறது.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் தண்ணீர்ப்
பற்றுக்குறைப் பிரச்னை சுமார் 15 ஆண்டுகளாக இருக்கிறது. பல்வேறு
முறைகளிலே முயற்சி செய்தும் அது தீர்க்கப்படவில்லை. ஆகவே, அமைச்
சர் அவர்கள் 2 ஆண்டுகளாக, பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டிருக்
கிறோம் கேரள அரசாங்கத்துடன் என்று சொல்லப்பட்டது. இதை உடனடி
யாக, இரண்டு சர்க்காரும், நல்லதொரு முறையிலே, இருவருக்கும் சாதக
மான முறையிலே பேசி முடிவு செய்து கோவை நகரமக்களுக்குத் தண்
ணீர் அளிக்கவேண்டும். ஆகவே, இதைச் சுமுகமாக, சீக்கிரமாக முடிக்க
அரசு நடவடிக்கை எடுக்குமா எனக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கேரள அரசாங்
கத்துடன் இதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். அந்த முடிவு வரு
வதற்குள்ளாக வறட்சி அதிகமாக ஏற்பட்டிருக்கிற காரணத்தால் அவசர
மாக, இந்தத் திட்டங்களை எல்லாம் பரிசீலனை செய்து, அதை விரைவிலே
செய்து கொடுப்பதற்கும் இன்றைக்கு அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்
டிருக்கிறது.

**டாக்டர் எச்.வி. ஹாண்டே:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது
எத்தனை காலன்கள் ஒரு நாளைக்கு கோயம்புத்தூரில் கொடுப்ப
தற்கு நம்மிடம் தண்ணீர் இருக்கிறது ? எத்தனை காலன்கள் ஒரு
நாளைக்குக் கோயம்புத்தூருக்குத் தேவையாக இருக்கிறது ? அந்த இரண்டு
"ஃபிகர்ஸுக்குள்" மிகுந்த வித்தியாசம் இருக்கிற காரணத்தினால்
அரசாங்கம் உடனடியாக அந்தக்கிணறுகளை வெட்டுவதிலே காலதாமதமாவ
தால், "ஜையண்ட் வெல்ஸ்", ராட்சஸக் கிணறுகளைப் போல—இப்பொழுது
கூட இராஜஸ்தானிலே அது மாதிரி நடந்து கொண்டிருக்கிறது—இதைத்
தீர்க்க திட்டம் இருக்கிறதா ? அண்மையிலே கலெக்டர் கூட ஒரு திட்டத்தை
சமர்ப்பித்தார். அது பத்திரிக்கையிலே கூட வந்தது. அந்தத் திட்டத்தை
அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறதா ? இப்பொழுது நமக்குத்
தேவையான தண்ணீரை "ஜாஸ்தி" தண்ணீரைக் கொடுக்க முடியும்,
ஏற்பாடு செய்யப்படும் என்று வாக்குறுதி கொடுக்க முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இப்பொழுது ஒரு
நாளைக்கு 50 காலன் தண்ணீர் தேவை. அது வழங்கப்பட்டு வருகிறது.
ஆனால் கோடைக் காலத்தில் அந்த நீர் குறைக்கப்படுகிறது. 25 லட்சம்
காலனாகக் குறைக்கப்படுகிறது. ஆக, தேவை 25 இலட்சம். குறைக்கப்
படுகிற 25 லட்சத்தை ஈடு செய்தால்தான் இந்த புதிய திட்டங்கள்மூலம்
100 துளைக் கிணறுகள் அமைப்பதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.
ஏற்கனவே, 35 துளைக்கிணறுகள், பிறகு 4 துளைக்கிணறுகள் அமைக்கப்
பட்டு வருகின்றன. மேலும் 2 துளைக்கிணறுகள் அமைக்கப்
படும். ஆக, இந்த 41 துளைக்கிணறுகள் விரைவில் அமைக்கப்
இடைக்கும். 100 துளைக்கிணறுகளின் மூலம் 5 இலட்சம் காலன் நீர்
மணி ஏரிகளிலும், பெரிய குளத்திலும் மேலும் 5 துளைக் கிணறுகள்
அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. ஆக, இந்தக் கிணறுகளின்
மூலம் 25 இலட்சம் காலன் நீரையும் ஈடுசெய்து, மொத்த 50 லட்சம்
காலன் நீர் இடைக்க வாய்ப்புகள் இருக்கின்றன. இராஜஸ்தானிலும்
மற்ற மாநிலங்களிலும் செய்கின்ற ராட்சஸ கிணறு வேலைகளையெல்லாம்
இங்கே செய்யவேண்டிய வேலை இல்லை. இந்தக் கிணறுகளின் மூலமே
தற்போது நிலைமையைச் சரிசெய்து கொள்ளலாம். ஆனால், தற்போது



நடக்கின்ற
சிறுவாணி தண்ணீரை எடுத்துக்கொள்வதற் பேச்சு வார்த்தை அதிகமான தண்ணீரை
காரணத்தாலே, இந்த நிலையில் பிறகு
நாம் பெறமுடியும்.

**டாக்டர் எச்.வி. ஹாண்டே:** இப்பொழுது எந்த அளவுக்குத் தண்ணீரைக்
குறைத்திருக்கிறார்கள் ? ஒரு நாளைக்கு எத்தனை காலன்கள் குறைக்கப்
பட்டிருக்கின்றன ? அப்படிக் குறைக்கப்பட்டிருக்கக்கூடிய தண்ணீரை
எத்தனை நாட்களுக்குள் மீண்டும் சரிக்கட்டப்போகிறார்கள் என்பதை அமைச்
சர் அவர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நான் அதைத்
தான் சொன்னேன். 50 லட்சம் காலன் தண்ணீர் கொடுக்கவேண்டும்.
25 லட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த 25 லட்சம் காலனை ஈடு
செய்வதற்காகத்தான் இந்தத் துளைக்கிணறுகள் திட்டம் என்று தான்
சொன்னேன். எவ்வளவு விரைவிலே அந்தத் தண்ணீரைக் கொடுக்க
முடியுமோ அவ்வளவு விரைவிலே கொடுப்பதற்கு பொதுப்பணித்துறை
நடவடிக்கை எடுத்து, விரைவிலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டி
ருக்கிறது.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, கோவை நகரத்தில் 3½ லட்சம்
மக்கள் இருக்கிறார்கள். தலா 20 காலன் தண்ணீர் கொடுத்தால் கூட
குறைந்தபட்சம் 70 லட்சம் காலன் தண்ணீர் வேண்டும். தற்சமயம்
கொடுக்கப்படுகிற குறைந்த தண்ணீர் பல ஆண்டுகளாகக் கொடுக்கப்பட்டு
வருகிறது. 50 லட்சம் காலன், 25 லட்சம் காலனாகக் குறைக்கப்பட்டு,
அப்படிக் குறைக்கப்பட்ட 25 லட்சம் காலன் தண்ணீரைச் சரிக்கட்டுவதற்கு
ஏற்பாடு நடந்துகொண்டிருப்பதை வரவேற்கிறோம். ஆனால், இது யானைப்
பசிக்கு சோளப்பொறி போடுவது போல்தான் இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கம் வேண்டாம். தயவுசெய்து
கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. எம். பூபதி :** இந்தத் தண்ணீர்ப் பற்றுக்குறையை நிரந்தரமாகப்
போக்குவதற்கு கேரள சர்க்காருடன் துரிதமாகப் பேச்சுவார்த்தை நடத்தி
ஒரு சுமுகமான முடிவுக்கு விரைவில் வந்தால்தான், இந்தப் பிரச்னையைச்
சீக்கிரமாகத் தீர்க்கமுடியும்.

**மாண்புமிகு திரு.கே.ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்
களுக்கு இருக்கிற குடிதண்ணீர் பற்றிய குறையை இந்த அரசாங்கம்
மிகத் தெளிவாக உணர்ந்திருக்கிறது. இதுபற்றி கேரள அரசாங்கத்தோடு
பேசி, பரம்பிக்குளம், மற்றபடி பவானி ஆகியவைகளோடு ஒருங்கிணைந்த
திட்டமாக ஆராய்ந்து முடிவு காணவேண்டியிருக்கிறது. இந்தப்
பிரச்னையைப் பற்றி மறைந்த மாண்புமிகு முதல் அமைச்சர் அறிஞர்
அண்ணா அவர்கள் கடைசியாக நடத்திய நல்ல காரியம், அவர்களும்,
நம்முடைய முன்னாள் பொதுப்பணி அமைச்சரும், இன்றைய முதல்
அமைச்சரும், கேரள அரசாங்கத்தின் முதல் அமைச்சர் திரு. நம்பூதிரிபாட்
அவர்களுடனும், மற்ற அமைச்சர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தியது
தான். இதைப்பற்றித் தனியாகப் பேசி முடிப்பதற்கில்லை. இது மற்ற
திட்டங்களோடு ஒருங்கிணைந்த திட்டமாக இருக்கிறது. இரண்டு தடவைகள்
பேச்சுவார்த்தைகள் நடந்தன. மீண்டும் திருவனந்தபுரம் கொச்சியில்
பேச்சு வார்த்தை நடப்பதாக இருந்தது. அது நடக்கவில்லை. அடுத்த
கட்டமாக மாண்புமிகு முதல் அமைச்சர், நிதி அமைச்சர், பொதுப்பணித்
துறை அமைச்சர் ஆகியோர் கேரள முதல் அமைச்சருடன் திருவனந்த
புரத்தில் பேச்சுவார்த்தை நடத்துவதாக இருக்கிறது. அடுத்த கூட்டம்
திருவனந்தபுரத்தில் நடைபெறும். இதுபற்றி இரண்டு அரசாங்கமும்
ஒரு உடன்பாட்டிற்கு வருவதற்காக சில நிலைமைகளை வைத்திருக்கிறார்கள்.
அவைகளை உயர்மட்டத்தில் நம்முடைய அதிகாரிகள் யோசனை செய்து
கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்னை ஒருங்கிணைந்த பிரச்னையாக இருப்
பதால் கொஞ்சம் தாமதமாகிறது. கோவைக்கு துரிதமாகக் குடி தண்ணீர்

DR. H. V. HANDE: Sir, to discuss policy and point out the dire need of increasing the amount of pension to all pensioners on the basis of cost of living index and to bring home the fact that the pension that is being given to pensioners now is woefully inadequate, I move the cut motion standing in my name:

"That the allotment of Rs. 4,57,84,300 under Demand No. 32—Pensions—be reduced by Rs. 100."

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே,

To discuss about the enhancement of the rates of pension in view of the changed circumstances,

என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,57,84,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. பி. வேலுசாமி:** தலைவர் அவர்களே, வயோதிகர்களுக்கு நிறுத்தப்பட்டுள்ள பென்சன் மீண்டும் வழங்குவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,57,84,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் ஓய்வூதியம் அனுமதிப்பதில் தாமதத்தை நீக்குவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,57,84,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**(உ) கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,66,07,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

DR. H. V. HANDE: Sir, to discuss policy I move the cut motion standing in my name:

"That the allotment of Rs. 7,66,07,200 under Demand No. 36—Other Miscellaneous Compensation and Assignments—be reduced by Rs. 100."

**திரு. பி. வேலுசாமி:** தலைவர் அவர்களே, கேளிக்கை வரியின் கீழ் உள்ளாட்சித் துறைக்கு அதிக வரி ஒதுக்குவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 7,66,07,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.



**(ஊ) கோரிக்கை எண் 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண். 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு—என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,10,50,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

DR. H. V. HANDE: Sir, to discuss policy I move the cut motion standing in my name:

"That the allotment of Rs. 1,10,50,000 under Demand No. 37—Compensation to Zamindars—be reduced by Rs. 100."

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, இனிமேல் ஜமீன்தார்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையை நிறுத்திவிடுவது குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,10,50,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்கிற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, ஜமீன்தார்களுக்கு வழங்கும் இழப்பீடுகளைக் குறைக்காதது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,10,50,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்,

என்கிற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, ஜமீன்தார்களுக்கு இழப்பீடு வழங்குவதை நிறுத்தி வைப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,10,50,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்,"

என்கிற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**(எ) கோரிக்கை எண் 45— ஓய்வூதியங்களை மொத்தமாக்கிக் கொடுத்தல்.**

**மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:

"கோரிக்கை எண். 45—ஓய்வூதியங்களை மொத்தமாக்கிக் கொடுத்தல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,20,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

DR. H. V. HANDE: Sir, to discuss policy and to point out the need to once again give full pension after the incumbenth as outlived his or her commuted pension period, I move the cut motion standing in my name:

"That the allotment of Rs. 10,20,000 under Demand No. 45—Commuted Value of Pensions—be reduced by Rs. 100."

**திரு. பி. வேலுசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியங்களை மொத்தமாக்கிக் கொடுத்தல் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 45—ஓய்வூதியங்களை மொத்தமாக்கிக் கொடுத்தல்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,20,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**(ஏ) கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்.**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : பேரவைத் தலைவர் அவர்களே; ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 36,39,13,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. பி. வேலுசாமி** : சார், கடன்களைத் தள்ளுபடி செய்வது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 36,39,13,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்." என்கிற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி**: தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுமையிலும் உள்ள பஞ்சப் பகுதிகள், வறண்ட பகுதிகள் அனைத்திலும் விவசாயிகள் பெற்றுள்ள கடன்கள் இவ்வாண்டு வசூலிக்கப்படாதென்ற பொது உறுதியை அளிக்கத் தவறியமை பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 36,39,13,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்கிற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி** : தலைவர் அவர்களே, பருவ மழை தவறிய கோவில்பட்டி தாலூகாவில் கடன் வசூல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று விவாதிக்க—

"கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 36,39,13,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்கிற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு வருகின்றன.

***மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நடைபெறுகிற வருவாய்த் துறை மானியங்களின் கீழ் கொள்கைக் குறிப்பு (a) என்கிற [illegible] அச்சடித்து ஒரு குறிப்பு தயாரித்திருக்கிறேன். அது சட்டசபை நடவடிக்கைகளில் என்னுடைய முன்னுரையாகக் கருதப்பட்டு, அதன் மேல் இந்த விவாதத்தைத் தொடங்கலாம் என்று கருதுகிறேன். அந்த உரையில் சொல்லியிருப்பது போல, ரெவின்யூ இலாகா என்றாலே, சங்கடமான [illegible] என்று ரொம்ப நாளாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. [illegible] எதிர்க்

(a) 759-766-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக [illegible]



கட்சித் தலைவர் அவர்கள் கூடச் சொல்லுவார்கள். இருந்தாலும், இன்றையதினம், புதிய அரசு பல கோடிக்கணக்கான விவசாய கிராம மக்களுக்கு நன்மை செய்ய இந்த நிர்வாக இயந்திரத்தை உபயோகப்படுத்தி வருகிறது. இந்தப் புனிதமான காரியங்களைச் செய்ய, கிராம மறுமலர்ச்சி ஏற்பட, இந்த ரெவின்யூ இயந்திரத்தைப் புதிய அரசு திருத்துவதற்கு, முற்போக்கான, உற்சாகம் மிகுந்த கொள்கையை உருவாக்கியிருக்கிறது. அந்தக் கொள்கையை அமலாக்குவதன் மூலம், கலெக்டர்கள், மாவட்ட நிர்வாகிகள், ரெவின்யூ போர்டு, இவற்றிற்காக கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து, இது "ஆபீசர்ஸ் ஓரியண்டட்" ஆக நடைபெற்று வந்திருக்கிறது. மக்கள் திட்டங்களில் பங்கு கொள்ள வேண்டும், மக்களிடத்தில் எழுச்சி ஏற்பட வேண்டும், அதிகாரிகளின் புன்னகையை விட, ஏழைகளின் கண்ணீர் கவனிக்கப்படவேண்டும், என்ற முறையில் பேரறிஞர் அண்ணா அமைத்துக் கொடுத்த புதிய கொள்கை குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகளிடையே புதிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்றாலும், அது செம்மைப்படுவதற்கும், முழுமை எய்துவதற்கும், மக்களுக்குப் பணி புரியும் பணிகள் புனிதமாவதற்கும், வெற்றி பெறுவதற்கும், ஏற்ற முறையிலே விவாதம் நடைபெறவேண்டும் என்று விரும்புகிறேன்.

இந்தச் சுருக்கமான விளக்கத்தோடு, மற்றவற்றை என்னுடைய பதிலில் சொல்லலாம் என்று கூறி, நல்ல கருத்துக்களை எல்லாத் தரப்பினரும் கொடுத்து ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் அளிப்பதற்கு பிற்பகல் 1 மணிக்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இப்பொழுது 2 மணி 20 நிமிடங்கள், அதாவது 140 நிமிடங்கள் இருக்கின்றன. பேசுவதற்கு 21 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் 7 நிமிடங்கள் தான் கிடைக்கும். எந்தெந்தக் கட்சிக்கு எவ்வளவு நேரம் என்பது ஒதுக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் அதைப் பங்கிட்டுக்கொண்டு, குறிப்பிட்ட காலவரையறைக்குள் தங்களுடைய உரையை முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு பி. ஜி. கருத்திருமன்** : தலைவர் அவர்களே, இதில் எதிர்க் கட்சியாகிய நாங்கள் தான் மிகவும் கஷ்டப்படுகிறோம். முன்பு ஒரு சமயம் ஆளும் கட்சிக்கு 56 நிமிடங்கள் கொடுத்தீர்கள். எங்கள் கட்சிக்கு 20 நிமிடங்கள் தான் கொடுக்கப்பட்டன. நியாயம் என்றால் நியாயமாக இருக்க வேண்டும், கண்டிப்பாக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. இராமமூர்த்தி அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைப்பார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி** : பேரவைத் தலைவர் அவர்களே, என் சார்பாகவும், என்னுடைய கட்சியின் துணைத் தலைவர் அவர்களாலும், என் கட்சியின் சார்பிலே முன் மொழிந்த வெட்டுத் தீர்மானங்களை வழிமொழிந்து பேசுகின்ற அளவிலேயும் வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வருவாய்த் துறை மானியக் கோரிக்கையைப் பற்றி அரசினர் கொள்கை விளக்கக் குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். வருவாய்த் துறையைப் பொறுத்த வரையில், புஞ்சை நிலங்களுக்கு வரி வஜா செய்ததோடு, நஞ்சை நிலங்களுக்கும் வஜா செய்வது என்ற கொள்கையைச் சென்ற ஆண்டு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்ட போது எங்களுடைய கட்சித் தலைவர்களும், மற்றவர்களும் அது குறித்து அச்சத்தைத் தெரிவித்தோம். நஞ்சை நிலங்களுக்குத் தீர்வை வஜா செய்கிற நேரத்தில் தண்ணீர்த் தீர்வை எந்த அளவில் விதிக்கப்படுமோ என்ற அச்சமும், அது பற்றி நிபுணர் கமிட்டி ஆராய்ந்த முடிவை எந்த அளவில் இந்த அரசு ஏற்க இருக்கின்றது என்பது குறித்தும் சென்ற ஆண்டு பேசியது நினைவில் இருக்கிறது. எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பிலே, "நஞ்சைத் தீர்வைக்குப் பதிலாக பாசனத் தீர்வை

விதிப்பது பற்றி அரசு முனைப்பாக ஆராய்ந்து வருகிறது" என்று குறிப் பிடப்பட்டிருக்கிறது. நஞ்சைத் தீர்வையை ரத்து செய்து விட்டு அதற்குப் பதிலாக இன்னொரு தீர்வையை விதிப்பதா? அந்த வரிக்குப் பதிலாக வேறு வரியை விவசாயிகளின் மீது விதிப்பது என்ற முறையில் இது அணுகப்பட்டிருக்கிறது. நஞ்சையானாலும் சரி, புஞ்சையானாலும் சரி அதை ரத்து செய்து, விவசாயிகளுக்கு நல்ல நிலைமையை உண்டாக்க வேண்டுமென்ற அடிப்படையில் அணுகப்படவேண்டும். இவையாவதினம் விவசாயிகளின் மீதுள்ள வரியை ரத்து செய்து, அதை விட கூடுதலான வரியை விதிப்பதற்கு இந்த அரசு அஞ்சவில்லையென்பதையே இந்தக் குறிப்பு எடுத்துக் காட்டுகிறது. "ஒரு கையாலே கொடுத்ததை மறு கையாலே எடுத்துக்கொள்வது போல" என்று சாதாரணமாகச் சொல்வார்கள். அது போன்று இது "ஒரு கையாலே கொடுத்ததை, இன்னொரு கையாலே பிடுங்கிக் கொள்வது" என்ற அளவில் தான் இருக்கிறது. இந்த அறிக்கையின் பல்வேறு பகுதிகளிலும் அரசின் நிலைமைகளை எந்த அளவில் அணுகுகிறார்கள். எந்த அளவில் ஆராய் கிறார்கள் என்ற நிலைமை தான் இருக்கிறது.

நில உச்சவரம்புச் சட்டத்தைப் பொறுத்த வரையில், இது காங்கிரஸ் சர்க்காரால் கொண்டுவரப்பட்டது. ஆனால் இந்த அரசு அதை ஒரு பிரசார சாதனமாகப் பயன்படுத்தி வருகிறது. நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் என்ன நன்மையை எதிர்பார்த்தோமோ, அது ஈடேறியதா என்றால் இல்லை என்றே சொல்லவேண்டும். நில உச்சவரம்பு சட்டத்தின் மூலம் எவ்வளவு நிலங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோமோ அதை விட மிகக் குறைந்த அளவில்தான் நிலம் கிடைத்திருக்கிறது. இந்த சட்டத்தின் மூலம் 8,129 எக்கர் நிலம்தான் இந்த அரசுக்குக் கிடைத்திருக்கிறது என்று புள்ளி விவரம் காண்பிக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலமாக அரசுக்கு எவ்வளவு நிலம் கிடைத்தது என்பது முக்கியமல்ல. இதனால் பெரும் நிலச்சுவான்தார்கள் எந்த அளவுக்குக் குறைந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். நிலமானது பெருத்த அளவில் தனியார்களிடத்தில் இருக்க கூடாது என்பது தான் இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். எவ்வளவு பெரும் நிலச் சுவான்தார்கள் குறைந்திருக்கிறார்கள் என்ற முறையில் தான் அரசு இந்தக் கொள்கையை அணுக வேண்டும். காங்கிரஸ் ஆட்சி எந்த அளவுக்கு இந்த சட்டத்தைக் கொண்டு வந்து நன்மை செய்திருக்கிறது என்பதை அப்போது தான் உணர முடியும்.

இன்னொன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிலச் சீர்திரு த்தச் சட்டத்தைப் பற்றிப் பேசுகிறபோதெல்லாம், நிலம் அதிகமாக வைத்திருந்தால் தான் விவசாயம் நல்ல முறையில் அமையும் என்ற கருத்து பரவலாக வழங்கி வருகிறது. அது மிகவும் தவறான கருத்து. இரண்டு எக்கர், மூன்று எக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் எல்லாம் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியும். அமைச்சர் அவர்களும் அதை அறிவார்கள். 30 லட்சம் பட்டாதாரர்கள் 5 எக்கருக்குக் குறைவாக நிலம் படைத்தவர்கள் என்பதை முன்பொரு நாள் பதிலளிக் கும்போது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்தில் இருக்கும் நிலங்கள் சிறு நிலங்களாகப் பரவியிருக்கிற நிலைமையைக் காண்கிறோம். நிலச் சீர்திருத்தச் சட்டத்தைத் தங்களுடைய பிரசார சாதனமாக அமைத்துக் கொள்வதை விட, அதை நல்ல முறையில் அணுகுவது தான் சிறந்ததாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதோடுகூட இன்னொரு சட்டத்தைக் குறிப்பிட்டார்கள். புரட்சி கரமான "காம்ப்ரஹென்ஸிவ் ஆக்ட்" நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் கொண்டுவர இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் பிராக்டிகல் என்று சொல்லும் படியான, பிரத்யட்சமான நிலைமை இருக்க வேண்டும். இதை ஏதோ கொள்கை ரீதியாக அல்லது திட்டங்கள் ரீதியாக அணுகுவது மட்டும்



போதாது. அந்தக் கொள்கைகளின் மூலமாக விவசாயிகளுக்கு நன்மை எந்த அளவில் ஏற்படும் என்பதை அடிப்படையாகக் கொண்டு அணுகினால் தான் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னொன்றையும் உதாரணமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்தில் இந்த அவையில் "குத்தகை உரிமை ஆவண மசோதா" வையும் "குடியிருப்பு அனுபோகதாரர்கள் திருத்த மசோதா"வையும் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். முதல் மசோதா இந்த சட்டமன்றத்தில் நிறை வேற்றப்பட்டு, மேலவை அனுமதி பெற்று, இந்த மன்றத்திற்குத் திரும்ப வந்தபோதிலும் கூட, இந்த மசோதாவைக் கொண்டு மற்றத் துறையில் இருப்பவர்களைப் போல் விவசாயிகள் நடத்தப்பட்டிருக்கிறார்களா என்றால் இல்லை.

அடுத்தபடியாக, இந்தக் குடியிருப்பு அனுபோகதாரர்கள் திருத்த மசோதா அறிமுகப்படுத்தவிருக்கிற இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். "நில சீர்திருத்தச் சட்டங்களின் காரணமாக சிறிய விவசாயிகள் பாதிக்கப்பட மாட்டார்கள்" என்ற உறுதியை இந்த அரசு அளிக்க வேண்டும். விவசாயப் புரட்சியை உண்டாக்குகிறோம், நிலச் சீர்திருத்தச் சட்டங்களைச் செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு இருக்கும் சர்க்கார், உண்மையிலேயே விவசாயிகளின் நலன்களைப் பாது காப்பதற்கும், விவசாய முன்னேற்றத்திற்கு வழி செய்யவும் கடமைப்பட்டிருக்கிறது. நிலம் வைத்திருப்பவர்களிடம் தவறான நோக்கோடு அணுகுகிற நிலைமையை இந்த அரசு ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது. இந்த நாட்டினுடைய உணவுப் பிரச்சினையை முதலாவது பிரச்சினையாகக் கொண்டு இந்தச் சர்க்கார் செயல்பட வேண்டும்.

இன்னொன்றையும் நாம் காண்கிறோம். மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் வேளாண்மைத் தொழிலாளர்களின் குடும்பங்களைக் குடியமர்த்த இந்திய அரசு உதவியளித்துள்ளது என்று சொல்லியிருப்பதைக் காண கிறோம். இந்த அரசின் தரப்பிலே கொடுக்கும் எல்லாக் குறிப்புகளிலும் மத்திய அரசின் உதவிகள் எந்தெந்த வகையில் கொடுக்கப்படுகின்றன, எந்த அளவிலே கொடுக்கப்படுகின்றன, அவற்றை நாங்கள் இந்த இந்த அளவிலே பயன்படுத்துகிறோம் என்ற விவரங்களுடன் இந்த அவையின் முன்னால் வைக்க இந்த அரசு தயங்குகிறது. ஆனால் அவர்கள் தருகின்ற உதவியை பொதுப்படையாகச் சொல்கிறார்கள். ஆனால் இவர்கள் செய்யும் காரியங்களையெல்லாம், இந்த இந்த காரியங்களுக்கு இவ்வளவு இவ்வளவு என்று விவரங்கள் காட்டுகிறார்கள். ஆகவே, மத்திய அரசு தரும் உதவியை, இந்த இந்த அளவில் பயன்படுத்துகிறோம் என்று சொல்லவேண்டும். மத்திய அரசின் உதவி இவ்வளவு கிடைத்தது, இதன் காரணமாக இந்த அளவுக்குத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம், தந்த பணத்தில் மீதம் இருக்கிறதா, இல்லை அதிகமாகச் செலவிட்டிருக் கிறார்களா என்கிற விவரங்களை எல்லாம் கொடுக்கவில்லை. இனி வருவன வற்றில் கொடுக்கவேண்டும், பதிலிலாவது கொடுக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வறண்ட பகுதிகளைப் பொறுத்த வரையில் நிலவரியைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். நிலவரியை வஜா செய்ய வேண்டும் என்ற கொள்கையைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டாலும் திட்டவட்டமாக உத்தரவிடப்படவில்லை. அது பற்றி அதிகாரிகளை அணுகிக் கேட்கின்ற நேரத்தில், முடிந்தவர்கள் கட்டட்டும், மற்றவற்றைப் பார்த்துக்கொள்ளலாம் என்கிறார்கள். முடிந்தவர்கள் தரட்டும் என்ற கொள்கை ஏற்கப் பட்டாலும்—அது செயல்படுகின்ற நேரத்தில் என்ன ஆகும் என்பதை அமைச்சர் அவர்கள் உணரவேண்டும். மேலிருந்து கீழே படிப்படியாக வந்து கிராமத்தில் உள்ள மணியக்காரர் செயல்படுகிறபோது—அவர் எல்லோரையும் தான் நிர்ப்பந்தப்படுத்தி வசூல் செய்துவிடுகிற நிலையைப் பார்க்கிறோம். ஆகவே வறண்ட பகுதிகளில் இவ்வாண்டு நிலவரியை வசூல் செய்யக்கூடாது என்பதாக அரசு கண்டிப்பான உத்தரவைப் போட்டு உத்தரவாதம் அளிக்கவேண்டும்.

அதோடு பஞ்சப் பகுதிகள், வறண்ட பகுதிகள், இவற்றைப் பொறுத்த வரையில் அரசு தான் செய்தாக வேண்டிய கடமையைச் செய்யத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். வறண்ட பகுதிகள் என்ன என்ன, அங்கே எந்த எந்த முறையில் நிவாரண வேலைகளைச் செய்வது என்பதை முன்கூட்டியே திட்டமிட்டு ஒரு ஃபேஸ்டு ப்ரோக்கிராமாக இந்தச் சர்க்கார் நடத்தியிருக்க வேண்டும். இவ்வளவு பணம் என்று ஒதுக்கிவிடுகிறோம். அவரவர்கள் பார்த்துச் செய்வார்கள் என்று விட்டுவிட்டது சரியல்ல. முன்கூட்டியே நிலைமையை உணர்ந்து அதிகாரிகளை வைத்துக் கலந்துகொண்டு உருவான திட்டத்தைச் செயல் படுத்தியிருக்கவேண்டும். அப்படி இல்லாத காரணத்தினால் வறண்ட பகுதிகளில் உள்ள மக்கள் இன்றையதினம் அவதிப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். அவர்களை அவதிப்படவிட்டுவிட்டு, திடீர் திடீர் என்று கூடிக் கூடிப் பேசுகின்றார்களே தவிர ஒன்றுமில்லை என்று குற்றஞ்சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போலவே, வறண்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் வசூலைக் கண்டிப்பாக ஒத்திவைக்க வேண்டுமென்ற உத்தரவை இந்த அரசாங்கம் இன்னமும் அளிக்கவில்லை என்று தெரிவித்துக்கொள் கிறேன். அதன் காரணமாகத்தான் இன்றையதினம் கடன் திருப்பித் தருபவர்கள் தரட்டும் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். ஏழை இருக்கிறவர்கள் தம்முடைய விருப்பு வெறுப்புக்கு ஏற்ப நடந்து கொள்கிறார்கள். இதன் காரணமாகவும் பலர் பெரிதும் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு கூட, சர்க்கார் நிலங்களை, புறம்போக்கு நிலங்களை அடைமானம் செய்வதில், ஒப்படைப்பு செய்வதில் அரசு நல்ல கொள்கையை வரை யறுக்க வேண்டும். நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதை ஏற்றாலும், பல பினாமிகளின் பெயரில் அந்த நிலங்கள் கொடுக்கப்படுவதைத் தடுக்கவேண்டும். மேலும் எந்தக் காரணத்திற்காக நிலம் கொடுக்கப்பட்டதோ அந்தக் காரணத்திற்கு இரண்டாண்டுக்குள் அதைப் பயன்படுத்தாவிட்டால் அதைத் திரும்ப மாற்ற முயற்சிக்க வேண்டும். வீடு கட்ட என்றால் வீடு கட்டப்படவேண்டும். விவசாயத்திற்கு என்றால் விவசாயம் தெரிந்தவர்களுக்குக் கொடுத்து அங்கே விவசாயம் நடைபெறச் செய்யவேண்டும். ஆகவே, இது பற்றிக் கண்காணிப்பு அவசியம்.

கடைசியாக, போர்ட் ஆப் ரெவின்யூ முறையை மாற்றியிருக்கிறார்கள். அதை எடுத்துவிட இருப்பதான குறிப்பைப் பார்க்கிறேன். இது மாற்றப் படவேண்டிய முறை தான் என்றாலும் நீண்ட நெடுங் காலமாக இருந்து வந்துள்ள அந்த முறையை எடுப்பதனால் எவ்வித இடர்ப்பாடும் வரா திருக்க சர்வ ஜாக்கிரதையுடன் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வளவு முக்கியமான தேவையான ஸ்தாபனமாக அது இயங்கி வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. நீங்கள் அதிகம் பேசினால் உங்கள் கட்சிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நேரம் தான் போகிறது. உங்கள் கட்சியில் மற்றவர்கள் பேசக்கூடிய நேரம் குறையும்.

**திரு. க. இராமமூர்த்தி:** ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். ஜமாபந்தி முறையை ஒழிப்பதைப் பாராட்டுகிற நேரத்தில் தோட்டி, தலையாரிகளை எடுத்துவிடுவது பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும். கிராம உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தை உயர்த்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று சொல்லி, என் கட்சி சார்பில் தரப்பட்டிருக்கிற வெட்டுப்பிரேரணையை ஆதரித்து உரையை முடித்துக்கொள் கிறேன்.



**திரு. எம். சி. பாலன்:** பெரு மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நிதி அமைச்சர் அவர்களால் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் தெரிவிப்பதற்கு முன்னால் நாலரைக் கோடி மக்களின் நாயகனாக விளங்கிய அறிஞர் அண்ணா அவர்களுக்கு எனது அஞ்சலியைச் செலுத்திக்கொள்கிறேன்.

நமது அமைச்சர் அவர்கள் நில வரியை எடுத்து அதற்குப் பதிலாகப் பாசன வரி என்ற ஒன்றைக் கொண்டுவர இருப்பதாகத் தெரிவித்திருக் கிறார்கள். ஒரு காலத்தில் மன்னர்கள் ஆண்டபோது நல்ல வருவாய் வந்தபோது அதில் ஒரு பகுதியைத்தான் வரியாக வாங்கினார்கள். இப் போதுதான் பர்மனென்ட் செட்டில்மேண்டு, வில்லேஜ் செட்டில்மேண்டு, ரயத்துவாரி செட்டில்மெண்டு என்பதாக நடைமுறைக்கு வந்திருக்கிறது. 1935-இல் இருந்து மஞ்சள் பெட்டி வைத்து ஓட்டுக் கேட்ட காலத்தில், நாங்கள் பதவிக்கு வந்தால் பேசிக் வரியை விதிப்போம் என்று காங்கிரஸ் காரர்கள் சொன்னார்கள். ஆனால் பதவிக்கு வந்த பிற்பாடு அதைப் பற்றியே பேசவில்லை. மாறாக, பேசிக் டாக்ஸ் என்று இருந்த எங்கள் பகுதியில் கூட நிறுத்தியிருக்கிறார்கள். உதாரணமாக ஒன்று சொல்கிறேன். அங்கே இருக்கிற திரு. பொன்னப்ப நாடார், திரு. வில்லியம் போன்ற குமரி மாவட்டத்துப் பெருந் தலைவர்கள் பெரிய போராட்டங்கள் நடத்தி சிறை சென்று துன்பப்பட்டார்கள். தாய்த் தமிழகத்தோடு சேர்வ தற்காக. 1—11—1956-இல்தான் நாங்கள் தாய்த் தமிழகத்தோடு சேர முடிந்தது. அடுத்த பத்தாண்டுகளில் எங்களுக்குக் கிடைத்த பரிசு என்ன? குமரி மாவட்டத்தின் மீதும், செங்கோட்டைத் தாலுக்காவைச் சேர்ந்த பகுதிக்கும்—ரயத்துவாரிச் சட்டத்தைத் திணித்தார்கள். மன்னர் ஆட்சியில் இருக்கிறபோதே ரயத்துவாரிதான் இருந்தது. திரு. சி. பி. ராம சுவாமி ஐயர் திவானாக இருந்தபோது மக்களுக்கு நன்மை செய்வ தற்காகவே பேசிக் டாக்ஸைக் கொண்டுவந்தார்கள். அதன்படி ஏக்கருக்கு ரூ. 1.56 கட்டி வந்தோம். ஆனால், அந்தப் பகுதியில் இருந்து வந்துள்ள எங்களைக் கேட்காமலேயே, சட்டமன்றத்து சாங்ஷன் இல்லாமலேயே ஏக்க முற்பகல் ருக்கு 2 ரூபாய் வீதம் காங்கிரஸ்காரர்கள் எங்கள் மீது வரியைப் போட் 11-00 டார்கள். காங்கிரஸ் கட்சிக்காரர்கள், நாங்கள் தாய்த் தமிழகத்தோடு சேரு வதற்கு ஆசையோடு வந்தோமே, அதற்காக ஒரு செண்டுக்கு 56 பைசா என்று எங்களுக்குத் தெரியாமல் வரி விதித்திருக்கிறார்கள். அந்த 56 பைசா என்ற வரியை திருப்பித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ரயத்து வாரிச் சட்டத்தை எங்களுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்தொடு, அதற்காக ஒரு செலக்ட் கமிட்டி போட்டார்கள். அந்த செலக் கமிட்டி கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்து மக்களிடம் நிலைமை களை விசாரித்துவிட்டு பிறகு அது சம்பந்தமாக சட்டமன்றத்திலே தீர் மானம் கொண்டுவரப்பட்டது. மதிப்பிற்குரிய அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் அந்த செலக்ட் கமிட்டியில் ஒரு டிஸெண்டிங்நோட் கொண்டுவந்தார் கள். இப்பொழுது வருவாய்த் துறை அமைச்சர் ஆக இருக்கின்றவர்கள் அப்பொழுது சொன்னார்கள். அவர்கள் அப்பொழுது அந்த ரயத்துவாரிச் சட்டத்திலே பேசுகின்றபொழுது தாய்த் தமிழகத்தோடு சேர வேண்டு மென்ற ஆசையோடு அவர்கள் வந்தார்கள், அவர்களுக்குக் காமராஜ் பிறந்த நாள் பரிசாக இந்தப் பாறாங்கல்லைத் தூக்கி அவர்கள் தலையிலே போடுகிறீர்களே என்று கேட்டார்கள். ரயத்துவாரிச் சட்டம் கொண்டுவந் தார்கள். இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. செட்டில்மெண்ட் முடிய வில்லை. டிமாண்ட் நோட்டீஸ் வரவில்லை. செங்கோட்டைத் தாலுக்காவில் 1-7-1967 முதல் வரி விதிப்பதற்காக முயற்சி செய்தார்கள். அதைப் பற்றி நானும் மதிப்பிற்குரிய தென்காசி உறுப்பினர் திரு. கதிரவன் அவர்களும் அதை அமைச்சர் அவர்களிடம் சொன்னவுடன் அவர்கள் உடனே அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். தமிழகம் முன்னேற வேண்டுமானால், பேசிக் டாக்ஸ் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வரி விதிப்பு முறை ஒரு நாள் மன்னனுக்குச் சொந்த மாக இருந்தது. அதற்குப் பிறகு செட்டில்மெண்டு வந்தது. அதற்குப்

பிறகு வில்லேஜ் செட்டில்மெண்ட் வந்தது, அதற்குப் பிறகு ரயத்துவாரி வந்தது. இப்பொழுது புஞ்சை நிலத்திற்கு வரியில்லை என்று ஆக்கியிருக்கிறோம். இதற்குப் பிறகு பேசிக் டாக்ஸ் என்று வைத்துவிட்டு அதற்குப் பிறகு வரியே இல்லாமல் எடுத்துவிட வேண்டும். அப்படி எடுத்துவிடுவதுதான் புரட்சியின் கடைசி அதிகாரமாக இருக்க வேண்டும். இந்த வரியின் மூலம் 1½ சத வீதம்தான் வருவாய் வருகிறது. இதைக் குறைப்பதினாலே பெரிய நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. இதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். பூமியின் மீது வரி போடுவது என்பது "We are taxing the instrument" ஆகும். எனவே நிறுவனத்தின் மீது வரி போடுகிறோம். அது இல்லாமல் உற்பத்திப் பொருள்களின் மீது வரி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

வருவாய்த் துறை வாரியத்தை நிறுத்திவிடப் போவதாக அமைச்சர் அவர்கள் இந்தக் குறிப்பிலே தெரிவித்து இருக்கிறார்கள். திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசியபொழுது இது பாரம்பரியமாக வந்த வாரியம் ஆயிற்றே என்றார்கள். ஒரு காலத்திலே வரியை வசூல் செய்வதற்கு கலெக்டர்களை நியமித்தார்கள். அவர்கள் ஒழுங்காக வசூல் செய்கிறார்களா, ஜமீன்தார்களோடு சேர்ந்துவிடுகிறார்களா, எந்த முறையில் வசூல் செய்கிறார்கள் என்பதைக் கண்காணிப்பதற்காக இந்த வாரியம் நிறுவப்பட்டது. வெள்ளைக்காரன் காலத்திலே நிறுவப்பட்டது. இதை நீங்கள் இருபது ஆண்டுகளாக வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். என்ன நடந்திருக்கிறது? அதை ஒரு சுப்ரீம் கோர்ட்டாக வைத்துக்கொண்டு என்ன என்ன நடந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு பெட்டிஷன் நாம் போட்டால் ரெவின்யூ போர்டிலிருந்து வெளியே வருவதற்கு 7, 8 வருஷங்கள் ஆகும். ஒரு காலத்தில் ரைஸ் மில்லுக்காக பெட்டிஷன் போட்டால் அதற்கு 10 வருஷங்கள் ஆகும். இப்பொழுது அதற்காக கலெக்டரிடம் மனு கொடுத்தால் அது அமைச்சருக்கு வந்து இரண்டே வாரத்தில் டிஸ்போஸ் ஆகிவிடுகிறது.

மாவட்ட நிர்வாகம் குறித்து அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது.) கனம் சபாநாயகர் அவர்கள் எனக்கு இன்னும் 5 நிமிடங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டம் 620 சதுர மைல்கள் பரப்புள்ள 12 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட ஒரு சின்னஞ் சிறிய மாவட்டம் ஆகும். அது கற்றவர்கள் நிறைந்திருக்கிற பகுதி. செழிப்புள்ள பகுதியாக அது இருந்தாலும் கூட மக்கள் தொகை அதிகமாக இருப்பதால் கஷ்டமாக இருக்கிறது. எனவே நெல்லை மாவட்டம்—ஒரு பெரிய பரப்பளவைக் கொண்டது—இருக்கிறது, அங்கே இருக்கிற நாங்குனேரி வட்டத்தை கன்னியாகுமரி மாவட்டத்துடன் சேர்த்துவிட வேண்டுமென்று நீண்ட நெடுங்காலமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சங்கர ரெட்டியார் அதைப் பலமாக எதிர்த்தார். அவர் எதிர்த்ததற்காக காமராஜ் அவர்கள் அதை விட்டுவிட்டார்கள் . . . . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்திலே, முன்னாள் முதலமைச்சராக இருந்தவர்களைப் பற்றியும், மறைந்துபோன சங்கர ரெட்டியார் அவர்களைப் பற்றியும் குற்றச்சாட்டுகள் கூறுகிறார்கள். இது முறையா? அந்த மாதிரிக் குற்றஞ்சாட்டுவதற்கு அவர்களுக்கு உரிமையிருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**திரு. எம். சி. பாலன்:** நான் குற்றச்சாட்டாகச் [illegible] செய்தியாகத்தான் சொன்னேன்.



**திரு. க. இராமமூர்த்தி:** அந்தச் செய்திக்கு ஆதாரம் வேண்டும். அதை நிரூபிக்கின்ற நிலைமை இருக்க வேண்டும். நான் சொன்னபோது அன்று அமைச்சர் அவர்கள், வெகு வேகமாக, நிரூபிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த முறையையே இதற்கும் கடைப்பிடிக்க வேண்டும்.

**திரு. எம். சி. பாலன்:** அந்தச் செய்திக்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களே சாட்சி.................

**திரு. க. இராமமூர்த்தி:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், தலைவர், அவர்களே, உறுப்பினர் அவர்கள் அதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறாரா என்பதைச் சொல்ல வேண்டும் என்ன கேட்டுக் கொள்கிறேன். அன்றைக்கு இரோவின்பற்றி நான் சொன்னபோது உடனே நிரூபிக்க வேண்டுமென்று சொன்னார்கள்.........................................

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உடனடியாக நிரூபிக்க வேண்டுமென்று விதிமுறைகளில் இல்லை.

**திரு. எம். சி. பாலன்:** நான் அதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்...........................

**திரு. க. இராமமூர்த்தி:** சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்........

**Thiru M. C. BALAN:** Sir I am not yielding.

**Thiru K. RAMAMOORTHY:** Sir, as it is a point of order, the hon. Member has got to yield.

நிரூபிக்கிறேன் என்று சொன்னால் மட்டும் போதாது. நிரூபிக்கின்ற பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் நிரூபித்தாக வேண்டும். நாங்கள் கேட்கவில்லை, அதனால் அவர்கள் சொல்லவில்லை என்ற நிலைமை இருக்கக் கூடாது. அவர்கள் நிரூபிக்க வேண்டுமென்று தாங்கள் கட்டளையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிரூபிக்கிறேன் என்று சொன்னாலே அதை ஏற்றுக் கொள்கின்றார்கள் என்று நான் அர்த்தம், வேறு என்ன பொருள் என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** நிரூபிக்கிறேன் என்று சொன்னதால் அவர் நிரூபிக்கின்ற பொறுப்பை தலைவராக இருக்கின்ற தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்...................

***மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது யாருடைய கௌரவத்தையும் பாதிக்கக்கூடியது அல்ல. அவர்கள் இப்படி ஒரு கருத்துக் கொண்டிருந்தார்கள் என்று சொன்னார்கள். அதை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். ஒரு உறுப்பினர் அபாண்டமாகவோ உரிமையைப் பாதிக்கக் கூடிய அளவிலே அவர்கள் சொன்னால் தான் வரும். காமராஜ் நாடார் அவர்களும் சங்கர ரெட்டியார் அவர்களும் அப்படிக் கருத்துக் கொண்டிருந்தார்கள் என்று சொல்வது அவர்கள் அபிப்பிராயத்தைப் பற்றிய விஷயம் தான், குற்றச்சாட்டு அல்ல. புதிய கருத்தை அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் கொண்டிருந்த கருத்தைத் தான் சொல்லியிருக்கிறார்கள், எனவே இது குற்றச்சாட்டின் கீழ் வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** இந்த அவையிலே இல்லாத ஒருவர் பற்றி அவர் இன்ன கருத்துக் கொண்டிருந்தார் என்று.......

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், கனம் உறுப்பினர் அவர்கள் அதை, இல்லை என்று மறுக்கிறார்களா [illegible]தைச் சொல்ல வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : மண்ணெண்ணெய் விஷயமாக அடுத்த நாளே ஐந்து பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் தப்பித்துக் கொள்ள முடியாது. நாங்கள் சொன்னது, வெளியில் அதிக விலை விற்கப்படுகிறது என்பதாகும். அடுத்த நாளே நடவடிக்கை எடுத்து சிலரைக் கைது செய்திருப்பதால் அங்கத்தினர் சொன்னது முழுக்க முழுக்க உண்மை என்பதை சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி** : திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசிய நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவையில் இல்லை. அப்போதே நான் குறுக்கிட்டுச் சொல்லியிருக்கிறேன். "மண்ணெண்ணெயைப் பதுக்குகிறவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. யார் கூடுதலான விலைக்கு விற்றாலும் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் படுகிறது" என்று நான் சொன்னேன். அவர் சொன்னதற்கு முன்னாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. சொன்ன பிறகும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படும். நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்குகிறது என்பது தான் அவருடைய குற்றச்சாட்டு. அந்த நிலை இல்லை என்று விளக்கப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்று இல்லை. இல்லாத நேரத்தில் பேசியதாகக் கருதிக் கொண்டு விளக்க முன் வந்தது விந்தையாக இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : நான் சர்க்காரைப் பாராட்டுகிறேன். நாங்கள் சொன்ன அடுத்த நாளே கைது செய்தார்கள்.

## 6. 1969-70-ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**திரு. எம். சி. பாலன்** : துணைத் தலைவர் அவர்களே, பலரும் குறுக்கிட்ட காரணத்தால் 10 நிமிடத்தில் 2 நிமிடந்தான் பேசியிருக்கிறேன். மீதி 8 நிமிடத்தையும் எனக்குத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டங்கள் சிறிய அளவில் அமைக்கப்பட்டால்தான் நிர்வாகம் நல்ல முறையில் இயங்கும் என்று அமைச்சர் அவர்கள் புரட்சிகரமான திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். குமரி மாவட்டம் மிகச் சிறிய மாவட்டமாக இருக்கிறது. நெல்லை மாவட்டம் மிகப் பெரிய மாவட்டமாக இருக்கிறது. நாங்குநேரி வறண்ட பகுதி, குமரி மாவட்டப் பகுதிகள் செழிப்பான பகுதி. குமரி மாவட்டத்தில் மக்கள் தொகை அதிகம், நாங்குநேரியில் மக்கள் தொகை குறைவு. ஆகவே, அதை எங்கள் மாவட்டத்துடன் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது என்னுடைய கருத்து என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் இது அந்த மாவட்டத்தில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துமாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில், பி. ஏ., பி. எல்., எம். ஏ. படித்தவர்கள் எல்லாம் கூட கடந்த 12 ஆண்டு காலமாக தாசில்தார்களாகவே இருக்கிறார்களே தவிர, சப்-கலெக்டர் புரொமோஷன் யாருக்கும் தரப்படவில்லை. மற்ற மாவட்டங்களில் பலர் புரொமோஷன் பெறும் நிலையில் இங்கு அந்த நிலை இல்லை. தாய்த் தமிழகத்துடன் சேர வந்தவர்கள் என்ற நிலையிலே எங்களைக் காங்கிரஸ் கட்சி காலத்திலே கவனிக்கவில்லை. நமது சர்க்கார் அதற்கான வழியை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கலெக்டர் என்ற பெயரை மாற்ற வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கலெக்டர் என்பது ஒரு காலத்தில் ரெவின்யூவை கலெக்ட் பண்ணிய காரணத்தால் கொடுக்கப்பட்டது. இன்றையதினம் "மாவட்ட ஆட்சித் தலைவர்" என்று தமிழிலே அழகாகப் போட்டிருக்கிறார்கள். எனவே, "டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கமிஷனர்" என்ற முறையிலே ஏதாவது ஒரு நல்ல பெயரை வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



குமரி மாவட்டத்தில் ஒரு செண்ட் புறம்போக்குகூட இல்லாத அளவுக்கு எல்லாவற்றையும் ஆக்கிரமித்து விட்டார்கள்.

பல்வேறு குளங்கள் இன்று ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருக்கின்றன. புத்தூர் குளம் கிட்டத்தட்ட ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இன்று தூர்ந்து போகிற நிலையில் இருக்கிறது. மூவாயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகிற குளமாகிய தேரூர் குளத்தையும் இன்று ஆக்கிரமித்து விட்டார்கள். ஆகவே அவற்றில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை வெளியேற்றக் கூடிய நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மணக்குடி குளம் இரு புறத்திலும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. புறம்போக்கு நிலங்களில் நிலம் இல்லாதவர்கள் ஒன்று அல்லது இரண்டு செண்ட் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு வீடுகள் கட்டிக்கொண்டிருந்தால், அதைப்பற்றி நாம் கவலைப் படுவதற்கில்லை. ஆனால் பெரிய பணக்காரர்கள் இன்றைய தினம் அவற்றை ஆக்கிரமித்து கொண்டிருக்கிறார்கள். மலைப் பகுதிகளைக்கூட அவர்கள் இன்று ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லப் போனால் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் என் மீது சீறி விழுவார். அவரது கட்சியைச் சார்ந்த ஒரு பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு. பி. வி. நாடார் அவர்கள் 60 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு அங்கு ரப்பர் தோட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இப்படி குளங்கள், மலைப் பகுதிகள் இவைகள் ஏராளமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் திரு. பி. வி. நாடார் அவர்கள் ஏதோ நிலத்தை ஆக்கிரமித்து வைத்திருப்பதாகவும் அதைச் சொன்னால், நான் சீறி விழுவேன் என்றும் உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த கழிந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டி போட்ட அபேட்சகர் புறம்போக்கு நிலங்களைப் பல இடங்களில் ஆக்கிரமித்து வைத்துக் கொண்டிருப்பது அன்னருக்குத் தெரியுமா என்று கேட்க விரும்புகிறேன். (ஆரவாரம்.)

**திரு. எம். சி. பாலன்**: பி. வி. நாடார் அவர்கள் காங்கிரஸ் கட்சியில் முக்கியமானவர். அவர் புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டதற்காக என் நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்து கொள்கிறேன். (ஆரவாரம்.) சம்பக்குளத்தில் இம் மன்ற உறுப்பினர் திரு. சிதம்பரநாதன் அவர்கள் பல ஏக்கர் நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருக்கிறார். இப்படியெல்லாம் பெரிய மனிதர்கள் இந்த இருபது ஆண்டுகளில் அங்கு ஒரு சின்ன புறம்போக்கு கூட இல்லாமல் ஆக்கிரமித்து விட்டார்கள். நிலம் இல்லாதவர்கள், வாழ வசதியற்றவர்கள் இவர்களுக்கு ஐந்து அல்லது பத்து செண்ட் நிலத்தைப்பதித்துக் கொடுப்பதை விட்டு விட்டு இன்று பெரிய பணக்காரர்கள், பெரிய மனிதர்கள் என்ற போர்வையில் பல ஏக்கர் நிலங்களை அவர்கள் ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் அந்த நிலங்களிலிருந்து வெளியேற்றி விட்டு அந்தப் பூமிகளை எல்லாம் ஏழைகளுக்குப் பங்கிட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் நிலவரியையும், பாசன வரியையும், ரெவின்யூ போர்டையும் இன்றைய தினம் அபாலிஷ் செய்ய வேண்டுமென்று கொண்டு வந்திருக்கிற புரட்சிகரமான திட்டத்தை நான் உளமாற வரவேற்றுப் பாராட்டி இந்த மானியக்கோரிக்கையை ஆதரித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

**THIRU K. S. KOTHANDARAMIAH** : Hon. Deputy Speaker, Sir, I thank you very much for giving me an opportunity to say a few words about the Demand relating to Land Revenue. The Hon. Minister has given us a copy of a Note in which the policy of the Government about the Revenue Department has been given. A perusal of it shows that the Government have got progressive ideas and the Hon. Minister in charge of it is seized

[Thiru K. S. Kothandaramiah] [1969 மார்ச் 14]

of the matter. Two important things are found there. One is the abolition of the Jamabandhi and the other is the abolition of the Board of Revenue. These are the legacies of the Britishers and they had been almost aristocratic.

With regard to the Jamabandhi, the Hon. Minister has very clearly stated that it has become almost a festival. We know very well how much the village karnam has to suffer during jamabandhi and he has to spend Rs. 300 to Rs. 400 at that time. I am very glad that the Hon. Minister has been able to take a final decision in regard to this matter which has been pending for a long time.

Coming to the land revenue on wet lands, the basic assessment on dry lands has been abolished one year ago and even the assessment on wet lands ought to have been abolished at that time but at least now the Hon. Minister has stated in the Note that the question of replacing wet assessment by a system of charging irrigation rates only is also under the active consideration of the Government. In this connection, I wish to state that with regard to areas which are under chronic drought conditions for the last two or three years, the Hon. Minister should abolish the entire assessment including all cesses. I also point out that the Government have been very kind enough to abolish the land revenue on dry lands but they have given powers to the Panchayat Unions to levy a surcharge on cesses. The Panchayat Unions, instead of levying 50 paise, have increased it to 100 paise. The benefit got by the abolition of the land revenue on dry lands has been taken away by the Panchayat Unions through this surcharge and the people are suffering and they have made complaints in that regard. Therefore, I request the Hon. Minister to take away that power of levying surcharges from the Panchayat Union Councils and the Government themselves can exercise that power.

Next with regard to drought conditions, I want to say a few words. A major part of our State is under drought condition. In the Governor's speech only two areas have been mentioned—North Arcot and Chingleput districts—but other areas have been omitted. As a result of it, the people of Hosur in the Dharmapuri district and other areas are thinking that the Government have forgotten them and they have also asked us, why we have not brought this matter to the notice of the Government. But in the Note now supplied to us, I am glad to find that the names of those areas also, viz., Dharmapuri district, have been included. In this connection, I wish to state that the entire State except the Dharmapuri district is under the spell of the North-East Monsoon but the Dharmapuri district which is situated on the Mysore Tableland gets rain from the North-West and South-West Monsoons. These monsoons commence in the month of May or June and if we get rain during those two months, we can have two crops but if the monsoons fail, the entire crops would be spoiled. Generally we do not get sufficient rain from the South-West Monsoon and



1969 மார்ச் 14] [Thiru K. S. Kothandaramiah]

that is why the people there are suffering acutely. In this connection, I wish to point out the nature of the monsoon and the crops there. The Commissioner of Famine in his report on the famine which occurred in 1891 has stated—

"The monsoon of 1891 was very capricious and insufficient, so much so, that in some localities there was no rain at all. In consequence much land remained unsowed; even where the land was sown there was at many places, absolutely no germination of seeds and even where the seeds germinated, the growing crops withered and died soon after they were above the ground."

The same famine conditions which were prevalent in 1891 have been prevalent in the Hosur taluk from 1965. The District Collector has made an excellent statement that these areas are in a drought condition. Fortunately he has toured the entire area and he has found that the rains have failed as also the crops. The Hon. Minister for Revenue and also the Hon. Minister for Agriculture have also promised to tour these areas but perhaps due to the grave illness of the ex-Chief Minister they were not able to go over there. Now I request the Hon. Minister to go over there before the Central Committee goes there to study the drought conditions there. In this connection, I also wish to inform the House that it is reported that the Members of the Central Committee would arrive in Bangalore to review the scarcity relief works in the Mysore State and also tour Tunkur and Chitradurga Districts. It is also mentioned in the Draft Outline of the Fourth Five-Year Plan that the Hosur taluk and certain western parts of the Krishnagiri taluk which are situated on the Mysore tableland are in a similar condition with regard to climatic conditions also. If there are crops in Kolar, there will be crops here. If there are rains there, there will be rains here. If the crops fail there, they will fail here also. Since the Central team has already visited that place and they have granted more than Rs. One crore to Kolar. I request the Hon. Minister to impress on the Central Government the need for allotting sufficient money to adjacent Hosur taluk. Then only the drought condition in Hosur taluk, prevalent for the past four years, can be redressed........

(The Hon. Deputy Speaker then called upon Thirumathi Janaki Ammal to speak.)

* **திருமதி கே. பி. ஜானகி அம்மாள்** : தலைவரவர்களே, இன்று கொண்டு வரப்பட்டிருக்கும் நில வருவாய்த்துறை மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்ததற்கு மகிழ்ச்சி. நில வருவாய்த்துறைதான் இன்று நமது முக்கியமான அயிட்டங்களிலே ஒன்ருக இருக்கிறது. அந்தத் துறையில் இன்று நமது அரசாங்கத்திற்குக் கிடைக்கும் வருவாய் மிகமிகக் குறைந்திருக்கிறது என்பது அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கை அறிக்கையிலிருந்து தெரிந்து கொள்ளமுடியும். 672·94 லட்சம் ரூபாய் இன்றைக்கு வருவாய் வருகிறது. இதில் நாம், பஞ்சாயத்து போர்டுகளுக்கும், பி.டபிள்யூ. இலாக்காக்களுக்கும், இன்னும் இதுபோன்ற இதர வகைகளுக்கும் கொடுத்ததுபோக, நமக்கு மீதம் நிற்கக்கூடியது 388·26 லட்சம் ரூபாய்தான். எவ்வளவு குறைவாக இருக்கிறது என்று பார்க்க வேண்டும். இதிலே புஞ்சை வரியை வேறு நாம் ரத்து செய்திருக்கிரும். முற்பகல் 11–30

**திரு க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் ஒன்றைச் சொல்லிவிட்டு அதை எதிர்க் கட்சிக்காரர்கள் மறுக்கிறார்களா என்று கேட்பது சரியல்ல. அவர்கள் அதைச் சொல்கிறபோது ஆதாரத்தோடு சொல்கிறார்களா என்பதைத் தான் பார்க்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தைக் கொண்டிருந்தார் என்ற அடிப்படையிலே ஒருவர் பேசினால் ஒன்றும் சொல்வதில்லை என்று சொன்னால் அணுக முடியாதவர்களையும், நிரூபிக்க முடியாதவர்களைப்பற்றியெல்லாம் நான் பேச நேரிடும். தமிழகத்திலே இல்லாதவர்களைப்பற்றி கூடச் சொல்ல முடியும். நிரூபிக்கிறேன் என்று சொல்லி விட்டால் போதாது, நிரூபிக்கின்ற நிலைமையை தலைவர் அவர்கள் ஏற்படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதிப்பிற்குரிய காமராஜ் அவர்களைப் பற்றிப் பேசுகின்ற நேரத்திலே தனிப்பட்ட முறையிலே பேசவில்லை கொள்கையைப் பற்றி பேச்சு இருக்கிறது. என்றாலும் நிரூபிக்கிற பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். மேலும் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி இந்த மன்றத்தின் நேரத்தை மனத்தில் கொண்டுநடவடிக்கைகளையும் நடத்திச் செல்லக் கூடிய வகையிலே இந்த விஷயத்தின் மேல் எந்த விதமான ஒழுங்குப் பிரச்சினையும் இனி எழுப்பாமல் இருக்க வேண்டும். திரு எம். சி. பாலன் அவர்கள் தொடர்ந்து பேசுவார்கள்.

**திரு. எம். சி. பாலன் :** நாங்குநேரி தாலுகாவை குமரி மாவட்டத்துடன் இணைக்க வேண்டு மென்பதை குமரி மாவட்டத்திலுள்ள பலரும், நெல்லை மாவட்டத்திலுள்ள பலரும் ஏற்றுக் கொள்ளும் நிலையில், அவ்வாறு இணைக்கக் கூடாது என்று தொடர்ந்து சங்கர ரெட்டியார் அவர்கள் பத்திரிகைகளுக்குச் செய்தி தந்தார்கள். எல்லோரும் மதிப்பு வைத்திருக்கும் "தின மலர்" பத்திரிகைக்கு அவர்கள் செய்தி தந்தார்கள். அதற்குப் பிறகுதான் அது நிறைவேற முடியாது போயிற்று. திரு. சங்கர ரெட்டியார் அவர்கள்தான்............

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பத்திரிகையை வைத்துக் குற்றம் சாட்டக் கூடாது என்று கூறியிருக்கிறார்கள். இப்போது அவர்கள் பத்திரிகையை வைத்துக் குற்றம் சாட்டுகிறார். எங்களுக்கு ஒரு தீர்ப்பு, அவர்களுக்கு ஒரு தீர்ப்பா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் திரு பாலன் அவர்கள் இந்த மன்றத்தில் உறுப்பினராக இருந்த ஒருவரைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்கள். அதை நிரூபிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அதற்கு ஆதாரமாக பத்திரிகையில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். எந்தப் பத்திரிகையில் வந்த செய்தி என்று அவர் கூறவில்லை.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** "தின மலர்" பத்திரிகை என்று சொல்லியிருக்கிறார். .பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன் என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. என் அவர் பத்திரிகையை நாடுகிறார் ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. க. இராமமூர்த்தி அவர்கள் கொண்டு வந்த ஒழுங்குப் பிரச்சினையின் மீது அவர் கேட்டுக் கொண்டபடி, பேசியதற்கு ஆதாரமாக "தின மலர்" பத்திரிகையில் இருக்கிறது என்று கூறுகிறார். அந்தப் பத்திரிகையைக் கொண்டு வந்து படிக்கவில்லை, அதற்குத் தலைவருடைய அனுமதியையும் பெறவில்லை. பத்திரிகையிலே ஆதாரம் இருக்கிறது என்று அவர் பேசுகிறார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பத்திரிகையை ஆதாரமாகக் காட்டினால், அதை ஏற்றுக் கொள்ளலாம் என்று தீர்ப்புக் கொடுக்கிறீர்களா ? பத்திரிகையை இங்கே கொண்டு வந்து [illegible] ஆதாரமாக வைத்துக் கொள்ளலாமா என்பது பற்றி [illegible]



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் இங்கே பத்திரிகையைப் படிக்கவில்லை. பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது என்று கூறுகிறார். பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது என்று கூறுவதற்கு முழு உரிமையுண்டு.

### 7. திரு. பாலன் அவர்களுடைய பேச்சில் கூறப்பட்ட குற்றச்சாட்டை விசாரிக்க குழு அமைத்தல்.

***திரு. டி. மார்டின் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். உறுப்பினர்கள் இங்கே பேசுகின்றபோது வெளியிலே உள்ள பத்திரிகைச் செய்தியை ஆதாரமாக வைத்துக் கொண்டு குற்றச்சாட்டாக இருந்தாலும் சரி, வேறு வகையில் இருந்தாலும் சரி பேசுவதற்கு உரிமை இருக்கிறதா என்பது முதல் கேள்வி.

இரண்டாவது, இதே மாமன்றத்தில் சில நாட்களுக்கு முன்பு மண்ணெண்ணெய் டிஸ்ட்ரிப்யூஷன் விஷயமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது "ஆதாரம் நாளைக்குக் கொண்டு வந்து தருகிறேன்" என்று சொன்னதற்கு "அப்ஜக்ஷன்" எழுப்பப்பட்டது. உடனே கொடுங்கள் என்று சொன்னார்கள். அங்கத்தினர்கள் திடீரென்று எதையும் கொண்டுவர முடியாது. இந்த விதமான குற்றச்சாட்டுகளைச் சொல்லுகிறபோது, பத்திரிகைச் செய்தியை ஆதாரமாக வைத்துப் பேசுகிறபோது, ஆதாரம் இருக்கிற காரணத்தால், அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்று தலைவர் அவர்கள் தீர்ப்பளிக்கும்போது இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சொல்லுகின்ற குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு எந்த விதமான ஒழுங்கு முறை சட்ட மன்ற விதிகளில் இருக்கின்றது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

இப்போது பேசிய உறுப்பினர் அவர்கள் "பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன்" என்று சொல்லுகிறார்கள். முன்பு இருந்த முதலமைச்சர் அவர்கள் காலம் சென்ற சட்ட மன்ற உறுப்பினர் திரு. சங்கர ரெட்டியார். அவர்களுக்காகவே இதை விட்டு விட்டார்கள் என்ற குறையைச் சொன்னார்கள். இதை ஒரு கமிட்டி வைத்து விசாரித்தால் நல்லது. அதற்காக ஒரு குழுவை அமைக்க முன் வருவார்களா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதற்காக ஒரு குழுவை அமைப்பது பற்றிய தீர்ப்பைத் தலைவர் அவர்கள் நாளைக்குக் கூறுவார்கள். தற்போது நேரம் குறைவாக இருப்பதோடு பல உறுப்பினர்கள் பேச வேண்டியிருப்பதால் விவாதத்தைத் தொடர்ந்து நடத்த உறுப்பினர்கள் உதவியாக இருக்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** குழு அமைக்க வேண்டு மென்பதை ஏற்றுக் கொள்கிறார்களா இல்லையா என்று அறிய விரும்புகிறேன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** குழு அமைப்பதைப் பற்றித் தலைவர் அவர்கள் நாளைக்கு அறிவிப்பார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்போது நீங்கள் தான் சபாநாயகர். உங்களுடைய ரூலிங் என்ன ? தாங்கள் குழுவை அமைக்கப் போகிறீர்களா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** குழுவை அமைக்கிறேன்.

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** திரு. இராமமூர்த்தி அவர்கள் மண்ணெண்ணெய் விஷயமாகச் சாட்டிய குற்றச்சாட்டில் அன்றே நிரூபிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதற்கு திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு நாள் தவணை வேண்டுமென்று கேட்டார்கள். அடுத்த நாளாவது நிரூபிக்க முடியுமா என்று கேட்டதற்கு முடியாத நிலைமையிலே சும்மா உட்கார்ந்து விட்டார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** முடியாத நிலை என்பது தவறான ஒன்றாகும். விளக்கத்தைக் கேட்காமலே முடிவு எடுத்தார்கள். அமைச்சர் அவர்கள் [illegible] த் தற்போது தருகிறார்கள்.

விவகாரங்கள் தேவையோ அது கிராமத்திலேயிருக்கின்ற கர்ணம் கொடுப்பதை வைத்துத்தான், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அனுப்புவதை வைத்துத் தான், மாநில அரசும் சரி, மத்திய அரசும் சரி, செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. எனவே, இந்த நாட்டில் அடிப்படையாக இருக்கக்கூடிய இந்த இலாக்காவில் புதியதோர் சமுதாயத்திற்கேற்ப மாறுதல்களைக் கொண்டுவருவது ஒரு பிரச்சினையாகும்.

என்னுடைய கருத்திலே இங்கே தமிழகத்தைப் பொறுத்த மட்டிலும் 20, 30 ஆண்டுகளுக்கு முன்பு மக்களுடைய பிரச்னை குறைவாக இருந்தது. ஆனால் அதிகாரிகளை அணுகுவது கஷ்டமாக இருந்தது. ஆனால் இன்று இந்த ரெவின்யூ இலாகாவைப் பொறுத்த மட்டிலும் தாலுகா மட்டத்தில் அந்த வட்டத்திலிருக்கிற ஜனங்களுடைய எல்லாப் பிரச்சினைகளுக்கும் தாசில் தார் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டிய மிக இக்கட்டான நிலையில் இருக்கிறார்கள். வேலைப் பளு மிக அதிகமாக இருக்கிறது. ஆனால் நாட்டு மக்கள் மத்தியிலே போய், தாலுகாவுக்குப் போய், மக்கள் குறைகளைத் தீர்த்தால்தான் நிம்மதியாக அவர்கள் வேலையைச் செய்யக் கூடிய ஒரு கட்டத்தை இன்று நாம் பார்க்கின்றோம். இன்றிருக்கிற யதார்த்தமான நிலைமையில் அவர்களுடைய வேலைப்பளு அதிகமாகியிருக் கிறது. மக்களுடைய குறைகளையும் தீர்க்கும் முறையில் செயல்பட வேண்டிய கஷ்டமான நிலையைப் பார்க்கின்றோம். என்னுடைய யோசனையெல்லாம், உடனடியாக இந்த இலாகாவானது, கீழே, கிராமத்திலே இருக்கிற “வில்லேஜ் சர்வன்ட்ஸ்” என்று சொல்கிறார்களே, மணியக்காரர், கர்ணம், வெட்டியான் என்று சொல்கிறார்களே அவர்களுடைய நிலையிலே, ஆரம் பத்திலே கவனம் செலுத்தியாக வேண்டும். ஏதோ ஒரு காலத்தில் ஒரு முறைக்காக ஏற்படுத்தப்பட்டது. அந்த பாரம்பரிய முறையை மாற்றி யமைத்து, படித்தவர்களை அங்கு புகுத்தி, மாறுதல் செய்கின்ற சர்க்கார் ஊழியர்களைப் போல், ஒரு நிலை உருவாக்க வேண்டும்.

எனக்குத் தெரிந்த ஒரு செய்தியை இங்கே சொல்ல விரும்புகிறேன். சற்றேறக்குறைய 25,000-க்கு அதிகமாக, கீழ்நிலை ஊழியர்கள் இருக்கிறார் கள், வெட்டியான் என்று சொல்லக்கூடியவர்கள் அவர்கள் தாழ்த்தப் பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பயிற்சி பெற்ற ஊழியர் களாக கிராமத்தின் அடியிலே இருக்கிறார்கள். அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கின்ற ஒரு திட்டத்தை நம்முடைய அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது ரெவின்யூ பிர்க்காவானது மிக விரிவாகவும் பெரிதாகவும் இருக்கிற காரணத்தால், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் தன்னுடைய வேலையை அதிகமாகச் செய்ய முடியாத நிலையில் இருப்பதை நாம் இப்பொழுது காண்கிறோம். ரெவின்யூ இன்ஸ்பெக்டரின் வேலையைக் குறைக்க வேண் டும், ரெவின்யூ பிர்க்காவை குறைக்க வேண்டும், அல்லது இரண்டு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களைப் போட வேண்டும். அப்படிப் போட்டால்தான் அடிப்படையிலே உருப்படியாக வேலை செய்ய முடியும். அது மாத்திர மல்ல. இப்பொழுது ஓர் அரசு இருக்கிறது, அமைச்சரவை இருக்கிறது, கொள்கை வகுத்து செயல்படுகிறது. இடையிலே இருக்கிற வருவாய்த்துறை வாரியம் தேவையில்லை என்று சொல்ல என்ன காரணம் இருக்கிறதோ அதே காரணம் மாவட்டத்திற்கும் வட்டத்திற்கும் இடையிலே இருக்கிற கோட்டாட்சி தேவையில்லை என்று சொல்லவும் இருக்கிறது. கோட்டாட்சி அமைப்பு முறை இருக்க வேண்டுமா என்பதை அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். தாசில்தார் செய்கின்ற காரியத்தை கலெக்டருக்கு அனுப்புகின்ற ஒரு அமைப்பாகத்தான் கோட்டாட்சி இருக்கிறது (மணி அடிக்கப்பட்டது). எனவே இதில் ஒரு புரட்சிகரமான மாறுதலை அருள் கூர்ந்து செய்ய வேண்டும். அந்தக் கோட்டாட்சி அமைப்பை எடுத்துவிட்டு, பதிவுபெற்ற கெஸட்டட் ஆபீஸரை தாலுக்காவிற்கு ஒருவராகப் போட்டு, இப்பொழுதிருக்கிற தாசில்தாரை பி.ஏ. டு டெப்புட்டி கலெக்டராகப் போட்டு விட்டால் காரியங்கள் செவ்வையாகவும், வேகமாகவும் நடைபெறும் என்று சொல்லிக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக, இந்த பஞ்சத் துயர் தணிப்பு விவகாரத்திலே கோவை மாவட்டம் ஏதோ புறக்கணிக்கப்படுவதைப்போல்தான் தோன்று கிறது. எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் இருக்கிற காரணத்தி னால் ஒரு சமயம் கோவை மாவட்டத்திற்குச் செய்துவிட்டால் தன்னுடைய மாவட்டத்திற்கு அமைச்சர் செய்கிறார்களோ என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் கேட்டு விடுவார் என்ற அச்சத்தின் காரணமாகவோ என்னவோ கோவை மாவட்டம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று வருத்தத் துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக இந்த நாட்டு மக்களுக்கும் நாட்டிற்கும் சொல்லிக் கொள்கிறேன். தமிழகத்திலே இருக்கிற எந்த மாவட்டத்தையும் விட கோவை மாவட்டத்திலே இரண்டு மூன்று வட்டங்கள் தவிர, அதிலும் குறிப்பாக, தாராபுரம், பல்லடம், அவிநாசி, பெருந்துறை போன்ற வட்டங்களில் 150 அடி, 120 அடிக்குக் கீழே கூட ஒரு குடம் தண்ணீர் இல்லாமல் 15 ஆண்டு காலமாக மக்கள் அவதிப்படுகின்றார்கள். எனவே, பஞ்சத் துயர் தணிப்பிற்காக அதிகப் பணம் ஒதுக்கினால் மட்டும் போதாது, மத்திய அரசு அனுப்புகின்ற, நிபுணர் குழு என்ற பெயரில் இங்கு வருகின்ற அந்தக் குழுவிடம் அந்தப் பகுதிகளைச் சுற்றிக் காட்டினால் நிலைமையை அவர்கள் புரிந்துகொள்வார்கள். டெல்லியிலே இருந்து வரு கின்ற அந்தக் குழுவினர், கோவை மாவட்டத்திலே இருக்கிற ஆழமான கிணறுகளை எட்டிப் பார்த்தாலே போதும், பயந்து விடுவார்கள். எனவே அதிகமாகப் பணம் வேண்டுமானால், அந்த அதிகாரிகளைக் கோவைக்கு அழைத்துச் சென்று காட்ட வேண்டும். அந்த அதிகாரிகள் கோவைக்கு வந்தால்தான் இந்த நாட்டிற்கு டெல்லியிலிருந்து அதிகப் பணம் வரும் என்ற கருத்தினை வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, எனக்குக் கிடைத்த தகவலை வைத்துக்கொண்டு சொல்கிறேன். கிராமங்களிலே இருக்கின்ற வெட்டியான், தோட்டி, தலை யாரி என்கின்ற அந்த ஊழியர்களை, கொஞ்சம் கொஞ்சமாக, வீட்டிற்கு அனுப்பப் போவதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அவர்கள் 25,000 பேர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள். அவர்களுக்கு வாழ்வு அளிப்பதற்கு நாம் பொறுப்பேற்றுக் கொண்டாக வேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். நம் முடைய மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் தன்னுடைய வாழ்விலே, அரசியல் வாழ்விலே ஒரு முற்போக்கான எண்ணத்தை, விஞ்ஞான சோஷலிஸ ரீதியில் ஒரு புது சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென் பதிலே அக்கறை கொண்டிருக்கிறார். அந்தப் புது சமுதாயத்தை உரு வாக்க வேண்டுமென்பதிலே அக்கறை கொண்டவர். நம்பிக்கை கொண்ட வர் அவர் என்பதைத்தான் அவருடைய கொள்கை விளக்கக் குறிப்பின் கருத்துக்களிலே நாம் பார்க்கிறோம். இப்படி அவர் செயல்படுவாரானால், இந்த வருவாய்த்துறை வாரியத்தை எடுத்துவிட்டு, கோட்டாட்சி அமைப்பை எடுத்துவிட்டு, அமைச்சரவை கொடுக்கின்ற உத்தரவுகள் நேரடியாகப் போகின்ற அளவுக்கு ஒரு முறை வந்துவிட்டால், இந்த வரலாற்றிலே ஆங்கில ஏகாதிபத்தியத்தாலே ஏற்படுத்தப்பட்ட ஒரு கூடாரத்தை, 20 ஆண்டுக் காலமும் தொடர்ந்து இருந்து வந்ததை, உடைத்த பெருமை திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு வரும். அதற்கு சரியான கொள்கை வகுத்த, திட்டம் கொடுத்த பெருமை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர் களையே சாரும். அவருடைய பெயர் அதன்பொருட்டு வரலாற்றிலே முக்கிய மாக இடம் பெறும். அந்த நல்ல காரியத்தைச் செய்ய முன்வருகிற அவ ரைப் பாராட்டி என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. சோ. அழகர்சாமி :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர் களே, இந்த வருவாய்த் துறை மானியத்தின் மீது என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல முன் வரு கிறேன். நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த மானியத்தில் சில முற்போக்கான விஷயங்களை எல்லாம், போன சட்டமன்றத் தொடரிலே

அதன் மூலமாக 1·60 லட்சம் ரூபாய் நமக்குக் குறைந்து விடுகிறது. இப்படி வருவாய் குறைந்திருக்கக்கூடிய இந்தத் துறையில், நாம் செலவு செய்ய வேண்டிய இனங்களை மிகப்பெரிய அளவுக்குச் செய்து வருகிறோம். குறிப்பாக, தஞ்சை ஜில்லாவிலே விளைச்சலை அதிகரிக்கச் செய்து உற்பத்தியைப் பெருக்குவதற்காக சென்ற ஆண்டிலேயே அதிகமாக உற்பத்தியைக் கொடுத்திருக்கிறோம். ஐ.ஆர். 8, ஏ.டி.டி. 27 இன்னும் சில, ரகங்கள் மூலம் உற்பத்தி அதிகமாக வருவதற்கென்று நாம் நல்ல விதைகளைக் கொடுக்கப்பட்டிருக்கிறது, அமோகமாக விளைந்திருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறியதிலிருந்து தெரிகிறது. உற்பத்தி அமோகமாக வந்திருக்கிறது, அதனால் அந்த நிலக் கிழார்களுக்கு அதிக லாபம் கிடைத்திருக்கிறது. ஆனால், அரசாங்கத்திற்கு வருவாய் அதிகரிக்கவில்லை, விவசாயிகளுக்குக் கூலி பெருகவில்லை. இந்த நிலையை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதேபோல், நஞ்சைப் பகுதிக்கு பட்டுக்கோட்டையும், புஞ்சைப் பகுதி கனிமம் பட்டு செட்டு வைத்துக்கொள்ளவும், கிணறு வெட்டிக்கொள்ளவும், இன்னும் இதுபோன்று விவசாயத்திற்காகக் கொடுக்கிறோம், கடன் வழங்குகிறோம், மின்சார இணைப்புக் கொடுக்கிறோம். திராட்சை, கரும்பு, மிளகாய் இது போன்றவைகளில் அமோகமாக உற்பத்தி பெருகியிருக்கிறது. அதன் மூலம் அதிகமான வருமானம் நிலக்கிழார்கள் அடைகிறார்கள். அதன்மூலம், பணப் பயிர்கள் மூலம் கொடுத்திருக்கும் வரியைப் பார்த்தால், அதிகமான வருமானம், விவசாய வருமான வரி, சென்ற ஆண்டிலே திருத்தப்பட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு அதிகரித்த போதிலும், நாம் எதிர்பார்த்த அளவுக்கு வருமானம் இல்லை என்பதைப் பார்க்கமுடியும். இதற்கென்ன காரணமென்றால், நிலக்கிழார்களின் செல்வாக்கு, அதிகாரிகள் அந்த செல்வாக்குக்கு உட்பட்டு என்றும்போல பழைய வரிகளையே கொடுக்கும் அளவுக்குச் செய்துவிடுகிறார்களோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது என்று இந்தச் சபையில் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால், இந்த வருமானத்தில் நம்முடைய அரசாங்கத்திற்கு அதிகப்படியான வருமானம் வருவதைப் பார்க்க முடியவில்லை என்ற காரணந்தான். ஆகவே, இன்றிருக்கக்கூடிய நில உறவு முறைகளை மாற்றி, குவிந்திருக்கக்கூடிய நிலங்களைப் பரவலாக மாற்ற அரசாங்கம் கொண்டுவந்திருக்கக்கூடிய நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கான நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய முழு நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதன்மூலம்தான், இன்று அரசாங்கத்தினுடைய வருவாயைப் பெருக்க முடியும், விவசாயத் தொழிலாளர்களின் நிலப்பிரச்சினையைத் தீர்க்க முடியும், நாட்டினுடைய செல்வாதாரங்களை வளமாக ஏற்படுத்த முடியும். நாட்டின் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். ஆகவே, நிலச்சீர்திருத்தச் சட்டத்தை அவசரமாகக் கொண்டு வரவேண்டும். இதைச் சொல்லக்கூடிய நேரத்தில் இதற்கு ஆரம்பமாக இருக்கக்கூடிய நிலச் சாகுபடி செய்யக்கூடியவர்களை பதிவேட்டில் பதிவது என்பது பற்றி மசோதா வரக்கூடிய நேரத்தில், அதற்கு எதிர்ப்பு எந்த அளவுக்கு இருந்தது என்பதைச் சென்ற முறை பார்த்தோம். ஒரு பக்கத்தில், "72-இலே இருக்க மாட்டார்கள்" என்றும், இன்னொரு பக்கத்தில், "இந்த மசோதா தேவையில்லை" என்றெல்லாம் இங்கே வற்புறுத்தக் கூடிய நிலையிருந்ததைப் பார்த்தோம். மேலும், இந்தப் பேரவையில் பேசுவது சீர்திருத்த மசோதாவைப்பற்றி அல்ல, அதற்குப் பதில் நெல் மூட்டையின் விலையை உயர்த்த வேண்டுமென்று அந்த முறையில் கூறுவதைப் பார்க்கிறோம். ஆனால் எப்படியும், சீக்கிரமாக மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் உடனடியாக அதைக் கொண்டு வரவேண்டும், எதிர்ப்புகளைப் பார்த்து அரசு கைவிடக்கூடாது என்பதைத்தான் நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

ஜமீன் இனும் நிலங்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குளம், கோர்வை நிலங்கள் ஜமீன் காலத்திலே பட்டா கொடுக்கப்பட்டு விவசாய மக்கள் சாகுபடி செய்து வருகிறார்கள். அந்த நிலங்கள் ஜமீன் ஒழிக்கப்பட்ட பிறகு, அந்த [illegible] கோர்வையில் நிலங்



களில் சாகுபடி செய்பவர்களை வெளியேற்றுவதும், பட்டாவை ரத்து செய்வது போன்ற தண்டத் தீர்வை போடுவது போன்றவைகள் நடந்து வருகின்றன. அதை மாற்றி நிலத்தை அவர்களுக்கே ஜாரி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதேமாதிரி, கிராம அதிகாரிகளைப்பற்றி இன்று சில விஷயங்களைச் சொல்ல வேண்டிய அவசியமிருக்கிறது. கிராம அதிகாரிகளில் உண்மையிலேயே, அவர்கள் பல நிலங்களைத் தங்கள் வசத்திலேயே வைத்துக் கொண்டிருப்பதோடு, ஏழை எளிய மக்களுக்கு ஜாரி செய்து கொடுப்பது கிடையாது. பணம் பெற்றுக்கொண்டு, வசதியுள்ளவர்களுக்கு ஜாரி செய்து கொடுப்பது என்பதும் நடந்து வருகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

அதேபோல, தென்காசி தாலுக்காவில் கம்பனேரி-புதுக்குடி என்ற கிராமத்திலே ஒரு கிராமக் கர்ணம் பல ஊழல்களைச் செய்து, நில வரி, கடன் இவைகளை வசூல் செய்து, சர்க்காருக்குக் கட்டாததால், இரண்டு வருஷங்கள் தண்டிக்கப்பட்டு, வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார். அப்படிப்பட்ட ஒருவனை, துணை தாசில்தார் மீண்டும் அவருக்கு கிராம அதிகாரி வேலை கிடைப்பதற்கு முயற்சி செய்வதாகத் தெரிகிறது. அதையும் கவனித்து, அதை நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பஞ்ச நிலைமைபற்றிய இந்த அறிக்கையில் மதுரை மாவட்டம் விடப்பட்டிருப்பதை அறிகிறேன். மதுரை மாவட்டத்தில் பல தாலுக்காக்களில் இன்றைக்கு குடிதண்ணீர் இல்லாமல் பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது. திருமங்கலம் தாலுக்கா, உசிலம்பட்டி தாலுக்கா, இன்னும் பெரியகுளம், ஆண்டிப்பட்டி போன்ற இப்படிப்பட்ட இடங்களிலும், மதுரை வட்டத்தில் வலையபட்டி முதல் பாரப்பட்டி வரையில் இருக்கக்கூடிய இடங்களிலும் தண்ணீர்க் கஷ்டம். மதுரை நகரத்தில் ஒரு நாளைக்கு 65 லட்சம் காலன் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வந்தது. இன்று தண்ணீர்ப் பற்றாக்குறையின் காரணமாக 30 லட்சம் காலன் தண்ணீர் தான் விடக்கூடிய நிலைமையிருக்கிறது. பாதித் தண்ணீர் அளவு குறைந்து விட்டது. நகரசபையிலிருந்து நமது உள்ளாட்சித்துறை அமைச்சரவர்களுக்கு, 50 இலட்சம் ரூபாய் இன்று கடனாக நகரசபைக்குக் கொடுக்க வேண்டும் என்று தந்தி வந்துள்ளது. லாரிகள் வாங்கி சப்ளை செய்ய வேண்டிய நிலையிருக்கிறது. ஆழக்குழாய்க் கிணறுகள் தோண்ட வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். மதுரையிலே 5 லட்சம் மக்கள் இன்று பாதிக்கப்படுகிறார்கள். (மணியடிக்கப்பட்டது.)

* திரு. மு. சின்னசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் வருவாய்த்துறை மானியத்தை ஆதரித்து, அதனையொட்டி சில கருத்துகளைக்கூற விழைகிறேன்.

உண்மையிலேயே, ஒரு அரசு செம்மையாக நடைபெற வேண்டுமானால் பல்வேறு துறைகளிலும் எவ்வளவு பேர்கள் பணிபுரிந்தாலும், வருவாய்த்துறையானது எவ்வளவு திறம்பட வேலை செய்கிறதோ, அதைப் பொறுத்துத்தான் ஒரு அரசு எப்படிச் செயல்படுகிறது என்பதை நிர்ணயிக்க முடியும். அந்த அடிப்படையில், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், வருவாய்த்துறை மிகச்சிறப்பாக, மிக நேர்மையாக மாத்திரமல்ல, இன்றிருக்கும் மாறுபட்ட காலத்திற்கேற்ப, கடந்த இரண்டாண்டு காலமாக மாவட்ட அளவில், ஆட்சித் தலைவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று மக்களுடைய அன்றாடக் கோரிக்கைகளைத் துரிதமாக கவனிக்கின்ற மகிழ்ச்சிகரமான காரியத்தைப் பார்க்கிறோம். இன்று அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற குறிப்பிலே, நாங்களெல்லாம் கடந்த 25 ஆண்டுக்காலமாக, இந்த ரெவின்யூத் துறையில் என்னென்ன புரட்சிகரமான மாறுதலைச் செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டோமோ அது இன்று செயலிலே வருவதைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைகிறேன். ரெவின்யூ இலாக்காவானது ஒரு நாட்டின் அடிப்படையான முதுகெலும்பாகும். மத்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி, தங்களுக்கு என்னென்ன கணக்குகள் தேவையோ, ஒரு நாட்டின் அடிப்படையான

[திரு. என். ராஜாங்கம்] [1969 மார்ச் 14

பஞ்ச நிலை பற்றிப் பேசும்போது, ஒவ்வொரு மாவட்டமாகச் சொல்லு வதைக் காட்டிலும், ஒவ்வொரு மாவட்டத்தில் எந்த எந்தப் பகுதிகள் பஞ்ச நிலையில் இருக்கின்றன என்று தனித் தனியாக சர்வே செய்து எடுத்து, அவற்றிற்கு எல்லாம் நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன. அந்த முறையில், பஞ்சப் பகுதிகளைப் பிரித்து, மொத்தமாக நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்து, அதனால் ஏழைகளுக்குப் பயன் ஏற்படும் என்று எல்லா முற்போக்குக் கட்சிகளும் சொல்லிக்கொண்டு இருந்தன. காங்கிரஸ் கட்சி உள்ளபடியே சட்டத்தைக் கொண்டுவந்தது. அதிகப்படியான நிலங்கள் ஏழைகளுக்குக் கிடைக்கக்கூடியது 2.5 லட்சம் ஏக்கர் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இப்பொழுது 10,000 ஏக்கர் தான் என்று தகவல் இருக்கிறது. 2.5 லட்சம் எங்கே, 10,000 எங்கே? இது எதைக் காட்டுகிறது? ஏதோ சட்டத்திலே குழப்பம் இருக்க வேண்டும், அல்லது செயல் முறையில் தவறுகள் இருக்க வேண்டும். ஆகவே, அதில் கிடைக்கிறதோ இல்லையோ, அரசாங்கத்தினிடம் இருக்கும் புறம்போக்கு நிலங்களை சர்க்கார் எல்லா ஏழைகளுக்கும், ஜாதி வித்தியாசமில்லாமல், முற்போக்கு ஜாதியாக இருந்தாலும் பரவாயில்லை, முறையாக இருந்தால் சரி என்ற அளவில், கல்வியில், பொருளாதாரத்தில், 'எஜுகேஷனலி எகனமிகலி' பிற்பட்ட மக்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு அந்த நிலங்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டும். ஏழைகளாக மட்டும் இருந்தால் போதும் என்கிற அடிப்படையில் பிரித்துக் கொடுக்க வேண்டும். அந்த முறையை அரசாங்கம் கையாளும் என்று நினைக்கிறேன்.

ஆதி காலத்தில் வெள்ளைக்காரர்கள், பஞ்சமத் தரிசு என்று கொடுத் திருந்தார்கள். இந்தத தரிசு நிலங்கள் பஞ்சமர்கள் என்கிற, இப் பொழுது ஹரிஜனங்கள் என்கிற மக்களுக்குக் கொடுக்கப்பட்டது. அன்றைக்கு அவர்களுக்கு பஞ்சமர்கள் என்று பெயர். அவர்களே ஒரு காலத்தில் ஆதித்திராவிடர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இப்படி குறிப்பிட்ட பெயர் கூட இல்லாமல், நாடோடி கும்பல்கள் போல் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு பெயர்; ஒவ்வொரு ஆட்சி காலத்திலும் ஒவ்வொரு காலத்தில் ஆனால் எப்பொழுதும் தாழ்த்தப்பட்டவர்கள். அதுதான் அரசியல் சட்டத் திலும் இருக்கும் பெயர். 100 ஏக்கர், 50 ஏக்கர் என்று வெள்ளைக் காரன் காலத்தில் பஞ்சம தரிசுகள் வழங்கப்பட்டன. அவற்றைக் காங் கிரஸ் ஆட்சிக் காலத்தில் கவனிக்கவில்லை. இன்றைக்கு இருக்கும் அரசாங்கம் அதுபற்றி சில இடங்களில் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிகிறது. இவற்றையெல்லாம் அரசு சர்வே செய்து, அப்படியிருக்கும் பஞ்சமத் தரிசு நிலங்களை ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். (மணியடிக்கப்பட்டது.)

நான் சபை கூடிய பிறகு முதன்முதலாகப் பேசுகிறேன். ஆகவே இரண்டு நிமிஷம் அதிகமாகக் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, அரசாங்கம் ஒரு புதிய திட்டத்தை வகுத்திருக்கிறது. இந்த நாட்டில் கிட்டத்தட்ட 26,324 தோட்டி, தலையாரிகள் இருக்கிறார்கள். அவைகளில் 90 சத விகிதம் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள், 10 சத விகிதம்தான் மற்றவர்கள். ஆகவே, அவர்களை வேலையிலிருந்து நீக்கி விட்டால், சாதாரணமாக ஏதோ தர்க்க ரீதியில், வேறு எண்ணத்தில் நீக்கி விடுகிறோம் என்கிற வாதம் புரிந்தால், அதன் விளைவு, அரசாங்கத்திற்கு ஒரு மருவுதான் ஏற்படும், ஒரு களங்கம் ஏற்படும். அதைச் சர்க்கார் கவனிக்க வேண்டும். காரணம், இவர்கள் இத்தனை ஆண்டுகளாக இருந்து வந்திருக்கிறார்கள். 1914 செட்டில்மெண்ட் காலம் தொட்டு, வில்லேஜ் ஆபீசர்கள் போட்டார்கள். ஆகவே, 1914 முதல், இன்று வரை, 1969 வரையில், 55 ஆண்டு காலமாக உத்தியோகத்தில் அவர்களுக்கு நிரந்தரம் இருந்தது. அவர்களுக்கு பென்ஷன் கிடையாது. இங்கிரிமெண்ட் கிடை யாது. குறிப்பிட்ட சம்பளந்தான், ரூ. 15, 17. ஆகவே, இவர்களை



தொடர்ந்து வைத்துக் கொள்வதால், இந்தத் தலையாரி, வெட்டி போன்றவர்களால் அரசாங்கத்திற்கு எந்தவிதமான நஷ்டமும் வந்துவிடாது. ஆகவே, இதைப் புனர்ப் பரிசீலனை செய்ய வேண்டும். அது மத்திய அரசாங்கத்தின் கொள்கை எப்படியிருந்தாலும், இந்த நம் அரசாங்கத்தில் இருந்தாலும், மாநில சர்க்காராக இருந்தாலும், இந்த சர்க்காராக இருந்தாலும், மாநில சர்க்காராக இருந்தாலும் தெரிவித்துக்கொள்ளு அதிகாரிகளை நீக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன். வேறு வகைகளில் எத்தனை சீர்திருத்தங்கள் செய்வதாக இருந் தாலும், இவர்களை மட்டும் வைத்துக்கொண்டேதான் செயல்படவேண்டும். இந்த என்னுடைய எண்ணத்தை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கிறேன்.

மராமத்து இலாகாவில் இருக்கும் நிலங்களை, ஏற்கனவே பல ஆண்டு காலமாக, ஏழை ஹரிஜனங்கள் ஆற்றுப் புறம்போக்கு, குளம் புறம் போக்கு போன்ற நிலங்களை, பயிர் செய்துகொண்டு வந்தார்கள். அவற்றை ஆர்ஜிதம் செய்ய முடியாது என்று சட்டம் இருக்கலாம்; ஆனாலும், ஏலத்தில் விட வேண்டும் என்பது சரியானது அல்ல. வசதி யில்லாதவர்களுக்கு, பப்ளிக் ஆக்ஷன் என்றால், நிறையக் குத்தகைக்கு ஒரு பகுதியார் எடுத்துக்கொள்ள வசதியாகப் போய்விடும். ஆகவே, அப் படிப்பட்டவர்களுக்குக் கொடுக்கக் கூடாது. ஏழை ஹரிஜனங்களுக்குப் பிரத் தியேக சலுகை கொடுக்க வேண்டும் என்று பொதுப் பணித் துறை அமைச்சருக்கு ரெவின்யூ துறை அமைச்சர் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். (மணியடிக்கப்பட்டது). ரெவின்யூ துறையில் பஞ்சப் பகுதிக்கு ஒதுக்கியிருக்கும் பணம் போதாது. அதிகமாக ஒதுக்க வேண்டும், பஞ்சமத் தரிசு நிலங்களை ஹரிஜனங்களுக்குக் கொடுக்க ஏற் பாடுகள் செய்ய வேண்டும், தோட்டி, தலையாரிகளைக் கட்டாயம் நீக்கக் கூடாது, அவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் 55 ஆண்டுகளாக வேலை நிரந்தரத்தோடு இருந்தவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாவட்டக் கலெக்டர் என்ற பெயர் வரி வசூலுக்காக என்றாலும், இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் என்பதை ஆங்கிலத்தில் டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேடர் அல்லது சீஃப் அட்மினிஸ்ட்ரேடர் என்று சொல்லலாம். பல மாவட்ட அதிகாரிகள் இருப்பதால், இந்த ஆட்சித் தலைவரை, சீஃப் டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேடர் என்று சொல்லலாம் என்கிற ஆலோசனையைத் தெரிவித்துக்கொண்டு முடிக்கிறேன்.

(திரு. சு. துரைசாமி தலைமை)

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, இன்று நமது வருவாய்த்துறை அமைச்சர் ரொம்ப முற்போக்கான ஒரு கொள்கை விளக் கத்தை இந்தச் சபைக்கு அளித்திருக்கிறார்கள். தாம் பேசும்போதெல் லாம், அதிகமான முற்போக்குக் கொள்கைகள் பற்றிப் பேசுவதை நான் கவனித்திருக்கிறேன். பொதுவாக, அதிகம் பேசுகிறவர்கள் செயலில் குறைவாக இருப்பார்கள் என்றும், குறைவாகப் பேசுகிறவர்கள் அதிகம் செயலில் செய்வார்கள் என்றும் சொல்லுவது உண்டு. ஆனால், நமது வருவாய்த் துறை அமைச்சரவர்கள், பேசுவது போலவே செயலும் செய்ய முயற்சிப்பதைப் பார்த்து, என் பாராட்டுகளைத் தெரிவிக்கிறேன். சொல்லுக் கேற்ப, பேச்சுக்கேற்ப நடவடிக்கைகளை எடுப்பது மகிழ்ச்சிக்குரியது. நிலம் சம்பந்தமான சட்டத்தை நிச்சயமாக நிறைவேற்ற வேண்டும் என்று உறுதி கூறியிருக்கிறார்கள். பாராட்டுகிறேன். அவர்கள் அந்தச் சட்டத் தைக் கொண்டுவரும்போது, பல சங்கடங்கள், எதிர்ப்புக்கள் இருக்கலாம். அவற்றையெல்லாம் சமாளித்து, முற்போக்கான நிலச் சீர்திருத்தச் சட் டத்தை நிறைவேற்றினால், மிகவும் பாராட்டுக்குரியதாக இருக்கும். அதே சந்தர்ப்பத்திலே, நாட்டிலுள்ள முற்போக்கு சக்திகளெல்லாம், அவருக்கு அந்தப் பணியில் துணையாக நின்று, நிறைவேற்ற எந்த அளவிற்கு ஒத் துழைப்புக் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்குக் கொடுக்கப்படும் என்ற உறுதியை இந்த சபையில் தெரிவிக்க விரும்புகிறேன்.

ரெவின்யூ போர்டு நீண்டகாலமாகத் தேவையில்லை என்று விவா திக்கப்பட்டு வந்த ஒன்று. இதுநாள்வரை வந்தவர்கள் அதை மாற்றி யமைக்க முன்வரவில்லை. மாற்றத்தைச் செய்ய இருப்பதை வரவேற் கிறேன். பாராட்டுகிறேன். அதே போல தாலூகா மட்டத்திலும், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் வேண்டியதில்லை. அது காலதாமதத்திற்குத்தான் காரணமாக இருக்கிறது. எதெல்லாம் அப்படிக் காலதாமதத்திற்குக் காரண மாக இருக்கிறதோ அதையெல்லாம் எடுத்துவிடலாம். ஆகவே, இடையிலே இருக்கும் ரெவின்யூ டிவிஷன் தேவை இல்லை. அடுத்த ஆண்டுக் கொள்கை விளக்கத்திலாவது, தெளிவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவருவதற்குச் சில அடிப்படையான காரியங்களைச் செய்யவேண்டி இருக்கிறது. நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் அதிக பட்சம் இவ்வளவு நிலம்தான் வைத்திருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறோம். அந்த நிலங்கள் எல்லாம் கணக்குகளிலே உரிய நிலை யில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். பழைய காலத்தில் எந்த நிலையில் செட்டில்மெண்ட செய்யப்பட்டதோ, அதே நிலையில் இன்றும் நிலத்தின் தரம் இருக்கும் என்று கொள்ள முடியாது. ஆகவே, அதையெல்லாம் ரீசெட்டில்மெண்ட் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். புன்செய் தரிசுக்கு முன்பு நான்கணு தீர்வை போடப்பட்டிருக்கும். ஆனால் இன்றைக்கு எக்கருக்கு ஆயிரம் ரூபாய் வரக்கூடிய நிலமாக இருக்கும். முன்பு போட்ட தீர்வை நான் கணுவை வைத்துக்கொண்டு தரம் நிர்ணயிப்பது பொருத்தமாயிருக்காது. ஆயிரம் ரூபாய் வரக்கூடிய நிலத்திற்கு அதனுடைய தீர்வையும் அதற் குத் தகுந்தாற்போல் மாற்றப்பட வேண்டும். முன்பு போட்டவைகள் எல்லாம் குறைச்சலாக இருக்கும். ஆகவே, தற்போதுள்ள நிலைமையை வைத்து, அது சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும். நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னால் எல்லாக் கிராமங்களிலும் ரீசெட்டில்மெண்ட் செய்ய வேண்டும்.

கிராமங்களைப் பொறுத்தவரையில், ஒரு விவசாயிக்கு தன்னிடம் இருக்கும் நிலத்தைப் பற்றிய விவரங்கள் தெரியாது. தன்னுடைய நிலம் எவ்வளவு, நிலத்தின் மீது விதிக்கப்படும் வரி எவ்வளவு, தண்ணீர்த் தீர்வை எவ்வளவு, செஸ் தீர்வை எவ்வளவு என்பதெல்லாம் தெரியாது. ஆகவே, ஒவ்வொரு குடியானவனுக்கும் இந்த விவரங்கள் அடங்கிய கையேடு ஒன்றைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தன்னிடம் அதிகமாக வரி வசூல் செய்தாலும் அது விவசாயிக்குத் தெரிவதில்லை. கிராமக் கணக்கப்பிள்ளையிடமிருந்து கணக்கைக் கேட்க வேண்டும். கணக்கப்பிள்ளை எவ்வளவு சீக்கிரம் கணக்கு கொடுப்பார் என்ற விஷயம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஏனெனில், கணக்கப்பிள்ளை போன்றவர்களின் சம்பளம் மிகவும் குறைவு. அவர்களுக்குச் சம்பளம் போதாது. ஆகவே, கிராம ஊழியர்களையும், அரசாங்கம் முழு நேர ஊழியர்களாக நியமித்து, நல்ல முறையில் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, கூட்டுப் பட்டா எவ்வளவு சிரமத்தைக் கொடுக்கிறது, எவ்வளவு கஷ்டத்தைக் கொடுக்கிறது என்பது பற்றி அமைச்சர் அவர் களுக்குத் தெரியும். உதாரணமாக, 200-ம் நெம்பர் பட்டா என்றால் அதில் சுமார் 10 பேர் இருப்பார்கள். சில சமயங்களில் அந்த நிலத்திற் குண்டான வரியைப் பத்துபேர்களிடமும் வாங்கிவிடுகிறார்கள். ஆகவே, கூட்டுப் பட்டா நிலங்கள் எல்லாம் கட்டாயமாக உடனடியாகப் பிரிவினை செய்யப் பட்டு, அவரவர்களுக்குத் தனித் தனிப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களிலே வரி வசூல் செய்யப்படுகிறபோது, சுத்த மான அளவில், நியாயமான தொகையை வசூல் செய்வதில்லை. சில சமயங்களில் கூடுதலாகவும் தொகை இருக்கும், சில சமயங்களில் குறைச்ச லாகவும் தொகை வசூல் செய்யப்படுகிறது. பின்பு வருட இறுதியிலே



ஜமாபந்தி என்று ஒரு நான்கைந்து நாட்கள் வைத்து, கணக்கை ஒப்படை செய்துவிடுவார்கள். மேலதிகாரிகளுக்கோ இதை ஆராய்ந்து பார்க்க சந் தர்ப்பம் இருக்காது. எந்தெந்தப் பட்டாவிலே அதிகமான வரி வசூல் செய்யப்பட்டிருக்கிறதோ, அந்த அதிகத் தொகையை அடுத்த ஆண்டுக்கு அதே பட்டாதாரருக்கு வரவு வைக்க வேண்டும். சில சமயங்களில் ஒரு கிராமத்தில் இரண்டாயிரம் ரூபாய் வரையில் அதிக வரி வசூல் செய் திருந்தால், அந்தத் தொகை சம்பந்தமில்லாத ஒருவருக்கு வரவு வைக்கப் பட்டிருக்கும். கணக்கு ஒழுங்காக இருக்காது. இந்தக் குறைபாடுகளை யெல்லாம் நீக்க வேண்டும். ஏழை விவசாயிகளிடம் அதிக வரி வசூல் செய்து, யாரோ வசதி படைத்த ஒருவர் தனக்கு உபயோகப்படுத்திக் கொள்வதில் என்ன பிரயோசனம்? அதிக வரி எவ்வளவு என்பதை ஒவ்வொரு பட்டாதாரருக்கும் கணக்கிட்டு, அதை அடுத்த ஆண்டு கணக் கில் அதே பட்டாதாரருக்கு வரவு வைக்க வழி செய்யப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, புறம்போக்கு நிலங்களைப் பொறுத்த வரையில், கவ னத்தோடு செய்திருக்கிறோம் என்று அமைச்சர்கள் கூறியிருக்கிறார்கள். சாதாரண விவசாயி பட்டா பெறுவதற்காக எவ்வளவு கஷ்டப்படுகிறான் என்பதை அமைச்சர் அவர்கள் நேரடியாக உணர்ந்திருக்கிறார்கள். எந்தக் கஷ்டமும், சிரமமும் இல்லாத வகையில் விவசாயிக்குப் பட்டா வழங்கப்பட வேண்டும். சிலர் புறம்போக்கு நிலங்களில் சாகுபடி செய்து வருகிறார் கள். அப்படிச் சாகுபடி செய்வதற்குத் தண்டத் தீர்வை போடுவதாக அறிகிறேன். பட்டா செய்து கொடுப்பதற்கு லாயக்கான நிலங்களைப் பட்டா செய்து கொடுத்துவிட வேண்டும். மேலும் கம்யூனல் புறம்போக்கு நிலங்களைச் சிலர் ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறார்கள். கம்யூனல் புறம் போக்கு நிலங்களை யார் வைத்துக்கொண்டிருந்தாலும், அவர்களை அந்த நிலத்திலிருந்து வெளியேற்ற வேண்டும். வழக்குகள் போடும்போது, அப்படி வைத்துக் கொண்டிருப்பவர்கள் அரசாங்கம் வரைக்கும், ஹைக் கோர்ட் வரைக்கும் அப்பீல் செய்துகொள்கிறார்கள். ஆகவே, இதை மாவட்ட அதிகாரிகள் மட்டத்தில்தான் தீர்ப்புச் செய்ய வேண்டும். இந்த மாதிரியான விஷயங்கள் மாவட்ட மட்டத்திலேயே முடிவு கட்டப்பட வேண் டும். அரசாங்கம் வரைக்கும் அப்பீல் செய்துகொள்ளும் நிலை இருப்ப தால், சுமார் பத்தாண்டுக் காலம், அல்லது அதற்கு மேலும் அந்த நிலத் தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்பீல் வழக்கு முடிகிற வரையில் அவர்கள் நிலத்திலிருந்து வெளியேற மறுக்கிறார்கள். ஆகவே, கம யூனல் புறம்போக்கு நில வழக்குகள் மாவட்ட மட்டத்திலேயே முடிவு செய்யப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, குளங்களில் மீன் பிடிக்க மீன்பிடித் தொழிலாளர் சங்கம் என்று வைத்திருக்கிறார்கள். கிராமங்களிலுள்ள குளங்களில் மீன் பிடி உரிமையை பஞ்சாயத்துக்குத்தான் வழங்க வேண்டும். சில இடங் களில் மீன்பிடித் தொழிலாளர் சங்கம் என்று வைத்துக்கொண்டு யாரோ சாப்பிடுகிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் ஒரு பெரிய கதையே இருக்கிறது. இங்கே சொல்வதற்கு நேரமில்லை. அங்கே சாப்பிட்டவர்கள் அதிகம் பேர். யார் யாரோ சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கதை இப்பொழுது வேண்டாம். பாசனக் குளங்களாக இருந்தாலும் மற்றக் குளங்களாக இருந்தாலும், மீன்பிடி உரிமை பஞ்சாயத்துக்களுக் குத்தான் கொடுக்கப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, விவசாய வருமான வரியைப் பொறுத்தவரையில் ராஜி செய்துகொள்வது என்ற உரிமையைக் கொடுத்திருக்கிறோம். காலத் தோடு மனு கொடுக்கவில்லையென்றால், ஏகத்தாருக வரிபோட்டு விடு கிறார்கள். ஐந்து பத்து எக்கர் நிலம் வைத்திருப்பவர்களிடம் கணக்கு ஏது? கணக்கு அவர்களிடம் கேட்பது தவறு. காலத்தோடு ராஜி செய்துகொள்வதற்கு மனு கொடுக்கவில்லையென்றால், அவர்கள் ராஜி செய்ய (...)வந்தால், அவர்கள் இரண்டு மடங்குத் தொகையைக் கட்ட

வேண்டுமென்று சொன்னால் போதும். அதுவே அவர்களுக்கு அபராத
மாக இருக்கும். அந்த வகையில் அரசு நியாயம் வழங்க வேண்டும்.
இதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன் (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. துரைசாமி) :** உறுப்பினர்
அவர்களுக்கு ஏற்கனவே 11 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, இன்னும் ஒரு நிமி
டம் அனுமதிக்க வேண்டும். இந்த அரசு அரசியல் தியாகிகளுக்குப்
பென்ஷன் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பது பாராட்டத் தக்கது. அவர்
கள் இந்த நாட்டிற்காகப் போராடியவர்கள். சுதந்திரம் கிடைக்குமா
கிடைக்காதா என்று மக்கள் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் தங்களுடைய
உயிர், உடைமை ஆகியவற்றைத் தியாகம் செய்தவர்கள், எவ்வளவோ பேர்.
அவர்கள் கஷ்டப்படும் நிலையில் இருக்கும்போது, அவர்களைப் பாதுகாப்பது
அவசியம். இந்தத் திட்டம் மிகவும் நியாயமான திட்டமாகும் பென்ஷன்
திட்டத்திற்கு மனுச் செய்து கொள்வதற்குக் கால வரம்பு தவறிப்போய்
விட்டது. திரு. சுபாஷ் சந்திர போஸ் அவர்கள் ஏற்படுத்திய இந்திய
தேசிய ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் உயிரையே தியாகம் செய்ய
முன்வந்தவர்கள். அவர்கள் இந்த நாட்டிற்காகப் போராடியவர்கள்.
அப்படிப்பட்ட தியாகிகளும் இந்தப் பென்ஷன் திட்டத்திற்கு மனுச்
செய்து கொள்ளும் காலத்தில் காலவரம்பு தவறிப்போய்விட்டது. ஆகவே,
பென்ஷன் மனுச் செய்துகொள்ள உள்ள காலகட்டத்தை நீடித்து, பென்
ஷன் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். இதனால் அரசாங்கத்திற்கு
ஒன்றும் பெரிய தொகை செலவழிந்துவிடாது. அரசாங்கம் இதைச்
செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கிராம வீட்டு வசதிக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை
குறைவு. நகரத்தில் என்ன கஷ்டம் இருக்கிறதோ அதே கஷ்டம்தான்
கிராமத்திலும் இருக்கிறது. ஆகவே, கிராமங்களில் வீட்டு வசதியை
அதிகரித்துத் தர வேண்டும். மற்றப்படி வீட்டைக் கட்டிக்கொடுக்காவிட்டாலும்,
வீடுகள் கட்டிக்கொள்வதற்கான மனைக்கட்டுகளை, வீடு இல்லாதவர்களுக்கு
கிடைக்கும் வகையில் வழங்க வேண்டும். இதற்கான வழி வகைகளை
அரசாங்கம் செய்ய வேண்டும் என்று கூறி என் உரையை முடித்துக்
கொள்கிறேன்.

***திரு. டி. இராசரத்தினம் :** தலைவர் அவர்களே, 1969–70 ஆம் ஆண்
டுக்கான வருவாய்த் துறை மானியத்தை ஆதரித்து நான் பேச விழை
கிறேன். குறிப்பாக இந்த ஆண்டு அடிக்கடி நாடகம் நடப்பது போல ஜமா
பந்தி நடப்பதை எடுக்க வேண்டும் என்ற முயற்சியும், அதே நேரத்தில்
ரெவின்யூ போர்டு இருக்க வேண்டாம் என்ற முயற்சியும் எடுத்துக்
கொண்டிருப்பதற்கு நாங்கள் எல்லாம் மகிழ்ச்சி அடைகிறோம்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியில் பட்டாபிராம்—தண்டுரை கிராமத்
தில் சர்வே நம். 485-இன் கீழ் 162 எக்கரா நிலத்தை அங்கிருக்கிற தனி
யாருக்கு தொழிற்சாலை ஏற்படுத்த 1964-லே பட்டா செய்து கொடுத்திருக்
கிறார்கள். தொழில் வளரவேண்டும் என்பதற்காக அப்படிக் கொடுக்கப்
பட்டிருக்கிறது என்றாலும், அங்கு தொழில் எதுவும் நடக்கவில்லை. இப்
படி வசதி படைத்த ஒருவருக்கு செண்ட் 10 ரூபாய்க்குக் கொடுத்தார்கள்.
இன்றைக்கு செண்ட் 200 விற்கிறது. அங்கே அவர் ஒரு ஷெட்டைப்
போட்டுக்கொண்டு, தொலைபேசி வைத்துக்கொண்டு மற்ற இடங்களில் எல்
லாம் சவுக்கைப் போட்டுக்கொண்டிருக்கிறார். சோமணி என்பவருக்குக்
கொடுத்தார்களே, தொழில் ஆரம்பிக்கப்பட்டதா என்று கவனித்தார்
களா? தொழில் ஆரம்பிக்கும் எண்ணம் அவருக்கு இல்லை என்றால்
திரும்பவும் அந்த நிலத்தை எடுத்துத் தொழில் ஆரம்பிக்க
யார் வருகிறாரோ அவருக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துக்
கொள்ள வேண்டும். அல்லது ஏழை எளியவர்களுக்காவது கொடுக்க
உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்
கொள்ளுகிறேன்.



அதே போல, என்னுடைய தொகுதியில் இறையூரில் நம். 48 எக்கரா
நிலத்தை வசதி படைத்த க்யூரா செட்டியாருக்குக் கொடுத்திருக்கிறார்கள்.
அந்த நிலத்தில் ஏழை எளிய ஹரிஜன மக்கள் குடியேறிவிட்டால் என்ன
செய்வது என்பதற்காகவே 20-12-1964-ல் பட்டா செய்து கொடுக்கப்
பட்டிருக்கிறது. அதை மீண்டும் ஆலோசனைக்கு எடுத்துக்கொண்டு ஏழை
எளியவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள
வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, பூதான யக்ஞத்தின் மூலமாக சில பேர்கள் ஏழை எளியவர்
களுக்கு நிலம் கிடைக்க வேண்டுமென்று தங்களது நிலத்தைத் தானம்
செய்திருக்கிறார்கள். அது போல எனது தொகுதி உலகரம் கிராமத்தில்
நம். 49-1 படி 37 எக்கரா நிலம் கொடுக்கப்பட்டும் அதை இன்னும் பிரித்
துக் கொடுக்காமல் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் கையிலேயே
இருந்துகொண்டிருக்க விட்டிருக்கிறார்கள். அதை உடனடியாகப் பிரித்து
நிலமற்ற ஏழை எளியவர்களுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக்
கொள்ளப்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதற்கும்
ரெவின்யூ இலாகா ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, காட்டுப்பாக்கம் கிராமத்தில் முன்னாள் அமைச்சர் திரு. பூவ
ராகன் அவர்கள் 14-4-1964-இல் விளையாட்டு மைதானம் ஒன்றைத்
திறந்து வைத்தார்கள். அதை அப்படித் திறந்து வைப்பதன் நோக்கம்
—அந்த மைதானத்தின் வழியாகத்தான் அந்தக் கிராம பாட்டை சென்றது.
அதை ஆக்கிரமித்துக்கொண்டுவிடுவார்கள் என்பதற்காக ஒரு பள்ளிக்கு
விளையாட்டு மைதானம் என்பதாக அறிவித்தார்கள். அது விளையாட்டு
மைதானமாகவும் இல்லை. அதையும் பரிசீலித்து பாட்டைக்கு வேண்டிய
பகுதி போக பாக்கியைக் கொடுப்பதில் கூட எங்களுக்கு ஆட்சேபனை இல்லை
என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, செங்கல்பட்டு மாவட்டத்தில் தண்ணீர் இல்லாத பிரச்சினையால்
பயிர்கள் காய்ந்து கிடப்பது ஒரு புறம். வரி வசூலிக்க வேண்டாம் என்று
சொல்லாது வசூலிக்கட்டும் என்கிறார்கள் அதிகாரிகள். அதிகாரிகளைக்
கேட்டுப் பயன் இல்லை . ஆகவே உடனடியாக அங்கே வரி வசூல் செய்யக்
கூடாது என்கிற உத்திரவைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
ஒரு சில இடங்கள் தவிர—இன்றைக்கு ஸ்ரீபெரும்புதூர் பிர்க்காவில் வரி
கொடுக்கக்கூடிய நிலை இல்லை. அதைத் தாற்காலிகமாகவாவது அடுத்த
ஆண்டுவரை வசூல் செய்யக் கூடாது என்று நிறுத்த வேண்டும். விளை
யாத நிலங்களுக்கு வஜா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

திருநின்றவூர் கிராமத்தில் பத்து ஆண்டுகளாக தண்ணீர் வரி
என்று வசூலிக்கிறார்கள். ஏரியில் ஒரு மாதம் தண்ணீர் இருந்தால்
போதும் என்று போடுகிறார்கள். அப்படியின்றித் தண்ணீர் வசதி
செய்து கொடுத்துவிட்டு இந்த வரியைப் போடும்படியாகக் கேட்டுக்
கொள்கிறேன்.

உள்ளாட்சிகளுக்கு ஏற்கனவே பத்து ஆண்டு காலமாக சர்வே செய்து
அதற்காக ஒரு அதிகாரி இருந்து—பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை என்று
மாற்றினார்களே தவிர, இன்னும் ஒப்படைக்கவில்லை. அதற்காக நட
வடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்கு மிகவும் தேவையாக இருக்கிற களம்,
புறம்போக்கு நிலம், பாட்டை புறம்போக்கு நிலம் இவற்றைப் பலர் ஆக்கிர
மித்துக்கொண்டுவிடுகிறார்கள். அவர்களை உடனடியாக விவசாயிகளால்
வெளியேற்ற முடியவில்லை. ஆகவே அதிகாரிகள் உடனுக்குடன் அப்படிப்
பட்ட ஆக்கிரமிப்புகளை அகற்ற வழிவகை செய்ய வேண்டுமென்று சொல்லி
எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[1969 மார்ச் 14

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி:** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல வருகிறேன். முதலாவதாக, திரு. மாரிமுத்து அவர்கள் பேசும்போது இந்திய தேசிய ராணுவ வீரர்களுக்கும் தியாகிகள் பென்ஷன் கிடைக்க வேண்டும். ஆகவே மனுச் செய்துகொள்ளும் காலத்தை மேலும் ஓராண்டுக்காவது நீட்டித்து அவர்கள் அந்த உதவித் தொகை பெற வழி செய்ய வேண்டும் என்றார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஏற்கனவே பல நாட்களாக ஜமாபந்தி முறை வேண்டுமா, ரெவின்யூத் துறை வாரியம் வேண்டுமா என்பது தர்க்கத்தில் இருந்தது. அவற்றை ஒழிக்க உடனே அமைச்சர் நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ளதுபோல இந்த இந்திய தேசிய ராணுவ வீரர்கள் பென்ஷன் பெற மனுச்செய்து கொள்ளும் தேதியை டிசம்பர் 1969 வரை என்று நீட்டித்து அவர்களுக்கும் பென்ஷன் அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இது பெரிய விஷயம் அல்ல.

இது போல முன்பு இருந்த அரசாங்கம் முதியோர்களுக்குப் பென்ஷன் அளிக்கும் திட்டத்தைக் கொண்டுவந்தது. அதிலே ஒரு மாவட்டத்திற்கு இவ்வளவு பேர்களுக்குத்தான் என்பதாக நிர்ணயித்து கொடுக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் இருநூறு, முந்நூறு பேர்கள் மனுச் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த வருடம் இல்லை, அடுத்த வருடம் என்பதாக அவர்களுக்குக் கொடுக்காது தள்ளி வருகிறது. அதற்குக் காரணம் அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை கொடுத்தாகிவிடுகிறது. பாக்கிப் பேர்களுக்கு இல்லாது போகிறது. இந்த நிலை மாற்றப்பட்டாக வேண்டும். முதியோர்களுக்குப் பென்ஷன் கொடுக்கிற திட்டத்தை அறிவித்துவிட்டோம். எப்போது அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டுவிட்டோமோ அப்போது முதியோர்கள் எத்தனை பேர்கள் மனுச் செய்துகொண்டாலும்—பென்ஷனுக்குத் தகுதி உள்ளவர்கள் அனைவருக்கும் கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதுதான் நியாயமாகும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே, இதைக் குறித்தும் அரசு தீவிரமாகச் சிந்தித்து எத்தனை பேர்கள் அப்ளிகேஷன் போட்டாலும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அருப்புக்கோட்டையில் சாதாரணமாக 50 அல்லது 60 பேர்கள் கடந்த 1 அல்லது 2 வருடமாக அப்ளிகேஷன் எல்லாம் போடப்பட்டு கொடுக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்ததற்குப் பிறகும் கூட இன்னும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. நிறைய வயதானவர்கள் வேறு வேலை செய்ய முடியாதவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த இக்கட்டான நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இதற்கு முன்னுலே பெற்றிருக்கிறவர்கள் இறந்துவிட்ட பிறகு எத்தனை ஸ்தானங்கள் காலியாகின்றனவோ அத்தனை ஸ்தானங்களுக்குத் தான் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இது சின்ன விஷயம், அரசாங்கம் இதை ஆலோசனை செய்து அப்ளிகேஷன் எத்தனைபேர்கள் போட்டாலும் அவ்வளவு பேர்களுக்கும் இந்த முதியோர் உதவித் தொகையைக் கொடுக்க உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

பிற்பகல்
12—30

**திரு ரா. ரா. முனுசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற வருவாய்த் துறை மானியத்தின்மீது ஓரிரு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். மிட்டா மிராசுகள், ஆலை வேந்தர்கள்தான் இந்தச் சட்டமன்றத்திலே நுழைய முடியும், சாதாரணமானவர்கள் நுழைய முடியாது என்ற நிலையை மாற்றி சாதாரணக் குடிமகனையும் இங்கே அமரச்செய்த நம்மை விட்டுப் பிரிந்து விட்ட அறிஞர் அண்ணா அவர்களுக்கு முதற்கண் அஞ்சலி தெரிவித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில், செஞ்சி வட்டத்திலே 1967-ஆம் வருடத்திற்குப் பிறகு இந்தச் சட்டமன்றத்திற்குள் திராவிட முன்னேற்றக் கழகம் வந்த பிறகு விவசாயிகள் எந்த அளவுக்குச் சிறப்போடு வாழ்கிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புறேன். பண்டைய காலத்திலிருந்து இந்த நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து 1966-ஆம் ஆண்டுவரை அந்தந்த



விவசாயிகள் தங்கள் வசம் வைத்துக்கொண்டிருந்த நிலங்களுக்குப் பட்டா ஆகாமலேயும், 20 ஆண்டுகளாக கட்டப்பட்டுக்கொண்டிருந்த வீடுகளுக்கு பட்டா ஆகாமலேயும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு 1967-ஆம் ஆண்டிலிருந்து 1968-ஆம் ஆண்டு முடிய என்னுடைய தொகுதியில் மட்டும் 2,700 ஏக்கர் விவசாயிகளுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. 20 ஆண்டுக் காலமாக பட்டா இல்லாமல் வீடுகளுக்கு அதிகாரிகள் முதல் ஆண்டுக்கு ஒரு ரூபாய் அடுத்த ஆண்டுக்கு ரூபாய் என்ற அளவிலே வாங்கிக்கொண்டிருந்த நேரத்தில் 1,377 வீடுகளுக்குப் பட்டா நாம் வழங்கியிருக்கிறோம். நம்முடைய வருவாய்த் துறை அங்கு இருக்கிற விவசாயிகளுடைய குறைகளை இந்தவிதமாகப் போக்கியிருக்கிறது. அதற்காக அதிகாரிகளுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே வெள்ளைக்காரன் காலத்தில் 1946–47-இல் விட்டுப்போன நிலையிலேயே ரோடுகள் இருந்தன. இப்பொழுது 1968-ஆம் ஆண்டிலேதான் ஒன்பது ரோடுகள் செப்பனிடப்பட்டு இருக்கின்றன. இதற்காக தமிழக அரசைப் பாராட்டாமல் அந்த வட்டத்து மக்கள் இருக்கமாட்டார்கள்; பாராட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஒரு வாரத்திற்கு முன் பாக காங்கிரஸ் நண்பர் ஒருவர் என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். கீழ்வெண்மணி நிகழ்ச்சியைப் போல செஞ்சியிலே ஒரு இடம் கொளுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே சட்டம், இங்கே ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். 1967-ஆம் ஆண்டுத் தேர்தலிலே செஞ்சி வட்டத்திலே காட்டுச்சித்தாமூர் என்ற இடத்திலே நடந்ததைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஓட்டுப்போட்டதற்காகத் தீ வைத்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது.) நான் இந்தச் சட்டமன்றத்திலே இந்த ஆண்டு இப்பொழுதுதான் முதன்முதலாகப் பேசுகிறேன், தலைவர் அவர்கள் எனக்கு இரண்டு நிமிடங்கள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த நிலைமைகளுக்கெல்லாம் பிறகு இப்பொழுது சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்கிறார்கள், இது சபைக்கு ஏற்றதுதானா? இந்த ஆண்டு அங்கே மக்கள் பெரிதும் பருவ மழையின்மையினால் உணவு தானியமின்றி தவிக்கின்ற அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்திலே சர்க்காரால் கொடுக்கப்பட்ட கடன்களையும், விவசாயக் கடன்களையும், அக்ரோ-இண்டஸ்ட்ரீஸ் குழு கொடுத்த கடன்களையும், சர்க்காரால் நில அடைமான வங்கி மூலமாக வழங்கப்பட்ட கடன்களையும் விவசாய வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட கடன்களையும் வசூல் செய்கிற நிலைமை அபத்தமாக இருக்கிறது. அது மட்டுமல்ல. அங்கே சென்று பார்க்கிறபோது அதிகாரிகளிடம் இதைப்பற்றி எந்த அளவுக்கு எடுத்துச்சொன்னாலும் அவர்கள் கேளாக் காதினராய், மேலதிகாரிகளிடம் நல்ல பெயர் வாங்குவதற்காகவோ என்னவோ, விவசாயிகளிடமிருந்து வரி வசூல் செய்வதற்கு, லோன்களை வசூல் செய்வதற்கு முயற்சித்து, அவர்களுடைய மோட்டார், நிலம், ஆடு, மாடு இவற்றையெல்லாம் ஜப்தி செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய அமைச்சர் அவர்கள் அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உடனடியாக உத்தரவு பிறப்பித்து ஒரு ஆண்டு காலத்திற்கு வரி வஜா செய்துதரும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. துரைசாமி):** அடுத்துப் பேச இருக்கிற எல்லா உறுப்பினர்களும் 5 நிமிடங்களுக்குள் தங்களுடைய பேச்சை முடித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இல. பலராமன்:** அவைத் தலைவர் அவர்களே, இந்த வருவாய்த்துறை மானியத்தின்மீது பேச எனக்கு அனுமதியளித்ததற்கு நன்றி கூறி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இருபது ஆண்டுக் காலத்திலே காங்கிரஸ் ஆட்சியிலே நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் என்ற அடிப்படையிலே நிலச் சீர்திருத்தச் சட்டம், ரயத்துவாரி-இனாம் ஒழிப்புச் சட்டம், ஜமீன் ஒழிப்புச் சட்டம், குத்தகை நிர்ணயச் சட்டம், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், உச்ச வரம்புச் சட்டம் இதுபோன்ற பல சட்டங்களைக் கொண்டு நல்ல முறையில் காரியங்களைச் செய்திருக்கிற நேரத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர்களும், அமைச்சர்களும் சில காரியங்களைக் குறை கூறிப் பேசுகிறார்கள். எந்தச் சட்டத்தையும் கட்சி ரீதியாக வகுத்தால் அதை அதிகாரிகளும் பாதுகாக்கவேண்டுமென்ற நிலை இருந்தால்தான் நல்ல முறையில் நடைபெறும். சட்டத்தில் துளைகள் இருப்பதால் தப்பிக்கக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அந்தத் துளைகளையெல்லாம் போக்குவதற்கு என்ன முயற்சிகளைச் செய்யவேண்டுமோ அதைச் செய்யவேண்டும். வருவாய்த் துறைக்கு அடிப்படையாக இருக்கக்கூடியவர்கள் கிராம அதிகாரிகள். கிராம அதிகாரிகள் இப்பொழுது இசும்புப் பாத்தியம் என்ற முறையிலே இல்லாமல் யார் வேண்டுமானாலும் வரலாம், தண்டோரா மூலமாக வரலாம் என்று சொல்லி அதன் மூலமாக கிராம அதிகாரிகளைத் தேர்வு செய்கிறார்கள். அவர்கள் பொறுப்பு இல்லாதவர்கள் ஆக இருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அவர்கள் வரி வசூல் செய்வதில் ஊழல்கள் ஏற்படுகின்றன. பணக் கையாடல் தகராறுகள் எல்லாம் இருப்பதாக பத்திரிகையிலே பார்க்கிறோம். காரணம், மேற்பார்வை குறைவாக இருக்கிறது. அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்று பார்க்கும்பொழுது அதிகாரிகளுடைய மேற்பார்வை அடிக்கடி இருக்கக்கூடிய முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஜாயின்ட் பட்டா என்ற முறையில் கூட்டுப் பட்டாதாரர்களிடமிருந்து அதிகமாக வசூல் செய்யக்கூடிய நிலைமையெல்லாம் இருக்கிறது. அதிலே ஏழை எளிய மக்கள், கால் எக்கர், அரை எக்கர், ஒரு எக்கர் உடைய மக்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களிடம் பண வசதி கிடையாது. அவர்களுக்குள்ள கஷ்டங்களை நிவர்த்திக்க தனிப் பட்டாவாகச் செய்து தருவதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நில அளவையில் பல தகராறுகள் இருக்கின்றன. ஒரு கால்வாய் கூட ஒழுங்கான முறையில் இருப்பதில்லை. கால்வாய் அளவு 10 லிங்க்ஸ் என்றால் 1½ அடி, இரண்டு அடி என்ற அளவில்தான் இருக்கிறது. அதைக் கண்காணிப்பதில்லை. பொதுவான இடங்களில்கூட என்க்ரோச்மெண்ட்—ஆக்ரமிப்பு—என்ற முறையில் எல்லோரும் ஆக்கிரமிப்புச் செய்வதால் இது போன்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. ஏரிக்கு வரக்கூடிய தண்ணீர் எல்லாம் தடைப்படுகிறது.

பஞ்ச நிவாரணத்திற்காக ரூபாய் 35·50 லட்சம் அளவுக்கு வட ஆற்காடு மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருப்பதாக விளக்க அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மாவட்டத்திலே பஞ்ச நிலைமை ஏற்படும் என்று முன்னாலேயே எடுத்துக் கூறியும் அடிப்படையாகச் செய்ய வேண்டிய காரியங்களைக் காலா காலத்தில் செய்யாமையினால் இன்றைக்குக் குடிக்கக் கூட நீர் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசு இன்றும் மிகத் தாமதமாகத்தான் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது. அந்தப் பகுதிக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் போதாது. ஒரு கோடி ரூபாயாவது ஒதுக்கினால்தான் கால்நடைப் பராமரிப்பு, குடிதண்ணீர் வசதி ஆகியவற்றைச் செய்ய முடியும். தற்போது கடன் வசூலும் வரி வசூலும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்க வருவாய்த் துறையினர் விரிவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஜமாபந்தி முறையினால் விவசாய மக்களுக்குப் பயன் ஏற்பட முடியவில்லை;



ஆகவே, இதை மாற்றி அதற்கு ஒரு மாற்றுத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். லாட்டரி டிக்கட் விற்பதற்காக ஐ.ஏ.எஸ். ஆபீசர்களை மாற்றிக் கொண்டிருக்கின்ற அளவுக்கு நிலைமை இருக்கிறது. இவ்வாறெல்லாம் செய்யாது அவர்களை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய கெய்வார் அவர்கள் விலைவாசித் தடுப்புக் கமிட்டியின் மூலமாக ஒரு அறிக்கையைக் கொடுத்தார்கள். அந்த அறிக்கை என்ன ஆனது என்று தெரியவில்லை. உணவு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்று..... ..............(மணி அடிக்கப்பட்டது).

**திரு. க. ர. நல்லசிவன் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, தனி மனிதன் தன்னுடைய வாழ்க்கைக்கு நிரந்தரமானது என்று நம்பி எப்படி திட்டமிட்டு காரியங்களைச் செய்கிறானோ அதே போன்று ஒவ்வொரு அரசாங்கமும் நிரந்தரமானது என்று கருதி திட்டமிட்டு காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு வருகின்ற காலத்தில் ஒரு கால கட்டத்தை நிர்ணயித்துக் கொண்டு தன்னுடைய திட்டங்களை வைப்பதன் மூலந்தான் ஜனங்களுடைய கவனத்தைக் கவர முடியும் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், ஒருங்கிணைக்கப்பட்ட நில சீர்திருத்தம், போர்டு ஆப் ரெவின்யூவை ஒழித்துக் கட்டுவது, ஜமாபந்தி முறையை ஒழித்துக் கட்டுவது, சென்னையில் ஜனங்களுக்குக் குடியிருப்பு வசதி செய்வது போன்ற தீவிரம் மிக்க திட்டங்களைச் சபை முன்னால் அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்கள் அவ்வளவையும் விரைவில் அமல்படுத்த வேண்டியது அவசியம். இவற்றை சீக்கிரத்தில் அமல்படுத்துவதற்கு என்னுடைய முழு ஆதரவையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

காங்கிரஸ் கட்சி நண்பர்கள் பேசும்போது அவர்களுடைய அரசாங்கம் நிலச் சீர்திருத்தத்திற்காகப் பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்ததாகக் கூறினார்கள். 1961-ம் ஆண்டு ஒரு பெரிய நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதனால் 83,000 ஏக்கர் நிலமில்லாதோருக்குக் கொடுப்பதற்காகக் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டது. ஆனால், 1961 முதல் 1969 வரை உள்ள எட்டு வருஷங்களில் ஒப்படை செய்யப்பட்டுள்ள நிலம் எட்டாயிரம் ஏக்கர்தான். அந்தச் சட்டம், ஏழை விவசாயிகளுடைய ஆசை அபிலாஷைகள் நிறைவேறி விட்டன என்று எண்ணக்கூடிய வகையில் கண் துடைக்கச் செய்யப்பட்டதே தவிர, உணர்வு பூர்வமாக, ஏழை விவசாயிகளுக்கு நிலம் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டதல்ல என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசானது தனக்குக் கிடைத்த வாய்ப்பாகக் கருதி, ஜனங்களுடைய வாழ்க்கையில் புதிய மாறுதலை உண்டு பண்ணவேண்டும். ஒரு அரசாங்கத்திற்கு 5 ஆண்டுகள்தான் , அதற்குப்பிறகு தேர்தல் வந்துவிடும். 1961-ல் காங்கிரஸ் அரசாங்கம் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது. 1962-ல் தேர்தல் வந்து விட்டது. அந்த மசோதாவை அவர்கள் மக்கள் முன்னால் காட்டி ஓட்டுப் பெறத்தான் அது பயன்பட்டதே தவிர, மக்களுக்கு எந்தவிதப் பயனையும் தரவில்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசிற்கு இன்னும் மூன்றாண்டு காலம் இருக்கிறது. இன்னும் ஓராண்டுக் காலத்திற்குள்ளாக ஜமாபந்தி ஒழிப்பு, ரெவின்யூ போர்டு ஒழிப்பு, ஒருங்கிணைக்கப்பட்ட நிலச் சீர்திருத்தம் ஆகியவற்றை எல்லாம் கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும்.

இன்று நாட்டிலுள்ள நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். சில சட்ட சபைகளில் இருக்கக்கூடிய அங்கத்தினர்கள், இந்த நாட்டுக்கு பார்லிமெண்டரி முறையே சரியில்லை, இந்த முறையினால் ஜனங்களுக்கு நிலம் கொடுக்க முடியாது, வசதி செய்ய முடியாது என்று எண்ணக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. மதிப்பிற்குரிய நாகிரெட்டி அவர்கள்

ஆந்திர சட்ட மன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்திருக்கிறார். அவர் இங்கும் சட்ட மன்ற உறுப்பினராக இருந்தவர். அவருடைய கொள்கை, கோட்பாடுகளிலே எனக்கு நம்பிக்கை இல்லையென்றாலும் என்ன காரியங்கள் நடக்கின்றன என்பதற்குச் சான்றாக அதைக் கூறுகிறேன். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக அரசு இன்னும் ஓராண்டுக் காலத்திற்குள்ளாக இந்தக் காரியங்களை நிறைவேற்றினால்தான் தமிழகத்தில் அமைதியை, புதிய போக்கை ஏற்படுத்த முடியும்.

மதிப்பிற்குரிய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் குறைந்த பட்சம் இரண்டு மூன்று எக்கர் மட்டும் வைத்துக் கொண்டிருப்பவர்கள் சிறப்பான முறையில் விவசாயம் செய்ய முடியும் என்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். கடந்த 16, 17 ஆண்டுகளில் யாரும் இத்தகைய கருத்தை வெளியிடவில்லை. இதுவரை பெரிய பண்ணையாக இருந்தால் தான் சிறப்பான முறையில் விவசாயம் செய்ய முடியும் என்ற கருத்து இருந்தது. ஆகவே, அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு புதிய மந்திரி சபை, நிலம் இல்லாதவர்களுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டும். 30 ஸ்டாண்டர்டு எக்கர் என்று தேவையில்லை. அதிக பட்சம் ஒருவருக்கு 10 எக்கருக்குமேல் இருக்கக் கூடாது என்ற முறையில் சட்டம் கொண்டு வர வேண்டும். முன்பு கொண்டு வந்த சட்டத்தில் ரயத்துவாரி நிலங்களுக்கு 30 ஸ்டாண்டர்டு எக்கர் என்ற வரம்பு இருக்கிறது. ஆனால் பப்ளிக் டிரஸ்ட் ஆக்ட் படி உள்ள நிலங்களுக்கு, கோயில் நிலங்களுக்கு வரம்பு இடையாது. மனிதனுக்கே 10 ஸ்டாண்டர்டு எக்கர் போதும் என்று சொல்லும்போது ஆண்டவனுக்கு எதற்கு ஆயிரம் எக்கர்? ஆண்டவனுக்கான காரியங்கள் நடக்க வேண்டுமென்பதில் எதிர்ப்போ மாறுபாடோ கிடையாது. தனி நபர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது போல் பப்ளிக் டிரஸ்ட் நிலங்களுக்கும் ஒரு வரையறையை ஏற்படுத்தி விடவேண்டும். புதிய சர்க்கார் இதிலும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்ச நிவாரண வேலைகளுக்கு என்று ஒவ்வொரு பட்ஜெட்டிலும் ஒரு பகுதி இருக்கும். அதற்காக லட்சக் கணக்கான தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கும். அதன் மூலம் பயனுள்ள காரியம் செய்ய முடிகிறதா என்றால் ஜனங்களுக்குத் திருப்தி தரக்கூடிய முறையில் ஒன்றும் செய்ய முடிவதில்லை. கோவை, இராமநாதபுரம், சேலம் போன்ற பகுதிகளில் நிரந்தரமாகப் பஞ்சமாக இருக்கக்கூடிய பகுதிகள் இருக்கின்றன. அதைப் பொறுத்த வரையில் இந்த அரசாங்கம் தீவிரமான ஒரு கருத்தை வைத்துக் கொள்ள வேண்டும். அங்கு தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கக் கூடிய ஒரு சூழ்நிலை சமீப காலத்தில் இடையாது. அப்படியானாலும் குடிக்கத்தான் தண்ணீர் கொடுக்க முடியும். ஆகவே அங்கு சிறு கைத்தொழில்களைப் பரப்புவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். மழையில்லாமல், தண்ணீர் அதிகமாக இல்லாமல் இருக்கக் கூடிய அந்தப் பகுதி மக்களுக்குப் போதுமான அளவிற்கு வருமானம் வரும் பயிர்களையாவது செய்ய முடியுமா என்று பரிசீலிக்க வேண்டும். கோவைக்கு பத்து லட்ச ரூபாய், செங்கல்பட்டு ஜில்லாவிற்கு இருபது லட்ச ரூபாய் என்று ஒதுக்கி விடுவதால் மட்டும் நிரந்தரமாக உள்ள பஞ்சப் பிரதேசங்களுக்குத் தீர்வு காண முடியாது.

நான் சொல்வது வேடிக்கையாக யிருக்கலாம். எல்லோரும் அதைக் கேலி செய்வார்கள். இருந்தாலும் சொல்கிறேன். அதிக மழையில்லாவிட்டாலும் முருங்கை மரங்களை அங்கு வைத்து வளர்க்கலாம். ஒரு எக்கருக்கு நூறு மரங்கள் வரை வைக்க முடியும். நூறு மரங்கள் வைத்தால் ஆயிரம் ரூபாய் வரை வருமானம் வரும். முருங்கைக் காய், முருங்கைப் பூ, முருங்கைக் கீரை இவற்றில் நல்ல ப்ரோட்டீன் சத்து உள்ளது. நாம் இன்று முருங்கைக் காயை வேகவைத்துத் தான் சாப்பிடுகிறோம். அதைப பொடியாக்கி உணவுப் பொருளாக ஆக்கி வெளிநாடுகளுக்குக்கூட அதை ஏற்றுமதி செய்ய முடியும். ஆகவே, மழை இல்லாத இடங்களில் இந்த முருங்கை மரங்களை வைத்து வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக, சமீபத்தில் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சென்னையில் உள்ள வீடு இல்லாதவர்களுக்கு புறம்போக்கு நிலங்களைப் பட்டா செய்து கொடுப்பது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். உழவனுக்கு நிலம் கொடுப்பதுகூட இரண்டாம் பட்சம். ஆனால் இந்த மாநிலத்தில் உள்ள வீடு இல்லாதவர்களுக்கு வீடு கொடுப்பது இந்த சர்க்காரின் தலையாய கடமையாகும்; இரண்டாயிரம் மைல் நீளம், ஆயிரத்தைந்நூறு மைல் அகலம் உள்ள பாரத நாடு, துணைக் கண்டம் என்றெல்லாம் சொல்கிறோம். இங்கு குடியிருக்கக் கூட வீடு இல்லை என்ற நிலை பரிதாபத்திற்குரிய நிலையாகும், நாம் வெட்கித் தலை குனியக் கூடிய ஒன்றாகும். ஆகவே இந்த சர்க்கார் வருகிற மூன்று ஆண்டுகளுக்குள்ளே தமிழ்நாட்டில் வீடு இல்லாத மக்கள் யாரும் இல்லை என்று சொல்லக் கூடிய ஒரு நிலையை உண்டுபண்ண வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. என். நாச்சிமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வருவாய்த் துறை மானியத்தின் மீது, அதை ஆதரித்துப் பேசுமுகத்தான் நான் என் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எனக்கு முன் பேசி உறுப்பினர்கள் பலரும் நல்ல பல கொள்கைகளை அரசுக்கு எடுத்து சொன்னார்கள். அப்படி நம் அரசாங்கத்தின் கொள்கைகளை வகுப்பது ஒன்று, அதை அமுலாக்குவது இரண்டாவதாகும். நல்ல கொள்கைகளை வகுத்தாலும், அவற்றை அமுல் நடத்தும்போது அதில் சில தவறுகள் ஏற்பட்டால் நாம் எந்த நோக்கத்திற்காக அந்தக் கொள்கைகளை உண்டாக்கினோமோ அந்த நோக்கம் கைகூடாமல் போய் விடுகிறது. அந்த அடிப்படையில் நிலம் சம்பந்தப்பட்ட வரையில் எனக்குத் தெரிந்த சில நடைமுறைச் சிக்கல்கள் பற்றிச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

குறிப்பாக கிராமப்புறங்களில் உழவர்களுக்கு ஏற்படக்கூடிய சிக்கல்கள் எல்லாம், அவர்கள் பட்டா சம்பந்தப்பட்டதுதான். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், சின்ன விவசாயிகள் பல கூட்டுப் பட்டாக்களோடு இணைந்திருக்கக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். இப்போது நம் அரசுத் துறையில் விவசாயிகளுக்குப் பல உதவிகளைச் செய்து வருகிறார்கள். அப்படி செய்யும்போது அவர்கள் நிலத்தை அரசுக்கோ அல்லது பொது நிறுவனங்களுக்கோ அடைமானம் வைத்து கடன்கள் பெறவேண்டியிருக்கிறது. அப்படிக் கடன் பெறும்போது நிர்வாக அதிகாரி நிலம் சம்பந்தமாகக் கேட்கக் கூடிய ரிக்கார்ட்களில் தனிப் பட்டாவும் ஒன்றாகும். தனிப் பட்டா கேட்கும்போது, அவர்கள் கர்ணம், தாசில்தார் அல்லது யாரிடத்தில் இருந்து அந்த நிலத்தை வாங்கினார்களோ அவர்களிடம் சென்று, அவர்கள் சம்மதித்து, கையெழுத்து வாங்கிவர வேண்டியிருக்கிறது. இப்படி அவர்கள் நாயைக் காட்டிலும் அந்த நேரத்தில் கேவலமாக அலைய வேண்டியிருக்கிறது. எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் சரி, ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டு நிர்வாகம் நடப்பதாகத் தெரியவில்லை. நில வருவாய்த் துறைக்கு ஒட்டிய துறை பதிவுத் துறை. பதிவுத் துறைக்கும் வருவாய்த் துறைக்கும் எந்தவிதமான ஒத்துப்போகும் இணைப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. சாதாரணமாக ஒரு உழவன் தன் நிலத்தை அடைமானம் வைத்து அரசாங்கத்திலிருந்து கடன் பெற்றிருப்பானேயானால் அந்த உழவன் பதிவகத்திற்குச் சென்று கையெழுத்து இட்டு, ஸ்டாம்பு பேப்பரில் பதிந்து கொடுப்பதில்லையென்றாலும், கடன் பதிவாகும் எட்டுக் கணக்கில் அது வந்து விடுகிறது. அதே உழவன் அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்கும் போது அந்தக் கடன் தீர்க்கப்பட்டதாக அது பத்திரப் பதிவகத்தில் குறிக்கப்படுவதில்லை. என் அனுபவத்திலேயே அதைப் பார்த்திருக்கிறேன். அப்படியானால் சின்ன விவசாயிகள் இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்க்க முடியும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். பதிவகத்திற்குப் போய் கேட்டால், 1908-ம் ஆண்டு போட்ட சட்டம், இதில் எந்தவிதமான திருத்தமோ அல்லது மாறுதல்களோ வரவில்லை. எங்கள் வேலை அரசாங்கத்திலிருந்து கடன்கள் கொடுப்பதை மட்டும்தான் பதிந்து கொள்ள வேண்டுமென்று இருக்கிறதே தவிர அந்தக் கடன்களை உழவன் திருப்பி கட்டி விட்டால் அதைத் திரும்பவும் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டுமென்று ஒரு உத்தரவு எங்களுக்கு வரவில்லை என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு தடவையும் அவர்கள் தங்

கள் நிலத்தை அடைமானமோ அல்லது ஒத்தியோ வைக்கும்போது ஒவ்வொரு தடவையும் அவர்கள் டிஸ்சார்ஜ் சர்டிபிகேட் தாசில்தாரிடமிருந்து வாங்க வேண்டிய ஒரு இக்கட்டான நிலை இருக்கிறது. ஆகவே உழவர்களுக்கு நல்ல முறையில் வசதி செய்யக் கூடிய விதத்தில் ஒரு செயல்முறையைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன் பேசியவர்கள் குடியிருப்புகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள். ஒட்டன்சத்திரம் ஒரு பெரிய பேரூராட்சியாக இருந்தாலும் ஒட்டன்சத்திரம் ஊர் முழுவதும் இன்று ஹைவேஸில்தான் குடியிருக்கிறது. குடியிருப்பிற்காக இந்த இரண்டு ஆண்டுகளாக எவ்வளவோ முயற்சி எடுத்து நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து அந்த நிலங்களை விலைக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று பல தடவை விண்ணப்பித்தும் அதற்கான முடிவு எடுக்கப்படாமல் ஒவ்வொரு தடவையும் எவிக்ஷன் நோட்டீஸ் கொடுப்பது, பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நிறுத்தப்படுவது என்றிருக்கிறது. ஆகவே இந்தக் குடியிருப்புப் பிரச்னைக்கு விரைவானதொரு தீர்வு காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. நா. சௌந்தரபாண்டியன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த மானியக் கோரிக்கைமீது எங்கள் கட்சி சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒருசிலவார்த்தைகள் கூற விரும்புகிறேன். வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த மானியக் கோரிக்கை விளக்க உரையில் நன்செய்த் தீர்வைக்குப் பதிலாக பாசனத் தீர்வை வசூலிப்பதுபற்றி அரசு முனைப்பாக ஆய்ந்து வருகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஏழை விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கும் என்பதோடு வேளாண்மை உற்பத்தியைப் பெரிதும் குறைக்கும் என்று திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து, பஞ்ச நிவாரணத்திற்காக நம் சர்க்கார் கிட்டத்தட்ட 1,57,00,000 ரூபாய் பல மாவட்டங்களுக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். நம் நாட்டில் பல பகுதிகள் வரட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் இந்த உரையிலேயே கூறியிருக்கிறார்கள். மத்திய அரசினிடம் விண்ணப்பிக்கும்போது வரட்சி துயர் தணிப்பு உதவி மானியமாக செய்ய வேண்டுமென்று மத்திய அரசை இந்த அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. விளக்க உரையில், "ஃபாமின் அஃபெக்டட் ஏரியா" என்று அரசு முடிவு எடுத்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசிடம் போகும்போது "ட்ரவுட் ரிலீஃப்" வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். "ட்ரவுட் ஏரியா" என்றால் அந்தப் பகுதிகளுக்கு நில வரியை வஜா செய்ய வேண்டும். மேலும் பல சலுகைகளும் அளிக்கப்பட வேண்டும். ஆனால் மத்திய சர்க்காரிடம் ஒருமாதிரி சொல்லிவிட்டு மாநில அரசு ஒருமாதிரியாக முடிவு எடுப்பது என்பது வேடிக்கையாக இருக்கிறது. ஆகவே அரசு இதுபற்றித் தீவிரமாக ஆலோசித்து அப்பகுதிகளை வரட்சிப் பகுதிகள் என்று அறிவித்து தனி மானியம் வழங்கவேண்டும்.

திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ராதாபுரம் தாலுகாவிற்கு 8½ லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது போதாது. இந்தத் தொகையைக் கூட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1—00

புரட்சிகரமான நிலச் சீர்திருத்தச் சட்டம் வருகிறது, வருகிறது என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லிக்கொண்டிருக்கிறது. அந்தச் சட்டம் எப்பொழுது வருகிறது என்பதை இந்த விளக்கவுரையில் திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை. அரசு, ஒருபடியரிசித் திட்டத்தை நாடு முழுவதும் கொண்டுவருவோம், கொண்டுவருவோம் என்று சொல்வது போல் இருக்காமல் நிலச் சீர்திருத்தச் சட்டம் இந்தக் காலஅளவிற்குள் கொண்டு வருவோம் என்று திட்டவட்டமாகச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



அரசாங்கத் தரிசு நிலங்கள் ஏராளமாகக் கிடக்கின்றன. அவைகளை எப்படி வினியோகம் செய்யவேண்டுமென்பதில் இந்த அரசாங்கம் முயற்சியெடுக்க வேண்டும். குறிப்பாக, தரிசு நிலங்கள் எந்த ஏழைகளுக்கு விநியோகிக்கப்பட்டாலும், அவர்கள் குறித்த காலத்தில் அதில் பயிர் செய்கிறார்களா என்பதை அரசாங்கம் கண்காணிக்க வேண்டும். பட்டா வழங்கப்படும் நிலங்களில் குறித்த காலத்திற்குள் பயிர் செய்யாவிட்டால் அரசாங்கம் அவைகளைத் திரும்பப்பெறும் என்று ஒரு உத்தரவை இந்த அரசு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கூட்டுப் பட்டாவைப் பற்றி இந்த மன்றத்திலேயும், வெளியிலேயும் பேசப்பட்டுக்கொண்டு வருகிறது. அதைப்பற்றி இந்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன? அவர்கள் எதிர்க் கட்சியிலிருந்தபொழுது என்ன சொன்னார்கள்? இப்பொழுது இந்த அரசு அதைப்பற்றி ஏன் நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டது? இரண்டாண்டு காலமாக என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது? ஒரு முயற்சியையாவது எடுத்திருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லையென்றுதான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வயது வந்தவர்களுக்கு "முதியோர் பென்ஷன்" கொடுப்பதில் தற்போதைய அரசாங்கம் தீவிரப்படுத்தவில்லை. அதிக கவனம் எடுக்கவில்லை. இது முன்பிருந்த அளவுக்கே இருந்துகொண்டு இருக்கிறது. இந்தத் திட்டத்தைத் தீவிரப்படுத்தவேண்டும். இதற்குப் பொருளாதார நெருக்கடிகள் குறுக்கிடலாம். ஆனாலும்கூட ஏழைகளுக்கு "ஓல்ட் ஏஜ் பென்ஷன்" முதியோர்களுக்குக் கொடுக்கும் விஷயத்தில் இந்த அரசு தீவிரமாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஜமாபந்தி முறையை எடுத்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது தான். ஆனால், என்ன காரணங்களைச் சொல்லி அதை எடுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அந்தக் காரணங்களை அரசு நீக்க முடியாதா என்று தீவிரமாகப் பரிசீலித்திருக்க வேண்டும். ஜமாபந்தி முறையை ஒழித்து விட்டால், ஏழை விவசாயிகள் புகார்களைச் சொல்லுவதற்கு என்ன முறையை வகுத்திருக்கிறார்கள் என்பது இந்த விளக்கவுரையில் இருக்கிறதா என்றால், இல்லையென்றுநான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கிராம அதிகாரிகளுடைய கல்வித் தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதோடு, பதவி உயர்வையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இதற்கு ஏன் இவ்வளவு காலதாமதம் எடுத்துக்கொள்ள வேண்டும்? ஏன் உடனடியாகச் செய்யவில்லை? அதிகாரிகளுக்கு இப்பொழுது கொடுக்கப்பட்டு வரும் அடிப்படைச் சம்பளம் போதாது. அதை அதிகப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை அதிகமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். அவர்களுக்கு இப்பொழுது பிரயாணப்படி, தினப்படி கொடுப்பதில்லை. வட்ட தலைநகர், உப வட்டத் தலைநகர்களுக்குப் போய்வருவதற்குப் பிரயாணப்படி கொடுக்கப்படுவதில்லை. அவர்களுக்கு நியாயமாகக் கொடுக்க வேண்டிய பிரயாணப்படி, தினப்படியைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்களைப் பகுதிநேர ஊழியர்களாக ஆக்கலாமா என்ற யோசனை அரசின் கருத்தில் இருப்பதாகத் தெரிகிறது. அவ்வாறு செய்வது முற்றிலும் தவறு என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுதே, பெரும்பாலும் அவர்கள் ஊரில் இருப்பதில்லை. எனவே, அவர்களைப் பகுதிநேர ஊழியர்களாக ஆக்காமல் நிரந்தர ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வருவாய்த் துறை வாரியத்தை நீக்கிவிட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதை எப்படி மாற்றவேண்டும், எப்படியெப்படிச் செய்ய வேண்டுமென்று திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை. வருவாய்த் துறை வாரியம் முன்பு நல்ல முறையில் செயல்பட்டு வந்தது. அதனால், விரைவில் பணிகளைச் செய்ய முடிந்தது. ஆனால், இப்பொழுது 2½ ஆண்டு, 3 ஆண்டுகள் ஆனாலும் கூட முடிவெடுக்க

[திரு நா. சௌந்தரபாண்டியன்] [1969 மார்ச் 14

முடியாமல் இருக்கிறது. காரணம், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஐ.ஏ.எஸ்.
காரர்களாக இருப்பதால், அவர்கள் கூறுவதை மாற்றுவதற்கு வாரியத்
தில் உள்ள உறுப்பினர்களுக்கு வலுவும் இல்லை, நேரமும் இல்லை என்ற
காரணத்தினால் அது செயலற்றுக் கிடக்கிறது. அதன் காரணமாக வரு
வாய்த் துறை வாரியத்தை எடுத்துவிடுவது நல்லதுதான். அத்துடன்,
மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பொறுப்பும் மிக அதிகமாக இருக்கிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நமது அமைச்சர்கள்கூட
ஏதாவது ஒரு இலாகாவைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால்
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்
டிருக்கிறார்கள். அவர்கள் இந்த நாட்டிலே முதுகெலும்பு என்று கூறி
இருக்கிறார்கள். அந்த முதுகெலும்பில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால்,
மனிதர்களுக்கே குழப்பம் வந்துவிடுகிறது. அதுபோல் மாவட்ட ஆட்சித்
தலைவர்களுக்கு கட்சி மாட்சி ஏற்பட்டு மாவட்டத்தையே மிகவும் பின்னணிக்குக்
கொண்டுவரக்கூடிய நிலைமையிலிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொண்டு
என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** தலைவரவர்களே, இந்தக் கோரிக்கையில்
முக்கியமாக நிலவரி ரத்துப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. நிலவரி
ரத்தை நீங்கள் செய்வதானால் நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.
ஏனென்றால் 1 ஏக்கருக்கு, உயர்ந்தபட்ச நிலங்களில், 20 ரூபாய் அடிப்
படைத் தீர்வை என்றிருந்தால், 75, 80 ரூபாய் வசூலிக்கப்படுகிறது.
ஆகவே, அடிப்படைத் தீர்வையான 20 ரூபாயை ரத்து செய்துவிட்டு மீதி
யுள்ள செஸ்கள், சர்சார்ஜ், தண்ணீர்த் தீர்வை இருக்கின்றனவே, அவற்றின்
மூலம் ஒரு ஏக்கருக்கு 50 ரூபாய் 60 ரூபாய் வரும், நான் சொல்வது
உயர்ந்த நன்செயைப் பற்றி, அதை வசூலித்துக்கொள்ளலாம். சர்க்கா
ருக்கும் நிலவரியை ரத்து செய்துவிட்டார்கள் என்ற நல்ல பெயர் கிடைக்
கும். அதனால் விவசாயிகளுக்கும் நிவாரணம்தான். இன்னொரு காரணம்
சொல்ல ஆசைப்படுகிறேன். நிலவரியை ரத்து செய்துவிட்டு ஒரு ஏக்கருக்கு
20 ரூபாயை ரத்து செய்துவிட்டு, வாட்டர் செஸ் மூலம் கூடுதலாக வருமா
னம் வரும் அளவுக்குப் போகலாமா? போன வருஷம்கூட பேசியிருக்
கிறேன். கெய்வார் ரிப்போர்ட் இருக்கிறது. அதைப் பரிசீலனைசெய்து
கொண்டிருக்கிறீர்கள். அதன் மூலம் தண்ணீர்த் தீர்வை ஜாஸ்தியாகிவிட்டால்
புஞ்சைக்கு ரத்து செய்துவிட்டோம் என்று கட்சிப் பிரசாரம் செய்வதற்கு
அதைப் பிரயோஜனமாக வைத்துக்கொண்டு, மறைமுகமாகத் தண்ணீர்த்
தீர்வையைப் போட்டுவிடாதீர்கள். அப்படிக் கூட்டுவதாக எண்ணமிருந்தால்
இந்தக் காரியத்தை நீங்கள் செய்யவே வேண்டாம், ரத்து செய்யவும்
வேண்டாம், அதைக் கூட்டிக்கொள்ளவும் வேண்டாம். ஆகவே, இதை
நீங்கள் மனதில் கொள்ள வேண்டும்.

ரெவின்யூ போர்ட் அபாலிஷனைப் பற்றி இருக்கிறது, இராஜாஜி காலத்
திலேயே சொல்லிக்கொண்டிருந்ததுதான், அமலுக்கு வரவில்லை. "ரெட்
டேப்பிஸம்" காலதாமதம் ஏற்படுகிறது, ஒரே வேலையைத் தான் அந்த
இலாக்கா நடத்திக்கொண்டு இருக்கிறது என்று செய்கிறீர்கள். நல்ல காரி
யம்தான், செய்யுங்கள். அதே நேரத்தில் ஜில்லா கலெக்டர்களின்
பொறுப்பு ஜாஸ்தியாக இருக்கிறது. அதனால், ஜில்லாக்களைக் கூடுமான
வரையில், இப்பொழுதிருக்கும் தர்மபுரி, கன்னியாகுமரி ஜில்லாக்களைப்
போல் ஒவ்வொரு ஜில்லாவையும் குறைத்து சின்ன ஜில்லாவாக இருந்தால்
நிர்வாகம் நல்ல முறையில் இருக்கும் என்ற அடிப்படையில் இந்த
ஜில்லாக்களை மாற்றியமைக்க வேண்டியது அவசியம்தான். அப்படி ஜில்லாக்
களை அமைக்கும்போது, செலவு அவசியமாகக் கூடுதலாக ஆகவேண்டா
மென்ற அடிப்படையில் டிஸ்ட்ரிக்ட் ரெவின்யூ ஆபீஸர் போஸ்டுகளை அபா
லிஷ் செய்துவிடலாம். இதற்கு, உங்கள் காலத்திலே தீவிரமாக நட
வடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நிலச் சீர்த்திருத்தச் சட்டம், நிலச்சீர்த்திருத்தச் சட்டம் என்று என்ன
வெல்லாமோ எழுதியிருக்கிறது. ரெவின்யூ இலாக்கா மானியத்திலே பேசு
கின்றார்கள். நிலச் சீர்த்திருத்தம் என்றால், நிலத்திலிருக்கின்ற மேடு



1969 மார்ச் 14] [திரு. டி. எஸ். ஆதிமூலம்]

பள்ளங்களை புல்டோஸர் போட்டு சமப்படுத்தப் போகின்றீர்களா? இந்த
நாட்டின் தேசிய வருமானத்திலே 47 சதவீதம் விவசாயத்தின்
அடிப்படையிலே இருக்கிறது என்று பேசுகிறார்கள். இந்த நாட்டிலேயுள்ள
கோடிக்கணக்கான ஜனங்களுக்கு நிலம் ஒரு சின்ன ஆஸ்தி. நீங்கள்
அப்படி நிலம் வைத்திருப்பவர்களிடமெல்லாம், ஓட்டுபிடிக்க வேண்டு
மென்ற எண்ணத்திலே, இந்த நாட்டிலே "அடல்ட் பிரான்சைஸ்" வந்ததி
லிருந்து, ஜனநாயகம் வந்தவுடனே, இந்த நாட்டிலே சனியன் பிடித்தாகி
விட்டது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகரவர்களே, "அடல்ட் ப்ரான்
சைஸ்" வந்ததிலிருந்து சனியன் பிடித்தாகிவிட்டதாகச் சொல்கிறார்கள்.
அப்படிச் சொல்லலாமா? அந்தச் சனியனால்தான் இவர் வந்திருப்பது.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** ஸ்டாண்டர்ட் நிர்வாகம் இல்லாததனால்தான்
சட்டசபை தரக்குறைவாகப் போயிருக்கிறது.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The hon. Member
is referring to the prestige of the House......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆதிமூலம் அவர்கள் ஒரு
கட்சியின் தலைவர். அவர்களும் சேர்ந்து நடத்துவதுதான் இந்தச் சபை.
தரம் குறைந்திருக்கிறது என்று கூறுவது தன்னைத் தானே குறைத்துக்
கொள்வதாகும். ஆகவே, அந்தச் சொல்லைத் திரும்ப பெற்றுக்கொள்
வது நல்லது.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** என்னுடைய, அழுத்தமான அபிப்
பிராயத்தைச் சொன்னேன். சட்டசபைகளிலும் பார்லிமெண்டிலும் திறமை
யாக வேலை செய்யவில்லை. ஓட்டுபிடிக்க வேண்டுமென்ற எண்ணத்திலே
கருத்துக்கள் உள்ளன. ஆகவே, அப்படியிருந்தாலும், யாருக்கும் நான்
சொல்வது பாதிப்பதாகயிருந்தால் நான் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாதிப்பதாகயிருந்தால் என்று சொல்
லாமல் அதை உணர்ந்து, திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். தரக்
குறைவாகப் போயிருக்கிறது என்பது, இந்த மன்றத்தின் மரபையும், பெரு
மையையும் காப்பாற்றுவதாக ஆகாது.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** அப்பொழுதே வாங்கியாகிவிட்டதே. எதற்
காகச் சொல்லுகிறேன் என்றால், இது விசித்திரமான நாடு. கோடிக்
கணக்கான ஏக்கர் வேஸ்ட் நிலங்கள் அரசாங்கத்தின் வசமிருக்கின்றன.
18 வருஷங்களாக அரசாட்சி செய்துவந்த காங்கிரஸ்காரர்களோ மற்றவர்
களோ இதைக் கவனித்து, ஏழைகளுக்குத் துரிதமாகப் பட்டா செய்து
கொடுக்கப்பட்டிருக்கிறதா? இப்படிப்பட்ட விஷயங்களில் கவனம் செலுத்தப்
பட்டிருக்கிறதா? அது இல்லாமல் 10 ஏக்கர் நிலம் வைத்திருப்பவனி
டம் போய் அவன் பெரிய ஜமீன்தார் இல்லை, பெரிய மனிதன் இல்லை,
பம்பாய், கல்கத்தாவுக்குப் போய் தொழில் செய்து சம்பாதித்தவன்
இல்லை, இங்கே உழைத்து சம்பாதித்து நிலம் வாங்கி வைத்திருந்தால்
அதிலே கண்ணும் கருத்துமாகயிருந்து, உழுபவனுக்கு நிலம் சொந்தம்,
அது, இது என்று சொல்லி ஏற்பாடு செய்தால், அது இந்த நாட்டிலே
யுள்ள நடுத்தர, விவசாயிகள் துன்பப்படவேண்டிய பரிதாபகரமான நிலை
மைகளை ஏற்படுத்தும்.

இரண்டு மூன்று விஷயங்கள் வைத்திருக்கிறேன். காங்கிரஸ்காரர்கள்
அந்தக் காலத்தில் சட்டம் கொண்டு வந்து, ஏழைகளுக்கு, நடுத்தர வரு
மானம் உள்ள விவசாயிகளுக்கு, 5 ஏக்கர் உள்ளவர்களுக்குக்கூட, சாகு
படியாளர் பாதுகாப்புச் சட்டம், மற்றும் இந்த சட்டங்களிலெல்லாம் விதி
விலக்கு கொடுக்காமல், "ஆவேரேஜ்ஜாக" போட்டு கடைசியிலே அவர்கள்
18 வருட அரசாட்சிக்குப் பிறகு கோட்டையை விட்டார்கள். அதை இவர்கள்
பிடிக்க ஆரம்பித்தார்கள். இவர்களும் பழையபடிதான் செய்கிறார்கள்.
என்ன காரணத்திற்காக, அவர்கள் "அன்சீட்" இந்த நாற்காலியை
விட்டு வெளியேறினார்களோ, அந்தக் காரணத்திற்காகத்தான் நீங்களும்

காரியங்கள் செய்கிறீர்கள். நிலச்சீர்திருத்தம் என்றும் என்ன என்னவோ வாதம் பண்ணுகிறீர்கள். இப்படி நீங்கள் செய்தீர்களானால் கம்யூனிஸ வாடை சமுதாயம் பூராவும் அடிக்கும், கொஞ்சம் கொஞ்சம் நிலம் வைத்திருப்பவர்களும் கல்யாணம்-காட்சி என்றால், அவைகளுக்காக அதை விற்பதற்கோ, வாங்குவதற்கோ இல்லாமல் போகும். தமிழ் நாட்டில் உள்ள 4 கோடி ஜனங்களில் 2 கோடி ஜனங்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆயிரம் விளக்கு தொகுதியிலே அவர்கள் நின்றுகொண்டு சொல்லிக்கொண்டே இருக்கலாம். கிராமத்திலே உள்ள பகுதிகளுக்கு வந்தால் தெரியும். அதை "சாலஞ்"-சாகச் சொல்லவில்லை. எனக்கு அவர் பேரிலே நிரம்ப மதிப்பு உண்டு. ஏற்கெனவே, சட்டம் போட்டுவிட்டு (மணி அடிக்கப்பட்டது) இன்னும் பேச வேண்டியது இருக்கிறது. "காம்ப்ரெஹென்சிவ், கிம்ப்ரெஹென்சிவ்" என்று சொல்லி, இந்த நாட்டிலே இருக்கும்படியான உழவர்கள் சிறுநில உடைமையாளர்கள் அவர்களுடைய சொத்தினுடைய உரிமையையும் அபகரித்துவிடாதீர்கள் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும், இரண்டு, மூன்று நிமிஷம் பேசி விடுகிறேன். ரெவின்யூ இலாகா இன்னும் பல நன்மைகள் செய்யலாம். பட்டா செய்வதெல்லாம் நிரம்ப காலமாக "டிலே" ஆகிக்கொண்டிருந்தன. இப்பொழுது துரிதமாக "அஸைன்மெண்ட்" செய்யப்படுகிறது. அதற்காக ரெவின்யூ இலாக்காவை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது "ஜாயிண்ட்" பட்டாக்கள் எல்லாம் இருக்கின்றன. அனுபவ நிலம் உள்ளவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கவேண்டும். சில நிலங்களுக்கு எழுத்தே கிடையாது. அதற்குத் துரிதமாக நடவடிக்கை எடுத்து, அதற்காக ஸ்பெஷல் ஆபீசர் போட்டு, அந்த மாதிரி நல்ல காரியங்களை நீங்கள் ரெவின்யூ இலாகாமூலம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பென்ஷனர்ஸ் மானியம் ஒன்று இருக்கிறது. 20 வருஷங்களுக்கு முன்னால் ரூ. 200 சம்பளம். இப்பொழுது பணத்தினுடைய மதிப்பு குறைந்து போயிற்று. அதை எப்படி "கால்குலேஷன்" போடுகிறார்கள் என்பதைப் படிக்கவில்லை, மண்டையிலே ஏறவில்லை. இப்பொழுது சிலபேருக்கு ரூ. 50-ஐ விடக் குறைவாக வரும்போல் இருக்கிறது. அவர்கள் ரூ. 50-ஐ வைத்துக்கொண்டு எப்படி வாழ்க்கை நடத்துவார்கள்? அவர்கள் ரூ. 1,000 சம்பளம் வாங்கி இருந்தால் ரூ. 200, ரூ. 250 பென்ஷன் வரும் என்று நினைக்கிறேன். ஆகையால், கணக்கை மாற்றி, குறைந்த பட்சம் ஒருவருக்கு ரூ. 100-ஆவது கொடுக்கவேண்டும். இப்பொழுதுள்ள விலைவாசிகளுக்குத் தகுந்தபடி, அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்குத் தகுந்தபடி அந்த பென்ஷன் கணக்குகளை மாற்றி அமைக்கவேண்டும். அது ஒரு "நாச்சுரல் ஜஸ்டிஸ்". அந்த வகையான நீதியைத் தர நீங்கள் நன்றாக ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.) இன்னும் இரண்டு மூன்று நிமிஷம் நீங்கள் தந்துதான் தீரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மூன்று நிமிஷம் தான் என்று சொல்லிக்கொண்டு பேசிக்கொண்டே இருக்கிறீர்களே.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** நிறைய பேசவேண்டும். என்றால் முடியவில்லை. அம்பாசமுத்திரம் தாலூகாவில் கருங்கல் பாசனம் என்று ஒன்று இருக்கிறது. இது அருமையான சந்தர்ப்பம். ரெவின்யூ துறையிலுள்ள அதிகாரிகள் இருக்கும்போது இதை அவசியம் சொல்லவேண்டும். அந்த கருங்கல் பாசனத்தில் 100 வருஷமாக இருபோக சாகுபடி நடக்கிறது. ஆனால் ஒரு போக சாகுபடிக்குத்தான் தீர்வையை ஒழுங்காக வாங்குகிறார்கள். இரண்டாவது சாகுபடிக்கு பசலி ஜாஸ்தி என்று சொல்லித் தண்டத் தீர்வை வாங்குவது உண்டு. இந்த 1377 பசலி முதல் அந்த தண்டத் தீர்வை வசூல் செய்யப்படுகிறது. அது இரண்டாம் போக சாகுபடியாகும். ஆகவே, அது நியாயம் அல்ல. இதனாலே அங்கு ஏராளமான தண்ணீர் வீணாகி இருக்கிறது. அவைகளை எல்லாம் டபிள் கிராப் லாண்ட் என்று ஊர்ஜிதம் செய்து, அந்த தண்டத் தீர்வையை வசூல் பண்ணுவதை ரத்து செய்யவேண்டும். அதை டபிள் கிராப் லாண்ட் என்று ஊர்ஜிதம் செய்து, பழைய பசலி என்று தீர்வையை மாத்திரம் வசூல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது) மேலும் பேச வேண்டியிருக்கிறது. அங்கே மணியை அடிக்கிறார்கள். எனக்கும் இளைப்புக் கொஞ்சம் வந்த மாதிரித் தெரிகிறது. (சிரிப்பு) ஆகவே இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



***திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது ஒருசில வார்த்தைகள் சொல்லலாம் என்று நினைக்கிறேன். முன்பு பேசிய திரு. ஆதிமூலம் சொன்னதைப்போல் இப்பொழுது நிலத் தீர்வையை எடுத்து விட்டு இரிகேஷன் பேசிஸ்ஸில் போடப்போகிறார்கள் என்று குறிப்பிலே இருக்கிறது. அது நிரம்ப எக்கச்சக்கமாக இருக்கிறது. கெய்வார் ரிப்போர்டிலே பார்க்கப்போனால் இப்பொழுதிருக்கிற தீர்வையைவிட இரிகேஷன் பேஸிஸ் என்றால் அதிலே எக்கச்சக்கமான தீர்வையை ஒரு விவசாயி தாங்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. அதே நேரத்திலே நாம் விவசாயத்திலே இருக்கக்கூடிய உணவுதானியங்களுக்கு ஒரு "கண்ட்ரோல் பிரைஸ்" கொடுக்கின்றோம். அதைக் கூட்டவில்லை. அது ஒரு பக்கம் நிலையாக இருக்கிறது. அதே நேரத்தில் தீர்வையையும் மேலே ஏற்றிக்கொண்டே போனால் அவனுடைய நிலை என்ன ஆவது? சில நேரங்களிலே விவசாயியினுடைய செலவையும் எடுத்துப் பார்த்தால் உழுகின்ற நேரத்திலே மழை பெய்துவிட்டால் ஒவ்வொருவரும் போட்டிப் போட்டுக்கொண்டு விவசாய வேலை செய்வதற்கு ஆத்திரப்படும் நிலையில் ஆட்கள் கிடைக்காத நிலையில் அதிக கூலியையும் விவசாயியே கொடுக்கின்றான். ஆகையினால் இப்பொழுது கெய்வார் ரிப்போர்ட்டிலே பார்க்கும்போது ஏதோ லேசாக நிலத்தீர்வையை எடுத்து விடுவது ஒரு பக்கம் இருந்தாலும்கூட எக்கச்சக்கமான பளுவை விவசாயி தாங்க வேண்டிய நிலையிலிருக்கிறான் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆகவே, கெய்வார் ரிப்போர்டைப் பரிசீலித்து, அதை வேண்டாமென்று நிறுத்தி விட்டால்கூட நல்லது. இல்லாவிட்டால் ஒரு சீலிங் வைக்கவேண்டும். 5 எக்கருக்கு மேலே உள்ளவனுக்கு இந்த கெய்வார் ரிப்போர்ட்டை அப்படியே தலையிலே வையுங்கள். 5 எக்கருக்கு கீழே உள்ளவனுக்கு இந்த கெய்வார் ரிப்போர்ட் பிரகாரம் தீர்வையை விதிப்பதை எடுத்துவிட வேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

அடுத்து, அசைன்மெண்ட் டிப்பார்ட்மெண்ட் என்று ஒன்று கண்டிபபாக ஏற்படுத்த வேண்டும். பேப்பர்களை போட்டு வைக்க வேண்டுமென்றால் கோட்டையே போதாது. டிப்பார்ட்மெண்ட் ...புல் ஸ்விங்கிலே வேலை செய்தால்கூட 2 வருடம், 3 வருடத்திலே இவைகளைத் தீர்க்க முடியாது. அனுபவிக்கிற ஏழைக்கு, விவசாயியாக இருக்கிற அவனுக்கு பி. மெமோ கொடுக்கப்படுகிறது. பி. மெமோ போட்டும், அவனுக்கு நிலம் கிடைக்காத நிலை இருக்கிறது. அதே நேரத்திலே சில கிளாஸிபிகேஷனைப் போட்டு வைத்திருக்கிறார்கள். அஸைன்மெண்ட் வரும்போது கிளாஸிபிகேஷனை மாற்றி, அதற்குப் பிறகுதான் அஸைன்மெண்ட் வரவேண்டுமென்று சொல்கிறார்கள். சந்திர மண்டலத்திற்குக்கூட 4 நாட்களிலே ராக்கெட்டிலே போய்விடலாம். ஆனால் இந்த பேப்பர் நகருவதற்கு 10 வருடம் ஆகிறது. அவன் சாதாரணமாக அஸைன்மெண்ட் பெற்றால், அதற்குச் சாதாரண தீர்வை. இந்த 'பி' மெமோ கொடுக்கும்போது தண்டத் தீர்வை போடும்போது, அவனுக்கு நஷ்டம். அதுகூட தாசில்தார் இஷ்டம், எவ்வளவு வேண்டுமானாலும் தண்டத் தீர்வை வரும். சில சமயங்களில் 20 மடங்கு கூட வரும். அதற்காக தனி டிபார்ட்மெண்ட் போடவில்லையென்றால் நிரம்பக் கஷ்டம் ஏற்படும். அதிகாரிகள்பேரில் தவறில்லை. அதிகாரிகளைக் கூட்டினாலும் செய்யமுடியவில்லை. சில சமயத்திலே அவசரப்பட்டு செய்யவேண்டுமென்று சொன்னால், இல்லாத கேள்விகள் எல்லாம் அவர்கள் பேரில் வருகின்றன. இதையெல்லாம் போக்குவதற்குத் தனியாக ஒரு டிபார்ட்மெண்ட் போட்டாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

56,000 பேர்கள் இந்த நாட்டில் பணிபுரிகிறார்கள். அவர்களுடைய
அடிப்படைச் சம்பளத்தில் குறைந்தது ரூ. 5-வது ஏற்றித்தா
வேண்டும். அப்படி ஏற்றித்தருவதன் மூலம் நான் அவர்களை முழு
நேர ஊழியர்களாக ஆக்க முடியும் என்று நான் இந்த நேரத்தில்
குறிப்பிட விரும்புகிறேன். மொத்தமாக இந்த ஆண்டில் அவர்களுக்கு
ரூ. 25 லட்சம் ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது. இந்தத் தொகை
போதாது என்ற கருத்தையும் தெரிவித்துக்கொண்டு அவர்களுக்கு
அதிகமாகத் தொகை ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒவ்வொரு ரெவின்யூ ஆபீசிலும், தாலுகா ஆபீசிலும்,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் ஒரு "கம்ப்ளேண்டு புக்"
வைக்கவேண்டும். அப்படி ஒவ்வொரு அலுவலகத்திலும் ஒரு புக்
வைத்தால் தான், மக்கள் அந்த அலுவலகங்களில் இருக்கக்கூடிய
குறைபாடுகளைத் தெளிவாக அதிலே எடுத்துக்காட்டி, எழுதிவிட்டுச் செல்
வார்கள். இப்படி "கம்ப்ளேண்டு புக்" ஒன்று வைத்தால் அப்படிப்பட்ட
குறைபாடுகளைப் போக்க ஏதுவாக இருக்கும் என்று கூறிக்கொண்டு,
எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி
கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இந்த
மானியக் கோரிக்கையிலே எங்கள் கட்சியின் பெயரால் கொண்டுவரப்
பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை
இந்த அவையின் சிந்தனைக்காக சமர்ப்பிக்கிறேன். முதன் முதலாக
இந்த மானியக் கோரிக்கை சம்பந்தமான அறிக்கை மிகவும் அழகாகத்
தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதில் நமது அமைச்சர் அவர்களின் படம்
போடப்பட்டு நல்ல முறையில் சித்தரிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறபொழுது
மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன். அதிலே அவர்கள் கோடிட்டுக்காட்டி
யிருக்கிற பல கொள்கைகளைப் பற்றிய தலைப்பிலும் என்னுடைய கருத்துக்
களைக் கூறுவது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

முதன் முதலாக நிலவரியைப்பற்றி ஓரிரு கருத்துக்களை இந்த அவையின்
சிந்தனைக்குச் சமர்ப்பிக்கிறேன். மொத்த வருவாயில் 1·5 சதவிகிதம்
நிலவரி என்று இந்த அறிக்கையிலே எடுத்துக்கூறப்பட்டிருக்கிறது.
அதிலும் குறிப்பாக நிலவரியை ரத்து செய்வதனால், அரசாங்கத்தின்
நிதி நிலை முடமாகிவிடும் என்பதற்கில்லை என்று இந்த அறிக்கையிலே
ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் நிலவரியை ரத்து
செய்வது சாலச் சிறந்தது அல்லவா, விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்
கக்கூடிய தன்மையிலே இது அமையாதா என்பதை ஆராய வேண்டும்.
பிற மாநிலங்களில் அதிலும் குறிப்பாக ஒரிஸா மாநிலம் என்று நினைக்
கிறேன், அங்கே நிலவரியை ரத்து செய்திருக்கிறார்கள். பல மாநிலங்
களிலும் இந்த நிலவரியை ரத்து செய்வதற்காக எல்லா நடவடிக்கை
களையும் மேற்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளின் துன்பம் அகலுவதற்கு,
விவசாயிகளுக்கு ஊக்கம் அளிப்பதற்கு, நிலவரியை ரத்து செய்யவேண்டும்
என்று தேர்தலுக்கு முன்பு எல்லா அரசியல் கட்சியினரும் வாதாடி
யிருக்கிறார்கள். தேர்தலுக்கு முன்பே நாம் கூறியபடி இப்பொழுது இந்த
பிற்பகல் 1-30 அரசாங்கம் நிலவரியை உடனே ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். இதற்காக ஒரு அறிக்கை கொடுக்கப்பட்டது. நம்முடைய
போர்டு அங்கத்தினர் திரு. கெய்வார் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.
அவர்களுடைய அறிக்கையில் பரிந்துரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.
நிலவரியை நீக்குவதில் சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன, முழுமையாக
அதை எடுத்துவிட இயலாது என்றெல்லாம் ஆட்சேபணை சொல்லப்பட்
டிருக்கிறது. அவற்றை நாம் இன்றைக்கு அப்புறப்படுத்த வேண்டும்.
நீண்ட காலத்திற்கு முன்பு அமைந்த சட்டத்தைச் சொல்லிக் கொண்டு,
மக்களுக்காகச் செயல்படுகிறோம் என்று சொல்லுகின்றவர்கள், அதிலும்
குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு, அதிகமாக ஏழைகள்
மீது அன்பு காட்டும் என்று வாதாடிக்கொண்டு இருக்கிற நீங்கள் ஏழை





விவசாயிகளுக்காக இருக்கிறோம் என்று
சொல்லி ஆட்சிக்கு வந்த பிறகு விவசாய வருமான வரி போட்டிருக்
கிறார்கள். அதற்கு அப்பால் இந்த வரியை வசூல் செய்வது நியாயம்
இல்லை, தர்மம் இல்லை என்பதைக் கூற விரும்புகிறேன். உடனடியாக
அதை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பாசனத் தீர்வை விதிப்பது பற்றி ஆய்ந்து வருகிறது
என்கிறார்கள். உண்மையிலேயே வருந்துகிறோம், திடுக்கிடுகிறோம்.
இந்த வரியைப் போடுவதால், உற்பத்தி அதிக அளவில் பாதிக்கப்படும்.
அதோடு அல்லாமல், இந்த வரியைப் போடலாம் என்று காட்டக் கூடிய
நிபுணர் யாராலும், அப்படிப்பட்ட உபதேசம் போர்டிலிருந்து வந்தால்
அதை நாம் அமைச்சரவையில் நன்றாக யோசனை செய்யவேண்டும்.
மத்திய சர்க்காரிலிருந்து ரசாயன உரங்களுக்கு விதித்த எக்ஸைஸ் வரியை
நாம் ஆட்சேபிக்கிறோம். விவசாயிகளுக்கு வரி போடுவதால், பெரும்
ஆட்சேபணையைக் கிளப்பி, உணவு உற்பத்தி பாதிக்கப்படும்,
நெருக்கடி இருக்கிறது என்கிறோம். அந்த நேரத்தில், பாசனத் தீர்வை
யை அதிகமாக உயர்த்துவது நியாயம் இல்லை. குறிப்பாக பெரிய திட்டங்
களையெல்லாம் போட்டு, பெட்டர்மெண்ட் லெவி என்கிற வரியை வசூலித்
திருக்கிறோம். அதற்குப் பிறகும், பாசனத் தீர்வையை வரியாக நிரந்தர
மாக்குவது நியாயம் இல்லை. பராமரிப்புக்கு வேண்டும் என்று சொல்லி
வாதாடலாம். ஆனாலும் அது நியாயமாக இருக்காது. ஆகவே, பாசனத்
தீர்வை போடுவதை அகற்ற வேண்டும் என்று தங்கள் மூலமாக அமைச்
சரவையை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பஞ்சத் துயர் தணிப்பு பற்றி ஓரிரு கருத்துக்கள் கூறவேண்
டும். அதற்குத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சத்துயர் தணிப்புக்கு இன்
னும் அதிகமாக ஒதுக்க வேண்டும். மாநில அளவில் பார்க்கும் போது,
தமிழகத்தில் பெரும் பஞ்சம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. மத்திய
சர்க்காரோடு வாதாடி, பொறுப்பு இருக்கிறது என்று சொல்லி, விரைவில்
அதிகம் சலுகைகள் பெறவேண்டும். பல மாவட்டங்களிலும் மழை பெய்
யாத காரணத்தால், குடிநீர் கூட கிடைக்காத அவலநிலை இருக்கிறது.
உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்றும் ஐயப்படுகிறோம். இந்த சந்தர்ப்
பத்திலே, சென்னையைப் பொறுத்த வரையில், தமிழ் நாடு பூராவும், பல
இடங்களிலும் பஞ்சம் நிலவிக்கொண்டு இருக்கிறது. இதை மத்திய சர்க்கா
ருக்கு எடுத்துத் தெரிவிக்க வேண்டும். எடுத்துத் தெரிவித்து, அதற்கான
நிதியை அவர்களிடமிருந்து பெறவேண்டும். அப்படி இருந்தால்தான்,
நல்லதொரு முன்னேற்றத்தை, நிதானமான போக்கைக் காணமுடியும்
என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மாதிரிப் பல கஷ்டங்கள்
இருக்கின்றன. பல மாவட்டங்களும் பிற்பட்டு இருக்கின்றன.

இது சம்பந்தமாக, முன்பு இருந்த விதி முறைகளையெல்லாம் புனர்ப்
பரிசீலனை செய்ய வேண்டும். முன்பு அமைத்த ஃபாமின் கோடை அளவு
கோலாக வைத்துக்கொண்டு, பஞ்சத்தை நிர்ணயிப்பது என்றால், போர்டு
ஸ்டாண்டிங் ஆர்டர் படி, ஆடு மாடுகள் தீவனம் இல்லாமல் இருக்க
வேண்டும், குடி நீர் இல்லாமல் இருக்க வேண்டும் என்கிற பழைய விதி
முறைகளை, வெள்ளைக்காரன் காலத்து விதிமுறைகளை வைத்துக்கொண்டால்
சரியாக இருக்காது. இதையெல்லாம் புனர்ப் பரிசீலனை செய்து, புதிய
முறையில், நடைமுறைக்கு ஏற்ற வகையில் திருத்தி அமைக்க நடவடிக்கை
மேற்கொள்ள வேண்டும். மாவட்ட ரீதியாக என்னென்ன கஷ்டங்கள்
இருக்கின்றன என்பதையெல்லாம், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகக்
கேட்டறிந்து உடனடியாக அறிக்கை விட்டு, புள்ளிவிவரங்கள் சேகரிக்க
வேண்டும். எப்படி புயல், வெள்ளம் வந்தால் அவசர நடவடிக்கை
எடுத்துச் செய்கிறோமோ அதே போல இதுவும் குறிப்பாக குடிநீர் வழங்க
உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். பல இடங்களிலும் கஷ்டம்
இருக்கிறது. நகரங்களில் கஷ்டம் இருக்கிறது. கிராமங்களில் கஷ்டம் இருக்
கிறது. ஆகவே, நடவடிக்கை உடனடியாக எடுக்க வேண்டும்.

நிலச் சீர்திருத்தச் சட்டம் பற்றி ஒரிரு கருத்துக்கள் சொல்வது நல்லதாக இருக்கும். முன்பெல்லாம் சொல்லுவார்கள்—காகிதப்பூ மணக்காது, காங்கிரஸ் சமதர்மம் இனிக்காது என்று சொல்லி எள்ளி நகையாடின காலம் இருந்தது. தனிச் சமதர்மம் செயல்பட இந்த ஆட்சியாளர்கள் முனைந்து கொண்டிருக்கிறார்கள். நிலச் சீர்திருத்தம் கொண்டுவந்தால் அது எப்படி அமைந்திருக்க வேண்டும் என்று சொன்னார்கள். 15 ஸ்டாண்டர்ட் எக்கர்கள்தான் இருக்க வேண்டும் என்று கம்யூனிஸ்ட் அங்கத்தினரும், எஸ்.எஸ்.பி. அங்கத்தினரும் கூறினார்கள். என்ன முறையில் இருக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி அரசாங்கம் ஒரு ஆலோசனையைக் கொடுத்திருக்கிறது. பிளானிங் கமிஷனின் ஆலோசனையின்படி இந்த சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்ற கருத்தும் அன்றிருந்த அரசாங்கம் கொண்டிருந்தது. உச்ச வரம்புச் சட்டம் மிச்ச வரம்புச் சட்டமா என்று கேட்கும் முறையில் இருக்கிறது.....

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பிளானிங் கமிஷன் தெரிவித்த ஆலோசனை என்ன என்பதைத் தெளிவாக்கத் தயாராக இருக்கிறார்களா ? எந்த அடிப்படையில் காங்கிரஸ் உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவந்தது என்றும் அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** 1961-லே கொண்டுவந்த சட்டத்திலே, 30 எக்கர் என்று நிர்ணயித்து இருக்கிறது. திருத்தி அமைக்க வேண்டுமென்று பிளானிங் கமிஷன் ஆலோசனை தந்திருக்கிறது. அது நன்றாகத் தெரியும். ஆனால் இதில் ஒரு காரியம் சொல்ல வேண்டும். நில உடைமை உள்ளவர்கள் தான் கட்டுப்படுத்தப் படுகிறார்கள். ஆனால், வருவாய் எவ்வளவு வேண்டுமானாலும் இருக்கலாம், ஆலைகள் எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். அதுவும், மேய்ச்சல் காடு, கரும்புத் தோட்டம், தென்னந்தோப்பு என்றெல்லாம் வைத்துக் கொள்ளலாம் என்றும் இருக்கிறது. இதையெல்லாம் திருத்தி அமைக்கப் புகும்போது, அதற்கு என்னென்ன மாறுதல்கள் கொள்கையில் மாறுதல்கள் ஏற்படவேண்டும் என்பதுபற்றி யோசிக்கவேண்டும். சமுதாயத்தில், மேம்பட்டவர்கள் இன்னும் மேம்பட்டுக் கொண்டு போகக் கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால், இன்றைக்கு இருக்கும் ஏற்றத்தாழ்வுகள் குறையவேண்டும். அந்த வகையில் நிலச்சீர்த்திருத்தச் சட்டம் அமையவேண்டும். அதில் சில கருத்துக்களைக் கூற வருகிறேன். சிறு நிலக்கிழார்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும்.

இப்பொழுது புதிதாக ஒரு சட்டம் வருகிறது. குத்தகை உரிமை ஆவண மசோதா இந்த சட்டசபைக்கு வரவிருக்கிறது. மேல் அவையில் திருத்தம் வந்திருக்கிறது. அதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று வந்திருக்கிறது. அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு சட்டம் செய்யப் போகிறோம். ஆனால் அப்படிச் சட்டம் செய்யும்போது, வெளியிடங்களில் உத்தியோகத்தில் இருப்பவர்கள் இருக்கிறார்கள். ஒரு எக்கர், இரண்டு எக்கர் சொந்தமாக வைத்துக்கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். நீங்கள் புதுச் சட்டம் செய்யும்போது, காம்ப்ரிஹென்ஸிவ் லெஜிஸ்லேஷன் செய்யும்போது, அந்தச் சட்டத்திலே போதிய பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் நகர்ப்புறங்களில் இருக்கும் சிறு உத்தியோகத்தில் இருப்பவர்கள், சிறு அளவில் நிலம் வைத்திருப்பவர்கள் பாதுகாக்கப்படுவார்கள். சமுதாயத்தில் அமைதி ஏற்படும் என்பதையும் இந்த சந்தர்ப்பத்திலே முனகூட்டியே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டு மூன்று எக்கர் நிலம் வைத்திருப்பது எகனமிக் ஹோல்டிங்காக இருக்கும், ஜப்பான் நாட்டில் இருக்கிறது, அப்படியிருந்தால் உற்பத்தி பெருகுகிறது என்றெல்லாம் இந்த அறிக்கையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இரண்டு மூன்று எக்கர் என்று சொல்லுவது, மிகவும் குறைவாக இருக்கிறது என்று கருதுகிறேன்—இதற்காக என்னைப் பிற்போக்கு வாதி என்றாலும் கூட—"வயபிள் யூனிட்", "எகனமிக் யூனிட்" ஆக இருக்க



வேண்டும். அப்படி வைத்திருந்தால்தான் சீராக இருக்கும். ஆதலால் வரும் சட்டத் திருத்தத்தில் இதை நீங்கள் உற்றுக் கவனிக்க வேண்டும். குறிப்பாக கேரள அரசாங்கமானது, மசோதா ஒன்றைப் பிறப்பித்திருக்கிறார்கள். அதற்கு மத்திய சர்க்கார் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறது. நாமும் வருகிற சட்டத்திலே என்னென்ன அம்சங்கள் இருக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரோடு கலந்து ஆலோசனை கேட்பது சிறப்பாக இருக்கும். அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன என்ற பிரச்னையில் நுழைய வேண்டியதில்லை. ஆனால் இந்தச் சட்டத்தை இப்போதிருக்கிற விதிமுறைப்படியும், சட்டப்படியும் எப்படித் திருத்தியமைக்க வேண்டுமென்பதுபற்றி நல்ல முறையிலே சிந்தித்து தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடியிருப்பு அனுபோகதாரர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டும். நிலமற்றவர்கள், பிறருடைய சொத்திலே போய்க் குடியமர்ந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி சட்டரீதியாகப் பார்க்க வேண்டும். இன்றையதினம் சமுதாயத்தில் பல லட்சக்கணக்கான மக்கள் இந்த அவல நிலையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் பல பெரிய பண்ணைகளிலே குடியமர்ந்திருக்கிறார்கள். பண்ணை உடைமையாளர்களுக்கும், குடியமர்ந்திருக்கிறவர்களுக்கும் அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்றால், நாம் சட்டம் செய்கிறபோது, நல்ல முறையில் தேவையான காரியங்களைச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, ஜமீன்தாரி ஒழிப்பு முறை பற்றியெல்லாம் கூறப்பட்டிருக்கிறது. இதைப்பற்றியெல்லாம் காங்கிரஸ் அரசாங்கம் நல்லமுறையில் சட்டங்களைச் செய்தது. அந்தச் சட்டங்களில் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. 60—40 என்ற விகிதத்தை 80—20 என்று ஆக்கவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றிருக்கிற முறையில் எப்படி அமல் நடந்துகொண்டிருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் வருகிற சட்டத்தில் போதிய திருத்தங்கள் அளிப்பார்கள் என்று கருதுகிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப்பற்றிப் பலருக்கும் பலவிதமான ஐயப்பாடுகள் இருக்கின்றன. இதைத் தீர்ப்பதற்கு—இவை நல்ல முற்போக்கான கருத்துக்கள் என்று நினைத்தாலும்—கொஞ்சம் கவனமாகவும், ஜாக்கிரதையாகவும் செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் கொள்கை அறிக்கைக் குறிப்பில், "1961-ல் தீட்டிய திட்டத்தின் விளைவாக அதிக அளவு நிலம் கிடைக்கவில்லை. 83 ஆயிரம் எக்கர் கிடைக்கும் என்று கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 65 ஆயிரம் எக்கர்தான் கிடைத்திருக்கிறது. ஒருசில வழக்கு மன்றத்தில் இருப்பதால் எதிர்பார்த்த அளவு கிடைக்கவில்லை" என்று கூறியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை என்ன முறையிலே செய்யப்போகிறோம்? இதைப்பற்றி எந்தக் கருத்தாவது அந்தக் குறிப்பில் இருக்கும் என்று எதிர் பார்த்தோம். ஒருவேளை அந்தச் சட்டமானது பூர்த்தியாகாத காரணத்தால் அதனுடைய விரிந்த அம்சங்களைப் பற்றி இதில் கூறவில்லையோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. முக்கியமான சீர்திருத்தங்கள் வருகிறபோது கொள்கை விளக்கங்களும் அறிக்கையிலே வரும் என்று எதிர்பார்த்தோம். இந்த மாதிரியான சட்டம் செய்யும்போது, நிதானமாகவும், யோசித்தும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொது நிர்வாகத்தைப் பற்றிக் கூற விரும்புகிறேன். "மாவட்ட ஆட்சித் தலைவருடைய பொறுப்பு இன்றையநிலையில் அதிகரித்து வருகிறது. மாவட்டத்தின் விஸ்தீர்ணமும் அதிகமாக இருக்கிறது" என்ற கருத்து ஆய்வுரையில் கூறப்பட்டிருக்கிறது. பெரிய ஜில்லாக்களின் எல்லைகளையெல்லாம் புனராலோசனை செய்து, பெரியதாக இருப்பதை இரண்டாக மாற்ற முடியுமா என்பதையும் அரசாங்கம் யோசிக்க வேண்டும்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] |1969 மார்ச் 14

"புதிய மாவட்டங்களை ஏற்படுத்தும்போது ஒரு கோடி ரூபாய் வரையில்
செலவாகும்" என்று முன்பொரு சமயத்திலே அமைச்சர் அவர்கள்
கூறியிருக்கிறார்கள். ஆனால் நல்ல நிர்வாகம் நடைபெற வேண்டுமானால்
பெரிய ஜில்லாக்களையெல்லாம் இரண்டாகப் பிரித்து, சிறிய அளவில்
வைப்பது பொருத்தமாக இருக்கும், சிறந்ததாகவும் இருக்கும். தர்மபுரி
மாவட்டம், சேலம் மாவட்டம் என்று எப்படி தனித் தனியாகப் பிரித்து
இருக்கிறோமோ அதேபோல திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற
பெரிய மாவட்டங்களையும் இரண்டாகப் பிரிப்பது நலமாக இருக்கும் என்
பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும், ஆட்சித் தலைவர்கள் சாதாரணமாக ஹெட்க்வார்டர்ஸில்
இருந்தால் ஆபீசிலே இருக்க வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பிக்க
வேண்டும். அவர்கள் எப்போதும் பங்களாக்களில் இருந்துகொண்டிருக்
கிறார்கள். கலெக்டர் ஆபீசிலே இருக்க வேண்டும். அப்போதுதான்
பொதுமக்கள் அவரைச் சந்தித்து விண்ணப்பம் கொடுப்பதற்கும், தங்களு
டைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கும் ஏதுவாக இருக்கும் என்ற
கருத்து பரவலாக நிலவிக் கொண்டிருக்கிறது. பொதுவாக இந்தக் கருத்தை
எல்லோரும் கூறுகிறார்கள். ஆகவே, இதையும் அரசாங்கம் கவனித்து,
கலெக்டர் ஆபீசில் இருக்க வேண்டுமென்ற உத்தரவைப் போட வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பல பகுதிகளில் அதிகாரிகள் தொடர்ந்து 3வருடங்களுக்கு
மேலேயும் ஒரே இடத்தில் இருந்துகொண்டிருக்கிறார்கள். மூன்று வருடங்
களுக்கு மேலே ஒரே இடத்தில இருப்பவர்களை டிரான்ஸ்பர் செய்யவேண்டும்.
பல்லாண்டுகளாக ஒரே இடத்தில் தொடர்ந்து இருப்பதால் அவர்கள் பல
பழக்கங்களில் ஈடுபட சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே, மூன்று
வருடங்களுக்கொரு முறை அவர்களை டிரான்ஸ்பர் செய்தால் நாட்டிலே
நல்லாட்சி நடப்பதற்கு இது சிறப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன்.
இந்த அமைச்சரவை இதைச் சிந்தித்துப் பார்க்கும்படிக் கேட்டுக்கொள்
கிறேன்.

புதிதாக துவங்கப்பட்ட ஜில்லாக்கள் இருக்கின்றன. என்னுடைய ஜில்லா
வில் கோட்டாட்சி அலுவலகம் கட்டுவதற்காக நிலத்தைக் கையகம் செய்தி
ருக்கிறார்கள். இரண்டு வருடங்கள் ஆகியும்கூட கட்டிடம் கட்டப்படவில்லை.
கலெக்டர் போன்ற உயர்தர அதிகாரிகளுக்குக் கட்டிடம் கிடைப்பதில்லை.
கன்னியாகுமரி ஜில்லா மற்ற ஜில்லாக்களைப் போல அல்ல. மற்ற ஜில்லாக்
களைவிட இது மாறுபட்டிருக்கிறது. கட்டிடம் கட்டுவதற்கான நிலைமை நடை
முறையில் வரவில்லை. மற்றப் பகுதிகளில் இருக்கிற மாதிரி, கன்னியா
குமரி ஜில்லாவை நினைக்கக் கூடாது. ஆகவே, இந்த ஜில்லாவில் செய்ய
வேண்டிய நியாயமான காரியங்களை உடனே செய்து கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஜமாபந்தியைப் பற்றி எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள்.
ஜமாபந்தி முறையை ஒழிப்பதற்குத் திட்டம் தீட்டியதற்காக மகிழ்ச்சியடை
கிறேன். ஜமாபந்தி பட்டா வழங்குவதற்கும், "டிமாண்ட் கலெக்ஷன்
அண்டு பேலன்ஸ்" தெரிந்துகொள்வதற்கும் பயன்பட்டு வந்தது.
சிறுநிலக்கிழார்களுக்குப் பட்டா வழங்குவதிலும், கூட்டுப் பட்டாக்களுக்குப்
பட்டா வழங்குவதிலும் சில கஷ்டங்கள் இருந்தன. ஜமாபந்தியை ஒழித்து
விட்ட பிறகு நாம் பட்டா வழங்குவதில் உள்ள காலதாமதத்தைத் தவிர்க்க
வேண்டும், இன்னும் போதிய கவனங்களைச் செலுத்த வேண்டும் என்று
கூறிக்கொள்கிறேன். ஜமாபந்திக்காகும் செலவினங்களையெல்லாம் பற்றிப்
புரிந்துகொண்டுதான் பேசுகிறேன். பட்டா வழங்குவதில் காலதாமதம்
ஏற்படக்கூடாது. துரிதமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவேண்
டும்.

அடுத்தபடியாக, நிர்வாகத்தில் இருக்கிற இன்னொரு விஷயம் பற்றிக்
குறிப்பிட விரும்புகிறேன். தியாகிகளுக்கு எல்லாம் பென்ஷன் வழங்க
வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. பலர் மனுக்கள் சமர்ப்



1969 மார்ச் 14] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

பித்திருக்கிறார்கள். அந்த மனுக்களை துரிதமாகப் பைசல் செய்ய
வேண்டும். துரிதமாக நடவடிக்கை எடுத்து, தகுந்த உரிமை இருக்கிறதா,
இல்லையா என்பதை சீக்கிரமாக மனுதாரருக்கு அறிவிக்க வேண்டும்.
ஆங்காங்குள்ள தியாகிகள் தங்களுக்குப் பென்ஷன் கிடைக்குமோ, கிடைக்
காதோ என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சில இடங்களில்
நிலம் வழங்கப்பட்ட தியாகிகளிடமிருந்து நிலத்தைத் திரும்பப் பெற
வேண்டுமென்று நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். என்னுடைய
மாவட்டத்தில் அந்த மாதிரியான நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.
தியாகிகளுக்கு வழங்கிய நிலத்தை மறுபடியும் அவர்களுக்கே கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மக்களுக்குக் கஷ்டம் இல்லாத
முறையில் நிர்வாகம் நடைபெற்றால்தான் மக்கள் அரசாங்கத்தோடு ஒத்து
ழைக்க ஏதுவாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, வருவாய்த் துறை வாரியம். இதை நிறுத்தம் (அபாலிஷ்)
செய்வதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப் போவ
தாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதை நான் ஆட்சேபிக்கவில்லை, வரவேற்
கிறேன். "போர்டு ஆஃப் ரெவின்யூ ஈஸ் எ ஒயிட் எலிஃபென்ட்" என்று
கூடச் சொல்லியிருக்கிறார்கள். ஆதலால் இதை அகற்றுவதிலே எனக்கு
ஆட்சேபணை இல்லை. இதை நீக்கும்பொழுது பல சிக்கல்களும் ஏற்படும்.
இதை ரத்து செய்வதற்கு முன்பாக பல சட்டங்களையும் திருத்த வேண்டி
வரும். "அப்பீல்", "ரிவிஷன்" போன்ற உரிமை ரெவின்யூ போர்டுக்கு
வழங்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டங்களையெல்லாம் போதிய முறையில்
திருத்திவிட்டால் வருவாய்த் துறை வாரியத்தை நிறுத்தம் செய்வதற்கு
வழி இருக்கும். சட்டங்களையெல்லாம் போதிய முறையில் திருத்திய பிறகு
வருவாய்த் துறை வாரியத்தை நிறுத்துவதுதான் சிறப்பாக இருக்கும்
என்பதை சபாநாயகர் மூலமாக அமைச்சரவைக்குத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

கிராமப்பணியாளர்களைப் பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.
கிராம ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்றும், அவர்கள் முழு
நேர ஊழியர்களாக மாற்றப்பட வேண்டும் என்றும் கோரிக்கை இருந்து
வருகிறது. "இதில் பரம்பரை பாத்தியதை இருக்கக் கூடாது" என்று
சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பை அமல் நடத்து
வதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஏதோ கண்டிக்கப்பட்ட ஒருவரை கிராமப்
பணியாளர் பதவியில் நியமனம் செய்ததாகக் கேள்விப்படுகிறேன். அம்
மாதிரியான தவறு ஏற்படக் கூடாது. அம்மாதிரியான தவறு இருந்தால்
அதைக் கண்டித்து, தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முத்திரைத்தாளைப் பற்றி ஒரு கருத்தைக்
கூறவேண்டுமென்று விரும்புகிறேன். முத்திரைத் தாள் இனத்
தில் வருமானம் அதிகமாகப் பெருகிக்கொண்டே இருக்கிறது.
1966-67-ல் ரூ. 899·05 லட்சம் வந்திருக்கிறது. 1967–68-ல் ரூ. 1,104·89
லட்சம் வந்திருக்கிறது. 1968–69-ல் ரூ. 1,034.82 லட்சம் வந்திருக்
கிறது. 1969-70-ல் ரூ. 1,165.49 லட்சம் வரும் என்று எதிர்பார்க்கப்
படுகிறது. இப்படி ஆண்டுக்கு ஆண்டு வருமானம் பெருகி வருவதற்குக்
காரணம் இது சம்பந்தப்பட்ட சட்டத்தில் சீர்திருத்தம் ஏற்பட்டிருப்பது
தான் என்று கூறுவார்கள்.

குறிப்பாக, கிராமங்களை எடுத்துக்கொண்டால் ரோடு பக்கத்தில் விலை
அதிகமாக இருக்கும். ரோடு வசதி இல்லாது உள்ளே தள்ளியிருக்கிற
பகுதிகளில் விலை குறைவாகத் தான் இருக்கும். ஆயினும் விலை
அதிகமாக உள்ள ஓரிடத்தின் நிலவரத்தை வைத்துக்கொண்டு
கிராமப் பகுதிகளில் உள்ளவற்றுக்கும் அந்த விலை அடிப்படையில்
ஸ்டாம்பு நிர்ணயிப்பது அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு மிகுந்த
கஷ்டமாக இருக்கிறது. இதில் இருக்கிற கஷ்டங்களை நிவர்த்திக்க, இதற்கு

வேண்டிய விதி முறைகளை மாற்றி அமைத்தாகவேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக இந்தத் துறையில் இன்னொரு விஷயத்தைக் கூற வேண்டுமென்று நினைக்கிறேன்.

பென்ஷன் அளவைப் பெருக்கவேண்டுமென்பதைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். ஓய்வு ஊதிய விஸ்தரிப்பிலே நாம் முனைந்து இருக்கவேண்டும். 1960-ம் ஆண்டிலே என்று நினைக்கிறேன். ஓய்வு ஊதியத்தைப் பற்றிப் பலரும் தங்கள் கருத்தைக் கூறியிருக்கிறார்கள். வாழ்க்கைப் புள்ளிகளின் அடிப்படையில் ஓய்வு ஊதியத்தை நிர்ணயிப்பது நன்றாக இருக்கும். 50 ரூபாய் என்று நிர்ணயிக்கலாமா, அல்லது அதிகமாக நிர்ணயிக்க முடியுமா என்பதைக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுவாக, ரெவின்யூ இலாக்கா தான் நமக்கெல்லாம் நல்ல பெயரை எடுத்துத் தரவேண்டிய இலாக்கா. இதில் இருக்கிற ஊழல்களைக் களைந்தாக வேண்டியது மிகவும் அவசியமாகும்.

பாசன வரியை வன்மையாகக் கண்டித்து எதிர்க்கிறேன் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அதேபோல கெய்வார் ரிப்போர்ட் என்ன ஆயிற்று, அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள், கோல்ட் ஸ்டோரேஜில் போட்டு விட்டார்களா என்பதை அறிவிக்கவேண்டும். அதில் சில நல்ல பகுதிகள் இருக்கின்றன. அவற்றை அமல்படுத்துவதோடு, அதில் வேண்டப்படாத சில பகுதிகள் இருப்பதை அப்படியே தவிர்த்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்**: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகிற இந்த வருவாய்த் துறை மானியத்தின் மீது உறுப்பினர்கள் மிகுந்த உற்சாகத்துடனும் அரசாங்கத்திற்கு நல்ல ஆதரவுடனும் பேசியிருப்பதற்கு நான் முதலில் என் நன்றியை தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இப்போதே மணி 2 ஆகிறது. நேற்று அம்மையார் அவர்களது மானியத்தின் மீது 3½ மணி அளவுக்குப் போனது போல இன்றைக்குப் போகாது. நான் சீக்கிரமே முடித்துக்கொள்கிறேன் என்டதைப் பேரவைத் தலைவர் மூலம் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய விவாதத்தில் எனக்கு மிகப் பெரிய மகிழ்ச்சி ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் இதிலே அரசாங்கம் கொண்டிருக்கிற கொள்கையை வலியுறுத்தி ஆக்கப்பூர்வமான கருத்துக்களைச் சொல்லியிருப்பதுதான்.

இந்த மானியத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகள் 204 ஆகும். நம்முடைய சட்டசபையின் வரலாற்றிலேயே—நானும் 1962-ல் இருந்து இருக்கிறேன். ஒரு மானியத்திற்குக் கொடுக்கபபட்ட வெட்டுப் பிரேரணைகள் என்பது இந்த மானியத்திற்குத் தான் அதிகமாக இருக்கின்றன. ரெவின்யூ மானியம் என்றால் பேசக்கூட வரமாட்டார்கள். ஆனால், இன்றைக்கு இந்த மானியத்திற்கு இவ்வளவு அதிகமான வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்திருப்பதன் மூலம் இதன் முக்கியத்துவத்தையே உறுப்பினர்கள் உயர்த்தியிருப்பதற்காக நன்றி பாராட்டுகிறேன். அவற்றுக்கு எந்த எந்த அளவில் பரிகாரம் தேட முடியுமோ அதைத் தேடுவதற்கு சாத்தியமான எல்லாக் காரியங்களையும் செய்வதற்கு அரசாங்கம் முன்வரும் என்று தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.





பொதுவாக, அரசாங்கம் இத்துறையில் இன்றைக்குச் செய்ய நினைத்திருக்கிற சில பல சீர்திருத்தங்களை எல்லோரும் ஆதரித்ததற்கு நன்றி. நிலச் சீர்திருத்தம் என்று எடுத்துக்கொண்டால் எல்லாக் காரியங்களும் ரெவின்யூத் துறையில் தான் நடைபெற வேண்டியிருக்கிறது. அதுவும் மாண்புமிகு திரு நல்லசிவம் அவர்கள் கடந்த 15 ஆண்டுகளில் இன்றுபோல என்றைக்கும் இவ்வளவு திருப்தியோடு பேசியிருப்பார் என்று சொல்ல முடியாது. நம்முடைய முறைகள் மாறியிருக்கின்றன. அடிப்படை நோக்கங்கள் மாறியிருக்கின்றன. சுதந்திரம் பெற்று 20 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னமும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சின்னமாக விளங்குகின்றவைகளை மாற்றாமல் அப்படியே வைத்திருக்கிறோம். ஆகவே, தான் ரெவின்யூத் துறையில் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

உதாரணமாக, இந்த ஜமாபந்தி முறை. அப்பாடி, அந்தக் காலத்தில் ஜமாபந்தி என்றால் ஊரில் உள்ள கோழிக்குஞ்சுகள் எல்லாம் காணாமல் போய்விடும். (சிரிப்பு) மத்தியான நேரம்—சாப்பாடு நினைவுக்கு வருகிறது. இந்த ஜமாபந்தி முறையை அடியோடு எடுத்துவிடுவது என்கிற கொள்கையை இந்த மாமன்றமும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் வரவேற்று இருக்கிறார்கள்.

அடுத்து, கிராம உத்தியோகஸ்தர்கள் ஆனிவேர் போன்றவர்கள். பரம்பரை பாத்யதை கூடாது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கொடுத்திருக்கிறது. இந்த நேரத்தில் ஒன்று சொல்லிக்கொள்கிறேன். இப்போது வேலையில் இருக்கிறவர்கள் யாரும் நீக்கப்பட மாட்டார்கள். பரம்பரை பாத்யதை ஒன்று தான் யோக்கியதை என்று யாரும் வர முடியாது. அதே சமயம் மற்ற தகுதிகளும் உடையவாராக இருந்தால் "பிரையாரிட்டி" கொடுக்கலாம் என்று விதி முறையில் ஏற்படுத்த யோசனை இருந்து வருகிறது. குறைந்த பட்சம் எஸ். எஸ். எல். ஸி படித்தவர் இந்தக் காரியத்திற்கு வரவேண்டும். அந்த ஊரிலேயே சில பல வருஷங்கள் இருந்து விட்டால் ரெவின்யூ இன்ஸ்பெக்டராக "பிரமோஷன்" கொடுப்பது பற்றி எல்லாம் யோசித்துக்கொண்டிருக்கிறோம். இந்தப் பணியில் இருபதாயிரம் முப்பதாயிரத்திற்கும் மேல் இருக்கிறார்கள். இவர்களுக்கு சம்பளம் போதாது என்கிற குறையை ஒத்துக்கொள்கிறேன். வேலைப் பளுவும் அதிகமாகி வருகிறது. அதிகரிப்பது தவறானது என்று சொல்ல மாட்டேன். நானே ஏற்றுக்கொண்டுள்ள நிதி இலாக்காவின் சக்தி, மற்றும் வேறு இருக்கக்கூடிய பிரச்சினைகள் எல்லாவற்றையும் குறித்து அவர்களது நியாயமான கோரிக்கைகள் எல்லாம் அனுதாபத்தோடு கவனிக்கப்படும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கிராம உத்யோகஸ்தர்கள் சம்பந்தமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஒரு மாநாட்டிலே கிராம உத்தியோகஸ்தர்களிடத்திலே சொன்னேன். இந்த நாட்டை இனிமேல் விவசாயிகள் தான் ஆளப்போகிறார்கள். வெள்ளைக்காரன் நாட்டை ஆண்ட காலம் போய் விட்டது. சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கோபித்துக்கொண்டார்கள். அரசாங்கத்தினுடைய உறைவிடம் விவசாயிகளிடத்திலே தான் இருக்கிறது. கவர்னர் ஒரு காலத்தில் இருந்து வந்த கவர்ன்மெண்ட் எஸ்டேட்டிலே இன்றைக்குக் கிராம அதிகாரிகளுக்காக கிராம இல்லம் ஒன்று கட்டுவதற்கு நிலம் வழங்குவதற்கு அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

படிப்படியாக நிர்வாகச் சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்று எல்லாம் சொன்னார்கள். "டிஸ்டிரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷன்" என்ற தலைப்பிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவாதத்தை முன் மொழியப் போகிறார்கள். அன்றைக்குத் தொடர்ந்து அதை பற்றிப் பேசலாம். புதிய மாவட்டம் வந்திருக்கிறது. இன்னும் புதிய மாவட்டங்கள் வர வேண்டுமென்று திரு. எம். சி. பாலன் அவர்களு

திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் சொன்னார்கள். நாகர்கோவில் மாவட்டம் ஒரு சிறிய மாவட்டம். ஆனால் மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது. நான்குனேரி தாலுகாவையும் அவர்களுடைய ஊரையும் சேர்க்கவேண்டுமென்று சொன்னார்கள். நான்குனேரி, அம்பாசமுத்திரம் இங்கேயெல்லாம் ஜனத்தொகை அவ்வளவு அதிகமாக இல்லை, அவற்றை கன்னியாகுமரி மாவட்டத்தோடு சேர்த்துவிட்டால், திருநெல்வேலிக்கு அதனுடைய சேமத்திற்கு வசதியாக இருக்கும் என்ற கருத்துக்கள் எல்லாம் அந்த மாவட்டத்திலேயும் இருக்கிறது. அதைத் தான் சொல்லும்போது திரு காமராஜ் அவர்களுடைய கருத்துப் பற்றியும் திரு எம். சி. பாலன் அவர்கள் எடுத்து உரைத்தார்கள் என்று கருதுகிறேன். புதிது புதிதாக, காலத்திற்குத் தகுந்தவாறு மாறுதல்கள் அமைகின்றன. அவ்வாறு அமைவதில் தவறு இல்லை. முன்னேற்றம் தான் வளர்ச்சிக்கு அறிகுறி என்றாலும், எடுத்ததற்கெல்லாம் முன்னேற்றம் என்று சொல்வோமே யானால் அது சரியல்ல.

ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒவ்வொரு டெபுடி கலெக்டர் போடவேண்டுமென்று ஈரோடு உறுப்பினர் திரு சின்னசாமி அவர்கள் சொன்னார்கள். 20 தாலுகாக்கள் வரையிலும் ஒரு ஜில்லாவாக ஆக்கலாம் என்று சொன்னார்கள். இன்றைக்கு, பிற்போக்குத் தன்மை, பொருளாதாரத் தன்மை இவற்றையெல்லாம் பார்த்து ஒரு கமிட்டியே பரிசீலனை செய்து அறிக்கையை வழங்கியிருக்கிறது. அது வருவாய் வாரியத்திலே பரிசீலனை செய்யப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மைய மாகவும் சிகரமாகவும் இந்த மன்றத்தில் உள்ள அனைவருடைய அமோக வரவேற்பைப்பெற்றது. அந்த வாரியத்தை எடுத்து விடுவது பற்றியது தான். இந்த மன்றத்திலே ஒரு தவறான கருத்து வந்து விட்டதோ என்று எனக்குப் பயமாக இருந்தது. அந்த இன்ஸ்டிட்யூஷன், அந்த அமைப்பு காலாவதியாகி விடுமே தவிர, ஆற்றல் நிறைந்த மெம்பர்கள் பெரிய அதிகாரிகள் தங்கும்படியான நிலைமையைப் பெற்றிருக்கிறோம். உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் முதல் மெம்பராக இருக்கிற திரு கெய்வார் அவர்கள் அருமையான ஆற்ற லுடன் பல அருமையான, அற்புதமான காரியங்களைச் செய்திருக்கிறார் கள். அதே போல திரு பாலசுந்தரம் அவர்கள்-- அங்கே உறுப்பினராக இருந்தவர்கள்—இன்றைக்கு மின்சார வாரியத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். திரு ராயப்பா அவர்கள் கொஞ்சம் துடிதுடிப் பானவர், அவர் விற்பனைவரித் துறை, உணவுத் துறை எல்லாம் பார்த்து துரிதமான காரியங்களைச் செய்தவர்கள். அதே போல திரு மணி என்று இருக்கக்கூடியவர்கள் இந்த வறட்சி நிலைமை களையெல்லாம் பார்த்து 18 வயது இளைஞர் மாதிரி துடிதுடிப்போடு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். திரு விஸ்வநாதன் அவர் களும் இன்றைக்கு நல்ல முறையிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறார் கள். இன்றைக்கு முக்கியமாக மந்திரி சபைக்கு யோசனைகளையும், திட்டங்களையும், நல்ல காரியங்களையும் சொல்லக்கூடிய நிலைமை மக்கள் சபையிலே வந்து விட்டது. இந்தியாவிலேயே நாம் தான் இப் பொழுது இதைச் செய்கிறோம். பிரிட்டிஷ்காரர்களின் மிச்சம் சொச்சம் ஆக இருக்கிற அந்த ஒரு சின்னத்தையும் எடுக்கப்போகிறோம். இந்தப் புரட்சியான காரியத்திற்காக ஏகோபித்த பாராட்டுதலை பெறுவே மென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு பெருமையான விஷயத்தையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த ஆண்டு குடியானவர்களுக்கு—நிலமற்ற அவர்களுக்கு—தரிசு நிலங்கள் 50 ஆயிரம் ஏக்கர் அஸைன்மெண்ட் செய்யப்படும் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஜூன் மாதத்தோடு 42,900 ஏக்கர் நிலம் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதத்தின் கணக்கு இன்னும் வர விலலை. எனவே, எல்லாம் சேர்த்து 50 ஆயிரம் ஏக்கர் நிலம்



வழங்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு அதற்காக அந்த வருவாய்த் துறையினருக்கும், கலெக்டர்களுக்கும் என்னுடைய பாராட்டு தலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டும் அப்படிக் கொடுப்பதற்கு இன்னும் இலக்கு நிர்ணயிக்கப்படவில்லை. தொடர்ந்து அரசு இதிலே கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

ஏறக்குறைய 50 ஆயிரம் ஏக்கர் நிலம், சுமார் 20 ஆயிரம், 30 ஆயிரம் குடும்பங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் இருக்கிற புறம்போக்கு நிலத்தைப் பார்த்தால் 2 லட்சம், 3 லட்சம் ஏக்கர் கூட இல்லை. அதையும் நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். கடந்த ஆண்டு 20 ஆயிரம் ஏக்கர்கள் கொடுத்திருக்கிறோம். சென்ற ஆண்டிலே 50 ஆயிரம் ஏக்கர்கள் கொடுத்திருக்கிறோம். ஆகவே, இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு மொத்தம் 70 ஆயிரம் ஏக்கர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக விதிமுறைகள் தளர்த்தப்பட்டு இருக்கின்றன. தனியாக அதிகாரிகளும் கூட நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். தாம்பரத்திலிருந்து எண்ணூர் வரையிலே இருக்கிற புறநகர்ப் பகுதிகளில் குடிசைகள் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். ரெவின்யூ போர்ட் ஆர்டர், 750 ஸ்குயர் ஃபீட் என்று போட்டிருக் கிறார்கள். கிராமப் புறங்களிலே இருந்து நகரப் பகுதிகளுக்கு மக்கள் வருகிறார்கள். சட்டப்படி கொடுக்கமுடியாது என்று ரெவின்யூ அதிகாரி கள் சொல்லிவிடுகிறார்கள். தாம்பரம், எண்ணூர், பல்லாவரம், வில்லிவாக்கம் இந்தப் பகுதிகளிலே ஏறக்குறைய 50 ஆயிரம் வீட்டு மனைகள் அப்படி இருக்கின்றன. அவற்றிலே 35 வீட்டு மனைகள் 'அன் அப்ஜெக்ஷனபில் என்க்ரோச்மெண்ட்' என்ற ஆட்சேபனைக்குரிய தல்லாதது என்ற நிலையிலே உள்ள வீட்டு மனைகள் இருக்கின்றன. சென்னை நகரத்திலே லட்சக்கணக்கானவர்கள் வாடகை வீடுகளில் தான் இருக்கிறார்கள். புற நகர்ப் பகுதிகளிலே 40 ஆயிரம் குடும்பங் கள் வீடுகளை அமைக்கக்கூடிய நிலைமையை இந்த அரசு செய்து கொடுக்கும் என்பதையும் நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் தொடர்பாக திரு நல்லசிவம் அவர்களும் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் திரு பொன்னப்ப நாடார் அவர்களும் சொன் னார்கள். சொந்த நிலம் இல்லாமல் குடியிருப்பவர்கள் ஆயிரக்கணக் கானவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களைக் குடி யிருப்புச் செய்வதற்கு 'The Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1969, என்ற மசோதா இந்த மன்றத்திலே கொண்டுவரப்படும் என்பதையும், அதன் மூலம் அவர்களுடைய உரிமை பாதுகாக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மாரிமுத்து அவர்கள் பல நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள். கூட்டுப் பட்டாக்களை எல்லாம் மாற்றியமைப்பதற்கு ஆன வேலைகள் துரித மாக நடைபெற்று வருகின்றன என்பதையும் இந்த மாமன்றத்திற்குச் சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராம ஊழியர்களைப்பற்றிச் சொன்னார்கள். வெட்டியான், தலையாரி போன்றவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்களே என்றார்கள். அவர் களுக்கு எப்படி மாற்று வேலை கொடுப்பது என்பது அரசாங்கத்தின் தீவிர மான பரிசீலனையில் இருக்கிறது. எவ்வளவு தூரம் அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கொடுத்து வேலையில் அமர்த்துவது என்பதிலே இந்த அரசு கவனம் செலுத்தும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. ஞானசம்பந்தன் அவர்கள் கோயில் நிலங்களிலே கூட்டுறவுப் பண்ணை வைத்து விவசாயம் செய்ய வழி செய்ய வேண்டுமென்று சொன் னார்கள். ஏற்கனவே அதற்கான விதி முறைகள் இருக்கின்றன.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 மார்ச் 14

'The Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 provides for regulating the administration either by personal cultivation or by lease of agricultural lands held by public trusts and for regulating the relations of public trusts and their cultivating tenants in this State. This Act also provides for any 10 or more cultivating tenants under any public trust to form a joint tenancy co-operative farming society and get it registered by the Registrar of Co-operative Societies. When such a society is formed, all the lands held by a member of the society shall stand transferred with effect from the date of the registration to the society which shall therefrom hold such land and use it for agricultural purposes.'
பத்து பேர் சேர்ந்துகொண்டு சங்கமாக அமைத்துக் கொண்டு விவசாயம்
செய்யலாம் என்ற விதி ஏற்கனவே இருக்கிறது.

தீ விபத்து பற்றிச் சொன்னார்கள். முன்னாலே குடிசைகள் பற்றிக்
கொண்டால் 30 ரூபாயும், துணிமணிகளுக்காக 10 ரூபாயும் கொடுத்து
வந்தார்கள். இப்போது 60 ரூபாயும், துணி மணிகளுக்காக 20 ரூபாயும்,
ஆக மொத்தம் 80 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அண்ணா
அவர்கள் முடிவு எடுத்தார்கள். தீ விபத்து நிவாரண நிதி என்று 30
லட்சரூபாய்க்கு மேல் திரட்டப்பட்டு, தீப்பிடிக்காத வீடுகள் கட்டப்பட்டு
வருகின்றன.

கன்னியாகுமரியில் ரயத்துவாரி சம்பந்தமாக சில வேலைகள் நடந்
திருக்கின்றன. செங்கோட்டை தாலுகாவில் 47 சதுர மைல் முடிந்து
விட்டது. 153 சதுர மைல் தோவாளை, அகஸ்தீஸ்வரம் ஆகிய பகுதிகளில்
1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதிக்குள் முடித்து விடுவோம்
என்று சொல்லுகிறார்கள். 275 சதுர மைல்கள் கல்குளம், விளவங்கோடு
ஆகிய பகுதிகளில் அடுத்த ஆண்டுக்குள் முடிந்துவிடும். அதற்காகத்
தனி அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள். அந்தக் காரியம் தொடர்ந்து
நடக்கும் என்று நாகர்கோயில் உறுப்பினர் திரு. பாலைய அவர்களுக்கும்,
எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கெய்வார் ரிப்போர்ட் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி இந்த
மன்றத்திலே பல முறை விளக்கி இருக்கிறேன். நஞ்சை நில வரியை
வைத்துக் கொள்ள வேண்டுமென்பது இந்த அரசாங்கத்தின் நோக்கம்
அல்ல. புஞ்சை நில வரியே அதனுடைய முதல் கட்டமாகத்தான் ரத்து
செய்யப்பட்டிருக்கிறது. நிலத் தீர்வை, நீர்த் தீர்வை இரண்டும் பின்னி
யிருக்கிறது. சில இடங்களில் வாட்டர் செஸ் அதிகமாக இருக்கிறது.
பேசிக் டாக்ஸ் குறைவாக இருக்கிறது. பேசிக் டாக்ஸை எடுத்துவிட்டால்
பட்டுக்கோட்டைக்கும், கும்பகோணத்திற்கும் ஒரே மாதிரியாக வரி இருக்
கும். ஆகவே, இதை ரேஷனலைஸ் செய்த பிறகு அந்த வரியை எடுக்க
வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. அவர்கள் காலத்திலே
அதை நிறைவேற்றாவிட்டாலும் நாங்கள் அதை நிறைவேற்றியே தீரு
வோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

புஞ்சை வரியையே ஏன் எடுத்தீர்கள் என்று அவர்கள் கட்சியைச்
சேர்ந்தவர்கள் என்னிடம் கேட்டார்கள். அதற்காக ஒரு கிளர்ச்சியே
வருமோ என்ற நிலையில் இந்த வரி சிறிய வரிதான் என்று அவர்களிடம்
கூறப்பட்டது. இரண்டு கோடி எக்கர் நிலத்திலே ஒரு கோடி ஐம்பது
லட்சம்ஏக்கர் நிலத்திற்கு குறிப்பாக இன்று நில வரி இல்லை. நஞ்சை நிலங்
களுக்குக்கூட சிலஇடங்களில் நிலவரிஇல்லைஎன்றுநான் கூறுவேன். எப்படி
என்றால், பவானித் திட்டம், வைகை அணைக்கட்டுத் திட்டம், அமராவதி
அணைக்கட்டுத் திட்டம், மணிமுத்தாறுத் திட்டம் போன்ற பகுதிகளில்



1969 மார்ச் 14] [திரு. கே. ஏ. மதியழகன்]

எல்லாம் அடங்கலைப் பார்த்தால் புஞ்சை என்றுதான் இருக்கிறது. அவர்
களுக்குக்கூட பேசிக் டாக்ஸ் வசூலிக்காத நிலை இருக்கிறது. ஆகவே,
இதிலே தீவிரமான கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

விரிவான நிலச் சீர்திருத்தத்தைப் பற்றிச் சொன்னார்கள். இதற்கான
பணிகள் இப்போதே ஆரம்பமாகிவிட்டன. "ரெக்கார்டு ஆப் டெனன்சி
ஆக்ட்" இந்த மன்றத்திலே வந்திருக்கிறது. இதைத் தொடர்ந்து காம்ப்ர
ஹென்சிவ் லெஜிஸ்லெஷன் கொண்டு வரப்படும். இங்கு வாரத்தைப்
பற்றி, ஃபேர் ரெண்ட்பற்றி, டெனன்சி ரைட் பற்றி, விவசாயிகள் வெளி
யேற்றப்படாமல் பாதுகாப்பதுபற்றி எல்லாம் சொன்னார்கள். இதற்கெல்
லாம், வரக்கூடிய நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் வழி செய்யப்
படும். அதைப்பற்றி தற்போது விளக்கமாகப் பேசுவது பொது நன்மைக்கு
உகந்ததாக இருக்காது. உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கக்கூடிய பல்லா
யிரக்கணக்கான விவசாயிகளின் அடிமை விலங்கை உடைத்து, தமிழகத்தை
வளமான நாடாக ஆக்க வேண்டுமென்பதற்கு முன்னோடியாக, வரக்கூடிய
விவசாயச் சட்டம் அமையும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்ளுகிறேன்.

ஐ.என்.ஏ. பென்ஷன் பற்றிச் சொன்னார்கள். சுபாஷ் சந்திரபோசின்
படையிலே, தேசீயப் போராட்டத்திலே, சுதந்திரப் போராட்டத்திலே ஈடு
பட்டவர்களுக்குப் பென்ஷன் கொடுப்பதற்கு மனுக்களை அனுப்பும் தேதி
1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி என்று இருந்தது. அந்தத்
தேதியை மாற்ற வேண்டுமென்று திரு. சௌடி சுந்தரபாரதி அவர்களும்
மற்றவர்களும் சொன்னார்கள். அதை மாற்ற வேண்டுமென்பதற்காக
விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
அந்தக் காலத்தை 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை
நீடிப்பதற்கான உத்தரவை ஒரு மணி நேரத்திற்கு முன்னால்தான் வழங்கி
னார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
(ஆரவாரம்.)

கடன்களைப்பற்றிச் சொன்னார்கள். கடன் கொடுப்பதில் இருக்கும் விதி
முறைகளைப் பற்றி முக்கியமான ஒன்றை மட்டும் என்னுடைய உரையிலே
சேர்க்க வேண்டுமென்று கருதியிருந்தேன். ஏழை எளியவர்களுக்கும்,
சமூகத்தில் கீழ் மட்டத்தில் இருப்பவர்களுக்கும் உதவும் வகையில் அரசாங்
கம் திட்டமிட்டிருக்கிறது. இந்த ஆண்டு அரசாங்கம் கொடுக்கும் கடன்
தொகையின் மொத்தம் 36 கோடியே 39 லட்சம் ரூபாயாகும். இதிலே
மின்சார வாரியத்திற்கு மட்டும் 15 கோடியே 16 லட்சம் ரூபாய் கொடுக்கப்
படுகிறது.

சென்னை மாநகராட்சிக்குக் குடிநீர் செலவிற்காக 95 லட்சம் ரூபாய் கடன்
கொடுக்கிறது. வீட்டு வசதி வாரியத்திற்காக 4 கோடி 83 லட்சம் ரூபாய்
வழங்கியிருக்கிறோம். ஏழைகளுக்காகவும், சாதாரண வருவாய் உள்ள
மக்களுக்காகவும்தான் இவையெல்லாம் செய்யப்படுகின்றன என்பதை
நான் தரப்போகும் புள்ளி விவரங்கள் நிரூபிக்கும். சேரிகள் சீரமைப்பிற்
காக 37½ லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. லோ இன்கம் குரூப்
ஹௌஸிங்க்காக 25 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிலங்களை
ஆர்ஜிதம் செய்து ப்ளாட்களாக அபிவிருத்தி செய்து கொடுக்க 1 கோடி
60 லட்சம் ரூபாய் என்றும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ரெண்டல் ஹௌஸிங் ஸ்கீமிற்காக 70 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்
கிறது. குடிநீர்ப் பற்றுக்குறையின் அவசரத்தன்மையை முன்னிட்டு 1 கோடி
80 லட்சம் ரூபாய் முனிசிப்பாலிட்டிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும்
கொடுத்திருக்கிறோம். இதில் 39 லட்சம் ரூபாய் குடிதண்ணீருக்காகச்
செலவிட கடன்கள் வழங்கியிருக்கிறோம். இவற்றை இந்த மாமன்றம்
மகிழ்ச்சியோடு வரவேற்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

என்ஜினியரிங் கல்லூரிகள், மெடிக்கல் கல்லூரிகள், அக்ரிக்கல்ச்சரல்
கல்லூரிகள், வெட்டரினரி கல்லூரிகள், இவற்றில் படிக்கும் மாணவர்.
களுக்குக் கடனுக கொகாலர்ஷிப்ஸ் கொடுப்பதற்காக 14 லட்சம் ரூபாயும்,
நாஷனல் லோன் ஸ்காலர்ஷிப்ஸ்க்காக 43 லட்சம் ரூபாயும் அளிக்கப்பட்
டிருக்கிறது.

அரசாங்க ஊழியர்களின்பால் இந்த அரசுக்குள்ள சிரத்தை
யைப் பற்றி இந்த மன்றம் அறியும். வீடுகள் கட்டுவதற்காக 50 லட்சம்
ரூபாயும், வாகனங்களுக்காக 25 லட்சம் ரூபாயும், கைத்தறி ஆடைகளுக்காக
40 லட்சம் ரூபாயும், கல்யாண முன் செலவிற்காக 10 லட்சம் ரூபாயும்
அரசாங்க ஊழியர்களுக்குக் கடனுக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்
கின்றன.

இதற்கும் மேலாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக இந்த
ஆண்டு 14 கோடி ரூபாயிலிருந்து 18 கோடி ரூபாய் வரையில் லாண்ட்
மார்ட்கேஜ் பாங்க்ஸ் மூலமாக கடன்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள்
செய்யப்பட்டிருக்கின்றன. இதற்காக 4·6 கோடி ரூபாய் அரசாங்கம்
டிபென்சேர்ஸ் மூலம் லாண்ட் மார்ட்கேஜ் பாங்க்ஸ்க்கு உறுதியீட்டுப்
பத்திரங்கள் மூலம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

பல இடங்களில் கிணறுகள் வெட்டுவதற்காக, குறிப்பாக தர்மபுரி மாவட்
டம் கிருஷ்ணகிரி பகுதி, மதுரை, சங்கரன்கோயில், புள்ளம்பாடி, சிவ
கங்கை, திருப்பத்தூர் போன்ற இடங்களில கிணறுகள் வெட்டுவதற்காக
அக்ரிகல்ச்சுரல் ரீ ஃபைனான்ஸிங் கார்ப்பரேஷன் மூலமாகப் பத்து கோடி
ரூபாய் அளவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் மூன்று
கோடி ரூபாய் கடனுகப் பெற முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்
கின்றன.

உணவு உற்பத்தியை மையமாகக் கொண்டு குடியானவர்களுக்கு ரசா
யன உரம் வழங்க மூன்று கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.
கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் காணேம். அந்தத் துறையில்
குறைந்த வருமானம் உள்ளவர்கள் வீடு கட்டிக்கொள்ளக் கடன் அளிக்கும்
வகையில் 20 லட்சம் ரூபாய், பால் உற்பத்தி செய்யும் கூட்டுறவு சங்கங்
களுக்கு 23 லட்சம் ரூபாய் என்று இந்த அளவில் கடன் அளிப்பதற்கு
வசதி செய்யப்பட்டிருக்கிறது. அவைகள் எல்லாம் தொழில் வளத்திற்
காகக் கொடுக்கப்படும் கடன்களே அல்லாது தனிப்பட்ட சில பேர்களை
இன்னும் வளம் உடையவர்களாக ஆக்கவேண்டும் என்பதற்காகக் கொடுக்கப்
படுவதல்ல. சமதர்ம சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற அடிப்
படை அம்சத்தில் இந்தக் கடன்கள் எல்லாம் வழங்கப்படுகின்றன.

இறுதியாக, பஞ்ச வறட்சி பற்றியும், உணவு விலை பற்றியும், இங்கு
எடுத்துச் சொன்னுர்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக நான் உணவுத்
துறை அமைச்சராக இருந்தேன். மாவட்ட க்லெக்டர்கள், வருவாய்த்துறை
அதிகாரிகள், அது சம்பந்தமான ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இவர்க
ளோடு பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றேன்.

உணவுத் துறை என்பது பொதுவாகவே ஒரு சங்கடத்தைக் கொடுக்கும்
இலாகா. அந்த இலாகாவில் என்னேடு ஒத்துழைத்த கலெக்டர்கள்,
வருவாய்த் துறை அதிகாரிகள், மற்றும் அனைவருக்கும் என் நன்றியைத்
தெரிவித்துக்கொள்ள, இந்த மானியத்தின்போது அந்த நன்றியைத் தெரி
வித்துக் கொள்ள, நான் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த இரண்டு ஆண்டு
களில் அந்தப் பொறுப்பை நான் ஏற்ற பிறகு 15 லட்சம் டன் தமிழ்
நாட்டில் கொள்முதல் செய்வதற்கு அவர்கள் என்னுடன் ஒத்துழைத்
திருக்கிருர்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 15 லட்சம் டன் கொள்முதல் செய்யப்
பட்டு விநியோகிக்கப்பட்டிருக்கிறது, இந்தப் புதிய அரசு வந்த பிறகு.
கிட்டத்தட்ட ஒன்றே முக்கால் கோடி மக்களுக்கு வழங்கியிருக்கிறேம்.
செ ன்னை, கோவை மட்டுமல்லாமல் மற்ற இடங்களுக்கும் கொடுக்கப்பட்
டி க்கிறது. பணக் கணக்கில் பார்த்தால் கடந்த இரண்டு ஆண்டுகளில்



140, 150 கோடி ரூபாய் அளவில் தானியம் விலைக்கு வாங்கப்
பட்டு விற்கும் ஒரு பொறுப்பில் ஈடுபட்டிருந்தோம். இதற்காக கலெக்டர்
கள், மாவட்ட ரெவின்யூ அதிகாரிகள் அனைவரும் நல்ல ஒத்துழைப்பைத்
தந்திருக்கிருர்கள். 140, 150 கோடி ரூபாயில் அளவில் 15 லட்சம் டன்
உணவு தானியம் வாங்கி விநியோகம் செய்ய அவர்கள் என்னுடன்
ஒத்துழைத்திருக்கிருர்கள். அதற்காக கலெக்டர்கள், மாவட்ட அதிகாரி
கள், மூன்று நான்கு பேர்கள் காரியதரிசிகளாக இருந்திருக்கிருர்கள்,
அவர்கள் எல்லோருக்கும் எனது பாராட்டுதல்களை இந்த நேரத்தில் தெரி
விக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படித் தெரிவிப்பதற்கு ஒரு
முக்கிய காரணம், 15 லட்சம் டன் கொள்முதல்செய்து விநியோகித்தது
போக, இப்போது ஒரு பயங்கரமான நிலை ஏற்பட்டிருக்கிறது. துரியமாக,
மார்பை நிமிர்த்திக்கொண்டு, எவ்வளவு கேட்கிறீர்கள் என்று கேட்டது
போக, இன்று வெளியிலிருந்து வாங்கக் கூடியநிலையில், முற்றிலும்
மாருன ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையை இந்த
மன்றும் கொஞ்சம் பரிவுடன் எடுத்துக்கொண்டு முதல் அமைச்சர் அவர்கள்
மத்திய அரசைக் கேட்கும்போது அதை வற்புறுத்த நாம் கடமைப்பட்
டிருக்கிறேம்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மத்திய அரசாங்கத்திடம்
பஞ்சத்திற்காக 1 கோடி 57 லட்சம் ரூபாய்–கடனுக அல்ல—மானியமாகக்
கேட்பது நியாயந்தான் என்று சொன்னுர்கள். அதை நான் வர
வேற்கிறேன். அதற்காக அவர்களுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்
துக்கொள்கிறேன். இந்திரா காந்தி அம்மையாரும், மொரார்ஜி தேசாய்
அவர்களும் இங்கு வரவேண்டுமென்று வேண்டுகோள் விடப்பட்டது. ஒரு
நிபுணர் குழு வர இருக்கிறது. நம் குரல் அங்கு எட்டுகிறது. ஒரே ஒரு
குரலாக இதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
யாருக்கும் சோறு போடவில்லை என்று சொல்லவில்லை. இன்றும் நிலை
நன்றாகத்தான் இருக்கிறது. ஆபத்து என்று கருதிவிடாதீர்கள். இந்த
மாநிலத்தில் மூன்று நான்கு மாதங்களுக்கு நாம் நெல்லின் விலையைக்
கட்டுப்படுத்தக்கூடிய அளவிற்கு இன்று இரண்டு லட்சம் டன் களஞ்சியத்தில் பிற்பகல் 2-30.
வைத்துக்கொண்டுதான் இருக்கிறேம். ஏதோ சொல்லுகிருர்கள் என்றால்
இவையெல்லாம் இருந்தும்கூட, இன்றைய வறட்சி நிலையில் நாம்
ரொம்பவும் எல்லோருடைய அனுதாபத்தையும் பெற வேண்டிய நிலை
இருக்கிறது. இந்த மானியத்தில் நல்ல யோசனைகளை சொல்லியிருக்கிருர்
கள். இந்த நல்ல துவக்கத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு,
நல்ல வகையிலே மேன்மைப்படுத்துவதற்கு உதவிகரமாக உங்களுடைய
மேலான கருத்துக்களைக் கூறியதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு,
அவை எல்லாவற்றையும் அமல்படுத்த விரைவாகவும், துரிதமாகவும்
நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறி, வெட்டுப்பிரேரணை
களை வற்புறுத்தாமல், இதை ஏகமனதாக நிறைவேற்ற வேண்டுமென்று
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களையும், மற்றக் கட்சியினுடைய
தலைவர்களையும் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்
கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகரவர்களே, அமைச்சரவர்கள்
கொடுத்த விளக்கத்திற்குப் பின்னால் ஒரு விஷயத்தை விட்டுவிட்டார்கள்.
தியாகிகள் பென்ஷனை சீக்கிரமாக, துரிதமாகக் கொடுக்கிறேம் என்று
சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிருர்களா ? எவ்வளவு சீக்கிரத்திலே
கொடுக்கப்படுமென்று வரையறைப்படுத்தி, சீக்கிரம் கொடுக்க நடவடிக்கை
எடுத்திருக்கிருர்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தியாகிகள் பற்றி நான் சொல்ல
வேண்டாமென்று கருதினேன். தியாகிகளுக்கு இப்படியிப்படியே
கொடுத்துக் கொண்டிராமல் காலவரம்பு வேண்டாமா என்று அரசாங்
கத்தை அக்கவுண்டெண்ட்–ஜெனரல் அவர்கள் கேட்டிருக்கிருர்கள்.
நாமும் தியாகிகள்தானே என்ற எண்ணம் எங்களுக்கிருந்தாலும், அவர்
கள்மீதும் பரிவு வுணர்ச்சி இருக்கிறது. புதிய புதிய தியாகிகள், திடீர்த்தியாகி
களெல்லாம் முளைத்துவிடுகிருர்கள். போலி ரேஷன் கார்டுகள் எப்படிக்
கிளம்புகின்றனவோ அவற்றைப்போல், புதிய தியாகிகள், வருகிருர்கள்.

காங்கிரஸில் இல்லாதவர்கள் திடீர் திடீரென்று காங்கிரஸுக்கு வருவதைப் போல வருகிறார்கள். 31—12—1968-க்கு மேல் நீடிக்கக்கூடாது என்றிருந்தது. அக்கவுண்டெண்ட்-ஜெனரல் அவர்கள், நீடிக்காதீர்கள் என்று ரொம்பக் கண்டித்துக் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்கள். அரசாங்கம் யோசனை செய்வதிலே பொதுமக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கையைப் பரிவாகக் கவனிக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் விரும்பிய காரணத்தால், காலாவதியானதை 31—12—1969 வரையிலும் விண்ணப்பம் போடலாம் என்று ஆக்கியிருக்கிறார்கள். 31—12—1969-க்குள் நியாயமானவர்கள் போட்டுக்கொள்ளலாம். யார் நியாயமானவர்களோ, விதிமுறைகளின்படி இருக்கிறார்களோ அவர்கள் சம்பந்தமாக விரைவாக முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஏற்கனவே போட்டிருக்கிறார்கள். அவர்கள் விஷயம் என்னவாயிற்று ? திடீர்த் தியாகிகளுக்குத் தயவுசெய்து கொடுக்க வேண்டாம், இப்பொழுது வந்தவர்கள். நான் முன்பு போட்டவர்களைப் பற்றிச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த தியாகிகள் உதவித் தொகைக்கு ஏற்கனவேயிருந்த அரசு சில நிபந்தனைகளை விதித்திருக்கிறது. அந்த நிபந்தனைகள் மட்டுமல்லாமல், நம்முடைய நிதியமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப்போல் 31—12—1968-உடன் அதற்கான காலவரையறை முடிகிறது. அதற்குள்ளாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டுமென்றும் ஏற்கனவேயிருந்த அரசு நிர்ணயித்திருக்கிறது. அப்படி விதிக்கப்பட்ட நிபந்தனைகளில் மிக முக்கியமானது, அந்தத் தியாகிகள், உதவிகோரும் அந்தத் தியாகிகள், மூன்றுமாத காலம் சிறையிருந்திருக்க வேண்டுமென்றும், ஜெயில் ரெக்கார்டு கட்டாயம் காட்டப்பட வேண்டுமென்றும் இருக்கிறது. வந்த விண்ணப்பங்களில், பல்வேறு விண்ணப்பங்களில் அப்படிப்பட்ட தகுதி அவர்களுக்கு இல்லாத காரணத்தினாலும், ஜெயில் ரெக்கார்டு காட்டப்படாத காரணத்தினாலும் அவை தள்ளப்பட்டிருக்கின்றனவே தவிர வேறல்ல. இப்பொழுதுள்ள பிரச்சினை, இன்னும் சில தியாகிகள் மனுச் செய்யத் தவறி வந்திருக்கிறார்கள். தியாகிகள் என்றால், நிதியமைச்சரவர்கள் சொன்னார்கள், நாங்களும் தியாகிகள் என்று, அதைத் தியாகம் செய்துவிட்டு, அந்த உதவித்தொகைப் பொருளைத் தியாகம் செய்துவிட்டு, உங்களுக்குப் பொருள் கிடைப்பதற்கு, உங்கள் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு வழிவகை செய்யும் எண்ணத்தில், இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்ட அவர்களுக்கு அந்தச் சலுகையை அளிக்க வேண்டுமென்ற சிந்தனையோடு இன்னும் ஓராண்டுக் காலத்திற்கு அது நீடிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஒரு கட்சிக்கு என்று அல்ல, எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாயிருந்தாலும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

**DR. H. V. HANDE :** With regard to pensioners, we have given cut motions. Neither in his original speech nor in his reply has the Hon. Minister touched upon that subject. Will the Government reconsider their attitude towards pensioners and give some sort of assurance in this appropriate time ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பென்ஷன் கொடுப்பதிலே சில காலதாமதம் ஏற்படலாம். அதையெல்லாம் கலெக்டர்கள் மட்டத்திலே பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. இன்னொன்று, பெரிய பிரச்சினைபற்றியது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும், அவர்களுடைய கட்சிக்கும் இதில் இருக்கிற பரிவு உணர்ச்சியும், அனுதாபமும் அரசாங்கத்திற்கும் உண்டு. ஆனால், அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள்ளே நின்று நிதி ஆதாரங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டிய நிலைமையிலிருக்கிறது. ஆகவே, மனம்



இல்லாததால் அல்ல, மார்க்கமில்லாததால்தான். (குறுக்கீடு) அங்கே உட்கார்ந்திருக்கும்போது இருக்கும் மனம், இங்கே வந்தால் எப்படியிருக்கும் என்பதற்கு மக்கள் வாய்ப்பு கொடுக்கவில்லை. அதனால், அதைத் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்று சிபாரிசு செய்வதாக யாரும் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. கண்டிப்பாக அரசாங்கம் பரிவு வுணர்ச்சியோடு இருக்கும் என்பதை மட்டும் இந்த இடத்திலேயிருந்து சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தியாகி என்று மனுப்போட்டிருக்கிறார்களா ? ஜெயிலுக்குப் போயிருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஜெயிலுக்கும் போகவில்லை, மனுவும் போடவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு நடைபெறும். கோரிக்கை எண். 1-க்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. ஆர். பொன்னப்ப நாடார், டாக்டர் எச். வி. ஹாண்டே, திருமதி கே.பி. ஜானகியம்மாள் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

**திரு. ஏ. அ. சுப்பராஜா** அவர்கள் தன்னுடைய இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

பேரவை முன்னுள்ள கேள்வி :

" கோரிக்கை எண் 1.—நிலவரித்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,77,36,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து கோரிக்கை எண் 4. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. இராமமூர்த்தி, திரு. வி. கே. கோதண்டராமன், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் தன்னுடைய இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

பேரவை முன்னுள்ள கேள்வி :

" கோரிக்கை எண்—4. முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,01,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும். "

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, கோரிக்கை எண் 31. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. இராமமூர்த்தி, திரு. கே. என். குமாரசாமி, திரு. சோ. அழகர்சாமி, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

திரு. எம். பூபதி அவர்களும், திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்களும் தங்களுடைய இருப்பிடங்களில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

## இணைப்பு 1.

..............676....-ம் பக்கத்திலுள்ள 301-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினவின் விடையைக் காண்க.

ஊராட்சி வளர்ச்சித் துறையில் உள்ள சார்நிலை அதிகாரிகளின் பணி நிபந்தனைகளை முறைப்படுத்தும் விதிகள் 1964-ல் வகுக்கப்பட்டன. கிராம வளர்ச்சி—உள்ளாட்சித்துறையின் 16—10—1964 தேதியுள்ள 2156-ம் எண் அரசாங்க ஆணையில் அவை பிறப்பிக்கப்பட்டன. 15—10—1964 முதல் அவை செயலுக்கு வந்தன. கீழே குறிப்பிட்டுள்ள வகுப்புகளைச் சேர்ந்த அதிகாரிகள் ஊராட்சி வளர்ச்சி சார்நிலைப் பணியில் உள்ளவர் :—

1. வட்டார வளர்ச்சி அதிகாரிகள்.
2. கோட்ட ஊராட்சி அதிகாரிகள்.
3. ஊராட்சி வளர்ச்சி சரிஸ்ததார்கள்.
4. கூட்டு ஊராட்சி அதிகாரிகள்.
5. ஊராட்சி வளர்ச்சி தலைமை எழுத்தர்கள்.
6. வளர்ச்சி அதிகாரிகள் (ஊராட்சிகள்).

அவர்கள் மூன்று பிரிவுகளாக வகைப்படு செய்யப்பட்டுள்ளனர். முதல் மூன்று இனங்களைச் சேர்ந்தவர்கள் 1-ம் வகை என்றும், (4), (5) இனங்களைச் சேர்ந்தவர்கள் 2-ம் வகை என்றும், (6) இனத்தைச் சேர்ந்தவர்கள் 3-ம் வகை என்றும் பிரிக்கப்பட்டுள்ளனர். ஊராட்சி வளர்ச்சித்துறைச் சார்நிலை அதிகாரிகளுக்கென துறைத் தேர்வுகள் பல இருந்தன. ஒரு தனிப்பட்ட ஊராட்சி வளர்ச்சி சார்நிலைப் பணி முதலியவற்றை அமைத்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதன் காரணமாக, சீரமைக்கப்பட்ட பாணிக்கேற்றவாறு சமுதாய வளர்ச்சி குறித்தத் துறைத் தேர்வுகளை மாற்றியமைப்பது விரும்பத்தக்கது என்பதுடன், அவசியமானதுமாகும் என்று கருதப்பட்டது. அதற்கேற்ப, கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையில் 16—1—1965 தேதியுள்ள 101-ம் எண் அரசாங்க ஆணையில், துறைத் தேர்வுகளைச் சீரமைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. சீரமைக் கப்பட்ட திட்டத்தின் கீழ்த் துறை தேர்வுகள் முதல் முறையாக 1965 நவம்பரில் நடத்தப்பட்டன.

2. கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 16—10—1964 தேதி
யுள்ள 2156-ம் எண் அரசாங்க ஆணையில் வகுக்கப்பட்ட பணி விதிகளின்
படி, நேரடியாகத் தெரிந்தெடுக்கப்படுவது அல்லாமல் ஊராட்சி வளர்ச்சி
சார்நிலைப் பணியின் எதேனும் ஒரு பதவிக்கு நியமிக்கப்படுவதற்கான
ஒவ்வொருவரும், ஊராட்சி வளர்ச்சி கணக்குத் தேர்விலும், ஊராட்சி
வளர்ச்சித்துறை அதிகாரிகளுக்கான துறைத் தேர்விலும் தேறியிருக்க
வேண்டும். மாற்றியமைக்கப்பட்ட பாணியையொட்டி அமைந்த முதல்
தேர்வுகள் 1965 நவம்பரில் தான் முதல் முறையாக நடந்த காரணத்தால்
ஊராட்சி வளர்ச்சி சார்நிலைப் பணியின் பல்வேறு பதவிகளுக்கு முறையான
அடிப்படையில் நியமிக்கப்படுதற்கு அதிகாரிகள் தங்களைத் தகுதியுடைய
வர்களாக்கி கொள்ள இயலவில்லை. எனவே, உள்ளாட்சித் துறையின்
18—10—1966 தேதியுள்ள 2430-ம் எண் அரசாங்க ஆணையில், தகுதி
குறித்த விதியானது திருத்தப்பட்டது. மேலும், நேரடியாக தெரிந்
தெடுக்கப்பட்டது நீங்கலாக பிறவகையில் ஊராட்சி வளர்ச்சி சார்நிலைப்
பணியின் எல்லாப் பதவிகளிலும் 1—1—1967-க்கு முன்பு நியமிக்கப்
பட்டவர்கள். அவர்களது தகுதி காண பருவத்திற்குள் துறைத் தேர்வு
களில் தேற வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது. அதற்கேற்ப,
1—1—1967 தேதிக்கு முன்பு ஊராட்சி வளர்ச்சி தலைமை எழுத்தர்
வகைப்பதவிகளுக்கான நியமனங்கள் பணிமூப்பு நிலையையொட்டியும்,
அவர்களது பணி குறித்த பதிவேடுகளை ஆய்வுசெய்த பிறகும் செய
யப்பட்டன. 1—1—1967-க்குப் பிறகு செய்யப்பட்ட நியமனங்களைப்
பொறுத்தவரையில் தான் ஊராட்சி வளர்ச்சி கணக்குத்தேர்விலும் ஊராட்சி





வளர்ச்சித்துறை அதிகாரிகளுக்கான துறைத் தேர்விலும் அவர்கள் தேறியிருக்க வேண்டும் என்ற நிபந்தனை வலியுறுத்தப்பட்டது. இத் தேதிக்கு முன்பு ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தராக நியமனம் செய்யப் படுவதற்கு இத் தேர்வுகளில் தேற வேண்டும் என்பது அவசியமாகக் கருதப்படவில்லை. அவர்கள் தங்களது தகுதி காண பருவத்திற்குள் தேர்வில் தேற வேண்டும்.

3. (ஊராட்சி) வளர்ச்சி அதிகாரிகளிடையேயிருந்து பதவி உயர்வு அளிப்பது மூலமாக அல்லது ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களின் மேலாளர்கள், வருவாய்க் கோட்ட அலுவலகங்களில் உள்ள ஊராட்சி வளர்ச்சிப் பிரிவுகளிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களது அலுவலகங்களில் உள்ள ஊராட்சி வளர்ச்சிப் பிரிவுகளிலும் பணிபுரியும் கணக்கர்கள், (கல்வி) வளர்ச்சி அதிகாரிகள் இவர்களிடையேயிருந்த மாற்றல் மூலமும் ஊராட்சி ஒன்றிய தலைமை எழுத்தர் பதவிகளுக்கு நியமனங்கள் செய்யப்படுகின்றன. 1—1—1967-க்கு முன்பு மேற்குறிப்பிட்ட வகைகளிலிருந்து ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தர்களாக நியமிக்கப்பட்டவர்களது எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | | |
|---|---|---|
| (அ) வளர்ச்சி அதிகாரிகள் (ஊராட்சிகள்) | .. | 55 |
| (ஆ) வளர்ச்சி அதிகாரிகள் (கல்வி) | .. .. | 38 |
| (இ) ஊராட்சி ஒன்றிய மேலாளர்கள், கணக்கர்கள் முதலியோர். | | 46 |
| | | 139 |

Rules governing the service conditions of subordinate officers in the Panchayat Development Department were framed in 1964. The rules were issued in G.O. Ms. No. 2156, Rural Development and Local Administration, dated 16th October 1964. They came into force from 15th October 1964. The following classes of officers constitute the Panchayat Development Subordinate Service :—

(1) Block Development Officers.
(2) Divisional Panchayat Officers.
(3) Panchayat Development Sheristadar.
(4) Additional Panchayat Officers.
(5) Panchayat Development Head Clerks.
(6) Extension Officers (Panchayats).

They have been classified into three categories, the first three
tems forming Category 1, items (4) and (5) forming Category 2
and item (6) forming Category 3. There were a set of Depart-
mental Examinations for the Subordinate Officers of the Panchayat
Development Department. In view of the orders constituting
the separate Panchayat Development Subordinate Service, etc.
it was considered that it would be desirable and also necessary to
revise the existing Departmental Tests of Community Development
Literature to suit the reorganised pattern. Accordingly in G.O
Ms. No. 101, Rural Development and Local Administration, dated
16th January 1965, orders were issued reorganising the Depart-
mental Tests. The first tests under the reorganised pattern
were held in November 1965.

2. According to the Service Rules issued in G.O. Ms. No. 2156, Rural Development and Local Administration, dated 16th October 1964 every person for appointment to any of the posts in the Panchayat Development Subordinate Service other than by direct recruitment should have passed the Panchayat Development Account Test and the Departmental Test for officers of the Panchayat Development Department. In view of the fact that it was not possible for the offices to get themselves qualified for appointment on a regular basis to the various posts in the Panchayat Development Subardinate service by passing the tests, as the first examinations under the revised pattern were held only in November 1965, the Rule relating to qualification was amended in G. O. Ms. No. 2430, Rural Development and Local Administration, dated 18th October 1966 and it was ordered that persons appointed in all the posts constituting the Panchayat Development Subordinate Service other than by direct recruitment before 1st January 1967 should pass the tests within their period of probation. Accordingly appointments made (prior to 1st January 1967 to the category of Panchayat Development Head Clerks were made only with reference to the seniority and the record of the persons. It is only in respect of appointments made subsequent to 1st January 1967, that the qualification, that is, that he should have passed the Panchayat Development Account Test and the Departmental Test for Officers of the Panchayat Development Department, was insisted upon. Prior to this date the passing of the tests was not considered necessary for appointment as Panchayat Development Head Clerk. They should pass the test within their period of probation.

3. Appointment to the category of Panchayat Development Head Clerks is made by promotion from among the Extension Officers (Panchayats) or by transfer from among the Managers of the Panchayat Union Officers, Accountants in Panchayat Development Sections in Revenue Divisional Offices and in Panchayat Development Branches in Collectors' Offices and Extension Officers (Education). The number of persons appointed as Panchayat Development Head Clerks from among the above categories before 1st January 1967 is as follows :—

| | |
|---|---|
| (a) Extension Officers (Panchayats) .. .. | 55 |
| (b) Extension Officers (Education) .. .. | 38 |
| (c) Panchayat Union Managers, Accountants etc., | 46 |
| Total ... | 139 |



## இணைப்பு-2

696ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.

### வருவாய் அதன் தொடர்பான பிற மானியக்கோரிக்கைகளின்கீழ் கொள்கை விளக்கக் குறிப்பு.

நிலவரி நிர்வாகம் குறித்து ஏற்பட்ட செலவு மட்டுமே நிலவரி என்ற தலைப்பின்கீழ்க் காட்டப்பட்டுள்ளது. மாவட்டப் பணியாளர்களும் வருவாய்த் துறைப் பணியாளர்களும் செய்யும் நிலவரிப் பணிக்கான நிர்வாகச் செலவின் பெரும் பகுதி இதில் அடங்காது. இச் செலவு 9-ம் எண் கோரிக்கையின் கீழ் வரும். இது போன்ற கோரிக்கைகள் இம் மன்றப் பேரவையில் பின்னர் வைக்கப்படும். எனவே, பேரவையில் விவாதிக்கப்படுவதற்கு வசதியாக இருக்கும் வண்ணம் என்னுடைய பொறுப்பிலுள்ள துறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கைகளின் முக்கிய கூறுகள் குறித்து ஈண்டு சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். வெட்டுப் பிரேரணைகளை விவாதிக்கும்போது உறுப்பினர்கள் எழுப்பக்கூடிய குறிப்பிட்ட வினாக்களுக்கு நான் விடையளிப்பேன்.

2. நில வரியே அரசின் தொன்மையான வரி வாயிலாகும். நாட்டின் விடுதலைக்கு முன் நிலவரி வருவாய்தான் அரசின் தலையாய நிதிவாயிலாக இருந்து வந்தது. நில வருவாய்த் துறை நிர்வாகத்தின் அச்சாணியாக அமையும் அளவிற்கு அத்துணைச் சிறப்புற்றிருந்தது. இன்று மாநிலத்தின் மொத்த வருவாயில் நிலவரி 1·5 சத வீதமேயாகும். இருப்பினும், அரசிற்குத் தொடர்பான பணிகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ இத் துறையே நிறைவேற்றுவதால், இத் துறை திறம்படச் செயல்படுவதைப் பொறுத்தே, அரசு நிர்வாகம் செவ்விய முறையில் இயங்கமுடியும். இதற்கு முன்பெல்லாம், நிலவரி ஏற்பாடு முறையில் கோட்பாடுகளையொட்டி நிலவரி அவ்வப்போது மாற்றப்பட்டது. மறு நிலவரி ஏற்பாடு 1930-ம் ஆண்டு முதற்கொண்டே அரசுக் கொள்கை அடிப்படையில் கைவிடப்பட்டது. தற்போதைய அமைச்சரவை பதவியேற்றவுடன் புன்செய் நிலங்களின்மீது நில வரி விதிப்பதையும் கைவிட்டது. நன்செய்த் தீர்வைக்குப் பதிலாக, பாசனத் தீர்வைகளை விதிப்பது பற்றியும் அரசு முனைப்பாக ஆய்ந்து வருகின்றது.

நிலவரியை ரத்து செய்ததனாலேயே அரசின் நிதி நிலை வாயில்கள் முடமாகிவிடும் என்பதில்லை. ஆனால், நில வரியை வசூலிப்பதற்காக இருந்துவரும் ஓர் ஏற்பாட்டினைப் பேணிவருவதால் அடிப்படை நில வரி ஆவணங்களைப் பேணி வருவதற்கான மறைமுக நன்மை கிட்டுவதுடன், அரசின் பிற பணிகளையெல்லாம் மேற்கொள்வதற்குப் பொதுவான நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தவும் வகைசெய்கிறது.

### பஞ்சத் துயர்த் தணிப்பு.

3. வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கைப் பேரிடர்களினால் ஏற்படும் துன்பங்களினாலும் பிற துயரங்களினாலும் தமிழ்நாடு என்றுமே பாதிக்கப்பட்டு வந்துள்ளது. இவற்றால் பெரிதும் பீடிக்கப்பட்டவர்களுக்கு உதவி புரிவதில் தனக்குள்ள பொறுப்பினை இம் மாநில அரசு எப்பொழுதும் உணர்ந்து வந்துள்ளது. இதற்கென ஒவ்வொரு மாவட்டத்திற்கும் முழுமையான நன்கு ஆராயப்பட்ட துயர் தணிப்புப் பணிகள் பட்டியல் ஒன்று பேணி வரப்பட்டுள்ளது. இப் பணிகளை மேற்கொள்வதனால் மக்கள் தொகையில் 20 சத வீதத்தினருக்கு ஆறு மாத கால அளவுக்கு வேலை வாய்ப்பு கிட்டுகின்றது. தமிழ் நாட்டில் வட கிழக்குப் பருவ மழையும் தென் மேற்குப் பருவ மழையும் பொய்த்து விட்டன என்பதனை உறுப்பினர்கள் அறிவர். இதனால் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் வருவாய்த் துறை வாரியத்தையும் கலந்து இப் பகுதிகளில் நிலவி வரும் நிலைமையை அரசு ஆய்ந்தது. இப் பகுதிகள் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவித்து

அப் பகுதிகளில் துயர் தணிப்புப் பணிகளையும், இடருதவி நிலையங்களையும் தொடங்க அரசு விரும்பவில்லை. ஆயினும், வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் சிறு நிலக் கிழார்களுக்கும் வேலைவாய்ப்பு அளிப்பதற்காக, இம் மாநிலத்தின் உற்பத்தியைக் கூடுதலாக்கி பொருளாதார நிலையை மேம்படுத்தக் கூடிய ஆக்கப் பணிகளைத் தொடங்குவது விரும்பத்தக்கதாகுமென அரசு கருதியது. முதலமைச்சர் 1969, பிப்ரவரி 17-ம் நாளன்று கூட்டிய உயர் நிலை மாநாட்டில் இது முழுவதும் விவாதிக்கப்பட்டது. இந்த மாநாட்டில் சிறு பாசனப் பணிகள், பொதுப் பணித் துறையைச் சேர்ந்த ஏரிகளையும், நீர் வழங்கு வாய்க்கால்களையும் செப்பனிடுதல், பாசனம் மற்றும் குடி நீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல், சாலைகளை அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காக நிதி ஒதுக்குவதென முடிவு செய்யப்பட்டது. 1969-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ம் நாளுக்கு முன்னர் கீழ்க் குறிப்பிட்டுள்ள தொகைகளைச் செலவிட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது ;—

| மாவட்டத்தின் பெயர். | தொகை. (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| செங்கற்பட்டு .. .. .. | 35·68 |
| வட ஆர்க்காடு .. .. | 35·50 |
| தென் ஆர்க்காடு .. .. | 10·00 |
| தருமபுரி .. .. .. | 10·00 |
| திருநெல்வேலி .. .. | 8·50 |
| இராமநாதபுரம் .. .. | 40·00 |
| கோயம்புத்தூர் .. .. | 18·00 |
| மொத்தம் .. | 1,57·68 |

4. மாநிலம் முழுவதிலும் இப் பணிகள் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கிடையில், இத்தகைய சூழ்நிலைகளில் இயல்பாக வழங்கப்படக் கூடியதும் இராஜஸ்தான், ஆந்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு வழங்கப்படும் துயர்த் தணிப்பு உதவியை நம் மாநிலத்திற்கும் வழங்குமாறு இம் மாநில அரசு இந்திய அரசின் நிதி அமைச்சைக் கேட்டுக் கொண்டுள்ளது. மத்திய அரசு இதுபற்றி (நம்பிக்கையளிக்கும் வகையில்) சாதகமாக ஆய்ந்து வருகின்றது. இம் மாநில அரசுக்கு அளிக்கப்பட வேண்டிய உதவியை மதிப்பிடுவதற்காக வல்லுநர் குழு ஒன்று தமிழ் நாட்டிற்கு வர இருக்கின்றது. இம் மாநிலத்தின் நிதிப் பற்றுக்குறையைக் கருத்தில் கொண்டு, வறட்சி துயர் தணிப்பு குறித்து இந்திய அரசு கொடுக்கும் உதவி முழுவதும் மானியமாக வழங்கப்பட வேண்டுமென்று வல்லுநர் குழுவையும் இந்திய அரசையும் கேட்டுக் கொள்ள இம் மாநில அரசு கருதியுள்ளது. அதே நேரத்தில் வான் பொழிந்து வளம் கொழிக்கிறவரையில் அடுத்த நிதியாண்டின் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் மேற்கொண்டும் துயர்த் தணிப்புப் பணிகளை மேற்கொள்ள அரசு கருதியுள்ளது.

## நிலச் சீர்திருத்தச் சட்டம்.

5. தமிழ் நாடு 1961-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டம் இம் மாநிலத்தில் செயல் படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, 83,000 எக்கர் பரப்பளவுள்ள உபரி நிலம் பகிர்ந்தளிப்பதற்காகக் கிட்டுமென மதிப்பிடப்பட்டது. 65,000 எக்கர் பரப்பளவுள்ள நிலங்களே கணக்குப்படி



கிட்டுமெனத் தெரியவருகிறது. 24,572 எக்கர் பரப்பளவுள்ள உபரி நிலங்கள் குறித்துதான் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. எஞ்சிய நிலங்கள் குறித்து நீதி மன்ற ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 16,558 எக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் பங்கிடப்படுவதற்குத் தயாராகவுள்ளன. இவற்றில் 8,129 எக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் ஒப்படை செய்யப் பட்டுள்ளன. உச்ச வரம்பு கட்டும் சட்டம் இயற்றப்படுகையில் கணிசமான அளவில் கிட்டுமென எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள், எதிர்பார்த்த அளவில் கிட்டவில்லையென்பது இதிலிருந்து தெரியவருகிறது.

6. நில உச்ச வரம்புச் சட்டத்தை இயற்றுவதில் ஏற்பட்ட தாமதத்தினால் பலர் நிலத்தைச் சட்டப்படி பிரிப்பதற்கும் மேற்சொன்ன சட்டத்தின் விதித் துறைகளிலிருந்து தப்புவதற்கும் வழி ஏற்பட்டிருக்கலாம். தமிழ் நாடு 1961-ம் ஆண்டு நில சீர்திருத்தச் சட்டம் செயல்படுத்தப்பட்டதன் விளைவுகளை ஆராய்ந்து அதன் பின்னர் சட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ள உச்ச வரம்பினைக் குறைப்பது அவசியமா என்பதைப்பற்றி அரசு முடிவு செய்யும். பெரிய அளவுள்ள நிலங்கள் மூலம்தான் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க முடியும் என்ற தவறான நம்பிக்கை நம்மிடையே நிலவி வருகிறது. ஜப்பானில் 2 முதல் 3 எக்கர் வரை உள்ள சிறு நிலங்களிலிருந்துதான் உற்பத்தி கிடைக்கின்றது. குடியானவர்கள் தங்கள் நிலங்களில் நேரடியாக அக்கறை எடுத்துக்கொள்ளும் வகையில் நிலங்களை நியாயமான அளவில் பங்கிடப்படும் நிலையைச் செயலுக்குக் கொண்டு வருவதற்காக சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று அரசு கருதுகிறது. அந் நிலையில் கடன், தரமான விதைகள், விசையேற்றங்கள், உரங்கள் போன்ற வசதிகள் அனைத்தும் குடியானவர்களுக்கு வழங்க முடியும். அப்பொழுதுதான் உற்பத்தியையும் பெருமளவுக்குப் பெருக்க முடியும். இந் நோக்கத்தைக் கருத்திற்கொண்டு, இதுவரையில் இயற்றப்பட்ட சட்டங்கள் அனைத்தும் அடங்கியதும் அரசின் எண்ணம் ஈடேற வகை செய்கிற மேலும் பிற சட்டங்களைச் சேர்த்தும் அடங்கல் சட்டம் இயற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொடக்க நடவடிக்கையாக, குத்தகை உரிமை ஆவண மசோதா இம் மன்றப் பேரவையில் முகவுரைக்கப்பட்டு அதற்கு ஏற்கெனவே ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. சட்டமன்ற மேலவை இம் மசோதாவின் பகுதியொன்றில் திருத்தம் செய்துள்ளது. அம்மசோதா இப் பேரவையின்கண் மீண்டும் வைக்கப்படும். எந்த ஒரு நிலம் குறித்தும் உடைமையாளர்கள் அனைவருடைய சட்டப்படிக்கான உரிமையை முடிவு செய்யக் கூடிய ஆவணம் ஒன்றை ஏற்படுத்துவதுதான் இம் மசோதாவின் நோக்கமாகும். இத்தகையதொரு ஆவணத்தின் உதவி கொண்டு, அடங்கல் சட்டத் திறம்படச் செயலுக்குக் கொண்டுவருவது இயலும்.

7. இடைக்கால ஏற்பாடாக, தமிழ்நாடு 1969-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதற்கு எதிராக பாதுகாப்பு அளித்தல்) திருத்த மசோதா இம் மன்றப் பேரவையின்முன் முகவுரைக்க கருதப்பட்டுள்ளது. பிறரது நிலங்களிலுள்ள வீடுகளில் வசித்து வருபவர்கள் வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பது இம் மசோதாவின் நோக்கமாகும். அடங்கல் சட்டம் ஒன்று இயற்றப்படும்வரை நிலமற்றோரின் நலனை இம் மசோதா பாதுகாக்கும்.

8. ஜமீன்தாரி நிலங்கள், கீழ் நில உரிமை பெற்ற இனாம்கள், முழு இனாம் கிராமங்கள் ஆகியவற்றை ஒழித்தல் இந்த அரசின் கொள்கையாயிருந்துள்ளது. இப் பணியில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது ; இப் பணி விரைவில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1963-ம் ஆண்டு 30-வது சட்டத்தை நிறைவேற்றுவதில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த புதுக்கோட்டைப் பகுதியில் சில இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. இதனால் குடியானவர்களுக்கும் இனாம்தார்களுக்குமிடையே பெரும் பிணக்கு ஏற்படுவதற்கு இது காரணமாயிருந்ததென்பதை உறுப்பினர்கள் அறிவர். நிலைமையை விரிவாகப் பரிசீலனை செய்ததன் மேல், இந்த இடர்ப்பாடுகளில் பெரும்பாலானவை, புதுக்கோட்டையைச்

சேர்ந்த 116 பகுதி இனும் கிராமங்களே முழு இனும் கிராமங்களாட அறிவித்தால், இப் பிணக்குகளில் பெரும்பகுதி அகன்று விடும் என்ற முடிவுக்கு அரசு வந்துள்ளது. இதற்கென மசோதா ஒன்று தயாரிக்கப் பட்டிருக்கிறது. இம் மசோதா இந்திய அரசின்முன் இசைவு பெறு வதற்காக இந்திய அரசுக்கு அனுப்பப்படும். நில உரிமைகள்பற்றிய சட்டம் ஒன்றைக் கொண்டு வருமுன்னரும், அது சட்டமாக இயற்றப் படுவதற்கு முன்னரும் மத்திய அரசின் இசைவு வேண்டுமென்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன். இந்த நடைமுறை எந்த மாநில அரசாவது பயனுறு முறையில் நிலச் சட்ட மொன்றை விரைந்து கொண்டு வருவதற்குத் தடையாக உள்ளது. இத் தகைய நிபந்தனைகள் இருப்பினும், மாநில அரசு தேவையான, நன்மை பயக்கத்தக்க சட்டங்களே இயற்றுவதற்குத் தன்னால் இயன்ற முயற்சியை யெல்லாம் செய்து வருகிறது. நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூர் வட்டத்தில் ஜன்மம் கீழ் நில உரிமையை ரத்து செய்ய நாம் இயற்றும் மற்றொரு சட்டம் வகை செய்கிறது. ஜன்மம் என்பது கேரள மாநிலத்தில் நிலவி வரும் தனிப்பட்ட கீழ் நில உரிமை முறையாகும். இது கூடலூர் வட்டத்தில் மட்டும் செயலில் இருந்து வருகிறது. ஜமீன்தாரி எஸ்டேட், இனும், அதைப் போன்ற பிற நில உரிமை முறைகளே அரசு மேற் கொள்வது குறித்த அதன் கொள்கையை யொட்டி, ஜன்மம் கீழ் நில உரிமை முறை ஒழிக்கப்பட வேண்டுமென்பதுதான் நியாயமாகும், தகுதி யானதாகும். இப் பேரவை இம் மசோதாவை ஆய்வுக் குழுவுக்கு அனுப்பி யுள்ளது. இம் மாநிலத்தில் பல்வேறு மக்களிடையே நிலத்தை நியாய மான முறையில் பங்கிடுவதற்கான தொடக்க நடவடிக்கைகளே இவை.

9. 50,000 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் 1968-69-ல் ஒப்படை செய்யப் படும் என்று 1968 மார்ச் திங்களில் நான் இந்தப் பேரவையில் உறுதி யளித்தேன். இக் குறிக்கோள் அளவை எய்தச் சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தேவையான இடங்களில் எல்லாம் சிறப்புப் பணியாளர் நியமிப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளின் பலனாக, 1969 ஜனவரி வரையில் 42,900 ஏக்கர் பரப்புள்ள நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டுள்ளன. நான் முடிப்பதாக உறுதி அளித்துள்ள குறிக்கோள் அளவு விஞ்சப்படும் என்பது உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நிலமில்லா ஏழைகளுக்கு இயன்ற வரையில் அதிகமான நிலங்களே வழங்குவது இந்த அரசின் முயற்சியாகும். இது குறித்து அடுத்த ஆண்டில் இன்னும் ஆக்க முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இம் மாநிலத்தின் நலனுக்கு ஊறு ஏற்படுத்தாது, நீண்டகாலமாக இருந்து வரும் ஆக்கிரமிப்புகளேத் தொடர்ந்து அனுபவித்து வந்துள்ளவர்களேப் பொறுத்தவரையில், அவர்களது ஆக்கிரமிப்புகளே முறைப்படுத்துவதும் இத்துடன் இணைந்த பிரச்சினை.

சென்னை மாநகரிலும் அதைச் சுற்றிலும் அவ்வாறு ஏராளமான நிலம் வெளவப்பட்டிருப்பது தெரிகிறது. அவ்வாறு வெளவிய நிலங்களே நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படைக்க விரைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்னும் எனது எண்ணத்தை முன்னமே குறிப்பிட் டுள்ளேன். இதனால், அவர்கள் தாம் அந்த நிலத்தின் உரிமையாளர்கள் என்ற உணர்வு அந்த ஏழைகளுக்கு இருக்கும்.

10. மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் நிலமற்ற வேளாண்மைத் தொழி லாளர்களின் குடும்பங்களேக் குடியமர்த்த இந்திய அரசு உதவியளித்துள் ளது. இத் திட்டம் இம் மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதுவரை யில் 11,955 ஏக்கர் நிலம் 2,857 குடும்பங்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள் ளது. மொத்தச் செலவு ரூ. 102 லட்சம் ஆகும்; 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ந் தேதிக்கு முன்னர் மேலும் ரூ. 28 லட்சம் செலவிடப்படும். இந்திய அரசு இத் திட்டத்தைப் பரவலாக்கியுள்ளது; 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் இதற்கு இம் மாநிலத் திட்டத்தின் கீழ் தொடர்ந்து நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.



11. அரசாங்கம் வகுத்துள்ள கொள்கைகள் சரிவர நிறைவேற்றப்
பட வேண்டுமாயின், மாவட்ட நிர்வாக முறையை மேம்படுத்துவது அவசிய
மாகும். மாவட்ட ஆட்சித் தலைவர், இந்த நிர்வாகத்தின் முதுகெலும்
பாவார். அண்மைக் காலத்தில் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள்
என்கிற பதவிகளேத் தோற்றுவித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பணி
களே அவர்களுக்குப் பகிர்ந்தளிக்க முயற்சி செய்துவந்துள்ளோம். மாவட்ட
வருவாய்த்துறை அதிகாரிகள் நிர்வாகத்தில் பயனுள்ள பணியாற்றிடினும்,
மாவட்டத்தில் அரசுப்பணிகள் முறையாக நிறைவேற்றப்பட வேண்டுமெனில்,
மாவட்ட ஆட்சித் தலைவரின் முழு அதிகாரமும் அவரிடமே
நீடிக்க வேண்டுமென்று அனுபவவாயிலாகத் தெரியவந்துள்ளது. உணவு
வழங்கல் துறைப் பணி போன்ற அலுவல் மாவட்ட வருவாய்த்துறை
அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பினும், உண்மையில் மாவட்ட ஆட்சித்
தலைவரே இப்பணியைச் செய்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவரின் வேலைச்
சுமை மிகப் பெருகியுள்ளது; மாவட்ட ஆட்சித் தலைவரின் முழு
அதிகாரமும் மாவட்டம் முழுமையிலும் திறம்படச் செயல்படும்வகையில்
மாவட்டத்தின் அளவைக் குறைத்தல் அவசியமாக உள்ளது. இந்த
வகையில், சேலம் மாவட்டம், சேலம், தர்மபுரி என்னும் இரு சிறு
மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. அதே நேரத்தில், மாவட்டங்களின்
வளர்ச்சி வரலாறு அடிப்படையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி என்பதையும்,
உள்ளூர் மக்களின் விருப்பத்தை அறியாது மாவட்ட எல்லைகளேப் பெரிதும்
மாற்றியமைப்பது நிர்வாகத்தின் பொது நலனுக்கு உகந்ததல்ல
என்பதையும் மறந்துவிட முடியாது. எனவே, மாவட்டங்களின்
எண்ணிக்கையை அதிகரிப்பதுபற்றி ஆராயத் திட்டமிடப்பட்டுள்ளது.
இதனால், வேலைச் சுமை சரியாகப் பகிர்ந்தளிக்கப்படும் என்பதுடன், பின்
தங்கிய பகுதிகளே ஒன்றாக இணைத்துத் தனி மாவட்டங்களாக அமைக்கவும்
முடியும். புதிதாக அமைக்கப்படவிருக்கும் ஒவ்வொரு மாவட்டத் தலைமை
யிடத்திலும் அரசாங்கத்தின் எல்லா முக்கியத் துறைகளும் அமைந்
திருக்கும் வண்ணம் அரசு அலுவல் நிலையம் ('ivil Station)
ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்பதும் அரசின் கருத்தாகும். இதன்
வாயிலாக, இத் துறைகளுடன் மக்கள் தொடர்பு கொள்வது எளிதாகும்.

12. ஜமாபந்தி என்பது அரசு பின்பற்றி வந்துள்ள பழைய முறை
யாகும். கிராமக் கணக்குகளேத் தீர்ப்பதுடன், பொதுமக்கள் தங்கள்
குறைகளே அதிகாரிகளிடம் நேரில் தெரிவிக்க வாய்ப்பளிப்பதும் ஜமாபந்தி
ஏற்பாட்டின் நோக்கமாகும். அந்நியர்கள் இந்தியாவை ஆட்சி செய்த
காலத்தில் பாமர மக்கள் அதிகாரிகளேக் காண்பது அரிதாக இருந்த
அக் காலத்தில் இம் முறை தேவையாக இருந்திருக்கலாம்; நடைமுறையில்,
ஜமாபந்தியின்போது குறைகள் முனைப்பாகத் தீர்க்கப்பட்டுள்ளனவா என்பது
ஐயப்பாட்டுக்குரிய ஒன்றாகும். ஆனால், ஜமாபந்தியின்போது, தொகைகள்
வசூலித்து அரசுப் பணியாளர்களுக்கு விருந்தளிக்கும் அருவருக்கத்தக்க
ஏற்பாடு ஒன்று வழக்கத்திலுள்ளது. கிராம அதிகாரிகள், ஜமாபந்தி
யெனும் ஆண்டு விழாவிற்காகக் குறிப்பிட்ட தொகை வழங்க வேண்டு
மென்கிற வழக்கத்தினால் அவர்களுக்கு பெரிதும் அநீதி இழைக்கப்
பட்டுள்ளது. இது வேறு வகையில், கிராம மக்களிடமிருந்து தொகை
வசூலிக்கப்படுவதற்கே இடமளிக்கிறது. ஜமாபந்தியுடன் இணைந்த இந்த
நடைமுறை வழக்கத்தை ஒழிக்க அரசு முயன்றது. ஆனால், இப் பழக்கம்
மிகவும் வேரூன்றிவிட்ட காரணத்தினால், இது நீக்க இயலாத ஒன்றாகுமென
அரசு உணர்ந்தது. எனவே, நிர்வாகத்தைத் தூய்மைப்படுத்தும் சீரிய
வகை, ஜமாபந்தி முறையை அகற்றுவதுதான் என்று அரசு முடி
வெடுத்தது; இதற்குப் பதிலாக, துறையளவில் கணக்குகளேத் தீர்க்கும்
முறையைச் செயல்படுத்த அரசு விரும்புகிறது. வரும் ஆண்டில் இம் முறை
செயல்படுத்தப்படும். இதுபற்றி விரிவாக ஆராயப்பட்டு வருகிறது.

## வருவாய்த் துறை வாரியம்

13. இம் மாநிலத்தின் நிர்வாகத்தில் வருவாய்த் துறை வாரியத்தின் பங்கு குறித்து அரசு உன்னிப்பாய் ஆய்வு செய்துள்ளது. அன்றைய பிரிடிஷ் அரசாங்கம் நிறைவேற்றிய விதிமுறைகளின்படி 1802-ம் ஆண்டில் வருவாய்த் துறை வாரியம் நிறுவப்பட்டது. வருவாய்த் துறை வாரியம் நிறுவப்பட்டபோது, பிரிட்டிஷ் அரசாங்கமே இந்தியாவில் உறுதியாக நிலைபெறவில்லையென்பதை உறுப்பினர்கள் நினைவுகூர்வார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. அந்நிய அரசாங்கத்தின் செயலியாக, வருவாய்த் துறை வாரியம், 19-ம் நூற்றாண்டிலும் 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இம் மாநிலத்தின் நிர்வாகத்தில் முக்கிய பங்கு வகித்து வந்துள்ளது. வருவாய்த் துறை வாரியத்தின் நோக்கம் முக்கிய கொள்கைக் குறிப்புகளில் அரசாங்கத்திற்கு அறிவுரை நல்குவதும், நிர்வாகத்தின் முதுகெலும்பாகத் திகழ்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களை மேற்பார்வை செய்வதும் கண்காணிப்பதுமாக இருந்தது. ஆனால் மக்கள் ஆட்சி ஏற்பட்ட பின்னர், அரசுக் கொள்கையை முடிவு செய்யும் அதிகாரம் அதிகாரிகளிடமிருந்து மக்கள் பிரதிநிதிகளிடம் சென்றது. இவ்வாறாக, இந்த வாரியத்தின் அறிவுரை வழங்கும் பணி அகன்றது. நடைமுறையில், இந்த வாரியம், இடை நிறுவனமாக செயல்படுகிறது; அரசாங்கத்தின் கொள்கைகளை இயன்றளவு மிக விரைந்து நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு தடங்கலாக நிற்கிறது. இன்று விரைந்து வளர்ந்து வரும் பொருளாதார நிலையின் நிமித்தமாகவும் நிர்வாகத் தேவைகளினாலும் இப்போது அரசு மேற்கொண்டுள்ள உணவுப்பொருள் வழங்கல், கிராம வளர்ச்சி, திட்டமிடுதல், சிறு சேமிப்பு, பரிசுச் சீட்டு திட்டம் போன்ற முக்கிய பணிகளின் பொறுப்புகளினின்றும் இந்த வாரியம் விடுபட்டுள்ளது அன்றியும், சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் பணி எக்காலத்திலும் இவ் வாரியத்திடம் ஒப்படைக்கப்படவில்லை. இத்தகைய சூழல்களில், வருவாய் துறை வாரியம் ஒரு நிறுவனமாக இருப்பதை ரத்து செய்துவிட்டு பல துறைத் தலைவர்களுக்கு அப்பொறுப்புக்களை வழங்கலாமென்றும் அரசு கருதுகிறது. அமைச்சரவை கொள்கைகளை முடிவு செய்து அதிகாரிகள் மூலம் அவற்றை நிறைவேற்றும் அத்தகைய முறை, அரசின் முன்னேற்றக் கொள்கைகள் நிறைவேற்றப்படுவதை அதிகாரிகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ காலதாமதப்படுத்து முறையை விடச் சாலச் சிறந்ததாகும். இது குறித்த இறுதி முடிவு விரைவில் எடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## கிராமப் பணியாளர்

14. பரம்பரைக் கிராம அதிகாரிகள் சட்டங்களை (1894-ம் ஆண்டு 2-வது சட்டமும் 1895-ம் ஆண்டு 3-வது சட்டமும்) ரத்து செய்துவிட்டதை உறுப்பினர்கள் ஏற்கெனவே அறிவர். அரசாங்கம் கொள்கையைத் தலைமை நீதிமன்றம் அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானதென்று அதற்கு எதிராகத் தீர்ப்பளித்தது. பரம்பரைக் கிராமக் மன்றத்தின் முடிவை ஏற்று, அன்றை அரசு கிராம அதிகாரிகள் நியமனம் சம்பந்தப்பட்ட விதிகள் செயல்படுவதை மட்டும் நிறுத்தி வைத்தது. இச் சட்டத்தை ரத்து செய்ய முயற்சி எடுக்கப்படவில்லை; கிராம அதிகாரிகளின் நியமனம், அவர்கள்மீது ஒழுங்குக் கண்காணிப்பு; அவர்களின் தகுதிகள் இவைகளை முறைப்படுத்தி திட்டவட்டமான கோட்பாடுகள் வகுக்கவும் முயற்சி எடுக்கப்படவில்லை. பரம்பரைக் கோட்பாடுகளைப் பொருட்படுத்தாமல், அந்தந்த இடத்திலிருந்து வேலைக்கு எடுக்கப்படும் கிராம அதிகாரிகளின புதிய பதவி ஒன்றைக் கொண்டுவர இப்போது அரசாங்கம் கருதுகிறது. இவர்களின் குறைந்த கல்வித் தகுதி எஸ் எஸ்.எல்.சி. ஆகும். அதே நேரத்தில், இப்போதுள்ள கிராம ஊழியர்களுக்கு இக் கல்வித் தகுதி இருந்தாலும், இராவிட்டாலும் அவர்களைத் தொடர்ந்து அரசாங்கம் பணியில் நீடிக்கும். இவ்வாறு, தகுந்த கல்வித் தகுதியுடனும் அறிவுத் திறனுடனும் கிராம அதிகாரிகளின் அடிப்படைப் பணியை உருவாக்குவதும் கிராம அதிகாரிகளுக்கு வருவாய்த் துறையில் உயர்வகைப் பதவிகளுக்குப் பதவி உயர்வு



V211,31 N69
N69.18-3-5

வாய்ப்புகள் அளிக்க இயலச் செய்வதும் நமது முயற்சியாயிருக்க வேண்டும். இது, மிக அவசியமான சீர்திருத்தமென்று கருதுகிறேன். இதனால், கிராம அதிகாரிகள் பழைய முறையின் சின்னங்களாகப் பணியாற்றாமல், இந்த அரசு நிறுவக் கருதியுள்ள சாதி சமயமற்ற சமுதாயத்தின் முகவர்களாகப் பணியாற்றுவர். கிராம அதிகாரிகளுக்குத் தற்போதுள்ள வாழ்க்கைச் செலவைக் கணக்கிட்டுப் பார்த்தால், போதுமான அளவு ஊதியம் அளிக்கப்படவில்லையென்பதை நான் அறிகிறேன். கிராம அதிகாரிகள் என்போர் கிராமத்தில் வசதியான நிலையில் இருந்து தங்கள் நேரத்தின் ஒரு பகுதியை அரசாங்கப் பணியாற்றச் செலவிட வேண்டுமென்பது கடந்த காலத்தில் பின்பற்றப்பட்ட கொட்பாடாகும். அரசாங்கத்தின் பொது வேலைச் சுமையின் அதிகரிப்பினால் கிராம அதிகாரிகளின் வேலைச்சுமை பெருமளவு உயர்ந்துள்ளது; இதனால் பகுதி நேர அதிகாரிகளாகச் செயல்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், அதே நேரத்தில், இம் மாநிலம் மிக இறுக்கமான நிதி நிலை பற்றாக்குறை நிலையை எதிர்நோக்கியுள்ள இந்தக் கட்டத்தில், அவர்களின் சம்பளத்தைப் பெருமளவு உயர்த்தித் திருத்தி அமைப்பதும் இயலாததாகும். அவர்களின் வருமானத்தை உயர்த்தும் நோக்கத்தில் அவர்களுக்குச் சலுகை யளிப்பதுபற்றியும், அவர்களின் சம்பளத்தில் உயர்வு ஏற்படும் வகையில் பகுதி நேர வேலை செய்ய அவர்களை அனுமதிப்பது பற்றியும் ஆய்வு செய்ய அரசாங்கம் விழைகின்றது.

## முத்திரைத்தாள்.

15. முத்திரைத்தாள் நிர்வாகத்திலேற்பட்ட மிகச் சிறப்பான மேம்பாடு, முத்திரைத்தாள் சட்டத்தைத் திருத்திய 1967-ம் ஆண்டு 24-வது சட்டத்தைச் செயல்படுத்தியதுதான். குறைத்து மதிப்பிட்டு செய்து பத்திரங்கள் எழுதப்படுவதைத் தடுப்பதே இதன் நோக்கமாகும்; இதனால் மாநில அரசின் நிதிநிலை மேம்பாடுறும். இச் சட்டம் நிறைவேற்றப்படும் வரையில், பதிவு செய்யப்படும் ஆவணங்களில் அளிக்கப்பட்ட மதிப்பின் அடிப்படையில் முத்திரைத்தாள் கட்டணம் வசூலிக்கப்பட்டது. இதில் மோசடி ஏதேனும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டாலொழிய, சொத்து, மதிப்பிடப்பட முடியாது; பத்திரப் பதிவுத் துறை அதிகாரிகள் கட்டணம் குறிப்பிட முடியாது. திருத்தச் சட்டத்தின்கீழ் இதில் தொடர்புடைய சொத்தின் நிலவர விலையையொட்டி முத்திரைத்தாள் கட்டணம் அளிக்கப்பட வேண்டுமெனப் பத்திரப் பதிவுத் துறை அதிகாரிகள் வற்புறுத்த முடியும். இத் துறை செயல்படுவதற்கு வசதியாயிருக்கும்பொருட்டு சொத்தின் மதிப்பிற்கான முறைகள் குறிப்பிட்டு வருவாய்த் துறை வாரியம் அனுப்பியுள்ளது. இத் திருத்தம் செயல்படுவதன் விளைவாக வரும் ஆண்டுகளில் வருவாய் பெருமளவு அதிகரிக்குமென நம்பப்படுகிறது.

இறுதியாக, வருவாய்த் துறை செயல்படுவதற்குப் புத்துயிர் அளிப்பது நமது முயற்சியாயிருக்குமென நான் குறிப்பிட விரும்புகிறேன். உணவு உற்பத்தி, கிராம வளர்ச்சி ஆகியவை அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்தி வரவேண்டிய குறிப்பிட்ட இனங்களாகும். இந்த இனங்களின் கீழ்ச் சிறந்த பலன் எய்தப் பெற அரசாங்கத்தின் எல்லாத் திட்டங்களிலும் மக்கள் பங்குகொள்ள வேண்டுமென அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பது அவசியமாகும். இது வரையில் அரசாங்கம் செயல்படுவது, அலுவலகப் பணிச் சார்புடையதாக உள்ளது; வாலாய முறையில் அவர்களிடம் எதிர்பார்க்கப்படும் பணியை அதிகாரிகள் செய்து [illegible]. அவர்கள் மக்களின் உண்மையான பணியாளர்களாக [illegible] வேண்டுமென்றும், தமிழ் நாட்டில் பொருளாதார வளம் [illegible] அவர்கள் முழுதும் பங்கேற்க வேண்டுமென்றும் நாம் விரும்பு[illegible] நான் விளக்கியுள்ள நடவடிக்கைகள் வருவாய்த் துறை நிர்வாக[illegible]தில் இன்றியமையாத முறையில் வேண்டப்படும் புதுத் திருப்பத்தை [illegible]மென நான் நம்புகிறேன். இதனால், சமுதாயத்தில் நலிந்துள்ள மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோலும் இந்த அரசா[illegible]ன் கொள்கைகளை நிறைவேற்றுவதில் இத் துறையின் நிர்வாகம் தகு[illegible] செயல்படமுடியும்.